
கந்தவேள் கதையமுதம்



கி.வா.ஜகந்நாதன்

[illegible]



ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி..... SRI SUBRAMANIYA SWAMY

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம். திருச்செந்தூர்.

உ

முருகன் துணை

கந்தவேள் கதையமுதம்

கி. வா. ஜகந்நாதன்

விற்பனை உரிமை

அமுத நிலையம் லிமிடெட்

46, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,

சென்னை-600 014.

முதற் பதிப்பு: மார்ச் 1980

இரண்டாம் பதிப்பு: 1990

விலை ரூ. 75/-


6346.

உள்ளுறை

இப்புத்தகத்தில்
மேற்கோளாகக் காட்டிய நூல்கள்

அகநானூறு
அப்பர் தேவாரம்
அபிராமி அந்தாதி
அற்புதத் திருவந்தாதி
இராமகிருஷ்ணர் உபதேசம்
ஐங்குறுநூறு
ஔவையார் பாடல்
கந்தர் அநுபூதி
கந்தர் அலங்காரம்
கம்ப ராமாயணம்
கயிலை பாதி காளத்தி
பாதிஅந்தாதி
காஞ்சிப் புராணம்
கோபப் பிரசாதம்
சிலப்பதிகாரம்
சிவஞான சித்தியார்
சிவஞான போதம்
சீகாளத்திப் புராணம்
சுந்தரர் தேவாரம்
சௌந்தர்யலகரி
ஞானசம்பந்தர் தேவாரம்
தக்கயாகப் பரணி
தனிப்பாடல்
தாயுமானவர் பாடல்
திருக்குறள்
திருப்புகழ்
திருமந்திரம்
திருமாலை
திருமுருகாற்றுப் படை
திருவகுப்பு
திருவருட்பா
திருவாசகம்
திருவாய்மொழி
திருவாலவாயுடையார்
திருவிளையாடற் புராணம்
திருவிடைக்கழி
முருகன் பிள்ளைத்தமிழ்
திருவிளையாடற் புராணம்
தொல்காப்பியம்
நள வெண்பா
நாலடியார்
நீதிநெறி விளக்கம்
நைடதம்
பகவத் கீதை
பட்டினத்தார் பாடல்
பரிபாடல்
பழமொழி
பாசவதைப் பரணி
பாரதியார் பாடல்
பிரபுலிங்க லீலை
புறநானூறு
பெரிய புராணம்
பெரும்பாணாற்றுப்படை
மணிமேகலை
மதுரைக் காஞ்சி
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முத்துக் குமார சுவாமி
பிள்ளைத்தமிழ்
லலிதா சகசிரநாமம்
வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
வேதம்.

கந்தவேள் கதையமுதம்



காஞ்சிபுரம் குமரகோட்டம்



கந்தபுராண அரங்கேற்ற மண்டபம்
காஞ்சி குமரகோட்டம்

முன்னுரை

ஆண்டவன் திருவருளால் கந்தபுராணத்தைப் பற்றித் தொடர்ச்சியாக இருபது நாட்கள் விரிவுரை ஆற்ற வேண்டுமென்று அன்பர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அன்பர்களுக்குள் சிறந்த திரு வீரபாகுவே இந்தப் பணியை எனக்குக் கொடுத்தார். முருகப் பெருமானுடைய சேனபதியாகிய வீரபாகுவின் கட்டளையென்றே இதைக் கொள்கிறேன். முருகன் கட்டளையை மறுத்தாலும் மறுக்க லாம், வீரபாகுவின் ஏவலை மறுக்க முடியுமா? கைலாசத்தில் சிவபெருமானுக்கு முன்னிருக்கும் நந்தி அதிகார நந்தி. அதுபோல முருகப்பெருமானுக்குப் பிரதமராக இருப்பவர் வீரசேனபதி வீரபாகு. அவருடைய ஆணையை மறுக்கக் கூடாது.

கனவு

இங்கே வந்து இருபது தினங்கள் கந்தபுராணத்தைச் சொல்ல ஒப்புக்கொண்டபோது எனக்குச் சிறிது அச்சமாக இருந்தது. சேர்ந்தாற்போல இருபது நாட்கள் சொல்லவேண்டும் அல்லவா? எனக்கு எத்தனையோ வேலைகள் இருக்க அவற்றை எல்லாம் விட்டு விட்டு, இங்கே வந்து தொடர்ச்சியாகச் சொல்வது என்றால், முன் பழக்கம் இருக்கவேண்டும். நான் கந்தரனுபூதி முதலியவற்றைப் பேசிப் பழக்கப்பட்டவன். கந்தபுராணத்தைச் சொன்னது இல்லை. ஆனல் இறைவன் திருவருள் இப்படிக் கூட்டுவித்தது. இங்கே சைவசித்தாந்தம் நன்றாக அறிந்த பெரியவர்கள் இருக்கிறார்கள். கந்தபுராணத்தில் ஆழ்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னாலே விரிவுரையாற்றி நல்ல பெயர் வாங்க வேண்டுமே என்ற அச்சம் இருந்தது. ஆனல் அந்த அச்சம் நேற்றோடு போய்விட்டது. அதற்குக் காரணம் இதுதான்.

இந்திரனுடைய குமாரன் சயந்தன் சிறையில் இருந்தான். சூரபன்மன் அவனையும் தேவர்களையும் சிறையிலிட்டிருந்தான். அப்போது முருகப்பெருமான் சயந்தன் கனவில் எழுந்தருளி அவனுக்கு ஆறுதல் கூறினான். "உனக்கு விடுதலை கிடைக்கும். வீரபாகு வருவான்" என்று கூறினான். சயந்தன் அந்தக் கனவினால் தைரியம் பெற்றான். இது கந்தபுராணத்தில் வருகிறது. அதேபோல்

நேற்றைக்கு எனக்கு ஒரு கனவு உண்டாயிற்று. நான் 'ப்ரூப்' படித்துக்கொண்டிருக்கிறேன். அப்போது என்னுடைய ஆசிரியப்பிரானுகிய ஐயரவர்கள் தம்முடைய இயல்பான உடையுடன் எழுந்தருளினர். தலையில் பெரிய தலைப்பாகை, வேட்டி, சட்டை- இந்தக் கோலத்தில் எழுந்தருளி, "என்ன வேலை நடக்கிறது?" என்று கேட்டார்கள். "நான் 'ப்ரூப்' பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி அவர்கள் திருவடியில் விழுந்து வணங்கினேன். "எப்போதும் தங்கள் நினைவை மறக்காமல் இருக்கவேண்டும்; தங்கள் தொண்டில் ஈடுபடவேண்டும்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டேன். அப்போது ஐயரவர்கள், "நீ அமோகமாக இருப்பாய், எல்லாம் நன்ருக அமையும்" என்று ஆசி கூறினர்கள். அவர்களிடம் இருந்து வேலைசெய்த காலத்தில் நடந்தது போன்ற காட்சி. அந்தக் கனவு எனக்குத் தைரியத்தை உண்டாக்கியது. இன்றைக்குத் தொடங்குகிற விரிவுரைக்கு அவர்கள் ஆசி கூறினர்கள் என்று எண்ணுகிறேன். இது ஆண்டவனுடைய திருவருளால் அமைந்த கனவு என்றே நம்புகிறேன்.

என்னுடைய வழிபடு தெய்வமாகிய முருகன் எழுந்தருளியிருக்கும் தலம் காந்தமலை. எந்தக் காரியம் செய்தாலும் காந்தமலை முருகப்பெருமானை நினைத்துச் செய்வேன். அந்தத் திருக்கோயிலில் பல காலம் ஈடுபட்டு வாழ்கிறவன் எளியேன். நேற்று அங்கிருந்து எதிர்பாராத வகையில் பிரசாதம் வந்தது. இந்த இரண்டும் சேர்ந்து என் உள்ளத்தில் நல்ல துணிவை ஏற்படுத்தின. இறைவன் திருவருள் இருந்தால் இப்படிப் பொருத்தமான காரியங்கள் நிகழும் என்பதை உணர்கிறேன். இறைவனுடைய சாந்நித்தியத்தைத் தம் வாழ்க்கையில் அவ்வப்போது இப்படி உணர்ந்தவர்கள் பலர் இருப்பார்கள்.

இப்படி இணைத்துப் பார்த்தால் அந்தப் பெருமை தெரியும். அல்லாதவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையிராது. ஆண்டவன் திருவருளில் ஈடுபட்டு அவனிடம் நம்பிக்கை கொண்டவர்களே இத்தகைய நிகழ்ச்சிகளில் ஆண்டவன் அருள் தொடர்பு இருக்கிற தென்று உணர்ந்து கொள்ள முடியும். அவர்கள் செய்கிற செயல் சிறியதாக இருக்கலாம்; பெரியதாக இருக்கலாம். சிறிய நிகழ்ச்சி

யிலும் அவன் அருள் மணத்தைக் காணலாம். சிறிய காரியங்களிலும் கூட அவன் திருவருளால் நலம் உண்டாயிற்று என்பதை உணர்ந்தால் பெரிய காரியங்களில் அவன் திருவருள் துணை செய்வதைக் காணலாம். இப்போது இறைவனுடைய திருவருளால் கந்தபுராண விரிவுரையைத் தொடங்கப்போகிறேன்.

மூன்று புராணங்கள்

புராணங்கள் பல வகை. மகாபுராணங்கள் பதினெட்டு; உப புராணங்கள் பதினெட்டு. இவை அல்லாமல் பல தலபுராணங்கள் உள்ளன. பொதுவாகச் சைவர்கள் மூன்று புராணங்களைச் சிறப்பாகச் சொல்வார்கள். சிவபெருமானுக்கு மூன்று கண்கள் இருப்பது போல அந்த மூன்று புராணங்களும் நமக்கு விளக்கத்தைத் தருவனவாக அமைந்துள்ளன. அந்த மூன்று புராணங்களில் ஒன்று கந்தபுராணம்; இரண்டாவது பெரியபுராணம்; மூன்றாவது திருவிளையாடல் புராணம். திருவிளையாடல் புராணம் எம்பெருமான் மதுரை மாநகரில் இயற்றிய அருள் திருவிளையாடலைச் சொல்கிறது. அது தலபுராணம். பெரியபுராணம் என்பது தொண்டர்களுடைய சரித்திரத்தைச் சொல்வது. அது தமிழில் முதல் முதலாக உண்டானது. கந்தபுராணம் முருகப்பெருமானின் பெருமையைச் சொல்வது; மகாபுராணங்கள் பதினெட்டில் ஒன்று. இது லட்சம் கிரந்தங்கள் அமைந்தது.

இலக்கியங்களின் வகை

இலக்கியங்களைச் சில வகையாகப் பிரித்திருக்கிறார்கள், பெரியவர்கள். பிரபு சம்மிதை என்பது ஒன்று; தலைவனுடைய கட்டளையைப் போன்றது. வேதத்தைப் பிரபு சம்மிதை என்று சொல்வார்கள். இதைச் செய்க, இதைச் செய்யற்க என்று வேதம் சொல்லும்; விதி நிஷேதங்களைச் சொல்வது வேதம். எசமானன் இதைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், "எதற்காகச் செய்ய வேண்டும்? அதைச் செய்வதனால் என்ன பலன்?" என்று கேட்பதற்குத் தொண்டனுக்கு உரிமையில்லை. "இதைச் செய்யக் கூடாது" என்று சொன்னாலும், "எதற்காக, என்ன காரணம்?" என்று கேட்க இயலாது. எசமானன் இட்ட கட்டளையைக் கேள்வி கேட்காமல் செய்வது பணியாள் கடமை. எசமானன் கட்டளையைப்

போல வேதம் இருக்கிறது ; இன்னது செய்க, இன்னது செய்யற்க என்று சொல்கிறது. அந்த வேதம் ஏன் அப்படிச் சொல்கிறது என்று ஆராய்ந்து கொண்டிருந்தால், நம் வாழ்க்கையைச் சரியானபடி நடத்தி வர முடியாது. ஆகவே வேதத்தைத் தலைவன் கட்டளை போல வைத்துப் பிரபு சம்மிதை என்று சொல்வார்கள்.

அடுத்தபடியாக உள்ளது ஸுஹ்ருத் சம்மிதை. அது நண்பர் வார்த்தையைப் போன்றது. ஸ்மிருதிகளை ஸுஹ்ருத் சம்மிதை என்பார்கள். காலத்திற்கு ஏற்றபடி நமக்கு அறிவுரை சொல்பவர் நண்பர். எந்த இடத்தில் எந்தக் காரியம் செய்கிறோமோ அதற் கேற்றபடி அறிவுரையை அவர்கள் கூறுவார்கள். சுருதி என்று சொல்கிற வேதம் என்றைக்கும் ஒரேமாதிரி இருக்கும். ஆனால் ஸ்மிருதியோ சுருதியை அனுசரித்து, இன்ன இன்ன காலத்தில் மனிதர்கள் இன்னபடி நடக்கவேண்டுமென்று அவர்களுடைய தர்மத்தை வரையறை செய்யும். ஆகவே, காலத்திற்குக் காலம் ஸ்மிருதி வேறாக அமையும். ஒருகாலத்தில் ஒரு ஸ்மிருதி இருந்தால் நாளடைவில் வேறு பெரியவர் வந்து தங்கள் காலத்திற்கேற்றபடி ஒரு ஸ்மிருதியைச் செய்வார். இப்போது இருக்கிற மனுஸ்மிருதி மனு அமைத்தது. இப்படி மனுஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி எனப் பல ஸ்மிருதிகள் உண்டு.

அடுத்தது காந்தா சம்மிதை. காந்தா என்பது மனைவியைக் குறிக்கும் சொல். காவியங்களைக் காந்தா சம்மிதை என்று சொல் வார்கள். மனைவி எப்படி இங்கிதமாகத் தன் கருத்தைத் தெரிவிப் பாளோ அப்படிச் சொல்வது காவியம். அவளுடைய சொல்லிலும், பொருளிலும் இன்பம் உண்டாவதுபோல இருப்பது காவியம். ஒரு பெண் தன் கணவனுடன் பேசிக்கொண்டிருக்கிறாள். "நான் கோவிலுக்குப் போயிருந்தேன். அங்கே கமலா ஒரு புதுப் புடைவையை உடுத்துக் கொண்டு வந்தாள். அந்தப் புடைவை நன்றாக இருக்கிறது என்று நான் சொன்னேன். அதை நீ உடுத்துக் கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும் என்று பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னாள்" என்கிறாள். அந்தப் புடைவையைத் தனக்கு வாங்கி அளிக்கவேண்டும் என்பதையே அவள் அந்தமாதிரி சுற்றி வளைத்துச் சொல்கிறாள். அந்தக் குறிப்பை உணர்ந்து கணவன்

அவளுக்கு அந்தப் புடைவையை வாங்கித் தருவான். இப்படி இங்கிதமாகச் சொல்கிற பாங்கு காவியத்தில் இருப்பதால் அதைக் காந்தா சம்மிதை என்று சொல்வார்கள்.

ஒன்றை நேராகக் கூறுவதை விட்டுச் சுற்றி வளைத்துக் கூறினல் அதில் ஓரழகு இருக்கும். நேராகப் போட்டால் கோடு; வளைவாகப் போட்டால் சித்திரம். நேராக நடந்தால் நடை; கோணலாக நடந்தால் நடனம். கோணலிலும் ஒரு மாணல் இருக்கவேண்டும். கோணல் மாணல் என்று சொல்கிருேமே! மாணல் இல்லாமல் கோணலாக ஒருவன் நடந்தால் அதை நடனம் என்று சொல்ல முடியாது. ஓர் ஒழுங்கோடு நடனம் ஆடவேண்டும். அந்த ஒழுங் குக்குத்தான் மாணல் என்று பெயர். வாழ்க்கையில் உள்ள ஒழுங்குக்கு ஒழுக்கம் என்று பெயர். நடனத்திலுள்ள ஒழுங்குக்கு 'ரிதம்' என்று பெயர். புள்ளி வைத்துக் கோலம் போடுகிருர்கள். அப்படிப் புள்ளிவைக்காமல், ஒழுங்கில்லாமல், கண்டபடி போட்டால் அது கோலமாகாது; அலங்கோல மாகிவிடும். கோலம் கோணல்; புள்ளி மாணல்.

ஒருவன் உண்டு கொண்டிருக்கிருன். அவன் மனைவி பரிமாறு கிருள். அப்போது சோற்றில் கல் இருக்கிறது. கடுக்கென்று கடிக்கிருன். கோபத்தோடு, "என்ன, கல்லைப் பொறுக்காமல் சமைத்திருக்கிருயே!" என்று சொல்கிருன். அப்போது அந்தப் பெண்மணி கண்ணீர் விடுகிருள். ஆனல் இங்கிதம் அறிந்த ஒருவன், "அந்தக் காலத்தில் அனசூயை இரும்புக் கடலையையே வறுத்துத் தந்தாளாம். நீ கல்லையே சமைத்து விட்டாயே!" என்ருல் "போங்கோ" என்று தலையைத் திருப்பிக் கொண்டு செல்வாள். அந்தத் திருப்பலில் ஆயிரம் ஏடுகள் மிதந்து வரும். முன்பு சொன்னவனும், பின்பு சொன்னவனும் ஒரே கருத்தைத்தான் சொன்னூர்கள். ஆனல் முன்பு சொன்னவன் சொல்லைக் கல்லாகவே போட்டான். பின்னுலே சொன்னவன் கல்லைக் குழைத்தது போலச் சொல்லை இங்கிதமாகச் சொன்னுன். குறை சொல்கிறபோது கூட இப்படி இங்கிதமாகச் சொன்னுல் அதில் இன்பம் உண்டாகும். இந்த வகையில் நாயகி பேசுகின்ற பேச்சைப்போல அமைவது காவியம். சாமானியமாகப் பேசுகிறவர்களே இவ்வளவு நயமாகப்

பேசுகிறார்கள் என்றால் காவிய கர்த்தாக்கள் தம்முடைய காவியங்களில் எவ்வளவு நயமாக மொழியை ஆளுகிறார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆகவேதான் காவியங்களைக் காந்தா சம்மிதை என்பார்கள்.

அடுத்தபடி வருபவை புராணங்கள். புராணங்களைச் சிசு சம்மிதை என்று சொல்வார்கள். குழந்தைகளுக்குக் கதை சொல்வது போலச் சொல்வது புராணம். அதில் தத்துவம் இருக்கும். குழந்தைகளுக்குக் கதைகளைச் சொல்லும்போது ஆவலாகக் கேட்பார்கள். அதன் முன்பின் தொடர்ச்சியை நோக்க மாட்டார்கள். அப்போதைக்கு வருகிற சுவையை நினைத்து ஆர்வத்துடன் கேட்பார்கள். அதே போல் வேதத்திலுள்ள கருத்துக்களை எல்லாம் புராணங்கள் கதைகளாகச் சொல்கின்றன. சுருதி, ஸ்மிருதி, காவியம், புராணம் ஆகிய எல்லாமே அடிப்படை உண்மையைச் சொல்வதுதான். வேதமாகிய சுருதியில் உள்ள கருத்துக்களை மற்றவைகள் எல்லாம் தம்முடைய உள்ளுறையாகக் கொண்டு வழங்குகின்றன.

இந்த நாட்டில், நம்முடைய பண்பாடு எதுவோ அதை வெளிப்படுத்துவதுதான் இலக்கியம் என்று சொல்வார்கள். அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கையும் சொல்வது வேதம். மற்ற நூல்களும் இவற்றைத்தான் சொல்லவேண்டும். அறத்திற்கு மாறுபாடாகக் காப்பியம் சொன்னால் அது காப்பியம் ஆகாது. மனிதனுடைய வாழ்க்கையை உயர்த்துகின்றவைகள்தாம் இலக்கியம்.

வேதம் மனிதனை இன்னது செய், இன்னது செய்யற்க என்று வரையறுத்துக் காட்டுகிறது. ஆனால் அதைத் தெரிந்துகொள்வது எல்லோராலும் முடியாது. அதனையே வேறு வகையில் சொல்வன ஸ்மிருதி முதலியன. காவியம் என்பது மிகமிகச் சுவையாக, ஊக்கம் குன்றாமல் படிக்கச்செய்து, பின்பு உண்மைக் கருத்தைப் புரிந்து கொள்ளும்படி செய்கிறது. புராணங்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் பாங்கில் அமைந்து வேதத்தின் கருத்தை உள்ளுறையாகக் கொண்டவை. கதையாக இருந்தாலும் கருத்தைச் சொல்வது புராணம்.

புராணங்கள்

புராணம் என்றால் பழமை என்று சொல்வார்கள். வடமொழியில் அதற்கு அப்படிப் பொருள் சொல்வது இல்லை. புரா என்றால்

பழமை; ந என்றால் புதுமை; பழமையும், புதுமையும் சேர்ந்தது புராணம்; புரா, ந இரண்டும் சேர்ந்து புராணம் ஆயின. ரகரம் வந்தால் ந, ண வாக மாறும். நடந்த காலத்தால் பழமையானது. ஆனால் இன்றைக்கும் அது பயன் தருவதால் புதுமையானது. பழங் காலத்தில் நிகழ்ந்த கதையைச் சொன்னாலும், அதிலிருந்து நாம் அறியவேண்டிய கருத்தைப் புலப்படுத்துவதால் இன்றும் பயன் தருகிறது; ஆதலால் புதுமையாகவும் உள்ளது.

நாம் பல சரித்திரங்களைப் படிக்கிறோம். சரித்திரங்கள் அரசர் களுடைய தோற்றத்தையும், வெற்றி தோல்வியையும் சொல்பவை. அவைகளை எல்லாம் செய்தி அளவுக்குத் தெரிந்துகொள்கிறோம். நம் நாட்டு மன்னர்கள் இப்படி எல்லாம் செய்தார்கள் என்று பெருமைப்படுகிறோம். அவ்வளவுதான். ஆனால் புராணமோ முன்னே அப்படி நடந்தது, நாமும் அப்படி நடந்தால் நல்லதைப் பெறலாம் என்று அறிவுறுத்துகிறது. ஆகவே, நடந்ததனால் பழமை யுடையதாக இருந்தாலும், இப்போதும் நாம் பயன் அடைவதற்கு உரியதாக இருப்பதால் புதுமை உள்ளதாக இருக்கிறது. இப்படிப் பழமையும் புதுமையும் கலந்ததுதான் புராணம். ஆகவே இந்த நாட்டில் பலகாலமாகப் புராணங்களை மக்கள் மிகவும் விருப்பத்துடன் கேட்டுவருகிறார்கள். பெரியவர்கள் புராணத்தைப் போற்றி வருகிறார்கள்.

வேதம் சத்தியத்தையே சொல்லவேண்டும் என்று நீதியாகச் சொல்லும். அதை இன்னபடி சொல்லவேண்டுமென்று ஸ்மிருதி சொல்லும். அந்தச் சத்தியத்தையே கருவாக்கி அரிச்சந்திரனுடைய கதையைக் காவியமாகப் படைப்பார்கள் கவிஞர்கள்.

வேதத்திலுள்ள நீதியை அப்படியே சொன்னால் மனிதன் கேட்கமாட்டான். "உனக்குச் சர்க்கரை அதிகமாகச் சேரவேண்டும்" என்று ஒரு வைத்தியர் சொல்கிறார். உடனே கடைக்குப் போய்ச் சர்க்கரையை வாங்கி அப்படியே யாரும் சாப்பிடமாட்டார்கள். சாப்பிட்டாலும் தெவிட்டிவிடும். அதற்காக மா முதலிய பண்டங்களை வாங்கி, சர்க்கரையையும் சேர்த்துப் பலவகைப் பணியாரங்களாக ஆக்கி உண்பார்கள். சர்க்கரை எப்படியோ உள்ளே போய்ச் சேர்ந்துவிடும். புராணங்கள் தின்பண்டங்களைப்போல உள்ளவை.

அவற்றைப் பார்த்தால் கதைகளாக இருந்தாலும் அவற்றினூடே உள்ளூறையாக வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய உண்மை புதைந்து இருக்கும்.

இறைவன் செய்கின்ற காரியங்களை எல்லாம் திருவிளையாடல் என்று சொல்வார்கள். முருகப்பெருமானுடைய பலவகைத் திருவிளையாடல்களைச் சொல்வது கந்தபுராணம். இறைவன் செய்பவை எல்லாமே திருவிளையாடலாகும். சிவபெருமான் மதுரையில் செய்த செயல்களை எல்லாம் திருவிளையாடல்களாக வைத்துத் திருவிளையாடல் புராணம் சொல்கிறது.

விளையாட்டுக்கும் வினையாட்டுக்கும் வேறுபாடு உண்டு. விளையாட்டு இன்பத்தைத் தருவது. வினையாட்டு, துன்பத்தைத் தருவது. ஒருவன் மண்வெட்டியினால் வெட்டுகிறான். அவன் உடம்பு வேர்க்கிறது. உடம்பில் வருத்தம் தோன்றுகிறது. ஒருவன் கிரிக்கெட் விளையாடுகிறான். அப்போது அவனும் கையையும், காலையும் ஆட்டுகிறான். அவன் உடம்பெல்லாம் வேர்வை வருகிறது. ஆனால் அவனுக்குத் துன்பம் உண்டாவதில்லை. வேலை செய்கிறவன் மண்ணை வெட்டி எடுத்துக் கொட்டுகிறான். அந்த வேலையைச் செய்யும்போது, "எப்போது வேலை முடியும்? எப்போது கூலிவாங்கிப் போவோம்?" என்ற எண்ணத்தோடே செய்கிறான். அவனுக்கு அந்த வேலை சிரமமாகத் தெரிகிறது. விளையாட்டு வீரனோ அதற்கப்பால் ஒரு பயன் இருக்கிறது என்பதை எண்ணாமல் அதிலேயே ஈடுபட்டிருக்கிறான். அதனால் இன்பத்தை அடைகிறான். விளையாட்டைச் செய்கிறவனுக்கும் இன்பம்; அதைப் பார்க்கிறவனுக்கும் இன்பம். ஆண்டவன் செய்கிற திருவிளையாடல் அவனுக்கும் இன்பம்; அதைப் பார்க்கிறவர்கள் எல்லோருக்கும் மிகமிக இன்பம்.

புராணங்கள் பதினெட்டு என்று சொன்னேன். வேதத்திலுள்ள கருத்துக்களை அறிவுறுத்துவதற்காக அமைந்தவை புராணம்; அவற்றை உபப்பிரும்மணம் என்று சொல்வார்கள்.

மகாபுராணங்கள் பதினெட்டுள் சிவபரத்துவத்தைச் சொல்வன பத்துப்புராணங்கள். திருமாலின் சிறப்பைச் சொல்வன நான்கு. பிரம்மாவைப் பெருமைப்படுத்துகிற புராணங்கள் இரண்டு. சூரியனுக்குரியது ஒன்று. அக்கினிக்குரியது ஒன்று.



கச்சியப்ப சிவாசாரியார்

முகவுரை

மகாபுராணங்கள் பதினெட்டில் அளவால் பெரியது கந்த புராணம். அது லட்சம் கிரந்தங்களை உடையது என்பர். அதில் ஒரு பகுதி கந்தவேளுடைய வரலாற்றைச் சொல்வது. காஞ்சிபுரம் குமர கோட்டத்தில் அர்ச்சகராக இருந்த ஸ்ரீ கச்சியப்ப சிவசாரியார் கந்தபுராணத்தின் முதல் ஆறு காண்டங்களைப் பாடினர். ஏழாவதாகிய உபதேச காண்டத்தை இரு வேறு புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

தமிழில் உள்ள பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்ற மூன்றும் சைவர்களால் பெரிதும் போற்றப்படுபவை. இலக்கிய நயமும் பக்திச் சுவையும் செறிந்தவை அவை. கந்த புராணம் பாராயண நூலாகவும் விளங்குகிறது. கந்த சஷ்டி விழா ஆறு நாளும் இந்த நூலை ஓதி வருகின்றவர் பலர். தமிழ் நாட்டில் உள்ள அன்பர்களைவிட யாழ்ப்பாணத்திலுள்ள அன்பர்கள் இந்த நூலைப் பாராயணம் செய்வதிலும் பொருள் சொல்வதிலும் மிகுதியாக ஈடுபடுகிறார்கள்.

முருகனுடைய வழிபாடும், திருத்தலங்களும் தமிழ் நாட்டில் மிகுதி. வடநாட்டினர் கார்த்திக் என்று அந்தப் பெருமானை வழிபடுவார்கள். அருணகிரியார் பாடிய நூல்கள் முருகப்பெருமானுடைய பெருமையை விரிவாகச் சொல்கின்றன, கந்த புராணத்தைப் படித்து இன்புறுகிறவர்கள் முருகனுடைய திருவவதாரத்தையும் திருவிளையாடல்களையும் அறிந்து நலம் பெறுகிறார்கள். கந்தபுராணத்தின் சுருக்கம் ஒன்றைத் தனி நூலாகச் சம்பந்த சரணலயர் என்னும் முனிவர் பாடியுள்ளார். அதிலிருந்து கந்த புராணத்தின் வியாபகம் தெரிய வரும். அமரர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் **கந்தபுராணக் கலிவெண்பா** என்ற நூலை இயற்றி இருக்கிறார். குமர குருபர முனிவர் முதல் முதலில் அருளிய **கந்தர் கலி வெண்பாவில்** முருக வேள் வரலாறு சுருக்கமாக வருகிறது.

கந்தபுராணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது; அந்தத் திறத்தில் கம்பராமாயணத்துக்கு அடுத்தபடியாக இதைச் சொல்ல

லாம். கம்பராமாயணத்தில் வரும் பல வகைக் கதையமைப்பைக் கந்தபுராணத்திலும் காணலாம். அமரர் சேதுப் பிள்ளையவர்கள், "**வேலும் வில்லும்**" என்ற நூலில் இதை நன்கு விளக்கியிருக்கிறார். கம்பர் கந்தபுராணத்தைப் பாட எண்ணினரென்றும், பிறகு திருவருள் கூட்டுவிக்க இராமாயணத்தைப் பாடினர் என்றும் ஒரு செய்தி வழங்குகிறது. கம்பர் பாட வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு இந்தப் புராணத்தின் விரிவு அமைந்திருக்கிறது என்பது அந்தச் செய்தியால் புலப்படும்.

கந்தபுராணத்தை முதலில் அச்சிட்டவர் யாழ்ப்பாணத்துநல்லூர் **ஆறுமுக நாவலரவர்கள்.** சில காண்டங்களுக்குச் **சுப்பிரமணிய சாஸ்திரியார்** என்ற யாழ்ப்பாணப் புலவர் உரை எழுதி உள்ளார்.

தூத்துக்குடியில் உள்ள தேச பக்தரும், வள்ளலுமாகிய **திரு ஏ. பி. சி. வீரபாகு** அவர்கள் தம்முடைய மணிவிழாவை 2-5-1975 அன்று சிறப்பாகக் கொண்டாடினர். அதன் தொடர்பாக 20 நாட்கள் கந்தபுராண விரிவுரையை ஆற்றும்படி என்னைப் பணித்தார். முருகன் திருவருளை முன்னிட்டு 6-5-75 முதல் இருபது நாள் கந்தபுராணச் சொற்பொழிவுகளைச் செய்தேன். அவற்றை அன்றன்று பதிவு செய்தார்கள். அவற்றைப் பிறகு பிரதி செய்து தந்தனர்.

என்னுடைய அன்பர் திரு அனந்தனிடம் மீண்டும் ஒரு முறை அந்தப் பிரதியை வைத்துக்கொண்டு சொல்லிச் சுருக்கெழுத்தில் பதியச் செய்தேன். அவ்வாறே செய்து அந்த அன்பர் தட்டெழுத்தில் வடித்துக் கொடுத்தார். அதைச் செப்பஞ் செய்து இந்த நூலை வெளியிடலானேன்.

தக்க காண்டத்தில் சிவபெருமானுடைய திருவிளையாடல்களையும் பராக்கிரமங்களையும் காணலாம். அந்தப் பகுதிகளை விரிக்காமல் முருகன் வரலாற்றோடு தொடர்புடையவற்றைப் பற்றி மாத்திரம் விரிவுரை செய்தேன். அந்த விரிவுரையைப் புத்தக வடிவில் வெளியிட முருகன் திருவருள் கூட்டியது.

திரு ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் இந்தப் புத்தகம் வெளியாக வேண்டும் என்று மிக்க ஆர்வம் காட்டினர். அவருடைய பேரன்பே

இந்த வடிவில் இது வெளிவருவதற்குக் காரணம். முருகன் யாரையேனும் கருவியாகக் கொண்டு நல்ல செயல்களை நடத்துகிறான். அவன் அருள் இல்லாவிட்டால் இந்த நூலை நான் வெளியிடுவது என்பது இயல்வதா?

இருபது நாட்கள் தொடர்ச்சியாகக் கந்தபுராணச் சொற்பொழிவுகளை நிகழ்த்த வாய்த்ததை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகிறேன். முருகனை வழிபட்டுப் போற்றி அவன் திருநாமத்தைச் சொல்லி வாழும் எளியேனுக்கு அவனுடைய திவ்ய சரித்திரத்தில் ஆழ்ந்து இன்புறும் நலம் இந்த நிகழ்ச்சியால் கிடைத்தது. அருணகிரிநாதர் திருவாக்கில் ஈடுபட்டுக் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி ஆகியவற்றுக்கு விளக்கவுரை சொல்லவும், விளக்கக் கட்டுரைகள் அடங்கிய நூல்களை வெளியிடவும் திருவருள் பாலித்த முருகன் இந்த அரிய புராணத்தையும் ஆழ்ந்து படிக்கவும், விளக்கவுரை ஆற்றவும் அருள் புரிந்தான்.

வடமொழியில் ஸ்காந்தத்தை நான் படித்ததில்லை. சில பகுதிகளை மட்டும் கேட்டிருக்கிறேன். தமிழில் உள்ள கந்தபுராணமே தமிழர்களின் மனத்தைக் கவர்வது. வடமொழியில் இராமாயணம், பாகவதம், பாரதம் ஆகியவற்றைப் பற்றிய உபந்நியாசங்களைச் செய்யும் பௌராணிகர் பலர் உள்ளனர். ஆனால் ஸ்காந்தத்தை உபந்நியசிப்பவர் மிகச் சிலரே. அப்படியே தமிழிலும் கந்தபுராண விரிவுரை செய்பவர் சிலரே.

இந்த நூலைப் படிப்பவர்கள் ஒருவாறு கந்தபுராணத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறேன். திரு வீரபாகு அவர்கள் கூடிய வரையில் கந்தபுராணச் செய்யுட்களை மிகுதியாகச் சொல்ல வேண்டும் என்று விரும்பினார். வெறும் கதையைச் சொல்வதை விட ஆன்றோர் திருவாக்கை எடுத்தியம்பி விளக்குவது சிறந்தது என்பதே அவருடைய கருத்து. கிட்டத்தட்ட 550 பாடல்கள் இப் புத்தகத்தில் உள்ளன. இப் புத்தகத்தில் வரும் கந்தபுராணச் செய்யுட்களின் முதற் குறிப்பு அகராதியை இறுதியில் காணலாம்.

இலக்கிய நயங்களையும் உள்ளுறையையும் தத்துவக் கருத்துக்களையும் எனக்குத் தெரிந்த வரையில் அங்கங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தப் புத்தகத்தைப் படிக்கிறவர்கள் கந்தபுராணக் காப்பியத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெற வேண்டும் என்பது என் கருத்து. பக்தியும் தமிழும் மணக்கும் இந்தத் தெய்விக நூலைப் பொதுவாகத் தமிழ் இலக்கியம் பயிலுபவர்களும், சிறப்பாக முருகன் அடியவர்களும் படித்துப் பயன் பெற வேண்டும். அத்தகைய எண்ணத்தைத் தூண்ட இந்தப் புத்தகம் உதவுமானால், இதை வெளியிட்டதன் பயனைப் பெற்றதாக எண்ணுவேன்.

பெரிய நூல்களைப் படித்துணர்வதற்குரிய ஊக்கம் இப்போது குறைந்து வருகிறது. சொற்பொழிவுகளைக் கேட்கும் ஆர்வம் நூல்களைப் படிப்பதில் மக்களுக்கு இருப்பதில்லை. இந்த நிலை நீடித்து வருமானால் பெரிய நூல்கள் படிப்பாரற்று, பதிப்பிப்பாரும் இல்லாமல் நாளடைவில் மறந்து போகும்; மறைந்தும் போய் விடும். அந்த நிலை வராமல் இறைவன் காப்பாற்ற வேண்டும்.


இந்த நூலிலுள்ள விரிவுரைகளை ஆற்றும்படி தூண்டிய **திரு ஏ. பி. சி. வீரபாகு** அவர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகிறேன். இதை மீட்டும் சுருக்கெழுத்தில் எழுதித் தட்டெழுத்தில் வடித்துத் தந்த **திரு அனந்தனுக்கு** என் நன்றி அறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நல்ல முறையில் அச்சிட்டுதவிய சென்னை **ஹிந்திப் பிரசார அச்சுக் கூடத்தாரை** நான் பாராட்டி நன்றி கூறுகிறேன்.

முருகனுடைய திருவருளும் என் ஆசிரியப் பிரானாகிய **மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களின்** ஆசியும் எளியேனுக்கு எப்போதும் துணையிருந்து தமிழ்த் தொண்டை ஆற்றும்படி செய்கின்றன என்பதை நான் கணந்தோறும் நினைந்து வழுத்துகிறேன்.

முருகன் திருவருள் நினைவு எங்கும் பரவுவதாகுக!

'காந்தமலை'
சென்னை - 28

கி. வா. ஜகந்நாதன்
18-2-1980



தூத்துக்குடி,

'அறநெறி அண்ணல்' 'சிவநெறிச் செல்வர்' 'தமிழ்வேள்' 'கல்வித்தந்தை' 'குலபதி'

"கந்தவேள் அருள் ஒளி மணி" உயர்திரு: **ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களும்**

அவர்கள் இல்லத்தரசியார் திருமதி: **மகாலெக்ஷ்மி அம்மையார் அவர்களும்**



கந்தபுராணம்

ஸ்காந்தபுராணம் ஆறு சம்மிதைகள் அடங்கியது; ஐம்பது கண்டங்களை உடையது. சனத்குமார சம்மிதை, ஸூத சம்மிதை, பிரம்ம சம்மிதை, விஷ்ணு சம்மிதை, சங்கர சம்மிதை, ஸூர சம்மிதை என்பவை ஆறு சம்மிதைகள். சங்கர சம்மிதையில் முப்பதாயிரம் சுலோகங்களும் பன்னிரண்டு கண்டங்களும் இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது சிவரகசிய கண்டம். அது பதின்மூவாயிரம் சுலோகங்களை உடையது. உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்று ஏழு காண்டங்கள் சிவ ரகசிய கண்டத்தில் உள்ளன.

கந்தபுராணம் வடமொழியில் ஸ்காந்தம் என்று சொல்லப் பெறும். கந்தபுராணத்தில் எல்லாத் தெய்வங்களைப் பற்றிய செய்திகளும் வருகின்றன. கந்தபுராணத்தில் இல்லாத பொருள் இல்லை. 'எந்தப் பொருளும் கந்தபுராணத்தில்' என்று பழமொழி உண்டு. அதிலிருந்து கந்தபுராணம் பலவகையான பொருளைத் தன்னுள்ளே அடக்கியது என்பது விளங்கும்.

அந்தப் பழமொழியை மாற்றிச் சொல்கிறார்கள். 'எந்தப் புளுகும் கந்தபுராணத்தில்' என்கிறார்கள். நல்லவற்றை எல்லாம் பொல்லாதவையாக்குவது வழக்கமாகிவிட்டது. ஆகவே பொருள் என்பது புளுகாகிவிட்டது.

தமிழ்க் கந்தபுராணத்தைப் பாடியவர் கச்சியப்ப சிவாசாரியார். அவரே, 'இந்தப் புராணத்தில் இல்லாதது ஒன்றும் இல்லை' என்று ஒரு பாட்டில் சொல்கிறார்.

> **புதுமயி லூர்பரன் புராணத் துற்றிடாக்**
> **கதையிலை அன்னது கணித மின்றரோ**
>
> (அவையடக்கம், 13.)

என்கிறார்.

வடமொழியில் உள்ள கந்தபுராணத்தில் பதின்மூவாயிரம் சுலோகங்கள் உள்ளன. கச்சியப்ப சிவாசாரியார் அதை 11,345 பாடல்களில் பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டையும் ஆழமாகப் பார்த்துப் பொருள் செய்வதானால் ஒரு மகாமகம் ஆகும். செய்தித்

தாள்களில் மொத்தக் கருத்தை முதல் நான்கு வரிகளில் வெளியிடுவது போல, சிலவற்றை மாத்திரம் ஓரளவு என் அறிவுக்குத் தெரிந்த வரையில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

கந்தபுராணம் தோன்றிய வரலாறு

கந்தபுராணம் தோற்றிய காலம் 12-ஆம் நூற்றாண்டு என்று சொல்வார்கள். இந்தப் புராணத்தைப் பற்றி ஓர் அழகான வரலாறு உண்டு. முருகப்பெருமானுடைய திருவருளை முன்னிட்டுக் கச்சியப்ப சிவாசாரியார் இதைப் பாடவேண்டுமென்று எண்ணினர், அவருடைய தந்தையார் காளத்தியப்ப சிவாசாரியார். காஞ்சிபுரத்தில் பல பேர்கள், "முருகப்பெருமானிடத்தில் இணையில்லாத பக்தியுடைய நீங்களே கந்தபுராணத்தைத் தமிழில் பாடவேண்டும்" என்று அவரை வற்புறுத்தினர்கள். ஆண்டவன் திருவருள் கூட்டு வித்தாலன்றிப் பாட இயலாது என்று அவர் எண்ணினர். 'இதை எப்படிப் பாடுவது?' என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, 'திகட சக்கரம்' என்ற தொடர் அசரீரியாகக் கிடைத்தது. அதைக் கேட்டு, இறைவன் திருவருள் பாலித்தான் என்று ஆனந்தம் கொண்டு அதையே தொடக்கமாக வைத்துப் பாடலானர். எல்லாவற்றையும் பாடி முடித்த பிறகு அரங்கேற்றம் நடத்த ஏற்பாடு ஆயிற்று.

ஒரு நூலை இயற்றிய பிறகு பல புலவர்கள் வீற்றிருக்கிற சபையில் அதனை அரங்கேற்றம் செய்வது அந்தக் காலத்து வழக்கம். மாபெரும் புலவரும், சிறந்த இலக்கணத்தை இயற்றியவருமான தொல்காப்பியர் அதங்கோட்டு ஆசான் அவையில் தம் இலக்கண நூலை அரங்கேற்றினர் என்று தெரியவருகிறது. பழங்காலத்தில் எவ்வளவு பெரிய புலவர்களாக இருந்தாலும் தம்முடைய நூலைப் புலவர்கள் கூடியுள்ள சபையில் அரங்கேற்றம் செய்வது என்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இந்தக் காலத்தில் இந்த வரையறை போய்விட்டது. ஒரு பாட்டைப் பாடி, இந்தப் பாட்டைப் போல வேறு யார் பாடுவார்கள் என்று தாமே எல்லோரிடமும் பிரசாரம் பண்ணுகிற பழக்கம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. கந்த புராணம் காஞ்சிபுரத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் குமரகோட்டத்தில் அரங்கேற்றம் ஆயிற்று. அரங்கேற்றம் நடந்த மண்டபம் அக்கோயிலில் தனியாக இருக்கிறது.

கச்சியப்ப சிவாசாரியார் குமரகோட்டத்தில் அர்ச்சகராக இருந்தவர். அவர் அங்கே கந்தபுராணத்தை அரங்கேற்றம் செய்த போது அவரிடத்துப் பொருமையுள்ள ஒருவர் முதல்பாட்டைச் சொல்லும்போதே தடை கூறினர்.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்

என்று தொடங்குகிறது விநாயகர் காப்புப் பாடல். திகட சக்கரம் என்பதை, திகழ் தசக்கரம் என்று பிரித்துப் பொருள் கூறினர் சிவாசாரியார். "ளகரத்தின் முன் தகரம் வந்தால் டகரமாவதற்கு விதி இருக்கிறது. மூகரத்தின்முன் தகரம் வந்தால் டகரமாவதற்கு எங்கே விதி இருக்கிறது?" என்று அந்தப் பொருமைக்காரர் கேட்டார். "இந்தப் பாட்டில் அவ்வாறு வந்தது தவறு" என்று சொன்னர். அப்போது சிறிது மயங்கிய கச்சியப்ப சிவாசாரியார், "நாளைக்கு அதற்கு விடை சொல்கிறேன்" என்று சொல்லி முடித்துவிட்டார். ஆண்டவனையே நினைத்து அன்று படுத்திருந்தார். "எம்பெருமானே, நீதானே அடியெடுத்துக் கொடுத்தாய்? நீ எடுத்துக் கொடுத்த தொடரிலேயே தவறு இருக்கிறது என்று ஒருவர் சொல்கிறார், இது நியாயந்தானு?" என்று வருந்தினர். அப்போது, "நாளைய தினம் நாம் வருகிறோம். நீ கவலைப்படாதே" என்று கனவில் இறைவன் அனுக்கிரகம் செய்தான்.

மறுநாள் சபை கூடியது. அப்போது ஒரு புலவர் வேடத்தில் முருகன் வந்தான். திகழ் தசக்கரம் என்பது திகட சக்கரம் என்று ஆவதற்குரிய இலக்கணம் இது என்று வீரசோழியத்தில் உள்ள ஒரு சூத்திரத்தை எடுத்துக் காட்டினர் வந்த புலவர். வீரசோழி யத்தில் அதற்கு இலக்கணவிதி இருக்கிறது. அந்த நூலில் சந்திப் படலத்தில் 15-ஆவது சூத்திரத்தில், "எண்ணிரண்டாய்த், தோன்றுடல் பின்னர்த் தகாரம் வரின் இரண் டும்தொடர்பால், ஆன்ற ஐந் தாம்உடல் ஆம்; முன்பில் ஒற்றுக்கு அழிவுமுண்டே" என்று வருகிறது. மூகரம், ளகரம் இரண்டின் முன்னும் தகரம் வந்தால் டகரம் ஆகும் என்று அந்தச் சூத்திரம் சொல்கிறது. இதனைக் கேட்டவுடன் பொருமைக்காரர் வாய் அடங்கினர். இந்தச் செய்தியைத் திருப்புகழில் அருணகிரிநாதர்,

"மருவு புலவனுர் கவிக்குளேசிறு
வழுவ தறைமகா சபைக்குளேகியே
வகைய பெயராதா இலக்கணவிதி மொழிவோனே"

என்றும்,

"முற்பட்ட இலக்கண நூலிடை
தப்புற்ற கவிக்கென வேஅவை
முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே"

என்றும் பாடுகிறுர்.

அந்தக் காலத்தில் எல்லோருமே கச்சியப்ப சிவாசாரியாரைப் பாராட்டி இந்தக் காப்பியத்தைத் தெய்வ சம்பந்தம் உடையது என்று போற்றினுர்கள். இதற்கு ஒரு சிறப்புப் பாயிரம் இருக்கிறது; "உச்சித மாஞ்சிவ வேதியன்" என்று தொடங்கும் அது, "காளத்தி ஓங்குமைந்தன் கச்சியப்பன்" என்று கச்சியப்ப சிவாசாரியாரைச் சொல்கிறது.

பழங்காலத்தில் பாற்கடலைத் தேவர்கள் கடைந்தபோது அதிலிருந்து திருமகள் எழுந்தாள்; சந்திரன் தோன்றினுன்; அமுதம் உண்டாயிற்று. அதைப்போலக் கச்சியப்ப சிவாசாரியார் பாடியுள்ள கந்தபுராணத்திலிருந்து கல்வியாகிய சந்திரனும், வெண்தாமரை மேவும் சரசுவதியும், கேட்கின்ற செவிக்கும் பாடுகின்ற நாவுக்கும் இன்பம் தரும் அமிழ்தமும் எழுந்தன என்று அந்தச் சிறப்புப் பாயிரம் சொல்கிறது.

"உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி ஓங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலில்
மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னும்
இச்செவி நாவினுக் கின்பாம் அமுதும் எழுந்தனவே."

[சிவவேதியன் - ஆதிசைவர். இன்பாம் அமுதும் - இன்பமாகிய அமிர்தமும்.]

யாழ்ப்பாணத்தில் இராமாயணத்தைவிடக் கந்தபுராணத்திற்குச் சிறப்பு அதிகமாக இருக்கிறது. கந்த சஷ்டியின் போது கந்த புராணப் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள். அதற்குப் பயன் சொல்வது என்ற ஒரு முறை இருக்கிறது. ஒவ்வொரு பாட்டின் சாரத்தையும் சொல்லிக்கொண்டு வருவார்கள். யாழ்ப்பாணத்திலே தோன்றி, சைவ சமயத்தை நிலைநாட்டிய ஆறுமுக நாவலர் இந்த முறையை ஆரம்பித்தார். நான் யாழ்ப்பாணத்திற்குப் பலமுறை சென்று வந்தவன். ஆகவே இந்த முறையை நான் கேட்டிருக்கிறேன்.

கடவுள் வாழ்த்து

விநாயகர் காப்பு

கந்தபுராணப் பாயிரப் பகுதி விநாயகர் காப்புடன் தொடங்குகிறது.

> திகட சக்கரச் செம்முக மைந்துளான்
> சகட சக்கரத் தாமரை நாயகன்
> அகட சக்கர வின்மணி யாவுறை
> விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.
>
> (பாயிரம், 1.)

இது விகட சக்கர விநாயகர் துதி.

கந்தபுராணத்தில் முருகப்பெருமான் திரு அவதாரம் வருகிறது. முருகப்பெருமான் வேறு; சிவபெருமான் வேறு அல்லர். ஐந்து முகம், பத்துக்கரங்களோடு உள்ளவன் பழைய பரமசிவன்; அவனே ஆறு முகம், பன்னிரண்டு கைகளுடன் குமாரசிவமாகத் தோன்றினன். புராணக் கதையைச் சொல்லும் போது பூர்வகதையைச் சொல்வது வழக்கம். அவ்வாறு ஆறுமுகச் சிவனைப் பற்றிச் சொல்வதற்கு முன் ஐம்முகச் சிவனைப் பற்றிச் சொல்கிறார்.

திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துளான்.

பத்துக் கரங்களையும், ஐந்து முகங்களையும் உடையவன் சிவபெருமான். அந்த ஐந்து முகங்களாலும் 28 ஆகமங்களைச் சொன்னான் என்று புராணங்கள் கூறும். இறைவனுடைய ஐந்து முகங்கள் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பவை. உச்சி முகம் ஈசானம்: கிழக்கு நோக்கியுள்ள முகம் ததபுருஷம்; தெற்கு நோக்கியுள்ள முகம் அகோரம்; வடக்கு நோக்கியுள்ள முகம் வாமதேவம்; மேற்குத் திசை நோக்கியுள்ள முகம் சத்தியோசாதம்.

இந்த ஐந்து முகமுடைய சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்யப்போகும் போது பூமியைத் தேராகவும், சூரிய சந்திரனைச் சக்கரமாகவும் கொண்டு, பிரம்மா தேரை ஓட்ட எழுந்தருளினன்,

அப்போது சகடத்தின் சக்கரமாக இருந்தவன் சூரியன். (சகடம்-தேர்.) தாமரையை மலரச் செய்பவன் சூரியன். ஆகவே அவனைத் தாமரை நாயகன் என்று சொல்வது வழக்கம். பத்துக் கைகளையும், ஐந்து முகங்களையும் உடைய சிவபெருமான் திரிபுர சங்கார காலத்தில் செலுத்திய திருத்தேரின் சக்கரமாக அமைந்தவன் சூரியன் ஆகிய தாமரை நாயகன்.

திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்.

விநாயகப் பெருமான் ஒரு சமயம் விசுவரூபம் எடுத்தார். அந்தத் திரு உருவத்தை நமக்குக் காட்டுகிறார் கச்சியப்ப சிவாசாரியார். எப்படிக் காட்டுவது? இவ்வளவு அடி உயரம் என்று அளந்து காட்ட முடியாது. அதனை ஒரு வகையில் நமக்குப் புலப்படும்படியாகச் செய்கிறார்.

சூரிய மண்டலம் எல்லாவற்றையும்விட மேலே இருப்பது. அதற்குக் கீழேதான் சந்திர மண்டலம் இருக்கிறது. விநாயகப் பெருமான் சூரிய மண்டலத்திற்கும் மேலே வளர்ந்திருக்கிறார். சூரியன் அவரது இடுப்புக்கு நேராக இருக்கிறான். விநாயகப் பெருமான் தம் இடுப்பில் உதரபந்தனமாக—பெல்ட்டைப் போல—நாகப்பாம்பை அணிந்திருக்கிறார். அந்த நாகப்பாம்பை இடுப்பைச் சுற்றிக் கட்டி ஒரு முடி போட்டிருக்கிறார். நாகப்பாம்பின் தலை அவரது இடுப்பில் எடுப்பாய் இருக்கிறது. அந்தப் பாம்பின் வாய்க்குப் பக்கத்தில் சூரியன் இருக்கிறான். விநாயகப் பெருமான் அவ்வளவு உயரமாக வளர்ந்திருக்கிறார். அப்போது தாமரை நாயகனாகிய சூரியன் விநாயகப் பெருமான் இடையில் கட்டியிருக்கிற நாகப்பாம்பின் வாயில் உள்ள மாணிக்கத்தைப்போல ஒளிவிடுகிறான்.

தாமரை நாயகன்
அகடு அசக்கு அரவின் மணியா உறை

என்று சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார். 'சூரியன், வயிற்றிலே உதர பந்தனமாகக் கட்டிய பாம்பின் மாணிக்கம் போலத் தங்குகிற' என்பது பொருள்.

விநாயகப் பெருமானை விகட சக்கரன் என்று சொல்கிறார். காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற விநாயகருக்கு விகட சக்கர விநாயகர் என்று பெயர்.

தக்கன் யாகம் செய்தபோது சிவபெருமானை அழையாமல் செய்தான். அதனால் சிவபெருமான் வீரபத்திர தேவரை உண்டாக்கித் தக்க யாகத்தை அழிக்கும்படி விடுத்தான். அப்போது திருமால் தம் சக்கராயுதத்தை வீசினார். அதை வீரபத்திரக் கடவுள் அணிந்திருந்த வெண்தலை ஒன்று கவ்விக் கொண்டது. சக்கரப் படை இல்லாமல் திருமால் தவித்தார். அவர் தமது சேனாதிபதியாகிய விஷ்வக்ஸேனரை அனுப்பி அந்தச் சக்கரத்தை மீட்டுவரச் சொன்னார். விஷ்வக்ஸேனர் வீரபத்திர தேவர் முன் வந்து கோமாளிக் கூத்து ஆடினார். அந்தக் கூத்துக்கு விகடக் கூத்து என்று பெயர். அப்படி ஆடும்போது எல்லோரும் நகைத்தார்கள். வெண்தலை மாலையும் நகைத்தது. அப்போது அதன் வாயில் இருந்த சக்கரம் கீழே நழுவி விழுந்தது. அந்தச் சக்கரத்தை விநாயகப் பெருமான் எடுத்து வைத்துக்கொண்டார். 'இவரிடமிருந்து அதை வாங்குவதற்கு என்ன வழி?' என்று விஷ்வக்ஸேனர் எண்ணினார். விநாயகப் பெருமானே அதே விகடக் கூத்தைத் தம் முன்னே ஆடவேண்டுமென்று கேட்டார். அப்படியே விஷ்வக்ஸேனர் ஆட, அந்தச் சக்கரத்தை அவர் கையில் கொடுத்தருளினார். விகடக் கூத்து ஆட, சக்கரத்தைக் கொடுத்ததனால் இவருக்கு விகட சக்கர விநாயகர் என்ற திருநாமம் வந்தது. இது காஞ்சிப் புராணத்தில் வருகிற கதை.

"ஏக்கறவா னவன்இயற்றும் விகடநடம் நெடும்போதெம்
பெருமான் நோக்கி
மாக்கருணை சுரந்தருளி ஆழிஅவன் றனக்களித்தான்;
வரத்தால் மிக்கீர்,
போக்கறும்இக் காரணத்தால் அன்றுமுதல் காஞ்சியின்அப்
புழைக்கைத் தேவை
ஊக்கமுறும் திறல்விகட சக்கரவி நாயகனென்
றுலகம் கூறும்."

[வானவன் - விஷ்வக்ஸேனர். பெருமான் - விநாயகர். ஆழி - சக்கரம். போக்கு-குற்றம். புழைக்கைத் தேவு-விநாயகர்.]

கந்தபுராண முதல் பாட்டில் எம்பெருமான் ஐந்து முகங்களோடு இருந்தான் என்பதை நினைப்பூட்டினர். அவனே இந்த ஆறுமுகப் பெருமானாக எழுந்தருளப்போகிறான் என்பதற்குரிய பூர்வபீடிகை சொன்னது போல ஆயிற்று. விநாயகப் பெருமானது விசுவரூபத்தை நினைவூட்டினர். கந்தபுராணம் காஞ்சிபுரத்தில் இயற்றப்பெற்றது. ஆதலின் அங்கே உள்ள விகட சக்கர விநாயகரைப் போற்றினர்.

முருகப் பெருமான் காப்பு

அடுத்ததாக முருகப் பெருமான் காப்பு ஒன்று வருகிறது.

மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி,
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி, காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி, அன்னான்
சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல்
போற்றி போற்றி!

(பாயிரம், 3.)

ஆறுமுக நாதனுடைய வணக்கம் இது. ஐந்து முக நாதன் ஆறுமுக நாதனாக எழுந்தருளினன் என்பதை நினைவூட்ட முதலில்,

மூவிரு முகங்கள் போற்றி

என்று சொன்னர். பொதுவாக, இறைவனைப் பாதாதிகேசமாக வருணிப்பது மரபு. மக்களை வருணிக்கும்போது கேசாதி பாதமாகச் சொல்வது வழக்கம். இங்கே கச்சியப்ப சிவாசாரியார் திருவடியை முதலில் சொல்லவில்லை.

மூவிரு முகங்கள் போற்றி

என்று முகத்திலிருந்து ஆரம்பித்துப் பாடுகிறார். 'ஏன் அப்படிச் சொல்கிறார் ? இது மரபுக்கு விரோதமாயிற்றே !' என்று தோன்றும். ஏதேனும் ஒரு பொருளில் ஒரு தனிச் சிறப்பு இருந்தால் அந்தச் சிறப்பை எடுத்துச் சொல்வது வழக்கம். ஐந்து முகங்களுடைய சிவபெருமானாக இருந்தவன் முருகனாகத் திரு அவதாரம் செய்த போது ஆறு முகங்களும், பன்னிரு கரங்களும் உடையவனாக எழுந்தருளியது சிறப்பு. ஆகவே இந்தப் புராணத்தில் சொல்லப் போகிற அந்தச் சிறப்பான அம்சத்தை முதலில் எடுத்துக் காட்டினர். அந்த

ஆறு முகங்களும் மலர்களைப்போல மலர்ந்திருக்க, அந்த முகங்களி லிருந்து தேனைப்போலக் கருணை சுரக்கிறது. ஆகவேதான்,

மூவிரு முகங்கள் போற்றி! முகம்பொழி கருணை போற்றி!

என்று சொன்னார்.

இறைவன் திரு அவதாரம் செய்தது கருணையினால்.

கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய

(திருவவதாரம், 92.)

என்று பின்னாலே சொல்லப் போகிறார். இதனுடைய உள்ளுறையை அப்போது பார்க்கலாம்.

உலகம் எல்லாம் உய்ய வேண்டிக் கருணை சுரந்து ஆண்டவன் திரு அவதாரம் செய்கிறான். அந்தக் கருணை மிகுதியையே ஆறு முகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் காட்டுகின்றன. அப்படி எழுந்தருளிய முருகப் பெருமான் உலகத்திற்கு நலம் உண்டாக வேண்டிச் சூரபன்மாவைச் சங்காரம் செய்கிறான். அந்தச் சங்காரம் செய்வதற்கு அந்தப் பெருமானுடைய வீரம் உதவுகிறது. வீரத்தைப் புலப்படுத்துவது தோள். முருகனுடைய வீரத்தின் விளைவே கந்த புராணத்தின் பயன். அதைச் சொல்வார்போல,

ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி!

என்றார். ஆறு முகங்களைச் சொன்னதனால் அவதாரத்தையும், தோளைச் சொன்னதனால் வீர விளையாட்டையும் நினைவூட்டினார். ஆகையால் கந்தபுராணத்தின் முதலையும், முடிவையும் சொன்னது போல ஆகிவிட்டது.

அடுத்து இறைவன் மாவடி அமர்ந்திருத்தலைச் சொல்கிறார்.

காஞ்சி

மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி!

முருகப்பெருமானை 'மாவடி வைகும் செவ்வேள்' என்று சொல்கிறார். மாமரத்தின் அடியில் எழுந்தருளி இருப்பதனால் சிவபெருமானை மாவடி என்றே சொல்வார்கள்; ஏகாம்பரநாதன் என்று வழங்கு வார்கள். முருகப்பெருமான் வேறு, சிவபெருமான் வேறு அல்லராதலால், "மாவடி வைகும் செவ்வேள்" என்றார்.

3

சங்க காலத்தில் மாமூலனுர் என்று ஒரு புலவர் இருந்தார். 'மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்; அதனுல் அந்தப் பெயர் ஏற்பட்டது' என்று சிலர் பொருள் சொல்வார்கள். ஆனுல் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கு மாமூலனுர் என்று பெயர் உண்டு. மூலம் என்ருல் அடி. மா மூலம்—மா மரத்தின் அடி; அதுவே மாவடி; மாவடி என்ற பெயரையே சிலர் வைத்துக்கொள்கிருர்கள். மாமூலனுர் என்பது மாமரத்தின் அடியில் எழுந்தருளியிருக்கிற சிவபெருமானைக் குறிக்கும். பழங்காலத்தில் இறைவனுடைய பெயர்களை வைத்துக் கொள்கிற வழக்கம் புலவர்களிடையே இருந்தது. காஞ்சிபுரத்து ஏகாம்பரநாதரையே மாமூலனுர் என்று சொல்லலாம். அப்படியே காமாட்சியின் திருநாமத்தைக் கொண்ட காமக்கண்ணி என்ற பெண் புலவர் சங்க காலத்தில் இருந்தார். காமக்கண்ணி என்பது காமாட்சி என்பதன் வேறு உருவம். ஏகாம்பரநாதரின் திருநாமத்தை ஒரு புலவர் கொண்டிருக்கிருர், காமாட்சியின் திருநாமத்தை ஒரு பெண் புலவர் கொண்டிருக்கிருர் என்பது இவற்ருல் தெரியவருகிறது.

சிவபெருமானுக்கு எது பெயரோ அதையே முருகப்பெருமானின் பெயராக்கி, சிவபெருமான் வேறு, முருகன் வேறு அல்லர் என்பதை உணர்த்தும் வகையில் அந்த மாவடியைப் போற்றுகிருர்.

காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி!

சூரசங்காரம் ஆன பிறகு சூரன் சேவலும், மயிலும் ஆயினுன். அதனை நினைப்பூட்டுகிருர். அவ்வாறு செய்த வேலைப் போற்றுகிருர்.

அன்னுன்
சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல்
போற்றி போற்றி!

இந்தப் பாடலில் கந்தபுராணத்தின் தொடக்கமும், முடிவும் குறிப்பாகத் தெரிகின்றன.

வாழ்த்து

அடுத்து வாழ்த்துச் சொல்ல வருகிருர் கச்சியப்ப சிவாசாரியார்.

வான்முகில் வழாது பெய்க!

என்று தொடங்குகிறது அந்த வாழ்த்து. இறைவனுக்கு அடுத்தபடியாக நிலவுவது மழை. அதனுல்தான் வள்ளுவர் கடவுள் வாழ்த்

துக்கு அடுத்தபடி வான் சிறப்பை வைத்தார். மனிதனுடைய முயற்சிக்கு அப்பால் உள்ளது மழை. இறைவன் திருவருள்போல அது பொழிகிறது. இறைவன் திருவருட் சம்மதம் இல்லாமல் மழை பெய்யாது. தெய்வ ஆற்றலாலன்றி மழையினல் உலகம் வளம் பெருது. ஆகவே இறைவனை வாழ்த்தின பிறகு வான் முகிலை வாழ்த்துகிருர்.

மழை பெய்தால்தான் வளம் சுரக்கும். எனவே தொடர்ந்து,

மலிவளம் சுரக்க !

என்கிருர், மழை பெய்தாலும் வளம் சுரக்காமல் இருக்கலாம். பரந்த கடலில் போய்ப் பெய்துவிட்டால் பூமிக்கு ஒரு நலமும் இல்லை. பூமி எங்கும் பரந்து மழை பெய்தால்தான் வளம் சுரக்கும். ஆகவே மழை பெய்தால் மாத்திரம் போதாது. பெய்ய வேண்டிய இடத்தில் பெய்தால்தான் வளம் சுரக்கும் என்பதை எண்ணி இரண்டையும் தனித்தனியே சொன்னுர். மழை பெய்து, வளம் சுரந்தால்தான் மன்னன் முறை செய்யலாம். மன்னன் முறை செய்யாவிட்டால் வளம் எத்தனை இருந்தாலும் பயன் இல்லை.

மன்னன், கோல்முறை அரசு செய்க !
குறைவிலா துயிர்கள் வாழ்க !

இறைவன் திருவருளால் மழை பெய்து, வளம் பெருகி, மன்னனது ஆட்சியும் முறையாக அமைந்திருந்தால் குறைவில்லாது உயிர்க் கூட்டங்கள் இனிது வாழும் என்பதைப் புலப்படுத்துகிருர். அடுத்து வருகிறது,

நான்மறை அறங்கள் ஓங்க ! நற்றவம் வேள்வி மல்க !
என்பது.

உலகத்தில் வாழுகின்ற மக்கள் அறம் செய்து வாழவேண்டும். அறம் என்பதற்கு வரையறுக்கப்பட்டது என்பது பொருள். காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் வேறு விதமான நியதியைப் பெரியவர்கள் சொல்வார்கள். ஓரிடத்தில் பயன்படுகிற முறை வேறு ஓரிடத்தில் பயன்படாது.

குளிர் பிரதேசத்தில் இருப்பவர்கள் கம்பளி போர்த்துக் கொள்வார்கள். குளிர்காலத்தில் மட்டும் நாம் கம்பளி போர்த்துக்கொள்

கிறோம். வெயில் காலத்தில் நாம் போர்த்துக்கொள்வதில்லை. இது காலத்தாலும், இடத்தாலும் மாறுபடுவது.

காலத்தாலும், இடத்தாலும் மாறுபடாத அடிப்படை அறங்களைச் சொல்வது வேதம். வேத நெறிக்கு உட்பட்டவர்களைத்தான் இந்துக்கள் என்று சொல்கிறோம். நம் நாட்டில் கன்னியாகுமரி முதல் இமாசலம் வரைக்கும் ஒரே பண்பாடு இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வெவ்வேறு வகையான ஆடை, வெவ்வேறு வகையான உணவு, பழக்க வழக்கங்கள் இருந்தாலும் நம் வாழ்க்கையின் கடைப்பிடிகளை நினைவூட்டுவதற்குத் தக்க கருவியாக விளங்குவது வேதம். அது பொதுவானது. இந்துக்கள் யாவரும் வேதநெறி வழியே ஒழுகுபவர்கள் ; வைதிகர்கள்.

வேதமும் தமிழ்நாடும்

இப்படிச் சொல்லும்போது சிலருக்குச் சந்தேகம் உண்டாகும். "அந்தணர்களுக்குத்தானே வேதம்? மற்றவர்களுக்கு ஏது வேதம்?" என்று கேட்பார்கள். அந்தணர்கள் வேத அத்தியயனம் பண்ணவும், பிறருக்குக் கற்பிக்கவும் கடமைப்பட்டவர்கள். முதல் மூன்று வருணத்தார்களுக்கும் வேத அத்தியயனம் செய்யும் உரிமை உண்டு. வேதத்தை ஓதுவிக்கும் கடமை அந்தணருக்கே உரியது. வேதநெறிப்படி எல்லோரும் நடக்க வேண்டும். ஆகவே இந்துக்களாகப் பிறந்த அனைவரும் வைதிகர்கள். வேதத்தைப் பாராயணம் பண்ணி, பிறருக்கும் கற்பிப்பதற்கு அந்தணர்கள் கடமைப்பட்டவர்கள் என்பதனால் அவர்களுக்கே அது சொந்தம் என்று சொல்ல முடியாது. ஒரு பாங்கில் பணத்தை எடுத்துக் கொடுக்கிறவர் காஷியர். அவர் அங்குள்ள பணத்தை எடுத்துக் கொடுப்பதனால் அந்தப் பணம் அவருக்கே சொந்தம் என்று சொல்ல முடியாது. பணம் போட்டவர்கள் எல்லோரையும் சேர்ந்தது அது. அவரவர்கள் போட்டுள்ள பணத்தை அவரவர்கள் வந்து கேட்கும்போது எடுத்துக் கொடுப்பதற்கு அங்குள்ள காஷியர் சம்பளம் வாங்கிக்கொள்கிறார். அதற்காக, பணம் போட்டவர்களது கணக்கை வைத்துக்கொள்கிறார். அது போல அந்தணர்கள் வேதத்தை அத்தியயனம் பண்ணி, பிறருக்குச் சொல்லிக்கொடுத்துப் பாதுகாக்கிறார்கள், அவர்களுக்கு மட்டும் அந்த வேதம் உரியது என்று சொல்வது சரியன்று.

இப்போதெல்லாம் வேதத்தைப்பற்றிப் பலவகையான கருத்துக்களை மேடைகளில் பேசுகிறார்கள். தமிழருக்கும், வேதத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்கிறார்கள். தமிழ் நாட்டிலேதான் வேதம் நன்றாக இருக்கிறது. பாரதியார்,

"வேதம் நிறைந்த தமிழ்நாடு"

என்று பாடினார். பிற்காலத்தில் வந்தவர் ஆகையால் இப்படிப் பாடியிருக்கிறார் என்று சொல்லலாம். இப்போது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகவும் பழமையானவை சங்க நூல்கள். அந்த நூல்களை ஆராய்ச்சி செய்தால் அந்தக் காலத்தில் தமிழர்கள் வேதத்தை எப்படிப் பாதுகாத்தார்கள், பாராட்டினார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஓர் உதாரணம் சொல்கிறேன்.

மதுரை மாநகரில் சேர சோழ பாண்டிய நாட்டுப் புலவர்கள் ஒன்று சேர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சோழ நாட்டின் தலைநகராக இருந்தது உறையூர். அதற்குக் கோழி என்று பெயர். சேர நாட்டின் தலைநகர் வஞ்சி. அந்தப் புலவர்களிடையே காலையில் எழுவதைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது சோழநாட்டுப் புலவர் சொன்னார்; "நாங்கள் முதல் கோழி கூவும்போதே எழுந்திருப்போம்" என்றார், பெருமையோடு. வஞ்சி மாநகரப் புலவரும் அதையே சொன்னார். அப்போது பாண்டி நாட்டுப் புலவர் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு சொன்னார்; "நாங்கள் கோழி கூவி எழுவது இல்லை" என்றார். 'இவர்கள் அதற்குப் பிறகும் நெடு நேரம் படுத்து உறங்குவார்களோ!' என்று நினைத்தார்கள் மற்றவர்கள். அவர் தொடர்ந்து சொன்னார்; "எங்கள் நாட்டில் கோழி கூவுவதற்கு முன்பாகவே அந்தணர்கள் எழுந்து விடுவார்கள். எழுந்து வேத கானம் செய்வார்கள். அந்த வேதகானத்தைக் கேட்டு நாங்கள் எழுந்திருப்போமே தவிர, கோழி கூவி எழுந்திருப்பதில்லை" என்றார்.

"பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன் துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாஅதெம் பேரூர் துயிலே."

[பூவினுட் பிறந்தோன்-பிரமன். கேள்வி-சுருதி; வேதம். எடுப்ப-எழுப்ப.]

இது **பரிபாடல்** என்ற சங்கநூலில் வருகிறது.

மதுரைக் காஞ்சி என்ற நூலில் அந்தணர்கள் விடியற்காலத்தில், மலர்களில் உள்ள பூந்தாதை ஊதுகின்ற வண்டுகள் ரீங்காரம் செய்வதுபோல வேதத்தை ஓதுவார்கள் என்று வருகிறது.

"தாதுண் தும்பி போதுமுரன் ருங்கு
ஓதல் அந்தணர் வேதம் பாட."

இவற்ருல் தமிழ்நாட்டின் தலைநகராக இருந்த மதுரை மாநகரில் வேதம் எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அந்த வேதம், நாம் இப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்யக் கூடாது என்று, அறம் அல்லது தர்மங்களை வரையறுத்துச் சொல்கிறது. வேதம் நம்முடைய வாழ்வுக்கு அடிப்படைச் சட்டம். கச்சியப்ப சிவாசாரியார் இந்த நாட்டில் தர்மம் ஓங்கவேண்டுமென்று சொல்கிருர்; வேதத்தினலே வரையறுக்கப்பட்ட தர்மங்கள் எவையோ அவை ஓங்க வேண்டுமென்று பாடுகிருர்.

நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
என்றவர்,

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்!

என்று முடிக்கிருர். சிவபெருமானுடைய திருவருளில் ஈடுபட்டுப் பக்தி செய்கிறவர்கள் சைவர்கள். அவர்களுடைய சமயம் சைவம். சைவம் என்பது எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்வது. சைவ நெறி அன்பு நெறி. அந்த நெறி, அந்த நீதி, உலகம் எல்லாம் வழங்கினல் உயிர்க் கூட்டங்கள் நன்ருக நிலவும் என்ற எண்ணத்தினல், "சைவ நீதி நிலவுக" என்று சொன்னர்.

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்!

(பாயிரம், 5)

சிவபெருமான் வணக்கம்

அடுத்தபடி சிவபெருமானுடைய வணக்கத்தைச் சொல்லத் தொடங்குகிருர்.

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி எய்தி
அருவந் தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்
ஒருவன் தனது பதந்தன்னை உளத்துள் வைப்பாம்.

(கடவுள் வாழ்த்து, 1.)

[தொல்லை - பழமையான.]

ஆண்டவன் அருவமாகவும், உருவமாகவும் இருக்கிறான்; அவ் விரண்டும் அல்லாமல் இருக்கிறானும்.

அருவந் தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்.

அருவத்தையும், உருவத்தையும் அல்லாமல் இருக்கிறான் என்று சொல்வதில் ஓர் ஐயம் பிறக்கிறது. ஒன்று அருவமாக இருக்க வேண்டும்; அல்லது உருவமாக இருக்கவேண்டும். இரண்டும் அல்லாதது எது என்ற கேள்வி பிறக்கும்.

'இறைவன் அருவமாக இருக்கிறான்; உருவமாக இருக்கிறான்; அரு உருவமாகவும் இருக்கிறான்' என்று சாத்திரம் சொல்கிறது. சிவலிங்கம் அருவுருவம் என்று சொல்கிறார்கள்.

சிவலிங்கம்

சிவலிங்கத் தத்துவத்தைப்பற்றி இப்போது பலர் பலவித மாகப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். மேல்நாட்டினர் அதற்கு அருவருப்பான பொருள் சொல்கிறார்கள். அதைக் கண்டு நம்மிடை யேயும் சிலர் அப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே சற்று ஆராயலாம் என்று நினைக்கிறேன்.

நாம் பார்க்கின்ற சிவலிங்கம் அருவுருவம் என்று சொல்கிறார் கள். கண்ணில் தெரிகிற எல்லாமே உருவந்தானே? உருவம், வடிவம் என்று இரண்டு உண்டு. உருவம் என்பது ஃபார்ம் (form); வடிவம் என்பதனை ஷேப் (shape) என்பர். சிவலிங்கத் திற்கு 'ஷேப்' இல்லையே தவிர, 'ஃபார்ம்' உண்டு. ஆயினும் அதை உருவமற்றது என்று சொல்கிறார்கள், அப்படிச் சொல்வது பொருத் தமாக இராது. கண்ணில் காணுகிற எல்லாமே உருவந்தான்.

நாம் இப்போது கோயிலிலுள்ள நடராஜரைப் பார்க்கிறோம். அந்த நடராஜர் சாட்சாத் நடராஜர் அல்ல; அதாவது பதஞ்சலி. வியாக்கிரபாதருக்குக் கோலம் காட்ட எழுந்தருளிய மூர்த்தி அல்ல.

அந்தப் பெருமானின் அறிகுறியே அந்த வடிவம். சிவபெருமான் நடராஜராகத் தாண்டவமாடிய கோலத்தைக் காட்டும் பிம்பம் அது. அதேபோல் நாம் காணுகிற சிவலிங்கம் அருவுருவத்தைக் காட்டுகின்ற பிம்பம். மூலமாக உள்ள அருவுருவத்தைக் காட்டுவது கோயிலிலுள்ள சிவலிங்கம். இந்த லிங்கத்தையே அருவுருவம் என்று சொல்லக்கூடாது. அது அருவுருவத்தைக் குறிக்கும் அடையாளம்.

தட்சிணாமூர்த்தி கோயிலில் எழுந்தருளியிருக்கிறார். தென்முகமாக இருந்து சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் பண்ணின மோன ஞானத் தவக்கோலத்தைக் காட்டுகின்ற வடிவம் அது. மூலப்பொருளாகிய தட்சிணாமூர்த்தியின் பிரதிபிம்பமாக அது இருக்கிறது. அதே போல் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிற சிவலிங்கங்கள் எல்லாம் அருஉருவம் ஆகா; மூலமான அருவுருவத்தை நினைப்பூட்டுகிற சின்னம் அவை.

அப்படியானால் மூலமாகிய அருவுருவம் எது? நடராஜரின் திருவடிவைப் பார்க்கும்போது பதஞ்சலி, வியாக்கிரபாதருக்கு நடனம் காட்டிய மூலத்திருவுருவத்தை நினைத்துக்கொள்கிறோம். அதனை அறிகுறியாகக் காட்டுகின்றது இந்த வடிவம். அதுபோல இந்தச் சிவலிங்கம் எந்த மூலப்பொருளை நமக்குக் காட்டுகிறது? திருமூலர் அந்த உண்மையை விளக்குகிறார்.

நாம் ஒரு மாடியின் மேலே படுத்துக்கொண்டு வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வானம் முழுவதும் வளைந்து அரை வட்டமாகப் பூமியில் கவிழ்த்து வைக்கப்பட்ட மரக்காலைப்போல இருக்கிறது. சுற்றிலும் வான விளிம்பு தோன்றுகிறது. இந்த அரை வட்டமே லிங்கம். அதைத் திருமூலர் அண்டலிங்கம் என்று சொல்கிறார். அதற்குப் பீடமாகிய பூமியே ஆவுடையார். அண்டலிங்கத்தைத் தாங்குகிற சக்தியாக இந்தப் பூமி இருக்கிறது.

இந்த அண்டலிங்கத்திற்கு யார் பூசை பண்ணுவது? அபிஷேகம் செய்பவர் யார்? மழைதான் இந்த அண்டலிங்கத்திற்கு அபிஷேகம் செய்கிறது. திருமஞ்சன நீர் வைத்திருக்கிற இடம் கடல். அங்கிருந்து மேகங்கள் நீரை மொண்டு வந்து மழையாக அபிஷேகம் செய்கின்றன. பூமியாகிய ஆவுடையாரின்மேல் உள்ள வானமாகிய

அண்டலிங்கத்திற்கு அதன் திருமேனியில் சாத்திய மலர்களைப் போல வானத்தில் பளிச்சிடுகின்ற நட்சத்திரங்களின் வரிசைகள் தோன்றுகின்றன. இதனைத் திருமூலர் சொல்கிறார்,

**“ நரைஉற்ற சக்தி ; தனிலிங்கம் விண்ணாம் ;
திரைபொரு நீரது மஞ்சன சாலை ;
வரைதவழ் மஞ்சுநீர் ; வான்உடு மாலை ;
கரைஅற்ற நந்தி கலையும் திக்குஆமே.”**

(திருமந்திரம்)

[சத்தி - ஆவுடையார். திரைபொரு நீர் - கடல். மஞ்சு - மேகம். உடு - நட்சத்திரம். நந்தி - சிவன். கலை - ஆடை.]

இந்தப் பூமியே சக்தியாகிய ஆவுடையார் ; மேலே தோன்றுகிற அரை வட்டமாகிய வானம் அண்டலிங்கம். அலைகள் மோதுகின்ற கடலே திருமஞ்சன நீரைத் தேக்கி வைத்திருக்கும் இடம். மேகத்திலிருந்து பெய்யும் மழையே திருமஞ்சனம். வானத்தில் தோன்றுகிற உடுக்களே மாலை. இதனைச் சுற்றியிருக்கிற எட்டுத் திக்குகளே ஆடை.

இப்படி இங்கே திருமூலர் காட்டுகின்ற அண்டலிங்கந்தான் அருவுருவம். அது பார்ப்பதற்கு லிங்கம் போலத் தோன்றினாலும், “ உருவமாக இருக்கிறதே, அதனைத் தொட்டுப் பார்க்கலாம்” என்று போனால் போகப் போக அது போய்க்கொண்டே இருக்கும். அது வெறும் தோற்றமேயொழிய உருவம் அன்று. கண்ணுக்கு ஒரு வகையாகப் புலப்படுவதனால் அருவம் என்று சொல்ல முடியாது. அது தொடுவதற்குரியது அன்று, ஆகையால் உருவம் என்றும் சொல்ல முடியாது. தோற்றமளிப்பதால் உருவமாகவும், உண்மையில் இல்லாமையால் அருவமாகவும் கொள்ளலாம். அதுவே அருவுருவம். இந்த அண்டலிங்கத்திற்குள் அடங்காத பொருள் இல்லை. எங்கிருந்து பார்த்தாலும் அவரவர்களுடைய கண்ணுக்குத் தோன்றுகிற எல்லாப் பொருள்களுமே இந்த அண்டலிங்கத்திற்குள் அடங்கியிருப்பதைப் பார்க்கலாம். இப்படிப் பிரபஞ்சம் முழுவதும் அண்டலிங்கத்திற்குள் அடக்கமாக இருக்கிறது.

இத்தகைய அற்புதமான தோற்றத்திலிருந்து சிவலிங்கம் என்ற அமைப்புத் தோன்றியது. அண்டத்தில் தோன்றியதைப் பிண்டத்தில் காட்டினார்கள், ஆகையால் சிவலிங்கம் என்பது

கண்ணுக்குக் காணுவதுபோல இருந்தாலும், தனக்கென்று உருவம் இல்லாததாயும் எல்லாப் பொருள்களையும் தனக்குள்ளே அடக்கிக் கொள்வதாயும் இயற்கையில் அமைந்த விசுவரூபமாயும் இருப்பது தான். அதன் அடையாளமாக நாம் கோவிலில் லிங்கத்தை வைத்து வழிபடுகிறோம்.

இந்த லிங்கம் என்ற கற்பனை எவ்வளவு சிறந்தது! அகண்ட மானதாய் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கி வைத்திருப்பது. இதைத்தான் உருவமும் இல்லாமல், அருவமும் இல்லாமல் உள்ள பொருள் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

கச்சியப்ப சிவாசாரியார்,

அருவந் தனையும் உருவந்தனையு மன்றி நின்றான்

என்று சிவபெருமானுடைய வாழ்த்திலே இதைக் குறிக்கிறார்.

அவை அடக்கம்

கடவுள் வாழ்த்திற்குப் பிறகு அவை அடக்கம் சொல்கிறார், கச்சியப்ப சிவாசாரியார். அவை அடக்கம் இரண்டு வகைப்படும். அவைக்கு அடங்கிச் சொல்வது, அவையை அடக்கிச் சொல்வது என்பன அவை. முதலில் அவைக்கு அடங்கிச் சொல்கிறார். "ஒன்றும் அறியாத நான் கந்தபுராணத்தைப் பாட வருகிறேன். அது எப்படி இருக்கிறது என்றால்" என்று தொடங்கி ஓர் உவமை சொல்கிறார்.

பழங்காலத்தில் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் முதலில் மணலில்தான் எழுதக் கற்றுக்கொள்வார்கள். ஆண்டவன் நாமத்தை முதலில் ஆசிரியர் மணலில் எழுதி, அதன்மேலே குழந்தை களுக்கு எழுதக் கற்றுத் தருவார். மணலில் எழுதுவது கல்வி கற்க ஆரம்பிப்பதன் முதல் படி. 'இளைய பாலகன் ஒருவன் எழுத் துக்களை மணலில் எழுதப் பழகுகிறான். சிறிதளவு எழுதத் தொடங்கினவுடனேயே, "நான் ஒரு நூலை எழுதப் போகிறேன்" என்று அவன் சொன்னால் அது எப்படியோ அதுபோன்றது நான் இறைவனுடைய புராணத்தைப் பாடப் போகிறேன் என்று சொல் வது' எனத் தம் அறியாமையைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேனென முயல்வ தொக்குமால்,
அறுமுகம் உடையவோர் அமலன் மாக்கதை
சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே.

(அவையடக்கம், 1.)

[இறை - சிறிதளவு. நிலம் - தரையில். முறை - நூல்.]

முறை என்பது நூலுக்குப் பெயர். தேவாரம் முதலிய சைவ நூல்களுக்குத் திருமுறைகள் என்ற பெயரை அமைத்திருக்கிறார்கள். பன்னிரு திருமுறைகள் சைவத்திற்கு உண்டு. அங்கே முறை என்பது நூலைக் குறிக்கிறது. திரு என்பது தெய்வத்தன்மையைக் குறிக்கிறது. எல்லோரும் படிக்கவேண்டிய முக்கியமான நூலாகையால் அதற்கு எந்தவித விசேடமும் இல்லாமல் நூல் என்றே பெயரிட்டிருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் படித்தது நாலு பக்கமானாலும் நாற்பது பக்கம் எழுத முன் வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். இத்தகைய காலம் வரும் என்று கச்சியப்ப சிவாசாரியார் நினைக்கவில்லை. ஆகையால் இந்த உவமையைச் சொல்கிறார்.

தாம் குறையுடையவர் என்பதைச் சொல்லி, தம்முடைய அடக்கத்தைக் காட்டினார் இந்தப் பாட்டில். மற்றொரு பாட்டில் அவையை அடக்கிச் சொல்கிறார். அதாவது தாம் சொல்கிற இந்த நூல் ஒரு வகையில் பயனுடையதாக ஆகும் என்பதைப் புலப்படுத்துகிறார்.

'சந்திரனில் பல குற்றங்கள் உண்டு. அது தேய்ந்து வளர்கிறது. மறுவைக் கொண்டிருக்கிறது. அந்தக் குற்றங்கள் சந்திரனுக்கு இருந்தாலும் அது நிலவைத் தருவதால் உலகத்திலுள்ளவர்கள் அதைப் போற்றுகிறார்கள். குற்றங்களை எண்ணி நிலவை யாரும் புறக்கணிப்பதில்லை. அதுபோல் என்னுடைய சொல்லில் பயன் இல்லாத பகுதிகள் இருந்தாலும் இந்தக் காப்பியத்தில் இறைவனுடைய கதை இருப்பதனால் அறிஞர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள்' என்கிறார்.

'ஆண்டவனது கதை நிலவைப் போல அமைந்திருக்கிறது. எனது பாட்டு மறு முதலியவற்றைப்போல உள்ளது' என்று உவமை கூறுகிறார். இது ஆண்டவனது கதையைச் சொல்கிற

புராணம். ஆதலால் அதனை எண்ணி அறிஞர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதையே இவ்வாறு சொல்கிறார்.

குறைபல மாமதி கொளினும் அன்னதால்
உறுபயன் நோக்கியே உலகம் போற்றல்போல்
சிறியஎன் வெளிற்றுரை சிறப்பின் றாயினும்,
அறுமுகன் கதைஇதென் றறிஞர் கொள்வரே.

(அவையடக்கம், 7.)

[மதி - சந்திரன். வெளிற்றுரை - பயன் இல்லாத உரை.]

கந்தபுராணம் விருத்தங்களால் அமைந்தது; ஆசிரியப்பாவின் இனத்தைச் சார்ந்த விருத்தமாக இருக்கிறது ஒப்பற்ற கதையாகிய இது கந்தனுடைய வரலாறு. காஞ்சிமா நகரத்தில் அரங்கேற்றப் பெற்றது. 'செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய காஞ்சி' என்று பெரியவர்கள் எல்லாம் அதனைச் சிறப்பிப்பார்கள். இந்தக் கருத்துக்களை எல்லாம் அவையடக்கத்தில் கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார்.

நாடும் நகரமும்

புராண காப்பியங்கள்

புராணங்களில் நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம் முதலிய வற்றை அமைத்துப் பாடுவது தமிழ் மரபு. வடமொழியில் புராணங் களுக்குக் காப்பியங்களைப்போன்ற சிறப்பு இருப்பதில்லை. ஆனல் தமிழிலே பல பெரும் புலவர்கள் புராணங்களைக் காப்பியத்திற்குரிய உறுப்புக்களோடு பாடியிருக்கிருர்கள். அந்த வகையில் கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தைக் காப்பியமாக அமைத்துப் பாடி யிருக்கிருர். ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகிய உறுப்புகள் இந்தப் புராணத்திலும் இருக்கின்றன.

முதலில் ஆற்றுப் படலம் வருகிறது. தொண்டை நாட்டின் சிறந்த ஆருகிய பாலாற்றைப் பற்றி வருணிக்கிருர். நந்தி மலையி லிருந்து பாலாறு தோன்றுகிறது. மேகங்கள் மலைமுகட்டில் மழை பெய்ய, அங்கிருந்து நீர் கீழே வந்து ஆருகப் பெருகி நாட்டுக்கு வளம் உண்டாக்குகின்றது என்பதை நயமாகச் சொல்கிருர். அங் கங்கே பல உவமைகளை எடுத்தாள்கிருர்.

கவிஞர்களுக்கு உவமை என்பது ஓர் அழகான அளவு. எந்தப் பொருளையும் உவமையால் புலப்படுத்துவது சிறந்த கவிஞர்கள் வழக்கம். அவரவர்கள் மன இயல்புக்கேற்றபடி உவமைகள் வரும். சேக்கிழார் பாடலில் தெய்வ சம்பந்தமான உவமைகள் வரும். கச்சி யப்ப சிவாசாரியாரும் அத்தகைய மன இயல்பு உடையவர். ஆகை யால் அவருடைய பாடல்களில் எல்லாம் தெய்வத்தன்மை மணக்கும் உவமைகளை அங்கங்கே பார்க்கலாம். ஆற்றுப் படலத்தில் வருகிற ஒரு பாட்டைப் பார்க்கலாம்.

திண்ணனுர் உவமை

நந்தி மலையில் மேகங்கள் வந்து மழை பொழிகின்றன. அதற்கு உவமை சொல்ல வருகிருர். மேகத்தில் இந்திர வில் இருக்கிறது: வானவில். அதோடு தோன்றிய மேகம் மலையின் மேலே ஏறி நீரைப் பொழிகின்றதற்கு உவமை சொல்கிருர்.

வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்பநாயனுர் தம் வாயில் இருந்த தண்ணீரைப் பெய்து இறைவனுக்குத் திருமஞ்சனம்

ஆட்டினர். அந்த வேடர் திருமேனி கரிய நிறம் பொருந்தியது. அவர் கையில் வில் இருந்தது. அவ்வாறே வில்லோடு சேர்ந்த மேகம் இங்கே நந்தியம் பெருவரைக்குத் திருமஞ்சனம் ஆட்டுகிறது. மேகத்திற்குக் கண்ணப்பநாயனரையும், வானவில்லுக்கு அவர் கை வில்லையும் உவமையாக்கி, அவர் தம் வாய் நீரை இறைவனுக்கு அபிடேகம் செய்ததுபோல நந்தியம்பெருவரையில் மேகம் நீரைப் பொழிந்தது என்கிறார்.

பூட்டு கார்முகந் தன்னொடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை உகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனர் மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.

(ஆற்றுப்படலம், 6.)

[கார்முகம் - வில். புயல் - மேகம்.]

இங்கே கண்ணப்பர் என்று சொல்லவில்லை; திண்ணனர் என்று சொல்கிறார். கண்ணப்பர் என்றே சொல்லியிருக்கலாம். ஏன் திண்ணனர் என்று சொன்னர்? அதற்குக் காரணம் இருக்க வேண்டும். கண்ணப்பர் இறைவனுக்கு மஞ்சனம் ஆட்டும் போது திண்ணனராகத்தான் இருந்தார். இறைவனுக்குத் தம் கண்ணையே பறித்து அப்பிய பிறகுதான் கண்ணப்பர் என்ற பெயர் வந்தது. காளத்தி மலையின்மேலே எழுந்தருளியுள்ள சிவபெருமானிடத்தில் அன்பு கொண்டு அப்பெருமானை வழிபடத் தலையிலே மலர் கொண்டு, வாயிலே நீர்கொண்டு, ஒரு கையில் வில்லும் மற்றொரு கையில் நிவேதனத்திற்குச் சுவை பார்த்து எடுத்து வந்த ஊனுமாக வந்து வழிபட்டு, திருமஞ்சனம் செய்தபொழுதெல்லாம் அவர் திண்ணனர் என்ற பெயரில்தான் இருந்தார். இங்கே நந்தி மலையில் மேகம் மழை பொழிவதற்கு, அவர் இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்த நிலையை உவமானமாகச் சொல்ல வரும் ஆசிரியர் அந்த நிலையில் அவர் திண்ணனர் என்ற பெயருடனே இருந்தமையால் அந்தப் பெயரைச் சொல்கிறார்.

பக்தர்கள் இயற்கையாகக் காணுகின்ற காட்சிகளிலே கூட இறைவனைக் காண்பார்கள். நாம் இறைவனது கோவிலுக்குச் சென்றாலும் அங்கே வேறு எதையோ பார்ப்போம். அவரவர்களது மனோபாவத்திற்கு ஏற்றபடிதான் இந்த எண்ணங்கள் எழுகின்றன.

வரகுண பாண்டியன்

வரகுண பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் மதுரை மாநகரில் இருந்தான். அவன் மகா சிவபக்தன். சிவபெருமானுடைய நினைவாகவே எப்போதும் இருப்பான். தன் மந்திரியோடு அவன் ஒரு சமயம் நல்ல கோடைக்காலத்தில் வந்துகொண்டிருந்தான். வழியில் பல மரங்கள் இருந்தன. வேப்ப மரங்களும் இருந்தன. அந்த மரங்களில் நிறையப் பழங்கள் இருந்தன. உடன் வந்த மந்திரியைப் பார்த்து, "இந்த மரங்களின் மேலே விதானம் அமை" என்று சொன்னான். மந்திரி, "என்ன மகாராஜா, இப்படி உத்தரவு ஆகிறதே!" என்று கேட்டார். அந்த மரத்தில் இருந்த வேப்பம் பழங்களைக் காட்டி, "அவை சிவலிங்கங்களாகத் தோன்றவில்லையா? அவை வெயிலில் காயலாமா?" என்று அரசன் கேட்டானும். நமக்கு அந்த உணர்ச்சி விளங்காது. வேப்பம்பழம் என்றவுடன் கசப்பையே நினைப்போம். அவன் வேப்பம்பழங்களைச் சிவலிங்கமாகக் கண்டான். அவரவர்கள் கருத்தில் உள்ளதுதான் பார்வையில் தட்டுப்படும்.

மற்றொரு முறை மழைக் காலத்தில் அவன் ஒரு குளத்தங்கரை வழியாகப் போய்க் கொண்டிருந்தான். குளத்தில் தவளைகள் ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன விகடக் கச்சேரியில் தவளையைப் போல விகடகவி ஒலிப்பதை நாம் கேட்கிறோம். நமக்குத் தவளையின் ஒலி விகடக் கச்சேரியைத்தான் நினைவூட்டும். ஆனால் வரகுண பாண்டியனுக்குத் தவளைகளின் ஒலியைக் கேட்டவுடன் வேறு எண்ணம் வந்தது. மந்திரியை அழைத்து, "கேழ்வரகையும், அரிசியையும் கொண்டுவந்து இந்தக் குளத்தில் கொட்டுங்கள்" என்று சொன்னான். "என்ன இப்படி உத்தரவாகிறது?" என்று கேட்டான், அமைச்சன். "இங்கே உள்ள தவளைகள் ஹரஹர என்று முழக்கம் செய்வதை நீங்கள் கேட்கவில்லையா?" என்று கேட்டான் மன்னன். நமக்கு விகடக் கச்சேரி ஒலியாக நினைவுக்கு வந்தது, சிவபக்தி நிரம்பிய பாண்டியனுக்கு ஹரஹர ஒலியாகக் கேட்டது. வேப்பம் பழங்களைக் கண்டவுடன் சிவலிங்கத்தையும், தவளையின் குரலில் ஹரஹர சப்தத்தையும் உணரவேண்டுமென்றால் அதற்கேற்ற உள்ளம் இருக்க வேண்டும். அவரவர்களது மனப்பாங்குக்கேற்பக் காட்சியும்,

கேள்வியும், கற்பனையும் தோன்றுகின்றன. கச்சியப்ப சிவாசாரியார் மலைமேலே மழை பொழிவதைப் பார்த்து, கண்ணப்பன் சிவ பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டுவதைப் போல இருக்கிறது என்று சொல்கிறார். இது அவருடைய பக்திப் பெருக்கையே காட்டு கிறது. இப்படிப் பல அழகழகான உபமானங்களை எடுத்தாள்கிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

முக்கனி

நாட்டுப் படலத்தில் மூன்றுவகைக் கனிகளைப் பற்றிய ஒரு பாட்டு வருகிறது. வாழை, மா, பலா ஆகிய மூன்றையும் முக்கனி என்று சொல்வது வழக்கம். இந்த மூன்று வகைக் கனிகளையும் உண்ணுகின்றவர்கள் வெவ்வேறு வகையில் செயல் படுவார்கள். வாழைப் பழத்தை மேலே உள்ள தோலை உரித்துவிட்டு உண்டுவிட லாம். மாம்பழத்தைக் காம்பையும், மூக்கையும் தறித்துவிட்டு, மேல் தோலையும் சீவி, உண்ணலாம்; கொட்டையை எறிந்துவிடலாம். பலாப்பழத்தை உண்ண வேண்டுமென்றால் முதலில் முள் நிறைந்த மேல் தோலைப் பீறி, உள்ளே இருக்கிற சடைகளை அகற்றி, பழத்தை எடுத்து, அதனுள் இருக்கிற கொட்டையை அகற்றிவிட்டுச் சுளையை உண்ணவேண்டும். வாழைப்பழத்தை உண்ணுவதைவிட மாம்பழத்தை உண்ணுவதில் முயற்சி கூடுதலாக இருக்கிறது. பலாப்பழம் இன்னும் அதிக வேலை வாங்குகிறது. மேலே உள்ளதை நீக்கி, உள்ளே இருக்கிற சக்கையை நீக்கி, சுளையை எடுத்துப் பிறகு கொட்டையை நீக்கிச் சாப்பிடவேண்டும். இப்படி மூன்று வகையில் பயன் தருகிற மூன்று பழங்களுக்கும் மூன்று வகையான வள்ளல் களை உவமை காட்டுகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

ஔவைப் பாட்டி ஒரு பாட்டுப் பாடுகிறாள்.

" தண்டாமல் ஈவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை; —அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி. "

ஒருவன் கேளாமல் கொடுப்பது உயர்ந்த கொடை. கேட்டுக் கொடுப்பது இடைப்பட்ட கொடை. அதை வண்மை என்று சொல்கிறார். அடுத்தடுத்துப் போய்க் கேட்டால் அப்போது கொடுப்பது கொடையாகாது; அடிக்கடி நடந்து சென்றதற்குக் கூலி;

காற்கூலி. கேட்டவுடன் தருகிறவர் உத்தம வள்ளல். சில முறை கேட்டுத் தருகிறவர் மத்திம வள்ளல். பல காலம் கேட்டுத் தருகிறவர் அதம வள்ளல் என்று கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார். வாழைப் பழத்தை உத்தம வள்ளலுக்கும், மாம்பழத்தை மத்திம வள்ளலுக்கும், பலாப்பழத்தை அதம வள்ளலுக்கும் உவமையாகச் சொல்கிறார்.

சித்திரக் கதலிமா வருக்கைத் தீங்கனி
துய்த்திட அரும்பயன் உதவும் தோற்றத்தால்
உத்தமம் முதலிய குணத்தின் ஓங்கிய
முத்திறத் தவர்கொடை மொழிய நின்றவே.

(திருநாட்டுப். 36)

[சித்திரம் - அழகு, கதலி - வாழை. வருக்கை - பலா. மொழிய - உவமையாகச் சொல்ல.]

இவ்வாறு மூன்று பழங்களையும், மூன்று வகையான வள்ளல்களுக்கு ஒப்பிட்டுப் பாடுகிறார். இந்தப் பாட்டு ஆற்றுப் படலத்தை அடுத்த திருநாட்டுப் படலத்தில் வருகிறது.

கந்தப் பெருமானுடைய வரலாற்றைச் சொல்ல வருகிறவர் அவனுக்கு உரிய நாடு இன்னது என்று எப்படி வரையறுப்பது? முருகன் எல்லா நாடுகளுக்கும் கடவுள் அல்லவா? குறிப்பிட்ட நாட்டில், குறிப்பிட்ட நகரில் வசிக்கக்கூடிய தலைவனாக இருந்தால் அவனுடைய காவியத்தில் அவனது நாட்டையும், நகரத்தையும் பாடலாம். எல்லா உலகுக்கும் தலைவனாக இருக்கிற ஆண்ட வனுக்கு எந்த நாட்டைச் சொல்வது? எந்த நகரத்தைச் சொல்ல முடியும்? கச்சியப்ப சிவாசாரியாரோ தொண்டை மண்டலத்தை நாட்டுப்படலத்திலும், காஞ்சிபுரத்தைத் திருநகரப்படலத்திலும் பாடுகிறார். இது அவருடைய நாட்டுப் பக்தியைக் காட்டுகிறது. கந்தபுராணம் தோன்றிய இடம் காஞ்சிபுரம். தமிழ்க் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் காஞ்சிபுரத்தினர் ஆதலால் அந்தப் புராணத்தில் நாட்டுப் படலத்தில் தொண்டை நாட்டையும், நகரப்படலத்தில் காஞ்சிமா நகரையும் பாடுகிறார். சேக்கிழார் திருத்தொண்டத் தொகை தோன்றிய நாட்டையும் நகரத்தையும் பெரிய புராணத்தில் சிறப்பித்துப் பாடுகிறார். கச்சியப்ப முனிவர் பாடிய விநாயக புராணத்தில் அவர் பாடி அரங்கேற்றிய சென்னைமாநகரையும் தொண்டை நாட்டையும் சிறப்பித்துப் பாடுகிறார்.

தொண்டர் இயல்பு

திருநகரப் படலத்தில் வருகிறது ஒரு பாட்டு.

கண்டு கேட்டவை உண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட ஐம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும், விழிவழிப் புனலுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறுந்தொறும் அருவால்.

(திருநகரப். 41.)

[ஒருங்குற - ஒருமைப்பட. அண்டர்-தேவர்.]

இறைவன் எழுந்தருளியிருக்கிற ஆலயங்கள் காஞ்சிபுரத்தில் பல. ஒவ்வோர் ஆலயத்திலும், தொண்டர்களின் கூட்டமும் அண்டர்களின் கூட்டமும் இருக்கும். நம் கண்காணத் தொண்டர் கூட்டம் தொழும். நம் கண்ணுக்குப் புலப்படாமல் தேவர்கள் வந்து தொழுவார்கள். தேவலோகத்தில் இருக்கும் தேவர்களுக்குக் கைலாசத்தில் சென்று இறைவனை வழிபடுவதைவிட நிலவுலகத்திற்கு வந்து வழிபடுவதில் நாட்டம் அதிகம். அனபர்கள் கூடியிருக்கும் இடத்தில் ஆண்டவன் அருளை வழங்குவான். ஆதலால், அப்படி அருள் வழங்கும் இடத்தில் வந்து ஆண்டவனைத் தொழுதால் அதனுல் நல்ல பலன் பெறலாம் என்று அண்டர்கள் வருகிறுர்கள். அதுமாத்திரம் அன்று. இறைவனைத் தொழுகின்ற தொண்டர்களைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு உண்டாகிறது. தொண்டர்களைத் தொழுது தம்முடைய உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பது தேவர்கள் ஆசை. ஆகவே, தொண்டர் கூட்டம் இருக்கிற ஆலயங்களில் அண்டர் கூட்டமும் இருக்கிறது.

தொண்டர் கூட்ட இயல்பைச் சொல்ல வருகிறுர் கச்சியப்ப சிவாசாரியார். நமக்கு ஐந்து பொறிகள் இருக்கின்றன. காணக் கண்களும், கேட்கச் செவியும், சுவைக்க நாவும், உயிர்க்க மூக்கும், பரிசிக்கத் தோலும் இருக்கின்றன. இந்த ஐந்து பொறிகளின் வாயிலாக உணர்கிறேம். இறைவனைப் பூசை செய்யும்போது மனம் ஒருமித்து எல்லாப் பொறிகளும் இறைவனிடத்தில் ஈடுபட வேண்டும். அதற்காகவே வெவ்வேறு வகையான செயல்களைப் பூஜையில் வைத்திருக்கிறுர்கள். மனம் ஈடுபடவேண்டும் என்பது தான் பூஜையின் பயன். ஆனல் நாம் பூஜை செய்யும்போது வெவ்வேறு எண்ணங்களால் தடுமாறுகிறேம்.

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே"

என்று பட்டினத்தார் பாடுகிறார்.

உண்மையான தொண்டர்கள் ஐந்து பொறிகளையும் இறைவன் சம்பந்தமான செயல்களில் ஈடுபடுத்திப் பூஜை புரிவார்கள். ஆண்டவன் திருமேனியைக் கண்டும், அவன் புகழைக் கேட்டும், அவனுடைய பூஜையில் பயன்பட்ட சந்தனம், மலர் முதலியவற்றை மோந்தும், அவனது பிரசாதத்தை உண்டும், ஐம்பொறிகள் அவனுடைய தொடர்புள்ள செயல்களில் இயங்க, அவனுடைய அருளிலே கலந்து நிற்பார்கள். இது தொண்டர்களுடைய இயற்கை. இதைச் சொல்ல வருகிறார்.

கண்டு கேட்டவை உண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட ஐம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும், விழிவழிப் புனலுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறுந்தொறும் அருவால்."

எல்லாம் சிவமயம்

அந்த நகரில் ஆங்காங்குக் காணும் காட்சிகளைத் தொகுத்துச் சொல்கிறார். சிறந்த நகரமென்று இருந்தால் பல இடங்களில் நாடகங்கள் நடக்க வேண்டும். பாட்டுப் பாடுகின்ற அரங்குகள் இருக்க வேண்டும். பொழுது போக்குவதற்குரிய நடனசாலைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிய வேண்டும். இது நாகரிக வாழ்க்கை. நாம் இப்போது பார்க்கிற நடனங்கள் யாவுமே உள்ளத்தை மயக்குவனவாக அமைந்திருக்கின்றன. கேட்கிற பாட்டோ வரையறை இல்லாமல் கண்டபடி பாடும் பாட்டாக இருக்கிறது. ஆனால் காஞ்சிபுரத்திலுள்ள அரங்குகள் எப்படி இருக்கின்றன? கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார்.

அங்கே ஆடும் ஆட்டம், பாடும் பாட்டு எல்லாமே இறைவனோடு தொடர்பு உடையனவாக இருக்கின்றன. நடனசாலையில் நடராஜப்பெருமானின் நாட்டியத்தையே ஆடிப் பாடுகிறார்கள்.

பழைய காலத்தில் நாட்டியத்திற்கு அரசன் இருந்தானே தவிர, நாட்டிய ராணிகள் இல்லை. அதனால் உள்ளத்தில் இறைவன் பக்தி வளர்ந்ததே அன்றி மோகம் வளரவில்லை. நடராசப் பெருமானின் சந்நிதியில் நடனம் நடந்து வந்தது. காஞ்சிபுரத்தில் நாட்டியச் செயல் யாவும் சிவனது நடனமாக இருந்தன என்கிறார். அப்படியே இறைவனது புகழைப் பாடுகின்ற பாடல்களையே பாடினார்களாம்.

நாட்டி யச்செயல் யாவையும் சிவனது நடனம்;
பாட்டி சைத்திறம் யாவையும் அன்னதே; பதியோர்
கேட்டி ருப்பன யாவையும் அவன்இசைக் கேள்வி;
கூட்டம் யாவையும் அன்னவன் தொண்டுசெய் கூட்டம்.

[பதியோர் - ஊரில் உள்ளவர்.] (திருநகரப். 44.)

மக்கள் திரள் திரளாகக் கூடிக் கேட்பது இறைவன் சம்பந்த மான பாட்டையே. இப்போதெல்லாம் யாராவது ஓதுவார் பாடினால் நான்குபேர் கேட்பார்கள். எங்காவது பெண்மணி பாடினால் அங்கே ஆயிரக் கணக்கானவர்கள் கேட்பார்கள். ஆனால் காஞ்சிபுரத்தில் அந்தக் காலத்தில் மக்கள் திரள் திரளாகக் கூடிக் கேட்டது இறை வனுடைய பாடல். மிகவும் விரும்பிப் பார்ப்பது சிவபெருமானுடைய நடனம். எங்காவது நான்கு பேர் கூடியிருக்கிறார்கள் என்றால் அந்தக் கூட்டத்தில் நிச்சயமாக இறைவனுடைய தொண்டுபற்றிய பேச்சே இருக்கும். வெவ்வேறு வகையான தொண்டுகளைச் செய்யும் தொண்டர்கள் தமக்குள் ஒன்றுபட்டுக் கூடுவார்கள். எங்கும் சிவமயமாக இருக்கும். இவ்வாறுதான் எதையும் அந்த நகரத்தில் காண முடியும். மனிதர்களது இன்பத்திற்குக் காரணமாகிய ஆடலும், பாடலும் சிவமயமாக இருந்தால் அவர்கள் மனங்களில் கெட்ட எண்ணங்கள் மூள்வதற்கு நியாயம் இல்லை.

நம் நாட்டில் ஆலயத்தை மையமாக வைத்து வாழ்க்கை நடந்து வந்தது. இறைவனுடைய நினைவை உண்டாக்குவதற்குரிய பழக்க வழக்கங்களை மக்கள் கொண்டிருந்தார்கள். குழந்தைகளுக்கு நாம் பெயர் வைக்கிறோம். ஒன்று, இரண்டு, மூன்று என எண்களையும் வைத்துக்கொள்ளலாம். போலீஸ்காரர்களையும் கைதிகளையும் எண் களைச் சொல்லித்தான் கூப்பிடுகிறார்கள். அந்த மாதிரி நம் குழந்தை களுக்கும் பெயர் வைக்கலாம். அடையாளம் தெரிவதற்கே பெயர்

வைக்கிறோம். ஒன்று, இரண்டு, மூன்று என்று அடையாளம் சொன்னால் போதாதா? மேல்நாட்டினர் க்ரீன், ரெட் என்று வைக்கிறார்கள். அப்படியும் வைக்கலாம். நாம் அப்படி வைப்பதில்லை. பெயர்கள் அடையாளமானாலும் அந்த அடையாளத்திலும் ஒரு சிறப்பு இருக்கிறது.

நான் திருக்குறள் உரைகளுடன் உள்ள புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். படித்துக்கொண்டிருந்தபோது உறக்கம் வந்தது. அப்படியே மூடி வைத்துவிட்டுப் படுத்துறங்கினேன். விடியற் காலையில் எழுந்தவுடன் புத்தகத்தைப் படிக்கலாம் என்று எண்ணினேன். விட்ட இடத்திற்கு அடையாளம் வைக்கவில்லையே என்ற நினைவு வந்தது. புத்தகத்தைப் புரட்டியபோது விட்ட பக்கத்தில் ஒரு பூச்சி அகப்பட்டுச் செத்துக் கிடந்தது. நான் படித்த அதிகாரம் கொல்லாமை. கொல்லாமை அதிகாரத்தில் ஒரு கொலை நிகழ்ந்திருந்தது! இதைச் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது.

என்னிடத்தில் சில கதைப் புத்தகங்கள் இருக்கின்றன. எங்கள் தெருவில் உள்ள ஒரு பையன் அவ்வப்போது கதைப் புத்தகங்களை வாங்கிக்கொண்டுபோய்ப் படித்துவிட்டு, குறித்த காலத்தில் திருப்பிக் கொடுப்பான். ஒரு முறை சற்றே தாமதமாகக் கொண்டு வந்தான். "குறித்த காலத்தில் கொண்டு வரவில்லை என்றால் இனிப் புத்தகம் தர முடியாது; ஏன் இவ்வளவு நாளாக்கி விட்டாய்?" என்று கேட்டேன். "ஊரிலிருந்து என் தங்கை வந்திருக்கிறாள். அவள் படித்தாள். அதனால் சொன்ன காலத்திற்குமேல் ஆகிவிட்டது, மன்னிக்க வேண்டும்" என்று அவன் சொன்னான். அந்தப் பையன் கொடுத்த புத்தகத்தை வாங்கிப் பிரித்தேன். அதில் ஓர் அடையாளம் இருந்தது. ஒரு பக்கத்தில் அந்தப் பெண் தான் சூடிக்கொண்டிருந்த தாழம்பூ மடல் ஒன்றை அடையாளமாக வைத்திருந்தாள். முன்னே நான் சொன்னது பூச்சி அடையாளம். இது பூ அடையாளம். இது அடையாளத்திற்கு அடையாளமாகவும் இருந்தது; அந்தப் பக்கத்தில் தன் மணத்தையும் சேர்த்திருந்தது.

அதுபோலக் குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது வெறும் அடையாளமாக இல்லாமல், பக்தி மணம் கமழ்கின்ற இறைவன் பெயரையே வைக்கிறோம். யாராவது, யாரையாவது கூப்பிடு கிறார்கள் என்றால் நம் காதில் ஆண்டவன் திருநாமம் விழுகிறது. முருகா, ராமா, கோபாலா என்று குழந்தைகளை அழைக்கும் போது இறைவன் நினைவு நமக்கு வர வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையை நாம் வேறு எங்கே பார்க்க முடியும்? நாம் கேட்கிற ஒலிகளில் எல்லாம், காணுகிற பொருள்களில் எல்லாம் ஆண்டவனது நினைவு வரும்படியாகப் பெரியவர்கள் வைத்திருக் கிறார்கள்.

இந்த நாட்டில் இறைவனுக்கு நிவேதனம் பண்ணும் வழக்கம் இருக்கிறது. நாம் உண்பதை ஆண்டவன் நினைவோடு உண்ண வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஆண்டவனுக்கு நிவேதனம் செய்கிறபோது அது பிரசாதமாகிறது. அவன் நினைவோடு உண்ணுகிறபோது பக்தி வருகிறது. நம் நாடுதான் சமையல் கலையையும், சமயக் கலையையும் இணைத்து வைத்திருக்கிற நாடு. 'ப்ருட் சாலட்' (Fruit Salad) என்று சொல்கிறேன். அதை எங்கே சாப்பிட்டோமோ அந்த உணவுச் சாலையின் நினைவு வரும். ஆனால் பஞ்சாமிருதம் என்று சொல்கிறேன். அதுவும் இனித்த பண்டந்தான். அதைக் கேட்டவுடன் வாயில் நீர் ஊறும். என்றாலும் உடனே நமக்குப் பழனியாண்டவன் நினைவு வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கிற இந்துக்கள் மாத்திரம் அல்ல; முஸ்லிம் களுக்கும் பஞ்சாமிருதம் என்றால் பழனியாண்டவன் நினைவு வரும். இந்துக்களானால் ஒரு கும்பிடு போடுவார்கள். மற்றவர்கள் போட மாட்டார்கள். அதுதான் வித்தியாசம். முருகனிடத்தில் முறுகிய பக்தி உடையவர்களானால் கண்ணில் நீர் வரும். இப்படியே, புளியோதரை என்று சொன்னால் அது இன்ன பண்டம் என்ற நினைவுக்கு வரும் முன்னால் திருமால் நினைவு வந்து நிற்கிறது. கொழுக்கட்டை என்றால் விநாயகப் பெருமான் நினைவு வருகிறது. தேனும் தினைமாவும் என்றவுடன் வள்ளிமணவாளனின் நினைவு வருகிறது. இப்படி உணவுப் பொருள்களில் இறைவன் நினைவு உண்டாகும்படியாக இந்த நாட்டில் வைத்திருக்கிறார்கள்.

வேறு ஒரு செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் பல தலங்கள் இருக்கின்றன. அவற்றிற்குப் புராணங்களும் இருக்கின்றன. நாகம் பூசை பண்ணின இடம் நாகப்பட்டினம். வண்டு பூசை பண்ணின இடம் வண்டூர், குரங்கு பூசை பண்ணின இடம் குரங்காடுதுறை. இப்படிப் பல தலங்கள் இருக்கின்றன. என்னை ஒருவர் கேட்டார்; "இந்தத் தலபுராணங்களில் உள்ள நிகழ்ச்சிகள் உண்மையாக இருக்குமா? குரங்கு பூசை பண்ணியதை யாராவது கண்டு படம் எடுத்திருக்கிறார்களா? அதனை மெய்ப்பிக்க ஏதாவது தடையம் உண்டா?" என்று கேட்டார். "அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அந்தப் புராணங்களினால் பயன் உண்டு" என்று சொன்னேன். "என்ன பயன்?" என்று கேட்டார். "நீங்கள் நாவல்களையும் சிறு கதைகளையும், படிக்கிறீர்களே. அவை எல்லாம் பொய் அல்லவா? எதற்காகப் படிக்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டேன். "அந்தக் கதைகளில் கருத்து இருக்கிறது. அந்தக் கருத்துக்காகப் படிக்கிறோம்" என்று சொன்னார். "அது போல் புராணங்களினாலும் ஒரு பயன் உண்டு; கருத்து உண்டு" என்று சொன்னேன். "என்ன பயன்?" என்று கேட்டார். நான் விடையிறுத்தேன்.

இறைவன் இல்லாத இடம் எதுவும் இல்லை. 'பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பெருமான்' அவன். அவன் எங்கும் உறைகின்றான் என்ற எண்ணம் நமக்கு இருப்பதில்லை. அப்படி இருந்தால் தவறே செய்யமாட்டோம்.

> "எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
> அங்கம் குலைவ தறிவு"
>
> (நீதிநெறி விளக்கம்)

என்று குமரகுருபரர் சொல்லியிருக்கிறார்.

எல்லாவற்றையும் இறைவனாகப் பார்க்கும் பக்குவம் நமக்கு இல்லை. ஆனால் நாம் பார்க்கும் பொருள்களின் மூலமாக ஆண்டவனுடைய நினைவு உண்டாக வழியிருந்தால் அவனை மறக்காமல் இருக்கலாம். நாம் காணும் பொருள்கள் என்ன? எறும்பு, குரங்கு, மாடு—இப்படி உள்ளவற்றையே பார்க்கிறோம். அவை பூசித்த தலங்களைப் பற்றிய கதைகளைப் படித்திருந்தால் அவற்றைக் காணும் போது அந்தக் கதைகள் நினைவுக்கு வரும்; இறைவனுடைய நினைவும்

உடன் வரும். குரங்கைக் கண்டவுடன் குரங்காடுதுறை இறைவன் நம் நினைவுக்கு வருவான். நாம் குரங்கையும், நாயையும், கழுதையையுந்தானே பார்த்துக்கொண்டிருக்கிறோம்? அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் அந்தப் பிராணிகள் பூஜை பண்ணின தலங்கள் நினைவுக்கு வரும். இதை ஆங்கிலத்தில் 'எண்ணச்சார்பு' (**association of idea**) என்று சொல்வார்கள். இப்படி நினைவுத் தொடர் நமக்கு எழவேண்டுமென்றே எல்லாப் பொருள்களோடும் ஆண்டவனைத் தொடர்புபடுத்தி வைத்து நமக்குக் காட்டியிருக்கிறார்கள். இன்ன பூ, இன்ன வாகனம், இன்னது பூசித்தது என்று புராணங்களில் வருவன எல்லாம், நாம் இந்த உலகத்தில் உலாவும் போது காணுகின்ற பண்டங்களின் மூலமாக இறைவனை நினைக்கும்படியாக உள்ளன.

காஞ்சிபுரத்தில் இன்பத்திற்குக் காரணமான ஆடலும், பாடலும் இறைவனுடைய நினைவை நமக்கு உண்டாக்குவனவாகவே இருந்தன என்று கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார்.

காமாட்சி திருக்கோயில்

காஞ்சிபுரத்தில் எத்தனையோ கோவில்கள் இருக்கின்றன. சிவபெருமானுடைய கோவில்களும், திருமாலுடைய கோவில்களும் பலப் பல. எல்லாக் கோவில்களுக்கும் நடுவில் அமைந்திருப்பது காமாட்சி அம்மை திருக்கோவில். அதைக் காமக்கோட்டம் என்று சொல்வர். அந்தத் தலத்திலுள்ள மற்ற எல்லா மூர்த்திகளும் வீதி வலம் வரும்போது நடுவில் உள்ள காமக்கோட்டத்துக்கு வலமாக எழுந்தருள்வார்கள். காமாட்சி அம்பிகையின் கோவிலில் சிவபெருமான் சந்நிதி இல்லை. காஞ்சிபுரத்திலுள்ள மற்றச் சிவாலயங்களிலும் அம்பிகை சந்நிதி இல்லை. எல்லாச் சக்திகளும் ஒன்றாகத் திரண்டு காமாட்சியாக எழுந்தருளி இருக்கிறார்கள். பொதுவாகச் சிவாலயங்களில் அம்பிகை நின்ற கோலத்தில் இருப்பாள். ஆனால் காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மை, அமர்ந்த திருக்கோலத்தில் வீற்றிருக்கிறாள். எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான பரதேவதையாக, மகாராணியாக எழுந்தருளி இருக்கிறாள். லலிதா சகசிர நாமம் அவளை மகாராஜ்ஞி என்றே சொல்லும். அரசு ஓச்சுகின்றவர்கள் வீற்றிருப்பது இயல்பு. இருந்த கோலத்தில் எழுந்தருளி

யிருக்கும் அம்பிகையைத் திரிபுரசுந்தரியாக வழிபடுகிறோம். அந்தப் பெருமாட்டி காஞ்சிபுரத்தில் எழுந்தருளி உலகத்தை எல்லாம் காப்பாற்றுகிறாள். காஞ்சிபுரம் உலகத்தின் மைய ஸ்தானமான நகரம். காஞ்சி என்றால் மேகலை. பூமா தேவி யின் இடையில் அமைந்த மேகலைபோல இருப்பது காஞ்சி. இந்த நடுப்பீடத்தில் அம்பிகை எழுந்தருளிப் பிரபஞ்சத்தை எல்லாம் காப்பாற்றுகிறாள். அவளை எல்லாத் தெய்வங்களும் வலம் வருகின்றன. அவள் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளி இருக்கிறாள். அரசர்களுக்கு எல்லாம் அரசியாக இருப்பதனால் அவளை இராஜராஜேசுவரி என்கிறோம்.

நாம் நவராத்திரியில் கொலு வைக்கிறோம். நாம் வைக்கிற கொலுவில் மாடு, ஆடு, சிங்கம், வள்ளுவர், முனிவர்கள் என்று பல பல திருவுருவங்களைப் படிப்படியாக அமைத்துக் கொலு வைக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேல்படியில் நடுநாயகமாக அம்பிகையை வைக்க வேண்டும். எல்லா உயிரினங்களுக்கும் தலைவியாக இருப்பவள் அவள். அதனை எடுத்துக்காட்டுவதே நவராத்திரிக் கொலு.

காஞ்சிபுரத்தில் எல்லோருக்கும் தலைவியாக, மகாராணி யாக அம்பிகை விற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கி றாள். அதனால் அந்தத் தலம் சக்தி பீடங்களுக்குள் மிகச் சிறந்த தாக அமைந்திருக்கின்றது.

காமாட்சி அம்பிகை எழுந்தருளியிருக்கும் காமக்கோட்டத்திற்கு அருகில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில் ஒன்று உண்டு. அதற்குக் குமரகோட்டம் என்று பெயர். எம்பெரு மான் கையிலே படிக மாலையும், கமண்டலமும் கொண்டு படைக்கின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான். அந்தப் பெருமானின் திருவருளி னால்தான் கந்தபுராணத்தையே பாடினார் கச்சியப்ப சிவாசாரியார்.

காமக்கோட்டத்தில் உள்ள அற்புதங்களை எல்லாம் காஞ்சிப் புராணம் விரிவாகச் சொல்லும். அதனைக் கந்தபுராணத்திலும் சுருக்கமாகக் காணலாம்.

'அம்பிகை ஆறு சமயங்களுக்கும் தலைவியாக எழுந்தருளி இருக்கிறாள். சராசரங்கள் எல்லாம் உய்யும்படி 32 தர்மங்களை அவள் வளர்த்தாள். அவள் எழுந்தருளியுள்ள காமக்கோட்டம்

ஆதிபீடம் என்று சொல்லப்பெறும்' என்ற செய்திகளைத் திருநகரப் படலத்தில் சொல்கிறார்.

சமயமா றினையும் தாபெயன வளர்த்துச்
சராசர அணுக்கள்உய்ந் திடுவான்
அமைதரும் எண்ணான் கறத்தினைப் போற்றி
ஆதிபீ டத்தில்வீற் றிருக்கும்
உமைஅமர் காமக் கோட்டியைக் கதிரோன்
உடுபதி கணங்கள்சூழ் தரலால்
இமையவர் தமக்குத் திசைமயக் கருத
இயல்புடைத் தந்நகர் என்றும்.

(திருநகரம். 78.)

[காமக்கோட்டி - காமகோடி பீடம். உடுபதி - சந்திரன்.]

புராண வரலாறு

திருநகரப் படலத்திற்குப் பிறகு பாயிரப் படலம் வருகிறது. இங்கே கந்தபுராணத்தின் தோற்றத்தைச் சொல்கிறார்.

பிரமதேவன் கச்சபாலயத்தில் எழுந்தருளி இருந்தான். முனிவர்கள் பலர் பிரமதேவனை அணுகி, "நாங்கள் தவம் செய்ய வேண்டும். அதற்குரிய இடம் ஏதாவது சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள். இதனாலும் இந்தப் புராணம் காஞ்சியோடு தொடர் புடையதாகிறது. பிரமன் ஒரு தர்ப்பையைச் சக்கரம் போலச் சுற்றி ஓடவிட்டான். அது போய் ஒரு காட்டில் தங்கியது. அந்த இடத்துக்குச் சென்று முனிபுங்கவர்கள் தவம் செய்தார்கள். அதற்கு நைமிசாரண்யம் என்று பெயர். அவர்கள் அங்கே தவம் செய்த போது சூதபுராணிகர் வந்தார். அவர் பல புராணங்களைச் சொன்னவர். அவரை முனிவர்கள் வழிபட்டுக் கந்தபுராணத்தைச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். அப் போது முருகப்பெருமானை வணங்கிச் சூதமாமுனிவர் கந்தபுராணத் தைச் சொல்லத் தொடங்கினார்.

இவ்வாறு புராண வரலாற்றைச் சொல்லி அதற்குமேலே கந்த புராணத்தை முறையாகத் தொடங்குகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

முதலாவதாக உற்பத்தி காண்டம் வருகிறது.

பார்வதியின் தவம்

அம்மையின் விருப்பம்

திருக்கைலாசத்தில் சிவபெருமானுடன் எம்பெருமாட்டி அமர்ந்திருந்தாள். அப்போது பெருமானைப் பார்த்து உமாதேவி பேச ஆரம்பித்தாள். "எம்பெருமானே, நான் தட்சன் மகளாகப் பிறந்து தாட்சாயணி என்ற பெயரோடு இருந்தேன். என்னுடைய தந்தையாகிய தக்கன் தேவரீருக்கு மாமனாராக இருந்தும் தங்களுடைய பெருமையை நன்கு உணரவில்லை. நீங்களே தலைவர் என்பதை அறிந்துகொள்ளாமல், உங்களை அழைக்காமல், ஒரு யாகம்செய்தான். தேவர்களை எல்லாம் அழைத்தான். அவர்களும் அங்கே வந்தார்கள். உங்களுடைய பேச்சைக் கேட்காமல் நான் அந்த யாகத்திற்குச் சென்றேன். அங்கே உங்களை அவமதித்தார்கள். இத்தகைய அவமானத்தோடு நான் இருப்பது மனம் பொருந்தவில்லை. என்னுடைய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்."

> **கற்பனை முதலிய கடந்த கண்ணுதல்**
> **தற்பர, நினைஇகழ் தக்கன் தன்னிடைப்**
> **பற்பகல் வளர்ந்தவன் பயந்த மாதெனச்**
> **சொற்படு நாமமும் சுமந்து ளேனியான்.**
>
> **ஆங்கதோர் பெயரையும் அவன்கண் எய்தியே**
> **ஓங்கிநான் வளர்த்தஇவ் வுடலந் தன்னையும்**
> **தாங்கினன்; மேல்அவை தரித்தற் கஞ்சினேன்;**
> **நீங்குவன்; அவ்வகை பணித்தி நீஎன்றாள்.**

(பார்ப்பதிப் படலம், 2, 3.)

[பற்பகல் வளர்ந்து அவன் பயந்த மாது என; பயந்த-பெற்ற. மேல்-இனிமேல். பணித்தி - கட்டளையிடு.]

"தக்கனுடைய மகள் என்ற பெயரைச் சுமப்பதற்கு நான் நாணுகின்றேன். அவனுக்குப் பெண்ணாக இருந்த இந்த உடம்பையும் போக்கிவிட வேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே நான் இந்தச் சரீரத்தைப் போக்குவதற்குத் திருவருள் பாலிக்க வேண்டும்" என்று அம்பிகை சொன்னாள். "நாமமும், ரூபமும் நன்றாக அமைந்திருக்க வேண்டும். மங்களமாக அமைந்திருக்க வேண்டும்.

என்னுடைய நாமம் தாட்சாயணி என்று தட்சனோடு சார்ந்திருக்கிறது. என்னுடைய சரீரம் அவனால் தீயதாக்கப்பட்டிருக்கிறது. பாவத்தைச் செய்த அவனுடைய சோற்றை உண்டு வளர்ந்ததாகிய இந்தச் சரீரத்தை நான் தாங்குவது நியாயம் அன்று. இந்த நாமத்தையும், சரீரத்தையும் விட்டுவிட வேண்டுமென்று நினைக்கின்றேன்'' என்று வருத்தத்துடன் கூறினாள்.

பெரியவர்கள் ஏதாவது ஒரு தீங்கு செய்வார்களானால் அதனால் அவர்களுக்குத் துன்பம் உண்டாகும். அந்தத் துன்பத்திற்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்று நினைப்பார்கள். அந்தப் பரிகாரம் அவர்களுக்கு மாத்திரம் அன்று; அதனால் உலகமே நன்மை பெறும். இப்படிப் பெரியவர்களுக்கு உண்டாகின்ற தீங்கு கூட உலகத்தார்களுக்கு நன்மையாக அமையும்.

இந்த உண்மையைச் சிவபெருமான் கூறினான். "தேவீ, என்னிடத்தில் உனக்குச் சிறந்த பக்தி இருக்கிறது. அது மிகவும் முதிர்ந்தது. அந்தப் பக்திக்குச் சமமாக வேறு யாரும் பக்தி பண்ணவில்லை. உனக்குச் சமானமாக யாரும் இந்த உலகத்தில் இல்லை. நீ இப்போது சொன்ன மாதிரி செய்வது உன்னுடைய குற்றத்திற்குப் பரிகாரம் அன்று. உன்னுடைய குழந்தைகளாகிய உயிர்கள் உன்னை உபாசித்து வீடுபேற்றை அடைய வேண்டும் என்பதற்காகவே இப்படிச் சொல்கிறாய்'' என்று சிவபெருமான் அருளினான்.

பத்திமை எம்வயிற் பழுத்த பண்பினால்
சத்தியே, நின்னிகர் சகத்தின் இல்லை; நீ
இத்திறம் முயலுதல் எல்லை தீர்ந்தநின்
புத்திரர் வீடுறு பொருட்டுப் போலுமால்.

(பார்ப்பதிப் படலம், 5.)

[எல்லை தீர்ந்த - கணக்கற்ற.]

சேற்றிலே பிள்ளைப்பூச்சி புகுந்தாலும் அதன்மேல் சேறு ஒட்டாது. தாமரை சேற்றிலே முளைத்தாலும் தாமரைப் பூ நீருக்கு மேலாகத்தான் நிற்கும். அதன் இலையில் தண்ணீர் ஒட்டாது. எம்பெருமானிடத்தில் பக்தி உள்ளவர்கள் தீய சூழலில் இருந்தாலும் அதனால் அவர்களுக்குத் தீங்கு உண்டாகாது.

சிவபெருமான் அம்பிகையைப் பார்த்து மேலும் சொன்னான். "உனக்குப் பார்வதி என்ற திருநாமம் உண்டாகவேண்டும். இமய மலை அரசன் எல்லா மலைகளுக்கும் தலைவனாக இருக்கிறான். மிக உயர்ந்த நிலையில் இருக்கும் அவனுக்குப் பெண் இல்லை என்ற குறை இருக்கிறது. என்னையே மாப்பிள்ளையாக அடையவேண்டுமென்று அவன் தவம் செய்கிறான். அவனுடைய தவமும் நிரம்ப வேண்டும். அந்தத் தவம் நிரம்புவதற்குத்தான் உன் உள்ளத்தில் இந்த எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, உன்னுடைய விருப்பப்படி செய்யலாம்" என்று இறைவன் உத்தரவு கொடுத்தான்.

பார்வதியின் தோற்றம்

அப்படியே அம்பிகை இமய அரசன் தவம் செய்யும் இடத்தை அடைந்தாள். அவனுடைய மனைவியாகிய மேனை அவனுக்குப் பணி விடைகளைச் செய்துகொண்டிருந்தாள். அவன் எங்கே தவம் செய்து கொண்டிருந்தானோ அந்த இடத்தில் ஒரு பூம்பொய்கையில் ஒரு தாமரை மலர்ந்திருந்தது. அந்தத் தாமரையில் அம்பிகை ஒரு குழந்தையாகத் தோன்றினாள். ஒருவனுடைய வயிற்றிலே வளர்வது தெய்வத் தன்மைக்கு மாறானது. ஆதலால் அம்பிகை தாமரையில் குழந்தையாகத் தோன்றினாள்.

மெய்த்தவம் இயற்றிய வெற்பன் காணிய
அத்தடம் மலரும்ஓர் அரவிந் தத்தின்மேல்
பைத்ததோர் குழவியின் படிவத் துற்றனள்
எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள்.

(பார்ப்பதிப் படலம், 21.)

[வெற்பன் - இமய அரசன். காணிய - காணும்படி. பைத்தது - பசுமையானது.]

எல்லா உயிர்களையும் தான் ஈன்று வளர்க்கிற பெருமாட்டியாகிய அம்பிகை இமய அரசனும், மேனையும் வளர்ப்பதற்கு ஏற்றபடி ஒரு சிறு குழந்தையாக எழுந்தருளினாள். வடமொழிக் காந்தபுராணத்தில் நீல ஒளி படைத்த ஒரு சுடராக அம்பிகை தோன்றினாள் என்று இருக்கிறது. தவம் நிறைவுபெற்ற இமாசல ராஜன் தன் தவத்தின் பயனால் அம்பிகை தோன்றியிருக்கிறாள் என்று எண்ணி, மகிழ்ந்து வந்து வணக்கம் செய்து அம்பிகையின் அற்புதமான காட்சியைக் கண்டான். அந்தக் காட்சியில் ஈடுபட்டபோது அம்பிகை தன்

னுடைய தோற்றத்தை மறைத்துக்கொண்டு சிறிய குழந்தையாக நின்றாள். இவ்வாறு வடமொழிக் காந்தம் சொல்லுகிறது. நீலோத்பல மலரில் தோன்றியதாக வடமொழிப் புராணம் சொல்கிறது. தமிழ்க் கந்தபுராணம் தாமரையில் தோன்றினாள் என்று சொல்கிறது. தாமரை அம்பிகை எழுந்தருளுவதற்கேற்ற இடம். அம்பிகை பத்மாசனத்தில் எழுந்தருளி இருக்கிறாள் என்று லலிதா சகஸ்ரநாமம் சொல்கிறது. 'பத்மாசனா' என்பது எம்பெருமாட்டியின் திருநாமங்களில் ஒன்று. அவள் ஆறு ஆதாரங்களிலும் தாமரையில் எழுந்தருளியிருக்கிறாள். எல்லோருடைய இதய பத்மத்திலும் இருக்கிறாள். ஆயிரம் இதழ்களை உடைய சகஸ்ரார பத்மத்தில் எழுந்தருளியிருக்கிறாள். இவற்றை எல்லாம் எண்ணிச் கச்சியப்ப சிவாசாரியார், "பூம்பொய்கையில் தாமரை மலரில் எழுந்தருளியிருந்தாள்" என்று சொன்னார் என்று தோன்றுகிறது.

அம்பிகை சிறு குழந்தையாக எழுந்தருளியிருப்பதைப் பார்த்தான் பர்வதராஜன். அவளைக் கண்டவுடன் அவனுக்கு முதலில் மகிழ்ச்சி அல்லவா தோன்றவேண்டும்? வருத்தம் உண்டாயிற்றாம். ஏன்? அம்பிகை எப்போதும் சிவபெருமானை விட்டுப் பிரியாமல் இருக்கிறாள். இப்போது எம்பெருமானை விட்டுப் பிரிந்து வந்திருக்கிறாள். 'ஆகா, நாம் செய்த தவத்தினால் ஒரு கணம் கூடப் பிரியாத எம்பெருமானை விட்டு அம்பிகை பிரிந்து வந்திருக்கிறாளே! அம்பிகையை அப்பனிடமிருந்து பிரித்து விட்டோமே!' என்ற ஏக்கம் அவனுக்கு முதலில் தோன்றியதாம். பின்பு,

> "வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
> ஈண்டு முயலப் படும்"

என்றபடி, 'என் தவத்திற்கு இரங்கிப் பெரும் கருணையினால்தான் தாய் இங்கே எழுந்தருளியிருக்கிறாள்' என்று நினைத்த போது பேருவகை உண்டாயிற்றாம். முதலில் அவனுக்கு, 'நாம் நல்ல காரியம் செய்யலாம் என்று தவம் செய்யப் போக அம்பிகையையும், அப்பனையும் பிரிக்கின்ற காரியம் ஆகிவிட்டதே' என்ற வருத்தம் உண்டானாலும், 'இவைகள் எல்லாம் நாம் செய்கிற காரியம் அல்லவே; எல்லாம் ஆண்டவன் திருவருள் அல்லவா?' என்ற ஆறுதல் உண்டாயிற்று. அதனால் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தான்.

ஆங்கவட் கண்டு வெற்பன் அடியனேன் பொருட்டால் அம்மை
நீங்கினள் போலும் முக்கண் திருமலன் றன்னை என்று
ஏங்கினன்; தனது நோன்புக் கிரங்கினன்; இவைகள் ஈசன்
ஓங்குபே ரருளே என்று உவகையங் கடலுட் பட்டான்.

(பார்ப்பதிப் படலம், 22.)

அம்பிகை பெரும் கருணை உடையவள். எப்போதும் இறைவனோடு ஒன்றுபட்டிருக்கிற சேர்க்கையை விட்டுவிட்டு இமாசல அரசனுக்கு அனுக்கிரகம் பண்ணுவதற்காக எழுந்தருளினள். உண்மையான அன்பு உடையவர்கள் தமக்கு ஏதாவது துன்பம் வந்தாலும் அதனைப் பொறுத்துக் கொண்டு, தம் அன்புக்குரியவர்களுக்கு அருள் பாவிப்பார்கள். அம்பிகையின் செயல் இந்த உண்மையை நமக்குத் தெரிவிக்கிறது.

இமாசல ராஜன் குழந்தையை எடுத்து மேனையிடத்தில் அளிக்க, அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து அதனை வாங்கிக் கொண்டாள்.

அன்னையின் கருணை

குழந்தை இனிதாக வளர்ந்தது. கச்சியப்ப சிவாசாரியார் ஓர் அரிய கருத்தைச் சொல்கிறார். அம்பிகை உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் தோற்றுவித்து, அவற்றுக்கு வேண்டிய தனுகரண புவன போகங்களைத் தருகிறாள். அம்பிகை உயிரைப் படைப்பது இல்லை. உயிர்கள் நித்தியமானவை. இறைவன் எப்படி நித்தியமானவனோ அப்படி உயிர்களும் நித்தியமானவை. உயிர் படைக்கப்பட்ட பொருள் அல்ல. ஆனால் உயிர்கள் உலகத்தில் வாழ வேண்டுமானால் சரீரம் வேண்டும். பிறவி தோறும் பண்ணுகின்ற புண்ணிய பாவங்களை அநுபவிப்பதற்குச் சரீரம் இருத்தல் அவசியம். அந்தச் சரீரம் வாழ்வதற்குப் பூமி வேண்டும். இந்தச் சரீரத்திலே பல வகையான பொறிகள் இருக்கின்றன; புறக் கரணங்கள், அகக் கரணங்கள் இருக்கின்றன. கை, கால் முதலியன புறக் கரணங்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை அகக் கரணங்கள். இவை எல்லாம் இருந்தாலும் உயிர்கள் வந்து அநுபவிப்பதற்குரிய போகபோக்கியங்கள் வேண்டும். உயிர் மாத்திரம் இருந்தால் போதாது. ஆகவே அதற்காக, தனு, கரணம், புவனம், போகம் என்பனவற்றை எம்பெருமாட்டி படைக்கிறாள். இந்த நான்கையும்

சேர்த்துச் சொல்வது வழக்கம். தனு - சரீரம். கரணம் - அகக் கருவி, புறக் கருவி. புவனம் என்பது பிரபஞ்சம். போகம் என்பது இங்கே அநுபவிக்கிற இன்ப துன்பங்கள். இவற்றை எல்லாம் அம்பிகை உயிர்கள் வாழ்வதற்காக அமைத்துத் தருகிருள். முன்னல் செய்த புண்ணிய பாவங்களை இந்தப் பிறவியிலே இன்ப துன்பங் களாக அநுபவித்துக் கழிக்க வேண்டும். அப்போதுதான் நாம் சேமித்த மூட்டையை இறக்கும் நிலை உண்டாகும். கர்மங்கள் போனலன்றி உயிர்க் கூட்டங்களுக்கு முத்தி கிடைக்காது. கர்மத்தை அநுபவித்தே தீர்க்க வேண்டும்.

தன்னுடைய குழந்தைகளாகிய உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைப் படைத்து நாள்தோறும் அவற்றை வளர்த்து வருகிருள் அம்பிகை. இத்தகைய பெருமாட்டியை வளர்ப்பவர்கள் உண்டா? இமாசல அரசனும், மேனையும் வளர்த்தது ஒரு நாடகந் தான். அம்பிகை தன்னுடைய பேரருளினல் இந்த நாடகத்தை ஆடினள். இதனல் அவளுடைய பெருங்கருணை புலப்படுகிறது. இவ்வாறு கச்சியப்ப முனிவர் சொல்கிருர்.

மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள பொருளுக் கெல்லாம்
அன்னையாய் உதவி நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பார் உண்டோ? வளர்ந்தது சழக்கே; அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள் போலு மன்றே!

(பார்ப்பதிப் படலம், 29)

[சழக்கு - மாயம்.]

எல்லோருக்கும் தாயாக இருக்கிற பெருமாட்டி, தனக்கு ஒருவனைத் தந்தை என்றும், ஒருத்தியைத் தாய் என்றும் கொண்டு வளர்கிருள் என்ருல் அது அவளுக்குத் தாழ்வு அல்லவா என்று தோன்றும். மிக உயர்ந்தவன் தாழ்ந்தவர்களுக்கு நலம் செய்வ தற்காக அவர்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்தால் அது அவனது பெருமையைக் காட்டும். சாதாரண மனிதன் அவனைப் போன்ற மற்ருெரு மனிதனேடு சேர்ந்தால் தனிப் பெருமை இல்லை. மிக உயர்ந்தவன் கருணை செய்வதற்காகத் தானே தாழ்ந்து வந்தால் அதனை எளிமை என்றும், சௌலப்பியம் என்றும் சொல்வார்கள். எப்போதும் பெரிய காரில் போகிருன் ஒருவன். அவன் பெரிய

பதவி வகிக்கிறவன். அந்தக் கார் மிகப் பெரிய சாலையில் போகும். அவனுடைய இளம் பருவத்தில் அவனேடு பயின்ற ஒருவன் ஒரு சிறு குடிசையில் வாழ்கிருன். அந்தக் குடிசைக்குள் போகவேண்டுமானல் குனிந்து செல்ல வேண்டும். அது ஒரு சின்னச் சந்தில் இருக்கிறது. அவன் வீட்டுக்குப் போகவேண்டுமானல் சேறும், சகதியுமாக இருக்கிற அந்தச் சந்தைக் கடந்து செல்ல வேண்டும். அதே சந்தில் குடியிருக்கிற ஓர் ஏழை அந்தக் குடிசைக்குள் நுழைந்து சென்று பேசிவிட்டுப் போகிருன். இப்படி நாள்தோறும் அவன் வந்து பேசியிருந்துவிட்டுப் போவது வழக்கம். அவனைப் பார்த்து யாரும் வியக்கமாட்டார்கள். ஆனல் பெரிய காரில் போகிற செல்வன் தன்னுடைய இளமைப் பிராயத்து நண்பனைப் பார்ப்பதற்காக அந்த ஊருக்கு வருகிருன். பெரிய சாலையில் காரை விட்டுவிட்டு, சந்திலே நடந்து வருகிருன். மெல்ல மெல்லக் குனிந்து அந்தக் குடிசைக்குள் செல்வதைப் பார்க்கிறவர்கள் வியக்கிருர்கள்; அவனது உண்மையான அன்பைக் கண்டு பாராட்டுகிருர்கள். மிக மிகச் சிறந்த நிலையில் இருக்கிற அவன் தன்னுடைய நண்பனைக் காண்பதற்காகத் தன்னுடைய காரையும் விட்டுவிட்டுச் சகதியில் நடந்து வருவது அவனது பெருமையை மிகுதியாகக் காட்டுமே தவிரக் குறைக்காது.

அதேபோல் எம்பெருமாட்டி உயிர்களை எல்லாம் பாதுகாக்கிருள். என்ருலும் இமாசல ராஜனுக்கு அனுக்கிரகம் பண்ணுவதற்காகத் தானே அவனுக்கு ஒரு குழந்தையாக எழுந்தருளினள். இது அவளுடைய கருணையைக் காட்டுகிறது.

உயிரும் உடலும்

உயிர்க் கூட்டங்களைக் காப்பதற்கு அம்பிகை தானே நாடகங்களை ஆடுகிருள். இந்தப் பிரபஞ்சத்தில் உயிர்களுக்குச் சரீரம் முதலியவற்றைக் கொடுத்து இயங்கச் செய்கிருள். உயிர்கள் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஜீவ யாத்திரை என்று அதனைச் சொல்வார்கள். ஓர் ஆற்றில் கூர்மையாக இருக்கிற கற்கள் நீரோட்டத்தில் கலந்துவிடுமானல் அவற்றின் முனைகள் மழுங்கிக் கூழாங்கல் ஆகிவிடும். இந்தப் பிரபஞ்சமாகிய ஆற்றில் தனு கரணங்களைப் பெற்று வந்த உயிர்கள் வாழ்க்கையாகிய நீரோட்

டத்துடன் ஓடி ஓடி இன்பதுன்பங்களை நுகர்ந்து அவற்றின் முனைப்புகள் எல்லாம் மழுங்கிவிடும். ஆனால் எல்லோரும் அப்படி ஆகிறார்களா என்பது வேறு விஷயம். பிரபஞ்சச் சேற்றிலேயே ஆழ்ந்துவிடுகிறவர்களே பெரும்பாலோர்.

பிரபஞ்சத்தை உண்டாக்குகின்ற பெருமாட்டி இந்த உடம்பையும் உண்டாக்குகிறாள். பிரபஞ்சத்திற்கு அண்டம் என்று பெயர். இந்த உடம்புக்குப் பிண்டம் என்று பெயர். 'அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் உள்ளது' என்று சொல்வார்கள். அண்டம் என்பது ஐந்து பூதங்களால் ஆனது. உடம்பும் ஐந்து பூதங்களால் ஆனது. மகாபூதங்களால் ஆனது அண்டம் என்று சொல்கிறார்கள். அவற்றின் சிறு பகுதிகளினால் இந்த உடம்பு அமைந்தது. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்சபூதங்களின் சிறு சிறு பகுதிகளினால் இந்த உடம்பு ஆகியது; அவற்றின் முழுச் சொரூபத்தினால் பிரபஞ்சம் ஆகிறது.

உயிர்களுக்குச் சரீரம் வேண்டுமென்று சொன்னேன். சரீரம் என்பது ஒன்றல்ல. நாம் பார்க்கிற இந்தச் சரீரத்தை ஸ்தூல சரீரம் என்று சொல்வர். இது பரு உடல். இதன் உள்ளே உள்ள உடல் ஒன்று இருக்கிறது. அதுதான் இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்கு இன்றியமையாதது. பரு உடல் மாத்திரம் இருந்தால் போதாது. மன உணர்ச்சியோடு இருந்தால்தான் இன்ப துன்பங்களை அநுபவிக்க முடியும். ஒருவனுக்கு மயக்க மருந்து கொடுத்து டாக்டர் அறுவைச் சிகிச்சை செய்கிறார். அவன் உடம்பிலுள்ள பகுதியை அறுக்கிறார். அதனால் உண்டாகிற துன்பத்தை அவன் உணர்ந்து கொள்வதில்லை. சிறிய முள் குத்தினாலும் துள்ளிக் குதிக்கின்ற அவன் கத்தியினால் கீறும்போது வலியை உணராமல் கிடக்கிறான். அவன் உடம்பு பிணம்போலக் கிடக்கிறதே தவிர அவனுக்கு உயிர் இருக்கிறது. இருந்தாலும் அதனால் துன்பம் இல்லை. துன்பத்தை உணர்வதற்குறிய மனம் இப்போது உடம்போடு ஒட்டாமல் மயங்கி நிற்கிறது. மயக்க மருந்து இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது. மனம் ஒட்டாமல் இருந்தால் இன்ப துன்ப அநுபவங்கள் இல்லை.

அதே மாதிரி உடம்போடு சம்பந்தம் இல்லாமலேயே மனம் இன்ப துன்பத்தை அநுபவிக்கும். உடம்பு சும்மா படுத்துக் கிடக்

கிறது. அப்போது ஒருவனுக்குக் கனவு உண்டாகிறது. அந்தக் கனவில் திருடனைக் காண்பதுபோல ஒரு காட்சியைக் காண்கிறான். அப்போது அந்த மனம் துன்புறுகிறது. பூச்சாண்டியைக் கண்டது போன்று குழந்தை கனவு காண்கிறது. அதனால் படுக்கை நனைந்து போகிறது. மனத்தில் உண்டாகும் இன்ப துன்பம் உடம்பிலும் உறைக்கின்றன. ஆகவே மனம் இருந்தால்தான் இன்ப துன்ப அநுபவங்கள் உண்டு என்பதைத் தெரிந்துகொள்கிறோம்.

இந்த உடம்பு பரு உடல். இந்த உடம்பினுள் மனம் உள்ள உடம்பைத்தான் நுண் உடல் என்பர். மனந்தான் முக்கியமானது. பரு உடல் ஐந்து பூதங்களால் ஆனது. நுண் உடல் மூன்று குணங்களால் ஆனது. உயிர்கள் இந்த இரண்டு வகை உடலங்களையும் பெற்று வாழ்கின்றன. அம்பிகை இந்த உடலங்களைத் தருகிறாள். "ஐந்தும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறி ஆக்கும்," என்பது ஒரு பழமொழி. அதற்கு வேறு வகையில் பொருள் சொல்வார்கள். அதற்குரிய தத்துவப் பொருள் இதுதான். பஞ்ச பூதங்கள் தோன்றி, மூன்று குணங்கள் தோன்றிய பிற்பாடு அம்பிகை உயிர்களுக்கு இரண்டு வகையான சரீரங்களையும் அளிக்கிறாள். இப்படி, உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைத் தந்து காப்பாற்றுகிற அம்பிகை, இப்போது மேனைக்கும், பர்வதராஜனுக்கும் குழந்தையாக வளர்கிறாள்; அவர்கள் சோறிட உண்டு வளர்கிறாள். இது பெரிய நாடகம் அல்லவா?

அவதாரம்

உயர்ந்த நிலையில் இருக்கின்ற தெய்வம் நம்மைப்போல உலகில் நடமாடினால் அது அந்தத் தெய்வத்தின் கருணையைக் காட்டும். மேலே இருந்து கீழே இறங்குவதனால் அவதாரம் என்ற பெயர் உண்டாயிற்று. தனக்கென ஒரு வடிவம் இல்லாத எம்பெருமாட்டி உலகத்திலுள்ள உயிர்க் கூட்டங்கள் உய்வுபெறவேண்டும் என்பதற்காகப் பர்வத ராஜனின் குமாரியாக எழுந்தருளினாள். பார்வதி என்ற திருநாமத்தைப் பெற்றாள். நம்மை மேலே உயர்த்த வேண்டும் என்பதற்காக அவள் மேலே இருந்து கிழே இறங்கி அவதாரம் எடுத்தாள்.

நாமும் ஒரு வகையில் அவதாரம் பண்ணுகிறோம். அருணகிரி யார் இந்த அவதாரச் சிறப்பைச் சொல்கிறார்.

“ எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம் ”

என்று பாடுகிறார். நம்முடைய பிறப்புக்கும், அம்பிகையின் அவதாரத்திற்கும் வேறுபாடு உண்டு. இராமன், கிருஷ்ணன் முதலியவர்கள் உலகத்தில் பிறந்து மக்களோடு மக்களாக உலவினார்கள். அதை வைத்துக்கொண்டு, நாமும் அவர்களும் சமம் என்று எண்ணக் கூடாது. இரண்டு பேர்களும் ஒரேமாதிரி பிறந்தோம் என்று சொல்லக் கூடாது. ஓர் உதாரணம் சொல்கிறேன்.

ஓர் ஊரில் சுப்பிரமணிய ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவருக்குச் சின்னப் பிராயத்தில் வேலப்பன், முருகன் என்று இரண்டு நண்பர்கள். சின்ன வயதில் சுப்பிரமணிய ஐயரும், வேலப்பச் செட்டியாரும், முருக முதலியாரும் ஒன்றாகவே விளையாடினவர்கள் ; ஒன்றாகவே சேர்ந்து படித்தவர்கள். சுப்பிரமணிய ஐயருடைய தகப்பனார் சென்னையில் குடியேறிப் பெரிய வியாபாரத்தைத் தொடங்கினதால் சுப்பிரமணிய ஐயரும் சென்னையிலேயே தங்கிவிட்டார். தகப்பனார் காலமான பிறகு வியாபாரத்தையே கவனித்துக்கொண்டார். பல ஆண்டுகளுக்குப்பின் தம் ஊருக்குப் போக நேர்ந்தபோது தம்முடைய பால்ய நண்பர்களைப் பார்க்க வேண்டுமென்ற அவா அவருக்கு எழுந்தது. முருக முதலியாரின் வீட்டிற்குச் சென்றார். “முருக முதலியார் இருக்கிறாரா ?” என்று கேட்டார். “ அவர் ஜெயிலுக்குப் போய்விட்டார் ” என்றார்கள். ஏன் என்று கேட்டதற்கு, “ ஏதோ குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போய்விட்டார் ” என்றார்கள். அதைக் கேட்டு அவருக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. ‘ சரி, வேலப்பச் செட்டியாரையாவது பார்த்து வரலாம்’ என்று போனார். அங்கே போய் விசாரித்த போது அவரும் ஜெயிலுக்குப் போயிருப்பதாகச் செய்தி கிடைத்தது. “ அவர் என்ன குற்றம் செய்தார் ?” என்று சுப்பிரமணிய ஐயர் கேட்டார். “குற்றம் செய்தாரா ! அவர் குற்றம் ஒன்றும் செய்யவில்லையே ! அவர் ஜெயில் விசிடர் ” என்று அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள். அதைக் கேட்ட பிறகுதான் இரண்டு பேர்களுக்கும்

உள்ள வேறுபாடு புலனுயிற்று. முதலில் போனவர் குற்றம் செய்து ஜெயிலுக்குப் போனவர். இரண்டாவதாகப் போனவர் ஜெயிலில் உள்ள குற்றவாளிகளுக்கு, 'இனிமேல் குற்றம் செய்யாதீர்கள்' என்று உபதேசம் செய்யப் போனவர். இரண்டு பேர்களும் ஜெயிலுக்குப் போனுர்கள் என்பது உண்மையானுலும் இரண்டு பேர்களும் ஒரே நிலையில் போனவர்கள் அல்ல. ஒருவன் குற்றம் புரிந்து தண்டனை அநுபவிக்கப் போனவன். மற்றெருவனே குற்றவாளியை நல்லவனுக்கப் போனவன். அப்படியே உயிர்கள் உலகத்திற்கு வருவது தாம் செய்த குற்றங்களை அநுபவிப்பதற்காக; முன் பிறவியில் செய்த புண்ணிய பாவங்கள் ஆகிய இரண்டுக்கும் ஏற்ப இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்காக.

"ஏழையின் இரட்டைவினை ஆயதோர் உடற்சிறை."

(திருவகுப்பு)

இரண்டு வினையாகிய குற்றங்களைச் செய்து இந்த உடம்பாகிய சரீரத்தைப் பெற்றிருக்கிறேம். ஆகவே நாம் நம் கன்மத்திற்கு ஏற்றபடி பிறவி எடுத்திருக்கிறேம். இறைவன் தன் கருணை காரணமாக வந்திருக்கிருன். அவன் கீழே இறங்கி வந்தான் என்றுல், நாம் கீழே உருண்டு விழுந்தோம். அதனுலே இந்தக் காயம் வந்தது. மேலே இருந்து கீழே விழுந்தால் காயந்தானே உண்டாகும்? ஆண்டவன் படிப்படியாக இறங்கி வந்தவனைப்போல வந்துள்ளான். ஆகவே இரண்டையும் சமமாகச் சொல்லக்கூடாது.

"இரண்டுபேர்களுக்கும் சரீரங்கள் இருக்கின்றன. ஆகையால் ஒன்றுதான்" என்று சொல்லலாமா? இரண்டு சரீரத்திற்கும் வேறுபாடு உண்டு. நம்முடைய சரீரம் புண்ணிய பாவங்களின் பயனுகத் தோன்றியது. ஆண்டவன் தானே சரீரத்தை அமைத்துக்கொண்டு வருகிருன். திவ்ய தேஜோமய விக்கிரகமாக இருக்கிற அவன் தன் சங்கல்பத்தினுல் திருமேனியைக் கொண்டு வருகிருன்.

வீட்டுக்கும் சிறைக்கும் உள்ள வேறுபாடுதான் இந்த இரண்டுக்கும். பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தாலும், இரண்டு பேர்களுடைய உடம்புக்கும் வேறுபாடு உண்டு. சரீரத்தின் வடிவம் ஒரே மாதிரி இருக்கும். சில சமயங்களில் அரண்மனையும் சிறைக்கூடமாக ஆகும். ஆகாகான் வாழ்ந்த அரண்மனை, காந்தியடிகளின் சிறைக்

கூடமாக இருந்தது. இரண்டுக்கும் வேறுபாடு இல்லாததனல் அந்த அரண்மனை சிறையாக இருந்தது. சிறைக்கும் வீட்டிற்கும் என்ன வேறுபாடு? சிறையில் குற்றவாளியை உள்ளே தள்ளி, அவன் வெளியில் வராமல் வெளியே பூட்டுப் போடுகிருர்கள். வீட்டிலோ வெளியில் இருக்கிற திருடன் உள்ளே வராமல் இருக்க, நாமே உள்ளிருந்து தாழிட்டுக் கொள்கிரேம். இதுதான் வேறு பாடு. கட்டிடத்தில் வேறுபாடு இல்லை. அதேமாதிரி புண்ணிய பாவ வினைகள் காரணமாக நாம் இந்த உலகத்தில் உடம்பைப் பெற்றிருக்கிரேம். ஆண்டவன் கருணைகாரணமாகத் திரு அவ தாரம் செய்கிருன். இரண்டு பிறப்பும் ஒன்று என்று சொல்ல முடி யாது. அவன் ஆடுவது நாடகம், விளையாட்டு. நாம் ஆடுவது வினையின் செயல்.

கன்னிதன் அருளின் நீர்மை காட்டினன் போலு மன்றே

என்று அதனுல்தான் கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிருர்.

தவ விருப்பம்

அம்பிகைக்கு ஐந்து பிராயம் நிரம்பியது. அப்போது தாய் தந்தையர்களைப் பார்த்து, "நான் தவம் செய்யப் போகிறேன். சிவபெருமானையே திருமணம் செய்துகொள்ளத் தவம் செய்ய வேண்டும்" என்று புறப்பட்டாள். அப்போது அவளுடைய தாயாகிய மேனை, "நீ போகாதே அம்மா" என்று சொன்னுள். நீ போகவேண்டாம் என்று சொன்னமையினுல் உமா என்ற பெயர் உண்டாயிற்று. உமா என்பதற்குப் போகவேண்டாம் என்பது பொருள்.

தாய்க்குத்தான் குழந்தையின் மேலே ஆசை அதிகம். தவம் செய்வதானுல் ஒன்றும் சாப்பிட முடியாது. பழங்களையே உண்ண வேண்டும். சருகுகளை உண்ண வேண்டும். இதனுல் உடம்பு வாடி விடும். இவற்றை எல்லாம் எண்ணி, "நீ தவம் செய்யப் போக வேண்டாம்" என்று தாய் சொன்னுள். அவள் சொன்னதே அம்பிகையின் திருநாமம் ஆயிற்று; உமா என்ற பெயர் உண்டா யிற்று. பர்வத ராஜனின் புத்திரி ஆதலால் பார்வதி என்ற திரு நாமமும் வந்தது.

உமா என்பது மிகச் சிறந்த திருநாமம். அதைச் சக்திப் பிரணவம் என்று சொல்வார்கள். பிரணவத்தில் அகார, உகார, மகாரம் உண்டு. அந்த மூன்றும் சேர்ந்தே ஓங்காரமாயின. அந்த மூன்றுமே உகாரம், மகாரம், அகாரம் என்ற முறையில் சேர்ந்து உமா என்று ஆயின.

தாயும், தந்தையும் தடுத்தவுடன் அவர்களைப் பார்த்துப் பிராட்டி சொன்னுள்; "நீங்கள் என்னைப் பாதுகாப்பதாக நினைக்க வேண்டாம். எல்லோரையும் பாதுகாக்கின்றவன் ஆண்டவன். அந்தப் பரமேசுவரன் என்னையும் காப்பான். யாரும் பிறரைக் காக்க முடியாது. இறைவன் திருவருள் இருந்தாலன்றி எந்த வித மான பாதுகாப்பும் யாருக்கும் உண்டாகாது. இதுதான் உண்மை. நான் தவம் செய்யப்போவதை மறுக்க வேண்டாம்" என்று உமாதேவி மிகவும் உறுதியாகக் கூறினுள். அதைக் கேட்டவுடன், "உன் உள்ளப்படியே நீ போய்த் தவம் செய்வாயாக" என்று அன்னை சொன்னுள்.

ஈசனே காப்பன் அல்லால் யாரையும் பிறரால் தம்மால்
ஆசறப் போற்றல் ஆகா ததுதுணி வாகும்; ஈண்டுப்
பேசிய திறனும் அன்னேன் பேரருள்; மருதி என்ன,
நேசமோ டியைந்திட் டன்னை நினைந்தநோன் பியற்று
கென்ருன்.

(பார்ப்பதிப் படலம், 32.)

[ஆசுஅற - குற்றம் அறும்படி. போற்றல் - பாதுகாத்தல். மருதி - மறுக்காதே.]

உமாதேவி இவ்வாறு தவக் கோலம் கொண்டு தவம் செய்ய வந்தாள். அப்போது சிவபெருமானும் தவக்கோலத்தை ஏற்ருன்.

தட்சிணு மூர்த்தி

அகப்பொருளில் ஒன்று சொல்வார்கள். தலைவனும் தலைவியும் எல்லாப் பண்புகளிலும் ஒத்திருக்க வேண்டும் என்பார்கள். இங்கே அம்பிகை தவம் செய்ய, பரமேசுவரனும் தவம் செய்யத் தொடங்கி ஞனும். அம்பிகை தவம் செய்வதற்குக் காரணம் இறைவனைத் தன் கணவனுக அடையவேண்டுமென்பதற்காக. சிவபெருமான் எதற் காகத் தவம் செய்தான்? சனகர், சனந்தனர், சனுதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் பிரம்மதேவனின் புதல்வர்கள். அவர்கள்

எல்லாம் தெரிந்தவர்கள். எல்லா நூல்களையும் கற்றவர்கள். எல்லா வகையான கேள்வி ஞானமும் உடையவர்கள். அவர்கள் படிக்காத நூல் இல்லை. கேளாத கேள்வி இல்லை. சிந்திக்க வேண்டியவற்றை எல்லாம் சிந்தித்து அறிந்தவர்கள். அவர்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. நூல்களில் சந்தேகம் இல்லை. கேள்வியில் சந்தேகம் இல்லை. நூல்களுக்கும், கேள்விகளுக்கும் அப்பாலே அந்தச் சந்தேகம் இருந்தது. இறைவனிடம் சென்று, தெளிவித்தருள வேண்டும் என்று வேண்டினர். அவர்களுடைய ஐயத்தை நூல்களைக் கொண்டு தீர்க்க முடியாது. வாயினாலும் சொல்லித் தீர்க்க முடியாது. கல்வி கேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஐயம் அது. அதைத் தீர்க்க வேண்டுமானால் அந்த இரண்டுக்கும் அப்பாற்பட்ட முறையிலேதான் தீர்க்க வேண்டும். தட்சிணாமூர்த்தியாக எம்பெருமான் எழுந்தருளி அவ்வாறு தீர்த்தாராம். இதைப் பரஞ்சோதி முனிவர் சொல்கிறார்.

> "கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆ றங்கமுதற்
> கற்ற கேள்வி
> வல்லார்கள் நாலவருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
> மறைக்கப் பாலாய்
> எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
> இருந்து காட்டிச்
> சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
> தொடக்கை வெல்வாம்."
>
> (திருவிளையாடற் புராணம்)

[ஆறு அங்கம் - ஆறு சாஸ்திரங்கள்.]

பரமேசுவரன் இமாசலத்தில் கல்லால மரத்தின் கீழே தென் முகமாக அமர்ந்திருந்தான். அவன் சின் முத்திரையினால் உபதேசம் செய்தான். வாக்குக்கு அப்பாற்பட்ட ஞானத்தைப் போதிக்கிற சின் முத்திரையை மேற்கொண்டான். அவன் கல்லால மரத்தின் நிழலில் இருந்ததாகப் பாட்டுச் சொல்கிறது. கல்லால மரம் என்பது இச்சி என்று சொல்கிறோமே அதுதான். பாறையின் மேலே முளைக்கிற சிறு ஆல் அது. அதனால் கல்லால் என்ற பெயர் வந்தது. நான்கு வேதங்களை யும், ஆறு சாத்திரங்களையும், 64 கலை ஞானங்களையும் நன்கு கற்று, எல்லா வகையான கேள்விகளிலும் சிறந்த அந்தப் பெரு முனிவர்



அருள்மிகு
வள்ளி தெய்வயானை சமேத முருகன்

களுக்கு உண்டான ஐயத்தை வார்த்தையினால் நீக்க முடியாது; நூல்களை எடுத்துக் காட்டி நீக்க முடியாது. ஆகவே ஆண்டவன் மௌனத்தினால் அவர்களுடைய ஐயத்தைப் போக்கினானும். இருந்தபடி இருந்துகாட்டிச் சொல்லாமல் சொன்னானும்.

இருவரும் உணரா அண்ணல் ஏனவெள் ளெயிறு யாமை
சிரநிரை அனந்த கோடி திளைத்திடும் உரத்திற் சேர்கொள்
கரதலம் ஒன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணம் செயலொன் றின்றி யோகுசெய் வாரின் உற்றான்.

(மேருப் படலம், 12.)

[ஏனவெள் எயிறு - பன்றியின் வெண் கொம்பு. யாமை - ஆமை யோடு. சிரநிரை - கபால மாலை. உரத்தில் - மார்பில். மோனமுத்திரை - சின்முத்திரை. யோகு - யோகம்.]

பிரமாவும், திருமாலும் அறியாத இறைவன் இப்போது சனகாதி முனிவர் நால்வருக்குமுன் யோகியாக அமர்ந்திருக்கிறான். தன்னுடைய மார்பில் பன்றிக் கொம்பு, ஆமை ஓடு, தலை மாலை ஆகியவற்றை அணிந்தவன். அந்தத் திருமார்பில் கையைச் சேர்த்து மோனமுத்திரையைக் காட்டுகிறான். ஒரு கணம் எந்த விதமான செயலும் இல்லாமல் யோகம் செய்கின்ற யோகியைப் போல மௌனமாக இருந்தான்.

சின்முத்திரை

தட்சிணாமூர்த்தி தன்னுடைய கையினால் காட்டுவதைச் சின் முத்திரை என்று சொல்வார்கள். முத்திரை என்பது அடையாளம். முத்திரைகள் பல உண்டு. இரண்டு கையையும் சேர்த்துக் காட்டுகிற முத்திரையும், தனித்தனியாகக் காட்டுகிற முத்திரையும், ஒற்றைக் கையால் காட்டுகிற முத்திரையும் உண்டு. ஒற்றைக் கை, இரட்டைக் கை, இணையா இணைக் கை என்று நாட்டிய வகையில் முத்திரைகளுக்குத் தனித்தனிப் பெயர் உண்டு. மான் என்பதைக் குறிக்க ஒரு வகையில் விரல்களைக் காட்டுவார்கள். தாமரைப் பூவுக்கு ஒரு வகையான முத்திரை உண்டு. அபிநய நூல் இந்த முத்திரைகளைப் பற்றிய இலக்கணங்களை வகுக்கிறது. சிவபூசையில் சில முத்திரைகள் உண்டு.

தட்சிணாமூர்த்தி கையிலுள்ள முத்திரை சின்முத்திரை. சித் என்பது ஞானம். ஞானத்தின் அடையாளமாகக் காட்டுகிற குறி

அது. தட்சிணுமூர்த்தி தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். ஒவ்வொரு கோவிலிலும் பிராகாரத்தைச் சுற்றி வந்தால் தெற்குத் திசை தெரிவதற்குத் தட்சிணுமூர்த்தி ஓர் அடையாளம். கோவிலுக்கு உள்ளே வலம் வந்தாலும் திக்கை அறிந்து கொள்ளலாம். அங்கே நடராஜப் பெருமானும் தென்முகமாக இருப்பார்.

தெற்குத் திசை காலன் இருக்கும் திசை. காலனுல் உண்டாகிற அச்சத்தைப் போக்குகின்ற வகையில் இந்த இரண்டு மூர்த்திகளும் தென்திசை நோக்கி எழுந்தருளியிருக்கிருர்கள். இருவருடைய காலின் கீழும் முயலகன் இருக்கிருன். முயலகன் என்பது நம் மனத்தின் உருவந்தான். முயலகனைப் பார்த்தால் அவனிடம் எத்தனை கோணல்கள் இருக்கின்றன என்பது தெரியும். விரல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இருக்கும். ஒவ்வோர் அங்கமும் வெவ்வேறு வகையில் திரும்பி இருக்கும். இப்படிப் பலவகையில் கோணல்களைக் கொண்ட முயலகன் இறைவன் திருவடியின் கீழே செயலற்று இருந்து விடுகிருன். நம் மனம் ஒரே சமயத்தில் பலபல வகையில் அலைகிறது. முயலகனைப் போலப் பல திசைகளில் திரும்பி நிற்கிறது. இறைவன் அதன்மேல் எழுந்தருளினுல் மனம் நின்றுவிடும். இந்தக் குறிப்பை, தட்சிணுமூர்த்தி, நடராஜா ஆகிய இருவரின் உருவங்களும் உணர்த்துகின்றன, தட்சிணுமூர்த்தி அமைந்த சக்தி (Static Force) நடராஜா இயங்கும் சக்தி (Dynamic Force) எப்போதும் சுழன்றுகொண்டே இருக்கும் பேராற்றல் நடராஜப் பெருமான். அமைந்திருக்கும் ஆற்றல் தட்சிணுமூர்த்தி. நடராஜப் பெருமான் தென்பால் உகந்து ஆடுகிருன். தட்சிணுமூர்த்தியும் தென்பால் உகந்து அமர்ந்திருக்கிருர். அவர் கையில் சின்முத்திரை இருக்கிறது. அதன் பொருள் என்ன?

நம் கைகளில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. கட்டை விரல் எந்தக் காரியம் செய்தாலும் உடன் வரும். என்ருலும் அது எப்போதும் தனித்தே இருக்கும். செயல் செய்யும்போது மாத்திரம் மற்ற நான்கு விரல்களோடு சேர்ந்து செயல்படும். அது இறைவனைக் காட்டுகிறது. ஆண்டவன் நம்மோடு ஒட்டியும், ஒட்டாமலும் இருக்கிருன். நாம் செய்கிற எல்லாக் காரியங்களுக்கும் அவன் துணை வேண்டியிருக்கிறது. ஆனுலும் நாம் அவனுடன் இன்னும் சேரவில்லை.

கட்டை விரலுக்கு அடுத்தது ஆள் காட்டி விரல். அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது? ஆள் காட்டி விரல் என்று சொல்கிறார்களே, அது எந்த ஆளைக் காட்டுகிறது? கழுதை போனால் அதையுந்தான் அது காட்டுகிறது. ஆளை மட்டுமா காட்டுகிறது? ஆள் என்பது உயிருக்கு, ஆத்மாவுக்குப் பெயர். பெரிய விரல் ஆண்டவனைக் காட்டுகிறது என்று சொன்னேன். அவன் தானே பெரிய பொருள்? பரமேசுவரனாகிய பெரிய பொருளைப் பெரு விரல் காட்டுகிறது. ஆளை, ஆத்மாவைக் காட்டுவது ஆள் காட்டி விரல்.

அதை அடுத்து இருப்பன மூன்று விரல்கள். அவை மூன்றும் மும்மலங்களைக் காட்டுகின்றன. ஆள்காட்டி விரலோடு ஒட்டியிருக்கிற நடு விரல் - பாம்பு விரல். உயிரோடு ஒட்டியிருக்கிற ஆணவத்தைக் காட்டும். அடுத்த விரல் - மோதிர விரல் - கன்மத்தைக் காட்டும். கடைசியில் உள்ள சுண்டு விரல் மாயையைக் காட்டும். ஆள் காட்டி விரல் எப்போதும் இந்த மூன்று விரல்களோடு சேர்ந்தே இருக்கும். கையை விரிக்கும் போது கட்டை விரல் தனியாகவும், மற்ற நான்கு விரல்களும் ஒன்றாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆள் காட்டி விரல் மற்ற மூன்று விரல்களோடு சேர்ந்து ஒட்டியிருப்பது, ஆன்மா வானது மூன்று மலங்களோடு எப்போதும் சேர்ந்தே இருக்கும் என்பதைக் காட்டுகிறது. சின்முத்திரையில் ஆள் காட்டி விரல் மூன்று விரல்களையும் விட்டு விட்டுக் கட்டை விரலோடு ஒட்டியிருக் கும். பசுவானது மும்மலங்களை விட்டு இறைவனோடு சேர்ந்திருந்தால் மோட்சம் அடையும்; அதைத் தெரிந்துகொள்வதே ஞானம். சின் முத்திரை இதைத்தான் காட்டுகிறது. ஆள் காட்டி விரல் பசுவைக் காட்ட, கட்டை விரல் பதியைக் காட்டும் என்று சொன்னேன். பசுவானது மூன்று மலங்களினின்று நீங்கி இறைவனோடு ஒன்றி விட்டால் இரண்டறக் கலக்கும் இன்பத்தைப் பெறும். இந்த ஞானத்தைக் காட்டுகின்றது சின்முத்திரை.

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ"

என்று தாயுமானவர் கூறுவர். நடு விரலை ஒட்டியிருந்த சுட்டு விரல் பெரு விரலோடு ஒன்றுவது இந்த அத்துவித நிலையைக் காட்டும்.

தட்சிணமூர்த்தி சனகாதி முனிவர்களுக்கு இந்த உண்மையைக் கையிலுள்ள விரல்களால், அமைந்த சின்முத்திரையினல் காட்டினர்.

மிகச் சிறந்த அறிவாளிகளாகிய நான்கு முனிவர்களுக்கும் சின்முத்திரையைக் காட்டியவுடனேயே உண்மை விளங்கிவிட்டது. சிலர் அந்தக் கையைப் பார்த்து, தட்சிணமூர்த்தி பொடி போடுகிருரோ என்று பரிகாசமாகக் கேட்பார்கள். அவரவர்களது பக்குவத்திற்கேற்ப இவைகளை உணர்கிற திறம் இருக்கிறது. மிக நுட்பமான விஷயங்களை மிக நுட்பமான அறிவு உடையவர்களால்தான் உணர்ந்து கொள்ள முடியும். நன்ருகக் காய்ந்து உலர்ந்த பட்டாசில் திரி இருக்கிறது. அதில் தீப் பிடித்தவுடன் பட்டாசு வெடித்து விடுகிறது. பட்டாசுக்குள் மண் இருந்தால் வெடிக்குமா ? சனகாதி முனிவர்கள் உலர்ந்த பட்டாசைப் போன்ற பக்குவத்தில் இருந்தார்கள். இறைவன் சின்முத்திரையைக் காட்டியவுடன் அவர்களுக்கு எல்லாம் விளங்கிவிட்டன.

மோன நிலை

இவ்வாறு ஒரு கணம் சிவபெருமான் யோகநிலையில் இருந்தான். அப்போது உலகம் யாவும் மோன நிலையில் இருந்தன. தேவர்கள், மக்கள், பிற உயிர்க் கூட்டங்கள் யாவுமே யோகநிலையை அடைந்து விட்டன. ஆண் பெண் இருபாலரும் ஒன்றுபடாமல் தனித்தனியே அப்படி அப்படியே இருந்துவிட்டார்கள்.

காரண முதல்வன் மோனக் காட்சியால் அமரர் எல்லாம்
சூரர மகளிர் தங்கள் துணைமுலைப் போகம் இன்றி
ஆரிடர் நிலைமை தன்னை அடைந்தனர் ; அளக்கர் சூழ்ந்த
பாரிடை உயிரும் காமப் பற்றுவிட் டிருந்த அன்றே.

(மேருப். 17.)

[காரண முதல்வன் - எல்லாவற்றிற்கும் மூலகாரணனக இருக்கும் இறைவன். சூரர மகளிர் - தெய்வப் பெண்கள். துணை - இரண்டு. ஆரிடர் - முனிவர். அளக்கர் - கடல்.]

பரமேசுவரன் பரமேசுவரியை விட்டுத் தனியே யோக நிலையில் இருந்தபோது உயிர்க் கூட்டங்கள் யாவும் ஆண் பெண் ஆசை இல்லாமல் அப்படி அப்படியே இருந்தன. இதனல் என்ன தெரிகிறது ? எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருக்கிறவன் ஆண்டவன் என்பதை இந்த நிலை காட்டுகிறது. இதைத்தான் கச்சியப்ப சிவாசாரியார் இந்தப் பாட்டில் சொல்கிருர்.

உலகத்து எல்லா உயிர்களும் போகங்களைப் பெறவேண்டு மானால் ஆண்டவன் இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். அவன் சும்மா இருந்தால் உயிர்க் கூட்டங்கள் எல்லாம் சும்மா இருந்து விடும். எல்லா உயிர்களிடத்தும் உயிராக இருக்கிறவன் ஆண்டவன். ஆதலின் அவனுடைய இயக்கத்தால் எல்லா உயிர் களும் இயங்குகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற பழமொழியே இதனைத் தான் சொல்கிறது.

இந்திரன் செயல்

இப்படி நிகழ்வதற்கு முன்னாலே ஒரு காரியம் நிகழ்ந்தது. சூரபன்மாவின் கொடுமையினால் இந்திராதி தேவர்கள் மிகவும் துன்புற்றார்கள். பலர் சிறையில் அகப்பட்டார்கள். மேருமலையை அசுரர்கள் அடைய முடியாது. அடைந்தால் அவர்கள் இறந்து விடுவார்கள் என்ற சாபம் இருந்தது. அசுரர்கள் வர முடியாத மேருமலையைச் சுரர்கள் அடைந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப் பான இடமாக அது விளங்கியது. சுரர்கள் இருந்தமையினால் சுராலயம் என்ற பெயர் அதற்கு வந்தது. இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுடைய பழைய நிலை கெடவே, அசுரர்களுக்கு அஞ்சி அங்கு இருந்தார்கள். ஆண்டவனை நோக்கித் தவம் செய்தார்கள். எம்பெருமான் தோன்றி, "ஏன் தவம் செய்கிறீர்கள்?" என்று கேட்டபோது, "சூரனுடைய கொடுமையால் மிகவும் இன்னலை அடைகின்றோம். பல தேவர்கள் அவனுக்கு அடிமை வேலை செய் கிறார்கள். என்னுடைய மகனாகிய சயந்தன் சிறையில் இருக்கிறான். இந்தத் தொல்லைகள் எல்லாம் நீங்குவதற்குத் தேவரீர் அநுக்கிரகம் பண்ண வேண்டும்" என்று வேண்டினான் இந்திரன். அப்போது இறைவன், "நான் சூரபன்மாவுக்கு வரம் தந்திருக்கிறேன். வரம் தந்தவனே அவனை அழிக்கக்கூடாது. 'தான் வளர்த்த தோர் நச்சுமாமர மாயினும் கெடார்'. ஆனாலும் உங்களுடைய தவத்திற்கு இரங்கி ஒரு காரியம் செய்கிறேன். என்பால் ஒரு குமாரனைத் தோற்றுவித்து அந்தச் சூரனைச் சங்காரம் செய்ய வைக்கிறேன்" என்று அருள் புரிந்தான்.

அதோடு ஓர் உண்மையை உணர்த்தினான். அவர்கள் இவ்வாறு துன்பம் அடைவதற்குக் காரணம் இன்னது என்பதைச் சொன்னான்.

ஏதேனும் துன்பம் உண்டானல் அதற்கு மூலமாக நாம் செய்த வினை இருக்கும். இந்திராதி தேவர்கள் தக்கனுடைய யாகத்திற்குச் சென்று அவன் தந்த அவிசை உண்டார்கள். சிவபெருமானை அவமதித்து அவனுக்கு அவிர்பாகம் கொடுக்காமல் தக்கன் யாகம் புரிந்தான். இந்தத் தீய செயலுக்கு உடந்தையாக நின்றபடியினல் இந்திராதி தேவர்கள் இந்தத் துன்பத்தை அடைந்தார்கள்.

"சத்தியத்தை விட்ட தக்கனுடைய வேள்விக்குப் போய் இருந்த பிழையினல் நீங்கள் இந்தத் துன்பத்தை அடைந்தீர்கள். இனிமேல் நம்மிடம் ஒரு குமாரன் தோன்றிச் சூரனை அழித்து உங்களைப் பாதுகாப்பான்" என இறைவன் திருவாய் மலர்ந்து மறைந்து போயினன்.

மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியின் இருந்த பாவம்
நும்மிடை இருந்த தற்ருல் நோதக உழந்தீர் ; மேனுள்
நம்மிடை ஒருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக் காதி
இம்மென உம்மைக் காப்பான் எனப்புகன் றிறைவன்
போனுன்.

(மேருப். 35.)

[அற்ருல் - அதனல். நோதக உழந்தீர் - துன்பம் உண்டாகி அல்லற்பட்டீர்கள். மேல்நாள் - வரும் காலத்தில். காதி - அழித்து.]

திருடன் திருடுவது குற்றம். அந்தத் திருடனுக்கு உடந்தையாக இருந்தால் அதுவும் குற்றம். தேவர்கள் தக்கன் செய்த யாகத்திற்குப் போனபோது யாகத்திற்குத் தலைவனுகிய இறைவன் வரவில்லையே என்று நினைக்கவில்லை. யாகத்தின் வடிவமாக இருப்பவன் திருமால். அதற்குத் தலைவன் சிவபெருமான். சிவபெருமானை அழைக்காமல் யாகம் செய்தால் அது யாகம் ஆகாது. மாணிக்கவாசகர்,

"சாவ முன்னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று"

என்கிருர். வேள்வியில் அவிர்பாகமாகக் கொடுப்பதை ஆடு என்று சொல்வதில்லை ; யாக பசு என்பதுதான் மரபு. இங்கே மாணிக்கவாசகர் 'தகர்' என்கிருர். 'அப்படிச் சொல்வது, அபசாரம் அல்லவா?' என்று கேட்கலாம். தக்கன் செய்தது வேள்வியாக இருந்தால்தான் பசு என்று சொல்லவேண்டும். ஆண்டவனை நினைக்காத யாகம் யாகமாகாது. மாப்பிள்ளை இல்லாத கல்யாணம் கல்யாணம் ஆகுமா? இறைவனை நினைக்காது யாகம் செய்ததால் அது கசாப்புக்கடை ஆயிற்று. ஆகவே,

" தக்கன் வேள்வித் தகர்தின்று "

என்று மணிவாசகர் சொன்னார்.

இறைவன் இவ்வாறு திருவாய் மலர்ந்தவுடன் இந்திராதி தேவர்களுக்குச் சிறிது நம்பிக்கை உண்டாயிற்று. இறைவனிடத்தில் ஒரு குழந்தை பிறக்க வேண்டுமே என்று காத்திருந்தார்கள். 'அம்பிகையும், இறைவனும் ஒன்றுபட்டு வாழ்ந்தால்தான் குழந்தை தோன்றுவான். அம்பிகை ஒரு பக்கம் தவம் பண்ண, தட்சிணாமூர்த்தி வேறு ஒரு பக்கம் யோகியாக அமர்ந்திருக்கிறாரே! இந்த நிலையில் 'நம் விருப்பம் எங்கே நிறைவேறப் போகிறது?' என்று எண்ணித் துயருற்றார்கள் தேவர்கள். அப்போது பார்வதியும், பரமேசுவரனும் ஒன்றுபட என்ன வழி என்று யோசித்தார்கள். மன்மதனை அழைத்து, அவனை இறைவன் மேலே மலர் அம்புகளைத் தூவச் செய்தால் அவன் மௌனத்தை அகற்றலாம் என்று எண்ணினார்கள்.

பிரமன் மன்மதனை ஏவுதல்

பிரமதேவன் மன்மதனைப் பார்த்து இந்த விருப்பத்தைச் சொன்னான்.

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிகள் தூவி
அங்குறை மோனம் அகற்றினை இன்னே
எங்கள் பொருட்டினில் ஏகுதி என்றான்.

(காமதகனப். 4.)

[மிலைச்சிய - சூடிய. வெற்பின் மங்கையை - பார்வதி தேவியை.]

இங்கே,

நின் வாளிகள் தூவி

என்று பிரமன் சொல்கிறான். " நீ அம்பை விட்டுப் போர் செய் " என்று சொல்லலாம்; "இறைவனுக்கு மலரைத் தூவி அருச்சனை செய்வதுபோலச் செய்" என்றான். "எங்கள் பொருட்டாகப் போ" என்று வேண்டினான்.

இதைக் கேட்ட மன்மதன் அவ்வாறு செய்வது தகாது என்று சொன்னான். சூறாவளி வேகமாக வீசுகின்ற ஓரிடத்தில் பஞ்சைக் கொண்டுபோய்ப் போட்டால் அது எதிர்த்து நிற்குமா? "பூவைப் பூ, பெரிய சூறாவளியின்முன் நிற்க முடியாது. திருநீற்றைத் திரு

மேனியில் அணிந்திருக்கிற பரமேசுவரனை நான் போய் என்ன செய்யமுடியும்?" என்று அவன் சொன்னான்.

தூறு வளிவை கியது ழலின்வாய்
ஏறு ஒருபூ ளைதிர்ந் துளதேல்
நீறு டியமெய் யுடைநின் மலன்மேல்
வீறு வினையேன் பொரமே வுவனே.

(காமதகனப். 24.)

"நீறுடிய மெய்யுடை நின்மலன்" என்றான். 'அவன் எல்லாவற்றையும் எரித்துப் பஸ்மமாக்கி அணிகிறவன் ஆயிற்றே. அவனிடத்தில் நான் போய் வாலாட்டலாமா?' என்ற எண்ணத்தில் அப்படிப் பேசினான்.

பிரமன், "தன்னுடைய நலத்தின் பொருட்டு ஒரு காரியத்தைச் செய்தால்தான் தவறு ஆகும். தேவர்கள் உய்யும்படி நீ இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பிறருக்கு நன்மையாக உள்ள ஒரு காரியம் செய்தால் அது மிகப் பெரிய தியாகம். பிறருக்காகத் தியாகம் செய்வதுதான் உயர்ந்தது. நீ போகவேண்டும்" என்று கூறினபோதும் மன்மதன் இணங்கவில்லை. உடனே, "நீ போகா விட்டால் சாபம் தருவேன்" என்று அச்சுறுத்தினான் பிரமன்.

அதனைக் கேட்டு மன்மதன் கூறினான்; "உம்முடைய சாபத்தால் நான் சாவதைவிட, இறைவன்மேல் அம்புவிட்டு அதனால் நான் அழிவதே நல்லது. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டுமென்று சொல்வார்கள். அதுபோல் இறைவனாலே நான் முடிவு அடைந்தால் அது எனக்கு நன்மையையே உண்டாக்கும்" என்றான். பெரியவர்களோடு மோதிக் கொண்டாலும் அதனால் இன்பம் விளையுமேயன்றித் துன்பம் விளையாது. பொல்லாதவர்களோடு நட்புச் செய்தாலும் அதனால் விளைவது துன்பந்தான்.

கேளிதொன்று ரைப்பல்வேத, கேடுசூழும் நினதுவாய்ச்
சூளின்மேலை இயல்பகன்று துன்புழந்து படுதலிற்
காளகண்டன் முன்புசென்று கடியவெய்ய கணைகள்தூஉய்
மாளினும்சி றந்ததம்ம; மற்றும்உய்ய லாகுமே.

(காமதகனப், 57.)

[சூள் - சபதம், மேலை இயல்பு - முன்பு உள்ள நிலை, காளகண்டன் - சிவபெருமான்.]

மன்மதன் செயல்

இறைவன் கைலாயத்தில் மோன நிலையில் வீற்றிருப்பதற்கு முன்னால், நந்தியெம்பெருமானிடத்தில், "உள்ளே யாரையும் விடாதே" என்று சொல்லியிருந்தான். "மன்மதன் வந்தால் மட்டும் விட்டுவிடு" என்று உத்தரவிட்டிருந்தான். ஆகவே, மன்மதன் கைலாயத்தை அணுகி, நந்தியெம்பெருமானிடத்தில் விடைபெற்று உள்ளே போனான். எம்பெருமான் தவக் கோலத்தோடு வீற்றிருந்தான். அவனுடைய கையில் மழுவாயுதம் இருக்கும். இப்போது அதற்கு வேலையில்லை. மோன முத்திரையோடு இறைவன் எழுந்தருளியிருக்கிறான். அம்பு விடுவதற்கு இலக்கத்தை நாடுவதுபோல மன்மதன் எம்பெருமானை நினைத்து ஐந்து மலர் அம்புகளை விட்டான்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்மட்டும் என்பார்கள். அழிந்து போவோம் என்று அறிந்த அவன், தன் மலர் அம்புகளை இறைவன்மேல் விட்டான். மணமும், நிறமும் பொருந்திய மலர் ஐந்தும் இயற்கையில் மிக மிக மென்மையாக இருப்பவை. ஆனால் மன்மதன் கையில் உள்ள அவை ஐந்தும் காமத் தீயை உண்டாக்கும். நல்லவர்கள் கூடத் தீயவர்களிடத்தில் சேர்ந்து தீமையை விளைவிப்பார்கள் என்பதற்கு இது சான்று. மன்மதன் கையில் தாமரைப் பூ, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பவம் என்ற ஐந்து அம்புகள் இருக்கின்றன. தாமரை மலரை விட்டால் காதலுக்கு உரியவரை நினைக்கச் செய்யும். மாம்பூவை விட்டால் பசலை உண்டாகும். அசோக மலர் எல்லா உணர்வுகளையும் போக்கும். முல்லை மலரால் செயலிழந்து கிடப்பார்கள். நீலோற்பலம் உடலை விடச் செய்யும். இப்படி ஐந்து மலர் அம்புகளுக்கு ஐந்து வகையான விளைவுகளை இலக்கண நூல் சொல்கிறது. மன்மதன் ஐந்து வாளிகளையும் ஒரு சேர எம்பெருமான் மேலே விட்டான். உலகத்திலுள்ள உயிர்க்கூட்டங்களின்மேல் காமன் அம்புகளை விட்டால் அவ்வுயிர்கள் மயக்கத்தை அடையும். மன்மதன் பாணத்தால் அவதியுறாதவர்கள் யாரும் இல்லை. இறைவனே ஞான மூர்த்தி. அந்தப் பெருமான் மன்மதனுடைய ஐந்து மலர் அம்புகள் பட்டவுடன் சற்றே நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தான். அவன் மலம் இல்லாத விமலன்.

பார்த்தவுடன் எம்பெருமானது நெற்றிக் கண் காமனை எரித்து விட்டது. கைலாயம் முழுவதும் புகை சூழ்ந்து பரவியது.

மாரனும் குமாரனும்

கந்தபுராணத்தில் வரும் கதைகளுக்கு உள்ளுறை உண்டு. அதைச் சற்றுக் கவனிக்க வேண்டும். சிவபெருமானுடைய ஞானக் கண்ணிலிருந்து முருகப்பெருமான் திரு அவதாரம் செய்யப் போகிறான். அந்த நெற்றிக் கண்ணே இப்போது காமனைச் சுட்டது. யாரேனும் பெரிய அதிகாரிகள் நமது பேட்டைக்கு வந்தால் அன்றைக்கு நமது பேட்டையை முனிசிபல் அதிகாரிகள் சுத்தம் செய்வார்கள். மந்திரி வரப்போகிறார் என்றால் சாலைகளை எல்லாம் சுத்தம் செய்து வைத்திருப்பார்கள். இங்கே குமார ராஜா வரப் போகிறார். அதற்கு முன்பு வழியிலுள்ள அழுக்கெல்லாம் போன மாதிரி மாரன் அழிந்தான். ஞானமூர்த்தியாகிய குமாரன் வருவதற்கு முன்பு மயக்கத்தை உண்டாக்குகின்ற மாரன் அழிந்து விட்டான். குமாரனுக்கு முன்னாலே மாரன் தோற்றம் அளிக்க முடியாது. மாரனுடைய சமாதியின்மேலே குமாரனுடைய தொட்டில் இருக்கிறது.

குமாரன் என்ற சொல்லுக்கே மாரனைக் குற்சிதம் செய்பவன் என்று பொருள். சூரியன் உதயம் ஆவதற்கு முன்னாலே இருள் போனது போல ஞான சூரியன் ஆகிய முருகன் திரு அவதாரம் செய்வதற்கு முன்னாலே காமத்தை உண்டாக்கும் மாரன் அழிந்தான். முருகப்பெருமானை நினைக்கின்றவர்களுக்குக் காமனால் உண்டாகிற மயல் தோன்றாது. அருணகிரியார் இந்த உண்மையைச் சொல்கிறார்.

"நான் ஒரு பெரிய கடலைத் தாண்டிவிட்டேன்" என்கிறார். "எவ்வாறு தாண்டினீர்கள்?" என்று கேட்டால், "மனோ திடத்தினால் தாண்டினேன்" என்கிறார். "முருகப்பெருமானுடைய திருவருளினால் மனோதிடம் என்ற புணையைப் பெற்றேன். அதனால் காமம் என்னும் சமுத்திரத்தைத் தாண்டினேன்" என்கிறார்.

"கடத்தில் குறத்தி பிரான்அரு ளால்கலங் காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ் வாயில் பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங் காம சமுத்திரமே."

[கடத்தில் - காட்டில் வாழ்ந்த. புணையென - தெப்பத்தைப் போல. பணையில் - மூங்கிலைப் போன்ற தோள்களில்.]

இது **கந்தர் அலங்காரம்.** முருகப்பெருமானுடைய திருவருள் இருந்தால் காமத்தினுலே துன்புற வேண்டிய நிலை இராது.

அழிவும் ஆக்கமும்

ஆண்டவனது நெற்றிக் கண் மாரனைச் சுட்டது; குமாரனைத் தோற்றுவித்தது. ஒன்றை அழிப்பதற்கும், மற்றொன்றை ஆக்கு வதற்கும் ஒரே கண் உதவுகிறது. இது பொருத்தமாக இருக்குமா என்று கேட்கலாம். திருவள்ளுவர் சொல்கிற பாட்டு ஒன்று இங்கே நினைவுக்கு வருகிறது. அன்பு உள்ளவர்களுக்கும், இல்லாதவர் களுக்கும் உரிய வேறுபாட்டை அவர் காட்டுகிறுர்.

அதற்கு முன்பு ஒரு கதை சொல்கிறேன். வைகுண்ட ஏகாதசி அன்று ஓர் ஏழைக் கிழவி பலகாரத்திற்கு உப்புமாச் செய்ய ரவை யை எடுத்தாள். எப்போதோ வாங்கி டப்பாவில் கொட்டி வைத் திருந்த ரவை அது. அதில் புழு இருந்தது. அதை முறத்தில் கொட்டி, சிறிது வெயிலில் காய வைத்தாள். காக்கை கொத் துமே என்று தன் பேரனை அழைத்து அதற்குக் காவலாக இருக்க வைத்தாள். பையன் வெயிலில் சுகமாக உட்கார்ந்து குளிர் காய்ந் தான். மார்கழி மாதமாதலால் அந்த வெயில் அவனுக்கு இதமாக இருந்தது. அதே சூரிய கிரணங்கள் ரவையில் இருந்த புழுவின் மேலும் பட்டன. அந்தக் கிரணங்களைத் தாங்க முடியாமல் புழுக்கள் சுருண்டு சுருண்டு செத்துப் போயின. பையனுக்கு இதமாக இருந்த சூரிய கிரணங்களே புழுக்களுக்கு வதமாக இருந்தன. சூரியன் பையனுக்கு ஒரு வகையான கிரணங்களையும் புழுவுக்கு வேறு வகை யான கிரணங்களையும் வீசினுன் என்று சொல்லலாமா? இரண்டு பேருக்கும் ஒரே வகையான கிரணங்களைத்தான் வீசினுன். ஆனுல் புழு இறந்தது. அந்தச் சூரியனுடைய கிரணங்களைத் தாங்கும் எலும்பு அதற்கு இல்லை. பையனுக்கோ எலும்பின் வலிவு இருந்த மையினுல் அந்தக் கிரணங்கள் இதமாக இருந்தன. வலிமை உள்ள வனுக்கு இதமாக இருக்கிற கிரணமே வலிமையற்றதற்கு வதமாக இருக்கிறது.

அது போல் அன்பு உள்ளவர்களுக்கு அறக்கடவுளின் செயல் நன்மையைத் தருகிறது. அது இல்லாதவர்களுக்குத் துன்பத்தைத் தருகிறது.

ராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றொரு கதை சொல்கிருர். இறைவனுடைய திருவருள் யார் யாருக்கு எப்படி இருக்கும் என்று கேட்ட போது அதற்கு இந்த உதாரணத்தைச் சொல்கிருர். பூனை குட்டியைத் தன் வாயினுல் கவ்விக்கொண்டு நெடுந்தூரம் போகும். அந்தக் குட்டியைப் பார்த்து, "உன்னைத் தன் வாயில் உன் தாய் கவ்விக்கொண்டு போனபோது உனக்கு எப்படி இருந்தது?" என்று கேட்டால், "அது எவ்வளவு சுகமாக இருந்தது என்று சொல்லத் தெரியவில்லையே!" என்று சொல்லும். அதே பூனை, ஓர் எலியைத் தன் வாயில் கவ்விக்கொண்டு ஓடுகிறது. அந்த எலியிடத்தில் கேட்டால், "ஐயோ! என் உயிரே போய்விட்டதே!" என்று சொல்லும். இரண்டையும் பூனை தன் வாயினுலே கவ்வித்தான் சென்றது. ஆயினும் இந்த இரண்டு பிராணிகளுடைய நிலை வேறுபாட்டினுல் ஒன்று சுகத்தையும், மற்றொன்று துன்பத்தையும் அடைந்தன. அதேபோல் இறைவனுடைய கருணை நல்லவர்களுக்கு இன்பத்தைத் தரும்; பொல்லாதவர்களுக்குத் துன்பத்தைத் தரும். இப்படிப் பரமஹம்ஸர் சொல்கிருர்.

இறைவன் அன்பு உடையவர்களுக்கு நன்மை செய்கிருன், அல்லாதவர்களுக்குத் தீமை செய்கிருன் என்ருல் இறைவனுக்குப் பட்சபாதம் உண்டா என்று எண்ணத் தோன்றுகிறது. 'அவன் மேலே ஒரு தவறும் இல்லை. மக்கள்மேல்தான் தவறு இருக்கிறது' என்பதைக் குறிப்பாக வள்ளுவர் புலப்படுத்துகிருர்.

அன்பு இருந்தால் அறக் கடவுளுடைய செயல் இன்பமாக இருக்கும்; அன்பு இல்லாவிட்டால் துன்பமாக அமையும் என்று சொல்கிருர். அதற்கு உபமானம் சொல்லும்போதுதான், 'எலும்பு இல்லாத புழுவைக் கதிரவனுடைய கிரணம் கொல்லுகிறது. அது போல் அன்பு இல்லாதவர்களுக்கு அறக் கடவுள் துன்பம் தரும்,' என்கிருர்.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்."

இந்த இரண்டு வகையான உதாரணங்களிலும், ஒரே வகையான செயல் இருவேறு வகையான பொருளுக்கு இருவேறு வகையான அநுபவங்களைத் தருவதைப் பார்க்கிருேம். அதுபோலத்தான்

ஆண்டவனது நெற்றிக்கண் மாரனை அழித்தது; குமாரனை அளித்தது.

எறிதரு கனிச்சிச் செங்கை ஈசன்மேல் இலக்கம் நாடும்
குறியினர் போல நின்ற கொடுந்தொழில் மாரன் 'துஞ்சும்
நெறியினர்க் கச்ச முண்டோ? நினைத்தது முடிப்பன்' என்று
நறுமலர் வாளி ஐந்தும் நாதன்மேல் செல்ல விட்டான்.

(காமதகனப். 88.)

[கனிச்சி - மழு. இலக்கம் - அம்பை விடும் குறி. துஞ்சும் நெறியினர்க்கு - இறக்கும் வழியில் துணிந்து நிற்பவர்களுக்கு.]

பாசி நிரம்பிய குளத்தில் ஒரு கல்லைப் போட்டால் அதன் அதிர்ச்சியில் சிறிது பாசி விலகும். உடனே மறுபடியும் பாசி அந்த இடத்தை வந்து மூடிக்கொள்ளும். அதுபோல இறைவன் காமனது அம்பு பட்டவுடன் சிறிது தனது விழியைத் திறந்தான். மன்மதன் அழிந்து போனான். ஆண்டவன் மறுபடியும் பழைய நிலையில் அமைதியாக இருக்கலானான். மன்மதன் செய்த காரியம் அவனுக்கே தீங்காக முடிந்தது. அத்தனை தேவர்கள் இருந்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தேவர் செயல்

தாங்கள் செய்த தந்திரத்தால், தங்களுக்கு எந்த விதமான நன்மையும் உண்டாகவில்லை என்பதையும், காமன் அழிந்துவிட்டான் என்பதையும் உணர்ந்து தேவர்கள் மனம் வருந்தினார்கள். 'பழைய படியே அவர் மோன ஞானியாக இருந்துவிட்டாரே! பார்வதி தேவியையும், பரமேசுவரனையும் எப்படிச் சேர்ப்பது?' என்று அவர்கள் கவலைப்பட்டார்கள்.

மைஉ லாவரு கறைமிடற் றிறையவன் மருங்காக
எய்யும் மாரனை விடுத்தனம்; அவனையும் இறச்செய்தான்;
பொய்யில் தன்நிலை தவிர்ந்திலன்; தொன்மையே போலுற்றான்;
ஐய கோஇனிச் செய்வதென் னோஎன அயர்கின்றார்.

(மோன நீங்கு. 3.)

[மை உலாவரு கறைமிடற்று இறையவன் - கரிய நிறம் பரவிய நஞ்சக் கறையைக் கழுத்திலே உள்ள சிவபிரான். இற - அழிய. அயர்கின்றார் - சோர்கின்றனர்.]

ஆண்டவன் நீலகண்டப் பெருமான்; உலகத்தை எல்லாம் அழிக்க எழுந்த ஆலகால விடத்தைத் தன் கழுத்தில் அடக்கிக் கொண்டவன். அவனுக்கு மாரன் அம்பு எம்மாத்திரம்?

தேவர்கள் எல்லாம் தங்களுடைய துன்பம் தீருவதற்காக இறைவனிடத்தில் சென்று விண்ணப்பம் செய்யலாம் என்று எண்ணினர்கள். பின்பு கைலாயத்திற்குச் சென்று நந்தியம் பெருமானிடத்தில் விடை பெற்று உள்ளே புகுந்தார்கள். இறைவனைத் துதித்தார்கள். ஆண்டவன் அப்போது யோக நிலையை நீத்து நின்ருன். "எங்கே வந்தீர்கள் ?" என்று கேட்க, "சூரனுடைய உயிரைப் போக்குவதற்குக் குமாரனை அருள் செய்ய வேண்டும். அதற்கு முன்பு இமாசலத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் பார்வதி தேவியைத் திருமணம் செய்துகொண்டருள வேண்டும்" என்று வேண்டினர்கள்.

காமன் இறந்த பிறகு அவனுடைய மனைவி இரதி மிகவும் வருந்திப் புலம்பினள். ஆண்டவனிடத்தில் வந்து ஏங்கி, "இந்த நிலையை உண்டாக்கிவிட்டீர்களே !" என்று அழுதாள்.

அப்போது எம்பெருமான், "நாம் பார்வதியைத் திருமணம் செய்துகொள்ளும்போது உன் கணவனை மீட்டுத் தருவோம்" என்று அருள் புரிந்தான். தேவர்களைப் பார்த்து, "உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவோம்" என்று அநுக்கிரகம் செய்தான்.

சிவபிரான் செய்த சோதனை

சிவபெருமான் தவம் செய்யும் உமாதேவியிடம் சென்று அந்தப் பிராட்டியைப் பல வகையில் சோதனை செய்யலானன். தகப்பன் எப்படியோ அப்படியேதான் பிள்ளை. பின்னலே வள்ளிதேவியிடம் முருகப்பெருமான் சென்று பலவகைச் சோதனைகளைச் செய்கிருன். அங்கே முருகன் கிழவனகச் சென்ருன். இங்கேயும் சிவபெருமான் முதிய கோலத்தோடு போனன்.

செறிதுவர் உடையாளன், சிகையினன், அணிநீற்றின்
குறியினன், ஒளிர்நூலன், குண்டிகை அசைகையன்,
உறைபனி கதிர்போற்றும் ஓலையன், உயர்கோலன்,
மறையவில் முதியோர்போல் வடிவிது கொடுபோனன்.

(தவங்காண் படலம், 2.)

[துவர் உடை - நீர்க்காவி ஏறிய உடை. சிகையினன் - குடுமியை உடையவன். குறி - அடையாளம். நூலன் - பூணூலை அணிந்தவன். குண்டிகை - கமண்டலம். பனி கதிர் போற்றும் ஓலையன் - பனியையும் வெயிலையும் தடுத்துப் பாதுகாக்கும் குடையை உடையவன்.]

விருத்த வேதியனுகச் சிவபெருமான் சென்ருன். இங்கே,

செறிதுவர் உடையாளன்

என்று பாடுகிருர் கச்சியப்ப சிவாசாரியார். துவராடை என்பது காவி ஆடையைக் குறிக்கும் சொல். காவி ஆடையுடைய சைவ சந்நியாசி சிகையும், பூணூலும் அணிய மாட்டான். அப்படி இருக்க, இங்கே காவி ஆடையும், சிகையும், நூலும் என்று சொல்லி யிருக்கிருரே என்ற ஐயம் தோன்றும். இங்கே துவர் என்பது காவி அல்ல. நீர்க்காவி படிந்த ஆடையை அணிந்திருந்தான்.

முன் காலத்திலே அந்தணர்கள் பல காலம் ஆற்று நீரிலே துவைத்துத் துவைத்து நீர்க்காவி ஏறிய ஆடையையே அணிவார்கள். அந்த நீர்க்காவியைத்தான் இங்கே துவர் என்று சொல்கிருர். இடையிலே நீர்க்காவி ஏறிய ஆடை, தலையிலே குடுமி, நெற்றி யிலே விபூதி; மார்பிலே பூணூல், கையிலே கமண்டலம், வாயில் வேத ஒலி-இத்தகைய அரிய கோலத்துடன் ஆண்டவன் பார்வதியை அணுகினன்.

பார்வதி தேவிக்கு ஜயை, விஜயை என்று இரண்டு தோழி மார்கள். உமாதேவி தவம் செய்கின்றபோது அவர்கள் இருவரும் அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். எம்பெருமான் முதிய கோலத்தோடு எழுந்தருளியபோது அவ னுக்கு வேண்டிய உபசாரங்களை இருவரும் செய்தார்கள்.

உமாதேவியை நோக்கி முதிய மறையவனுக வந்த ஆண்டவன் பேசினன். "உன்னுடைய சிறந்த அழகு வீணுகும்படி இப்படித் தவம் செய்கிருயே! எதற்காக இவ்வாறு செய்கிருய்? உன் விருப்பம் என்ன?" என்று கேட்டான். அம்பிகையைப் பார்த்தால் கொழுகொழு என்று இருக்கிருள். தவத்தினல் அந்த அழகு குன்றுவதைக் கண்டு இரங்குவானைப்போல ஆண்டவன் கேட்டான்.

அப்பொழு துமைதன்னை ஆதர வொடுபாராச்
செப்புதல் அரிதாம்உன் திருநலன் அழிவெய்த
மெய்ப்படு தசைஒல்க மிகுதவம் முயல்கின்ருய்;
எப்பொருள் விழைவுற்ருய்? எண்ணிய துரைஎன்ருன்.

(தவங்கான். 7.)

[ஆதரவொடு - அன்போடு. திரு நலன் - மிக்க அழகு. ஒல்க- தளர.]

இந்தக் காலத்துப் பெண்ணாக இருந்தால் உடனே, 'நான் ஒருவரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தவம் செய்கிறேன்' என்று சொல்வாள். அம்பிகையோ நாணம் உடையவள். எல்லாப் பெண் களுக்கும் நாணம் அழகு. அம்பிகை பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டு மென்பதைத் தன் செயலால் காட்டுகிறாள். இறைவன் கேட்ட கேள்விக்கு உமாதேவி தானே பதில் சொல்லவில்லை. கண்ணால் குறிப்புக் காட்ட விஜயை சொல்லத் தொடங்கினாள். "எல்லா உயிர்களுக்கும் உயிராக இருக்கின்றவனும் நெற்றிக் கண் படைத்தவனுமாகிய பரமேசுவரனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பது இந்தப் பிராட்டியின் விருப்பம். அவனைத் திருமணம் செய்துகொண்டு அவனது வாம பாகத்தில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இவள் இந்தத் தவம் செய்கிறாள்" என்று சொன்னாள்.

அதனைக் கேட்டவுடன் சிவபெருமான் நகைத்துச் சொல்லத் தொடங்கினான்.

மன்னு யிர்க்குயிர் ஆகிய கண்ணுதல் மணஞ்செய்து
தன்இ டத்தினில் இருத்தினன் கொள்வதே தான்உள்ளிக்
கன்னி மெய்த்தவம் இயற்றினள் என்றுகா தலிகூற
முன்ன வர்க்குமுன் னானவன் நகைத்திவை மொழிகின்றான்.

(தவங்காண். 9.)

[தன் இடத்தில் - தன் வாம பாகத்தில். உள்ளி - எண்ணி. காதலி - தோழி.]

முதலில், ஆண்டவன் எல்லோரும் அணுகுவதற்கு அரியவன் என்று அவன் பெருமையைச் சொல்வதுபோலச் சொன்னான். "சங்கரன் ஆகிய இறைவன் எல்லோருக்கும் எளியவனாக வருவானா? உலகத்தை உண்டாக்குகின்ற தேவர்களும் அறிவதற்கு அரியவன் ஆயிற்றே! இந்தச் சிறிய பெண் செய்கிற தவத்திற்காக அவன் வருவானா? அப்படி வந்தாலும் இவளுடைய விருப்பத்திற்கு இணங்கி மணந்து கொள்வானா? அறியாமையால் இவள் தவம் செய்கிறாள்" என்று சொன்னான்.

புவிஅ ளித்தருள் முதல்வரும் நாடரும் புனிதன்றான்
இவள்த வத்தினுக் கெய்துமோ ? எய்தினும் இவையாளை
அவன்வி ருப்பொடு வரையுமோ ? உமையவள் அறியாமே
தவம்இ யற்றினள் ; எளியனோ சங்கரன் தனக்கம்மா ?

(தவங்காண். 10.)

[வரையுமோ - மணம் புரிந்து கொள்வானா? தனக்கு - உமா தேவிக்கு.]

"இவளுடைய திருமேனி மேலும் அழகு பெற வேண்டியது; நன்றாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது. அதை விட்டுவிட்டு இந்த உடம்பு துன்புறும்படி இவள் நிற்கிறாளே! அதனால் கிடைக்கின்ற பயன் என்ன? எல்லோருக்கும் கிடைப்பதற்கு அரிய பொருளாக இருப்பவன் இவளுக்கு எளிதில் கிடைப்பானா? மிக எளிதில் கிடைக்காத ஒன்றுக்குத் தன் அழகை எல்லாம் பாழ்படுத்திக் கொண்டு பல காலம் வீணாக இந்தக் காரியத்தைச் செய்கிறாளே! இதை விட்டுவிடுவது நல்லது" என்று இறைவன் சொன்னான்.

அல்லல் பெற்றிட நோற்றிடு பகுதியால் ஆம்பாலொன்று
இல்லை; இத்துணைப் பெறலரும் பொருளிவட் கெளிதாமோ?
பல்ப கல்தன தெழில்நலம் வறிதுபட் டனவன்றோ?
ஒல்லை இத்தவம் விடுவதே கடன்இனி உமைக்கென்றான்.

(தவங்காண். 11.)

[ஆம் பால் ஒன்று - ஆகின்ற பயன் ஒன்று. வறிது பட்டன - வீணாயின. ஒல்லை - விரைவில்.]

இது வரையில் உமாதேவி வாளா இருந்தாள். சிவபெருமான் இப்படிச் சொன்னவுடன் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. ஓர் உணர்ச்சி விஞ்சும்போது மற்ற இயல்பான பண்புகள் மறைந்து விடும். ஆகவே, உமாதேவி சினம் கொண்டாள்; கோபம் வந்தவுடன் நாணம் போய்விட்டது.

'இவருடைய நெற்றியில் உள்ள நீற்றைப் பார்த்துச் சிவபெருமானுடைய அன்பர் என்று எண்ணினேன். தோற்றத்தைப் பார்த்து அந்தணர் என்றும், பிராயம் முதிர்ந்த கிழவர் என்றும் எண்ணினேன், இவர் இப்படி வெம்மையான சொற்களைச் சொல்வார் என்று அறிந்து கொள்ள வில்லை' எனப் பெருமூச்சு விட்டு, அவர் சொன்ன வார்த்தைகளைப் பொறாமல் பேசத் தொடங்கினாள்.

இந்த வாசகம் கேட்டலும், எம்பிராற் கிவர்அன்பர்,
அந்தண் மாமுது குரவரென் றுன்னினன்; அறியேனால்,
வந்து வெம்மொழி கூறுதல், எனச்சினம் மனங்கொண்டு
நொந்து யிர்த்துநாண் நீக்கியே பொருதுமை நுவல்கின்றாள்.

(தவங்காண். 12.)

[வாசகம் - வார்த்தை. கேட்டலும் - கேட்டவுடன். அந்தண் மாமுது குரவர் - பிராமணக் கிழவராகிய பெரியோர். வெம்மொழி கூறுதல் அறியேன். உயிர்த்து - பெருமூச்சு விட்டு.]

10

"ஐயா, எம்பெருமான் எனக்கு அருள் செய்யாமல் இருந்தாலும் நான் தவத்தை விடமாட்டேன். இன்னும் கடுமையான தவத்தை மேற்கொள்வேன். என் உயிர் போனாலும் தவம் செய்வதை மாற்றமாட்டேன். நீர் அதிகமாக முதுமை அடைந்து மயக்கத்தைக் கொண்டீர். நீர் பித்தரோ?" என்று கேட்டாள்.

முடிவி லாதுறை பகவனென் வேட்கையை முடியாது
விடுவன் என்னினும் தவத்தினை விடுவனோ ? மிகஇன்னம்
கடிய நோன்பினை அளப்பில செய்துயிர் கழிப்பேன்நான்;
நெடிது மூத்தலின் மயங்கினை ; பித்தனோ நீஎன்றாள்.

(தவங்காண். 13.)

தவம் பல வகை. ஏதேனும் ஒரு பொருளை எண்ணிச் செய்கிற தவத்திற்குக் காமியத்தவம் என்று பெயர். இறைவன் அருள் செய்வான் என்று எண்ணி அதற்காகத் தவம் செய்வது உயர்ந்தது. இறைவன் அருளாவிட்டாலும் அவனை நினைந்து தியானித்துத் தவம் செய்வதே கடமை என்று இருப்பது மிக உயர்ந்த பண்பு.

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்-சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு"

(அற்புதத் திருவந்தாதி)

என்று காரைக்கால் அம்மையார் இந்த நிலையில் இருந்து சொல்கிறார். உண்மையான பக்தர்கள் இறைவனிடம் பக்தி செய்வதனால் ஒரு பயன் உண்டு என்று எண்ணமாட்டார்கள்.

சேக்கிழார் **பெரிய புராணத்தில்** நாயன்மார்களின் இயல்புகளைப் பொதுவாகத் தொகுத்து, திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதியில் சொல்கிறார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று பாடுகிறார். அந்த அன்பர்களுக்குச் செல்வத்தில் ஆசை இல்லை. பதவியில் ஆசை இல்லை. இறைவனிடத்தில் அன்பு செய்து எப்போதும் வாழ்பவர்கள். அப்படி வாழ்வதையே இன்ப

மாகக் கொள்பவர்கள். அதற்குமேல் முத்தி என்ற ஒன்று உண்டு என்று ஆசைப்படமாட்டார்கள். முத்தி வேண்டியது இல்லை என்ற விறலோடு இருப்பார்களாம்.

"வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று சொல்கிறார் சேக்கிழார். அருணகிரிநாத சுவாமிகள் **வேளைக்காரன் வகுப்பில்** இதே இயல்பை எடுத்துக் காட்டுகிறார்.

"ஆனபய பக்திவழி பாடுபெறு முத்தியது
ஆகநிகழ் பக்தஜன வாரக்காரனும்."

அன்பர்கள் முத்தி என்று வேறு ஒன்று இருப்பதாகவே எண்ண மாட்டார்களாம்; தாம் செய்கிற வழிபாடே முத்தி என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆகவே எம்பெருமாட்டி இங்கே, "இறைவன் எனக்கு நலம் செய்யாவிட்டாலும் நான் தவம் செய்வதை நிறுத்தமாட்டேன்" என்று சொல்கிறாள். இந்த நிலை மிகச் சிறந்தது.

இதனைக் கேட்ட சிவபெருமான் தன் பேச்சை மாற்றினான். இது வரைக்கும் இறைவன் பெருமையைக் கூறி, அவன் எல்லாராலும் அடைவதற்கு அரியவன் என்று சொன்னான். இப்போது சிவபெருமானை இழித்துக் கூறுவானைப்போலப் பேசத் தொடங்குகிறான். "பெண்ணே, நீ விரும்புகின்றாயே, அவன் எத்தகையவன் தெரியுமா? மன்னவன் மகளாகிய உன்னை மணம் செய்துகொள்வதற்குரிய தகுதி அவனுக்கு ஏது? அவன் கட்டுகிற ஆடை எது தெரியுமா? ஜவுளிக் கடையில் வாங்குவது அல்ல; கசாப்புக் கடையில் வாங்குகிற தோல். அவன் ஏறிச் செல்லும் வாகனம் எது தெரியுமா? வண்டியில் பூட்டுகிற காளையை அவன் வாகனமாகக் கொண்டிருக்கிறான். அவன் அணிந்துகொள்கிற அணிகலன்களைப் பார்த்தால் பயத்தையும், அருவருப்பையும் உண்டாக்கும். பாம்பையும், எலும்புகளையும் அவன் மாலைகளாக அணிந்திருக்கிறான். வெண்தலை, மாலையாக இருக்கிறது. அவன் மார்பில் பன்றிக் கொம்பு மெடலைப் போலத் தொங்குகிறது. அவன் தொழில் பிச்சை எடுப்பது. அதற்காவது நல்ல பாத்திரத்தை வைத்திருக்கிறானா? அதுவும் இல்லை. மண்டை ஓடு ஆகிய பாத்திரத்தில் அவன் பிச்சை வாங்குகிறான். ஊரெல்லாம் சுற்றிப்

பிச்சை வாங்குகிறவன். சில சமயங்களில் நஞ்சையே உணவாக உண்கிருன். அவன் வாழ்கிற இடம் எது தெரியுமா? செத்துப் போனவர்களைச் சுட்டு எரிக்கின்ற சுடுகாடுதான் அவன் இருக்கும் இடம். அங்கே அவன் கூத்தாடுகிருன். நீ திருமணம் செய்து கொள்ள விரும்புகிற கடவுளாகிய சிவபெருமான் இத்தகைய நிலையில் இருக்கிருன். அவனையா நீ திருமணம் செய்ய நினைக்கிருய்? அவன் அணிந்து கொள்வது மணமுடைய மலர் அன்று; வெள்ளெருக்கை அணிகிருன்; அறுகை அணிகிருன்: யாரும் அணியாத கொன்றை மலரை அணிந்திருக்கிருன்; நொச்சி, ஊமத்தை ஆகியவைகள் எல்லாம் அவன் விரும்பும் மலர்கள். அவன் பூசுகின்றது சந்தனம் அல்ல; மயானத்திலே இருக்கிற திருநீறு. அவன் கையில் ஏந்துகிறவை சூலம், மான், மழு, துடி, தழல் என்பன. அவனுடைய படை எது தெரியுமா? பூத பைசாசங்கள். இத்தகைய தோற்றத்தோடிருக்கிற ஒருவனையா கணவனுக்கிக் கொள்ள விரும்புகிருய்?" என்று சொன்னுன்.

ஆடை தோல், விடை ஏறுவ தணிகலம் அரவென்பு,
கேடில் வெண்டலை மாலிகை கேழலின் மருப்பின்ன,
ஓடு கொள்கலம், ஊண்பலி வெய்யநஞ் சுலப்புற்ருேர்
காட தேநடம் புரியிடம், கண்ணுதற் கடவுட்கே.

வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர் வியன் கொன்றை
பாந்தள் நொச்சியே மத்தமென் றினையன பலவுண்டால்;
சாந்தம் வெண்பொடி; சூலம்மான் மழுத்துடி தழலங்கை
ஏந்து கின்றன; பாரிடம் சூழ்படை இறையோற்கே.

(தவங்காண். 15, 16.)

[வெண்டலை - கபாலம். மாலிகை - மாலை. கேழலின் மருப்பு - பன்றிக் கொம்பு. கொள்கலம் - பாத்திரம். பலி - பிச்சை. உலப்புற்ருேர் - இறந்தோர். பாந்தள் - பாம்பு. மத்தம் - ஊமத்தை. சாந்தம் - சந்தனம். துடி - உடுக்கை. பாரிடம் - பூதம்.]

"அவனுக்குக் குலம், கோத்திரம் இல்லை. தாய் தந்தை இல்லை. அழகு வடிவம் கிடையாது. குணம் எதுவும் இல்லை. இவைகள் எல்லாம் அவனுடைய பெருமைகள். இவை எல்லாம் உனக்கும் உரிமையாகவேண்டுமென்ருே தவம் செய்து இளைத்துப் போகிருய்? மிகப் பெரிய சிறப்பை உடைய அரசனுடைய பெண்ணுகிய நீ

இப்படியெல்லாம் செய்யலாமா ? இது உனக்குப் பொருந்துமா ?" என்று கேட்டான்.

அன்னை தாதைகேள் வடிவொடு குணங்கள்இல் அனையா
னுக்கு
இன்ன வாகிய பலவளன் உண்டு ; அவை எவையுந்தாம்
நின்ன வாகவோ தவம்புரிந் தெய்த்தனை ? நெடுந்தொல்சீர்
மன்னன் மாமகட் கியைவதே இத்துணை வழக்கென்றான்.

(தவங்காண். 17.)

[கேள் - உறவினர். இல் - இல்லாத. எய்த்தனை - இளைத்துப்போனாய். இயைவதே - பொருந்துவதா ?]

இதனைக் கேட்ட உமாதேவி தன் காதைப் பொத்திக் கொண்டாள். அவளுடைய சினம் மேலும் மூண்டது. "அந்தண வேடத்தோடு வந்திருக்கிறீரே தவிர, நீர் சொல்லத் தகாத சொற்களைச் சொல்கிறீரே ! எம்பெருமானிடத்தில் சிறிதளவாவது உம் மனத்தில் அன்பு இருக்கிறதா ? இந்த வேடத்தைப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறீர். காட்டிலுள்ள பறவையைப் பிடிப்பதற்குப் புதரில் மறைந்து வேடன் குரல் காட்டுவதுபோல நீர் செய்கிறீரே !" என்கிறாள். இங்கே கச்சியப்ப சிவாசாரியார் ஒரு திருக்குறள் கருத்தை எடுத்தாள்கிறார் ;

"தவமறைந் தல்லவை செய்தல், புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"

என்ற திருக்குறள், பொய்யான தவம் உடையவர்களைப் பற்றிச் சொல்கிறது. அதையே அம்பிகை திருவாக்காகக் கச்சியப்ப சிவாசாரியார் ஆளுகிறார்.

கேட்டியால் அந்த ணாள, கேடிலா எம்பி ரான்றன்
மாட்டொரு சிறிதும் அன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை;
காட்டுறு புள்ளின் சூழல் கவருவான் புதல்மேற் கொண்ட
வேட்டுவன் இயல்போல் மேலோன் வேடம்நீ கொண்ட
தன்மை.

(தவங்காண். 19.)

[புள்ளின் சூழல் - பறவைகளின் கூட்டத்தை. புதல் - புதர் ; செடி.]

இங்கே எம்பெருமானைப் பற்றி முதிய வேடத்தில் வந்த இறைவன் சொன்ன செய்திகள் சிலவற்றை ஆராய வேண்டும்.

கோவில்

ஆண்டவனுக்குக் காடே நடம் புரியும் இடம் என்று முதியவன் சொல்கிறான்.

"கோயில் சுடுகாடு"

என்று மாணிக்கவாசகரும் பாடுகிறார். எத்துணையோ வகையான கோவில்கள் இருக்க, இறைவன் மயானத்தை இடமாகக் கொள்வானேன் என்ற கேள்வி நமக்குத் தோற்றுகிறது.

இறைவனை நாம் கோவிலில் கும்பிடுகிறோம். எங்கும் இறைவன் எழுந்தருளியிருக்கிறான். அவன் இல்லாத இடம் இல்லை. எள்ளுள் எண்ணெயைப்போலச் சர்வாந்தர்யாமியாக அவன் விளங்குகிறான். பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்றவன். 'அப்படி இருக்க அவனுக்கு என்று தனியே ஒரு கோவில் வைத்து அங்கே போய் நாம் கும்பிட வேண்டுமா?' என்று சிலர் எண்ணுவது உண்டு. உண்மையில் ஆண்டன் எங்கும் இருக்கிறான் என்ற உணர்வு எல்லோருக்கும் இருப்பதில்லை. மிகப் பெரியவர்களே உணர்ச்சி பூர்வமாக அதை உணர்கிறார்கள்.

கனகதாசர் என்ற பெரியவர் கர்நாடக மாநிலத்தில் வாழ்ந்து வந்தார். அவர் இளமையில் ஒரு குருநாதரை அணுகித் தமக்கு உபதேசம் பண்ண வேண்டுமென்று கேட்டார். அந்தக் குருநாதர் கனகதாசரின் தகுதியை உணர்வதற்காக அவருடைய கையில் ஒரு கனியைக் கொடுத்து, "இதை யாரும் இல்லாத இடத்தில் நீ போய்ச் சாப்பிடு" என்று சொன்னார்.

அதை வாங்கிக் கொண்ட கனகதாசர் இரண்டு நாள் வரையில் அதைத் தம் கையிலே வைத்திருந்தார். பிறகு அதைக் கொண்டு வந்து குருநாதரின் திருவடியிலே வைத்து, "இதை என்னால் சாப்பிட முடியவில்லையே! தேவரீர் நான் இதை யாரும் இல்லாத இடத்தில் உண்ண வேண்டுமென்று கட்டளையிட்டீர்கள். அப்படி ஓர் இடம் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லையே!" என்றார்.

"யாரும் இல்லாத இடமே உனக்குக் கிடைக்க வில்லையா? ஏதேனும் ஓர் அறைக்குள் தனியாகச் சென்று உண்ணக் கூடாதா?" என்று கேட்டார் குருநாதர்.

"எங்கும் ஒருவன் இருக்கிறானே; அவன் இல்லாத இடம் எதுவும் இல்லை. யாரும் இல்லாத இடத்தில் அல்லவா நான் இதை உண்ண வேண்டும் என்றீர்கள்? அவன் ஒருவன் இல்லாத இடமே இல்லாதபோது உங்கள் கட்டளைப்படி நான் எப்படி நடப்பது?" என்று சொன்னாராம் கனகதாசர்.

அதனைக் கேட்டுப் புன்னகை பூத்து, "அப்பா, உனக்கு இந்தப் பழம் வேண்டாம். ஞானப் பழம் தருகிறேன்" என்று உடனே அவனுக்கு உபதேசம் செய்தாராம் குருநாதர். கனகதாசருக்கு இறைவன் எங்கும் இருக்கிறான் என்ற உணர்வு இருந்தது. நமக்கு அந்த உணர்வு இல்லையே!

கோவிலுக்குச் சென்று நாம் ஏன் கும்பிடுகிறோம்? நண்பர் ஒருவர் வீட்டிற்குப் போனேன். அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். அந்த இடம் புழுக்கமாக இருந்தது. "இங்கே காற்றே இல்லையே!" என்று சொன்னேன். அப்போது என்னிடத்தில் அன்புள்ள அந்த அன்பர் மின் விசிறியைக் கொண்டுவந்து மேசையின் மீது வைத்துச் சுவிச்சைப் போட்டார். காற்றுச் சுகமாக வந்தது, "காற்று நன்றாக வருகிறது" என்று சொன்னேன். அதற்கு முன்பு, காற்று இல்லையென்று சொன்னேன். மின் விசிறியைப் போட்டவுடன் காற்று வருகிறது என்று சொன்னேன். மின் விசிறியில் காற்றை அடைத்துவைத்து வெளியே விட்டார்களா? அதற்கு முன்பு காற்று இல்லையா? காற்று இல்லாத இடத்தில் மனிதன் வாழ முடியாதே! மூச்சுவிட மாட்டாமல் செத்துப்போவானே! ஆகவே, முன்பு காற்று இல்லையென்று சொன்னதும், இப்போது காற்று வருகிறது என்று சொன்னதும் பொய் அல்லவா? அது எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

உண்மை என்ன? முன்னாலே காற்று இருந்தும் என்மேலே உறைக்கவில்லை. மின் விசிறி சுழன்று காற்றை என்மேலே உறைக்கச் செய்தது. காற்று உறைத்தபோது காற்று வந்ததாகச் சொன்னேன். காற்று உறைக்காதபோது இல்லையென்று சொன்னேன். காற்றினால் உண்டான அநுபவம் காற்றை நினைப்பூட்டியது.

ஒருவர் தூத்துக்குடிக்குக் காரில் ஏறி வருகிறார். திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டது முதல், "தூத்துக்குடி வந்துவிட்டதா, தூத்துக்குடி வந்துவிட்டதா?" என்று அடிக்கடி கேட்கிறார். "இன்னும் வரவில்லை" என்று நண்பர் சொல்கிறார். தூத்துக்குடி வந்தபோது, "தூத்துக்குடி வந்து விட்டது" என்கிறார். தூத்துக்குடியை நோக்கி அவர் வந்தாரா? தூத்துக்குடி அவரை நோக்கி வந்ததா? ஆனால் நாம் இப்படித்தான் பேசுகின்றோம். தூத்துக்குடியின் காட்சி, தூத்துக்குடியின் சூழல் அநுபவம், வரும்போது தூத்துக்குடி வந்ததாகச் சொல்கிறோம்.

மற்றோர் உதாரணம். ஒருவர் கிணறு தோண்டுகிறார். "தண்ணீர் வந்துவிட்டதா?" என்று நண்பர் கேட்கிறார். "இன்னும் வரவில்லை" என்று வெட்டுகிறவர் சொல்கிறார். மேலும் மூன்று அடி ஆழம் வெட்டியவுடன் தண்ணீர் வருகிறது. "தண்ணீர் வந்து விட்டது" என்கிறார். தண்ணீர் இவரை நோக்கி வந்ததா? தண்ணீரை நோக்கி இவர், மேடாக இருந்த மண்ணை வெட்டி வெட்டிக் கீழே போனாரா? மேலே இருந்த மண்ணைத் தோண்டித் தோண்டி. ஆழமாகக் கீழே போனபோது தண்ணீரின் காட்சி, அநுபவம், வரும்போது தண்ணீர் வந்ததாகச் சொல்கிறார். இப்படிச் சொல்வதை இலக்கணை என்று சொல்வார்கள்.

எங்கும் ஆண்டவன் இருக்கிறான்; என்றாலும் நாம் அதை உணர்வதில்லை. எங்கும் காற்று இருந்தாலும் அதை உணராத நமக்கு மின்விசிறி நம்மேல் காற்றை உறைக்கச் செய்கிறதுபோல, ஆண்டவன் எங்கும் இருந்தாலும் அதை உணராத நமக்கு, அவன் இருக்கிறான் என்ற உணர்வை உண்டாக்குகிற இடங்களாகக் கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களைக் காணும்போதும், அங்குள்ள மூர்த்தியை நினைந்து பாடும்போதும் நம் உள்ளத்தில் ஆண்டவனைப் பற்றிய எண்ணம் அழுத்தமாக உண்டாகிறது.

எனவே கோவில்கள் என்பன இறைவனை நினைப்பூட்டுகிற அடையாளங்கள்.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்"

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

ஆண்டவனுடைய கோவில்கள் மின்விசிறிகளைப் போன்றன என்று சொன்னேன். மின்சார விசிறிகளுக்கு ஓர் அமைப்பு இருக்கிறது. விக்கிரகங்களுக்கும் சில வகையான அமைப்புகள் இருக்கின்றன. ஆகமங்களும், சிற்ப சாத்திரங்களும் அவற்றைச் சொல்கின்றன. ஆனால் கோவில் கட்டி அதில் விக்கிரகம் வைத்து விட்டாலே அது கோவிலாகிவிடாது. கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் ; நித்திய பூஜை செய்ய வேண்டும்.

முதல் வகுப்புப் பெட்டியில் ஒரு பையன் வந்துகொண்டிருந்தான். அதே பெட்டியில் ஒரு செட்டியார் ஐந்நூறு ரூபாய் கொடுத்து ஒரு மின் விசிறியை வாங்கி வந்தார். சின்னப் பையன் அவரைப் பார்த்து, "அது என்ன ?" என்று கேட்டான். "மின் விசிறி" என்றார். சில மணி நேரம் கழித்து அந்தப் பெட்டியில் இருந்த மின்விசிறிகள் ஓடவில்லை. உடனே அந்தப் பையன் செட்டியாரைப் பார்த்து, "உங்கள் விசிறியை ஓட விடுங்கள்" என்றான். "அது எப்படி ஓடும் ? அதற்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லையே !" என்றார் செட்டியார். எவ்வளவு அழகான விசிறியாக இருந்தாலும் அதற்கு மின் இணைப்பு வேண்டும்.

அதுபோல எவ்வளவு அழகான கோவிலாகக் கட்டி, விக்கிர கத்தை வைத்தாலும் போதாது. அதற்கு ஆகம முறைப்படி கும்பா பிஷேகம் செய்யவேண்டும் ; நித்திய பூஜை நடத்த வேண்டும்.

என்னிடம் ஓர் அன்பர் வந்து, "நடராஜா அமெரிக்காவில் இருக்கிறார்" என்றார். நடராஜரின் விக்கிரகங்களை வாங்கிக்கொண்டு போய் அமெரிக்காவில் உள்ளவர்கள் தங்கள் வீடுகளில் வைத்திருப் பார்கள். நான் அவரிடம், "ஐயா, அங்கே நடராஜர் இல்லை. நட ராஜரின் வடிவந்தான் இருக்கிறது" என்று சொன்னேன். "இரண்டுக் கும் என்ன வேறுபாடு ?" என்று கேட்டார். "அங்கே நடராஜர் வடிவந்தான் இருக்கிறது. இங்கோ நடராஜர் வடிவத்திற்கு மந்திர பூர்வமாகத் தெய்வ சாந்நியத்தைச் சேர்த்து, நித்திய பூஜை செய்து வருகிறோம். மின்சக்தி இல்லாத மின்விசிறி எப்படிப் பயன் இல்லை யோ அது போல மந்திர சக்தி இல்லாத பிம்பம் வெறும் பொம்மை யாகத்தான் இருக்கும்" என்றேன்.

கோவிலிலே பிரதிஷ்டை செய்வதற்கு முன்னலே அங்கே உள்ள விக்கிரகங்களை எல்லோரும் தொட்டுப் பார்க்கலாம். அப்போது அது வெறும் கல்லாக இருக்கும். மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை பண்ணின பிற்பாடு சாந்நித்தியம் ஏறும். ஆகவே மந்திரபூர்வமாகச் சாந்நித்தியம் இல்லாமல் அமெரிக்காவில் உள்ள நடராஜர் வெறும் வடிவந்தான் என்று சொன்னேன்.

எனவே, கோவிலும், அதிலே உள்ள விக்கிரகங்களும் தெய்வத் தன்மை பெறவேண்டுமென்ருல் மந்திரபூர்வமாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்த பிறகு உண்மையான விக்கிரகத்திற்குள் இறைவனது சாந்நித்தியம் புலப்படும்.

இறைவன் நினைவை உண்டாக்குவது கோவில். மயானமும் இறைவன் நினைவை உண்டாக்குவது. எத்தனை கடுமையான மனம் உடையவனுக இருந்தாலும் யாராவது சாகும்போது பிணத்தோடு சுடுகாட்டுக்குப் போனல் அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பான். "எல்லோரும் கடைசியில் இப்படித்தான் போவார்கள். எல்லாம் ஆண்டவன் செயல். ஆண்டவன் ஒருவன்தான் நித்தியமானவன்" என்பான். இப்படி ஆண்டவன் நினைப்பை உண்டாக்குவது மயானம் என்ருல் அதுவும் கோவில் அல்லவா? கட்டிடமில்லாமலே இறைவன் நினைவை உண்டாக்குகிறது. ஆகவேதான்,

"கோயில் சுடுகாடு"

என்று சொன்னர் **மணிவாசகர்.**

இதனையே முதியவராக வந்த எம்பிரான்,

காட தேநடம் புரியிடம் கண்ணுதற் கடவுட்கே

என்று சொன்னர்.

இவ்வாறு இறைவன் சொன்னவுடன் மிகவும் கோபம் கொண்ட அம்பிகை, "தக்கன் முன்பு சிவபெருமானை இழித்துப் பட்ட அநுபவம் உமக்குத் தெரியாதா? நீர் வேதியர் வேடம் பூண்டிருந்தும் இறைவன் பெருமையைச் சொல்லும் வேதத்தை ஆய்ந்திலீர் போதும்! நீர் சொன்ன அத்தனை செயல்களும் ஆண்டவன் கருணையை உயர்த்திக் காட்டுகின்ற அடையாளங்கள் அல்லவா? என் முன்னல் நிற்காமல் போம்" என்ருள்.

அப்போது முதியவராக வந்த எம்பெருமான், "நான் உன்னைத் திருமணம் செய்துகொள்ள வந்தேன்" என்று சொல்ல, அதனைக் கேட்டு அம்பிகை தன் இரண்டு செவியையும் பொத்திக் கொண்டாள். உடம்பெல்லாம் பதைத்தது. 'இந்தக் கிழவன் போகமாட்டான். இனி நானே இந்த இடத்தை விட்டுப் போவேன்' என்று தன் திருவடி சிவக்க அங்கிருந்து புறப்பட்டாள்.

வஞ்சக முதல்வன் சொற்ற வாசகம் இறைவி கேளா
அஞ்செவி பொத்தி ஆற்று தழுங்கிமெய் பதைப்ப விம்மி
எஞ்சலில் முதியோன் போகான்; ஏகுவன் யானே என்னுப்
பஞ்சடி சேப்ப ஆண்டோர் பாங்கரிற் படர்த லுற்றாள்.

(தவங்காண். 28.)

[அழுங்கி - வருந்தி. எஞ்சல் இல் - தன் பேச்சில் குறைவில்லாத. பஞ்சு அடி - பஞ்சுபோன்ற அடி. சேப்ப - சிவக்க.]

அப்போது இறைவன் தன் சோதனைகளை நிறுத்தி, விடையின் மேலே தோற்றினான். அதைக் கண்டு அம்பிகை தளர்ந்து நாணம் அடைந்து வணங்கினாள். "தேவரீரை யார் என்று தெரிந்து கொள்ளாமல் தவறு செய்து, மாயையும் தெளியாமல் அறிவில்லாது சிறியேன் பலவாறு இகழ்ந்துவிட்டேன். பொறுத்தருள வேண்டும்" என்றாள். இதே மாதிரிதான் பின்னாலே முருகப்பெருமான் தன் வேடத்தைக் காட்டினவுடன் வள்ளியெம்பெருமாட்டி பேசுகின்றாள்.

எம்பெருமான் உமாதேவியைப் பார்த்து, "பெண்ணே, நீ நம் இடத்திலுள்ள அன்பினால் முன்னாலே சொன்ன எல்லாவற்றையும் நீ செய்த துதியைப் போலவே ஏற்றுக்கொண்டேன். உன்னிடத்தில் குற்றம் இருந்தால்தானே பொறுக்க வேண்டும்? அன்பு உடையவர்கள் செய்வது எல்லாம் நல்லதுதானே? நீ மிகவும் கடுமையான விரதத்தால் உடம்பு வருந்தினை. இனி அவ்வாறு செய்யவேண்டாம். நாளைக்கே உன்னைத் திருமணம் செய்து கொள்ள வருவேன்" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

நற்றவ மடந்தை கேண்மோ, நம்மிடத் தன்பால் நீமுன்
சொற்றன யாவும் ஈண்டே துதித்தன போலக் கொண்டாம்;
குற்றமுண் டாயின் அன்றே பொறுப்பது? கொடிய நோன்பால்
மற்றினி வருந்தல்; நாளை மணஞ்செய வருதும் என்றான்.

(தவங்காண். 31.)

[கேண்மோ - கேள். வருந்தல் - துன்புறாதே. வருதும் - வருவோம்.]

இறைவனும், இறைவியும் செய்கின்ற காரியங்கள் உலக மக்களுக்குச் சில உண்மைகளைக் காட்டுவதற்காக நடத்திக் காட்டும் திருவிளையாடல்கள். அம்பிகை தவம் செய்தாள்; அவளைச் சோதிப்பதற்கு ஆண்டவன் எழுந்தருளினான். இது ஓர் உண்மையை நினைப்பூட்டுகின்றது. ஆண்டவன் திருவருளை ஒருவன் பெற வேண்டுமானால் பல வகையான சோதனைகளுக்கு ஆட்பட வேண்டும். இறைவனுடைய திருவருளைப் பெறுவது எளிதான காரியம் அன்று.

"பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சிக்கின்
நல்லறிவு சற்றே நகும்"

என்பார்கள். பக்தன் உள்ளத்து அன்பின் ஆழத்தைச் சோதிப்ப தற்கு இறைவன் பல வகையான இடர்களை உண்டாக்குவான். அத்தனை சோதனைகளையும் அவன் வென்று தன்னுடைய தகுதியைக் காட்டுவானானால் இறைவன் தன் அருளை வழங்குவான். பக்குவம் இல்லாதவர்களுக்கு அருளை ஈந்தால் அருளும் பயன்படாமல் போகும்; அவர்களுக்கும் எந்த நன்மையும் உண்டாகாது. வயிற்று வலியால் துடிக்கிற குழந்தைக்கு அல்வாவைக் கொடுத்தால் குழந்தை யின் வயிற்றுவலி அதிகமாகிப் போகும்; அல்வாவும் வீணாகும். ஆகவே, இறைவன் பக்குவம் உடைய ஆன்மாவுக்கேற்றபடி தன் அருளைத் தருவான். இங்கே அம்பிகையைப் பல வகையாகச் சோதனை செய்தது, பக்தனை ஆண்டவன் சோதனை புரிவான் என்ற உண்மையைத் தெரிவிப்பதற்காகத்தான்.

பார்வதி திருமணம்

திருமணம் பேசல்

இறைவன் மலைமகளிருந்த இடத்தை விட்டு மறைந்து போனான். அப்பெருமான் பார்வதி தவம் செய்யும் இடத்திற்கு வந்து அருள் செய்ததை அங்கிருந்தவர்கள் போய்ப் பர்வத ராஜனுக்குச் சொல்ல, அவன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். உமா தேவியை அழைத்து வரச்செய்தான். முறைப்படியாகத் திருமணம் நடத்த வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. சிவ பெருமானும் பெண்ணைக் கொள்ளும் முறைப்படி கொள்ளவேண்டு மென்று திருவுள்ளம் கொண்டான். கைலை மலைக்குச் சென்றவுடன் அங்கிருந்த ஏழு முனிவர்களை அழைத்து, “நீங்கள் இமாசல அரச னிடம் சென்று அவனுடைய பெண்ணாகிய பார்வதியை மணம் பேசி வாருங்கள்” என்று அனுப்பினான். ஏழு முனிவர்கள் அத்திரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரஸர் என்னும் பெயர் உடையவர்கள். இந்த ஏழு முனிவர்களும் இமாசல மன்ன னிடம் வந்து, “சிவபெருமான் உன்னுடைய பெண்ணை மணம் பேசி வரும்படி எங்களை அனுப்பினான்” என்று சொல்ல, அவன் மிகவும் களிப்பை அடைந்தான். “என்னுடைய பெண்ணாகிய உமா தேவியை எம்பெருமானுக்குத் திருமணம் செய்துகொடுத்து, என்னை யும் அடிமையாகக் கொடுப்பேன்” என்று ஊக்கத்தோடு சொன்னான்.

அப்போது அருகில் நின்ற மேனை சற்றே அஞ்சினாள். பெண்கள் எப்போதும் தம்முடைய பெண்கள் நல்ல இடத்தில் வாழ்க்கைப்படவேண்டுமென்றும், நல்ல வகையில் வாழவேண்டு மென்றும் விரும்புவார்கள். மேனை தன்னுடைய கணவனைப் பார்த்து, “பிரமாவின் புதல்வனாகிய தக்கன் தன்னுடைய குழந்தை யாகிய தாட்சாயணியைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்க, அவர் தம் மாமனாராகிய தக்கன் தலையையே கொண்டார் என்று கூறுவார்கள். மாமனார் என்று பாராமல் அப்படிச் செய்த அவரை எண்ணினால் என்னுடைய மனம் மிகவும் அஞ்சுகின்றது.

நம்முடைய குலமகளை அவருக்கு எதற்காகக் கொடுக்க வேண்டும்?" என்றாள்.

> மலரயன் புதல்வன் தன்னோர் மடந்தையை மணத்தின் நல்க
> அலைபுனற் சடிலத் தண்ணல் அவன்தலை கொண்டான் என்பர்;
> நிலைமையங் கதனை உன்னி நெஞ்சகம் அஞ்சும்; எங்கள்
> குலமகள் தனைஅ வற்குக் கொடுத்திடல் எவனோ என்றாள்.
> (மணம் பேசு. 11.)

[மலர்மகன் புதல்வன் - தக்கன், சடிலம் - சடை.]

சிவபெருமானுடைய பெருமையை எண்ணாமல், தன்னுடைய மகளின் நன்மையை மாத்திரம் நினைத்து இவ்வாறு கேட்டாள் மேனை. மகளிருடைய இயல்பை இது நன்றாக வெளிப்படுத்துகிறது.

வந்திருக்கிறவர்களோ மகா ஞானிகள். பர்வதராஜன் அவர்கள் சொன்ன செய்தியைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தான். ஆனால் தாய்க்கோ கவலை உண்டாயிற்று.

பொதுவாகத் தாய்மார்களுக்குத்தான் பெண்ணைப் பற்றிய கவலை அதிகம். "பெரிய குடும்பம். பையன் எம். ஏ. படித்திருக்கிறான். நல்ல உத்தியோகம். நிறையச் சம்பளம் வாங்குகிறான்" என்று பெண்ணைப் பெற்ற தந்தையார் தம் மனைவியிடம் சொல்வார். யாராவது ஒருவர், அந்த வீட்டில் மூத்த மருமகளைச் சரியாக நடத்தவில்லையென்று சொல்லியிருப்பார். அது பெண்ணைப் பெற்ற தாய்க்கு நினைவு வரும். "அவர்கள் மூத்த மருமகளைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லையாமே! நாம் அந்த இடத்தில் சம்பந்தம் பண்ணலாமா?" என்று கேட்பாள். சிறிதளவு கூடச் சந்தேகத்திற்கு இடமில்லாத சம்பந்தம் வேண்டுமென்பதில் பெண்களைப் பெற்ற தாய்மார்களுக்கு மிகவும் கவனம் அதிகம். மாப்பிள்ளை ஈசுவரனாகவே இருந்தாலும், பெண்ணின் இயல்பை மேனை பெற்றிருந்தாள் என்பது இந்தப் பாட்டினால் தெரிகிறது.

'அலைபுனர் சடிலத் தண்ணல் அவன்தலை கொண்டான் என்பர்' என்று மேனை சொல்வதில் ஒரு குறிப்பு இருக்கிறது. கங்கா தேவியைச் சிவபெருமானுடைய மனைவி என்று சொல்வது உண்டு.

முன்பே அவனுக்கு ஒரு கல்யாணம் ஆகியிருக்கிறது என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவதுபோல அதை இங்கே சொல்கிருள் மேனை.

" தக்கனது தலையைக் கொண்டது அவன் செய்த குற்றத்திற் காகவேயன்றி அவனிடம் தனியாக இறைவனுக்குப் பகையில்லை. உற்ருரானாலும், சுற்றமானாலும் செய்த குற்றத்திற்குத் தண்டனை கொடுக்கவேண்டு மென்பதற்காகத்தான் தக்கன் தலையை இறைவன் கொய்யச் செய்தான். தக்கன் செய்த தவறு மிகப் பெரியது. ஆதலால் அவனைத் தண்டித்தான். சிவபெருமானைப் போல ஒரு மாப்பிள்ளை கிடைப்பானு?" என்று ஏழு முனிவர்களும் சொன்னுர்கள்.

உடனே மேனை அந்தப் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டுத் தெளிவுபெற்று, "மிகப் பெரியவர்களாகிய நீங்கள் சொல்லும் போது நான் சந்தேகப்படலாமா? என்ன இருந்தாலும் பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்தே அல்லவா? என்னை மன்னிக்க வேண்டும்" என்று சொல்லவே, ஏழு முனிவர்களும் இருவருடைய சம்மதத்தையும் பெற்றுப் புறப்பட்டுச் சென்ருர்கள்.

சிவபிரான் வருகை

திருமணத்தின் பொருட்டுச் சிவபெருமான் கைலாயத்திலிருந்து வந்தான். வந்து இமாசலத்தில் இறங்கினுன். மேனையும், பிற பெண்களும் சிவபெருமானுடைய திருவடியைத் தாம்பாளத்தில் வைத்து, நல்ல பசுமாட்டுப் பாலால் கழுவிப் பாதபூஜை செய்து, வணங்கிப் போனுர்கள்.

விடைஇ ழிந்துழி மேனைவின் ஞட்டவர்
மடமின் ஞரொடு வந்து பராபரன்
அடிகள் மீதினில் ஆன்பொழி பால்கொடு
கடிதின் ஆட்டினள் ; கைதொழு தேகினுள்.

(திருக்கல்யாணப். 39.)

[இழிந்துழி - இறங்கியபோது, மேனை - இமய அரசன் மனைவி.]

திருக்கல்யாணத்திற்குக் கோடிக்கணக்கான பேர்கள் வந்திருந் தார்கள். ஆண்டவன் திருமணம் ஆகையால் தேவலோகத்திலுள்ள தேவர்கள் வந்துவிட்டார்கள், பூலோகத்திலுள்ள மக்கள் வந்து

விட்டார்கள். இமாசலத்தில் கூட்டம் மிகுதியாகிவிட்டது. அந்தப் பாரம் தாங்க முடியாமல் இமாசலம் அமிழ்ந்தது. வடக்கே தாழ்ந்த வுடன் தென்பால் உயர்ந்தது. தேவர்களுக்கு அதைக் கண்டு பயம் வந்துவிட்டது. 'தென்னகத்தில் உள்ளவர்கள் எளிதில் ஒரு தாவுத் தாவிச் சொர்க்கத்திற்கு வந்துவிடுவார்களோ?' என்று தேவர்கள் கவலைப்பட்டார்களாம். **தக்கயாகப் பரணி** என்னும் நூலில் உரை யாசிரியர் அவ்வாறு சொல்லியிருக்கிறார். 'தவம் செய்யாமல், தானம் செய்யாமல் தென்னாட்டிலுள்ள தமிழர்கள் தேவலோகத் திற்கு வந்துவிடுவார்களே!' என்று தேவர்கள் அஞ்சினார்களாம். எல்லோரும் அஞ்சிச் சிவனே சிவனே என்றார்கள்.

இன்னோர் எவரும் சிவனேஎன் றிரங்க லோடும்
முன்னோனும் அன்ன செயல்கண்டு முறுவல் எய்தி
அன்னோர் குறைநீத்திட நந்தியை நோக்கி ஆழி
தன்ஓர் கரத்தில் செறித்தானைத் தருதி என்றான்.

(திருக்கல்யாணப். 49.)

[முன்னோன் - சிவபிரான். ஆழி - கடலை. செறித்தானை - அடக்கிய அகத்திய முனிவனை. தருதி - அழைத்து வா.]

அகத்தியர் தென்திசைக்கு ஏகல்

இறைவனிடம் தங்கள் கவலையைத் தேவர்கள் சொன்னார்கள். சிவபெருமான் தெற்கே ஓர் இமாசலத்தை உண்டாக்கி நிலத்தைச் சீர்படுத்துவான் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். வண்டி ஒரு பக்கம் ஓரையடித்தால் மற்றொரு பக்கத்தில் ஒரு பாறாங்கல்லைப் போடச் செய்வதுபோல இறைவன் சமன் செய்வான் என்று எண்ணினார்கள். ஆனால் இறைவன் செய்தது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. "தன்னுடைய கரத்தில் கடலை அடக்கிக் குடித்த அகத்தியனைக் கூப்பிடு" என்றான். அகத்தியர் கட்டை விரல் அளவுதான் இருப்பார் என்று சொல்வார்கள்.

சிவபெருமான் அகத்தியரைப் பார்த்து, "நீ போய்த் தென் னாட்டில் பொதிய மலையில் இருப்பாயாக" என்றான். அகத்தியர் அதைக் கேட்டு, "எம்பெருமானே, தங்களுடைய திருமண முகூர்த் தத்திற்காக எல்லா இடங்களிலிருந்தும் பலர் இங்கே வந்திருக் கிறார்கள். நான் எப்போதும் இங்கே திருவடித் தொண்டு செய்து

கொண்டு கிடப்பவன். என்னை அனுப்புவதற்கும் இந்த முகூர்த் தத்தையே பார்த்தீர்களா? இந்தக் காட்சியைக் காணுமல் போகச் சொல்கிறீர்களே!" என்று வருத்தத்துடன் சொன்னுர்.

"உலகத்தவர்கள் ஒரு காலத்தில் ஓரிடத்தில் இருப்பார்கள். நான் அத்தகையவன் அல்லன். நீ பொதிய மலைக்குப் போய் இரு. எனக்கு இங்கே திருமணம் நடக்கின்ற காட்சியை, அதே சமயத்தில் உனக்கு அங்கே காட்டுகிறேன். கூட்டம் இல்லாமல் தனியாக அந்தக் காட்சியைக் கண்டு இன்புறலாம்" என்று இறைவன் அருளினுன். அப்போதே டெலிவிஷன் வந்துவிட்டது. "பொதிய மலைக்கு அருகிலுள்ள பாவநாசத்தில் என்னுடைய திருக்கல்யாணக் காட்சியைக் காணலாம்" என்று சிவபெருமான் பணித்தான்.

அடுத்தபடி அகத்திய முனிவர், "அதற்கு மேலே மற்றொரு குறையுண்டு" என்ருர். "என்ன குறை?" என்று இறைவன் கேட்டான். "எனக்குத் தமிழ் தெரியாதே! போகிற இடம் தமிழ் வழங்கும் இடமாயிற்றே!" என்று முனிவர் சொல்ல, மூன்றேமுக்கால் நாழிகைக்குள் இறைவன் தமிழைச் சொல்லிக் கொடுத்தான். சொல்லிக் கொடுத்தவன் மிகமிகப் பெரிய தமிழாசிரியன். கற்றுக் கொண்டவரும் மிகச் சிறந்த முதல் மாணுக்கர்; அந்தக் காலத்துக் கற்பூரம் போலத் திடீரென்று பற்றிக்கொள்ளும் அறிவுச் சிறப்பு உடையவர். சுடரால் கொளுத்துவதற்கு முன்னுல் திடீரென்று பிடிக் கும் கற்பூரம்போல அவருடைய அறிவு இருந்தது. இந்தக் காலத்துக் கற்பூரம் அப்படி இல்லை. இந்தக் காலத்திலுள்ள சில மாணவர் களுக்கு இந்தக் காலத்துக் கற்பூரத்தை உவமை சொல்லலாம்.

அகத்தியர் உடனே புறப்பட்டுப் பொதிய மலைக்கு வந்தார். பூமி சமனுயிற்று. கல்யாணக் காட்சி அவருக்குக் கிடைத்தது. கல்யாணம் எவ்வளவு நாள் நடந்திருக்கும்? நம்முடைய நாட்டில் முன்காலத்தில் ஐந்து நாட்கள் திருமணம் நடக்கும். சிவபெருமானுக்கு, அதிகமாகப் போனுல் ஐம்பது நாட்கள் நடந்திருக்கலாம். இறைவன் திருமணக் காலத்தில் எல்லோரும் இமயமலை வந்தக் காரணத்தினுல் வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்து போயிற்று; அதைச் சமனுக்கவே அகத்தியர் தெற்கே வந்தார். திருமணம் ஆனவுடன் மீண்டும் அங்கே போகவேண்டும் அல்லவா? 'எப்போது திருமணம் நிறை

வேறும்? நாம் எப்போது இறைவனிடம் போவோம்?' என்று ஆசையோடு இருந்தவர் அல்லவா? போனாரா?

அவர் போகவில்லை. காரணம் என்ன? 'அங்கேயும் சிவபெருமான் இருக்கிறார். இங்கேயும் இருக்கிறார். அங்கே வாழ முடியாது; பனிக்கட்டி நிரம்பி இருக்கிறது. இங்கேயோ நல்ல தமிழ் இருக்கிறது. நல்ல அருவி இருக்கிறது. சந்தனமும், தென்றலும் இருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் சிவபெருமானை இங்கே தரிசிக்கலாம். இப்படி எல்லா விதமான நன்மைகளும் இருக்கும் இடத்தை விட்டு எதற்காக அங்கே போகவேண்டும்?' என்று எண்ணி அவர் அங்கேயே தங்கிவிட்டார். இந்தச் செய்தியைப் **பழைய திருவிளையாடல் புராணத்தில்** பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடுகிறார்.

"ஆவியந் தென்றல் வெற்பின்
அகத்தியன் விரும்பும் தென்பால்
நாவலந் தீவம் போற்றி"

[ஆவியந் தென்றல் வெற்பு - வாவிகளையும் தென்றலையும் உடைய பொதிகைமலை.]

என்று சொல்கிறார். தென்பால் நாவலந் தீவு என்று அந்த ஆசிரியர் சொல்கிறார். அதைத்தான் இப்போது தென்னிந்தியா என்று சொல்கிறோம்.

அகத்தியர் செயல்

அகத்தியர் இங்கேயே தங்கிவிடலாம் என்று நினைத்தார். அப்போது மற்றோர் எண்ணம் வந்தது. சில காலம் தங்கிவிட்டுப் போவதற்கு அவர் ஓரளவு தமிழ் கற்று வந்தார். இப்போதோ இங்கேயே நிலைத்துவிடலாம் என்று எண்ணினார். இங்கேயே தங்கிவிட வேண்டுமென்றால் தமிழறிவு நன்றாக இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று யோசனை செய்தார். மீண்டும் சிவபெருமானைக் கேட்பதா? உயர்நிலைப் பள்ளியில் பயிற்றுவித்த தலைமையாசிரியரைப்போலச் சிவபெருமான் இருந்தார். அவரை விடப் பெரிய ஆசிரியர் யாராவது இருக்கிறாரா என்று எண்ணிப் பார்த்தார் அகத்தியர். அந்தச் சிவபெருமானுக்கே உபதேசம் பண்ணினவன் குமர குருபரன். ஆகவே மேல்படிப்பை

முருகனிடம் கற்றுக்கொள்ளலாம் என்று அகத்தியர் நினைத்தார். முருகனே பரமேசுவரனைப் போன்ற மேல்மட்டத்திலுள்ளவருக்குத் தான் உபதேசம் செய்வான். அவன் 'லெவல்' அப்படி. அவன் அகத்தியருக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பானு என்ற சந்தேகம் உண்டாகும். முருகப்பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்ததைப்போல அகத்தியருக்கும் செய்திருக்கிறுன். தமிழைக் கற்றுக் கொடுத்தான். சிவபெருமானுக்கு இரண்டு செவி களும் குளிரும்படியாக முருகன் உபதேசம் பண்ணினுன். அப்படியே அகத்தியருக்கும் இரு செவிகளும் குளிரும்படியாகத் தமிழைச் சொன்னுனும்.

"சிவனைநிகர் பொதியவரை முனிவன்அக மகிழஇரு
செவிகளிலும் இனியதமிழ் பகர்வோனே!"

(திருப்புகழ்.)

முருகனிடம் தமிழ் பயின்றதனுல் அகத்தியருக்கு மிகுந்த புலமை உண்டாகிவிட்டது. இலக்கண நூல் இயற்றும் வன்மை அவருக்குக் கிடைத்தது. அகத்தியம் என்ற இலக்கணத்தை அவர் இயற்றினுர். பொதிய மலையில் ஒரு சங்கத்தை அமைத்துக் கொண்டு வாழலானுர். தொல்காப்பியர் முதலியவர்கள் அவரிடம் பாடம் கேட்டார்கள். இவை யாவும் முருகன் திருவவதாரத்துக்குப் பின் நிகழ்ந்தவை.

வரபூஜை

இமாசலத்தில் மேனையும், பர்வதராஜனும் கமண்டலத்திலுள்ள நீரால் பரமேசுவரனுடைய திருவடிகளைக் கழுவி, மலரால் அருச்சனை செய்து, சந்தனம் மாலை சாத்தி, வர பூஜை செய்தார்கள்.

நம்முடைய நாட்டில் திருமணம் நடக்கிறது. மணமக்களையே உமா மகேசுவரர்களாக நினைக்க வேண்டும். மணக்கோலத்தில் இருக்கிற வரைக்கும் அவர்களிடம் தெய்வத் தன்மை இருக்கும். அதனுல்தான் மாப்பிள்ளையை விடப் பெரியவராகிய மாமனுர், மாமியார் அவர் காலைக் கழுவி வணங்குகிறுர்கள். இந்தப் பழக்கம் உமாமகேசுவரர் திருமணத்திலிருந்து உண்டாயிற்று.

திருமணம்

மேனை தீர்த்தம், சந்தனம், மலர் முதலியவற்றை அளித்தவுடன் இமயத்தண்ணல் திருவடிப்பூஜை பண்ணி, பின்னர்த் தன் பெண்ணைத்

தாரை வார்த்துக் கொடுத்தான். இந்த உலகத்துக்கு மகாமாதா வாக இருக்கிறவள் உமாதேவி. இறைவன் பாசம் என்பது அணுவளவும் இல்லாத பரஞ்சோதி. அந்தப் பெருமான் கையில் அம்பிகையின் கையை வைத்து, "உனக்கு என் பெண்ணைக் கொடுத் தேன்" என்று வேதமந்திரங்கள் முழங்கச் சொன்னான் இமய அரசன். தண்ணீர் விட்டுத் தானம் செய்ய வேண்டும். அப்படியே தாரை வார்த்துக் கன்னிகா தானம் செய்தான் இமாசல அரசன்.

இந்தச் செய்தியைச் சொல்லும் போது சிவபெருமானுடைய கருணையைக் கச்சியப்ப சிவாசாரியார் வியக்கின்றார்.

நாடகங்களில் பாத்திரங்களே பேசுவார்கள். காவியத்திற்கு ஒரு சிறப்பு; இடையிடையே கவிஞன் தன்னுடைய உணர்ச்சியைக் காட்டுவான். கந்தபுராணக் காவியத்தில் கச்சியப்பருடைய பக்தி உணர்ச்சி, நடுநடுவே கவிக் கூற்றாக வரும். இங்கே எம்பெருமான் கன்னிகாதானத்தை ஏற்ற செய்தியைச் சொன்னவர் இறைவன் கருணையை வியக்கிறார். கொடுப்பவன் இமய அரசன். வாங்கு பவன் பரமேசுவரன். இமாசல ராஜன் தன் கன்னிகையாகிய பார்வதியைத் தானம் செய்தான். எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுக்கும் மகாதேவனாகிய பரமேசுவரன் கைநீட்டி வாங்கினான். மாணிக்கவாசகர் சொல்கின்றார்,

"வைத்து வாங்குவாய்"

என்று. அப்படி ஆண்டவன் நம்மிடம் எல்லாவற்றையும் கொடுத் துத் தானே வாங்கிக் கொள்கிறான்.

எங்குள பொருளும் கோளும் ஈதலுந் தானே ஆகும்
சங்கரன் உலகம் எல்லாந் தந்திடும் கன்னி தன்னை
மங்கல முறையால் கொண்டான் மலைமகன் கொடுப்ப என்றால்,
அங்கவன் அருளின் நீர்மை ஆரறிந் துரைக்கற் பாலார்.

(திருக்கல்யாணப். 71.)

[கோள் - கொள்ளுதல். ஈதல் - கொடுப்பது.]

உலகத்தை எல்லாம் கொடுக்கிற பரமேசுவரனுக்கே பர்வத ராஜன் தன் மகளை மங்கலமாகக் கல்யாணம் செய்து கொடுக்க, அதை அவன் ஏற்றுக் கொண்டான். இவ்வாறு சிவபெருமான் ஏற்றுக் கொண்டது அவனுடைய அபாரமான கருணையை அல்லவா காட்டுகிறது?

கொண்டான் மலைமகள் கொடுப்ப என்றால்
அங்கவன் அருளின் நீர்மை யாரறிந் துரைக்கற் பாலார் ?

"தன்னாலே பாதுகாக்கப் பெறும் ஒருவனிடமிருந்து தான் வாங்குவது முறையா ?" என்று கேட்கலாம். ஒருவனிடம் தானம் வாங்குவதனால் நம் கை தாழ்கிறது. இங்கே சிவபெருமான் தன் கையைத் தாழ்த்திக் கன்னிகாதானம் வாங்கினான். இதனால் அவன் மதிப்புக்குக் கேடு வராதா ?

வாட்டசாட்டமான கலெக்டர் ஒருவர். நல்ல கறுப்பு நிறம். யானை மாதிரி இருப்பார். அவருக்கு ஐந்து வயதில் ஒரு குழந்தை இருந்தது. அந்தக் குழந்தை செல்லமாக வளர்ந்து வந்தது. சேவகனிடம் குழந்தையை விட்டு, "விலங்குக் காட்சிச் சாலைக்குக் கூட்டிச் போய் ஜாக்கிரதையாகக் கூட்டிக் கொண்டு வா" என்றார். அந்தச் சேவகன் தன்னுடைய குழந்தையையும் அழைத்துச் சென்றான். அங்கே யானையின்மேலே சிலர் தங்கள் குழந்தைகளை ஏறச் செய்து சுற்றிவரச் செய்தனர். பல குழந்தைகள் ஏறிக் களித்தன. சேவகன் தன் குழந்தையையும் யானையின்மேலே ஏறச் செய்தான். ஆனால் கலெக்டர் குழந்தையை ஏற்றினால் ஏதாவது ஆபத்து வந்து விட்டால் என்ன செய்வது என்று அஞ்சினான். அதனால் அந்தக் குழந்தையை மட்டும் யானையின் மேலே ஏற்றவில்லை. ஒரு குழந்தைக்குக் கிடைத்தது தனக்குக் கிடைக்காவிட்டால் உடன் இருக்கும் குழந்தை மிகவும் வருத்தப்பட்டு அழும். சேவகன் தன் குழந்தையை யானையின் மேலே ஏற்றினான், தன்னை ஏற்றவில்லையே என்று கலெக்டருடைய குழந்தை வீம்பு பிடித்து அழ ஆரம்பித்தது. மெல்லச் சமாதானம் செய்து குழந்தையைச் சேவகன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்தான்.

குழந்தை அழுததைக் கண்டு கலெக்டர் என்ன காரணம் என்று கேட்டார். சேவகன், "யானையின் மேல் ஏற வேண்டுமென்று சொன்னான். ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று பயந்து நான் ஏற்றவில்லை. அதனால் அழுகிறான்" என்று விளக்கினான்.

உடனே கலெக்டர் தம்முடைய சட்டையைக் கழற்றி விட்டு, கீழே குனிந்து கொண்டு, "நான்தான் யானை; என் மேல் ஏறிக்கொள்", என்று குழந்தையைத் தம் முதுகின் மேல் ஏற்றித்

தவழ ஆரம்பித்தார், அவர் எப்போதும் சட்டை முதலிய உடைகளைத் திருத்தமாக அணிந்து கொள்பவர். அத்தகையவர் அவற்றைக் கழற்றிவிட்டு, நாலு காலால் நடக்கும் யானையைப் போல நடந்தார் என்றால் அது அவருக்கு இழுக்கா? தம் குழந்தையிடம் அவர் கொண்டுள்ள சிறந்த வாத்சல்யத்தை அல்லவா அந்தச் செயல் காட்டுகிறது? அது போல் சிவபெருமான் அருள் நிரம்பி, ஆருயிர்களைக் காப்பாற்றுவதற்கு எத்தனையோ வகையில் தாழ்ந்து தாழ்ந்து வருகிறான். அப்படி அவன் மிகவும் இறங்கி வந்த செயலே இது.

அங்கவன் அருளின் நீர்மை யாரறிந் துரைக்கற் பாலார்?

என்று கச்சியப்பர் அதை நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

மன்மதன் உயிர் பெறல்

மேலே, திருமணத்திற்குரிய சடங்குகளைப் பெருமான் செய்தான். தன்னுடைய கணவனாகிய மன்மதனை இழந்த இரதி அங்கே போய், "எம்பெருமானே! என் கணவனை உயிர்ப்பித்துத் தர வேண்டும்" என்று வேண்டினாள். ஆண்டவன் திருவுள்ளத்தில் நினைக்க மன்மதன் வந்தான். "இரதியின் பொருட்டாக உனக்கு உயிர் தந்தேன். நீ பண்ணியது தவறான காரியம். அதற்குரிய தண்டனையை உனக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆகவே இரதியின் கண்ணுக்கு மட்டும் நீ தோற்றுவாய். மற்றவர்கள் கண்ணுக்குத் தோன்றாமல் அநங்கனாக நீ உன் ஆட்சியை நடத்து" என்றான்.

எரிபுனை நமது நோக்கால் இறந்தநின் உடலம் நீறாய்
விரைவொடு போயிற் றன்றே; வேண்டினள் இரதி; ஆனாட்
குருவமாய் இருத்தி; ஏனை உம்பரோ டிம்பர்க் கெல்லாம்
அருவினை யாகி உன்றன் அரசியல் புரிதி என்றான்.

(திருக்கல்யாணப். 89.)

[எரி புனை நோக்கால் - தீயாகிய கண்ணினால். இருத்தி - இருப்பாய். உம்பரோடு இம்பர்க்கு - தேவலோகத்திலுள்ளவர்க்கும் இவ்வுலகத்தில் உள்ளவர்க்கும், அருவினையாகி - உருவம் அற்றவனாகி. புரிதி - செய்.]

இரதி தேவிக்கு இவ்வாறு அருள் புரிந்ததுபோல அங்குள்ள தேவர்களுக்கும் அவரவர்களுக்கேற்றபடி ஆண்டவன் அருள் செய்து

விடை கொடுத்தான். பிறகு எம்பெருமான் கைலாயத்திற்குச் சென்று அம்பிகையைப் பக்கத்தில் வைத்து அருள் பாலித்தான்.

இதுவரை ஆண் வேறு, பெண் வேறு என்று பிரிந்திருந்த உயிர்க்கூட்டங்கள் எல்லாம் எப்படி எப்படிச் சேரவேண்டுமோ அப்படிச் சேர்ந்து இன்பத்தை அடைந்தன. முன்பு ஆண் பெண் பக்கத்தில் இருந்தாலும் உறவு இல்லாமல், இன்பம் துய்க்காமல் இருந்தன. இப்போது இறைவனும், இறைவியும் இணைந்த பிறகு அவைகளும் இணைந்து இன்பம் துய்த்தன. ஆகவே, எம்பெருமானும், எம்பெருமாட்டியும் இணைந்திருப்பதற்குக் காரணமே உலகத்து உயிர்க்கூட்டங்கள் எல்லாம் ஆணும் பெண்ணுமாகக் கலந்து வாழவேண்டும் என்பதற்கே என்பது தெளிவாகும்.

திரு அவதாரம்

தேவர்கள் செயல்

இந்திரன் முதலிய தேவர்கள் மேரு மலையில் இருந்தார்கள். பார்வதி கல்யாணம் நிறைவேறிவிட்டதால், இனிமேல் இறைவன் ஒரு குழந்தையைத் தருவான் என்று அவர்கள் எண்ணினார்கள். எப்படியோ கஷ்டப்பட்டு மன்மதனைப் பலி கொடுத்து ஆண்டவனுடைய திருமணத்தை நிறைவேறச் செய்தார்கள். திருமணம் ஆனவுடன் குழந்தை பிறக்கும் என்று நினைத்தார்கள். குழந்தை பிறக்கவில்லை. பிரமன், விஷ்ணு, இந்திரன், தேவர்கள் எல்லாம் மேரு மலையில் குழுமித் தாங்கள் அசுரர்களால் நலிந்த கதையைச் சொல்லிக் கொண்டார்கள்.

"அசுரர்கள் தவம் செய்து வரம் பெற்றார்கள். அவர்களுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு இறைவன் நமக்குத் துன்பம் உண்டாகும்படி செய்தான். தக்கனுடைய யாகத்திற்குச் சென்றதனால் நமக்கு உண்டான பாவம் காரணமாக அந்தத் துன்பத்தைப் பட்டோம். மறுபடியும் நமக்கு வாழ்வு வேண்டுமென்று அவனை வேண்டிக்கொள்ள, அவன் திருவருள் பாலித்துப் பார்வதியைக் கல்யாணம் செய்து கொண்டான். இனிமேல் மறுபடியும் பெருமானிடத்தில் சென்று நம்முடைய குறையை விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். யாரை அனுப்புவது?" என்று யோசித்தார்கள்.

பிரமன் வாயுவைப் பார்த்துப் போகச் சொன்னான். அவன் அஞ்சினான்.

பல்இதழ் வனச மேலோன் இனையன பகர, நோன்றாள்
வில்லுடை மதன வேளை விழித்தடு கடவுள் முன்னம்
செல்லுவ தரிது ; செல்லில் தீமையே பயக்கும் என்பால் ;
ஒல்லுவ தன்றிச் செய்கை ; உள்ளமும் வெருவு மென்றான்.

(திருவவதாரப், 7.)

[வனசம் - தாமரை. நோன் தாள் - வலிய காலை உடைய. ஒல்லுவது - செய்ய முடிவது.]

பிரமன் வற்புறுத்தியதனால் வாயு மந்தமாருதமாகக் கைலாசத்திற்குச் சென்றான். வாயிலில் இருந்த நந்தி உரப்ப, வீழ்ந்துவிட்டான். பிறகு மெல்ல எழுந்து நந்தியிடம் உண்மையைச் சொல்ல, " நீ போ ;

இனி வராதே" என்று அவன் சொல்லி அனுப்பினான். தேவர்கள், "எல்லோரும் சேர்ந்து முறையிட்டால் ஆண்டவன் இரங்குவான், வாருங்கள்" என்று சொல்லி யாவரும் புறப்பட்டார்கள்.

மன்னிய கயிலைமால் வரையின் யாமெலாம்
இன்னினி ஏகியே ஈசன் தன்முனம்
உன்னருங் காலமொ டுற்ற நம்குறை
பன்னுதல் துணிபெனப் பலரும் கூறினார்.

(திருவவதாரப். 24.)

[இன்னினி - இப்போதே.]

'கைலை மாமலை சென்று சரியான காலத்தில் எம்பெருமானிடம் எல்லோரும் சொன்னால் நன்மை உண்டாகும். தனி ஒருவராகச் செல்வதைவிட எல்லோரும் சேர்ந்து சென்றால் எல்லோருடைய மனத்தில் உள்ளதையும் புரிந்துகொண்டு அருள் செய்வான்' என்று நினைத்தார்கள்.

எல்லோரும் நந்திதேவரிடம் சென்று தாங்கள் வந்த காரியத்தைச் சொன்னார்கள். நந்தியும் சிவபெருமானிடம் சொல்ல, "உள்ளே அனுப்புக" என்று எம்பெருமான் ஆணையிட, எல்லோரும் உள்ளே சென்றார்கள்.

தேவர்கள் செய்த துதி

போனவுடன் எம்பெருமானைத் தேவர்கள் தோத்திரம் செய்யத் தொடங்கினார்கள். புராணங்களில் இப்படி இடையிடையே பல துதிகள் வரும். அவை இறைவனைப் பற்றிய உண்மைகளை நன்கு தெரிவிக்கும்.

நோக்கினும் நுழைகிலை ; நுவலு கின்றதோர்
வாக்கிலும் அமைகிலை ; மதிப்ப ஒண்கிலை;
நீக்கரும் நிலைமையின் நிற்றி ; எந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ.

(திருவவதாரப். 32.)

[நோக்கினும் - கண்ணினால் காணும் காட்சிக்குள்ளும். மதிப்ப ஒண்கிலை - நினைத்துப் பார்க்கவும் முடியாதவனாக இருக்கிறாய். நிற்றி - நிற்கிறாய்.]

'உன்னைப் பார்க்க நினைத்தாலும் பார்வையில் அடங்குவது இல்லை. கண் என்னும் பொறியால் உன்னை அளக்க முடியாது. கண்ணினால் பாராததை வாக்கினால் சொல்லலாம். இமாசல மலையைப் பார்க்க

13

முடியாவிட்டாலும் அதைப் பற்றிய வருணனையை விளங்கும்படி சொல்லலாம் அல்லவா? அப்படி உன்னை வாக்கினல் சொல்லலாம் என்ருல் நீ வாக்குக்கு அப்பாற்பட்டவனுக இருக்கிருய். மனத்திற்கும் அப்பாற்பட்டவனுக விளங்குகிருய். ஆகவே மனத்திலும் நினைக்க முடியவில்லை' என்று துதித்தார்கள்.

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ:"

என்று வேதம் சொல்கிறது. கண்ணுக்கும், வாக்குக்கும், மனத்திற்கும் அப்பாலாய் இருக்கிருன் இறைவன். அவன் அசைக்க முடியாத வனுக இருக்கிருன்; நிலையாக இருக்கிருன். அதனுல் அவனுக்கு ஸ்தாணு என்று பெயர். இரும்புத் தூண் எப்படி இருக்குமோ அப்படி ஆடாமல், அசையாமல் இருக்கிறவன் ஆண்டவன்.

இந்திர பதவியில் இருப்பவனுக்கு ஒரு காலவரையறை உண்டு. அந்தக் காலம் வரையில் அவன் வாழ்வான். அவன் போன பிறகு வேறு இந்திரன் வருவான். இப்படியே வெவ்வேறு பதவியிலுள்ள தேவர்கள் அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் போய்விடுவார்கள். ஆனல் பரமசிவனே எல்லாக் காலத்திலும் இருப்பான். யாராலும் அவனை நீக்க முடியாது. சில பதவிகளுக்கு மூன்று வருஷம், ஐந்து வருஷம் என்று வரையறை உண்டு. இந்திர பதவி முதலியவைகளுக்கும் அப்படி வரையறை உண்டு. பரமசிவ பதவி அத்தகையதன்று.

நீக்கரும் நிலைமையின் நிற்றி; எந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ

என்கிருர்கள் தேவர்கள். "உன்னை மாற்றவே முடியாது. நீ எல்லாவற்றையும் மாற்றுவாய். ஆனல் நீ மாற்றப்படுவதில்லை. உன்னை மாற்றுவார் யாரும் இல்லை. இதெல்லாம் பெரிய மாய மாய் இருக்கிறது" என்று புகழ்ந்தார்கள்.

மற்ருெரு பாடல் வருகிறது. 'அது மிகச் சிறந்த கருத்துக்களைச் சொல்வது.

உருவொடு தொழில்பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பது,
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணைய தேஅலால் கருமம் யாவதே?"

(திருவவதாரப். 31.)

[பரித்து - தாங்கி.]

புராணங்களைப் படிப்பதில் தத்துவங்களைத் தெரிந்துகொள்வது மிக மிக அவசியம். இந்தத் தோத்திரப் பாடலில் அழகான தத்துவம் ஒன்றுண்டு. "உனக்கு ஓர் உருவம் கிடையாது. ஒரு நாமமும் இல்லை. நீ ஆயிரம் நாமங்கள் தாங்கி இருக்கிறாய். பல வடிவங்கள் ஏற்றிருக்கிறாய். ஐந்தொழிலையும் ஆற்றுகிறாய். உனக்கு ஒரு தொழிலும் கிடையாது. சும்மா இருக்கிறவன். அப்படி இருந்தும் ஐந்தொழில்களையும் செய்கிறாய்."

உருவ வழிபாடு

பெயர் இல்லாதவன் பல பெயர்களைத் தாங்குவதும், உருவம் இல்லாதவன் பல உருவங்களைத் தாங்குவதும் எதற்காக? நமக்கு இத்தகைய சந்தேகங்கள் உண்டாகின்றன. அதற்கு இந்தப் பாடலில் விடை இருக்கிறது.

"உலகத்திலே தோன்றியுள்ள உயிர்க்கூட்டங்கள் எல்லாம் உன்னை உபாசனை செய்து வீடு பேற்றை அடைவதற்கே நீ இவ்வாறு செய்கிறாய்" என்றார்கள் தேவர்கள்.

மிகவும் வேகமாகச் செல்கின்ற எக்ஸ்பிரஸ்ஸை நாம் நினைத்தால் அதன் வேகந்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு பாலம் வேலை நடக்கும் இடத்தில், "ஐந்து மைல் வேகம்" என்று பலகை போட்டிருப்பார்கள். அங்கே அந்த வண்டி ஐந்து மைல் வேகத்தில் போகும். கட்டைவண்டி கூட அப்படிக் கணக்காக மெல்லப் போக முடியாது. எக்ஸ்பிரஸ்ஸை நினைத்தால் அதன் வேகம் நமக்கு நினைவு வருகிறதேயன்றி, அது மெல்லவும் போகும் என்பது நினைவுக்கு வருவதில்லை. இக்கரைக்கும் அக்கரைக்கும் பாலம் போட வேண்டிய இடத்தில் வேகமாகச் செல்கிற எக்ஸ்பிரஸ் மெதுவாகவும் போகும் என்ற உண்மை நமக்குத் தெரிகிறது. அப்படி உயிர்க் கூட்டங்களை இக்கரையிலிருந்து அக்கரை சேர்ப்பதற்குப் பாலம் போடுவதற்காக, ஆண்டவன் தனக்கென்று உருவம் இல்லா விட்டாலும் அவர்களுக்காக உருவோடு வருகிறான். தனக்கென்று ஓர் உருவம் இல்லாமல் இருப்பதனால்தான் அவன் பல்வேறு உருவங்களை எடுக்கிறான்.

நான் ஏன் கார் வாங்கக்கூடாது என்று என்னைச் சிலபேர் கேட்பார்கள். "எனக்கென்று ஒரு கார் இருந்தால் அதில்தான்

போவேன். எனக்கென்று ஒன்று இல்லாமையினல் பல ஊர் களிலும் உள்ள நண்பர்கள் தம் கார்களைக் கொடுக்கிருர்கள். நான் பல கார்களில் போகிறேன்" என்று சொல்வேன். அதேபோல் ஆண்டவன் எத்தனையோ வகையான உருவத்துடனும், பல பல பெயர்களுடனும் வருகிருன்.

இறைவன் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காகப் பல வகையான ஆராய்ச்சிகளைச் செய்து வழிபட்டிருக்கிருர்கள் நம் நாட்டுப் பெரியவர்கள். ஆண்டவனை நாம் மனத்தில் தியானம் பண்ண வேண்டும். தியானம் பண்ணுவதற்கு வடிவம் இருந்தா லன்றி முடியாது. மனித மனத்தின் இயல்பு இது. நாம் எதை யாவது நினைப்போமானுல் அதற்கு வடிவம் இருந்தால்தான் மனத் தில் பதியும். இது இந்து சமயத்திற்கு மாத்திரம் உள்ள தத்துவம் அன்று. மனித இயல்பு இது. மனித உள்ளம் வடிவம் இல்லாத ஒன்றைப் பற்ருது.

தண்ணீரை H_2O என்கிருர்கள். ஹைட்ரஜன் இரண்டு பங்கும், ஆக்ஸிஜன் ஒரு பங்கும் சேர்ந்தால் தண்ணீர் ஆகும். இந்த வாயு மேலே எங்கேயும் இருக்கிறது. கண்ணுக்குத் தெரிவதில்லை. இரண்டு வாயுவும் சேருகின்றன. அப்போது வெண் மேகம் உண் டாகிறது. குளிர்ந்த காற்றுப் பட்டவுடன் அது கறுப்பு மேகம் ஆகிறது. பின்பும் குளிர்ந்த காற்றுப் பட்டால் கனத்த மேகம் ஆகிறது. அந்தக் கனமான மேகம் மலைமேல் தங்குகிறது. மறுபடி யும் குளிர்ந்த காற்றுப் பட்டால் மழையாகப் பெய்கிறது. அந்த நீர் அருவியாக வந்து, ஆருகப் பாய்ந்து, கால்வாய் வழியே வந்து, தேக்கத்தில் நின்று, அங்கிருந்து குழாய் வழியே நம் வீடுமட்டும் வந்துவிடுகிறது. அந்தத் தண்ணீரைக் குழாய்த் தண்ணீர் என்று சொல்கிருேம். ஆனல் அது மேகத்திலிருந்து வந்த தண்ணீர்தான். குழாய் என்னும் கருவி வழியாக வந்ததனுல் குழாய்த் தண்ணீர் என்று சொல்கிருேம். 'எங்கள் வீட்டுக் குழாயில் மேகத்திலிருந்து தண்ணீர் வருகிறது' என்று சொன்னுல் விவரம் தெரியாதவர்கள் மயங்குவார்கள். உண்மை தெரிந்தவன் ஆம் என்பான்.

இறைவனுடைய வடிவத்தைக் காணும்போது மூலப்பொரு ளான பரமேசுவரனை நினைக்க வேண்டும். அவனே இப்படி வடிவு

எடுத்து நம் கைக்கு அகப்பட வந்திருக்கிருன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். தண்ணிய அருளினுல் இறைவன் இப்படி இறங்கி வருகிருன்.

பல்கலைக் கழகத்திலுள்ள சில மாணவர்கள் சிதம்பரத்தி லுள்ள நடராஜரைப் பார்க்க வருகிருர்கள். அவர்களுள் ஒருவர், "இது பஞ்சலோகத்தால் ஆனதா? அல்லது செம்பின் மேல் தங்க மூலாம் பூசியதா?" என்று கேட்கிருர். மற்ருெருவர், "தலையில் பாலை விட்டால் தூக்கின கால்வழியே வழியுமாமே; சென்டர் ஆப் க்ராவிடி எங்கே இருக்கிறது?" என்று கேட்கிருர். பின்னும் ஒருவர், "அந்த நடனம் எந்த வகை நடனம்?" என்று கேட்கிருர்.

இவர்கள் எல்லாம் நடராஜாவை உலோகமாகவும், செம் பாகவும், ஆடுகிற கூத்தாகவும் பார்க்கிருர்கள். அதே நடராஜ ரைக் கிழவர் ஒருவர் கண்டார். அவர், "ஆண்டவனே, ஐந்து கொடியவர்களாகிய ஐந்து இந்திரியங்களை வைத்திருக்கிற இந்த உடம்பே வேண்டாம்" என்று சொன்னவர். அவர் நடராஜரைப் பார்த்தார். "நான் சொன்னது தவறு. எனக்கு இந்த உடம்பு வேண்டும். உன்னைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தால் மனிதப் பிறவி வேண்டும்" என்று சொன்னுர்.

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றுல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

(அப்பர் தேவாரம்.)

அவர் பார்த்த முறை வேறு. மற்றவர்கள் பார்த்த முறை வேறு.

சிவபெருமானுடைய ஐந்தொழில்களையும் இந்த நடனத்தில் காணலாம். அப்படிப் பார்த்தால் ஆண்டவன் பெருமையை அறிய முடியும். கல்லாகவும், செம்பாகவும் பார்த்தால் நம் உள்ளத்தில் எந்த உணர்ச்சியும் தோன்ருது.

"அறிவுடைய நாம் கல்லையும், செம்பையும் பார்த்து விக்கிரகம் என்றுதானே நினைக்கத் தோன்றும்? எப்படி இறைவனைக் காண முடியும்?" என்று சிலர் கேட்கலாம். ஓர் உதாரணம் சொல் கிறேன்.

நான் இருநூறு ரூபாய் கடன் வாங்கி ஓர் அன்பருக்குப் பத்திரம் எழுதிக்கொடுக்கிறேன். அந்தப் பத்திரத்தைப் பாங்கில் கொடுத்தால் செல்லுமா? நூறு ரூபாய் நோட்டு ஒன்று நம்மிடம் இருக்கிறது. மற்ற நோட்டுகளும் இருக்கின்றன. அவை எல்லாம் ஒருவகையான ப்ராமிசரி நோட்டே. அதிலே எழுதியிருப்பதைப் பார்த்தால் தெரியவரும். 'I promise to pay the bearer the sum of Rupees hundred' என்றுதானே இருக்கும்? கீழே ரிசர்வ் பாங்க் கவர்னர் கையெழுத்துப் போட்டிருப்பார். அது நிச்சயமாக நாணயம் அல்ல. ஒரு வகையான ப்ராமிசரி நோட்டுத்தான். ஆனால் அதையே ரூபாயாக எண்ணுகிறோம். அது செல்லுமா என்ற சந்தேகம் நமக்குத் தோன்றுகிறது இல்லை. சில சமயங்களில் நாணயத்தைவிட நோட்டையே சுலபமாக எடுத்துக்கொண்டு போகிறோம். இப்படி ப்ராமிசரி நோட்டையே நாணயமாகப் பார்ப்பதற்குப் பகுத்தறிவு இடம் கொடுக்குமானால் இறைவனுடைய பிம்பத்தை இறைவனாகவே காண்பது முடியாத காரியமா? எல்லாம் நம்முடைய மனப்பான்மையைப் பொறுத்தது.

ஆகவே, ஆண்டவன் மனிதனுடைய மனத்திற்குள் புகவேண்டுமென்பதற்காக வடிவை எடுத்துக்கொள்கிறான். "அப்படியானால் மற்ற மதத்தினர்கள் பக்தி பண்ணவில்லையா? தியானம் பண்ணவில்லையா?" என்று கேட்கலாம். எல்லாச் சமயத்திலும் உண்மையான பக்தர்கள் இருக்கிறார்கள். இறைவனை மனமார நினைக்கின்ற கிறிஸ்துவர்களைப் போய்க் கேளுங்கள். "நீங்கள் தியானம் பண்ணுவது உண்டா? தியானம் பண்ணும்போது எதை நினைப்பீர்கள்?" என்று கேட்டால், "ஏசு பெருமானுடைய வடிவத்தை நினைக்கிறோம். மேரி அன்னையின் வடிவத்தை நினைக்கிறோம்" என்று சொல்வார்கள். முஸ்லிம்களும் கடவுளுக்கு வடிவம் இல்லையென்று சொல்கிறார்கள். அவர்களுக்குள்ளே இறைவனை நினைக்கிற பக்தர்களைப் போய்க் கேளுங்கள். "கண்ணை மூடித் தியானம் செய்தால் எது ஞாபகத்திற்கு வருகிறது?" என்று கேளுங்கள். "நான் மசூதியை நினைக்கிறேன்" என்று அவர் சொல்வார். வடிவம் இல்லாவிட்டால் மனத்தில் பதியாதது என்ற உண்மையை இந்தச் செயல்கள் காட்டும். நாம் நம் வீட்டில் நடராஜா படம்

வைத்திருக்கிறோம். முருகன் படம் வைத்திருக்கிறோம். இன்னும் பல படங்களை வைத்திருக்கிறோம். ஆண்டவனுக்கு வடிவம் கிடையாது என்று சொல்கிறார்கள் முஸ்லிம்கள். ஆனால் அவர்கள் மசூதியின் படத்தையும், குரான் வாக்கியங்களை வண்ண எழுத்தில் எழுதிய படங்களையும் வைத்திருக்கிறார்களே, ஏன்? கண்ணில் கண்டது மனத்தில் பதியும். காணவிட்டால் பதியாது. Out of sight out of mind. இது எல்லா மதத்திற்கும் பொதுவான தத்துவம். தோத்திரத்தைப் படிக்கிறோம். அந்த எழுத்தே ஓர் அடையாளந் தானே? இறைவன் தனக்கென ஒரு வடிவமும், நாமமும் இல்லா விட்டாலும் பலவற்றையும் அவன் எடுக்கிறான் என்று மாணிக்க வாசகர் சொல்கிறார்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."

பல வடிவம் ஏன்?

அடுத்தபடியாக ஒரு சந்தேகம். "ஆண்டவனுக்கு வடிவம் உண்டு அல்லது எடுக்கிறான் என்று ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இப்படிப் பல வடிவங்கள் எதற்காக? ஒரே ஒரு வடிவம் இருக்கக் கூடாதா?" என்று சில சீர்திருத்தவாதிகள் கேட்பார்கள். "ஆயிரம் தெய்வம் உண்டென்று கருதும் மூடர்களே" என்று மற்ற மதத்தினர் நம்மைக் குறை கூறும்போது நமக்குக் கூட அது நியாய மானதாகத் தோன்றுகிறது. எதற்காக ஆண்டவன் பல வடிவங்களை எடுக்கிறான் என்ற கேள்வி உள்ளத்தில் முளைக்கிறது. இதைக் கொஞ்சம் இங்கே பார்க்கலாம்.

மற்ற மதங்களுக்கும் நம் மதத்திற்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. செத்த பிறகே சிவலோகம், வைகுண்டம் அடையலாம் என்று எண்ணுவது அன்று நம் நாட்டுச் சமயம். இந்த உடம்பு இருக்கும்போதே திருவருளைப் பெற வேண்டும்; பெறலாம்.

"அம்ருதம் இக பவதி"

என்பது சுருதி.

"இத்தேகமொடு காண்பனோ"

என்று தாயுமானவர் குறிக்கிறார். இந்த உடம்பு இருக்கும் போதே

ஆண்டவனைக் கண்டு இன்பம் அநுபவிக்கும் நிலைக்கு ஜீவன் முத்தி என்று பெயர்.

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்லிந் திரியம் எல்லாம்ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே"

என்று **நம்மாழ்வார்** இதனைச் சுட்டிக் காட்டுகிறார். சாகாமலேயே மோட்ச இன்பத்தை அடையலாம் என்று சாத்திரங்கள் சொல்லுகின்றன.

ஆண்டவன் தொழுவதற் குரிய பொருள் மட்டும் அன்று; அநுபவிக்கும் பொருளாகவும் இருக்கிறான். மனிதன் ஒரு பொருளை எப்படியெல்லாம் அநுபவிக்கிறான் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இரண்டு படி அரிசியைச் சமைத்து இலையில் கொட்டினால் அது பெரிய விருந்து ஆகாது. நடுவில் போடுகிற சோறு கொஞ்சமாக இருந்தாலும், சூழ வைக்கின்ற பதார்த்தங்களினாலேயே விருந்து பெருமை அடைகிறது. எத்தனைக்கு எத்தனை அந்தப் பதார்த்தங்கள் அதிகமாகின்றனவோ அத்தனைக்கு அத்தனை விருந்துக்கும் பெருமை அதிகம். "ஐந்து பொரியல், ஆறு கூட்டு, இரண்டு மூன்று சாம்பார், விதம் விதமான பட்சணங்கள், பெரிய விருந்து ஐயா" என்று பாராட்டுகிறோம். "ஏன் இப்படிப் பல வகையாகப் பண்டங்களைச் செய்ய வேண்டும்? எல்லாம் ஒரு வயிற்றுக் குத்தானே போகின்றன? ஒரே உருண்டையாக உருட்டிச் சாப்பிட்டு விடலாமே" என்று கேட்கிறோமா?

மனிதன் அறிவுடையவன். சுவை உணர்விற் சிறந்தவன். மாடும் உண்கிறது. மனிதனும் உண்கிறான். எங்கள் வீட்டுக் கொல்லையில் கீரைப் பாத்தி பயிரிட்டிருந்தேன். தளதளவென்று கீரை வளர்ந்திருந்தது. அங்கே திருவாளர் மாட்டார் புகுந்தார்.—யாரையும் மரியாதையாகச் சொல்ல வேண்டிய காலம் இது. ஆகையால் மாட்

டையும் மாட்டார் என்று சொல்கிறேன். மாட்டார் உள்ளே புகுந்தால் தளதள என்று வளர்ந்திருக்கும் கீரையைப் பார்த்துச் சும்மா இருக்கமாட்டார். வேரையும், வேரடி மண்ணையும் நாவினல் பறித்து உள்ளே தள்ளுவார். மனிதன் உண்பது எப்படி? கீரையை எடுத்து வந்து, வேரை வெட்டி வெளியில் போட்டு, தண்டைத் தனியாகவும், இலையைத் தனியாகவும் எடுத்து, தண்டைக் குழம்பில் போட்டு, கீரையை மசியல் ஆக்குவான். பிற்பகலில் உண்பதற்குக் கீரையை எடுத்து வைத்து, கீரை வடை பண்ணி உண்பான். இப்படி மாடு அநுபவிக்கும் முறைக்கும், மனிதன் அநுபவிக்கும் முறைக்கும் வேறுபாடு இருக்கிறது. ஏன்? மாடு பசிக்கு மாத்திரம் உண்கிறது. மனிதன் ருசிக்கும் உண்கிருன். பல விதமான ருசி அவனுக்குத் தேவைப்படுகிறது.

'Variety is the spice of life'

என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அநுபவிக்கும் பொருள் பல வகையாக இருந்தால் மனிதனுக்குக் கவர்ச்சி அதிகமாகிறது. ஆண்டவன் அநுபவிக்கும் பொருளாக வரும்போது பல வகையாக இருந்தால் ஈடுபாடு அதிகமாகும் அல்லவா?

எல்லோருக்கும் ஒரே மாதிரி தியான மூர்த்தி வாய்த்தால் எல்லோரும் ஒரு சீராக ஈடுபாடு கொள்ளமாட்டார்கள். சிலருக்கு இறைவனைக் குழந்தையாக வைத்துத் தியானிப்பதில் விருப்பம் இருக்கும். சிலருக்கு இறைவனைப் பெரியவராக வைத்துத் தியானம் பண்ணவேண்டுமென்று தோன்றும். மனத்திற்கு மனம் வேறுபடுகிறது. அந்த அந்த மனத்திற்கேற்ப ஏதேனும் ஒரு வடிவத்தைப் பற்றிக்கொள்ளட்டும் என்று பல்வேறு வடிவங்களை இறைவன் எடுத்துக் கொள்கிருன். ஹிந்து மதத்தில் இப்படிப் பலவகையான உபாசன வடிவங்கள் இருப்பதனுல் அதற்கு இழுக்கு வந்துவிடாது. பெருமைதான் அதிகம்.

ஓரிடத்தில் அரிசி மாத்திரம் விற்கிருன். மற்ருேரிடத்தில் தேங்காய் மாத்திரம் விற்கிருன். பருப்பு விற்கும் கடை ஒன்று. புடலங்காய் விற்கும் கடை ஒன்று. இப்படி ஒவ்வொரு பண்டத்தையும் வாங்க ஒவ்வொரு கடைக்குப் போகவேண்டும். எல்லாச் சாமான்களும் ஒரே கடையில் கிடைத்தால் அது பெரிய கடை

அல்லவா? அதைத்தானே 'சூப்பர் மார்க்கெட்' என்று சொல்கிறோம்? அதேமாதிரி வெவ்வேறு வகையான மன இயல்புடைய மக்களுக்கு ஏற்ற பல்வேறு வடிவங்களையும், பெயர்களையும் ஆண்டவன் கொண்டிருப்பதாக உள்ள நமது சமயத்தை 'சூப்பர் ரிலிஜன்' (super religion) என்று ஏன் சொல்லக்கூடாது? சூப்பர் மார்க்கெட்டில் உள்ள எல்லாவற்றையுமா ஒருவன் வாங்குகிறான்? அவனவன் அவனவனுக்கு வேண்டியதை வாங்கிக்கொள்கிறான். அப்படியே இறைவனுடைய வடிவங்கள் எத்தனையோ இருந்தாலும் அவரவர்கள் மன இயல்புக்கேற்பப் பிடித்துக் கொள்கிறார்கள்.

ஆகவே, இறைவன் மக்களை ஆட்கொள்வதற்கு வெவ்வேறு மூர்த்திகளாக எழுந்தருளுகிறான். பல கோவில்களில் இருக்கிறான். பல நாமங்களைப் பெற்றிருக்கிறான். பல கோவில்கள், பலவகையான அருச்சனைகள் தனது பெருமையை மிகுதிப் படுத்துவதற்காக வேண்டும் என்ற எண்ணத்தினால் அவன் ஏற்றுக்கொண்டன அல்ல. உலகத்திலுள்ள உயிர்க்கூட்டங்கள் உய்ய வேண்டுமென்பதற்காகவே இப்படிச் செய்கிறான். இதையே,

உருவொடு தொழில்பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணையி தேயலால் கருமம் யாவதே

(திருவவதாரப், 34.)

என்ற பாட்டுச் சொல்கிறது.

திருக்கோவில்களுக்குச் சென்று ஆண்டவனைத் தரிசனம் பண்ணுகிறோம். எதற்காக? கண்ணிலே கண்டு அதோடு நின்றுவிடுவதற்கல்ல. ஓர் ஏழை ஒரு மிட்டாய்க் கடைக்குப் போகிறான். அங்கே பீரோக்குள்ளே வெவ்வேறு வண்ணம், வடிவம் உள்ள மிட்டாய்களை வைத்திருக்கிறார்கள். அந்த ஏழை ஒரு முறை இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை நடந்து போய் மிட்டாய்களைப் பார்க்கிறான். அவன் கையில் பணம் இல்லை. நாக்கில் நீர் ஊறுகிறது. எதையும் வாங்க முடியவில்லை. பேசாமல் வீடு போகிறான். நாக்கில் நீரோடு, வாங்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் கண்ணிலும் நீர் வருகிறது. அந்த மிட்டாய்களை அங்கே வைத்திருப்பது சும்மா பார்த்துச் செல்வதற்காகவா? பணம் உள்ளவர்கள் அவற்றைப் பார்த்து வேண்டி

யதை வாங்கி உட்கொள்ள வேண்டும். அப்படியே திருக்கோவில் களில் ஆண்டவன் திருவுருவத்தினைக் கண்ணால் கண்டு உட்கொள்ள வேண்டும். மனத்தில் கொண்டு தியானிக்க வேண்டும். இதை **அருணகிரிநாதர்,**

" கந்தன் என்றுற் றுனைநாளும்
கண்டு கொண் டன்புற் றிடுவேனோ?"

(திருப்புகழ்)

என்கிறார். காணுவது மாத்திரம் போதாது. பின்பு உட்கொள்ளவும் வேண்டும். உள்ளே நினைப்பதற்காகத்தான் வெளியில் தரிசனம் செய்கிறோம். கண்ணில் காணுதலைக் கருத்திலே நினைக்க முடியாது. ஆகையால் பல காலம் இறைவன் உருவத்தைக் கண்டு கண்டு மனத்தில் தியானம் செய்ய வேண்டும்.

" கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க "

என்று **திருவாசகம்** சொல்கிறது. புறத்தே எம்பெருமான் திருவுரு வத்தைத் தரிசித்துப் பின்பு அம் மூர்த்தியை உள்ளே தியானித்து இன்புறுவார்கள் அன்பர்கள்.

இப்படி நம்முடைய ஆலயத்தையும், விக்கிரகத்தையும் நினைந்து மகிழ்ச்சி அடையும்படியாக இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

பழமையும் புதுமையும்

மற்றும் ஒரு பாட்டு வருகிறது.

முன்னதின் முன்னென மொழிது மேஎனின்
பின்னதின் பின்னுமாய்ப் பேச நிற்றியால்;
அன்னவை யேயெனில் ஒழிந்த தல்லையோ?
என்னென நின்னையாம் ஏத்து கின்றதே.

(திருவவதாரப். 36.)

[முன்னதின் முன் - எல்லாவற்றிற்கும் முன்ளது என்று சொல்லும் பொருளை விட முன்னதாகிய பொருள். பின்னதின் பின் - பின்னே உள்ளதற்கும் பின் உள்ள பொருள்.]

'ஆண்டவனே, உன்னை நாங்கள் எப்படி ஏத்துவது?' என்று மயங்கு கிறார்கள் தேவர்கள். ஆண்டவன் பழைய பரமசிவம். அவன் எல்லோரும் தோன்றுவதற்கு முன்னே தோன்றினவன். பின்னால் வருகின்ற பல கோடி பேர்களுக்கும் பின்னாலே நிற்பவன். நடுவில் உள்ளவர்களுக்கு அவனும் நடுவில் நிற்கிறான். இப்படி மூன்று

காலத்திலும் இருக்கிறவன் அவன். மிக மிகப் பழையது என்று ஒன்றைத் தெரிந்து கொண்டு அதுதான் பழையது என்று நிலை நாட்டினால் அதற்கு முன்பாகவும் அவன் இருக்கிறான். இனிமேல் வரப்போகும் புதுமையைப் பற்றி எண்ணி ஒருவகையாகத் தீர்மானம் செய்து, இதுதான் மிகமிகப் புதிய பொருள் என்றால் அதற்கப்பாலும் மிகப் புதிய பொருளாக அவன் இருக்கிறான். இதனைத்தான்,

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே"

என்று மணிவாசகர் சொல்கிறார். இதையே இந்தப் பாட்டில் சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார். இந்தக் கருத்தை நாவுக்கரசர் மிக அழகாகச் சொல்கிறார்.

ஒரு பழைய ஆலமரம், நூறு வருஷங்கள் ஆனது. அதன் பழமையை மரத்தின் ஊடேயுள்ள வைரம் காட்டும். அதிலே புதுமையும் இருக்கிறது. புத்தம் புதியதாக அன்று தோன்றிய தளிர் ஆலமரத்தின் உச்சியில் இருந்து புதுமையைக் காட்டும். குருத்து அது; வெள்ளையாக இருக்கிறது; சிறிது நேரத்தில் இளம் பசுமை நிறம் கொண்டுவிடும். மிகப் பழமையான காலத்தைக் காட்டுவதற்குறிய வைரமும், மிகப் புதுமையைக் காட்டுவதற்குரிய குருத்தும் ஆலமரத்தில் இருக்கின்றன. ஆண்டவன் அப்படித்தான் இருக்கிறான். காலம் என்னும் மரத்தில் வைரமாக இருக்கிறான்; குருத்தாகவும் இருக்கிறான். இதை நாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் சொல்கிறார்.

"குருகாம் வயிரமாம்."

இவற்றையெல்லாம் அறிந்த கச்சியப்பர் அந்தக் கருத்தையே ஒரு முழுப் பாட்டில் சொன்னார்.

தேவர் வேண்டுகோள்

இவ்வாறு தேவர்கள் சிவபெருமானைத் தொழுது, புகழ்ந்து, பிரார்த்தனை செய்தபோது, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று இறைவன் கேட்க, அவனிடம் தேவர்கள் கூறத் தொடங்கினார்கள்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல, ஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால், நின்னையே நிகர்க்க என்றூர்.

(திருவவதாரப். 42.)

[ஏது - காரணம்.]

"பேதம் இல்லாமல் முழுமையாக இருக்கிற பெருமானே, உன்னைப் போல ஒரு குழந்தையை எங்களுக்கு நீ தரவேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

ஆறு பொறிகள்

அப்போது இறைவன் தன் அஞ்சு முகத்தோடு கீழே உள்ள அதோ முகத்தையும் தோற்றி ஆறு முகங்களிலும் உள்ள நெற்றிக் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகளைத் தோற்றச் செய்தான்.

வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர்செய் யற்க, புதல்வனைத் தருதும் என்னு
அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்.

(திருவவதாரப். 43.)

[இடர் செய்யற்க - வருந்தாதீர்கள். அந்திக்கு நிகர் மெய் - அந்தி வானத்துக்கு ஒப்பான சிவப்பு நிறத்தையுடைய திருமேனி. தொல்லை - பழமையான.]

பிரமன் முதலானவர்கள் வருத்தமுறுவண்ணம் அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுத் தன் பழைய ஆறு முகத்தோடு அந்தி வான் மேனி அண்ணல் ஒரு புதல்வனைத் தோற்றுவிக்க மனம் கொண்டான்.

ஆறு முகத்திலிருந்து பொறிகள் தோன்றின. அந்தக் கனல் எங்கும் படர்ந்து கைலாசம் முழுவதும் மண்டியது. அதைப் பார்த்து எல்லோரும் அச்சம் கொண்டார்கள். இந்திரன், வாயு, அக்கினி எல்லோரும் நடுங்கினுர்கள். எங்கே பார்த்தாலும் அந்தத் தீக் கொழுந்து படர்ந்தது. ஆனல் எந்த உயிரையும் கொல்லவில்லை. அது நன்மையை உண்டாக்க எழுந்த சுடர். தேவர்கள் அஞ்சினு லும் அவர்களுக்கு எந்த வகையான ஊறுபாடும் நேரவில்லை.

காரணம் இல்லவன் கண்ணில் கான்றதீப்
பேரருள் புரிந்திடப் பிறந்த பான்மையால்
ஒருயிர் தன்னையும் அழிவு செய்தில;
ஆரையும் எவற்றையும் அச்சம் செய்தவே.

(திருவவதாரப். 50.)

[கான்ற - வெளிப்பட்ட.]

இறைவன் உயிர்க்கூட்டங்களுக்கு அச்சத்தை உண்டாக்குவானேயொழியத் துன்பத்தை உண்டாக்கமாட்டான்.

அந்தக் கனலின் வெப்பம் கண்டு அம்பிகைக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. கால் சிலம்பு ஒன்ருேடொன்று தாக்க ஓடி அந்தப் புரத்தை அடைந்தாள்.

அப்போது தேவர்கள் எல்லாம், சிவபெருமானிடத்தில், "ஐயனே, நாங்கள் குழந்தை வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ள, பயங்கரமான தீயை எழுப்பிவிட்டாயே! நாங்கள் இனி எப்படி உய்தி அடைவோம்?" என்று வருந்தினுர்கள்.

வெந்திறல் அவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை அருள்கென வந்து வேண்டினேம்;
அந்தமில் அழலைநீ அருள்தல் செய்தனை;
எந்தையே எங்ஙனம் யாங்கள் உய்வதே?

(திருவவதாரப். 56.)

[அவுணரை - அசுரர்களை. வீட்டுதற்கு - அழிப்பதற்கு.]

"எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிப் பார்வதி அம்மையைக் கல்யாணம் செய்துகொண்டாய். ஆனுல் நாங்கள் கேட்ட மகவினைக் கொடுக்கவில்லையே!" என்று குறையிரந்தனர். தண்ணீர் வேண்டுமென்று சொன்னுல் கடப்பாரையையும், மண்வெட்டியையும் கொண்டுவந்து தருகிறமாதிரி தீப் பிழம்பு வந்து நிற்கிறது. அனல் வீசுகிறது, என்ன செய்வது? "எங்களுடைய குறையை முடித்தருள வேண்டும். சந்திரசேகரப் பெருமானே, பூமியையும், வானத்தையும் ஒரு கணத்தில் அழிப்பதுபோல இருக்கின்ற இந்தத் தியை நீக்கிவிட்டு எங்கள் கருத்தை முடித்துத் தரவேண்டும்" என்று வேண்டினுர்கள்.

நிறைமுடிப் பணிமிசை நிலனும் வானமும்
இறைமுடிக் கின்றஇவ் வெரியை நீக்கியே
பிறைமுடிக் கொண்டிடு பெரும, எம்முடைக்
குறைமுடித் தருள்எனக் கூறி வேண்டினர்.

(திருவவதாரப். 61.)

[நிறைமுடிப் பணிமிசை நிலனும் - நிறைந்த பல முடிகளையுடைய ஆதிசேடனாகிய பாம்பின்மேலுள்ள பூமியும். இறை - ஒரு கணத்தில்.]

'பிறைமுடிக் கொண்ட பெருமானே' என்று இங்கே சொல்கிறார்கள். "நீ எப்போதும் குளிர்ச்சியான சந்திரனைத் தரித்திருக்கிறவன் ஆயிற்றே. உன்னை அடைந்தால் குளிர்ச்சி பெறலாம். அப்படி இருக்க, இப்போது உலகத்தை எல்லாம் எரிக்கும் தீயை வெளியிட்டனையே!' என்ற குறிப்பை அதிலிருந்து பெறலாம். "நீ நினைத்தால் சந்திரனிலிருந்து அமுதத்தை வெளியிடலாமே" என்று சொல்வது போலவும் இருக்கிறது.

அஞ்சலி னவர்புகழ் அண்ணல் ஆதியோர்
அஞ்சலி செய்திவை அறைந்து வேண்டலும்
அஞ்சலி லம்சடை அணிந்த நாயகன்
அஞ்சலிர் என்றுகை அமைத்துக் கூறினன்.

(திருவவதாரப். 62.)

[அஞ்சு அல் - ஐந்து இரவு.]

திருமால் முதலியவர்கள் இவ்வாறு விண்ணப்பம் செய்தவுடன் சிவபெருமான் அபய ஹஸ்தம் காட்டி அஞ்சாதீர்கள் என்று சொன்னான்.

'அஞ்சலினவர் புகழ் அண்ணல்' என்று திருமாலைச் சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார். பாஞ்சராத்திரம் என்ற ஆகமத்தை ஐந்து ராத்திரிகளில் திருமால் சொன்னார். அந்தப் பாஞ்சராத்திரத்தைக் கற்ற வைணவர்கள் புகழ்கின்ற திருமால் என்று பொருள்.

அஞ்சலி லம்சடை அணிந்த நாயகன்

என்றும் கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார். வெப்பத்தால் வாடிய மனிதர்களுக்குத் தலையிலிருந்து கங்கையை விட்டுக் குளிர்ச்சி செய்தவன் அல்லவா? எம்பெருமானுக்கு வெப்பம் உண்டாக்கவும் தெரியும். குளிர்ச்சி உண்டாக்கவும் தெரியும். இப்போது குளிர்ச்சி உடைய செயலைச் செய்யப் போகிறான். ஆதலால்,

அஞ்சலி லம்சடை அணிந்த நாயகன்
அஞ்சலிர் என்றுகை அமைத்துக் கூறினன்

[அம் சலிலம் - அழகிய தண்ணீரை.]

என்று பாடினர்.

அந்தத் தீப்பொறிகள் தன் முன்னே வரவேண்டுமென்று இறைவன் நினைத்தான். அவை பண்டுபோல் ஆறு பொறிகளாக வந்து சேர்ந்தன.

அந்தியம் பெருநிறத் தமலன் அவ்வகை
சிந்தைகொண் டிடுவழிச் செறிந்த பேரழல்
முந்தையின் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் குறுகலும் மகிழ்ந்து நோக்கினன்.

(திருவவதாரப். 65.)

[அந்தியம் பெரு நிறத்து அமலன் - அந்தி வான் போன்ற பெரிய சிவந்த நிறத்தையுடைய சிவபிரான். குறுகலும் - வந்தவுடன்.]

அந்த ஆறு பொறிகளையும் எம்பெருமான் பார்த்தான். வாயுவையும், அக்கினியையும் பார்த்து, " நீங்கள் இச்சுடரைத் தாங்கிச் சென்று கங்கையில் விடுங்கள் " என்றான்.

அவர்கள் அஞ்சி நடுங்கினர்கள். பிறகு இறைவன் திருவருளால் அவற்றை எல்லாம் தாங்குகின்ற ஆற்றலைப் பெற்றார்கள்.

ஆதகு காலையில் அமரர் தங்களுள்
ஓதகு செயலிலா உலவைத் தேவையும்
மூதகு தீயையும் முகத்தை நோக்குறு
மேதகு கருணையால் விமலன் கூறுவான்.

(திருவவதாரப், 66.)

[ஆதகு காலையில் - அந்தச் சமயத்தில், ஓதகு செயல் இலா உலவைத் தேவையும் - நீக்கமின்றி உலாவும் வாயு பகவானையும். மூதகு - பழைய.]

" அந்த ஆறு பொறிகளையும் தாங்குவதற்குப் பிரமன், நாரணன் முதலான தேவர்கள் யாரையும் பணிக்கவில்லையே ! அக்கினியையும், வாயுவையும் மட்டும் பணிப்பானேன் ?" என்று சற்றுச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு இறைவன் ஆணையிட்டதற்குக் காரணம் என்ன ? வாயு, அக்கினி, கங்கை, சரவணம் ஆகியவற்றின் சம்பந்தம் ஆறு பொறிகளுக்கும் உண்டாகின்றது. பஞ்சபூத சம்பந்தமுடைய உடம்போடு மக்கள் உலகில் பிறக்கிறார்கள். உயிர் தனியே வாழாது. உடம்புடன் வாழவேண்டும். அந்த உடம்பு ஐந்து பூதங்களின் இணைப்பால் ஆனது. முருகப்பெருமான் அத்தகைய மக்களை

ஆட்கொள்வதற்காகத் தானும் பஞ்சபூத சம்பந்தம் உடையவனாக எழுந்தருளுகிறான். சிவபெருமானாகிய ஆகாசத்தில் தோன்றி, வாயுவாலும் அக்கினியாலும் தாங்கப்பட்டு, கங்கை என்னும் அப்புவின் தொடர்பையும் பெற்று, சரவணப் பொய்கையின் நடுவில் திட்டாகிய பிருதிவியில் வந்து அமர்கிறான். இது ஆண்டவனுடைய பஞ்சபூத சம்பந்தம். நமக்கெல்லாம் சிறிய அளவில் பஞ்சபூத சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இறைவனுக்கோ பஞ்சபூதங்களேயான மூர்த்திகளோடு அகண்டமான சம்பந்தம் உண்டாயிற்று.

இவ்வாறு வாயுவும் அக்கினியும் கங்கையில் ஆறு பொறிகளை விட, கங்கை சரவணப் பொய்கையில் கொண்டுபோய் விட்டவுடன் முருகப் பெருமான் திரு அவதாரம் செய்தான்.

அவதாரம்

முருகன் அவதாரத்தைச் சொல்கிற பாட்டு மிகவும் அருமையானது.

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய.

(திருவவதாரப். 92.)

கருணைகூர் என்ற தொடரில் கூர் என்பது உள்ளது சிறத்தல் என்பதைக் காட்டும்.

"கூர்தல் உள்ளது சிறத்தல்"

என்பது **தொல்காப்பியம்.** சிவபெருமான் அருள் வடிவமாக இருக்கிறவன். அவனிடத்தில் நிரம்பக் கருணையிருக்கிறது. அவன் ஐந்து முகமும், பத்துக் கரங்களும் கொண்டவன், ஆனால் அந்த அருளை இன்னும் பல உயிர்கள் பெறவில்லை.

ஓர் ஆற்றில் ஐந்து அணைகளும், ஒவ்வொன்றுக்கு இரண்டாகப் பத்துக் கால்வாய்களும் இருக்கின்றன. பயிர்கள் தழைக்கின்றன. ஆனால் இன்னும் சில மேட்டு நிலங்களில் தண்ணீர் பாயவில்லை. புதியதாக மற்றோர் ஆற்றையோ, தண்ணீரையோ உண்டாக்க வேண்டியதில்லை. பாசனம் இன்னும் அதிகமாக வேண்டும். அதற்கு மற்றோர் அணை கட்டி, பின்னும் இரண்டு கால்வாய்களை வெட்டுகிறார்கள். இப்போது ஆறு அணைகளும், பன்னிரண்டு கால்வாய்களுமாக இருக்கின்றன. முன்பே பாய்ந்த நீர் இப்போது மிகுதியாகப் பாய்கிறது. பயிர்கள் மேலும் தழைக்கின்றன.

இதைப்போல அஞ்சு முகமும், பத்துக் கரங்களும் உடைய சிவபெருமானே ஆறு முகங்களும், பன்னிரண்டு கைகளும் உடையவனாக எழுந்தருளும்போது அருள் பாசனம் மிகுதியாகிறது. உயிர்கள் எல்லாம் உய்கிறார்கள்.

கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய

என்று இந்தக் கருத்தைச் சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார். சிவபெருமானை உபாசனை செய்வதைவிட ஆறுமுகனாக உபாசனை செய்யும்போது உள்ளே நன்றாகப் பதிகிறது. அதனால் அருளை விரைவில் பெறுகிறோம்.

பகவான் என்ற சொல்லுக்குப் பகத்தை உடையவன் என்று பொருள். பகம் என்பது ஆறைக் குறிக்கும். ஆறு குணங்கள் நிரம்பியவன் என்று பொருள். ஞானம், ஐசுவர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் என்பவை அந்த ஆறு. இந்த ஆறு குணங்களையும் ஆறு முகங்களாகக் கொண்டு வந்தான்.

ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகட் கருளு மாற்றல் அறுமுகம் கொண்டா னன்றே.

(திருவவதாரப். 94.)

[எல்லை தீர் – அளவுக்கு அப்பால் உள்ள; கால எல்லை, இட எல்லை அற்ற. சேய்க்கு - முருகனுக்கு.]

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினுல் அளக்கொ ணுமல்
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தில்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளி ஞனே.

(திருவவதாரப். 96.)

[வெறி கமழ் - மணம் வீசுகின்ற.]

வேதங்களாலும் ஆகமங்களாலும் அறிதற்கு அரியவன் ஆண்டவன்.

"அருமறைக் கறிவரும் அவனே"

(கம்பராமாயணம்)

என்ருர் கம்பர்.

"வேதங்கள், ஐயா எனஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

என்ருர் மாணிக்கவாசகர்.

பரஞ்சோதியார் ஒன்று சொல்கிருர். வேதம் இறைவனைச் சுட்டிக் காட்டுவது இல்லையாம்.

"அல்லையீ தல்லையீ தென்றரு மறைகளும் அன்மைச்
சொல்லி னல்துதித் திளைக்கும்இச் சுந்தரன்"

என்று அவர் பாடுவார்.

'நீ இந்தப் பொருள் அல்ல; இந்தப் பொருள் அல்ல' என்று வேதம் சொல்கிறதே யன்றி இதுதான் என்று சுட்டிச் சொல்ல வில்லையாம்.

இங்கே நமக்கு ஒரு சந்தேகம் தோன்றும். வேதந்தானே நம் மதத்திற்கு அடிப்படையான நூல்? அதுதானே இறைவனை நமக்குக் காட்டுகிறது? அதுவே இறைவனைக் காண முடியாது என்ருல் அந்த வேதத்தை நம்பி நமக்கு என்ன பயன்? இவ்வாறு ஐயம் தோன்றலாம். தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்குப் போகிறபோது சாலைகள் சில கூடும் இடத்தில் திருநெல்வேலி என்று பெயர் எழுதிய கைகாட்டி மரம் ஒன்று இருக்கிறது. வேறு கைகாட்டிகளும் உள்ளன. அந்தக் கைகாட்டியின் நீளம் இரண்டு

முழந்தான். திருநெல்வேலியைக் காட்டும் கைகாட்டியினால் வழியை உணர்ந்து காரில் போகிறவன் அந்தச் சாலையின் வழியே போவான். அந்தக் கைகாட்டியே திருநெல்வேலி வரைக்கும் வராது. அது போல் வேதம் இறைவனை அடைவதற்கு உரிய வழியைக் காட்டுமேயொழிய அதுவே இறைவன் வரைக்கும் வராது. அதனால் வேத நெறி, வேத மார்க்கம் என்று சொல்லுவது வழக்கம்.

சரவணம் என்னும் தொட்டிலில் முருகப் பெருமான் வீற்றிருந்தான்.

> **முடிபொரு தசையும் நாகர்**
> **முதியகால்; பலகை வையம்;**
> **தொடர்கரை மரனே வானம்**
> **தூங்குபன் ஞணம்; தெண்ணீர்த்**
> **தடமலர் பாய லாகச்**
> **சரவண மஞ்ச மீதில்**
> **அடைதரு மைந்தன் மென்கால்**
> **அசைப்பவீற் றிருந்தா னன்றே.**

(திருஅவதாரப். 98.)

[நாகர் - ஆதிசேஷன். தூங்கு - தொங்கும். நாணம் - சங்கிலி. பாயல் - படுக்கை. மஞ்சம் - தொட்டில். மென் கால் - தென்றற் காற்று.]

ஆதிசேஷன் அந்த மஞ்சத்தின் கால். இந்தப் பூமியே அதன் பலகை. கரையிலுள்ள மரங்களே கயிறு. தாமரைப் பூவே படுக்கை. இப்படிச் சரவணம் என்னும் மஞ்சத்தில் முருகப் பெருமான், காற்று வீசி அதை அசைக்க வீற்றிருந்தானும்.

"சரவணப்பூம் பள்ளியறை" என்று **சிலப்பதிகாரத்தில்** இளங்கோவடிகள் சொல்வார்.

> "திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
> அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர்கொங்கை
> விரும்பிக் கடல்அழக் குன்றழச் சூரழ விம்மிஅழும்
> குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என் றேதும் குவலயமே"

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

குழந்தை வெளியில் வந்தவுடன் முதலில் அழுகிறது. அது நம் நாட்டுக் குழந்தைக்கு மட்டுமல்ல; எல்லா நாட்டுக் குழந்தைக்கும் அதுதான் முதல் பேச்சு. அழவில்லையென்றால் குழந்தை ஆரோக்கியமாக இல்லையென்று பொருள். அழ அழக் குழந்தையின் நுரை

யீரல் விரியும். அதனல் வயசானவர்கள் ஒரு வீட்டில் குழந்தை பிறந்தால், "குழந்தை அழுதுகொண் டிருக்கிறதா?" என்று கேட்பார்கள். எம்பெருமானும் அழுதானும். அந்த அழுகை எங்கெங்கோ கேட்டு எதிரொலித்ததாம். கடலின் நடுவிலும், கிரௌஞ்ச கிரியிலும், சூரனுடைய காதிலும் சென்று விழுந்ததாம். அவர்கள் கேட்டு அழுதார்களாம், நமக்கு முடிவு காலம் வந்து விட்டதே என்று.

இப்படி இருந்த எம்பெருமான் ஆறு குழந்தைகளாக மாறி விளையாடல் புரிந்தான். கிருத்திகை மாதர் ஆறு பேர். ஏழு முனிவர்களில் வசிஷ்டருடைய மனைவி அருந்ததி எப்போதும் அவர் பக்கத்திலேயே இருப்பாள். சப்த ரிஷி நட்சத்திரக் கூட்டத்தில் வசிஷ்டர் பக்கத்தில் அருந்ததியைப் பார்க்கலாம். மற்ற முனிவர் களின் பத்தினிமார்கள் ஆறு பேரும் கார்த்திகை நட்சத்திரமாக விளங்குகிறார்கள். அவர்கள் தவம் செய்து முருகப் பெருமானை வளர்க்க வேண்டுமென்று வேண்டினார்கள். அவர்கள் விருப்பப் படியே ஆண்டவன் அவர்களுக்கு அந்த வரத்தைக் கொடுத் தருளினான்.

மறுவரும் ஆரல் ஆகும் மாதர்மூ விருவர் தாமும்
நிறைதரு சரவ ணத்தில் நிமலனை அடைந்து போற்ற
உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன் ஆத லாலே
அறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார் உருவம் கொண்டான்.

(திரு அவதாரப். 116.)

[ஆரல் – கார்த்திகை. உறுநர்கள் - தன்பால் வந்து அடைந்தவர்கள்.]

இந்த ஆறு பொறிகளால் உண்டான ஆறு திருக் குமாரர்களும் கார்த்திகை மாதர்களின் பாலை உண்டு வளர்ந்தனர்.

தம்பால் அடைந்தவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் தரக் கூடியவன் ஆண்டவன். கார்த்திகை மாதர்களின் விண்ணப் பத்தை ஏற்று ஆறு வேறு குழந்தைகளாக அவர்களிடம் பாலை நுகர்ந்து அவர்களுக்கு இன்பத்தை நல்கினான். அவர்களுடைய பாலை நுகர்ந்ததால் முருகப் பெருமான் அடைந்த இன்பத்தைவிடக் கார்த்திகை மாதர்களுக்கு உண்டான இன்பம் அதிகம். இறைவன் செய்கிற காரியங்கள் எல்லாம் தன்னைச் சார்ந்த பக்தர்கள் நலம்

பெறுவதற்காக என்பது இதனல் புலப்படும். அந்த ஆறு குழந்தைகளும் பல வகையான விளையாட்டுக்களைக் காட்டி மகிழ்ச்சியைக் கொடுத்தார்கள்.

ஆடலோர் உருவம், செங்கை அறையலோர் உருவம், நின்று
பாடலோர் உருவம், நாடிப் பார்க்கலோர் உருவம், ஆங்கண்
ஓடலோர் உருவம், ஓர்பால் ஒளிக்கலோர் உருவம், யாண்டும்
தேடலோர் உருவமாகச் சிவன்மகன், புரித லுற்ருன்.

(திருஅவதாரப். 121.)

[செங்கை அறைய - கைகளைக் கொட்ட ; சப்பாணி கொட்டல் என்று இதைச் சொல்வார்கள்.]

இந்தப் பாட்டில் ஏழு உருவங்கள் வருகின்றன.

யாண்டும் தேடவோ ருருவ மாகச்
சிவன்மகன் புரித லுற்ருன்

என்பதில் உள்ள உருவத்தைச் சிவனுக்கு அடை ஆக்க வேண்டும். ஓர் உருவம் ஆகு அச்சிவன் என்று பிரிக்கவேண்டும். பொதுவாகப் பார்த்தால் ஏழு உருவமாகச் சிவன் மகன் விளையாடல் செய்தான் என்று தோன்றும். ஆனல் ஏழாவது உருவத்தைச் சிவனுக்கு ஏற்றிப் பொருள் செய்தால் ஆறு உருவங்களே நிற்கும். ‘ திருமால் முதலியோர் எங்கும் தேடும்படியாகச் சுடருருவம் ஆகும் அந்தச் சிவன் ’ என்று பொருள் கொள்ளவேண்டும். இப்படி மயக்கம் வரும்படியாகப் பாடுவது புலவர் இயல்பு. மயக்கம் தெளிந்தால் இன்பம் மிகுதியாகும்.

வீரர்களின் தோற்றம்

கைலாசத்தில் விற்றிருந்த உமாதேவி அஞ்சி அந்தப்புரத்திற்கு ஓடியவள் முருகப் பெருமான் தோற்றத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள். முப்பத்து முக்கோடி தேவர்களின் முறையீட்டினாலே ஆண்டவன் அந்த ஆறு பொறிகளையும் அடக்கித் திரும்பப் பெற்றனன் என்பதை அறிந்து மீண்டும் எம்பெருமானிடத்தில் வந்தாள்.

நஞ்ச யின்றவன் நெற்றிநாட் டத்தினல் நல்கும்
வெஞ்சு டர்ப்பொறி வெம்மையை ஆற்றலள் விமலை,
செஞ்சி லம்படி தாக்கலின் நவமணி சிதற
அஞ்சி ஓடினள் ; இத்திறம் உணர்ந்தனள் அகத்துள்.

(துணைவர் வரு. 1.)

[நஞ்சயின்ற நீலகண்டத்து எம்மான் நெற்றி நாட்டத்துப் பொறிகள் எங்கும் சிதற, அதனைக் கண்டு அஞ்சிச் சிலம்பின் பரல்கள் சிதற, அந்தப்புரத்திற்கு ஓடியவள் பின்னால் நிகழ்ந்ததை அறிந்து கொண்டாள்.]

மாயவன் முதல் இந்திராதி தேவர்கள் எல்லாம் எம்பெருமானிடத்தில் வந்து, குழந்தையை அருள வேண்டுமென்று கேட்க, நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் எழுந்து சரவணப் பூந் தடாகத்தில் ஆறு குழந்தைகளாக, வீற்றிருந்தார்கள். ஆண்டவன் அருளால் ஆறு பொறிகளும் அவ்வாறு இருப்பதை அம்பிகை தெரிந்துகொண்டாள்.

அம்பிகை தந்த சாபம்

தாயும் தந்தையும் சேர்ந்துதான் குழந்தை பிறக்க வேண்டும். ஒருவனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தியிடம் சார்ந்து குழந்தை பிறந்தால் மற்றொருத்திக்குப் பொறாமை உண்டாகும். தனக்கு எம்பெருமான் மூலம் குழந்தை பிறக்காமல், இவ்வாறு நெற்றி நாட்டத்திலிருந்து குழந்தை பிறந்ததற்குக் காரணம் தேவர்களின் அவசரக்கோலமே என்று உணர்ந்தாள் எம்பெருமாட்டி. அப்போது, "தேவர்களின் மனைவிகளுக்கு எல்லாம் குழந்தை இல்லாது போகட்டும்" என்று சாபமிட்டாள்.

அன்ன தற்பினர் உமையவள், எனதுபால் அமலன்
தன்அ ருட்பெறு மதலைதோன் றுவகை தடுத்த
பொன்ன கர்க்கிறை விரிஞ்சன்மால் முதலபுத் தேளிர்
பன்னி யர்க்கெலாம் புதல்வரின் றுகெனப் பகர்ந்தாள்.

(துணைவர். 3.)

[மதலை - குழந்தை. பொன்னகர்க்கிறை - இந்திரன். விரிஞ்சன் - பிரமன். புத்தேளிர் - தேவர். பன்னியர் - மனைவிமார்.]

"இந்திரன், பிரமன், மால் போன்ற தேவர்கள் என்னிடத்தில் குழந்தை உண்டாகாமல் செய்தார்கள். அவர்களுடைய மனைவியர்களுக்குக் குழந்தை இல்லாமல் போகட்டும்" என்று சபித்தாள். அதுவரைக்கும் குழந்தைகள் உண்டு. மகாவிஷ்ணுவுக்குப் பிரமாவும், மன்மதனும் பிறந்தார்கள். பின்னர்க் குழந்தைகள் இல்லை. அப்போதே அம்பிகைக்குத் தெரியும், அதிகமான ஜனத்தொகை இருக்கக் கூடாது என்று. அதனால் கட்டுப்பாடு செய்துவிட்டாள் என்று தோன்றுகிறது. நாம் இப்போதுதான் குழந்தைக் கட்டுப்பாட்டை மேற்கொண்டிருக்கிறோம்.

அம்பிகை பரமேசுவரனிடம் வந்து தான் சென்று மீண்ட காரணத்தைச் சொன்னாள். "ஏன் போனாய், ஏன் வந்தாய்?" என்று ஆண்டவன் கேட்கவில்லை. "உம்பர்கள் குறைகளை விண்ணப்பித்தவுடன் ஆறு பொறிகளை நீங்கள் தோற்றுவிக்க, அதன் வெம்மையைத் தாங்காமல் நான் போனேன். மீண்டும் நீங்கள் அந்த வெம்மையை அடக்கியதனால் வந்தேன்" என்று அம்பிகை சொன்னாள். அப்போது பரமேசுவரன் களிப்பை அடைந்து அம்பிகையைத் தன் வாம பாகத்தில் அமர்த்திக் கொண்டான்.

கன்னி இங்ஙனம் பகர்தலும் கருணைசெய் தருளித்
தன்இ டத்தினில் இருத்தினன்.

(துணைவர். 6.)

இங்கே "கன்னி" என்று சொல்கிறார் ஆசிரியர். உயிர்கள் எல்லாம் அம்பிகையின் குழந்தைகளே. இவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் அம்பிகை கன்னிதான். அவள் திருவயிற்றிலிருந்து எந்தக் குழந்தையும் பிறப்பதில்லை. என்றாலும் உலகத்தை எல்லாம் அவள் பெற்றவள். இவ்வாறு சொன்னதற்குக் காரணம், எல்லாவற்றையும் உண்டாக்குகின்ற மூலப்பொருள் ஆதிசக்தி என்பது

தான். உலகத்து உயிர்களை எல்லாம் ஈன்றும் கூட அவள் கன்னி யாக இருக்கிறாள்.

"சிவன்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயிர் அனைத்தும் ஈன்றும்
பவன்பிரம சாரி யாவான் பான்மொழி கன்னி ஆவாள்"

என்று **சிவஞான சித்தியார்** சொல்கிறது.

நவசக்திகளின் தோற்றம்

எம்பெருமாட்டி வேகமாகப் போனபோது அவள் திருவடியில் அணிந்திருந்த சிலம்புகள் ஒன்றோடொன்று மோதி நவமணிகள் சிதறி விட்டன. அப்படிச் சிதறுண்ட நவமணிகளைப் பரமேசுவரன் பார்த்தான். அவற்றில் அம்பிகையின் பிம்பம் தோன்றின. இறைவன் பார்த்து, அந்தப் பிம்பங்களை நோக்கி, " நீங்கள் இங்கே வாருங்கள் " என்று அழைத்தான். ஒன்பது பிம்பங்களும் வடிவம் பெற்று அம்பிகையைப் போல எழுந்து வந்தன. ஒன்பது வகையான மணிகளிலிருந்து வந்த பெண்களும் ஒன்பது வகையான நிறங்களோடு இருந்தார்கள். முத்திலிருந்து வந்தவள் நித்திலவல்லி; பவளத்திலிருந்து வந்தவள் பவளவல்லி: மாணிக்கத்திலிருந்து வந்தவள் மாணிக்கவல்லி. இப்படியே கோமேதகத்திலிருந்து வந்தவள் கோமேதகவல்லி; வஜ்ரத்திலிருந்து வந்தவள் வஜ்ரவல்லி; நீலத்திலிருந்து வந்தவள் நீலவல்லி; புஷ்பராகத்திலிருந்து வந்தவள் புஷ்பராகவல்லி; வயிடூரியத்திலிருந்து வயிடூரிய வல்லியும் மரகதத்திலிருந்து மரகதவல்லியும் தோன்றினர். இப்படி ஒன்பது மாதர்கள், ஒன்பது வடிவத்தோடும், ஒன்பது நிறத்தோடும் இறைவன் முன்னால் வந்தனர்.

தளிரின் மெல்லடிப் பரிபுர மாயின தணந்து
மிளிரும் அந்நவ மணிகளின் ஆணையால் விமலை
ஒளிரும் நல்லுருத் தோன்றின, ஐம்முகத் தொருவன்
தெளிரு முச்சுடர் அகத்திடை அமர்ந்திடும் செயல்போல்.

(துணைவர். 7.)

[பரிபுரம் - சிலம்பு. தணந்து - நீங்கி. ஐம்முகத் தொருவன் - சிவபிரான்.]

இங்கே கச்சியப்ப சிவாசாரியார் ஓர் உபமானம் சொல்கிறார். அம்பிகையின் திருவடிச் சிலம்பிலிருந்து தெறித்த மணிகளில் அவளுடைய திருவுருவம் தோன்றியது எப்படி இருந்தது என்றால், சிவபெருமான் மூன்று சுடர்களிடையே அமர்ந்த செயல்போல இருந்தது என்று சொல்கிறார்.

சூரியன், சந்திரன், அக்கினி என்பன மூன்று சுடர்கள். சூரிய மண்டலத்து இடையிலும், சந்திர மண்டலத்து இடையிலும், அக்கினியின் நடுவிலும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கிருன். எங்கெங்கே ஒளி உண்டோ அங்கெல்லாம் இறைவன் அம்சம் இருக்கும். நாம் ஏற்றுகிற குத்து விளக்கிலும் ஆண்டவன் இருக்கிருன். வானத்தில் தோன்றுகிற இரண்டு சுடர்களிலும் அவன் எழுந்தருளியிருக்கிருன். இறைவனைப் பரஞ்சோதி என்று சொல்வார்கள். எல்லா வகையான ஒளிகளுக்கும் மூலமாகவும், மிகப் பெரிய சோதியாகவும் விளங்குபவன் அவன். அவன் சூரிய சந்திரர்களாகவும், விளக்கில் ஒளியாகவும் எழுந்தருளியிருக்கிருன். பரஞ்சோதி என்ற நிலையில் மனத்திற்கும், வாக்கிற்கும் அப்பாலாய் அவன் இருக்கிருன். காலம், தேசம் ஆகிய இரண்டு எல்லைகளையும் கடந்தது அது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி"

என்று **மாணிக்கவாசகர்** அந்த நிலையைச் சொல்கிருர். அது பெருஞ்சோதி, அருஞ்சோதியாகும். "பெருஞ்சோதியாக இருப்பதுவே அருஞ்சோதியாகவும் இருக்குமா?" என்று ஒருவர் கேட்கலாம். பெருஞ்சோதியாக இருப்பது நம் கண்ணுக்குத் தெரிய வேண்டுமென்பது அவர் எண்ணம். மின்சார விளக்குகளுக்கு எல்லாம் மூலமாக இருக்கிற மின் சக்தி ஜெனரேடரில் உள்ள மின்சாரம் கண்ணுக்குத் தெரியாது. அதுபோல் எல்லாச் சோதிகளுக்கும் மூலச் சோதியாக இருக்கிற பெருஞ்சோதி கண்ணுக்குத் தெரிவதில்லை.

பரஞ்சோதிக்கும், சூரிய சந்திரச் சுடர்களுக்கும் வேறுபாடு உண்டு. பரஞ்சோதி பொறிபுலன்களுக்கு அப்பால் இருக்கிறது. சூரிய சந்திரர்கள் நம்மால் காண்பதற் குரியவை. அவற்றை நாம் கண்ணல் காண்கிருேம். பரஞ்சோதிக்கு எல்லை கிடையாது. சூரிய சந்திரர்களுக்குக் கால எல்லை உண்டு; இட எல்லை உண்டு. வானத்தில்தான் சூரிய சந்திரர் இருப்பார்களே தவிர வீட்டுக்குக் கொண்டுவர முடியாது. வானம் என்ற இட எல்லை உடையவை அவை. இரவிலே சூரியன் வருவதில்லை; பகலில்தான் இருக்கும். அது கால எல்லை, காலதேச பரிச்சின்னம் என்று இந்த இரண்டு

எல்லைகளையும் சொல்வார்கள். பரஞ்சோதிக்கு எந்த விதமான எல்லையும் இல்லை. சூரிய சந்திரராகிய சுடர்களுக்குக் கால எல்லையும், இட எல்லையும் உண்டு. பரஞ்சோதியே சுடராக எழுந்தருளுகிறான். அவனே மறுபடியும் விளக்காக வருகிறான். விளக்கு எத்தகையது? அதுவும் சோதிதான்; ஆண்டவன் வடிவம்.

"தீப மங்கள ஜோதீ நமோ நம"

என்பர் **அருணகிரிநாதர்.**

விளக்குக்கும், சுடருக்கும் வேறுபாடு உண்டு. சூரிய சந்திரர்களை நாம் கண்ணால் காண முடியும். ஆனால் இரண்டையும் நம் வீட்டிற்குள் கொண்டுவர முடியாது. நமக்கு வேண்டிய காலத்தில் நமக்கு வேண்டிய இடத்தில் அழைத்துப் பயன் கொடுக்கும்படி செய்ய முடியாது. விளக்கோ அப்படி அன்று. நம் விருப்பப்படி எந்த இடத்திலும் ஏற்றலாம்; எந்தக் காலத்திலும் ஏற்றலாம். நம்முடைய வசதிக்கேற்றபடி இடம், காலம் என்னும் எல்லைகளுக்கு அகப்பட்டு வருவது விளக்கு. ஆனாலும் அந்த விளக்கிலுள்ள சுடர் நம்மாலே உண்டுபண்ணப்படுவதில்லை. திரியைத் திரிக்கலாம். எண்ணெய் ஊற்றலாம். விளக்கை உண்டு பண்ண முடியாது. ஆண்டவன் பரஞ்சோதியாகவும், சுடராகவும், விளக்காகவும் எழுந்தருளியிருக்கிறான். **மாணிக்கவாசகர்,**

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

என்று பாடுகிறார். சோதியாக இருப்பது சுடராக இறங்கி, பின்னும் விளக்காக இறங்கிவருகிற கருணைத் திறத்தைக் காட்டுவது அது. **அருட்பிரகாச வள்ளலார்** இதை வேறு ஒரு வகையில் சொல்கிறார். கீழே இருந்து மேலே போகிறார் அவர்.

"அருள்விளக்கே, அருட்சுடரே, அருட்சோதிச் சிவமே"

என்று சொல்கிறார்.

இவ்வாறு சூரியனிலும், சந்திரனிலும், விளக்கிலும் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதுபோல நவமணிகளுக்குள் எம்பெருமாட்டியின் வடிவம் தோன்றின என்றார் சிவாசாரியார். ஏன் இந்த உபமானத்தைச் சொல்ல வேண்டும்? பரமசிவனும், பராசக்தியும் ஒரே மாதிரி இருப்பவர்கள். அவன் எப்படியெல்லாம் இருக்கிறானே,

அம்பிகை அப்படியெல்லாம் இருப்பாள். அவன் முச்சுடரின் நடுவில் இருப்பதுபோல, அம்பிகை நவமணியின் நடுவில் இருக்கிருள்.

இலக்க வீரர் தோற்றம்

நவமணிகளிலிருந்து வந்த நவசக்திகளை இறைவன் தன்பால் அழைக்க, அவர்கள் அவனடியில் வந்து வணங்கினர்கள்.

பருப்ப தக்கொடி புரைநவ சத்திகள் பரமன்
திருப்ப தத்திடை வணங்கிநின் றவனிடைச் சிந்தை
விருப்பம் வைத்தலும், முனிவர்தம் மகளிர்போல்
விரைவில்
கருப்ப முற்றனர் ; யாவதும் உமையவள் கண்டாள்,

(துணைவர். 9.)

[பருப்பதக்கொடி - பார்வதி. புரை - ஒத்த.]

ஒன்பது மணிகளிலிருந்து வந்த பெண்கள் நிமிர்ந்து ஆண்டவனுடைய அற்புதமான வடிவத்தைப் பார்த்தார்கள். இறைவன் பேரழகு உடையவன். 'சிவம் சுந்தரம்' என்று வேதம் சொல்லும். அவனுக்குச் சுந்தரமூர்த்தி என்ற பெயரும் உண்டு. மகா சுந்தர மூர்த்தியாகிய ஆண்டவனைப் பார்த்து ஒன்பது பெண்களும் வணங்கினுர்கள். அவன் அழகில் அவர்கள் மனம் ஈடுபட்டன. அப்படிப் பார்த்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் ஏற்பட்டது. இதை ரிஷி கர்ப்பம் போன்றது என்கிருர் கச்சியப்ப சிவாசாரியார்.

உமாதேவி இதனைக் கண்டாள். வயிற்றெரிச்சலுக்கு இது போதாதா ? தனக்குக் குழந்தை இல்லாமல் போய்விட்டது. ஆனல் நவசக்திகளுக்கு உண்டாகிவிட்டன. இதைக் கண்டு அம்பிகை மேலும் கோபமுற்ருள். முன்னுலே தாபத்தோடு விளங்கினுள். தேவர்களுடைய மனைவியர்களுக்குக் கர்ப்பம் உண்டாகக் கூடாதென்று முதலில் சாபம் இட்டிருக்கிருள். இப்போது நவசக்திகளுக்குக் கர்ப்பம் உண்டாகியிருக்கிறது. அதனல் சினந்து, "உண்டான கர்ப்பத்திலிருந்து குழந்தைகள் பிறத்தல் கூடாது" என்று சாபமிட்டாள்.

முனம்பு ரிந்துல களித்தவள் அனையர்பால் முதிரும்
சினம்பு ரிந்திவண் எமக்குமா ருகிய திறத்தால்
கனம்பு ரிந்தஇக் கருப்பமோ டிருத்திர்பல் காலம்
இனம்பு ரிந்தநீர் யாவரும் என்றுசூள் இசைத்தாள்.

(துணைவர். 10.)

[புரிந்து - விரும்பி. அனையர்பால் - அந்த நவசக்திகளிடம். சினம் புரிந்து - கோபங்கொண்டு. கனம் - பாரம். இனம் புரிந்த - கூட்டமாக உள்ள. சூள் - சாபம்.]

'முன்பு உலகத்தை எல்லாம் அளிக்க வேண்டுமென்ற ஆசையோடு அளித்தவள்' என்று சிவாசாரியார் சொல்கிறார். முன்பு விரும்பி அளித்தவள் இப்போது சினக்கிறாள். நவசக்திகளின் மீது உண்டான கோபத்திலே, "எனக்கு மாறாக வந்த நீங்கள் பல காலம் இந்தக் கர்ப்பத்தோடு விளங்குங்கள்" என்று சாபமிட்டாள். அந்த ஒன்பது பேர்களுடைய கர்ப்பத்திலும் நவ வீரர்கள் இருந்தார்கள்.

ஆவ தெல்லையில் நடுக்கமுற் றஞ்சியே அங்கண்
மேவு மாதர்மெய் வியர்த்தனர்; அவ்வியர்ப் பதனில்
தேவ தேவன தருளினால் தினகரத் திரள்போல்
ஓவி லாவிறல் வீரர்கள் இலக்கர்வந் துதித்தார்.

(துணைவர். 11.)

[ஆவ தெல்லையில் - அப்போது. தினகரத் திரள்போல் - சூரியர் பலரின் கூட்டம் போல்.]

அம்பிகை இவ்வாறு சொன்னவுடன் அந்த ஒன்பது மாதர்களுடைய உடம்பெல்லாம் நடுங்கி வியர்வைத் துளிகள் உண்டாயின. கர்ப்பம் உண்டான மங்கையர்க்கு அச்சம் எளிதில் உண்டாகும். குழந்தைகளை வயிற்றில் வைத்துள்ளதை நினைத்ததால் அவர்களுக்கு அந்த நடுக்கம் உண்டாயிற்று. அந்த வேர்வைத் துளி ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு வீரராக லட்சம் பேர் வந்து குதித்து விட்டார்கள். அவர்கள் எல்லாம் ஓடிவந்து பரமேசுவரன் பாதத்தில் வணங்கினார்கள். அவர்களை நோக்கிப் பரமேசுவரன், "மைந்தர்களே, நீங்கள் யாவரும் என் புதல்வனாகிய கந்தவேளுக்குப் படைவீரர்களாக விளங்கி, அவன் ஏவியதைச் செய்துகொண்டிருப்பீர்களாக!" என்று பணித்தான்.

மைந்தர் கேண்மினோ: நீவிர்கள் யாவரும் வயத்தால்
இந்தி ராதியர் பகைவரை அடுவதற் கெமது
கந்த வேள்படை ஆகுதிர், என்னவே கழறி,
முந்து பேரருள் புரிந்தனன் யாவர்க்கும் முதல்வன்.

(துணைவர். 14.)

[வயத்தால் - பலத்தினால். இந்திராதியர் பகைவரை - அசுரர்களை. படை - சேனை.]

சிவபெருமானுடைய பார்வை பட்டு உண்டான நவசக்திகளின் வியர்வையிலிருந்து அவர்கள் தோன்றினமையால் பரமேசுவர

னுக்குப் புத்திரர்கள் ஆகிவிட்டார்கள். இதைவிட வேறு பாக்கியம் என்ன வேண்டும்? "உங்களுடைய பலத்தினுல் அசுரர் பலத்தை அழிக்கக் கந்தவேளின் படைவீரர்களாக ஆகுங்கள்" என்று பணித்தான்.

நவவீரர்களின் தோற்றம்

இகலும் மாமணி மகளிர்தம் கருவினுள் இறைவற்
புகழும் நந்தியங் கணத்தவர் குழவியாய்ப் போந்து
நிகரில் காளையர் ஆகிவீற் றிருந்தனர், நெறிசேர்
சுகன்என னும்படி பரமனை முன்னியே தொழுது.

(துணைவர். 17.)

[இகலும் - ஒன்ருேடு ஒன்று வேறுபட்ட. கருவினுள் - கருப்பத்தில்.]

நவசக்திகளுடைய கருவிலேயே பரமேசுவரனைப் புகழ்ந்து கொண்டு குழந்தையாக இருந்தவர்கள் நாளடைவில் அங்கேயே வளர்ந்து காளையாகிவிட்டார்கள். அவர்கள் நந்திதேவனைத் தலைவ ஞகக்கொண்ட சிவகணங்கள். உமாதேவியின் சாபம் இருந்ததனுல் அவர்களால் வெளியே வர முடியவில்லை. கர்ப்பத்திற்குள் இருந்த தனுல் வேறு விதமான கவர்ச்சி இல்லை. அவர்கள் இறைவனைத் துதித்துக்கொண்டு இருந்தார்கள், சுகப்பிரம்ம ரிஷி போல. அங் கேயே வளர்ச்சி பெற்றிருந்தார்கள். பூமியில் பிறந்தால்தான் நம்முடைய உள்ளம் சிதைந்துபோவதற்கான நிகழ்ச்சிகள் உள்ளன. சினிமா, டிராமா என்று நம்முடைய கவனத்தை இழுப்பதற்கு எத்தனையோ பொருள்கள் உள்ளன. நவசக்திகளின் திருவயிற்றில் இருந்த அந்தப் பிள்ளைகளுக்கோ எந்த விதமான போக்கும் இல்லை. ஆகையால் மானசிகமாகத் தவம் செய்கின்ற பக்குவம் வந்து விட்டது. அந்தப் பக்குவமே அவர்கள் வெளியில் வந்த பிறகும் தொடர்ந்தது.

சுகப்பிரம்மம் பிறந்தவுடன் மகாஞானியாக இருந்தார். தகப்ப ஞரை விட்டு ஓடத் தொடங்கினுர். பிறந்தவுடன் சுகப்பிரம்மம் ஓடினுர் என்ருல் அதற்கேற்றபடி அவ்வளவு காலம் வயிற்றில் வளர்ந்துவிட்டார் என்று தெரிந்து கொள்ளவேண்டும். ஓடும் அவரைப் பார்த்து மாவும், மயிலும், "சுகா, சுகா !" என்று கத்தின. வியாசரும் ஓடினுர். சுகப்பிரம்மம் ஓடிக்கொண்டே இருந்தார்.

வழியில் ஒரு குளத்தில் பெண்கள் ஆடைகளின்றி நீராடிக்கொண் டிருந்தனர். சுக முனிவர் ஓடும்போது சும்மா இருந்தவர்கள் வியாசர் ஓடி வரும்போது தங்களது ஆடைகளை எடுத்து உடலை மூடிக்கொண்டனர். அதைப் பார்த்த வியாசர், "என்னைவிட இளையவன், பதினறு வயது இளங்காளையாகிய சுகன் முன்னல் ஓடினன். என்னைக் கண்டவுடன் ஆடைகளை அணிந்துகொள்கிறீர் களே, அவன் ஓடும்போது வெட்கம் உண்டாகவில்லையா?" என்று அப்பெண்களைக் கேட்டார். அதற்கு அவர்கள், "புடைவை கட்டிக் கொள்கிறேம் என்பது உங்கள் கண்ணுக்குத்தானே தெரிந்தது? அவருக்கு ஒன்றுமே தெரியவில்லையே! அதனல் நாங்கள் அவரைக் கண்டு சும்மா இருந்தோம்" என்ருர்கள்.

சுகப்பிரம்மத்தைப் போல இந்த நவவீரர்கள், நவமாதர்களின் வயிற்றில் நிகரில்லாத காளைகளாக வீற்றிருந்தார்கள். கர்ப்பம் தாங்க முடியவில்லை. சிறு குழந்தையையே தாங்க முடியாத வயிற்றில் பருவம் வந்த காளைகளைத் தாங்க முடியுமா? பிறகு அறுவை வைத்தியம் செய்ய வேண்டும். பெரிய ஆபத்து அல்லவா?

நவசக்திகள் பரமேசுவரனிடம் முறையிட்டார்கள். அவர் அம்பிகையைப் பார்த்து, "நீ கோபம் மாறி இவர்களுக்கு அனுக் கிரகம் செய்ய வேண்டும்" என்று சொன்னர்.

இறைவன் இங்கிது பணித்தலும் நன்றெென இசையா
முறுவல் செய்துமை, மாதரை நோக்கிமொய்ம் பினரைப்
பெறுதி ரால்இனி என்றலும், அவர்வயிற் பெயரா
துறையும் யோகுடை வீரர்கள் இத்திறம் உணர்ந்தார்.

(துணைவர். 21.)

[மொய்ம்பினரை - பலமுடையவர்களை.]

எம்பெருமான் இவ்வாறு சொன்னவுடன், "அப்படியே செய்கிறேன்" என்று உமாதேவி புன்முறுவல் பூத்தாள். வீட்டுக் காரரே பணிந்து வந்து கேட்கிருர் என்ருல் பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டாவதற்கு ஐயம் ஏது? அம்பிகை நவசக்திகளைப் புன்முறுவ லுடன் பார்த்து, "நீங்கள் பலமுடைய பெருவீரர்களைப் பெறுவீர் கள்" என்று அருள் புரிந்தாள். இதை அந்த வீரர்கள் உள்ளிருந்தே கேட்டார்கள்.

**பரிபு ரந்தனில் முன்வரும் மங்கையர் பரைதன்
கருணை கொண்டசொல் கேட்டலும் கவற்சியை அகன்று
விரைவின் மேலவர் பதம்பணிந் தேத்தியே விடைகொண்
டொருவி மைந்தரை அளித்தனர் யாவரும் ஒருசார்.**

(துணைவர். 23.)

[பரிபுரம் - சிலம்பு. பரை - அம்பிகை. கவற்சி - கவலே. ஒருவி - அவ்விடத்தை நீங்கி.]

அம்பிகையின் பரிவான அந்த வார்த்தையைக் கேட்டு, ஒன்பது மாதர்களும் தனி இடத்திற்குச் சென்று ஒன்பது வீரர்களைப் பெற்ருர்கள். அப்படிப் பிறந்தவர்கள் வீரம் என்ற அடையை உடைய பெயர்களைப் பெற்ருர்கள். நவ ரத்தினங்களில் மிகச் சிறந்தது மாணிக்கம். அதன் அதிதேவதை சூரியன். அதுதான் தலையாய மணி. அந்த மாணிக்கவல்லி வயிற்றில் வீரபாகு பிறந்தார்.

**பேர ஆகுவை உடையவன் இளவல்பே ரருளால்
சூர ஆகுலம் வானவர் பெருவகை தொலேப்பான்
ஏர வாகுறும் செம்மணிப் பாவைதன் னிடத்தில்
வீர வாகுவந் துதித்தனன் உலகெலாம் வியப்ப.**

(துணைவர். 25.)

[பேர ஆகுவை உடையவன் - வேறிடங்களுக்குச் செல்லப் பெருச்சாளி யாகிய வாகனத்தை உடைய விநாயகர். சூர ஆகுலம் - சூரனல் உண்டாகிய துன்பம். ஏர வாகு உறும் - அழகையுடைய தன்மையைப் பெற்ற.]

விநாயகருடைய இளவலாகிய முருகப் பெருமான் பேரருளால், சூரனல் வந்த துன்பத்தைப் போக்க மாணிக்கவல்லி வயிற்றிலே உலகமெல்லாம் உவப்ப வீரபாகு வந்து தோன்றினர். இப்படி ஏன் சொன்னர்? வீரபாகு முருகப் பெருமான் தம்பியாகப் பிறக்கிருர். அங்கே எல்லோரும் சகோதர ஒற்றுமை உடையவர்கள். தனித் தனியாகப் பிரிகின்றவர்கள் அல்ல. அதிகமான சகோதரர்கள் இருந்தால் அதிகமான பிரிவினை உண்டாவது உலக இயல்பு. ஆண்டவன் தர்மம் இதற்கு மாருனது. சகோதரர் அதிகம் இருந் தால் உறவு அதிகமாகிறது. முருகன் தம்பி வீரபாகு என்று சொல்ல வந்தவர் அவர்கள் குடும்பம் முழுவதையும் சொல்கிருர். வீரபாகுக்கு மூத்தவன் முருகன், அவனுக்கு மூத்தவன் விநாயகர் என்று அந்தக் குடும்பத்தின் உறவை எடுத்துச் சொல்கிருர்.

வீரபாகு - வீரத் தோள்களை உடையவன். பாகு - தோள். வீரர்களைச் சொல்லும்போது தோள்களில் வலிமை இருப்பதாகச்

சொல்வார்கள். முகபல பராக்கிரம் என்று சொல்வதில்லை; புஜபல பராக்கிரம் என்றுதான் சொல்வார்கள். ஆடவர்களுக்குத் தோள் சிறப்பாக இருக்கவேண்டும்.

மாணிக்கவல்லியிடம் வீரபாகு தோன்றியதைப் போல, தரள வல்லியிடம் வீரகேசரியும், புஷ்பராகவல்லியிடம் வீரமகேந்திரனும், கோமேதகவல்லியிடம் வீரமகேச்சுரனும், வைடூரியவல்லியிடம் வீர புரந்தரனும், வைரவல்லியிடம் வீரராக்கதனும், மரகதவல்லியிடம் வீரமார்த்தாண்டனும், பவளவல்லியிடம் வீராந்தகனும், நீலவல்லி யிடம் வீரதீரனும் திரு அவதாரம் செய்தார்கள்.

உதிதருமத் திறல்வீரர் அரியணைமேல் அம்மையுடன்
உறைந்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலும் அவர்க்கண்டு பார்ப்பதியைப்
பரிவால் நோக்கி,
மதியுடையர், திறலுடையர், மானஅரும் கலத்தினர், நம்
மைந்தர், இன்னோர்
புதியரலர், நந்திதனிக் கணத்தவரென் றுன்சுருதிப்
பொருளாய் நின்றான்.

(துணைவர். 35.)

[அரியணைமேல் - சிங்காதனத்தின்மேல். மான அரும் கலத்தினர் - மான மாகிய அரிய ஆபரணத்தை உடையவர்கள்.]

இந்த ஒன்பது குழந்தைகளைத் தன்முன் கண்டவுடன் அம்பிகை யின் மனத்தில் வாஞ்சை உண்டாகும் என்று எண்ணினார் சிவபெரு மான். அவர்கள் அம்மாவும் அப்பாவும் இருக்கிற அரியணைக்குச் சென்று தரிசித்தார்கள். இறைவன் அம்பிகையைப் பார்த்தான். "இந்தக் குழந்தைகள் நம் குழந்தைகள். மிகவும் அறிவாளிகள். வீரம் உடையவர்கள். மானம் உடையவர்கள். இவர்கள் புதிய வர்கள் அல்லர். நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள், இந்த வடிவில் வந்திருக்கிறார்கள்" என்று அம்பிகையை நோக்கித் திருவாய் மலர்ந்தருளினான். மதி, திறல், மானம் ஆகிய மூன்றையும் அவர்களு டைய இயல்புகள் என்று ஆண்டவன் சொல்கிறான். மதி இல்லாத வீரம் பயனுடையது ஆகாது. அறிவு இல்லாத வீரத்தால் கொலை தான் நிகழும். உடம்பிலுள்ள வீரத்தைவிட உள்ளத்திலுள்ள அறி வின் பலந்தான் சிறப்பு. ஆகவே சிவபெருமான் முதலில் 'மதி யுடையர்' என்று சொல்கிறான்.

ஞானத்தின் பலம் இருந்தால்தான் இந்த நாட்டில் கொண்டாடுவார்கள். ஞானம் பொருந்திய வீரம் உடையவர்கள் என்று சொன்னவன் மூன்றுவதாக, 'மானம் என்னும் அருங்கலம் உடையவர்கள்' என்று சொன்னுன். மானத்தையே ஆபரணமாகக் கொள்வார்கள் என்ருன். அரசனை மானுபரணன் என்று சொல்வது வழக்கம். கல்வெட்டுகளில் அந்தப் பெயரைக் காணலாம். மானத்தை ஆபரணமாகக் கொண்டவன் என்று பொருள். மானம் இல்லாவிட்டால் நிர்வாணமாகப் போவதுபோல நினைப்பார்கள்.

இப்படி எம்பெருமாட்டி உள்ளத்தில் முன்பு இருந்த கோபம் அடியோடு மாறுவதற்கு இந்தப் பிள்ளைகளைப் பற்றி எம்பெருமான் இங்கிதமாக எடுத்துரைத்தான். தன் மனைவியின் உள்ளம் குளிரும் படியாகப் பேசுவது கணவனுடைய கடமை. சிவபெருமானுக்குப் பேசவா தெரியாது? "இவர்கள் எல்லாம் புதியவர்களாகத் தோன்றிய பிள்ளைகள் என்று எண்ணுதே. இவர்கள் நம் நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள்" என்ற உண்மையை உரைத்தான்.

தேவியும், இந்த நவ வீரர்களைப் பார்த்து அருள் செய்ய, சிவபெருமானும் இந்த ஒன்பது வீரர்களுக்கும் ஒன்பது வாள்களைக் கொடுத்தான். "உங்களுக்கு முன்பாகத் தோன்றியுள்ள லட்சம் வீரர்களோடு சேர்ந்து, முருகன் இட்ட பணியைச் செய்து வருவீர்களாக" என்று அருள் செய்ய, அவர்களும் இசைந்து பணிந்தார்கள்.

தேவியது கேட்டுமைந்தர்க் கருள்புரிய அவர்க்கெல்லாம்
சிவன் வெவ்வேறு
தாவில்சுடர் வாளுதவி வியர்ப்பில்வரும் ஓரிலக்கந்
தனயரோடு
நீவிர்களும் ஒன்றிநுங் கட்கிறையா கியசேயை
நீங்கல் இன்றி
ஏவல்அவன் பணித்தனசெய் தொழுகுதிரென் ருன்அவரும்
இசைந்து தாழ்ந்தார்.

(துணைவர். 36.)

[தா இல் - கேடில்லாத. சேயை - முருகனை. தாழ்ந்தார் - பணிந்தனர்]

முருகனை அழைத்து வருதல்

கைலாசபதியாகிய பரமேசுவரன் அம்பிகையைப் பார்த்து, "உன் குழந்தை சரவணத்தில் இருக்கிருன். அங்கே சென்று

அவனைப் பார்த்து இங்கே அழைத்து வரலாம், வா" என்று சொன்னான்.

பொம்மல் உற்றிடும் நான்முகன் ஆதியோர் புந்தி
விம்மல் அற்றிட முந்துநம் விழியிடைத் தோன்றிச்
செம்ம லர்ப்பெருஞ் சரவணத் திருந்தநின் சேயை
இம்ம லக்கணே உய்க்குதும், வருகென இசைத்தான்.

(சரவணப். 3.)

[பொம்மல் - வருத்தம். விம்மல் - துயரடைதல். உய்க்குதும் - அழைத்து வருவோம்.]

முருகப் பெருமான் சரவணத்தில் வளர்கிறான். அம்பிகை அவனுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதவள் போல இருக்கிறாள் அல்லவா ? ஆதலால் அம்பிகையைச் சம்பந்தப்படுத்தி, 'நின் சேய்' என்று கூறினான் சிவபெருமான்.

விபீடணனைப் பார்த்து இராமன்,

"குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் ; எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய, நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல்அருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை"

என்று சொல்கிறான் தசரதனை, உன் தந்தை என்றான். அத்தகைய சொல்லாட்சி இது.

அம்மையும் அப்பனும் விடை வாகனத்தில் எழுந்தருளிச் சரவணத்தை அடைந்தார்கள். அங்கே முருகப் பெருமான் திருவிளையாடல் புரிந்துகொண்டிருப்பதைக் கண்டாள் அம்பிகை. முருகப் பெருமான் கிருத்திகை மாதர் ஆறு பேர்களிடமும் ஆறு வேறு குழந்தைகளாக வெவ்வேறு வகையான திருவிளையாடலைச் செய்து கொண்டிருந்தான். அந்தக் குழந்தைகளைப் பார்த்தவுடனே அம்பிகை அருளோடு அணைத்தாள். அப்படி அணைத்தவுடன் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு கரங்களும் கொண்ட ஒரு திருவுருவமாகப் பழைய உருவத்தோடு ஆகிவிட்டான் முருகன்.

சரவ ணந்தனில் தனது சேய் ஆறுருத் தனையும்
இருக ரங்களால் அன்புடன் எடுத்தனள் புல்லித்
திருமு கங்களோர் ஆறுபன் னிருபுயம் சேர்ந்த
உருவம் ஒன்றெனச் செய்தனள், உலகமீன் றுடையாள்.

(சரவணப். 20.)

[புல்லி - அணைத்து.]

முன்பு தோற்றியபோது; "அருவமு முருவு மாகி" என்று சொன்னர் கச்சியப்பர். ஆறு மாமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உடையவனுக எம்பெருமான் முன்பு தோற்றினுன். இடையில் ஆருகப் பிரிந்தான். மறுபடியும் உமையவள் ஒன்றுபடுத்தச் சேர்ந்தான். இதன் தத்துவம் என்ன ?

உலகத்தில் ஆருயிர்களுக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டு மென்ருல் பராசக்தியின் துணையில்லாமல் ஆகாது. ஒரு பாத்தி ரத்திற்கு ஈயம் பூச வேண்டுமானுல் வெறும் ஈயம் மட்டும் போதாது. பாத்திரத்தை நன்ருகச் கழுவிக் காய்ச்சி அதில் ஈயத்தை உருக்கி விட்டால் ஒட்டாது. நவாசாரம் சேர்ந்தால்தான் ஒட்டும். தனியாகச் சிவன் அருள் புரிந்தால் போதாது. சக்தியின் அருள் இணைந்திருக்க வேண்டும். அப்போதுதான் காரியம் சித்தியாகும்.

கருணை என்பது பராசக்தியின் உருவம். பராசக்தியின் சம்பந்தம் இல்லாவிட்டால் உலகத்தில் உயிர்களுக்குக் கருணை கிடைக்காது. பரமேசுவரன் ஞானமூர்த்தி. அம்பிகை கருணை மூர்த்தி. ஞானமும், கருணையும் இணைந்தால்தான் பயன் உண் டாகும். அம்பிகை கருணை வடிவினள் என்பதை,

"அருளது சக்தி யாகும் அரன்தனக்கு"

என்று சாத்திரம் சொல்கிறது. எப்படிக் கனலிலே சூடும், தண்ணீ ரிலே குளிர்ச்சியும் இருக்கின்றனவோ அப்படியே சக்தன் ஆகிய பரமேசுவரனிடத்தில் சக்தி இருக்கிறது. அந்த அருள் இன்றேல் சிவபெருமானுல் ஒன்றும் செய்ய முடியாது.

"சிவமெ னும்பொருளும் ஆதி சத்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்;
அவள்பி ரிந்திடின் இயங்குதற்கும் அரிதாம்"

என்று **சங்கராசாரியார்** பாடுவார். உலகம் தோன்றும் முன் இறைவன் சக்தியை வெளிப்படுத்தினுன். இறைவியினுடைய துணை இருந்தால்தான் படைப்பு உண்டாகும்.

"பெண்உரு ஒருதிறன் ஆகின்று; அவ் உருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

என்று **புறநானூறு** சொல்கிறது. ஒரு பாகத்தில் அம்பிகையை வைத்திருக்கிருன் இறைவன். பிரளய காலத்தில் அந்தப் பெருமாட்டியைத் தனக்குள்ளே அடக்கிக் கொள்வான்.

எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் ருகியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் மூவிரு வடிவும்ஒன் ருகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.''

(சரவணப். 21.)

[ஒடுங்குறும் எல்லை - பிரளய காலத்தில் எல்லாம் ஒடுங்கும் சமயத்தில்.]

கந்தன் என்பதற்கு, சேர்க்கப்பட்டவன், ஆகர்ஷணம் பண்ணு கிறவன், வெளிப்பட்டவன், ஒன்றுபடுத்தப்பட்டவன் என்று பல பொருள்கள் சொல்வார்கள். பல சக்திகள் விரிந்து பரந்தன. பின்பு சங்கார காலத்தில் எல்லாச் சக்திகளும் ஒடுங்கின. அதுபோல் ஆறு குழந்தைகளாக இருந்த முருகன் இப்போது பராசக்தியினுல் ஒன்ருக ஆக்கப்பட்டான். பிரளய காலத்தில் உயிர்கள் எல்லாம் ஒன்றுபடுவதுபோல, முருகன் ஒரு வடிவம் உடையவன் ஆனுன். அம்பிகையினுல் ஒன்ருனமையின் இங்கே, 'கௌரி தன் குமரன்' என்ருர்.

பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டு ஆண்டவன் தனியாக இருக்கிருன். அப்போது அவனுக்கு நல்ல ஓய்வு. பிறகு உலகம் எல்லாம் வெளிப்பட வேண்டுமென்று எண்ணுகிருன். தானுகவே வெளிப்படுத்த முடியாது என்று தெரிந்து, தன்னுடைய சக்தியை முதலில் வெளிப்படுத்துகிருன். அருவமாக இருக்கிற பரமேசுவரன் முதலில் அருஉருவாக, சிவலிங்கமாகத் தோன்றுகிருன். அப்பால் ஒருபாதி அம்பிகை, ஒருபாதி தானுக அர்த்தநாரீசுவரன் ஆகிருன். சக்தி பாதி, சிவன் பாதியாக இருக்கிருன். மாதிருக்கும் பாதியன் என்று சொல்வது வழக்கம். இறைவன் எடுக்கும் வடிவங்களுள் இந்த அர்த்தநாரீசுவர வடிவந்தான் பழையது.

" தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ "

என்று மாணிக்கவாசகர் இதைச் சொல்கிருர். இந்தக் கோலம் தொன்மையான கோலம். வலப்பாகத்தில் தோலும், இடப்பாகத் தில் புடைவையும், வலப்பாகத்தில் சங்கக் குழையும் இடப்பாகத்

தில் ஓலையும், வலப்பாகத்தில் திருநீறும் இடப்பாகத்தில் பசுஞ்சாந்தும், வலப்பாகத்தில் சூலமும் இடப்பாகத்தில் கிளியும் அமைந்த பழைய திருக்கோலம் இது. படைப்புக் காலத்தில் இவ்வாறு ஆண்டவன் மாதிருக்கும் பாதியன் ஆகிருன்; ஆதலின் தொன்மைக்கோலம் என்ருர். இதைப் பழைய சங்க நூலாகிய **ஐங்குறுநூறு** சொல்கிறது.

ஆண்டவன் முதலில் உலகத்தை எல்லாம் படைப்பதற்கு முன் தனக்கு உருவத்தைப் படைத்துக் கொண்டான்; தான் வடிவம் உடையவன் ஆனுன். அந்த வடிவத்தில் ஒரு பாதி சக்தி, ஒரு பாதி தானுக இருந்தான்.

> ''நீல மேனி வாலிழை பாகத்து
> ஒருவன் இருதாள் நிழற்கீழ்
> மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே.''

நீல மேனியை உடைய அம்பிகையை ஒரு பாகத்தில் உடையவன் பெருமான். அவனுக்கு இரண்டு தாள். அந்தத் தாள்களின் நிழலில் அந்தர் மத்திய பாதலம் என்ற மூன்று உலகமும் தோன்றின என்று சொல்கிருர். அரையும் அரையும் சேர்ந்த ஒன்று, அதிலுள்ள இரண்டு தாள்கள், அங்கிருந்து மூன்று உலகமும் தோன்றின என்று எண் அலங்காரம் வரும்படியாகப் பாடுகிருர் பாரதம் பாடிய பெருந் தேவனுர் என்ற புலவர். மூவகை உலகும் என்பதற்கு, சிவ தத்துவம், வித்யா தத்துவம், ஆன்ம தத்துவம் என்றும் சொல்லலாம்.

அம்பிகை அருளினுல்தான் உலகம் விளங்கும். இன்றேல் உலகம் வடிவு எடுக்க முடியாது. சமைக்க வேண்டிய பொருள்களை எல்லாம் ஆடவன் கொண்டுவந்து போட்டாலும், அதைப் பக்குவப் படுத்தி உண்ணும்படியாகச் சமைப்பவள் தாய். அதுபோல் உயிர்க் கூட்டங்களுக்கு அவரவர்கள் வினைக்கு ஏற்ப அநுபவம் உண்டாகும் படியாக அருள் செய்வது அன்னையின் செயல்.

பரமேசுவரனது ஞானக் கண்ணிலிருந்து எழுந்தருளிய முருகன் பாராசக்தியின் அணைப்பினுல் உலகத்திற்கு அருள் புரிகின்ற பேர் ஆற்றலைப் பெற்ருன். அவள் அணைத்தவுடன் அவனுடைய ஆறு வடிவமும் ஒரே வடிவமாயின. முன்பே பரமசிவ குமாரனுக இருந்தவன் இப்போது சிவ சக்தி குமாரனுக ஆகிவிட்டான். முன்பு நுட்பமாக

இருந்தவன் இப்போது திட்பமாகப் பலருக்கும் பயன்படும் பொருளாக ஆகிவிட்டான். முன்னலே வெறும் தங்கமாக இருந்தான்; இப்போது பணிப்பொன்னக ஆகிவிட்டான். ஆபரணமாக உள்ள பொன்னுக்குப் பணிப்பொன் என்று பெயர். வெறும் தங்கத்தினல் பயன் இல்லை. அது ஆபரணமாக உரு எடுத்தால்தான் அணிந்து கொள்வார்கள். ஆகவே, உலகம் எல்லாம் முருகனல் பயன்பெற வேண்டுமானல் அவன் பராசக்தியின் சம்பந்தத்தை முழுமையாகப் பெற வேண்டும். இதுவரைக்கும் முருகன் செய்த திருவிளையாடல்கள் சக்தியின் தொடர்பு இல்லாத சாதாரணத் திருவிளையாடல்கள். இனிமேல் அம்பிகையின் திருவருளால் பெரிய பெரிய திருவிளையாடல்களைப் பண்ணப் போகிருன்.

பார்வதியம்மை ஆறு குழந்தைகளையும் அணைத்து ஒன்ருக்கிய போது முருகன் ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் உடையவனக ஆனன். இந்தச் செய்தியை எண்ணித் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் **திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழில்** ஓர் அற்புதமான கற்பனையை அமைத்திருக்கிருர்.

பிள்ளைத் தமிழ் நூல்களில் ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என்று இரு வகை உண்டு. குழந்தைப் பிராயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே வேறுபாடு இல்லையென்று சிலர் சொல்கிருர்கள். ஆனல் இயற்கையாகவே ஒரு வகையான வேறுபாடு அவர்களிடத்தில் தோற்றுகிறது. தந்தை கடையிலிருந்து பல பொம்மைகளை வாங்கிக் கொண்டுவந்து போடுகிருர். அதில் சைக்கிள் இருக்கிறது; அம்மிக் குழவி இருக்கிறது; செப்பு இருக்கிறது; பானை இருக்கிறது; துப்பாக்கி இருக்கிறது. ஆண் குழந்தை துப்பாக்கியையும், சைக்கிளையும் எடுத்துக் கொள்வான். பெண் குழந்தை அம்மியையும், செப்பையும் எடுத்துக் கொள்வாள். அப்போதே அவளுக்குத் தன்னை அறியாமலேயே தான் பெண் என்ற உணர்ச்சி உண்டாகிவிடுகிறது.

சிறிய பெண்கள் வீதியில் மண்ணினல் சிறு வீடு கட்டுவார்கள். சிறிய இலையைப் போட்டு அதிலே மண்ணைச் சோருக இட்டு, விருந்து போடுவார்கள். சிற்றில் அமைத்து, சிறு சோறு சமைத்து விளையாடுவது பெண்களுடைய வழக்கம். பெண் குழந்தைகள்

சிற்றில் கட்ட, ஆண் குழந்தைகள் அந்த வீட்டைக் காலால் தட்டி அழித்துவிடுவார்கள். கட்டுவது பெண் தன்மை, அதைத் தட்டுவது ஆண் தன்மை என்பது சின்னஞ் சிறு பிராயத்திலே தோன்றிவிடு கிறது. அப்பொழுது அந்தப் பெண்கள், "எங்கள் வீட்டை அழிக்காதே" என்பார்கள். அப்படி ஆண் குழந்தையைப் பார்த்துப் பெண் குழந்தைகள் சொல்வதாக அமைந்த பருவம் சிற்றிற் பருவம். ஆண்பாற் பிள்ளைத் தமிழில் வருவது இது.

திருவிடைக்கழியிலுள்ள பெண்கள், "பராசக்தி வாழ்க, பராசக்திக்கு ஜே!" என்று வாழ்த்துகிறார்கள். ஏன் தெரியுமா?

"அம்பிகை எங்களுக்குச் சிறப்பாக ஓர் உபகாரம் புரிந்திருக் கிறாள். அந்தக் காலத்தில் ஆறு குழந்தைகளாக இருந்த முருகப் பெருமானைக் கையால் அணைத்து ஒரே திருவுருவம் ஆக்கினாள். அப்படி ஆக்கியபோது அவனுக்கு ஆறு திருமுகங்களும், பன்னி ரண்டு கண்களும், பன்னிரண்டு கைகளும் இருக்கும்படியாக வைத் தாள். நல்ல வேளையாக பன்னிரண்டு கால்களும் அப்படியே இருக்கும்படி வைக்கவில்லை. எங்களிடத்திலுள்ள பரிவினால் அப்படிச் செய்தாள்" என்று நினைக்கிறார்கள். "பன்னிரண்டு காலாலும் நாங்கள் கட்டும் சிற்றில்களை அழித்தால் நாங்கள் என்ன செய்வோம்? ஆகவே நாங்கள் செய்த புண்ணியத்தால் இரண்டு காலாக ஆக்கினாள். இரண்டு கால்களே இருக்தும் கூட நீ செய் கின்ற குறும்பு எங்களால் பொறுக்க முடியவில்லையே!" என்று அந்தச் சிறுமியர்கள் முருகனை நோக்கிச் சொல்கிறார்கள்.

"நையா நின்ற சிறுமருங்குல் நங்கை உமையாள் பரமனொடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரைவாய் நண்ணி முகம்ஆ றினுக்கேற்பக்
கையா றிரண்டு செய்ததுபோல் காலா றிரண்டு செய்யாமல்
கருதி இரண்டே புரிந்தனள்முற் கடையேம் செய்த நல்வினையால்;
மெய்யாய் இரண்டாய் இருந்துமவை விளைக்கும் குறும்பு பொறுக்கரிதா
விளைந்த தினியாம் செயல் என்னே? வீடு தோறும் விடாதமர்ந்து
செய்யாள் மகிழும் விடைக்கழிவாழ் செல்வா, சிற்றில் சிதையேலே
சிந்தித் தவர்உள் ளூறமுதத் தெளிவே, சிற்றில் சிதையேலே."

[நையா நின்ற சிறுமருங்குல் - தளர்கின்ற சிறிய இடையை உடைய. பொய்கை - சரவணப் பொய்கை. செய்யாள் - திருமகள். சிதையேல் - அழிக்காதே.]

முருகன் ஆறு முகங்களோடும், பன்னிரண்டு கைகளோடும் ஒரு திருவுருவத்தைப் பெற்ருன். கிருத்திகை மாதர்களுக்காக ஆறு குழந்தைகள் ஆனன். இப்போது அம்பிகையின் திரு வருளால் ஒரே குழந்தை யானுன். இனிமேல் பால் கொடுக்க வேண்டும் அல்லவா? அம்பிகைக்கு உண்ணுமுலை என்று பெயர். அம்பிகையின் தனத்தில் வாய் வைத்து யாரும் பால் அருந்துவது இல்லை. திருஞானசம்பந்தருக்குக் கிண்ணத்தில் பால் கறந்து கொடுத்தாள் என்று **பெரிய புராணம்** சொல்கிறது. இங்கும் முருகப் பெருமானுக்கு ஓர் அழகான மாணிக்க வள்ளத்தில் தன்னு டைய தனத்திலிருந்து பொழிந்த பாலை முருகப் பெருமானுக்கு ஊட்டினுள் அம்பிகை.

ஆதி நாயகன் கருணையாய் அமலமாய்ப் பரம
போத நீரதாய் இருந்ததன் கொங்கையில் பொழிபால்
ஏதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதல் மாமகற்கு அன்பினுல் அருத்தினுள் கவுரி.

(சரவணப். 23.)

[அமலமாய் - மலமற்றதாய். போத நீரதாய் - ஞான இயல்பை உடையதாய். ஏது - ஏதம்; குற்றம். குரு - நிறம்.]

ஆண்டவன் எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன் என்று நாம் கேள்விப்படுகிருேம். அவன் எவ்வளவு சக்திமானுக இருந் தாலும் அவனைப் பற்றி நாம் கவலை கொள்ளமாட்டோம். அமெரிக் காவில் ஒரு நாளில் 600 டாலர் சம்பளம் வாங்குகிற ஒருவன் இருக் கிருன் என்ருல் அதைப்பற்றி நாம் கேட்டு வியந்து பிறகு மறந்துவிடு கிருேம். ஆனல் நாம் இருக்கும் தெருவில் மூன்ரும் வீட்டில் 300 ரூபாய் சம்பளக்காரர் ஒருவர் இருக்கிருர், அவர் 25-ஆம் தேதி நமக்குக் கையில் பணம் இல்லாதபோது ஐந்து, பத்துக் கேட்டால் தருவார் என்பதை அறிந்தால், அவருக்குத் தெரிந்த நண்பர் மூலமாக அவரைப் பழக்கம் செய்துகொள்ள விரும்புவோம். காரணம் என்ன? அவராலே நமக்கு ஓர் உபகாரம் ஆகும் என்ற எண்ணந்தான். அதுபோல் பரமேசுவரன் அகடிதகடன சாமர்த் தியம் உள்ளவன் என்ருல் அதைக் கேட்டு நாம் வியப்பு அடை வோம். அவ்வளவுதான். ஆனல் அவனிடமிருந்து நாம் பெறக் கூடிய பொருள் ஒன்று இருக்கிறது என்று சொன்னல் அவனை நாட வேண்டுமென்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. அவனிடத்தில்

அத்தகைய பொருள் ஒன்று இருக்கிறது. அதுதான் கருணை. அவன் கருணை நிரம்பியவனாக, வள்ளலாக இருப்பதனால் நாம் நன்மை பெறலாம், நம் குறைகளை நிரப்பிக்கொள்ளலாம் என்று எண்ணுகிறோம். அவன் கருணாமூர்த்தி என்பதை அறிந்து, அவனிடம் பக்தி பண்ணுகிறோம்.

அம்பிகை முருகனுக்கு ஊட்டிய பால் கருணைமயமானது. அது மலத்தைச் சேராமல் தடுக்கச் செய்வது; பரம ஞானமாக விளங்குவது.

ஞானத்தில் இரண்டு வகை உண்டு; பரஞானம், அபரஞானம் என்பவை அவை. இறைவனை அறிந்து அவனோடு ஒன்றுபடுவதற்குரிய அறிவு எதுவோ அதுவே பரஞானம். மற்றவை எல்லாம் அபர ஞானம். வாலறிவு பரஞானம்: நூலறிவு அபர ஞானம்.

இங்கே அம்பிகையின் பாலாக இருப்பது பரஞானம். பரம போதம் என்று கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார். ஞான சொரூபியாக விளங்குகின்ற முருகப்பெருமானுக்குப் பின்னும் கருணையும் ஞானமும் நிரம்புவதற்காக அம்பிகை தன் பாலை ஊட்டினாள்.

இறைவனிடம் குழந்தையைக் கொடுத்தாள் இறைவி. பரமேசுவரன் அவனை வாங்கிக் கொண்டான். தனக்கும் அம்பிகைக்கும் இடையே அவனை அமர்த்தினான். இவ்வாறு பரமேசுவரனும் அம்பிகையும் வீற்றிருக்க, இடையிலே கந்தன் இருக்கிறபோது மூவரையும் சேர்த்து ஒரு மூர்த்தியாக எண்ணுவார்கள்; சோமாஸ்கந்த மூர்த்தி என்று சொல்வார்கள். உமையுடனும் ஸ்கந்தனுடனும் கூடியவன் என்று பொருள்.

சிவபெருமானுக்குப் பல வகையான திருவுருவங்கள் இருந்தாலும் முக்கியமானவை 25 உருவங்கள் என்று சிவபுராணம் கூறும். அதில் முதலாக இருப்பது லிங்கோத்பவ மூர்த்தி. சோமாஸ்கந்தர் ஒரு மூர்த்தி. அந்தக் கோலத்தை மூன்று மூர்த்திகளாக எண்ணக் கூடாது. ஆணும் பெண்ணும் இணைந்த அர்த்தநாரீசுவர வடிவில் இறைவன் ஒருவனாகவே இருப்பான். அது ஒரே மூர்த்திதான். அது போலவே சோமாஸ்கந்தன் மூன்று உருவங்கள் சேர்ந்த ஒரே மூர்த்தி.

சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஓர் உவமை சொல்கிறார் கச்சியப்பர். பகலுக்கும், இரவுக்கும் நடுவில் சந்தியாகாலம் இருக்கிறது. இந்தச்

சந்தியாகாலம் மிகக் குறுகிய அளவு உடையது. சிறிது காலந் தான் இருக்கும். எப்போதுமே சந்தியாகாலம் இருந்தால் எப்படியோ அப்படி முருகன் இருக்கிறான்; பகல் போன்ற சிவனுக்கும் இரவு போன்ற அம்பிகைக்கும் நடுவே இருக்கிறான். சந்தியாகாலத்தில் பகலின் தன்மையும், இரவின் தன்மையும் இருக் கும்; பகலின் வெளிச்சமும், இரவின் குளிர்ச்சியும் ஒன்றுபட்டு இருக்கும். அவ்வாறே முருகப் பெருமானிடத்தில் சிவபெருமானின் ஞானமும், அம்பிகையின் அருளும் கலந்து இருக்கின்றன.

ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை,
ஞால மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.

(*சரவணப். 26.*)

[ஏலம் - மயிர்ச்சாந்து.]

சிவபெருமானின் ஐந்து முகங்களும், அம்பிகையின் ஒரு முகமும் சேர்ந்து ஆறுமுகங்கள் ஆயின. சோமாஸ்கந்த மூர்த்தி தான் எல்லோருக்கும் மிகுதியாகக் கருணை புரிவான். மனைவி மக்களோடு வாழ்கிறவர்களுக்குத்தான் மற்றக் குடும்பங்களிடத்தில் பரிவு உண்டாகும். அதுபோலத் தானும் மகனுடனும், மனைவி யுடனும் இருக்கும் கோலத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியாகி அருளை வழங்குகிறான் சிவபெருமான்.

சிவபெருமான் தனியாக இருக்கும்போது அருள் அடங்கி நிற்கும்; ஞானம் ஓங்கி நிற்கும். உமாதேவியோடு வந்த பிறகு அருள் பொங்கிவரும்; முருகனோடு சேர்ந்தபோது அது வெள்ள மாகப் பாயும்.

சிவபெருமான் கோவிலில் பல விழாக்கள் உண்டு. ஒவ்வொரு விழாவிலும் ஒவ்வொரு வகையான மூர்த்தி எழுந்தருளுவார். எல்லா விழாக்களுக்கும் மேலான திருவிழா தேர்த் திருவிழா. அதையே பிரம்மோற்சவம் என்று சொல்வார்கள். தேர்த் திரு விழாவை ஜனநாயக விழா என்று சொல்ல வேண்டும். கோவிலுக் குள்ளே போக முடியாதவர்களும் திருத்தேரை இழுத்து அந்த விழாவில் பங்குகொள்ள முடியும். முன் காலத்தில் சில சாதியார் களைக் கோவிலுக்குள் விடமாட்டார்கள். என்றாலும் தேர்த் திரு

விழாவில் அவர்களும் கலந்துகொண்டு தேரை இழுக்கலாம். இங்கே வடம் பிடித்து இழுத்தால் அங்கே மோட்சத்தில் இடம் பிடிக்கலாம் என்று நம்புவார்கள்.

இப்படி எல்லோருக்கும் பயன்படுகின்ற இத் திருவிழாவில்-ரதோற்சவத்தில்-தேரின் மேலே எழுந்தருளுகின்ற மூர்த்தி யார் தெரியுமா? அவர் சோமாஸ்கந்த மூர்த்தி. திருவாரூரில் எழுந்தருளி உள்ள தியாகராஜ மூர்த்தி சோமாஸ்கந்தரே. ஒவ்வொரு சிவன் கோவிலிலும் சோமாஸ்கந்தருக்குச் சந்நிதி இருக்கும். அவரை நாயகர் என்று சொல்வார்கள்.

எல்லோரும் காணத் திருத்தேரில் வருகிற ஆண்டவன் நாம் எல்லாம் குடியும் குடித்தனமுமாக வாழவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக அவ்வாறு எழுந்தருளுகிறான்.

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்"

என்று சோமாஸ்கந்த மூர்த்தியைப் பாடுகிறார் **அப்பர் சுவாமிகள்.**

அந்தக் காலத்தில் எல்லோரும் தேர் விழாவில் ஈடுபடுவார்கள். இந்தக் காலத்தில் தேர்தல் விழாவில்தான் கூட்டம் கூடுகிறது.

அம்பிகை சில சமயம் கோபம் வந்தால், ஓடிவிடுவதைப் பார்க்கிறோம். அவ்வாறு ஓடாமல் இருக்க இப்போது முருகன் வந்துவிட்டான். அம்மையையும் அப்பனையும் பிணைப்பதற்கு ஒரு சங்கிலி போல அவன் எழுந்தருளியிருக்கிறான். முருகன் வந்த பிறகு அம்பிகைக்குக் கோபமே இல்லை. அம்மையையும் அப்பனையும் வணங்காமல் முருகனை வணங்கினால் கூட அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். குமரகுருபர சுவாமிகள் வைத்தீசுவரன் கோவிலில் உள்ள முருகப் பெருமானைப் பற்றி ஒரு பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார். அங்கே இராமனும், இலக்குமணனும் வந்து வழிபட்டிருக்கிறார்கள். சிவபெருமானுக்குத் தீராத வினை தீர்த்த தம்பிரான் என்று பெயர். அம்பிகை தையல் நாயகி. அங்கே எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு முத்துக்குமாரசுவாமி என்று பெயர். மூன்று பேர்களுக்குமே அங்கே சிறப்புண்டு.

அத்தகைய தலத்திற்குத் திருமால் முதலிய தேவர்கள் மனித வேடம் புனைந்து வந்தார்கள். வந்து வரிசையாக நின்றார்கள்.

காலில் தழையத் தழைய வேட்டி கட்டியிருந்தார்கள். அப்போது நாரதர் அங்கே வந்தார். அவருக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. மெல்ல மெல்ல அவர்களுக்கு அருகில்போய், "எங்கே, இங்கே வந்து இப்படி நிற்கிறீர்களே?" என்று கேட்டார். "இங்கே, எம்பெருமானுடைய திரு ஓலக்கத்தைக் காணவேண்டுமென்ற ஆசையோடு நிற்கிறோம். பூமியில்தானே அவருடைய செல்லப் பிள்ளைகள் இருக்கிறார்கள்? ஆகையால் இங்குத் தரிசிக்க வேண்டுமென்று வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

நாரதர், "இங்கே சுவாமியைத் தரிசித்து, பிறகு அம்பிகையைத் தரிசித்து, எப்போது ஊருக்குப் போவீர்கள்? நான் சுருக்கமான வழியைச் சொல்கிறேன்" என்றார்.

"என்ன வழி?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"வேறு ஒரு சந்நிதியைச் சொல்கிறேன். அங்கே போய் நீங்கள் தரிசித்தால் அம்மைக்கும், அப்பனுக்கும் மிகவும் சந்தோஷம் உண்டாகும். இந்த இரண்டு பேருக்கும் மிகவும் பிரியமான தெய்வம் அவன். அவன்தான் முத்துக்குமாரசுவாமி" என்று சொன்னார். இப்படிக் கற்பனை செய்யும்படியாகக் குமரகுருபரர் பாடுகிறார்.

"மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியார் இளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட ஐயர்க்கும் அம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரானென்று மும்முதற் கடவுளும்
அடித்தொழும் பாற்ற."

[குண்டு அகழி - ஆழமான கடல். தனி வில்லியார் - ஒப்பற்ற வில்லையுடைய இராமபிரான். இளவல் - இலக்குவன். சடாயுபுரி - வைத்தீசுவரன் கோவில். ஆனேறு - இடபக் கொடி. மும் முதற் கடவுள் - பிரம விஷ்ணு ருத்திரர்கள்.]

அம்மையின் தன்மையும், அப்பனின் தன்மையும் இணைந்த முருகப் பெருமானை வழிபட்டால் இருவருடைய பேரருளும் உண்டாகும் என்பதை அவன் சந்தியாகாலம்போல இருந்தான் என்ற உவமை குறிப்பாகக் காட்டுகிறது.

இப்படி மூவரும் அமர்ந்திருந்தபோது கார்த்திகை மாதர்கள் அங்கே வந்து எம்பெருமானை வணங்கினார்கள். அவர்களுக்கு,

"கார்த்திகை நட்சத்திரத்திலே விரதம் இருந்து முருகனை வழி படுகிறவர்களுக்குச் சிறப்பு உண்டாகும்" என்று ஆண்டவன் அருள் செய்தான்.

கந்தன்றனை நீர்போற்றிய கடனால்இவன் உங்கள்
மைந்தன்எனும் பெயராகுக! மகிழ்வால்எவ ரேனும்
நுந்தம்பக லிடைஇன்னவன் நோன்தாள்வழி படுவோர்
தந்தம்குறை முடித்தேபரந் தனைநல்குவம் என்றான்.

(சரவணப். 30.)

[போற்றிய - பால் கொடுத்துப் பாதுகாத்த. கடனால் - செயலால். நுந்தம் பகல்- கிருத்திகை. நோன் தாள் - வலிமையுடைய பாதத்தை. பரந்தனை - முத்தியை.]

"உங்கள் பெயரால் அவனுக்குக் கார்த்திகேயன் என்ற நாமமும் உண்டாகும்" என்று அருள் செய்தான்.

கிருத்திகை நாளில் விரதம் இருப்பவர்கள் எல்லா விதமான நலன்களையும் பெறுவார்கள்; அழிவில்லா வீட்டையும் பெறுவார்கள்.

முருகப் பெருமான் திரு அவதாரம் செய்த திருநாள் விசாகம். அதற்கு இல்லாத சிறப்புக் கார்த்திகைக்கு உண்டாயிற்று. சென்னைப் பக்கத்தில் மிகுதியாகக் கார்த்திகை விரதம் இருப் பார்கள். முருகப் பெருமானுடைய நன்றி உணர்ச்சி இதில் நன்றாகத் தெரிகிறது. தான் திரு அவதாரம் பண்ணின நட்சத்திரம் விசாகம் ஆக இருந்தாலும் அதற்கு இல்லாத சிறப்பு, தன்னை வளர்த்த கார்த்திகைப் பெண்களின் நட்சத்திரத்திற்குக் கொடுத்தான். நாம் நன்றி உணர்ச்சியோடு வாழவேண்டுமென்பதை இந்தச் செயலால் ஆண்டவன் காட்டினான்.

பராசர முனிவருடைய சிறுவர்கள் ஆறு பேர் அந்தச் சரவணப் பொய்கையில் மீன்களாக இருந்தார்கள். ஒரு சாபத்தினால் அப்படி ஆனார்கள். ஒரு காலத்தில் அந்த ஆறு பேர்களும் சரவணப் பொய்கையின் கரையில் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அப்போது குளத்தில் இருந்த மீன்களைப் பிடித்துக் கரைகளில் போட்டுச் சாவ அடித்து விளையாடினார்கள். பராசரர் சந்தியாவந்த னம் செய்ய அங்கே வந்தபோது தம் மக்கள் செய்வதைக் கண்டார். "அகிம்சையைக் கடைப்பிடித்து வாழவேண்டிய நீங்கள் இப்படி உயிர்களைக் கொலை செய்தீர்களே! நீங்கள் மீன்களாகப் போக!" என்று சாபமிட்டார். அவர்கள் அவரை வணங்கி, பிழையைப்

பொறுத்துச் சாப விமோசனம் அருள வேண்டுமென்று வேண்டினர். அப்போது, "சிவபெருமானுடைய குமாரன் அறுமுகவன் இந்தப் பொய்கையில் திருஅவதாரம் செய்வான். அம்பிகை அந்தக் குழந்தைக்குத் தன் பாலை வழங்கும்போது அந்தப் பால் சிந்திக் குளத்தில் விழும். சிந்தின பாலை நீங்கள் அருந்துவீர்கள். அப்போது உங்களுக்குச் சாப விமோசனம் ஆகும்" என்று சொன்னார்.

அதன்படியே அம்பிகை தன் தனத்திலிருந்து பால் கறந்து ஊட்டிய போது சிந்தின பால் துளிகளை அந்த மீன்கள் உண்டன. உடனே பழைய வடிவம் பெற்ற அவர்கள் அம்பிகையையும், சிவ பெருமானையும், ஷண்முகநாதனையும் வணங்கினார்கள். அப்போது சிவபெருமான், "நீங்கள் திருப்பரங்குன்றத்தில் போய் இருங்கள். முருகன் அங்கே வருகின்ற போது உங்களுக்கு அருள் பாலிப்பான்" என்றான்.

முருகன் திருவிளையாடல்கள்

பராசக்தியின் அருளோடு இணைந்த பிறகு முருகப் பெருமான் பல திருவிளையாடல்களைச் செய்யத் தொடங்கினான். மேரு பருவத்திலே ஏறிக் கைலாச பருவதத்தில் தாவினான். மேரு பருவதத்திலே எடுத்த கல்லால் கைலாச பர்வதத்தை அடித்தான். எல்லோரும் வியக்கும் படியாகவும், நயக்கும்படியாகவும் செய்தான். வீணையை எடுத்து வாசித்தான். புல்லாங்குழலை எடுத்து ஊதினான். மணியை எடுத்து அடித்தான். இப்படிப் பல பல திருவிளையாடல்களைச் செய்து வந்தான்.

பாடின்படு மணிஆர்த்திடும்; பணைமென்குழல் இசைக்கும்;
கோடங்கொலி புரிவித்திடும்; குரல்வீணைகள் பயிலும்;
ஈடொன்றிய சிறுபல்லியம் எறியும்; எவ ரெவரும்
நாடும்படி பாடும்; களி நடனம் செயும் முருகன்.

(திருவிளையாட்டுப். 12.)

[பாடு இன் - ஓசை இனிதாகிய. பணைமென் குழல் - மூங்கிலாலாகிய மெல்லிய புல்லாங்குழலை. கோடு-ஊதுகொம்பு. சிறுபல்லியம்-சிறிய பல வாத்தியங்கள். எறியும்- அடித்து வாசிப்பான்.]

முருகப் பெருமான் கண்ணனைப் போலப் புல்லாங்குழல் வாசித்தான். **திருமுருகாற்றுப் படையில்** நக்கீரர் சொல்கிறார்.

"குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்."

முருகப் பெருமான் பல வகையான இசைக்கருவிகளை இசைக்க வல்லவன்; ஆனந்த நடனம் ஆடுகிறவன்.

அவன் இவ்வாறு திருவிளையாடல் செய்தபோது எல்லோரும் பார்த்து அஞ்சினார்கள். அவன் மலைகளோடு மலைகளை மோதிப் பிறர் வியக்கும்படியாகப் பல திருவிளையாடல்களைச் செய்தாலும் எந்த உயிருக்கும் சேதம் உண்டாக்கவில்லை.

இப்படி எல்லாம் விளையாடுகிற முருகனைப் பற்றிப் பரமேசுவரன் அம்பிகைக்குச் சொல்லத் தொடங்கினான்.

நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி உற்ற ; தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே.

(திருவிளையாட்டுப். 18.)

[தாரகப் பிரமம் - பிரணவம்.]

"நமக்கு ஐந்து முகம் வெளிப்படையாக இருக்கின்றன. அதோடு கீழ்நோக்கும் அதோமுகம் ஒன்றுண்டு. அந்த ஆறு முகங்களும் சேர்ந்தே, ஆறுமுகங்களாகப் பெற்று நம்முடைய குழந்தை உண்டானான். நான் வேறு, அவன் வேறு அல்ல. பஞ்சாட்சரத்தில் ஓம் என்ற பிரணவம் சேர்ந்தால் ஆறு எழுத்து அமையும். அந்த ஆறு எழுத்துக்களே முருகனுடைய ஆறு எழுத்துக்களாக வந்தன. அவனைக் குழந்தை என்று எண்ணாதே. நம்மிடத்திலுள்ள எல்லாச் சக்தியும் அவனிடத்தில் உள்ளன. நீயும் நானும் சேர்ந்தவனே அவன். நாம் எங்கும் இருப்பதுபோல அவனும் எங்கும் நிறைந்துள்ளான். பிரம்மானந்த சொரூபியாக உள்ளவன். அவனுக்கு உலகத்தில் நடக்கின்ற எல்லாம் தெரியும். அவன் சர்வக்ஞன். யார் யார் தன்னை வணங்குகிறார்களோ அவர்களுக்கு என்போலவே எல்லாப் போகங்களையும் இம்மையில் அருள்வான் ; அழிவு இல்லாத வீடு பேற்றையும் அளிப்பான்." இப்படிச் சிவபெருமான் முருகப் பெருமானின் பெருமைகளை எடுத்துச் சொன்னான்.

ஆதலின் நமது சத்தி
அறுமுகன் ; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல்
பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதம்இல் குழவி போல்வான் ;
யாவையும் உணர்ந்தான் ; சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க் கருள வல்லான்.

(திருவிளையாட்டுப், 19.)

[பேதகம் - வேற்றுமை, ஏதம் - தீங்கு, போதம் - ஞானம்.]

முருகன் செய்கின்ற திருவிளையாடல்கள் மேலும் வருகின்றன.

இருள்கெழு பிலத்துள் வைகும்
எண்தொகைப் பணியும் பற்றிப்
பொருள்கெழு மேரு வாதி
அடுக்கலில் பூட்டி விக்கி
அருள்கெழு குமர வள்ளல்
ஆவிகட் கூறின் ருக
உருள்கெழு சிறுதே ராக்கொண்
டொல்லென உருட்டிச் செல்லும்.

(திருவிளையாட்டுப். 24.)

[பிலம் - நாகலோகம். பணி - பாம்பு. அடுக்கல் - மலை. விக்கி - கட்டி. ஆவிகட்கு ஊறு இன்ருக - உயிர்களுக்குத் துன்பம் இல்லாமல்.]

பாதாளத்திலுள்ள பாம்புகளைப் பிடித்து, அட்ட திக்கில் உள்ள மலைகளில் கட்டி, தேர் போல இழுக்கிருன். மலைகள் எல்லாம் புரண்டு வந்தாலும், பாம்புகளே கயிருக இருந்தாலும் எந்த உயிருக்கும் தீங்கு உண்டாக வில்லை. அவன் ஆற்றல் மிக்க குமரனுக இருக்கிருன். அதே சமயத்தில் அருள் நிரம்பியவனுகவும் விளங்குகிருன். விளையாட்டில் கூட யாருக்கும் துன்பம் வரக்கூடாது என்று நினைப்பது தெய்வத் தன்மை. அசுரக் குழந்தை விளையாடினுல் கணத்திற்கு ஆயிரக் கணக்கான உயிர்கள் மரணம் அடையும். முருகனே தெய்வக் குழந்தை; கருணை வள்ளல். ஆகவே, அவன் செய்கிற விளையாட்டில் பார்ப்பதற்கு அச்சம் தோன்றினுலும் யாருக்கும் இடையூறு உண்டாகவில்லை; ஓர் எறும்புக்குக் கூடத் தீங்கு உண்டாகவில்லை.

இந்திரன் எதிர்த்தல்

இந்திரன் முதலாய தேவர்களே இந்த விளையாட்டைக் கண்டு திகைத்தனர். 'நாம் இறைவனிடம் விண்ணப்பித்துக்கொண்டபடி திரு அவதாரம் செய்த முருகன் இவன்தான்' என்று அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. 'யாரோ தோற்றத்தில் குழந்தை மாதிரி இருக்கிருன். ஆனுல் செய்கின்ற காரியங்களைப் பார்த்தால் அசுரக் குழந்தைபோலத் தோன்றுகிறது' என்று எண்ணினுர்கள்.

நொய்தாம் குழவி எனக்கொள்கிலம்; நோன்மை நாடின்
வெய்தாம் அவுணக் குழுவோரினும் வெய்யன்; யாரும்
எய்தாத மாயம் உளனுல்; இவன் றன்னை வெம்போர்
செய்தாடல் கொள்வம் இவணென்று தெரிந்து சூழ்ந்தார்.

(திருவிளையாட்டுப். 42.)

[நொய்தாம் - மென்மையான. நோன்மை - வலிமை. அவுணக் குழுவோரினும் - அசுரக் கூட்டத்தை விட. வெய்யன் - கொடியவன். ஆடல் கொள்வம் - வெற்றி கொள்வோம். இவண் - இங்கே.]

"இப்படியே விட்டு இருந்தால் நமக்குப் பெரிய ஆபத்து வந்து விடுமே! இவன் யாரோ தெரியவில்லை. அசுரனாகவும் தோன்ற வில்லை" என்று இந்திரன் பயந்தான். முருகனோடு போர் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. உடனே அவன் தேவர்களுடன் சேர்ந்து முருகனோடு போர் செய்தான். முருகன் விட்ட ஓர் அம்பினால் யுத்தம் முடிந்தது. இந்திரன் மயங்கி வீழ்ந்தான். தேவர்கள் விட்ட அம்புகளோ ஆண்டவனுடைய பாதத்திலே மலர்களைப்போல வீழ்ந்தன. பல பேர் இறந்தனர். பாதிப் பேர் ஓடிப்போனார்கள். அப்போது நாரதர் தேவகுருவாகிய வியாழபகவானிடம் வந்து செய்தியைச் சொன்னார். வியாழ பகவான் முருகப் பெருமானைப் பிழை பொறுக்கும்படி பிரார்த்தித்தார்.

"அறியாமல் செய்த பிழைகளைப் பொறுத்து அவர்களை எல்லாம் எழுப்ப வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அப் படியே ஆண்டவன் அவர்களை எழுப்பினான். அவர்கள் எழுந்து முருகப் பெருமானைத் துதி செய்யத் தொடங்கினார்கள்.

கந்தநம, ஐந்துமுகர் தந்தமுரு
    கேசநம, கங்கை உமைதன்
மைந்தநம, பன்னிருபு யத்தநம,
    நீபமலர் மாலை புனையும்
தந்தைநம, ஆறுமுக ஆதிநம,
    சோதிநம, தற்பமதாம்
எந்தைநம, என்றுமிளை யோய்நம,
    குமாரநம, என்று தொழுதார்.

(திருவிளையாட்டுப். 82.)

[ஐந்து முகர் - சிவபெருமான். நீப மலர் - கடப்பம் பூ. நம - நமஸ்காரம்.]

நம: என்று அர்ச்சனை செய்வதுபோலத் திருநாமத்தைச் சொல்லி வணங்கினார்கள். "என்றும் இளையவனாக இருக்கின்ற எம்பெரு மானே, உன் பெருமையை நாங்கள் தெரிந்துகொள்ளவில்லையே!" என்று வருந்தினார்கள்.

முருகப் பெருமான் என்றும் இளையவனாக இருப்பவன். "என்றும் அகலாத இளமைக்கார" என்று அருணகிரிநாதர் சொல்வார்.

"என்றும் இளையாய் அழகியாய்"

என்பது ஒரு பழைய பாட்டு.

முருகனுடைய விசுவரூபம்

இந்திரன் முதலிய தேவர்கள் முருகப் பெருமானைத் தொழுத போது முருகன் அவர்களைப் பார்த்து, "நம்மைக் குழந்தை என்று எண்ணி நம்மோடு பொருதீர்கள். இப்போது நமது விசுவரூபத்தைக் காட்டுவோம்" என்று திருவாய்மலர்ந்தருளிப் பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டான்.

அவனுடைய திருவடிகள் பாதாளம் எல்லாம் நிறைந்து இருந்தன. எட்டுத் திசையெல்லாம் அவன் தோள்கள் படர்ந்து இருந்தன. ஆகாயத்தில் ஒன்றி இருந்தன முடிகள். பெரிய சுடர்கள் நயனங்களாக இருந்தன. நடுவில் உள்ள இடங்கள் எல்லாம் அவனுடைய திருமேனி. அவனுடைய திருவாயிலிருந்து வேதம் வெளிப்பட்டது. உணர்வு எல்லாம் அவன் செவிகளாக இருந்தன. அவனது பக்கத்தில் அயனும், மாலும் தோன்றினர்கள். சிவபெருமானுடன் உமை இருந்தாள். எல்லாத் தொழில்களையும் செய்கின்ற பரமேசுவரன் உயிராக விளங்கினன்.

இத்தகைய பெரிய வடிவத்தைத் தேவர்கள் கண்டார்கள். ஆனல் முழு உருவத்தையும் காண முடியவில்லை. அவனது பெரிய வடிவத்திற்கு முன்னல், உலகங்கள் எல்லாம் மிகச் சிறியனவாக இருப்பதைக் கண்டு, 'எம்பெருமானின் முழு உருவத்தையும் கண்ணல் காண முடியவில்லையே!' என்று வருந்தினர்கள். ஆண்டவன் அவர்களுக்குத் தன்னைக் காண்பதற்குரிய கூர்மையான நோக்கினை அருள் செய்தான். அந்தத் தெய்வக் கண்களைக் கொண்டு ஆண்டவனை அவர்கள் பார்த்தார்கள்; அடி முதல் முடி வரைக்கும் பார்த்தார்கள். அந்தத் திருவுருவத்தில் எல்லா உயிர்க் கூட்டங்களும், திருமால் முதலிய மூவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும் விளங்கக் கண்டு வணங்கினர்கள்.

அடிமுதல் முடியின் காறும் அறுமுகன் உருவ மெல்லாம்
கடிதவன் அருளால் நோக்கிக் கணிப்பிலா அண்டம் முற்றும்
முடிவறும் உயிர்கள் யாவும் மூவரும் தேவர் யாரும்
வடிவினிலிருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச்சொல்வார்.

(திருவிளையாட்டுப். 93.)

[சுடிது - விரைவில். கணிப்பு இலா - அளவில்லாத.]

இந்திராதி தேவர்கள் எவ்வளவுதான் சிறந்தவர்களாக இருந்தாலும் முருகனுடைய பெரிய வடிவத்தைக் காண முடியாமல் மலைத்தார்கள். பிறகு இறைவன் தெய்வத் திருக்கண்களைக் கொடுத்தவுடன்தான் அவர்களால் பார்க்க முடிந்தது. இறைவனுடைய திருவருளின்றி எதையும் செய்ய முடியாது. ஆண்டவனே எல்லாவற்றையும் உணர்த்துகிறவன். அவன் உணர்த்தவில்லையானல் உயிர்க் கூட்டங்கள் எதையும் உணர முடியாது. உணர்த்த உணரும் இயல்புடையவை ஆன்மாக்கள். அவன் உணர்த்தாவிட்டால் பசுக்கள் எதையும் உணரல் முடியாது.

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்று **அப்பர் சுவாமிகள்** பாடுவார்.

"இதுவரைக்கும் நாங்கள் பார்த்த பார்வை சரியான பார்வை அன்று. இப்போது தெளிவாகத் தெரிகிறது. என்னுடைய இடம், என்னுடையது அல்லாத இடம் என்று அல்லவா வேறு பிரித்துப் பார்த்தோம்? இது பிரமன் இருக்கும் இடம், இது திருமாலின் வைகுண்டம், இது இந்திரனது அமராவதி என்று வெவ்வேருகச் சுட்டிக்காட்டிப் பார்த்தோம். இப்போதுதான் உண்மை தெரிந்தது. நீ உண்மையை உணர்த்தியதனல் அகிலம் எல்லாம் நீயாக விளங்குவதைக் கண்டோம். இதுவரைக்கும் இந்த உண்மையை அறியாததற்குக் காரணம் எங்களுடைய சிற்றறிவே. உன்னுடைய திருவருளால் தனியான ஞானக்கண்ணைப் பெற்று உண்மையை உணர்ந்தோம். இதற்குமுன் உன்னைக் காண முடியவில்லை. இப்போது எங்கே பார்த்தாலும் உன் வடிவம் தவிர வேறு எதையும் காண முடியவில்லை" என்று சொன்னர்கள்.

ஞானத்தால் வரும் பார்வை

நாம் இந்த உலகத்தில் இறைவனைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் பார்க்கிறோம். அவன் நம்மைக் காட்டிலும் நமக்கு நெருக்கமாக இருக்கிறன். ஆனலும் அவன் இருப்பதை நாம் நாடுவதில்லை. நம்மைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் என்று தனித்தனியே பார்க்கும்போது பிறரைச் சேர்ந்தவர்களையே அதிகமாகக் காண்கிறோம். ஆனல் இறைவனுடைய திருவருளால் ஆன்மாவுக்கு

ஞானம் உண்டாகி, பார்வையில் தெளிவு ஏற்பட்டால் எல்லாம் ஒன்ருகத் தோன்றும் ; எங்கும் இறைவன் மயமாகத் தோன்றும்.

இறைவனுடைய திருவருளால் ஞானம் பெற்ற பிறகு அவர்களுடைய காட்சி மாறுவதைத் திருமூலர் ஓர் அழகான பாட்டில் சொல்கிருர். அதைச் சற்று இங்கே பார்க்கலாம்.

காட்டு வாரியத்தில் வேலை செய்த ஒருவர் முதல் மனைவி இறந்துவிட்டதனல் 51-ஆவது வயதில் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். முதல் மனைவிக்குக் குழந்தையே இல்லை. 55-ஆவது வயதில் இரண்டாவது மனைவிக்குக் குழந்தை பிறந்தது. அவர் ஓய்வு பெற்ருர். அப்போது குழந்தைக்கு மூன்று வயது. காட்டுப் பகுதியில் அதிகாரியாக வேலை செய்தவராதலின் பல மரங்களை வெட்டிக் கொண்டு வந்து சேர்த்திருந்தார். அவற்றைக் கொண்டு ஒரு பெரிய வீட்டைக் கட்டினுர். கருங்காலி மரம், தேக்கு மரம், சந்தன மரம் என்று எல்லாவற்றையும் கொண்டு வந்தார். கருங்காலியைக் கொண்டு பெரிய பீரோ செய்தார்; மேசை செய்தார். தம்முடைய அருமந்த குழந்தைக்கு என்ன செய்யலாம் என்று பார்த்தார். கடையில் இருக்கிற யானை சிறியதாக இருந்தது. வீட்டிலேயே கருங்காலி மரத்தைக் கொண்டு பெரிய யானையைச் செய்தார். அதற்கு அடியில் சக்கரங்கள் அமைத்தார். அவனை அந்த யானைமேல் உட்கார வைத்துத் தாமே இழுத்தார்.

அதே ஊரில் வேறு ஓர் பகுதியில் முருக பக்தர் ஒருவர் இருந்தார். அவரது குடும்பத்திற்கு ஒரு கோவில் சொந்தமாக இருந்தது. எப்போதும் முருகனை நினைத்துக்கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்வார். எப்போதும் ஆறு, அறுநூறு, ஆருயிரம், ஆறு லட்சம் என்றே கணக்குப் பண்ணுவார். சண்முகநாதனுடைய பக்தர் ஆனதனல் எல்லாம் ஆருக இருக்க வேண்டுமென்பது அவருடைய நினைப்பு. முதலில் அறுநூறு ரூபாயைக் கொண்டு வியாபாரத்தைத் தொடங்கினுர். அறுநூறு ஆருயிரமாகப் பெருகியது. ஆருயிரம் ஆறு லட்சமாக வளர்ந்தது. முருகப்பெருமான் அருளாலே இவ்வளவு செல்வமும் உண்டானதால், தம்முடைய குடும்பக் கோவிலாகிய முருகன் கோவிலில் சிறப்பாகப் பல திருப்பணிகளைச் செய்தார். ஆண்டவனுக்குத் தேர் பண்ண வேண்டுமென்ற ஆசை உண்டா

யிற்று. ஒரு சிற்ப ஆசாரியை அழைத்து, "ஐயா! ஆண்டவனுக்கு ஒரு பெரிய தேரைச் செய்ய வேண்டும். அந்தத் தேரில் முருகப் பெருமானின் திருவிளையாடல்களைக் குறிக்கின்ற சிற்பங்களை அமைக்க வேண்டும்" என்று சொன்னார்.

அந்தச் சிற்ப ஆசாரி அவரைப் பார்த்துச் சொன்னார்; "ஐயா! உங்கள் விருப்பப்படியே செய்யலாம். தேக்கு மரத்தைக் காட்டிலும் வைரம் பாய்ந்த கருங்காலி மரம் கிடைத்தால், நீங்கள் சொல்கிற சிற்பங்களை எல்லாம் கோவில்களிலுள்ள விக்கிரகங்கள் மாதிரியே செய்துவிட முடியும். சிறிதளவு எண்ணெய் பூசிவிட்டால் அசல் கோவில் விக்கிரகங்களேயாக இருக்கும்" என்றார். ரதத்திலுள்ள சிற்பங்களைப் பண்ணக் கருங்காலி மரம் எங்கே கிடைக்கும் என்று பார்க்கலானார்கள்.

ஒருநாள் அந்தச் சிற்ப ஆசாரி, காட்டு வாரிய அதிகாரியாக இருந்தவரின் வீட்டு வழியாகப் போனார். அவருடைய பையன் யானையுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அந்த யானையைப் பார்த்தவுடன், அதன் அருகில் போய் நல்ல கருங்காலி மரமா என்று தட்டிப் பார்த்தார், மோந்து பார்த்தார். "ஆகா! அருமையான வைரம் பாய்ந்த கருங்காலி மரம்" என்று அதைத் தட்டிப் பார்த்தவுடன் சொன்னார். பக்கத்தில் இருந்த குழந்தை அதைக் கேட்டு, "இல்லை, இது என்னுடைய யானை" என்றது. விளையாட்டுத் தன்மை உடைய அந்த குழந்தைக்கு அது யானையாகவே தோன்றியது; மரமாகத் தோன்றவில்லை. இதைத் திருமூலர் சொல்கிறார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை."

சிறு பிள்ளைக்குத் தான் விளையாடுகிற பொம்மையாகிய யானை என்கிற எண்ணமே தவிர, மூலப்பொருளான மரம் தெரியவில்லை. யானை விவகாரம் மரத்தை மறைத்துவிட்டது. அந்தச் சிற்பிக்கோ அந்த மூலப்பொருளில் நினைவு ஓடியதால், இது விளையாடுகிற யானை என்பது மறந்துபோயிற்று. யானை மரத்தை மறைத்தது. மரம் என்று பார்க்கும்போது யானை மறைந்துவிட்டது.

அதுபோல மெய்ஞ்ஞானிகள் இந்த உலகத்தைப் பார்ப்பார்கள். அவர்களுக்கு எல்லாம் இறைவன் வடிவமாகத் தோன்றும். நமக்குப் பஞ்ச பூதங்களாகத் தோன்றுகின்றன. பஞ்ச பூதங்கள் பரத்தை

மறைத்துவிட்டன. அவர்களுக்குப் பரத்தினுள் எல்லாம் மறைந்து போய்விடுகின்றன. இதைத்தான் திருமூலர் அழகாகச் சொல்கிறார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்தில் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்;
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்."

இந்திராதி தேவர்கள் இதுவரைக்கும் இறைவனுடைய அருளைப் பெறாமல் அவர்களுடைய இயல்பான கண்ணால் எல்லாவற்றையும் அறியும்போது அவரவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்பப் பார்த்தார்கள். இறைவனுடைய திருவருளால் அறிவில் தெளிவு பிறந்த பிறகு எல்லாம் அவன் மயமாகவே கண்டார்கள். இதைச் சொல்கிறார் ஆசிரியர்.

அறிகிலம் இந்நாள் காறும்
ஆகிலமும் நீயே யாகி
உறைதரு தன்மை; நீவந்து
உணர்த்தலின் உணர்ந்தாம் அன்றே;
பிறவொரு பொருளும் காணேம்;
பெருமநின் வடிவ மன்றிச்
சிறியம்யாம் உனது தோற்றம்
தெரிந்திட வல்ல மோதான்?

(திருவிளையாட்டுப். 95.)

"இந்தப் பெரிய வடிவத்தை எங்களால் கண்டு தெரிந்து கொள்ள முடியாது. ஆதலின் பழைய வடிவோடு இருந்தருள வேண்டும்" என்று அவர்கள் வேண்டினார்கள். அப்படியே எம்பெருமான் தொன்றுள வடிவத்தோடு தோன்றினான். பிறகு அவர்கள் முருகனைப் பார்த்து, "எம்பெருமானே, சூரன் முதலியவர்கள் எங்களுக்குத் துன்பம் தருகிறார்கள். அவர்களை அழித்து, நாங்கள் உன்னுடைய ஏவல் செய்யும்படி எங்கள் அரசை நீயே ஆட்சி செய்து இருப்பாயாக" என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டு ஆண்டவன் நகைத்தான். குழந்தை தன் மேசையைக் காட்டி, "அப்பா, நீ இதை வைத்துக்கொள்" என்று சொன்னால் தந்தை எப்படி மகிழ்வானோ அதேபோல இறைவன் மகிழ்ந்தான். குழந்தைத் தன்மையை உணர்ந்தான். நகைப்பது போல நகைத்தாலும் இந்திரனது அன்பை உணர்ந்தான்; அறியாமையையும் உணர்ந்தான். "நீ எனக்கு அளித்த நாட்டை உனக்கே தருகிறேன். நான் தேவசேனாபதியாக இருந்து அசுரர்

களுடைய கொட்டத்தை எல்லாம் அடக்குகிறேன். நீ சற்றும் கவலை அடையாதே" என்று அனுக்கிரகம் பண்ணினான்.

முருகன் திருவிளையாடல் செய்யும்போது எவற்றை எல்லாம் வெவ்வேறு இடங்களில் மாற்றி வைத்தானோ அவற்றை எல்லாம் இந்திரன் விண்ணப்பித்துக்கொண்டபடி மீண்டும் வழக்கப்படி இருக்கும்படி செய்தான்.

பிறகு, இந்திரன் மயனைக் கொண்டு பெரிய மணிமண்டபம் அமைத்து முருகனை அங்கே வீற்றிருக்கச் செய்து, ஆராதனை செய்தான். முருகனிடம் விடை பெற்றுக்கொண்டு தேவர்கள் யாவரும் தம் தம் இடங்களை அடைந்தார்கள்.

முருகப் பெருமான் இருந்த இடத்தில் இமயவர்கள் பூசை செய்து வணங்கினமையினால் இமாசலத்திலுள்ள அந்தப் பகுதியை, **கந்தகிரி** என்று யாவரும் சொல்லத் தொடங்கினார்கள். அங்கே சில நாள் முருகன் எழுந்தருளியிருந்தான்.

முருகன் ஆட்டு வாகனம் பெற்றது

உலகம் நன்மைபெற வேண்டி நாரதர் ஒரு யாகம் செய்தார். அதில் ஓர் ஆடு எழுந்தது. எல்லோரையும் தொலைக்கிற பயங்கர மான ஆற்றலுடன் அது வந்தது. அதைக் கண்டு தேவர்கள் நடுங்கி னார்கள்; முருகப் பெருமானிடம் வந்து முறையிட்டார்கள். அப்போது முருகன் வீரவாகுவை நோக்கி, "அந்த ஆட்டைக் கொணர்க" என்று ஏவ, அவரும் அங்கே சென்று, ஆட்டின் இரு கொம்புகளையும் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து எம்பெருமானிடம் விட்டனர்.

ஆடலந் தொழில்மேல் கொண்டே
அனைவரும் இரியச் செல்லும்
மேடமஞ் சுறவே ஆர்த்து
விரைந்துபோய் வீர வாகு
கோடவை பற்றி ஈர்த்துக்
கொண்டுராய்க் கயிலை நண்ணி
ஏடுறு நீபத் தண்டார்
இளையவன் முன்னர் உய்த்தான்.

(தகரேறு. 21.)

[ஆடலந்தொழில் - சண்டை செய்யும் செயலை. இரிய - பயந்து ஓட. மேடம் - ஆடு. கோடு - கொம்பு. ஈர்த்து - இழுத்து. உராய் - உலாவி. நீபத்தண்டார் - கடம்பமாலை.]

அதன்பின் நாரத முனிவர் தம் வேள்வியை நிறைவேற்றினார். வீரவாகு தேவர் கொண்டுவந்த ஆட்டின்மேல் ஆண்டவன் ஏறி அமர்ந்தான். அது முதல் முருகப் பெருமானுக்கு உகந்த வாகனங் களில் அதுவும் ஒன்று ஆயிற்று.

குமர குருபரன்

ஒரு நாள் இந்திரன், பிரமன் முதலிய தேவர்கள் சிவபெருமானைத் தரிசனம் செய்து திரும்பி வந்தார்கள். வழியில் முருகன் அழகான திருவுருவத்தோடு விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவன் பிரமனைப் பார்த்து, "இங்கே வா" என்று அழைத்தான். பிரமன் அருகே வந்து, அவனைக் கீழ் வீழ்ந்து பணியாமல் அஞ்சலி மட்டும் செய்தான். அவன் நிற்கும் நிலையில் அவன் ஆணவம் தெரிந்தது. முருகனைக் கண்டு பணிந்து, கீழ் வீழ்ந்து வணங்குவது முறையாக இருக்க, 'யாரோ சிறுபிள்ளை அழைக்கிறான்; இவனுக்கு நாம் வணங்குவதாவது?' என்ற எண்ணம் கொண்டவன்போலக் கையை மாத்திரம் கூப்பினான். அதனால் அவனது ஆணவம் முருகப் பெருமானுக்குத் தெரிந்தது.

பிரமனது அகந்தை

பிரமனைப் பார்த்து, "இங்கே உட்கார்" என்று சொன்னான். அவன் அமர்ந்தவுடன், "நீ யார்? உனக்கு என்ன வேலை?" என்று கேட்டான்.

அப்போது பிரமன், "உன் தகப்பனாரின் ஆணையால் உலகைப் படைக்கின்ற பிரமன் நான்" என்றான்.

ஆதிதேவனருளும்மைந்த னவனுளத்தைநோக்கியே,
போதனேஇ ருக்கெனப் புகன்றிருத்தி, வைகலும்
ஏதுநீ புரிந்திடும் இயற்கை என்ன, நான்முகன்
நாதனாணை யால்அனைத்தும் நான்படைப்பன் என்றனன்.

(அயனைச் சிறைபுரி. 5.)

[போதனே - பிரமனே. இருக்க என - உட்கார் என்று. வைகலும் - நாள் தோறும். இயற்கை - இயல்பான பணி.]

யாராவது ஒருவரைப் பார்த்தால் முதலில் உனக்கு என்ன வேலை என்று கேட்போம்; பிறகு என்ன படித்திருக்கிறாய் என்று தொடர்ந்து கேட்போம். அப்படியே முருகன் பிரமனைப் பார்த்து, "உனக்கு என்ன வரும்?" என்று கேட்டான். "எனக்கு வேதம் தெரியும்" என்று மிடுக்கோடு பிரமன் பதில் சொன்னான்.

"அப்படியா? எங்கே, கொஞ்சம் வேதத்தைச் சொல், பார்க்கலாம்" என்று முருகன் கூறினான்.

நாதன் ஆணையால் அனைத்தையும் நான்படைப்பன்

என்பதிலே ஓர் அலட்சிய பாவம் இருக்கிறது. 'எல்லாம் வல்ல பரமேசுவரனே எனக்கு உத்தியோகம் கொடுத்திருக்கிறான். அதைப் பற்றி மற்றவர்கள் கேட்க என்ன இருக்கிறது?' என்ற அகம்பாவம் அதில் தொனிக்கிறது.

"வேதம் உனக்கு வருமானால், சொல்" என்று முருகன் கேட்க, அவன் "ஓம்" என்று சொல்லத் தொடங்கினான்.

உடனே முருகப் பெருமான் அவனை நோக்கி, "அதன் பொருள் என்ன?" என்று கேட்டான்.

அவ்வாறு கேட்டவுடன் பிரமன் ஒன்றும் அறியாமல் விழித்தான்; தலையைக் குனிந்து கொண்டான்.

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத் துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத் தினுக்குரை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன்; வெள்கினன்; விக்கித்
திகைத்தி ருந்தனன்; கண்டிலன் அப்பொருள் திறனே.

(அயனைச் சிறைபுரி. 10)

[முன் எழுத்தினுக்கு - முதல் எழுத்தாகிய பிரணவத்துக்கு. மிகைத்த - மக்களுக்கு உள்ளவற்றைவிட மிகுதியாக அமைந்த. வெள்கி - நாணி.]

முருகன் கேட்டவுடன், 'வேதத்தை நம்மால் சொல்ல முடியாதா? நமக்குத்தான் நான்கு வாய்கள் இருக்கின்றனவே' என்று சொல்லத் தொடங்கியிருக்கிறான். ஆனால் முதலில் ஓம் என்று பிரணவத்தைச் சொன்னவுடனேயே, "நிறுத்து; அதன் பொருள் என்ன?" என்று முருகன் கேள்வி கேட்டான்.

இதைப் பிரமன் எதிர்பார்க்கவில்லை. ஆகவே உடல் பதறியது. அவனுடைய எட்டுக் கண்களும் கலங்கின.

இப்போது கூடப் பல பேருக்கு வேத பாராயணம் செய்யத் தெரியும். ஆனால் அதன் பொருள் தெரியாது. ஓதுவார்களிலும் அப்படிச் சிலபேர் இருக்கிறார்கள். அருமையாகப் பாடுவார்கள்; ஆனால் தேவாரத்தின் பொருள் தெரியாது.

பிரமன் பொருள் தெரியாமல் விழித்தான். கச்சியப்ப சிவாசாரியார்,

மிகைத்த கண்களை விழித்தனன்

என்கிறார். எல்லோருக்கும் இரண்டு கண்கள். இவனுக்கோ எட்டுக் கண்கள். பிரமன் எட்டுக் கண்களாலும் விழித்தான்; வெட்கமுற்றான். இரண்டு கண்களைக் கொண்டவர்கள் விழிப்பதைக் காட்டிலும், எட்டுக் கண்களைக் கொண்டவன் விழிப்பது பலருக்கும் தெரியும். முன்பே அகந்தையினால் அவன் அறிவு மறைந்திருந்தான். இப்போது அச்சம் வந்தது. வார்த்தைகள் எழவில்லை.

கோழி சாஸ்திரி

இங்கே எனக்கு எங்கள் ஆசிரியப் பிரான் சொன்ன ஒரு வரலாறு நினைவுக்கு வருகிறது. உடையார் பாளையத்தில் ஒரு ஜமீன் தார் இருந்தார். அவருக்கு யுவரங்கர் என்று பெயர். தமிழ், வட மொழி, இசை முதலியவற்றை நன்றாக அறிந்தவர். அவற்றில் வல்லவர்களைப் பாராட்டி, அவர்கள் கூறுவதைக் கேட்டு நன்றாக ரசிப்பவர். அவரிடத்தில் அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் என்ற வடமொழி வித்துவான் இருந்தார். யுவரங்கரின் பாராட்டைப் பெறுவதற்காகப் பல வித்துவான்கள் அங்கே வருவார்கள். சங்கீத வித்துவான்கள் வந்து பாடுவார்கள். தமிழ்ப் புலவர்கள், வடமொழி வித்துவான்கள் வந்து தாம் இயற்றியுள்ள பாடல்களைச் சொல்வார்கள். யுவரங்கர் கொடுப்பது சிறிய பரிசாக இருந்தாலும், சுவை அறிந்து கொடுப்பார். ஆகையால் அதைப் பெரிதாக எண்ணி மதித்துப் போவார்கள்.

அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் மிகப் பெரிய வித்துவான்; கவிஞர். வெளி ஊரிலிருந்து வருகிற புலவர்கள் அவரைப் பார்த்து, "இந்தக் காட்டில் இருக்கிறீர்களே! எங்கள் மைசூருக்கு வந்தால் எங்கள் அரசர் உங்களைப் பட்டுப் பீதாம்பரத்தால் அலங் கரிப்பார்" என்று சொல்வார்கள்.

அவர், "காட்டில்தான் சிங்கம் இருக்கும். எங்கள் அரசர் சிங்கத்தைப் போன்றவர். என்னதான் உங்கள் அரசர் எனக்குப் பீதாம்பரம் போர்த்தினாலும், எங்கள் அரசர் சொல்வதன் சுவை அறிந்து, தலையை அசைத்து ரசிக்கிறாரே, அதற்குச் சமான மாகுமா?" என்று கேட்பார்.

கலைஞர்கள் தாம் பெறும் பரிசைப் பெரிதாக எண்ணுவதில்லை. நன்ருக ரசிப்பவர்களையே மதிப்பார்கள். எங்கே ரசிக்க வேண்டுமோ அங்கே ரசித்தால்தான், உண்மையான கலைச்சுவை தெரிந்தவர்கள் என்று கலைஞர்கள் மகிழ்வார்கள்.

அனந்தகிருஷ்ண சாஸ்திரியாரின் குருநாதர் கோழி மங்கலம் என்ற ஊரில் இருந்த ராமா சாஸ்திரிகள். அனந்தகிருஷ்ண சாஸ்திரியாருக்குத் தம் குருநாதரை அழைத்து வந்து, யுவரங்கரிடம் அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. ராமா சாஸ்திரியார் அதை விரும்பவில்லை. சில முறை சொல்லிப்பார்த்தார். "எனக்கு அங்கே என்னடா வேலை?" என்று சொல்லி விட்டார்.

"அவர் மிகவும் ரசிகர். உங்களிடத்தில் மிக மரியாதையாக இருப்பார். நீங்கள் சும்மா வந்துவிட்டுத் திரும்பிவிடலாம்" என்று இவர் வற்புறுத்தினர்.

இந்தத் தொந்தரவு பொறுக்காமல் அவரும் இவருடைய வேண்டுகோளுக் கிணங்கி உடையார்பாளையம் போனர். கையில் ஏதேனும் காணிக்கை கொண்டுபோகவேண்டு மென்ற எண்ணத்தில் ஒரு தேங்காயை வாங்கிக் கொண்டு போனர்.

அங்கே ஜமீன்தார் அமர்ந்திருக்க, பக்கத்தில் பெரிய மீசையுடன் சிலர் கையில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்கள். இத்தகைய காட்சியை ராமா சாஸ்திரிகள் அதற்குமுன் எங்கும் பார்த்தது இல்லை. அவருக்குக் கொஞ்சம் நடுக்கம் உண்டாயிற்று.

அப்போது யுவரங்கர், "தாங்கள் யார்?" என்று கேட்டார். உள்ளே இருக்கிற நடுக்கத்தினலே அவர் வாய் குழறிற்று. "கோழி மங்கலம் ராமா சாஸ்திரிகள்" என்று சொல்வதற்குப் பதிலாக வாய் குழறி, "ராமா மங்கலம் கோழி சாஸ்திரிகள்!" என்று சொல்லிவிட்டார்! அவர் நீட்டிய தேங்காய் கை நடுக்கத்தில், கீழே விழுந்து உடைந்துவிட்டது. அதன் பிறகே தெளிவு பெற்ருர். நிமிர்ந்து நின்று உடையாரிடம் சொன்னர். "உங்களை உடையார் என்று சொன்னர்கள். தேங்காய் உடைந்துவிட்டதே!" என்ருர். உடையார்பாளையம் ஜமீன்தார்கள் காலாட்கள் தொழ

உடையார் என்ற பட்டம் உடையவர்கள். அதனால்தான் அந்த ஊருக்கே உடையார்பாளையம் என்ற பெயர் வந்தது.

அவ்வளவு படித்த பெரியவருக்கே ஜமீன்தாரைக் கண்டு மனம் நடுங்கி, வாய் குழறுமானல், எல்லாம் வல்ல சர்வக்ஞன் ஆன முருகப் பெருமானுக்கு முன்னாலே அகந்தையுடைய பிரமன் எப்படி நடுங்கியிருப்பான் என்பதைக் கற்பனையினல் எண்ணிப் பார்க்கலாம்.

பிரணவத்தின் சிறப்பு

ஈசன் மேவரும் பீடமாய், ஏனையோர் தோற்றும்
வாச மாய், எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன்பயன் ஆய்ந்தான்.

(அயனைச் சிறைபுரி. 11.)

[மறைகட்கும் - வேதங்களுக்கும்; மந்திரங்களுக்கும் என்றும் சொல்லலாம். முடிபவர்க்கு - இறப்பவர்களுக்கு.]

பிரணவம் என்பது பரமேசுவரன் எழுந்தருளிய பீடம். எல்லா எழுத்துக்களுக்கும் முதலானது. வேதங்களுக்கு எல்லாம் ஆதியானது. அந்தமானது. வேதத்தின் வேர் என்று பெரியவர்கள் பிரணவத்தைச் சொல்வார்கள். காசியில் ஜீவர்கள் உயிர் விடும்போது அவர்கள் காதில் சிவபெருமான் ஓதுகிற மந்திரம் பிரணவந்தான்.

பிரணவம் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்ற மூன்றின் வடிவம். ஓம் என்பது அகார, உகார, மகாரங்கள் சேர்ந்த எழுத்து. அகரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதலானது. அதனைத் திருக்குறளின் முதல் பாட்டுச் சொல்கிறது. வாயைத் திறக்காமல் அந்த எழுத்தைச் சொல்ல முடியாது. எல்லா எழுத்துக்களிலும் அகரம் இணைந்திருக்கிறது என்று கூறுவார்கள். பரமேசுவரன் எல்லாப் பொருள்களிலும் கலந்து இருப்பதுபோல, அகரம் எல்லா எழுத்துக்களிலும் கலந்து இருக்கிறது.

அகரத்தை உச்சரிக்கும்போது வாய் திறக்கிறதே, அது சிருஷ்டி. உகரத்தைச் சொல்லும்போது இதழ் குவிகிறது. அது ஸ்திதி, பாதுகாப்பு. மகரத்தில் இதழ் மூடிக்கொள்கிறது. அது எல்லாவற்றையும் முடிக்கிற சங்காரத்தைக் காட்டுகிறது. இப்படி அகர, உகர, மகரங்கள் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரத்தைக் காட்டும்.

ஒரு வகையில் எல்லாம் அற்ற சூன்யத்திலும், எல்லாம் நிறைந்த இடத்திலும் ஓங்காரம் இருப்பதைக் காணலாம். காலியாக இருக்கிற பானையில் காதை வைத்துக் கேட்டால் ஓம் என்ற ஒலி வரும். சூன்யமாக இருக்கும் இடத்தில் ஓம் என்பது இருக்கிறது. அதிலிருந்தே எல்லாம் பிறக்கின்றன.

ஒரு சந்தையில் பல மக்கள் கூடி வியாபாரம் செய்கிறார்கள்; பொருள்களை வாங்குகிறார்கள். அவரவர் தனித்தனியே வெவ்வேறு வார்த்தைகள் சொல்கிறார்கள்; வெவ்வேறு மொழிகளில் பேசுகிறார்கள். அந்தச் சந்தையிலிருந்து சிறிது தூரத்தில் நின்று கேட்டால் அந்த வார்த்தைகள் முழுவதும் காதில் படுவதில்லை. ஓம் என்ற முழக்கமே காதில் படும். எல்லா ஒலிகளும் சேர்ந்த கூட்டு ஒலியாக ஓம் இருப்பதை அப்போது உணரலாம். ஒன்றும் இல்லாத சூன்யத்திலும் ஓம்காரம்; எல்லாம் நிறைந்தபோதும் ஓம்காரம்.

வேதத்தைத் தொடங்கும்போது பிரணவத்தைச் சொல்வார்கள்; முடிக்கும்போதும் ஓம் என்று முடிப்பார்கள்.

இந்தப் பிரணவத்திற்குப் பொருள் சொல்லத் தெரியாமல், நான்கு வேதமும் படித்த பிரமனே இப்படிக் கலங்கினான் என்றால் நாம் எல்லாம் எந்த மூலை என்று கச்சியப்பர் சொல்கிறார்.

தூம றைக்கெலாம் ஆதியும் அந்தமும் சொல்லும்
ஓம்எ னப்படும் ஓரெழுத் துண்மையை உணரான்,
மாம லர்ப்பெருங் கடவுளும் மயங்கினான் என்றால்
நாம்இ னிச்சில அறிந்தனம் என்பது நகையே.

(அயனைச் சிறைபுரி. 13.)

பிரமனும் கலைமகளும்

மனிதர்களுக்கு மூன்று வகையில் அகந்தை உண்டாகும்; தாம் பெற்ற செல்வத்தாலும், தம் உடல் வலிமையினாலும், கல்வியினாலும் அகந்தை உண்டாகும். பிரமன் கல்வியிலே சிறந்தவன். அவன் கலைமகளுக்கு நாயகன். அவனுடைய நாவில் கலைமகள் வாழ்கிறாள்.

நான்முகன் படைக்கின்றவன். புதியதைப் படைக்க வேண்டுமானால் அவனுக்கு அறிவு வேண்டும். படைப்புக் கலைகளை 'க்ரியேடிவ் ஆர்ட்' (creative art) என்று சொல்வார்கள். படைப்பைத் தொழிலாகக் கொண்ட பிரமனுக்கு அதற்குரிய அறிவு வேண்டும்.

அவன் நாவில் கலைமகள் இருக்கிருள் என்பது அவன் படைப்பதற் குரிய அறிவு உடையவன் என்பதைக் காட்டும்.

கலைஞனின் படைப்புக்கும், தொழிலாளியின் படைப்புக்கும் வேறுபாடு உண்டு. தொழிலாளி ஆயிரம் படைத்தாலும் எல்லாம் ஒரே மாதிரி இருக்கும். ஆனல் கலைஞன் படைப்பில் ஒவ்வொன்றும் தனித்தனி அழகோடு இருக்கும்.

ஒரு சங்கீத வித்துவான் ராகம் ஒன்றைப் பாடுகிருர். வெவ் வேறு இடத்திற்குச் சென்று அந்த ராகத்தைப் பாடினுர் என்ருலும் ஒவ்வோர் இடத்திலும், அந்த அந்தச் சமயத்திற்கு ஏற்றபடி மனே தர்மம் வேருக இருக்கும். இதுதான் கலைஞனது திறமை.

பிரமன் சிறந்த கலைஞன் என்பதை அவனது படைப்பினுல் தெரிந்து கொள்ளலாம். உலகத்தில் இதுவரைக்கும் எத்தனையோ கோடி மனிதர்கள் பிறந்திருக்கிருர்கள். எல்லா மக்களுடைய முகமும் ஒரே மாதிரி இருப்பது இல்லை. முகத்தினுடைய அமைப்பு ஒன்ருகவே இருக்கிறது. கண், மூக்கு, வாய், முதலிய உறுப்புகள் அந்த அந்த இடங்களில் அமைந்திருந்தாலும் ஒரு மனிதனைப் போல மற்ரெரு மனிதன் இருப்பதில்லை. இத்தகைய அமைப்பு, பெரும் கலைஞனுகிய பிரமனுல் அமைகிறது.

கலைமகளைப் பிரமன் படைத்து அவளை மணந்து கொண்டான் என்று புராணம் சொல்கிறது. இதைச் சிலர் குறை சொல்லிப் பரி காசம் செய்வார்கள்; "பிரமன் தான் பெற்ற மகளையே மணந்து கொண்டான் என்ருல் வெட்கமாக இல்லையா? இப்படி ஒரு மதம் உண்டா?" என்று பரிகாசம் செய்வார்கள்.

ஒரு பெரிய சங்கீத வித்துவான் ஓர் ஊரில் பாட்டுக் கச்சேரி நடத்தினுர். எங்கே கச்சேரி நடந்தாலும் அவருடைய நண்பர்கள் வந்து கூடுவார்கள். கச்சேரி முடிந்த பிறகு, உட்கார்ந்து, வெற் றிலை பாக்குப் போட்டுக்கொள்ளும்போது, அவரிடம் பலர் வந்து, "இன்றைக்கு நீங்கள் இன்ன ராகம் பாடினீர்களே; மிக அற்புத மாக இருந்தது; இன்ன கீர்த்தனம் மிகவும் இனிமையாக இருந்தது" என்றெல்லாம் சொல்வார்கள். அதைக் கேட்டு மகிழ்வார் அந்த வித்துவான்.

ஒரு நாள் கச்சேரி நடந்தவுடனே, வெளி ஊருக்குப் புறப்பட்டு விட்டார். கூட வந்தவர்களும் அவருடன் சென்ருர்கள். ரெயிலில் போகும்போது, " இன்றைக்குப் பேச நேரம் இல்லே. உங்கள் பாட்டு எப்படி இருந்தது என்பதை ரசிகர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது போய்விட்டது " என்ருர்கள். அதைக் கேட்டுச் சங்கீத வித்துவான் சொன்னர் ; " நிச்சயமாக அவர்களும் ரசித்திருப் பார்கள். நான் ரசித்துப் பாடினேன் " என்ருர்.

கலேஞன் தான் முதல் முதலில் தன் கலேயை ரசிப்பான். ஒரு சிற்பி கல்லில் இறைவனது திருவுருவத்தை வடிக்கிருன். அந்தக் கல்லில் கால் வைத்து உட்கார்ந்து கொண்டுதான் அந்தச் சிற்பத் தைச் செதுக்குகிருன். விக்கிரகம் வடித்த பிறகு அதை உரியவர் களிடம் கொடுக்கிருன். அந்த விக்கிரகத்தைக் கோவில் கட்டி, பிரதிஷ்டை பண்ணி, கும்பாபிஷேகம் செய்கிருர்கள். அப்போது அந்தச் சிற்பி தானே தேங்காய் பழம் வாங்கிக்கொண்டு கோவிலுக் குச் சென்று, "என் பெயருக்கு ஓர் அருச்சனே பண்ணுங்கள்" என்று சொல்வான். "நான் கால் வைத்து உட்கார்ந்து அடித்த கல்தானே?" என்று சொல்வான ? கலேஞன் தன் படைப்புக்குத் தானே முதல் ரசிகளுக இருக்கிருன். இதைத்தான் பிரமன் கலே மகளேக் கல்யாணம் செய்துகொண்டான் என்ற கதை விளக்கு கிறது. உலகத்தில் கணவன், மனேவி என்றுள்ள உறவாக நாம் எண்ணக் கூடாது. கலேஞனுக்கும் கலேக்கும் உள்ள தொடர்பை அங்கே காணவேண்டும்.

அகங்காரத்தின் விளேவு

ஆகவே, நல்ல கலேஞனுசு இருக்கிற பிரமன் இப்போது அகங் காரம் அடைந்தான். பணத்தினுலே அகங்காரம் உண்டானல் பணம் போனவுடன் அதுவும் அழிந்துவிடும். "ஆறிடும் மேடும் மடுவும் போல் ஆம் செல்வம்." ஆதலால் மனித வாழ்வில் செல்வம் போனல் அகங்காரம் போய்விடும். அப்படியே உடல் வலிவினல் அகங்காரம் உண்டானல் உடலில் தளர்ச்சி ஏற்பட்டபோது உடல் வலிமை காரணமாகத் தோன்றிய அகங்காரம் போய்விடும். ஆனல் கல்வியி னல் உண்டான அகங்காரம் எளிதில் போகாது. ஒரு பிறவியில் கற்ற கல்வி, பிறவிதோறும் தொடர்ந்துவரும் என்று சொல்வார்கள்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று **வள்ளுவர்** சொல்கிறார். கல்வி தொடர்வதுபோல, அதனால் உண்டான அகங்காரமும் தொடர்ந்து வரும். ஆகையால் மற்றவர்களுக்கு வருகிற அகங்காரத்தைவிட, கற்றவர்களுக்கு வருகிற அகங்காரம் மிகவும் பொல்லாதது.

பிரமன் மிகச் சிறந்த அறிவாளி. என்றாலும் அறிவாளிக்கும் குருவாக இருக்கிற முருகனைக் கண்டவுடன் கீழே வீழ்ந்து பணியாமல், 'நாம் அறிவாளி' என்ற அகந்தையினால் நின்றான்.

இறைவனுடைய திருவருளைப் பெறவேண்டுமானால் முதலில் அகந்தை போகவேண்டும். அகந்தை இருக்கும் வரைக்கும் உண்மையான பக்தி ஏற்படாது.

இங்கே ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. பாரதியின் மாணாக்கரும், சிறந்த தமிழ் எழுத்தாளருமாகிய வ. ரா. என்பவர் ஒரு நாள் ஒன்று சொன்னார். ஓரிடத்தில் சொற்பொழிவு ஆற்றும்போது அந்தக் கருத்தைச் சொன்னார். "இந்தத் தமிழ்ச் சாதி தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற சாதி. தம் குற்றத்தை மற்றவர்கள்மேல் ஏற்றும் பழக்கம் தமிழர்களுக்கு இருக்கிறது. ரெயிலுக்கு நேரம் கழித்துப் போகிறான்; அது போய்விடுகிறது. அப்போது 'ரெயில் தப்பிவிட்டது' என்று சொல்கிறான். ரெயிலா தப்பிவிட்டது? இவன் ரெயிலைத் தப்பவிட்டான். வெள்ளைக்காரன் நேர்மையாக, 'நான் ரெயிலைத் தவற விட்டேன்' (I missed the train) என்று சொல்கிறான்.

"முள்ளில் காலை வைத்துக் குத்திக் கொண்டுவிட்டு, 'முள் தைத்து விட்டது' என்று சொல்கிறான். வெள்ளைக்காரன், 'I ran a thorn' என்று உண்மையைச் சொல்கிறான். நாமே நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, நம் குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றுகிறோம்" என்று பேசினார்.

அவர் அப்படிச் சொன்னபோது நியாயமாகத் தோன்றியது. ஆனால் பிறகு யோசனை பண்ணிப் பார்த்தேன். பழைய காலத்தில் ரெயில் இல்லை. முள் இருந்தது. முள்ளைக் குத்திக்கொண்டு, முள் தைத்துவிட்டது என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஞானசம்பந்தப்

பெருமான், நம்மாழ்வார் போன்றவர்களும் அப்படித்தான் சொல்லி இருப்பார்கள். அவர்களை எல்லாம் முட்டாளாக்கி, நான் மட்டும் அறிவுக்குஞ்சாக எனக்கு விருப்பம் இல்லை. எண்ணிப் பார்த்தேன். பின்பு உண்மை புலனாயிற்று.

ஒருவர் வீடு கட்டத் தொடங்குகிறார். பணம் இல்லாமையினால் கீழ்த்தளத்தோடு வேலை நின்றுவிட்டது. அதை ஒருவர் பார்த்தார். பின் அடுத்த வருஷம் பார்க்கும்போது அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ட நண்பர் அந்த வீட்டுக்காரரிடம், "கட்டிடம் கட்டிவிட்டீர்கள் போலிருக்கிறதே!" என்கிறார். அதற்கு அவர், "கட்டிவிட்டேன்" என்று சொல்லமாட்டார்; "கட்டிடம் கட்டியாச்சு" என்று சொல்வார்.

அப்படியே தம் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணினவரைப் பார்த்துக் கேட்டால், "கல்யாணம் செய்தேன்" என்று சொல்ல மாட்டார்; "கல்யாணம் ஆச்சு" என்று சொல்வார். இப்படி, "நான் செய்தேன்" என்று சொல்லாமல் வேறு வகையில் சொல்கிற பழக்கம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நல்லதானாலும், பொல்லாததானாலும் எல்லாம் ஆண்டன் செயல் என்பதை எண்ணி அப்படிச் சொல்லப் பழகிக்கொண்டிருக்கிறோம். நல்லதானாலும் அப்படியே சொல்வோம்; கெட்டதானாலும் கூட, எல்லாம் இறைவன் செயல் என்ற எண்ணத்தோடு பேசுவோம்.

"நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே"

என்று **மாணிக்கவாசகர்** பாடுவார். அகங்காரம் உண்டாகாமல் இருப்பதற்காக, நான் என்று சொல்லாமல் பேசுவதற்காக, அமைந்த பழக்கம் இது.

நான் என்ற எண்ணம் இருக்கும் வரைக்கும் இறைவன் அருள் கிடைக்காது. நாம் சமையல் பண்ணுகிற பண்டங்களில் கூட இதனைத் தெரிந்துகொள்ளலாம்.

ராத்திரியில் ஒருவன் தன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டுகிறான். யார் என்று உள்ளே இருக்கிறவர்கள் கேட்கிறார்கள். அவன் தன் பெயரைச் சொல்லாமல், "நான்" என்று சொல்கிறான். மறுபடியும் தட்ட, உள்ளே உள்வர்கள் மறுபடியும் கேட்க, அப்போதும் அவன், "நான்தான்" என்று சொல்கிறான். நான்

என்பது போதாது என்று தான் என்பதையும் சேர்த்துச் சொல்கிறுன்.

நம்முடைய சமையலில் குழம்பு, ரசம் என்று வேறு வேருக இருக்கின்றன. குழம்பில் தான் இருக்கும். ரசத்தில் தான் இல்லை. அதுபோலத் தான் என்ற அகந்தை இருந்தால் அவர்களுக்கு எல்லாம் குழம்பும்; இல்லையானல் ரசம்போலத் தெளிவாக இருக்கும்.

நான் என்று சொல்வதற்கு உரியவன் ஒருவன்தான். யார் எல்லாச் செயல்களையும் செய்கிறுனே அவன்தான் நான் என்று மார்தட்டுவதற் குரியவன். இரணியனைப்போல நான் என்ற அகங்காரத்தோடு இருப்பவன் கடைசியில் அழிந்து போவான். இறைவன் ஒருவன்தான் நான் என்று மார்தட்டுவதற்குரியவன், அருணகிரியார்,

"நான்என்று மார்தட்டும் பெருமாளே"

என்று **திருப்புகழில்** பாடுகிறுர்,

முருகன் அயனைச் சிறையிடுதல்

முருகப் பெருமான் நான்முகனைப் பார்த்து, "வேதத்தில் முதல் எழுத்திற்கே உனக்குப் பொருள் தெரியவில்லை. வேதம் முழுவதும் தெரியும் என்று அகந்தையோடு இருக்கிறுய். தகுதி இல்லாமல் உத்தியோகம் எப்படிப் பண்ணுகிறுய்?" என்று கேட்டான்.

பெரிய கணக்குகளைப் பார்க்கும் அதிகாரிக்கு, நாலும் நாலும் எட்டு என்று கூட்டத் தெரியாவிட்டால், அவனை உத்தியோகத்தில் வைத்துக் கொள்ளலாமா? உலகத்தை எல்லாம் படைக்கும் ஒரு பெரியவன் இப்படித் தகுதி இல்லாமல் இருக்கலாமா? அதனை எண்ணும்போது முருகனுக்குக் கோபம் வந்தது. பிரமனுடைய நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் தன்னுடைய பன்னிரண்டு கைகளாலும் குட்டினுன்.

எட்டொ ணுதஅக் குடிலையின் பயன்இனைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலும், இதன்பொருள் கருதாய்;
சிட்டி செய்வதித் தன்மைய தோஎனுச் செவ்வேள்
குட்டி னுன்அயன் நான்குமா முடிகளும் குலுங்க.

(அயனைச் சிறைபுரி. 14.)

[குடிலை - பிரணவம். கட்டுரைத்திலன் - சொல்லவில்லை.]

தன் சகோதரர்களிடம் சொல்லி அவனுடைய காலில் விலங்கு போடும்படி செய்து, கொண்டுபோய்ச் சிறையில் தள்ளினுன், முருகன். கந்தகிரியில் ஒரு குகையில் இருந்த சிறையில் நான்முகன் அடைபட்டுக் கிடந்தான்.

முருகப் பெருமான் படைத்தல்

பிறகு முருகப் பெருமானே படைக்கும் தொழிலே மேற்கொண்டான். ஒரு பேராசிரியர் கல்லூரியில் பாடம் சொல்லிக் கொடுக்கிருர். அவருடைய பிள்ளை எஸ். எஸ். எல். சி. பரிட்சைக்குப் போகிருன். அவனுக்கு 'ட்யூஷன்' சொல்லித்தர வாத்தியாரை வைத்திருக்கிருர். அவர் இரண்டு நாள் வராவிட்டால், அந்தப் பேராசிரியரே அந்தப் பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க மாட்டாரா ?

அது போல் எல்லாவற்றையும் ஆக்கிப் படைத்துப் பரிபாலிக்கின்ற முருகப் பெருமான், நான்முகன் காரியத்தைத் தானே செய்யத் தொடங்கினுன் என்பதில் என்ன வியப்பு ?

ஒரு கரத்தில் ஜபமாலையையும், மற்ருெரு கரத்தில் கலசத்தையும் வைத்து, இரண்டு கரங்களில் வரதம், அபயம் காட்டி, பரம்பொருளின் மகனுகிய எம்பெருமான் ஒரு முகத்தைப் பெற்று, பிரமன் செய்கின்ற படைப்பைச் செய்யத் தொடங்கினுன்.

ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருள் மகன்ஓர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.

(அயனைச் சிறைபுரி. 17.)

[கண்டிகை வடம் - உருத்திராட்ச மாலை. பரித்து - தாங்கி. குண்டிகை - கமண்டலம். விதி - படைப்புத் தொழில்.]

எல்லா உயிர்களுக்கும் உயிராய் இருப்பவன் அவன். எல்லாச் சுடர்களுக்கும் மேலான சுடராக விளங்குகின்றவன். எல்லா வேதங்களுக்கும் முடிவுப் பொருளாக இலங்குபவன். படைத்தல் முதல் உள்ள செயல்களுக்கு எல்லாம் மூலகாரணமாக இருக்கிறவன். அப்படி இருக்கிற முருகப் பெருமான் பிரமனுக இருந்து படைப்புத் தொழில் செய்வதில் என்ன அற்புதம் இருக்கிறது ?

உயிரி னுக்குயி ராகியே பரஞ்சுட ரொளியாய்
வியன்ம றைத்தொகைக் கிறதாய் விதிமுத லுரைக்கும்
செயலி னுக்கெலாம் ஆதியாய் வைகிய செவ்வேள்
அயனை னப்படைக் கின்றதும் அற்புத மாமோ ?

(அயனைச் சிறைபுரி. 18.)

[வியன் மறை - விரிவான வேதம். விதி - படைத்தல்.]

நூறு மைல் சைக்கிளில் போகின்ற ஆற்றல் உள்ள ஒருவன் ஒரு பர்லாங்குத் தூரம் சைக்கிளில் போனான் என்றால் அது ஆச்சரியம் ஆகுமா ? அது அவனுக்குச் சிறு விளையாட்டு. இங்கே முருகப் பெருமான் படைப்புத் தொழிலை விளையாடலைப் போலவே செய்தான்.

முருகப் பெருமானின் படைப்பு எப்படி இருந்தது ? நான்முகன் பேத புத்தி உள்ளவன். பேத புத்தி உள்ளவன் படைப்பில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கும். ஒன்று மற்றொன்றைப் போல இராது. முருகப் பெருமானின் படைப்பில் எல்லாம் ஒரே மாதிரி இருந்தன. முருகனால் படைக்கப்பட்டவர்கள் சுகப்பிரம்மம் மாதிரி உட்கார்ந்து விட்டார்கள். அவர்கள் எந்தக் குணமும், குற்றமும் இன்றி இருந்தார்கள். அவை இருந்தால்தான் தேவர்களை உபாசிப்பார்கள். அப்படி யில்லாமல் அவர்கள் மக்களாகப் பிறந்த வுடனேயே முனிவர்களாக அமர்ந்துவிட்டார்கள்.

நோயாளியே இல்லாத ஊரில் டாக்டருக்கு என்ன வேலை ? கடன் வாங்குகிறவர்கள் இல்லாவிட்டால் பாங்குக்கு என்ன வேலை ? அது போல எல்லா உயிர்களும் மெய்ஞ்ஞான மூர்த்திகளாக இருக்கிற போது தேவர்களுக்கு உணவு இல்லை. மக்களோ எல்லாக் கர்மாக்களையும் விட்டு விட்டு யோகிகளாக அமர்ந்திருந்தார்கள். மனிதர்கள் வேள்வி நடத்திப் பல காரியங்களைச் செய்தால்தான் தேவர்களுக்கு உணவு கிடைக்கும். இப்போது முருகப் பெருமான் படைத்த உயிர்கள் அத்தனையும் மெய்ஞ்ஞான நிலையில் இருந்தமையினால் தேவர்கள் அவர்களைக் கவனிக்க வேண்டிய நிலையில் இல்லை. ஆகவே, தேவர்கள் எந்தச் செயலையும் செய்யாமல் உணவு பெறாமல் இருந்தார்கள்.

திருமுருகாற்றுப்படையில் நான்முகனைச் சிறையிட்ட செய்தி வருகிறது. நச்சினார்க்கினியர் அதைச் சொல்கிறார். ஆனால் அங்கே ஒரு வேறுபாடு. சூரசங்காரம் ஆன பிறகு நான்முகனைச் சிறையில்

தள்ளியதாக அங்கே வருகிறது. சூரசங்காரம் ஆன பிறகு முருகப் பெருமான் தன்னுடைய கையிலுள்ள வேலைப் பார்த்து, "இந்த வேல்தான் வெற்றியை வாங்கித் தந்தது" என்று சொன்னான். அது உபசாரத்திற்காகச் சொன்ன வார்த்தை. பக்கத்தில் இருந்த பிரமன், "அந்த வேலை நான்தானே செய்து கொடுத்தேன்?" என்று அகங்காரத்தோடு பேசினான். உடனே எம்பெருமான் அவனைச் சிறையில் அடைத்தானாம். பிரமன் சிறையில் அடைபட்ட வுடன் மற்றவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது.

தேவர் செயல்

ஒரு பணக்காரர் பெரிய திருமாளிகை ஒன்றைக் கட்ட நினைத்தார். அஸ்திவாரம் போடுவதற்கு ஓர் என்ஜினியர், கட்டிடத்தை எழுப்ப ஓர் என்ஜினியர், மேல்மாடி கட்ட ஓர் என்ஜினியர் என்று இப்படிப் பல என்ஜினியர்களுக்குக் காண்ட்ராக்ட் கொடுத்தார்; முன் பணமும் கொடுத்து விட்டார். அஸ்திவாரம் போடுகிற என்ஜினியருக்கு உடல் நலம் இல்லாமல் போய்விட்டது. அதனால் கட்டிட வேலை தாமதமாயிற்று. ஒரு நாள் அவருடைய மைத்துனன் வந்தான். அவனிடம் இந்தச் செய்தியைச் சொன்னபோது அவன் கேட்டானாம்; "அஸ்திவாரம் போடுகிற என்ஜினியருக்கு உடல் நலம் சரியில்லையானால் மற்றவர்களுக்கு என்ன? மற்றவர்கள் தங்கள் தங்கள் வேலைகளை முடிக்கக்கூடாதா?" என்றானாம். அதைக் கேட்டுச் சிரிப்பதா? அழுவதா? எல்லாவற்றுக்கும் மூலமான அஸ்திவாரம் இல்லாவிட்டால், மற்ற என்ஜினியர்கள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாக இருந்தாலும், எப்படி அவர்களால் வேலை செய்யமுடியும்?

அடிப்படையான படைப்பே இல்லாமல் போய்விட்டது, நான்முகன் சிறையில் இருந்ததனால். அதனால் மற்றவர்களுடைய காரியங்களும் நடைபெறவில்லை. விஷ்ணு, ருத்திரன் ஆகியோருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. அதனால் மற்றவர்கள் வருந்தித் தங்கள் தொழில் முறையாக நடைபெறவேண்டு மென்ற எண்ணத்தினால் நான்முகனைச் சிறையிலிருந்து மீட்க வேண்டுமென்று விரும்பினார்கள்; முருகப் பெருமானிடத்தில் வந்து விண்ணப்பித்துக்கொள்ள முயன்றார்கள்.

திருமுருகாற்றுப்படையில் திரு ஆவினன்குடிபற்றி வருகிற போது இந்தச் செய்தி வருகிறது. நான்முகனைச் சிறையிலிருந்து மீட்பதற்குத் தேவர்கள் வருகிறார்கள். சிவபெருமான், திருமால், இந்திரன் முதலானவர்களும் வருகிறார்கள். முருகப் பெருமானிடத்தில் செல்வாக்கு உடையவர்கள், அவனுக்குப் பிரியமானவர்கள் யார் என்று தெரிந்துகொண்டு, அவர்களை முன்னிட்டுக்கொண்டு வருகிறார்களாம். முதலில் முனிபுங்கவர்களையும், அடுத்துப் பாடும் கந்தர்வர்களையும் அனுப்பி, அவர்களுக்குப் பின்னால் இந்திராதி தேவர்கள் உள்ளே வருகிறார்கள். இப்படித் திருமுருகாற்றுப்படை சொல்கிறது.

கந்தபுராணத்தில் முருகப் பெருமானின் இளமைத் திருவிளையாட்டிற்குப் பிறகு பிரமனைச் சிறையிட்ட வரலாறு வருகிறது.

பிரமன் சிறையில் இருக்க, முருகப் பெருமான் படைப்புத் தொழிலை மேற்கொண்டதனாலே, யாவரும் ஞானிகளாகத் தோன்ற, தேவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஆகையால் அவர்கள் சிவபெருமானிடம் வந்து முறையிட்டார்கள்.

"உன்னுடைய திருக்குமாரன் பிரமனைப் பிரணவப் பொருளைக் கேட்டான். அவன் சொல்லாமல் இருக்கவே, அவனைச் சிறையிலே தள்ளிவிட்டுத் தானே படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கி விட்டான். முருகப் பெருமான் உனக்கு எப்படிக் குமாரனோ, அப்படியே பிரமனும் உன்னுடைய குழந்தைதானே? பிரமன் மிகவும் வருத்தப்படுகிறான்" என்றார்கள் தேவர்கள்.

கந்த வேளெனக் கஞ்சனும் ஐயநின்
மைந்த னும்; அவன் வல்வினை ஊழினால்
அந்த மில்பகல் ஆழ்சிறைப் பட்டுளம்
நொந்து வாடினன்; நோவுழந் தானரோ.

(அயனைச் சிறை நீக்கு. 7.)

[கஞ்சன் - தாமரையில் வாழும் பிரமன்.]

எல்லோருக்கும் விதி விதிக்கிறவன் நான்முகன். அவனுக்கு இத்தகைய விதி வந்துவிட்டது. அவனுக்கு இந்த விதியை விதித்தவன் முருகப் பெருமான். அதை மாற்றுவதற்கும் முருகன்தான் வர வேண்டும். எல்லார் தலையிலும் எழுதுகிற பிரமன் தலையில் அவன் குட்டிவிட்டான். "அவன் தன் ஊழ்வினையினால் சிறை பெற்றனன்"

என்று தேவர்கள் முறையிட, சிவபெருமான் நந்தியை அனுப்பிக் குமாரனிடம் சென்று பிரமனை விடுதலை செய்யச் சொல் என்று அருளினன்.

முருகன் செயல்

நந்தி முருகப் பெருமானிடம் வந்து கும்பிட்டு, "உன்னுடைய தந்தையார் பிரமனை விடுதலை செய்யச் சொன்னர்" என்று விண்ணப் பித்துக்கொண்டான். அதைக் கேட்ட முருகனுக்குக் கோபம் வந்து விட்டது.

என்னும் முன்னம் இளையவன் சீறியே
அன்ன ஊர்தி அருஞ்சிறை நீக்கலன்;
நின்னை யும்சிறை வீட்டுவன் நிற்றியேல்;
உன்னி ஏகுதி ஒல்லையில் என்றலும்.

[அன்ன ஊர்தி - அன்னத்தை வாகனமாக உடைய பிரம தேவன். விட்டுவன் - விழச்செய்வேன். ஒல்லையில் - விரைவில்.]

"இன்னும் கொஞ்ச நேரம் நீ இருந்தாயானல் உன்னையும் சிறைப் படுத்திவிடுவேன்" என்று முருகன் சினந்து கூறவே, நந்தி அங் கிருந்து புறப்பட்டுவிட்டான். சிவபெருமானிடம் சென்று முருகப் பெருமான் சொன்னவற்றைச் சொன்னன். அதைக் கேட்டு ஆண்ட வன் கோபம் கொண்டானு? உவகை கொண்டு புன்முறுவல் பூத்தானும்.

'முள் முளைத்த காதை விடப் பின் முளைத்த கொம்பு வலிது' என்பார்கள். அப்படி முருகப் பெருமான் மிடுக்கோடு இருப்பதை எண்ணிச் சிவபெருமான் உள்ளம் பூரித்தான். திருவள்ளுவர் சொல்லும் ஒரு குறள்,

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பது. தன்னைக் காட்டிலும் தன் பிள்ளை அறிவு உடையவனுக இருந்தால், தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகுமாம்.

ஒருவன் வியாபாரி. அவன் இன்னது படித்தான் என்று யாருக்கும் தெரியாது. அவன் பையன் நன்ருகப் படித்து எம். ஏ. ப் பரிட்சையில் தேர்ச்சி பெறுகிருன். அதைக் கண்டு தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. வந்தவர்களிடம் சொல்கிருன்; "நான் எஸ். எஸ். எல். சி. கூடத் தேர்ச்சி பெறவில்லை. இவன் எம். ஏ.

படித்து முன்னுக்கு வந்துவிட்டான்" என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகிருன். இது மனிதனுடைய இயல்பு. இதைப் போலவே சிவபெருமானுக்கும் தன் பிள்ளை சொன்னதைக் கேட்ட போது மகிழ்ச்சி உண்டாயிற்று.

அயனைச் சிறை விடுதல்

உடனே சிவபெருமான் இடப வாகனத்தின்மேலேறி, உமா தேவியுடன் முருகன் இருக்கும் இடம் சென்ருன். முருகன் செய்தது தவறு என்று ஆண்டவன் நினைத்திருந்தால், தானே அங்கே போயிருக்கமாட்டான். "அவனை அழைத்து வா இங்கே" என்று சொல்லியிருப்பான். "பிரமனைப் போல இருந்து நம் பிள்ளை படைப்புத் தொழிலைச் செய்கிருனும். நாமே போய்ப் பார்க்கலாம், வா" என்று உமாதேவியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

சிவபெருமான் வந்தவுடன் அவனை வணங்கி, ஆசனம் தந்து, "வந்த காரணம் என்ன?" என்று கேட்டான் முருகன். "பிரமனை நீ சிறையில் இட்டாயாம். அவனைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்காக நான் இங்கே வந்தேன். அவனை விடுதலை செய்" என்று இறைவன் சொன்னுன்.

முருகப் பெருமான், "பிரணவத்தின் பொருள் தெரியாமல் இருக்கிருன் அவன். அவன் எல்லா உயிர்களையும் படைக்கிருன் என்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா? அவன் எல்லா வேதங் களும் தெரிந்தவன் என்று சொல்லிக்கொண்டான். வேதத்தின் முதல் எழுத்தின் பொருளையே தெரிந்துகொள்ளவில்லையே! மற்றவற்றை எப்படித் தெரிந்துகொண்டிருப்பான்? அவன் பூஜை பண்ணியதனுல் நீங்கள் மிகவும் மகிழ்ந்து, அவனுக்கு இந்த உத்தி யோகத்தைக் கொடுத்துவிட்டீர்கள். அவன் இந்தத் தொழிலைச் செய்வது என்பது பேதைமை. இது வெகு அழகாக இருக்கிறது!" என்று முருகன் சொன்னுன்.

அழகி தையநின் ஆரருள்! வேதம்முன்
மொழிய நின்ற முதலெழுத் தோர்கிலான்;
இழிவில் பூசை இயற்றலும் நல்கிய
தொழில்பு ரிந்து சுமத்தினை யோர்பரம்.

(அயனைச் சிறை நீக்கு. 26.)

[பரம் - பாரம்.]

மேலும் முருகன் சொன்னன் ; "அவன் அறியாமை கொண்டவனுக இருப்பதோடுகூட, தான் பெரிய காரியத்தைச் செய்வதாக எண்ணி அகங்காரம் கொண்டிருக்கிருன், யாரையும் மதிக்கிறது இல்லே. ஆகவே அவனுடைய சிறையை மீட்கமாட்டேன்" என்று சொன்னன்.

அப்போது சிவபெருமான் சிறிது சினம் கொண்டவன் போல, "என்ன சொல்கிருய் ?" என்று கேட்க, அவனது திருவுள்ளத்தை அறிந்துகொண்டு, முருகன் தன் பக்கத்தில் இருக்கிறவர்களிடம் சொல்லிப் பிரமனேச் சிறையிலிருந்து மீட்டு வாருங்கள் என்ருன்.

பிரமன் சிறை மீண்டு வந்தான். அவன் கையைப் பிடித்து முருகன் சிவபெருமானுக்கு முன்னுலே அவனே விடுத்தான். பிரமன் இறைவனே வணங்கி நாணத்தோடு நின்ருன். அப்போது அவனேப் பார்த்து, "நீ மிகவும் வருந்திஜீனபோலும் !" என்று தட்டிக் கொடுத்தான் சிவபெருமான்.

புராணங்களிலும், காவியங்களிலும் மக்கள் எப்படி எப்படி நடக்கவேண்டுமென்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவது கவிஞர் களுடைய இயல்பு. இங்கே சிவபெருமான் விடுதலே பெற்று வந்த பிரமனேப் பார்த்து, "என்னடா பைத்தியக்காரா ? உனக்கு வேலே கொடுத்ததனுல் அகங்காரம் கொண்டாயா ? நம் பிள்ளேயை அவமதிக்கலாமா ?" என்று கேட்கவில்லே.

"பாவம்! நீ வருத்தம் அடைந்தாய் போல இருக்கிறது" என்று அருள் புரிந்தான். வேலேக்காரன் தவறு செய்தால், அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் அவனுக்கு ஆறுதல் உண்டாகாது. பரமேசுவரனுக்கு இது தெரியாதா ? பிரமனேக் கண்டிக்காமல், "நீ சிறையில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு விட்டாயா ?" என்று ஆறுதல் கூறினனும்.

அதைக் கேட்டுப் பிரமன் மிகவும் நாணத்தோடு மனம் நைந்து பேசினன்.

"எம்பெருமானே, தேவரீருடைய குமாரர் எனக்குச் செய்த இந்தத் தண்டனே தவறு அல்ல. அதனுல் நான் நல்ல அறிவைப் பெற்றேன். என் அகந்தை போயிற்று. நான் செய்த பாவங்கள் எல்லாம் மாறிவிட்டன. முருகப் பெருமான் செய்தது எனக்கு நல்லது ஆயிற்று. நான் தூய்மை அடைந்தேன்" என்று சொன்னன்.

நாதன்இத் தன்மை கூறி நல்லருள் புரித லோடும்
போதினன் ஐயஉன்றன் புதல்வன்ஆற் றியஇத் தண்டம்
ஏதமன் றுணர்வு நல்கி யானெனும் அகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனித மென்றான்.

(அயனைச் சிறை நீக்கு. 34.)

[போதினன் - பிரமதேவன். தண்டம் - தண்டனை. ஏதம் அன்று - துன்பம் அன்று.]

"இந்தப் பையன் அக்கிரமம் பண்ணினான். உங்கள் பிள்ளை ஆயிற்றே என்று பார்த்தேன். இல்லாவிட்டால் என்ன பண்ணி யிருப்பேன் தெரியுமா ?" என்று இந்தக் காலத்தில் சொல்வார்கள். பிரமன் அப்படிச் சொல்லவில்லை. என்ன இருந்தாலும் இறைவன் திருவருளால் படைப்புத் தொழில் பண்ணுகிறவன் அல்லவா ? முதலில் சிறிது அகந்தை இருந்தாலும் சிறையில் வாடிய பிறகு, புடம்போட்ட பொன்போல ஆகிவிட்டான். இறைவன் செய்கிற காரியங்கள் எல்லாம் நமக்குச் செய்கின்ற நன்மை என்று எண்ண வேண்டும். பிரமனது அகங்காரம் போய்விட்டது. முருகப் பெருமான் செய்த காரியம், "புனிதம்" என்கிறான். புனிதம் என்றால் தூய்மை என்று பொருள். "அழகான ஆடையைச் சலவை செய்தது போல, எம்பெருமான் என்னைச் சலவை செய்துவிட்டான்" என்பது போலப் பேசினான்.

பெரியோர் இயல்பு

ஆண்டவனுடைய அன்பர்கள் தங்களுக்குத் துன்பம் வந்தால், "இறைவன் துன்பத்தைத் தந்தானே !" என்று வருந்தமாட்டார்கள். நம்மைப் போன்றவர்கள், "ஆண்டவனுக்குக் கண் இல்லை. நான் எவ்வளவு பூசை பண்ணுகிறேன் ! எனக்குத் துன்பத்தைத் தந்து விட்டானே !" என்று கூக்குரல் இடுவோம். உண்மையான அன்பர் கள் தமக்கு வரும் துன்பங்களை இறைவன் தந்த பிரசாதமாக எண்ணுவார்கள்.

கஞ்சனூரில் ஹரதத்த சிவாசாரியார் என்ற பெரியவர் இருந் தார். ஒரு நாள் திருக்கோவிலுக்குச் சென்றார். அவருடைய சீடர் களும் அவரோடு போனார்கள். அக்கினிபுரீசுவரர் என்ற திருநாமம் உடையவர் அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமான். அப்போது தர்மகர்த்தா கோவில் தாசியை ஒரு கம்பத்தில் வைத்துக் கட்டி அடித்துக் கொண்டிருந்தார். சிவாசாரியார் அந்தத் தர்மகர்த்தா

விடம், "அவளை ஏன் அடிக்கிறீர்கள்?" என்று கேட்டார். "அந்தப் பெண்பிள்ளை தேவாலயத்தில் ஆற்ற வேண்டிய கடமையை விட்டு விட்டு, சொல்லிக்கொள்ளாமல் ஒரு கல்யாணத்திற்குப் போய் விட்டாள். அதனால் ஆண்டவனது கைங்கர்யம் தடைப்பட்டது. அதனால்தான் அடிக்கிறோம்" என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடன் சிவாசாரியார் குலுங்கக் குலுங்க அழுதார். உடன் வந்த சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டிற்குத் திரும்பச் சென்ற பிறகு, சிவாசாரியார் காலில் அவர்கள் வீழ்ந்து வணங்கி, "தாங்கள் கோவிலில் அழுத காரணம் யாது?" என்று கேட்டார்கள். அப்போது அவர் சொன்னார்; "அந்தப் பெண் பிள்ளை ஒரு நாள் இறைவனுக்குத் தொண்டு செய்யத் தவறினாள் என்று தர்மகர்த்தா அவளை அடித்து வேலை வாங்கினார். அதைப் போல யாராவது என்னை இளமையில் அடித்து, இறைவனுக்குத் தொண்டு செய்யும்படியாகச் செய்திருந்தால் நான் எப்போதோ உய்ந்திருப்பேனே!" என்று சொன்னாராம். துன்பத்தை வரவேற்று அதனால் தூய்மை பெறலாம் என்ற எண்ணம் அத்தகையவர்களுக்கு இருந்தது.

பாரதப் போர் முடிந்தவுடன் தர்மபுத்திரருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. பிறகு கண்ணன் துவாரகைக்குச் செல்லப் புறப்பட்டான். போவதற்கு முன் தன் அத்தை குந்தி தேவியிடம் சென்று, "உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டான்.

"அப்பா, நீ ஊருக்குப் போகிறாயா? இனி அடிக்கடி உன்னைப் பார்க்க முடியாதா?" என்று கேட்டாள்.

"என் ஊரில் எனக்கு வேலை இருக்கிறது. இங்கே நான் செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆகவே நான் போகிறேன். உனக்கு ஏதாவது வேண்டுமானால் கேள்" என்றான் கண்ணன்.

அவள் ஜபமாலை, சிவலிங்கம், நார்மடி என்று ஏதாவது கேட்பாள் என்று நினைத்திருக்கலாம். ஆனால் குந்தி தேவி, "கண்ணா, எனக்கு ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு துன்பம் வரும்படி அனுக்கிரகம் பண்ணு" என்றாளாம். அதைக் கேட்டுக் கண்ணன், "என்ன அத்தை, நீ ஜபமாலை, நார்மடி என்று ஏதாவது கேட்பாய் என்றால்

லவா எண்ணியிருந்தேன் ?'' என்ருன். குந்தி தேவி, "ஜபம் பண்ணுகிறவர்கள் எல்லாம் உன்னை நினைக்கிருர்களா? கையில் ஜபமாலை இருக்கும். உள்ளம் உலகத்தைச் சுற்றிவரும். நாள் தோறும் ஏதாவது எனக்கு ஒரு துன்பம் வந்தால் அந்தத் துன்பமே ஜபமாலையாக, கண்ணன் இருந்தால் இந்தத் துன்பம் வந்திருக்காதே என்று உன்னை நினைக்கச் செய்யும். அதனுல்தான் நான் கேட் கிறேன், துன்பம் தா என்று '' என்ருளாம்.

இப்படி அடியார்கள் துன்பத்தையும் இறைவனை நினைக்கின்ற சாதனம் என்று நினைப்பார்கள்.

ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவன் லாண்டரியில் துணியை எப்படிச் சலவை செய்கிருர்கள் என்பதை அறியாதவன். அழுக்குத் துணிகளை ஓர் இயந்திரத்தில் போட்டால் வெளுத்த துணிகளாக வந்துவிடும் என்று அவன் நினைத்திருந்தான். ஒரு சமயம் கிராமத் தில் உள்ள மாமன் வீட்டிற்குச் சென்ருன். அங்கே குளத்தங்கரையில் ஒரு சலவைத் தொழிலாளி துணிகளை நீரில் நனைத்துக் கல்லில் அடித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். வேட்டி கிழிந்து போய் விடுமே என்று கூச்சலிட்டான் அந்தப் பையன். அவனுக்கு வேட்டி யைக் கல்லில் மோதினுல்தான் அதன் அழுக்குப் போகும் என்று தெரியாது. தெரிந்தால் சந்தோஷப்படுவான். தெரியாததால்தான் கிழிந்து போகுமே என்று நினைத்தான்.

அதுபோல இறைவன் நமக்குத் துன்பம் தந்தால் நம்மிடத்தில் உள்ள அழுக்குப் போகும் என்று அன்பர்கள்எண்ணிக் கொள்வார் கள். அல்லாதவர்கள் இறைவன் கருணையில்லாதவன் என்று சொல் வார்கள்.

அவ்வண்ணம் நான்முகன்,

இத்தண்டம்
ஏதமன் றுணர்வு நல்கி யானெனும் அகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனிதம்

என்று கூறினன். சிவபெருமான் அவனுக்கு அனுக்கிரகம் செய்து, "நீ போய் உன் படைப்பு வேலையைப் பார்'' என்று சொல்ல, அவன் போய் விட்டான்.

பிரணவ உபதேசம்

சிவபெருமான் முருகப் பெருமானைப் பார்த்து, புன்முறுவல் பூத்து, தன்னுடைய கையால் அவனை அணைத்து, தன் துடையின்

மேல் உட்காரவைத்துக் கொண்டான். பிறகு, "ஓம் என்பதற்குப் பொருள் தெரியவில்லை என்று பிரமனைத் தண்டித்தாயே ; உனக்கு அதன் பொருள் வருமா ?" என்று கேட்டான்.

அப்போது முருகன், "நீங்கள் கேட்கிறபடி இருந்து கேட்டால், நான் சொல்கிறபடி இருந்து சொல்வேன்" என்றான்; "பழைய காலத்தில் என்னுடைய அன்னைக்கு நீங்கள் பிரணவத்தின் பொருளை உபதேசம் செய்யும்போது யாரும் அறியாத வண்ணம் சொன்னீர்கள். அத்தகைய இரகசியத்தை நான் இப்போது வெளிப்படையாகச் சொல்லலாமா ?" என்று சொன்னான்.

முற்றொருங் குணரும் ஆதி முதல்வகேள்; உலக மெல்லாம்
பெற்றிடும் அவட்கு நீமுன் பிறர்உண ராத வாற்றல்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாரும் கேட்ப
இற்றென இயம்ப லாமோ, மறையினால் இசைப்ப தல்லால்?

(அயனைச் சிறைநீக்கு. 38.)

[இற்றென - இத்தகைய தென்று. மறையினால் - இரகசியமாக.]

அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்த சிவபெருமான், "நீ இரகசியமாக எனக்குச் சொல்" என்று சொல்லித் தன் செவியைக் காட்ட, முருகப் பெருமான் பிரணவத்தின் பொருளை உபதேசித்தான்.

என்றலும் நகைத்து மைந்த, எமக்கருள் மறையின் என்னாத்
தன்திருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை என்னும்
ஒன்றொரு பதத்தி னுண்மை உரைத்தனன்; உரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனும் அண்ணல்.

(அயனைச் சிறைநீக்கு. 39.)

[மறையின் - இரகசியமாக. குடிலை - பிரணவம்.]

அந்த உபதேசத்தைக் கேட்ட சிவபெருமான் மகிழ்ச்சி மிகவும் கொண்டான். இப்படி முருகப் பெருமான் சிவபெருமானுக்கும் குருவாக இருந்ததனால் அவனைக் குமர குருபரன் என்றும், சாமி நாதன் என்றும், தகப்பன்சாமி என்றும் சொல்வார்கள். இந்தத் திருவிளையாடலைப் பாராட்டி அருணகிரிநாதர் முதலிய பெருமக்கள் பலபடியாகப் பாடியிருக்கிறார்கள். ஓரிடத்தைப் பார்க்கலாம்.

அருணகிரியார் காட்டும் காட்சி

பொதுவாக உபதேசம் பண்ணுகிற குருநாதர்கள் மாணவர்களின் வலது காதில் உபதேசம் பண்ணுவார்கள். இங்கே சிவபெருமானுக்கு முருகன் இரண்டு காதிலும் உபதேசம் பண்ணியதாக

அருணகிரிநாதர் கூறுவார். அறியாதவனுக்கு அறியும்படி செய்கிற உபதேசம் அன்று இது. சிவபெருமானுக்குப் பிரணவப் பொருள் தெரியாதா ? ஆசிரியன் தன் மாணுக்கனைக் கேள்வி கேட்க, அவன் பதில் சொல்லும்போது ஆசிரியன் மகிழ்ச்சி அடைகிருன். தனக்குத் தெரியாததைக் கேட்டு, மாணுக்கன் சொன்னதனுல் தெரிந்து கொண்டான் என்பது அல்ல. இதை அறிவினு என்று சொல்வார்கள்.

சிவபெருமான், முருகன் தன் காதில் சொன்ன உபதேசத்தைக் கேட்டான் ; அவனுக்கு ஒரே ஆனந்தம். அது தன்னுடைய குழந்தை யின் மழலைச் சொல்லாகவும் இருந்தது அல்லவா ?

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று **வள்ளுவர்** சொல்வார்.. ஆகவே இரண்டு வகையான மகிழ்ச்சி சிவபெருமானுக்கு ஏற்பட்டது. அதைக் கேட்டு ஒரு காது மாத்திரம் குளிர்ந்ததைக் கண்டு, அவன் தன் மறு காதும் அந்தக் குளிர்ச்சியைப் பெறவேண்டுமென்று எண்ணினுன். வலக் காது அவனுடையது, இடக் காது உமையினுடைய காது அல்லவா ? தன் குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்ட தகப்பன், தன் மனையாட்டியை அழைத்து, "இதோ பார், உன் குழந்தை எப்படிப் பேசுகிருன் பார் !" என்று சொல்லி மகிழ்ச்சி அடைவான். அது போல வலக்காதில் உபதேசம் கேட்ட சிவபெருமான், இடக் காதிலும் அவனைச் சொல்லச் சொல்லிக் கேட்டான்.

"சிவனுர் மனம்குளிர உபதேச மந்த்ரம்இரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா"

என்று **அருணகிரியார்** பாடுகிருர். இரண்டு காதும் முருகப் பெருமான் சொன்ன மழலை உபதேசத்தால் குளிர்ந்துவிட்டன. ஆனந்தம் பொங்கியது சிவபெருமானுக்கு.

அருணகிரிநாதப் பெருமான் முருகன் திருவருளால் பதினுருயிரம் திருப்புகழ்ப் பாடலைப் பாடினுர். "நீ என் புகழைப் பாடுவாயாக" என்று சொல்லி அதற்கு வேண்டிய ஆற்றலை முருகன் வழங்கினுன். எப்படித் தொடங்குவது என்ற எண்ணம் அருணகிரியாருக்கு

உண்டாயிற்று. பெரிய திருமாளிகை கட்டினல் முகப்பு அழகாக இருக்கவேண்டும். உடலில் முகம் அழகாக இருந்தால்தான் மற்ற உறுப்புகளுக்கும் பெருமை உண்டாகும். ஆகவே பதினறுயிரம் பாடல்களைப் பாடவந்த அருணகிரிநாதர் முதலில் எதைத் தொடங்க லாம் என்று யோசித்தார்.

முருகப் பெருமானுடைய பெருமை அளவுக்கு அடங்காதது. அவனுடைய பராக்கிரமம், கருணைத் திருவிளையாடல்கள், அழகு ஆகியவை சொல்லச் சொல்ல விரிந்துகொண்டே போகிற பெருமை உடையவை. முற்றும் கண்டுவிட்டதாக யாராலும் சொல்ல முடியாது. அவ்வளவு புகழ் இருக்கிறதனுல்தான் எதைத் தொடங் குவது என்ற ஐயம் உண்டாயிற்று. ஒரு புகழும் இல்லாதவனைப் பற்றிப் பேசவேண்டுமானுலும் எதைச் சொல்வது என்ற ஐயம் உண்டாகும்.

இங்கேயோ கணக்குக்கு அடங்காத புகழ் இருப்பதால் எதைத் தேர்ந்தெடுத்துச் சொல்வது என்ற ஐயம் அருணகிரிநாதருக்கு உண்டாயிற்று. 'அவனுடைய அகடிதகடன சாமர்த்தியத்தை எடுத்துச் சொல்வதா ? வள்ளியம்பெருமாட்டியிடம் காட்டிய கருணை யைச் சொல்வதா ? உமாதேவியிடம் பெற்ற அருளைச் சொல்வதா ? அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்த தன்மையைச் சொல்வதா ? எதை முதலில் எடுத்துச் சொல்வது ?' என்று எண்ணிப் பார்த்தார். எல்லாவற்றையும் விட உயர்ந்தது எது என்று யோசித்தார். அவன் குருநாதனுக இருந்து உபதேசம் செய்தானே, அதுதான் எல்லா வற்றிலும் சிறந்தது என்று கருதினர்.

" முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனஓதும்
முக்கட்பர மர்க்குச் சுருதியின் முற்பட்டது கற்பித்து "

என்று தொடங்கினர்.

அகத்தியருக்கு உபதேசம்

முருகப் பெருமானுடைய திருவாயிலிருந்து பிரணவ உபதேசத் தைப் பெற்ற சிவபெருமான் கைலாசத்திற்குச் சென்று சேர்ந்தான்.

சிவபெருமானுக்கு உபதேசம் பண்ணின பிரணவ மந்திரத்தை, முருகன் பிறகு அகத்தியருக்கும் உபதேசித்தான்.

ஆங்குறு குமரப் புத்தேள்
அருமறைக் காதி யாகி
ஓங்கும்எப் பொருட்கும் மேலாம்
ஓரெழுத் துரையின் உண்மை
நீங்கற வணங்கிக் கேட்பச்
சிறுமுனிக் குதவி மற்றும்
பாங்குறும் இறைவன் நூலும்
பரிவினுல் உணர்த்தி ஞனல்.

(அயனைச் சிறைநீக்கு. 42.)

[ஓரெழுத்து - பிரணவம். சிறுமுனிக்கு - அகத்தியருக்கு. இறைவன் நூல் - ஆகமம்.]

சிவபெருமானுக்குச் சமானமானவர் அகத்தியர். ஆகவே, அவருக்கும் பிரணவ உபதேசம் செய்தான் முருகன்.

"சிவனைநிகர் பொதியமலை முனிவன்"

என்று அருணகிரியார் அவரைச் சிறப்பிப்பார்.

திருமாலுடைய மகளிருக்கு அருளுதல்

அந்தச் சமயத்தில் சரவணப்பூம் பொய்கைக்குப் பக்கத்தில் இருந்த திருமாலின் குழந்தைகளாகிய அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற இருவரும் முருகனிடம் வந்தார்கள். அவர்கள் முருகனை நாயகனுகப் பெறவேண்டுமென்று தவம் செய்துகொண்டிருந்தார்கள். இருவரும் எம்பெருமானிடம் வந்து வணங்கினுர்கள்.

"யாரையும் இப்போது மணம் செய்துகொள்வதில்லை. பின்னுலே உங்கள் விருப்பப்படி உங்களை மணம் செய்துகொள்கிறேன்" என்று சொல்லிச் சுந்தரவல்லியிடம், "நீ சிவமுனிவனுடைய குழந்தையாக மான் வயிற்றில் பிறப்பாய். பிறந்து வேட அரசனுல் வள்ளி என்ற பெயருடன் வளர்க்கப்பட்டு அங்கே காத்திரு; நான் வந்து உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன்" என்றுன். பிறகு அமுதவல்லியைப் பார்த்து, "நீ இந்திரனிடத்தில் சென்று தேவசேனையாக வளர்ந்து கொண்டிருப்பாயாக. உன்னை நான் வந்து திருமணம் செய்துகொள்கிறேன்" என்று அருள்பாலித்தான்.

முந்தும் இன்னமு தக்கொடி, மூவுல கேத்தும்
இந்தி ரன்மகள் ஆகியே வளர்ந்தனை இருத்தி;
சுந்த ரிப்பெயர் இளையவள், தொல்புவி தன்னில்
அந்தண் மாமுனி புதல்வியாய் வேடர்பால் அமர்தி.

(விடை பெறு. 5.)

[அமுதக்கொடி, இளையவள், விளி.]

பிறகு முருகப் பெருமான் தன்னுடைய இருப்பிடமாகிய கந்த கிரிக்குச் சென்றான்.

தேவர்கள் சண்முகநாதனின் பெருமையைப் பின்னும் நன்றாக உணர்ந்துகொண்டார்கள்; அவனது விசுவருபத்தினாலும், அனுக்கிரகத்தினாலும் நல்ல தெளிவைப் பெற்றார்கள், அவன் பரமேசுவரனுக்கே ஞானகுருவாக இருந்தான் என்ற செய்தியைக் கேட்டு, அவனைப்போலத் தலைவனும், வீரனும், கருணாமூர்த்தியும், ஞானமூர்த்தியும் வேறு இல்லையென்று தெளிந்து அவனைப் போற்றிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளுறை

முருகப் பெருமான் பிரமனைச் சிறையில் இட்டான் என்ற கதையைப் பார்த்தோம். அந்தக் கதையில் ஒரு கருத்து அமைந்திருக்கிறது. முருகப் பெருமான் செய்த நாடகம் அது. மனிதர்களுக்கு இறப்பும், பிறப்பும் மாறி மாறி வரும். இறப்பைவிடப் பெரிய துன்பம் வேறு இல்லை. பிறப்பும் அத்தகையதே. **காரைக்கால் அம்மையார்** இறைவனிடத்தில் கேட்டது, "பிறவாமை வேண்டும்" என்பதுதான். திருவள்ளுவரும், "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்கிறார். அடுத்தடுத்துப் பிறவிகள் வருவதனால் பிறவிக்குக் கடலை உவமை சொல்கிறார் வள்ளுவர். பிறவியை யார் அறுக்கிறாரோ அவரே முத்திக்கரையைக் காண்பார்.

இந்தப் பிறவியை உண்டாக்குபவன் பிரமன். இந்த உடம்பைப் படைப்பவன் அவன். உடம்பாகிய சிறையில் உயிர்களை இடுகிறவன் அவன். அவனையே முருகப் பெருமான் சிறையில் வைத்தான். முருகப் பெருமான் தன்னை நம்பியவர்களுக்குப் பிறவியே சாராமல் செய்வான் என்பதுதான் இந்தக் கதையின் உட்பொருள்.

இந்தக் கருத்தை அருணகிரிநாதர் அழகான முறையில் ஒரு பாட்டில் எடுத்துக் காட்டுகிருர்.

அலங்காரம் காட்டும் காட்சி

பிரமன் இன்னுர் இன்னுரைப் பிறக்கச் செய்யலாம் என்று ஒரு பட்டியல் போட்டான். அப்படிப் போடும்போது முருகப் பெருமானுடைய அன்பர்களைப் போட்டுவிட்டான். என்ன ஆகும்? அதைத்தான் அருணகிரிநாதர் இந்தப் பாடலில் சொல்கிருர்.

"பங்கே ருகனெனைப் பட்டோ லையில்இடப் பண்டுதளை
தன்காலில் இட்ட தறிந்தில னேதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனிநான் முகனுக் கிருவிலங்கே."

[பங்கேருகன் - பிரமன். பட்டோலை - வெறும் ஓலை. ஓதம் - கடல். சிலம்பு- மலை; கிரவுஞ்ச மலை.]

பிரமன் முருகனுடைய அன்பர் ஒருவருடைய பெயரை, அடுத்துப் பிறக்க வேண்டியவர்கள் வரிசையில் சேர்த்துவிட்டால், அந்தச் செய்தி பிறப்பை எடுக்கப் போகிறவனுக்குத் தெரிவதற்கு முன்னே முருகனுக்குத் தெரிந்துவிடும். அவன் எல்லாம் உணர்ந்த வன் அல்லவா? தன் அடியார்களுக்கு எந்தத் துன்பம் நேர இருந்தாலும் அதை உடனே அவன் தெரிந்துகொள்வான்.

பிரமன் தன்னுடைய அடியவனைப் பிறப்பவர்கள் பட்டியலில் எழுதிவிட்டான் என்பதை முருகன் உணர்ந்துகொண்டான். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'முன்னலேயே நாம் குட்டியிருக்கிருேமே. அதை மறந்துவிட்டானு?' என்று எண்ணினுன். உடனே வீரவாகு தேவரை அனுப்பி, அழைத்துவரச் சொன்னுன். பிரமன் நடுங்கிக் கொண்டு வந்தான். "என் அடியவனைப் பிறப்ப வர்கள் வரிசையில் ஏன் எழுதினுய்?" என்று கேட்டான். பிரமனுக்குக் கைகால் உதறல் எடுத்துவிட்டது. உடனே வீரவாகு தேவரைப் பார்த்து, "இவனுக்கு இரட்டை விலங்கு போடு" என்று சொன்னுன். காலில் போடுகிற இரண்டு விலங்கு அல்ல. இந்தக் காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களைச் செய்தவர்களுக்கு நீதிமன்றத்தில் தண்டனை கொடுக்கும்போது, "இதற்கு இரண்டு

மாதம், அதற்கு ஒரு மாதம்'' என்றெல்லாம் சொல்லி முடிவில், ''எல்லாத் தண்டனைகளையும் ஒரேகாலத்தில் அநுபவிக்கவேண்டும்'' என்று கொடுப்பார்கள். அதில் என்ன கடுமை இருக்கிறது? அதுபோல முருகன் சொல்லவில்லை. ''முன்பு நான் காலில் தளை யிட்டேன். இப்போது காலில் விலங்கு பூட்டுவதோடு கூட, என் அடியவன் தலையில் எழுதிய கைகளுக்கும் விலங்கு போடு'' என்று சொன்னான். ''என்னை அவமதித்ததற்குக் கால் விலங்கு மட்டுந்தான். இப்போது என் அடியானின் பெயரைப் பட்டியலில் எழுதினான் ஆகையால் காலுக்கும் விலங்குபோடு, கைக்கும் விலங்கு போடு'' என்றான். தனக்கு அபசாரம் செய்வதைவிட, தன் அடியார்களுக்கு அபசாரம் செய்தால், இரட்டிப்புத் தண்டனை கிடைக்கும் என்ற கருத்தை இதனால் தெரிவித்தான்.

கந்தர் அலங்காரத்தில் இப்படி அழகாக ஒரு காட்சியைக் கற்பனை செய்யும்படி பாடியிருக்கிறார் அருணகிரிநாதர்.

முருகப் பெருமானை நம்புகிறவர்களுக்குப் பிறப்பு இல்லை என்பதைத்தான் பிரமன் சிறையில் இருந்த கதை நமக்குப் புலப்படுத்துகிறது.

தாரகன் வதை

தேவர்கள் சிவபெருமானிடம் விண்ணப்பித்தல்

இனி, தாரகனைச் சங்காரம் செய்த கதையைப் பார்ப்போம். இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் வந்து சூரபன்மன் முதலிய அரக்கர்களால் தாங்கள் படும் துன்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இறைவனை வழிபட்டு, எல்லோரும் சேர்ந்து விண்ணப்பம் செய்து கொள்ளும்போது அதற்கு ஆற்றல் அதிகமாகிறது. அவரவர்கள் இறைவனுடைய திருவருளைப் பெறவேண்டுமானால் தனித் தனியாக இருந்து தவம் செய்யலாம். ஆனால் உலகத்திற்கு நன்மை வரவேண்டுமானல் ஒற்றுமையாக இருந்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். இதைப் புராணங்கள் காட்டுகின்றன. இராவணாதி அசுரர்களால் துன்பப்பட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் தனித் தனியாக இருந்து கும்பிட்டு, எந்தக் காரியமும் நிகழவில்லை. ஆனால் அத்தனை பேர்களும் சேர்ந்து பாற்கடலில் சயனித்திருந்த திருமாலி னிடம் விண்ணப்பித்துக்கொண்டார்கள். முப்பத்து முக்கோடி தேவர்களும் சேர்ந்ததனால் ஒரு தனியான சக்தி உண்டாயிற்று. அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, திருமால் இராமனாக அவ தாரம் செய்தார். கூட்டு முயற்சியினால் உண்டான பயன் இது.

அதைப்போலவே இங்கு இந்திராதி தேவர்கள் எல்லோரும் சேர்ந்து சிவபெருமானிடம் சென்று எங்கள் துன்பத்தைப் போக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

முருகன் புறப்படுதல்

அப்போது சிவபெருமான், முருகப் பெருமானைப் பார்த்து, "நீ போய் அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்து வா" என்று அருளினான். "இந்த உலகத்திலுள்ள மக்களைத் துன்புறுத்தி, எல்லோருக்கும் வெவ்வேறு வகையான இடர்களை உண்டாக்கி, தேவலோகத்திலுள்ள தேவர்களுக்குத் துன்பத்தைத் தந்துகொண்டு மிக்க பலத்தோடு இருக்கிறான் சூரன். அவனையும், அவனைச் சுற்றி யிருப்பவர்களையும் அடியோடு அழித்து வேதநெறி நிலைத்திருக்கும் படியாகச் செய்யவேண்டும். இந்திரனுக்குப் பழையபடி அவன்

அரசை அளித்து, தேவர்களது துயரைத் துடைக்க நீ புறப்பட்டுப் போகவேண்டும்'' என்று சிவபெருமான் சொன்னான்.

பாரினை அலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்து விண் ணவர்தம்
ஊரினை முருக்கித் திமையயே இயற்றி
உலப்புரு வன்மைகொண் டுற்ற
சூரனை அவுணர் குழுவொடும் தடிந்து
சுருதியின் நெறிநிறீஇ மகவான்
பேரர சளித்துச் சுரர்துயர் அகற்றிப்
பெயர்திஎன் றனன்எந்தை பெருமான்.

(விடை பெறு, 35.)

[பருவரல் - துன்பம். முருக்கி - அழித்து. உலப்புரு - அழிவில்லாத. தடிந்து - அழித்து. சுருதியின் நெறி நிறீஇ - வேத நெறியை நிலை நிறுத்தி. மகவான் - இந்திரன்.]

இங்கே, "வேதநெறியை நிலைநிறுத்தி வா" என்று முருகனிடம் சிவபெருமான் சொன்னான்.

இந்த நாட்டிற்கே அடிப்படைச் சுருதியாக இருப்பது வேதம்; நமது நல்ல பழக்கங்களுக்கு எல்லாம் ஆதாரமாக இருக்கின்றது. வேதநெறி தழைத்தோங்க ஞானசம்பந்தப் பெருமான் திரு அவதாரம் செய்தார் என்று சேக்கிழார் பாடுவார். அசுரர்களுடைய நெறியை மாற்றி, சுருதிகளின் நெறியை நிறுவுவாயாக என்று சிவபெருமான் பணிக்கிறான்.

அப்படி உத்தரவிட்டபோது 11 ருத்திரர்களையும், 11 வகையான ஆயுதங்களாக்கி முருகப் பெருமான் திருக்கையில் கொடுத்தான். உலக்கை, கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்று 11 ஆயுதங்களாக ருத்திரர்கள் மாறி முருகன் கையில் இருந்தார்கள். பின்பு ஒரு வேலை முருகன் கையில் தந்தான். இப்படியாகப் பன்னிரண்டு திருக்கரங்களிலும், பன்னிரண்டு படைகள் அமைந்தன,

பொன்திகழ் சடிலத் தண்ணல்தன் பெயரும்
பொருவிலா உருவமும் தொன்னாள்
நன்றுபெற் றுடைய உருத்திர கணத்தோர்
நவிலரும் தோமரம் கொடிவாள்
வன்திறல் குலிசம் பகழிஅங் குசமும்
மணிமலர்ப் பங்கயம் தண்டம்
வென்றிவில் மழுவும் ஆகிவீற் றிருந்தார்
விறல்மிகும் அறுமுகன் கரத்தில்.

(விடை பெறு. 37.)

[சடிலம் - சடை. தோமரம் - உலக்கை. குலிசம் - வச்சிரம். பகழி - அம்பு, தண்டம்-கதை.]

உருத்திரர்கள் சிவபெருமானுடைய வடிவத்தையும், பெயரையும் உடையவர்கள். இறைவனுக்கு ருத்திரன் என்பது ஒரு பெயர். அவனுடைய புகழைச் சொல்கிற பகுதி வேதத்தில் ருத்திரம் என்ற பெயருடன் இருக்கிறது.

வேதங்கள் நான்கானலும் அதர்வண வேதம் மற்ற வேதங்களிலிருந்து தொகுத்துப் பிரித்தது. ஆகவே வேதத்தை மூன்று என்று சொல்வதும் உண்டு. அதனல் த்ரயி என்ற பெயரும் அதற்கு உண்டு. மூன்று வேதங்களுக்கும் நடுவில் இருப்பது யஜுர் வேதம். அதன் நடுவில் இருப்பது ருத்திரம். அதன் நடுவில் பஞ்சாட்சரம் இருக்கிறது. சிவபெருமானுக்கு ருத்திரன் என்ற பெயர் உண்டு என்பதை ருத்திரத்தினல் அறியலாம். அந்தப் பெயரை உடைய ருத்திரர்கள் முருகப் பெருமான் திருக்கரத்தில் ஆயுதங்களாக அமர்ந்தார்கள்.

வேலின் பெருமை

ஆயதற் பின்னர் ஏவின்மு தண்டத்
தைம்பெரும் பூதமும் அடுவது
ஏயபல் உயிரும் ஒருதலை முடிப்பது
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிரும் திறலும் வரங்களும் சிந்தி
மன்னுயிர் உண்பது எப் படைக்கும்
நாயகம் ஆவது ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான்.

(விடை பெறு. 38.)

[ஏவின் - ஏவினல். ஒருதலை - உறுதியாக. சிந்தி - அழித்து. மதலை - குமாரன்.]

வேலின் பெருமையை இந்தப் பாட்டுச் சொல்கிறது. எல்லாப் படைகளுக்கும் நாயகமாவது வேல்.

பொதுவாகப் பல வகை ஆயுதங்கள் இருந்தாலும் அவற்றுள் சிறப்பாக இருப்பவை வேல், வாள், வில் என்று சொல்வார்கள். அந்த மூன்றிலும் சிறப்பாக உள்ளது வேல். வெல்லுகின்ற தன்மை உடையது ஆதலின் வேல் என்ற பெயர் உண்டாயிற்று. அந்த வேல் ஞானசக்தியின் வடிவத்தைப் பெற்றது.

ஞானம் கூர்மையாக இருக்கும்; அகன்றிருக்கும்; நீளமாக இருக்கும். நீளம், பலகாலம் படித்தது; அகலம் பல நூல்களைப்

படித்தது; கூர்மை நுட்பத்தைத் தெரிவிப்பது. வேலும், நீண்டு அகன்ற இலேயும் கூர்மையான நுனியையும் உடையது. ஞானத்திற் குரிய இலக்கணங்கள் எல்லாம் வேலிலும் அமைந்திருக்கின்றன.

வேலேயே முருகனுக வைத்து வழிபடுவது உண்டு. முருகனுக்கு ஆறு முகம் இருப்பதுபோல வேலுக்கும் ஆறு பட்டைகள் இருக்கும். பழைய காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள கோவில்களைச் **சிலப்பதிகாரம்** சொல்லும் போது வேற்கோட்டம் என்ற கோவிலே யும் சொல்கிறது. அந்தக் கோவிலில் வேலே நட்டு, அதில் முருகனே ஆவாகனம் பண்ணி வழிபட்டார்கள். யாழ்ப்பாணத்தில் பல இடங் களில் வேலே நட்டு அதனேயே முருகனுக வழிபடுகிருர்கள். ஆறுமுக நாவலர் அவதாரம் செய்த யாழ்ப்பாணத்து நல்லூரில் முருகனுக்கு ஒரு கோவில் இருக்கிறது. அங்கே வேலேயே நட்டு வழிபட்டு வருகிருர்கள். மிகச் சிறந்த செல்வச் சந்நிதி என்ற கோயில் ஒன்று இருக்கிறது. தொண்டைமான் ஆறு என்ற ஊரில் அந்தக் கோயில் உள்ளது. அங்கே வேலே வைத்து முருகனுக வழிபடுகிருர்கள். பல பேர் அங்கே சென்று பிரார்த்தனே செய்துகொண்டு தங்களுடைய விருப்பம் நிறைவேறப் பெறுகி ருர்கள். உரும்பராய் என்ற ஊரில் சிதம்பர சுப்பிரமணியன் கோயில் என்ற பெயரில் ஒரு முருகன் ஆலயம் இருக்கிறது. அங்கேயும் வேலே நட்டுவைத்து வழிபடுகிருர்கள்.

முருகப் பெருமானுடைய பிரதிநிதியாக வேல் பலவிடங்களில் விளங்கி வருகிறது என்பதை இவற்ருல் தெரிந்து கொள்ளலாம். அதனுல் அதன் சிறப்பு நன்ருகத் தெரிகிறது.

கந்த புராணம், சிவபெருமானே முருகனுடைய கையில் வேலே வழங்கியதாகச் சொல்கிறது. ஆனுல் சில இடங்களில் அம்பிகை யிடமிருந்து முருகன் வேலே வாங்கினுன் என்று ஒரு வரலாறு வழங்குகிறது. பல ஊர்களில் கந்த சஷ்டி விழாவின்போது முருகப் பெருமான் அம்பிகையிடமிருந்து வேல் வாங்குகிற விழா நடந்து வருகிறது. இந்த பழக்கத்தையொட்டித்தான், ‘சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சங்காரம்’ என்ற பழமொழி ஏற்பட்டது.

சிக்கலில் அம்பிகையின் கோயில் கீழே இருக்கிறது. முருகப் பெருமானின் உற்சவ மூர்த்தியாகிய சிங்காரவேலன் மேலே இருக்கிறன். அவனை அலங்கரித்து, கீழே எழுந்தருளச் செய்து அம்பிகையிடம் வேலை வாங்கப் பண்ணுவார்கள். அவன் வேலை வாங்கிக்கொண்டு வேகமாகப் படிக்கட்டுகள் ஏறி மேலே போய்த் தன் இருக்கையை அடைவான். அப்போது முருகப் பெருமானின் திருமுகம் வியர்த்து இருக்கும். இதனைப் பரிசோதனை செய்து உண்மை என்று கண்டவர்கள் இருக்கிறர்கள். அம்பிகையிடம் வேலை வாங்கும் வழக்கம் இருப்பதைக் குறிப்பிட இதைச் சொன்னேன்.

முருகப் பெருமான் சிவபெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய சகோதரர்கள் லட்சத்து ஒன்பது பேர்களுடன் புறப்பட்டு அவனிக்கு வந்தான். வாயுதேவன் தேர்ச் சாரதியாக இருக்தான். போகின்ற இடங்கள் எல்லாம் குளிர்ச்சியாக இருந்தன. அப்போது வழியில் தாரகன் என்னும் அசுரனுக்கு இருப்பிடமாக இருந்த மாயாபுரிப் பட்டணமும், அதைத் தன்பால் கொண்ட கிரௌஞ்ச மலையும் எதிர்ப்பட்டன,

கிரௌஞ்சாசுரன்

தாரகன் என்பவன் யானை முகத்தை உடையவன்; சூரபன்மனின் தம்பி. அவன் துணைவன் கிரௌஞ்சாசுரன். அவன் மலை வடிவாக இருந்தான்.

அவன் திடீரென்று எங்காவது மக்கள் வந்து போகிற பாதையை அடைத்துக்கொண்டு அந்த வழி வந்தாரைத் துன்புறுத்துவான். அகத்தியர் அந்த வழியாக ஒரு சமயம் வந்தபோது அவன் வழியை அடைத்துக்கொண்டு தொல்லை கொடுத்தான். அப்போது அவர் தம்முடைய தண்டத்தால் அவனை அடித்துப் பல துவாரங்களை உண்டாக்கினர். "நீ இப்படியே அமர்ந்த நிலையில் இருப்பாயாக. இவ்வழி வருபவர்கள் இந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே புகுந்தால் அவர்களுக்குத் துன்பம் கொடுப்பாய். அந்தப் பழி பாவங்கள் உன்னைச் சாரும். கடைசியில் முருகப் பெருமான் வந்து உன்னை அழிப்பான்" என்று சாபம் கொடுத்துவிட்டுப் போனர்.

கிரௌஞ்சம் என்பது அன்றிலுக்குப் பெயர். அதன் வடிவ முடையது கிரௌஞ்சகிரி. அன்றில் பட்சி காதலில் சிறந்தது. எப் போதும் ஆணும் பெண்ணுமாக ஒன்றியிருப்பது. காதலின் சிறப்புக்கு உதாரணமாக அன்றிலைச் சொல்வது வழக்கம். அன்புக்கு அடை யாளமாக இருக்கிற அன்றில் உருவத்தை எடுத்துக் கொடுமையில் சிறந்தவனாக இருந்தான் கிரௌஞ்சாசுரன் ; சாதுக்களுக்குப் பல வித மான கொடுமைகளைச் செய்து வந்தான்.

தாரகாசுரன்

அந்தக் கிரௌஞ்ச கிரியில் மாயாபுரிப் பட்டணத்தை அமைத்துக்கொண்டு தாரகன் என்ற அசுரன் ஆண்டு வந்தான்.

முருகப் பெருமானை இப்போது நாரத முனிவர் வந்து தரிசித் தார். அவர் தாரகனைப் பற்றிய வரலாற்றைச் சொன்னார். முன்பு தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நிகழ்ந்த போரில் யானைமுகனாகிய தாரகாசுரன் திருமாலை எதிர்த்து நின்றான். அப்போது திருமால் தன் கையிலுள்ள சக்கரத்தை அவன்மேல் ஏவினார். அந்தச் சக்க ராயுதம் தாராகாசுரன் கழுத்தில் மாலையாக விழுந்தது. அத்தகைய வலிமையுள்ளவன் தாரகன் என்ற செய்தியை நாரதர் முருகனுக்குச் சொன்னார். "நீ அவனைச் சங்காரம் செய்தால் சூரனைச் சங்காரம் செய்வது எளிது" என்று அவர் சொன்னார்.

வீரவாகு பொருதல்

உடனே முருகப் பெருமான் வீரவாகு தேவரை நோக்கி, "நீ நவ வீரர்களுடன் சென்று முன்னால் செய்ய வேண்டியதைச் செய்து வை. நான் வந்து முடித்து வைக்கிறேன்" என்று சொன்னார்.

எம்பெருமானுடைய ஆணையைப் பெற்ற வீரவாகு தேவர் நவ வீரர்களும் லட்சம் வீரர்களும் உடன் வர மாயாபுரிப் பட்டணம் சென்றார்.

அவருக்கும் தாரகாசுரனுக்கும் போர் நடந்தது. பூமியையே அம்மியாகவும், பூதங்களின் கால்களையே குழவியாகவும், இரத்தத் தையே நீராகவும் கொண்டு பூதப் படையை அரைத்துக் கலங்க அடித்தான் தாரகன். தன் கையிலுள்ள தண்டத்தை ஓங்கினான். அப்போது வானமே பிளந்தது. தரையில் அடித்தவுடன் தரை

பிளந்தது. இவ்வாறு தன் தண்டத்தால் ஆயிரம் வெள்ளம் சேனையை அழித்தான். எட்டுத் திக்குகளும் கிழிந்தன. கருடக் கூட்டத்தைக் கண்ட பாம்புகள் சிதறி ஓடி அழிவதைப்போலப் பூதகணங்கள் அழிந்தன. எதிர்த்த பூதகணங்களை எல்லாம் தாரகன் பூமியிலே வைத்துத் தேய்த்தான்.

அவனை நோக்கி நவவீரர்களும் பூதகணங்களும் விட்ட அம்புகள், ஆலங்கட்டி மழை பெய்யும் போது கீழே விழுந்து சிதறும் பனிக் கட்டிகளைப் போல அவன் மார்பில் பட்டுச் சிதறின.

தாரகன் தன் ஒரு கையால் லட்சம் வீரர்களையும் வளைத்துப் பிடித்துக் கடலில் கொண்டுபோய்ப் போட்டான். இதைக் கண்ட நவவீரர்களுள் ஒருவனாகிய வீரகேசரி நூறு அம்புகள் விட்டுத் தாரகனின் முடியை வீழ்த்தினான். சினத்தோடு தன்னுடைய முடியைத் தரித்துக்கொண்ட தாரகன் மறுபடியும் தன் தண்டத் தைச் செலுத்தினான். அந்தத் தண்டம் வீரகேசரியின் மார்பைத் தாக்க, அவன் மயங்கி வீழ்ந்தான்.

தன் தம்பி வீரகேசரி தாரகாசுரன் விட்ட தண்டத்தால் மயங்கி வீழ்ந்தான் என்பதைக் கேள்விப்பட்ட வீரவாகு தேவர் சினத்தோடு யுத்த களத்திற்கு வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்துப் பரிகாச மாகச் சிரித்தான் தாரகன்.

"திருமால் ஏவிவிட்ட சக்கராயுதத்தை நான் என் மார்பில் அணிந்து இருக்கிறேன். அத்தகைய என்னையா எதிர்க்க வந்தாய்?" என்று கேட்டான். "சிங்கத்தைச் சிறு நரி வெல்ல முடியுமானால், என்னையும் உன்னால் வெல்ல முடியும்" என்றான்.

மாயன் றனைவென் றவன்நேமியை மாசில் கண்டத்
தேயும் படியே புனைந்தேன்வலி எண்ணு றாதே
நீயிங் கடுவாம் எனக்கூறினை, நீடு மாற்றம் ;
சீயந் தனையும் நரிவெல்வது திண்ண மாமோ ?

(தாரகன் வதை. 73.)

[வென்று அவன் நேமியை ; நேமி - சக்கராயுதம். கண்டத்து ஏயும்படி - கழுத்தில் தங்கும்படி. அடுவாம் - சண்டை செய்வோம். மாற்றம் - வார்த்தை. சீயம்- சிங்கம்.]

இவ்வாறு சொல்லிப் போர் செய்யத் தொடங்கினான்.

தாரகன் ஆக்கினேயாஸ்திரம் விட, வீரவாகு தேவர் வாருணாஸ்திரம் விட்டு அதை அழித்தார். அதுபோல் வாயவாஸ்திரம், சூர்யாஸ்திரம், பிரம்மாஸ்திரம் என்று தாரகன் விட விட, வீரவாகு தேவரும் அவற்றுக்கு எதிரே மாற்று அஸ்திரங்களை விட்டு அழித்தார். தன்னுடைய அஸ்திரங்களினால் எந்தப் பயனும் விளையாமை கண்ட தாரகாசுரன் மாயையால் வெற்றி பெற நினைத்தான். பல வடிவங்களை எடுத்தான். வீரவாகு தேவர் இறுதியாக நரசிம்மத்தையும் வெல்ல வல்ல சரபாஸ்திரத்தை ஏவினார். அதற்குப் பயந்து தாரகன் ஓட, அவனைக் கட்டி இழுத்து வர அவன் பின்னால் வீரவாகு தேவரும் துரத்திச் சென்றார்.

வேழ மாமுகற் கிளவலை உன்னியே வீரன்
ஆழி மால்கட லாமென ஆர்த்துவை தனுகக்
சூழும் மாயையின் இருக்கையாம் தொல்கிர வுஞ்சப்
பாழி ஒன்றுசென் றொளித்தனன் தாரகப் பதகன்.

(தாரகன் வதை. 88.)

[வேழமாமுகற்கு - விநாயகருக்கு. பாழி - குகை. பதகன் - பாவி.]

யானை முகமுடைய தாரகனை வெல்லச் சென்ற வீரவாகு தேவர் யானைமுகக் கடவுளின் தம்பியாகிய முருகனைச் சிந்தித்தார் என்று கச்சியப்பர் சொல்கிறார். யானை முகனை வெல்ல, யானை முகன் தம்பியை நினைத்தார் என்று சொன்னது ஒரு நயம்.

"யானையால் யானையை யாத்தல்"

என்று குறள் சொல்கிறது. இங்கே அசுர யானையை வெல்வதற்குத் தேவயானையின் தம்பியைத் தியானித்தார் வீரவாகுதேவர். கணபதியையும் அவன் இளவலாகிய முருகனையும் ஒரு சேர நினைத்தார்.

அப்போது தாரகன் கிரௌஞ்ச மலைக்குள் ஒரு குகையில் புகுந்து மறைந்து கொண்டான்.

வீரவாகுவும் பிறரும் மயங்கல்

அந்தக் குகைக்குள் வீரவாகு தேவர் புகுந்தார். எங்கே பார்த்தாலும் இருளாக இருந்தது. காலால் மெதுவாகத் தடவிப் பார்த்து அந்த வழியே போனார். ஆயினும் வழி இன்னது என்று தெரியவில்லை. அதிலிருந்து திரும்பி வரவும் வழி தெரியாமல்

திண்டாடினர். கிரௌஞ்ச மலைக்குள் புகுந்த வீரவாகு தேவரும், அவரோடு சென்ற படைவீரர்களும் அந்த மலை செய்த மாயத்தால் மயங்கிப் போனார்கள். எம்பெருமானுடைய தம்பியாகிய வீரவாகு தேவரே மயங்கி விட்டார் என்றால் அசுரருடைய மாயம் எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அப்போது நாரதர் தாரகாசுரன்முன் தோன்றி, "சிவன் மகன் இப்போது தனியாக இருக்கிறான். நீ போருக்குப் புறப்படு" என்று தூண்டிவிட்டார்.

முருகன் போர்க்களம் வருதல்

பிறகு நாரதர் முருகப் பெருமானிடம் வந்து, வீரவாகு தேவர் கிரௌஞ்ச மலைக்குள் மயங்கிக் கிடப்பதைச் சொன்னார். உடனே முருகன், படையின் பின்புறத்தில் இருந்தவன், முன்னாலே வந்து சேர்ந்தான்.

தாரகாசுரன் தன் கண் முன்னாலே முருகனைப் பார்த்தான். ஆண்டவனை நேருக்கு நேராகப் பார்க்க எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும். அவன் போர்க்களத்தில் ஆண்டவனைப் பார்த்தான் என்றாலும் ஆண்டவனது தரிசனம் தரிசனந்தானே? முருகனை நேருக்கு நேராகக் கண்கொண்டு பார்க்கத் தாரகன் புண்ணியம் செய்திருந்தான் என்று கச்சியப்பர் பாடுகிறார்.

முழுமதி அன்ன ஆறு முகங்களும் மூந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமல ரடியும் கண்டான்; அவன்தவம் செப்பற் பாற்றே!

(தாரகன் வதை. 126.)

[படை - ஆயுதம். ஆர்க்கும் - ஒலிக்கும்.]

பாரதத்தில் கண்ணனது விசுவரூபக் காட்சி சில இடங்களில் வருகிறது. துரியோதனனிடம் தூதாகச் சென்றபோது, கண்ணனை ஒரு குழியில் விழச் செய்தான் அவன். அப்போது கண்ணன் விசுவ ரூபம் எடுத்துக்கொண்டான். அந்த விசுவரூபத்தை எல்லோரும் தொழுதார்கள். ஆனால் துரியோதனனோ சற்றும் அஞ்சாமல், அன்பு செய்யாமல் அகந்தையோடு இருந்தான். கண்ணனது விசுவ ரூபத்தைக் கண்டும் குருடனாக இருந்து விட்டான்.

அப்படியில்லாமல் இங்கே தாரகாசுரன் முருகப் பெருமானின் தெய்விக வடிவத்தைக் கண்டு வியந்தான்.

தற்பம துடைய சிந்தைத் தாரகன் இனைய வாற்ருல்
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு அனைத்தும் நோக்கி
அற்புதம் எய்தி, நம்மேல் அமர்செய வந்தான் என்ருல்
கற்பனை கடந்த ஆதிக் கடவுளே இவன்கொ லென்ருன்.

(*தாரகன் வதை. 127.*)

[தற்பம் - அகந்தை. இனைய ஆற்ருல் - இவ்வண்ணமாக.]

'இவன் கற்பனை கடந்த ஆதிக் கடவுள்' என்று அவன் எண்ணினுன். அதன் பிறகு முருகனைப் பார்த்துப் பேசத் தொடங்கினுன்.

"சிவகுமாரனே, நீ பகைவன் அல்லவே! நாரணன், பிரமன், இந்திரன் ஆகியவர்கள்தாமே எனக்குப் பகைவர்கள்? சந்திரனைத் தலையில் தரித்த சிவபெருமானுக்கும் எங்களுக்கும் எந்த விதமான பகையும் இல்லையே! அவனுடைய குழந்தையாகிய நீ போர்க் கோலத்தோடு வந்தது என்ன?" என்று அவன் கேட்டான்.

நாரணன் தனக்கும் மற்றை நான்முகன் தனக்கும் வெள்ளை
வாரணன் தனக்கும் அல்லால் மதிமுடி அமல னுக்கும்
தாரணி தனில்எ மக்கும் சமரினை இழைப்ப இங்கோர்
காரணம் இல்லை மைந்தா; வந்ததென் கழறு கென்ருன்.

(*தாரகன் வதை. 129.*)

[வெள்ளைவாரணன் - வெள்ளையானையை உடைய இந்திரன். சமர் - போர்.]

சிவபெருமானை, 'மதிமுடி அமலன்' என்று மரியாதையாகச் சொன்னுன்; 'மைந்தா' என்று நெருக்கமுடையவனைப் போலப் பேசினுன்.

முருகப் பெருமான் கம்பீரத்தோடு சொல்கிருன். "அறச் செயல்கள் புரிகின்றவர்களுக்கு அருள் செய்கின்றவரும், அல்லாதவர்களுக்குத் தண்டனை அளிக்கின்றவருமாகிய பரமேசுவரர், தேவர்களை நீங்கள் சிறையில் அடைத்ததைத் திருவுளம் கொண்டு உங்கள் பலத்தை எல்லாம் அழித்துவிட்டு வரும்படி எம்மை விடுத்தார்" என்று கூறினுன். "விடுத்தனன் எம்மை" என்று கம்பீரத்தோடு பேசினுன்.

அறவினை புரிந்தே யார்க்கும் அருளொடு தண்டம் செய்யும்
இறையவன் ஆகும் ஈசன் இமையவர் தம்மை நீங்கள்
சிறையிட வைத்த தன்மை திருவுளம் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தனன் எம்மை என்ருன்.

(*தாரகன் வதை. 136.*)

[தண்டம் செய்யும் - தண்டனை புரியும். விறல் - மிடுக்கு. சிந்த - அழிக்க,]

அப்போது தாரகாசுரன், "என் மார்பினைப் பார். திருமால் ஏவிய சக்கரம் என் மார்பில் மாலையாக இருக்கிறது. இத்தகைய பலம் பொருந்திய என்னை நீ என்ன செய்ய முடியும்?" என்று கேட்டான்.

அதைக் கேட்டு முருகப் பெருமான், "திருமாலின் சக்கரம் போல் நம் கை வேல் பழியைப் பெறாது. எத்தகைய படைகளை நீ அனுப்பினாலும் அவற்றை எல்லாம் மாய்த்துவிடும் பெருமை உடையது இது; விரைவில் உன் உயிரை உண்டுவிடும்" என்று சொன்னான்.

முருகனும் தாரகனும் பொருதல்

பிறகு இருவருக்கும் போர் நிகழ்ந்தது. தாரகன் விட்ட அம்பு களை எல்லாம் முருகன் அம்புகளை விட்டு அறுத்தான். தாரகன் மேல் முருகன் பல கோடி அம்புகளை எய்தான். அந்த அம்புகள் அவன் உடம்பு முழுவதும் பாய்ந்து நின்றன. யானை முகனாகிய அவன் அப்போது முள்ளம் பன்றியைப் போலத் தோன்றினான். அவன் உடம்பில் பாய்ந்து நின்ற அம்புகள் முள்ளம்பன்றியின் முட்களைப் போலக் காட்சி அளித்தன.

வெய்யான் அநந்தம் கணைதூண்ட விமலன் நல்கும்
துய்யான் அவைகள் அறுத்துக் கணைகோடி தூண்டி
மையார் அவுணர் புகழ்தாரக மான வேழம்
எய்யாகும் வண்ணம் செறித்தானவன் யாக்கை எங்கும்.

(தாரகன் வதை. 149.)

[வெய்வான் - தாரகன். தூண்டி - எய்து. எய்- முள்ளம் பன்றி.]

புறப்பொருள் நூல்களில் இப்படி ஒரு நிலையைச் சொல்வது வழக்கம்.

"எய்போல் கிடந்தான்என் ஏறு"

என்று பாட்டு வரும்.

முருகப் பெருமான் விட்ட அம்பினால் தாரகாசுரனுடைய இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டு வீழ்ந்தன. மாயையில் வல்ல வனாகிய தாரகாசுரன் மீண்டும் முருகப் பெருமான்மேல் ஆயிரக் கணக்கான வாளிகளைச் செலுத்தினான். முருகன் தன்னுடைய வாளினால் அந்தப் பல்லாயிரம் அம்புகளையும் வீழ்த்தினான். தாரகா சுரன் தளர்ச்சியுற்றுத் தேரில் வீழ்ந்தான். அவன் படையிலுள்ள

அசுரர்களை முருகன் அம்புகளை எய்து அழித்தான். அழிந்தவர்கள் போக மற்றவர்கள் ஓடிப் போனார்கள்.

கதிரவன் மறையும்போது கார்மேகம் செம்மேகமாகத் தோன்றியது போல, உடம்பெல்லாம் குருதி வழியத் தாரகன் கிடந்தான். மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தபோது, தன்னைத் தவிரத் தன்னைச் சார்ந்தவர்கள் யாரும் அங்கே காணாததைக் கண்டு, தக்க சமயத்தில் அவர்கள் தன்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டதை அறிந்தான்.

தான் வைத்திருந்த படைக்கலங்கள் அத்தனையையும் முருகப் பெருமான் மீது அவன் ஏவினான். அவை முருகப் பெருமான் முன்னே வந்து, பக்கத்தில் ஒடுங்கி, அவனை வணங்கி, கைகட்டி நின்றன. இதனைக் கண்டான் தாரகன்.

அவனுடைய உள்ளத்தில் இருந்த அகந்தை குறைந்து போயிற்று. முருகப் பெருமானுடைய நிலையைக் கண்டு வியப்படைந்தான். 'இவனை வெல்வது எளிய காரியம் அன்று; மிகவும் அருமை' என்ற எண்ணம் உள்ளத்தில் தோன்றியது. என்ன செய்யலாம் என்று யோசனை பண்ணினபோது, 'இவன்மேல் மிகக் கொடிய படையாகிய பாசுபதாஸ்திரத்தை ஏவவேண்டும்' என்று நினைத்தான். உடனே அதை ஏவினான்.

பாசுபதாஸ்திரம் முருகன் முன்னால் வந்தவுடன், பெருமான் கையை நீட்ட, அது அவன் கையில் போய் இருந்தது. முன்னாலே ஒரு பொருளைத் தந்த ஒருவன், மீட்டும் தானே அந்தப் பொருளை வாங்கிக் கொள்வதுபோல அந்தச் செயல் இருந்ததாம்.

கந்தவேள் அனையது கண்டு தந்தையைச்
சிந்தையில் உன்னிஓர் செங்கை நீட்டியே
அந்தவெம் படையினை அருளிற் பற்றினான்,
தந்தவன் வாங்கிய தன்மை என்னவே.

(தாரகன் வதை. 170.)

முருகப் பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடு இல்லை என்ற கருத்து இதனால் புலப்படுகிறது.

தாரகன் செய்த மாயம்

இனி மாயம் செய்தே போர் புரியவேண்டுமென்று எண்ணித் தாரகாசுரன் மறைந்து போனான், கிரௌஞ்ச மலையைப் பார்த்து,

"நீ மாயங்களை எல்லாம் செய்வாயாக" என்றான். கிரௌஞ்சமும் பல வகையான வடிவங்களை எடுத்து நிற்க, தாரகனும் அந்த அந்த வடிவங்களுக் கேற்ற உருவெடுத்தான். கிரௌஞ்சம் திரிபுரம்போல நின்றது; தாரகன் அதில் இருந்த அசுரர்களைப் போல நின்றான். கிரௌஞ்சம் பல பல மேகங்கள்போல உருவெடுத்தது; தாரகன் அவற்றில் இடியைப்போல இருந்தான். கிரௌஞ்சம் சமுத்திரமாக வும், தாரகன் துறையாகவும் தோன்றினர்கள். இப்படி அவர்கள் இரண்டு பேரும் வெவ்வேறு வடிவம் எடுத்து மாயம் செய்தார்கள். அவற்றை எல்லாம் முருகன் அழித்தான்.

கடைசியில் முருகன் தன்னுடைய வேற்படையைப் பார்த்துச் சொன்னான்; "தாரகனையும், கிரௌஞ்சத்தையும் ஒரு கணத்தில் அழித்துவிடு. கிரௌஞ்சத்தினிடையே மயங்கிக் கிடக்கின்ற வீரவாகு முதலியவர்களை மீட்டுக்கொண்டு வருவாயாக" என்று ஆணையிட்டான்.

தாரகன் என்பதோர் பேரோனைச்
சஞ்சலம் உறுகிர வுஞ்சத்தை
ஓர்இறை செல்லுமுன் உடல்கீறி
உள்ளுயிர் உண்டுபு றத்தேகிப்
பாரிடர் தம்மை இலக்கத்தோன்
பதின்மர்க ளாக உரைக்கின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே
வேற்படை தன்னை விடுத்திட்டான்.

(தாரகன் வதை. 180)

[இறை - கணம். பாரிடர் - பூத கணங்கள்.]

தாரகனும் கிரௌஞ்சமும் அழிதல்

அப்படியே அந்த வேற்படை தாரகனின் மார்பாகிய மலையையும் கிரௌஞ்ச மலையையும் ஊடுருவிச் சென்று, வீரமும் புகழும் பெற்று, இரத்தமும் பொடியும் தன்மேல் போர்த்து நிற்க மீண்டது. தாரகன் மார்பில் புகுந்ததனுல் இரத்தமும், கிரௌஞ்ச மலைக்குள் சென்றதனுல் பொடியும் வேலின்மேலே கப்பிக்கொண்டன. சிவந்த நிறம் உள்ள இரத்தம் வீரத்தைப் போலவும், வெள்ளை நிறமான

பொடி புகழைப் போலவும் இருந்தன. வீரமும் புகழும் கொண்டு விளங்கியது அது.

தாரகன் மார்பம் என்னும் தடம்பெரு வரையைக் கீண்டு
சீரிய கிரவுஞ் சத்தில் சேர்ந்துபட் டுருவிச் சென்று
வீரமும் புகழும் கொண்டு விளங்கிய தென்ன அங்கண்
சோரியும் துகளும் ஆடித் துண்ணென மீண்ட தன்றே.

(தாரகன் வதை. 185.)

[கீண்டு - கிழித்து. சோரி - இரத்தம். துகள் - பொடி.]

பிறகு அந்த வேலானது குகைக்குள் இருந்த வீரர்களை எழுப்பி விட்டு, ஆகாச கங்கையைச் சார்ந்து தோய்ந்து, பரிசுத்தத்தை அடைந்து, மீண்டும் ஆண்டவன் திருக்கரத்தில் வந்து பொருந்தியது.

வீரவாகு முதலியோர் மயக்கம் நீங்குதல்

அந்த வேல் தாரகனையும் கிரௌஞ்ச மலையையும் அழித்து, வீரவாகு தேவர் முதலியவர்களின் மயக்கம் நீங்கும்படியாக எழுப்பியது. ஞானசக்தியே அந்த வேல். அவித்தையாகிய இருட்டை அழிப்பதோடு, ஞானமாகிற ஒளியையும் அது அளிக்கும் என்பதை இந்த வரலாறு காட்டுகிறது. அஞ்ஞானந்தான் அசுர சம்பத்து. வீரவாகு முதலியவர்கள் ஞானப்படை. அஞ்ஞானத்தை அழித்து, ஞானப் படையை எழுப்புகின்ற ஆற்றல் ஞான சக்தியாகிய வேலுக்கு இருந்தது.

மயக்கம் தீர்ந்து வந்த வீரவாகு முதலியவர்கள் முருகப் பெருமானை அணுகி, அவன் திருவடி மலர்களை வணங்கி, பக்கத்தில் வந்து கைகூப்பி நின்றார்கள்.

அப்போது அவர்களைப் பார்த்து முருகன், "நீங்கள் தாரகனுடைய குகைக்குள் புகுந்து, உணர்வு நீங்கி, எல்லோரும் மிகவும் வேதனைப் பட்டீர்கள் போலும்!" என்று இங்கிதமாக ஆறுதல் கூறினான். "இப்படி ஏமாந்து போய் அகப்பட்டுக்கொண்டீர்களே!" என்று கோபிக்கவில்லை.

அப்படி முருகன் சொன்னவுடன் வீரர்கள் யாவரும், "எம்பெருமானே, உன் அருள் இருக்கும்போது எங்களுக்கு ஏதேனும்

துன்பம் உண்டாகுமா? அங்கே மயங்கி உறங்கினாலும் எங்களுக்கு எந்த விதமான வேதனையும் உண்டாகவில்லை. நாங்கள் சுகமாகத் தூங்குபவர்களைப் போல இருந்தோமேயன்றி, மலையின் மாயத்தால் துன்பத்தை அடையவில்லை" என்று சொன்னார்கள். யோகம் செய்பவர்களைப் போல அவர்கள் இருந்தார்களாம். எம்பெருமான் திருவருளில் நம்பிக்கை உடையவர்கள் எந்தச் சமயத்திலும் அமைதியாக இருப்பார்கள்; மற்றவர்களால் துன்பம் நேர்ந்தாலும் வருந்த மாட்டார்கள்.

செய்யவன் இனைய வாறு
சீரருள் புரிய, வீரர்,
ஐயநின் அருள்உண் டாக
அடியம்ஊ றடைவ துண்டோ?
மையலோ டுறங்கு வார்போல்
மருவும்இன் புற்ற தன்றி
வெய்யதோர் கிரிமா யத்தால்
மெலிந்திலம் இறையும் என்றார்.

[செய்யவன் - முருகன். ஊறு - துன்பம். மையல் - மயக்கம். இறையும் - சிறிதும்.]

பிறகு முருகன் பூதகணங்களை எல்லாம் எழுப்பி, அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணினான்.

முருகன் செந்தூர் வருதல்

தாரகனைச் சங்காரம் பண்ணின பிறகு முருகன் மேருவை அடைந்தான். அங்கே தேவர்கள் மயனைக் கொண்டு ஓர் அழகான மண்டபத்தை எழுப்பினார்கள்; அதில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்து பூஜை செய்தார்கள்.

அசுரேந்திரன் சூரனிடம் செல்லுதல்

தாரகன் இறந்ததைக் கேட்டு அவன் மனைவி சவுரி புலம்பினாள். ஆசுரம் என்ற இடத்திற்குப் போயிருந்த தாரகனுடைய புதல்வன் அசுரேந்திரன் அங்கே வந்தான். தாரகனை முருகன் கொன்றபோது அவன் எப்படியோ தப்பிப் போயிருந்தான். அவன் தன்னுடைய தந்தையாகிய தாரகனுக்கு ஈமக் கடன்களைச் செய்து நிறைவேற்றினான். தாரகன் மனைவிமார்கள் அழல் புகுந்தார்கள்.

அசுரேந்திரன் சூரபன்மனிடம் வந்தான். மகேந்திரத்தில் எழுந்தருளியிருந்த சூரபன்மன் அவனைப் பார்த்து, "என்ன செய்தி?" என்று கேட்டபோது, அவன் தாரகனை முருகன் சங்காரம் செய்த செய்தியைச் சொன்னான்.

என்றலும் மைந்தன் சொல்வான்; இந்திரன் புணர்ப்பால்ஈசன்
வன்திறல் குமரன் பூத வயப்படை தன்னோ டேகி
உன்றன திளவல் தன்னை ஒங்கிர வுஞ்சம் என்னும்
குன்றொடும் வேலால் செற்றுக் குறுகினன் புவியி லென்றான்.

(அசுரேந்திரன். 34)

[மைந்தன் - அசுரேந்திரன். புணர்ப்பால் - சூழ்ச்சியால். வயப்படை - வலிமையை உடைய படை. குறுகினன் - அடைந்தான்.]

"இந்திரனுடைய சூழ்ச்சியினால் சிவபெருமானுடைய குமாரனாகிய முருகப் பெருமான் பூதகணங்களுடன் வந்து தாரகனையும், கிரௌஞ்சத்தையும் தன்னுடைய வேலால் அழித்தான்" என்று சொன்னான். அப்படிச் சொல்லும் போது சூரனுக்கு உணர்ச்சி உண்டாவதற்காக, 'உன்றன திளவல்தன்னை' என்றான். 'என்னுடைய தந்தையை' என்று சொல்லியிருக்கலாம். அது பரிதாபத்தை மட்டும் உண்டாக்கும். அப்படியின்றிக் கேட்கின்ற சூரபன்மனுக்கு வெறி உணர்ச்சி உண்டாக்க, 'உன்னுடைய தம்பியை' என்று சொன்னான்.

அந்தச் செய்தியைக் கேட்டவுடன் சூரனுக்குக் கோபம் வந்து விட்டது. "படைகளைக் கொண்டு வாருங்கள். போர் செய்யப் போகலாம்" என்று கொதித்தான். அப்போது அமோகன் என்ற அமைச்சன் எழுந்து சொல்லத் தொடங்கினன்.

"பகைவர்களுடைய சூழ்ச்சியையும், பலத்தையும் அறிந்து நாம் போருக்குச் செல்ல வேண்டும். இந்திரனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, பூதங்களைப் படையாகக் கூட்டி வந்து, சிவபெருமான் நேற்றுப் பெற்றுத் தந்த பிள்ளை வென்ருன் என்ருல், அவனை நினைந்து போருக்கு எழுவது புகழ் ஆகாது. அது உனக்குப் பழியாகும். தண்டை அணிந்த காலை உடைய சின்னஞ் சிறு பிள்ளை, யானைத் தலையுடைய உன்னுடைய தம்பி தாரகனைக் கொன்றது ஆச்சரியம் அன்று. மிகவும் வலிமை உடையவர்கள் ஒரு காலத்தில் வலிமை இழப்பார்கள். மிகவும் எளியவராக இருப்பவர்கள் ஒரு காலத்தில் வீரராய்த் திகழ்வார்கள். அவற்றைக் கண்டு நாம் மனம் இழக்கக் கூடாது" என்று அவன் சொன்னன்.

கலகல மிழற்றும் தண்டைக் கழலடிச் சிறுவன் கைம்மாத்
தலையுடை இளவல் தன்னைத் தடிந்ததற் புதத்த தன்ருல்;
வலியரும் ஒருகா லத்தில் வன்மையை இழப்பர் ; ஆற்ற
மெலியரும் ஒருகா லத்தில் வீரராய்த் திகழ்வர் அன்றே.

[கைம்மாத் தலை - யானைத் தலை. இளவல் - தாராகாசுரன். தடிந்தது - அழித்தது. ஆற்ற - மிகவும்.]

"யார் வென்ருர்கள்? அவர்கள் படை எவ்வளவு? வலிமை எவ்வளவு? இவற்றை எல்லாம் அறிந்து போர் செய்யத் துணிய வேண்டாமா? யாரோ ஒருவர் சொன்னுர் என்பதற்காக உடனே நீ படைகளுடன் புறப்படுவது முறையாகாது" என்று அந்த மந்திரி சொன்னன்.

அதன் பின் சூரபன்மன் தூதுவர்களை அனுப்பினன். அவர்கள் போய்ச் செய்தியை அறிந்து வந்து சொன்னர்கள்.

முருகப் பெருமான் கேதாரம் அடைதல்

முருகப்பெருமான் தன்னுடைய தந்தையின் உத்தரவைப் பெற்றுக் கைலாசகிரிக்குப் பக்கத்திலுள்ள, தன் ஆஸ்தானபுரியாகிய கந்தகிரியிலிருந்து புறப்பட்டு வந்தான்.

இமாசலத்தில் கேதாரம் என்பது ஒரு தலம். பிருங்கி முனிவர் என்பவர் வேதம் மட்டும் படித்தவர். அவருக்கு ஞானமார்க்கம் தெரியும்; பக்தி மார்க்கம் தெரியாது. பக்தி தெரியாதவர்களுக்கு அன்பு என்பதே தெரியாது. சிவபெருமான் ஞானமூர்த்தி. வேதத்தைப் படித்துவிட்டதனுல் பிருங்கி முனிவர் சிவபெருமானை மட்டும் வணங்கினுல் போதும் என்று எண்ணினர்; அம்பிகையை விட்டு விட்டுச் சிவபெருமானை மட்டும் வலம் வந்தார். அதைப் பார்த்தவுடன் அம்பிகைக்கு வருத்தம் உண்டாயிற்று. அந்த முனிவரின் உடம்பிலுள்ள சக்தியைப் போக்கிவிட்டாள். அதனுல் அந்த முனிவருக்கு நடக்க முடியவில்லை. அப்போது சிவபெருமான் அவருக்கு மூன்ருவது கால் தந்தான். மூன்று காலோடு பிருங்கி முனிவர் மெல்ல மெல்ல நடந்துவந்தார். சிவபெருமானுக்கு அன்பன் என்ற எண்ணத்தினுல் அம்பிகை அந்த முனிவருக்கு மறுபடியும் பலத்தைத் தந்தாள். 'நாம் தனியாக இருப்பதனுல்தானே அந்த முனிவன் நம்மை விட்டு வலம் செய்தான்? இனிமேல் இறைவனேடு வாம பாகத்தில் ஒட்டிக் கொண்டே இருக்கவேண்டும்' என்ற எண்ணம் அம்பிகைக்கு வந்தது. அதனுல், கேதாரத்தில் இருந்து தவம் செய்து, இறைவனுடைய வாமபாகத்தை அம்பிகை பெற்ருள். உமாதேவியால் சிறப்புப்பெற்ற இடம் கேதாரம் என்ற தலம். அதை முருகன் தரிசித்துவிட்டு மேலே போனுன்.

தன்னை நீக்கியே சூழ்வுறும் தவமுடைப் பிருங்கி
உன்னி நாடிய மறைகளின் முடிவினை உணரா,
என்னை ஆளுடை யான்இடம் சேர்வன்என் றிமையக்
கன்னி பூசனை செய்தகே தாரம்முன் கண்டான்.

(வழிநடைப். 3.)

[சூழ்வுறும் - வலம் வரும். உணரா - அறிந்து. இமையக் கன்னி- பார்வதி தேவி.]

வேங்கட மலை

பிறகு திரு வேங்கடமலைக்கு வந்தான். வேங்கட மலை, திருமாலுக்கும் முருகனுக்கும் உரிய இடம் என்று சொல்வார்கள். பலர் முருகன்தான் திருமால் ஆகிவிட்டான் என்று சொல்வதும் உண்டு. வட நாட்டில் உள்ளவர்கள் வேங்கடத்திலுள்ள பெருமானை, பாலாஜி என்று கூறுவர். பாலன் என்பது முருகனுக்குப் பெயர். ஜி என்பது மரியாதையைக் குறிக்கும் விகுதி. வடநாட்டிலுள்ளவர்களுக்குச்

சைவ வைணவ வேறுபாடு தெரியாது. அவர்கள் பாலாஜி என்று சொல்வதனல் அங்கே முருகன் எழுந்தருளியிருந்தான் என்ற குறிப்புக் கிடைக்கிறது. திருவேங்கடத்திலுள்ள சுவாமியின் கையில் சக்கரத்தையும், சங்கையும் வைக்கிருர்கள். இயற்கையாக அந்த மூர்த்தியின் திருக்கரத்தில் எந்த ஆயுதமும் இல்லே.

அருணகிரிநாத சுவாமிகள் நான்கு திருப்புகழ் திருவேங்கடமலே பற்றிப் பாடியுள்ளார். ' திருவேங்கட மாமலே மேவிய பெருமாளே ' என்று ஒரு பாட்டு வருகிறது.

ஒரு கோவிலுக்குப் போனல் வெளியிலிருந்து அந்தக் கோவிலின் மதிலேப் பார்த்தாலே அது இன்ன கோவில் என்று தெரிந்து கொள்ளலாம். சிவபெருமான் கோவிலாக இருந்தால் மதிலின் மேல் இடபம் இருக்கும். கணபதி கோவிலாக இருந்தால் மூஷிகம் இருக்கும். திருமால் கோவில் என்ருல் கருடன் இருக்கும். முருகன் கோவில் மதில்மேல் மயிலேக் காணலாம்.

சோழ நாட்டில் அம்பிகையின் சந்நிதியில் நந்திதான் இருக்கும். தொண்டை நாட்டில் பல கோவில்களில் அம்பிகைக்கு முன்னல் சிங்கம் இருப்பது வழக்கம். திருவேங்கடத்திலுள்ள திருக்கோவிலின் மதில்மேல் சிங்கந்தான் இருக்கிறது.

ஒரு சமயம் ஸ்ரீ காமகோடி ஆசாரியசுவாமிகள் அவர்களே நான் தரிசித்த போது அவர்கள் இதைப்பற்றிச் சொன்னுர்கள். " திருவேங்கடத்திலுள்ள கோவில் மதில்மேல் சிங்கம் இருக்கிறதே ; எதற்கு ? " என்று கேட்டார்கள். அவர்களே பின்பு விளக்கினுர்கள். " அது ஒரு சக்தி க்ஷேத்திரம். கௌமாரி, வைஷ்ணவி ஆகிய இரண்டு சக்திகளும் சேர்ந்து அங்கே எழுந்தருளியிருக்கிருர்கள். இரண்டு சக்திகளும் சேர்ந்து இருப்பதனல்தான் வேங்கடேசுவரருடைய பரிவட்டம் 36 முழமாக இருக்கிறது. நம்முடைய நாட்டில் ஒரு பெண்ணுக்கு 18 முழம் என்று சொல்வார்கள். இரண்டு பெண்கள் சேர்ந்து இருப்பதால் 36 முழம். இந்த 36 முழத்தை நெய்வதற்கு அங்கே தனியாக நெசவுக்காரர்கள் இருக்கிருர்கள்." இப்படி ஆசார்ய சுவாமிகள் சொன்னுர்கள்.

சிவபெருமானும் திருமாலும் சேர்ந்து ஒன்ருக இருக்கிற உருவம் என்று திருவேங்கடமுடையானே ஆழ்வார் பாடியிருக்கிருர்.

வேங்கட சுப்பிரமணியன் என்ற பேரைப் பல பேர் வைத்துக்கொள் வார்கள். அதுவும் திருமாலுடன் சுப்பிரமணியன் இருப்பதைத் தெரிந்து கொள்வதற்குச் சான்று. **சிலப்பதிகாரத்தில்** வேங்கடத்தில் திருமால் இருந்ததாகச் செய்தி வருகிறது. ஆகவே, அங்கே திருமால் கோவிலும் முருகன் கோவிலும் தனித்தனியாக இருந்திருக்க லாம் என்று கூறுகிறார்கள். அங்கே உள்ள திருக்குளத்தின் பெயர் சுவாமி புஷ்கரிணி என்பது. சுவாமி என்றால் முருகன். முருகன் அந்தக் குளத்தை உண்டாக்கித் திருமாலுக்குப் பூஜை செய்தான் என்று வைணவ புராணம் சொல்கிறது. முருகன் எழுந்தருளிய கோவிலாகையால் அந்தத் திருக்குளத்திற்கு அந்தப் பெயர் வந்தது என்றும் சொல்லலாம்.

கச்சியப்ப சிவாசாரியார் திருவேங்கடத்தில் முருகன் இருந்தான் என்பதற்கு ஒரு வரலாற்றைச் சொல்கிறார். ஒரு சமயம் கைலாயத்தில் சிவபெருமானும் அம்பிகையும் முருகனுடன் வீற்றிருந்தபோது, முருகப் பெருமான் அம்பிகையிடம் ஏதோ கேட்டான். அம்பிகை கோபித்துக்கொண்டாள். பொதுவாகக் குழந்தைகளை அதிகமாகக் கோபித்துக் கொள்பவர் தந்தையார். தாயோ எதைக் கேட்டாலும் பதில் சொல்வது வழக்கம். ஆகவே, பிள்ளைகள் தந்தையரிடத்தில் அஞ்சி நடப்பார்கள்; தாயிடத்தில் சுதந்தரமாகப் பழகுவார்கள். அம்பிகை கோபித்துக்கொண்டதனால், முருகன் தானும் கோபம் கொண்டு, "நான் இங்கே இருக்கமாட்டேன். வேறு ஒரு மலைக்குப் போகிறேன்" என்று பாதாளத்தின் வழியே வந்து, வேங்கட மலையின் குகை வழியே வெளிப்பட்டானாம். பிறகு அம்பிகை அழைக்க, மறுபடியும் கைலாயத்திற்குப் போய்ச் சேர்ந்தானாம்.

அப்போது அவன் தங்கின இடம் திருவேங்கடம். 'முன்பு தான் தங்கிய வேங்கடகிரியைப் பார்த்தான்' என்று கந்தபுராணக்காரர் சொல்கிறார்.

அண்டம் மன்னுயிர் ஈன்றவ ளுடன்முனி வாகித்
தொண்ட கம்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே ஓர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்.

(வழிநடைப். 6.)

[முனிவாகி - கோபித்து. தொண்டகம் - குறிஞ்சி நிலத்துக்குரிய பறை. சுவாமி - முருகன். தன் மால் வரை - கந்தகிரி.]

திருவேங்கடத்தில் ஓர் அருவி இருக்கிறது. அதற்குக் குமார தாரை என்று பெயர். குமாரன் என்பது முருகன் பெயர்தானே? திருப்பதியில் வெள்ளிக்கிழமை தோறும் வில்வ அருச்சனை நடக்கி றது. திருமால் கோவிலில் வில்வ அருச்சனை நடப்பது அருமை. மேலும் அங்கே சிறப்பான அபிஷேகங்கள் பல உண்டு. இத்தகைய வற்றைக் காணும்போது முருகப் பெருமானின் சம்பந்தமும் அங்கே இருக்கிறது என்று தெரிகிறது.

அதுமாத்திரம் அன்று. எல்லா மலைகளுக்கும் முருகன் தெய்வம். மலைகளும், மலைகள் சார்ந்த இடமும் குறிஞ்சி. குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன்தான். மலையில் மூர்த்தி இருந்தாலும் இல்லா விட்டாலும், வேறு மூர்த்தி இருந்தாலும் மலைக்குத் தலைவனாக அவன் இருக்கிறான்.

காளத்தி

திருவேங்கடத்தைப் பார்த்த பிறகு முருகன் காளஹஸ்திக்கு வந்தான். காளஹஸ்தியில் சிலந்தி, பாம்பு, சிவகோசரியார், யானை, கண்ணப்பர், நக்கீரர், எட்டுப் பெண்கள் ஆகியவர்கள் வழிபட்டார் கள். இதற்குத் தட்சிண கைலாசம் என்று பெயர். மற்ற எல்லோ ரும் வழிபாட்டினால் வணங்கினார்கள். நக்கீரர் பாட்டால் வணங்கினார்.

சிலந்தி மாசுணம் மும்மதக் கரிசிவ கோசன்
மலைந்தி டும்சிலை வேட்டுவன் கீரனே மடவார்
பலந்த ரும்வழி பாட்டினால் பாட்டினால் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையும் கண்டான்.

(வழிநடைப். 7.)

[மாசுணம் – பாம்பு. சிலை - வில். வேட்டுவன் - கண்ணப்பன். கீரன் - நக்கீரன்.]

நக்கீரர் **திருமுருகாற்றுப்படை** பாடினவர். திருமுருகாற்றுப் படை தமிழில் மிகப் பழைய நூல்களாகிய 36-இல் முதலாவதாக இருப்பது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்று மூன்று வகைகளாகப் பழைய நூல்களைச் சொல் வார்கள். இந்த மூன்றிலும் உள்ள நூல்கள் 36. இந்த மூன்று வரிசையிலும் முதலாவதாக இருப்பது பத்துப்பாட்டு. 36 நூல் களுக்கும் முதலாவதாக இருப்பது திருமுருகாற்றுப்படை. பத்துப் பாட்டிலும் முதல் பாட்டாக இருப்பது திருமுருகாற்றுப்படை.

"பாட்டுள் முந்துற வந்து நிற்கும் முருகாற்றுப் படைமொ ழிந்தான்"

என்று சிவபிரகாசர் **சீகாளத்திப் புராணத்தில்** சொல்கிறார்.

நக்கீரர் பாடிய அந்தப் பாட்டு, பத்துப்பாட்டில் ஏன் முதலாக இருக்கிறது என்று சிந்திக்கவேண்டும். "நக்கீரர் எல்லாப் புலவர்களையும் விடப் பெரியவர். ஆகையால் அவர் பாட்டை முதலில் வைத்தார்கள்" என்று சொல்லலாம். ஆனால் அந்த நக்கீரர் பாடிய நெடுநல்வாடை பத்துப்பாட்டில் ஏழாவதாக இருக்கிறது. நக்கீரருக்குப் பெருமை தருவதானால் திருமுருகாற்றுப்படையை ஒட்டியே, அவர் பாடியுள்ள நெடுநல்வாடையையும் வைத்திருக்க வேண்டும். அப்படி வைக்காமையினால் வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். நக்கீரர் பழமையானவர், அதனால் அப்படி வைத்தார்கள் என்று சொல்லலாம். அவரை விடப் பழமையான கபிலருடைய குறிஞ்சிப் பாட்டு, பத்துப் பாட்டில் எட்டாவதாக இருக்கிறது. இவற்றை எல்லாம் காரணமாகச் சொல்ல முடியாது. பின்பு திருமுருகாற்றுப் படையை முதலில் வைத்ததற்குக் காரணம் என்ன? அது முருகப் பெருமானைப் பற்றிப் பாடினது. ஆதலின் சங்க நூல்களுக்கு எல்லாம் முதலாவதாக வைத்தார்கள்.

தமிழர்கள் முருகனை மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் பூஜிப்பார்கள். எல்லா நிலங்களிலும் உயர்ந்ததாகிய குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனாக வைத்தார்கள். மிக உயர்ந்தவர்களை வழிபடுகிற போது உயர்ந்த இடத்தில் வைத்துப் பூஜிக்க வேண்டுமென்று சொல்வது வழக்கம். நாம் கட்டிய பெரிய பெரிய மாளிகைகளை விட இறைவன் இயற்கையாகப் படைத்த மலைகள் உயர்ந்த இடங்கள். ஆகவே, "உன்னை மலைகளில் வைத்துப் பூஜிக்கிறோம்" என்று தமிழர்கள் முருகனைக் குறிஞ்சி நிலத் தெய்வமாக வழிபட்டார்கள்.

சைவசித்தாந்தத்தில் தத்துவங்கள் 36 என்று சொல்வார்கள். அவை மூன்று தொகுதியாகப் பிரியும். சிவ தத்துவம், வித்தியா தத்துவம், ஆத்ம தத்துவம் என்று மூன்று வகை. 36 தத்துவங்களைப் போல இருப்பவை 36 பழைய நூல்கள். சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆத்ம தத்துவம் என்று தத்துவங்களில் மூன்று வரிசை இருப்பதுபோலப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,, பதினெண்

கீழ்க்கணக்கு என்று பழைய நூல்களிலும் மூன்று வரிசைகள் இருக்கின்றன. எல்லாத் தத்துவங்களிலும் முதலாவதாக இருப்பது சிவ தத்துவம். அது போலச் சங்க நூல்கள் எல்லாவற்றிலும் முதலாவதாக இருப்பது திருமுருகாற்றுப்படை என்று சொல்லலாம்.

திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர் காளஹஸ்திக்குச் சென்று பொன்முகரி ஆற்றில் நீராடினர். கைலாச தரிசனத்தைப் பெற்றார். **கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி** என்ற நூலைப் பாடினர். கண்ணப்பரைத் தரிசித்துப் பாடினர். சிவபெருமானுக்கு அபராதம் செய்வதனால் வரும் தீமைகளையும், அவனுடைய வழிபாட்டினால் வருகின்ற நன்மைகளையும் **கோபப் பிரசாதம்** என்ற நூலில் எடுத்துக்காட்டிப் பாடினர். பின்பு மதுரை வந்து சேர்ந்தார். அப்படிப் பாட்டினால் இறைவனை வழிபட்டவர் நக்கீரர். அதனைக் கந்த புராணக்காரர் சொல்கிறார்.

கீரனே மடவார்
பலந்தரும்வழி பாட்டினால் பாட்டினால் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையும் கண்டான்.

காளஹஸ்திக்குத் தட்சிண கைலாசம் என்ற பெயரும் உண்டு.

முருகப் பெருமான் காளஹஸ்தியைத் தரிசனம் பண்ணிக் கொண்டு தென்திசை நோக்கி எழுந்தருளினன். திருவாலங்காடு வந்து தரிசித்தான். அங்கே சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறன். காரைக்கால் அம்மையாருக்குத் தரிசனம் கிடைத்த இடம். காளியோடு வாதாடி நடனத்தில் அவள் தோற்கும்படியாகச் சிவபெருமான் ஊர்த்துவ நடனம் ஆடிய இடம் அது.

திருவெண்ணெய்நல்லூர்

அதன் பிறகு காஞ்சிபுரம் வந்து தரிசனம் செய்து கொண்டு திருவெண்ணெய் நல்லூரை அடைந்தான். திருவெண்ணெய்நல்லூரில் சுந்தரமூர்த்தி நாயனர் இறைவன் திருவருளைப் பெற்றார். அவர் சிவாசாரியார் குலத்தில் தோன்றியவர். கச்சியப்ப சிவாசாரியர் எப்போதும் அவரைப்பற்றி அன்போடு பேசுவார். ஆகவே சுந்தரமூர்த்தி நாயனர் அருள்பெற்ற திருவெண்ணெய் நல்லூருக்குத் தனியாக ஒரு பாட்டுப் பாடுகிறார்.

மண்ணுல கிறைவன் செய்யும்
மணந்தனை விலக்கி எண்தோள்
அண்ணல்ஓர் விருத்தன் போல்வந்
தாவண ஓலை காட்டித்
துண்ணென வழக்கில் வென்று
சுந்தரன் றனைஆட் கொள்ளும்
பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப்
பெரும்பதி தனையும் கண்டான்.

(வழிநடைப், 12.)

[மண்ணுலகு இறைவன் - நரசிங்க முனையரையன். என் தோள் அண்ணல் - சிவபெருமான். ஆவண ஓலை - முறி எழுதிய ஓலை. துண்ணென - விரைவில். வெண்ணெய்ப் பெரும்பதி - திருவெண்ணெய்நல்லூர்.]

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பது அவருடைய பழைய நிலையை எண்ணிச் சொல்கின்ற பெயர். ஆரூரர் என்பது அவருடைய தந்தையார் இட்ட திருநாமம். ஆலகால விஷத்தைப் பாற்கடலி லிருந்து எடுத்து வந்ததனால் ஆலால சுந்தரன் என்ற பெயரும் உண்டாயிற்று. அம்பிகைக்குத் திருத்தொண்டு செய்துகொண் டிருந்த இரண்டு பெண்கள்மேல் மனம் வைத்ததனால், "அவர்களுடன் பூலோகத்திற்குச் சென்று வாழ்ந்து வா" என்று இறைவன் அவருக்கு அனுக்கிரகம் பண்ணினன். அதனல் சுந்தரமூர்த்தி பூலோகத்தில் அவதரித்தார்.

சடையனர் என்ற திருநாமமுள்ள சிவசாரியாருக்குப் பிறந்த அவர் பக்கத்திலுள்ள திருக்கோவலூரில் இருந்த நரசிங்க முனையரை யரால் வளர்த்து வரப்பெற்றார். இப்படி அரசருடைய நிலையும், அந்தணருடைய நிலையும் ஒருசேர வளர்ந்தவர் சுந்தரர். அவருக்கு மணம் செய்துவைக்க ஏற்பாடு செய்தார்கள். "உன்னை நான் தடுத்து ஆட்கொள்வேன்" என்று இறைவன் வாக்குக் கொடுத்த படி, மணக்கோலத்தோடு சுந்தரர் இருந்தபோது இறைவன் ஒரு கிழவராக அங்கே வந்து சேர்ந்தான். "என்னைக் கேட்காமல் நீ எவ்வாறு திருமணம் செய்து கொள்ளலாம்? நீ என் அடிமை அல்லவா?" என்றான். "நீ பித்தனே, பேயனே?" என்று எதிர்த்து வாதாடிய சுந்தரர், "ஒரு பிராமணன் வேறு அந்தணனுக்கு அடிமை யாவது உண்டா?" என்று கேட்டார்.

உடனே இறைவன், "நான் பித்தன் ஆகட்டும். பேயன் ஆகட்டும். எனக்கு வழிவழி அடிமை செய்வதாக உன் பாட்டனர்

எழுதிக் கொடுத்த ஓலை என்னிடத்தில் இருக்கிறது '' என்ருன். " அதைக் காட்டு'' என்றவுடன் இறைவன் காட்டினுன். அதைக் கோபத்தோடு வாங்கிக் கிழித்தெறிந்தார் சுந்தரர். '' நீ இதைக் கிழித்தெறிந்ததனுலேயே குற்றவாளி என்பது தெரிகிறது '' என்று சொல்லி, '' நல்ல வேளை ! படியோலை இது. மூல ஓலை வேறு இருக் கிறது. வழக்கு மன்றத்தில் வழக்காடலாம் '' என்று சொன்னுர்.

அந்தக் காலத்தில் ஒவ்வோர் ஊரிலும் சபை இருக்கும். அதற்கு அறங்கூறவையம் என்று பெயர். ''திருவெண்ணெய்நல்லூரில் உள்ள சபைக்கு வா'' என்று முதியவர் சுந்தரரை அழைத்துப் போக, சுந்தரமூர்த்தி அங்கே சென்ருர். இறைவன் அந்தச் சபையினரிடம் முறையிட்டான் ; தன்னிடம் இருந்த மூல ஓலையை எடுத்துக்காட்டி னுன். அது சுந்தரமூர்த்தி நாயனரின் பாட்டனுர், '' நானும் என் பரம்பரையும் உனக்கு வழிவழி அடிமை '' என்று எழுதிக்கொடுத்த ஓலை. அது பாட்டனுரின் கையெழுத்துத்தானு என்பதைப் பார்க்க ஆவணக்களரியில் இருந்த ஓலையைத் தேடிப் பார்த்தார்கள். அதி லிருந்து கிடைத்த ஓலையை வைத்து ஒப்பிட்டுப் பார்த்து, அது அவரது பாட்டனுர் எழுதியதுதான் என்று தீர்மானம் பண்ணினுர்கள். சுந்தரரை அழைத்து, '' நீ அவருக்கு அடிமைதான் '' என்று தீர்ப்ப ளித்தார்கள். திருவெண்ணெய்நல்லூரில் உள்ளவர்களுக்கு, இறை வனுக வந்த கிழவரைத் தெரியவில்லை. '' நீங்கள் எங்கே இருக்கி றீர்கள் ?'' என்று கேட்டார்கள். '' நீவிர் என்னை அறியவில்லையோ ? நான் இருக்கும் இடம் இதோ இருக்கிறது '' என்று சொல்லி, சுந்த ரர் பின் தொடர்ந்து வர, அப்பெருமான் தன் கோவிலுக்குள் சென்று மறைந்தான் ; ரிஷபாருடனுகத் தரிசனம் அளித்தான். அது கண்ட சுந்தரர் உண்மையை உணர்ந்து, ''என்னை ஆட்கொண்ட பெருமானே, உன்னை நான் எவ்வாறு வழிபடுவேன் ?'' என்று ஏங்க, '' என்னைப் பித்தன் என்று சொன்னதனுல் பித்தன் என்று வைத்தே பாடுவா யாக '' என்ருன்.

'' பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா ''

என்று சுந்தரர் பாடத் தொடங்கினுர். இந்தக் கதையைத்தான் சுருக்கமாகக் கச்சியப்ப சிவசாரியார் இந்தப் பாட்டில் சொல்கிருர்.

சேய்ஞலூர் நிகழ்ச்சிகள்

இப்படி முருகன் பல தலங்களையும் பார்த்துக்கொண்டு, காவேரி ஆற்றிலிருந்து பிரிகின்ற ஆருகிய மண்ணியாற்றின் கரைக்கு வந்து சேர்ந்தான். அதற்குச் சுப்பிரமணிய நதி என்று பெயர். முருகன் அதனை உண்டாக்கினதாக ஐதிகம். அதுவே மண்ணி நதி என்று சுருங்கி வழங்குகிறது.

அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருந்து தோன்றிய காவேரி கடலோடு கலப்பதற்கு முன்பு, வெவ்வேறு ஆறுகளாகப் பிரிந்து பல நாமங்களைத் தாங்குகிறது. அப்படிப் பிரிகின்ற நதிகளுள் காவேரிக்கு வடக்கிலுள்ள மண்ணியாறு ஒன்று. அங்கே கருணை வள்ளலாகிய முருகன் வந்து சேர்ந்தான்.

குடமூனி கரத்தில் ஏந்தும் குண்டிகை யிருந்து நீங்கிப்
படிதனில் வேறு வேருய்ப் பற்பல நாமம் தாங்கிக்
கடல்கிளர்ந் தென்னச் செல்லும் காவிரி என்னும் ஆற்றின்
வடகரை மண்ணி யின்பால் வந்தனன் கருணை வள்ளல்.

(வழிநடைப். 16.)

[குடமுனி - அகத்திய முனிவர். குண்டிகை - கமண்டலம், கிளர்ந்தென்ன - பொங்கி எழுந்ததுபோல. படி - பூமி.]

அப்போது தேவர்கள் முருகப் பெருமானை வந்து வணங்கி, "எம்பெருமானே, இந்த நதிக்கரையில் சில காலம் தங்க வேண்டும். ஒரு புதிய நகரத்தை இங்கே உண்டாக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். உடனே விசுவகர்மாவை நினைத்தான் முருகன். தேவதச்சனாகிய விசுவகர்மா அங்கே வந்து ஒரு கோவிலையும், அதனைச் சுற்றி அழகிய நகரம் ஒன்றையும் அமைத்தான். அந்த ஊருக்குக் குமாரபுரி என்று பெயர். இன்று சேய்ஞலூர் என்ற பெயருடன் அது விளங்குகிறது. சேய் என்றால் முருகன். சேய் நல்லூர் சேய்ஞலூர் ஆயிற்று. அங்கேதான் சண்டேசுவர நாயனார் திரு அவதாரம் செய்தார். இப்படி விசுவகர்மா தன்னுடைய மனத்தினாலே எல்லாவற்றையும் பண்ணினான்.

என்ன லோடும்அவ் விடந்தனில் எங்கோன்
துன்னு தொல்படை சுராதிப ரோடு
மன்ன, அங்கனொரு மாநகர் நெஞ்சத்து
உன்னி நல்கலும், உவந்தனர் யாரும்.

(குமாரபுரிப். 11.)

[படை - படை வீரர்கள். சுராதிபரோடு மன்ன - தேவர்களின் தலைவர்களோடு தங்க.]

சேய்ஞலூரில் முருகப்பெருமான் இந்திரன் முதலியவர்களோடு சில காலம் தங்கியிருந்தான். அப்போது சிரபுர வனத்துத் தெய்வம் சீர்காழியில் **இந்திராணி** வைத்த ஆபரணங்களைக் கொண்டுவந்து இந்திரனிடம் காட்டியது. இந்திராணி மேரு பர்வதத்தில் தனியாக இருந்தாள். இந்திராணியின் நினைவு வர, அவளை நினைந்து இந்திரன் வருந்தினன். அவளுடைய நகைகளைக் கண்டபோது அவனுடைய துன்பம் மிகுதியாயிற்று. காமநோய் கொண்டான். இங்கே கச்சி யப்ப சிவாசாரியார் இந்திரனுடைய விரகதாபத்தை மிக விரிவாகப் பாடியிருக்கிறார்.

ஒன்றே ஒன்றை மாத்திரம் பார்க்கலாம். விரகதாபம் உடைய வர்களுக்குக் குயில் கூவினல் வருத்தம் உண்டாகும். வசந்த காலத் தில் குயில் கூவும். காதலர்கள் வசந்த காலத்தில் இணைந்திருக்க வேண்டும். குயில் கூவும் போது காதலர்கள் இணையாமல் இருந் தால் அப்போது அவர்களுக்குப் பிரிவினல் மிக்க துன்பம் உண்டா கும். ஆகவே குயிலை வெறுப்பார்கள். இரவில் அவர்களுக்குத் தூக்கம் வராது. ‘விடியாதா? கோழி கூவாதா ?’ என்று நினைப்பார் கள். குயில் கூவுவதும், கோழி கூவாமல் இருப்பதும் அவர்களால் வெறுக்கத் தக்க செயல்கள். இந்திரன் அப்படித்தான் இருந்தானும்.

‘ஏன் குயில் கூவுகிறது? ஏன் கோழி கூவவில்லை?’ என்பதற்குக் காரணம் சொல்கிறான். அந்த இரண்டு பறவைகளுக்கும் இந்திரனி டம் கோபம் உண்டு. தக்க யாகத்தின் போது இந்திரன் குயிலாக ஓடினன் அல்லவா ? அடுத்து அகலிகையைச் சேர வேண்டுமென்று எண்ணிக் கோழியாக வந்து கூவினன். ‘ அவைகளுடைய உருவத் தை எடுத்துக் கொண்டு தவறு செய்தேன் என்பதை எண்ணியே அந்தப் பறவைகள் எனக்குத் துன்பத்தைச் செய்கின்றன. குயில் தன்னுடைய குரலைக் காட்டித் துன்பத்தைச் செய்கிறது. கோழி கூவாமல் இருந்து எனக்குத் துன்பத்தைச் செய்கிறது. இப்படி இரண்டு பறவைகளும் என்னுடைய உயிரைக் கொள்ளுகின்றனர்’’ என்று இந்திரன் நினைத்தான்.

நம்முரு ஆயினன் நாகர் கோன்எனுத்
தம்மனம் உன்னியே தளர்வு நீக்கில;
கொம்மென அரற்றியும் கூவல் இன்றியும்
எம்முயிர் கொள்வன இருபு ளாம் என்பான்.

(குமாரபுரிப். 49.)

[நாகர்கோன் - தேவராஜாவாகிய இந்திரன். இருபுள் - குயிலும் கோழியும்.]

சேய்ஞலூரை மிகச் சிறப்பாக அமைத்த பிறகு, தன் தந்தையை வணங்குவதற்காக முருகப் பெருமான் லிங்கப் பிரதிஷ்டை செய்தான்; அந்தப் பெருமானை வழிபட்டான்; சிவாகம விதிப்படி என்ன என்ன முறைகளில் பூஜை செய்ய வேண்டுமோ அந்த அந்த முறைப் படி அங்கே பூஜை செய்தான்.

அவ்வக் காலையில் ஆறுமா முகனுடை அடிகள்
தெய்வக் கம்மியற் கொண்டொரு சினகரம் இயற்றிச்
சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை
எவ்வெக் காலமும் நிலைஇயதோர் உருவுசெய் திட்டான்.

(குமாரபுரிப். 67.)

[அடிகள் - சுவாமி. சினகரம் - கோயில்.]

அந்த வழிபாட்டினால் மகிழ்ந்த சிவபெருமான் இடபாரூடனாகத் தோன்றினான்; முருகப் பெருமானுக்கு எல்லா ஆயுதங்களுக்கும் மேலான பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தான். ஷண்முகநாதன் அந்த ஊரிலிருந்து புறப்பட்டான்.

நம்முடைய நாட்டிலுள்ள தலங்கள் பல வகை. தேவர்கள் உண்டாக்கின தலங்கள் இருக்கின்றன; அவை தெய்விகம். ரிஷிகள் உண்டாக்கின தலங்கள் இருக்கின்றன; அவை ஆரிஷம். சில இடங்கள் விலங்குகளால் உண்டாக்கப்பட்டவையாக இருக்கின்றன. மனிதர்கள் உண்டாக்கினவையும் உண்டு. இங்கே முருகப் பெருமான் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்ததால் சேய்ஞலூர் மிகச் சிறப்பு உடையதாக ஆயிற்று.

திருக்கோயில் வழிபாடு

முருகப் பெருமானே சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணினான். ஏன் என்று சற்றுச் சிந்திக்க வேண்டும். புராணங்களை வெறும் கதைகளாக எண்ணாமல் கருத்துக்களைச் சொல்கிற கருவூலங்களென்று எண்ண வேண்டும். இந்த நாட்டில் நகரம் கோவிலைச் சுற்றியே வளர்ந்தது. நகர் என்பது கோவிலுக்குப் பெயர். நகர் உள்ள இடம் நகரம். நகரைச் சார்ந்தது நாகரிகம்.

"முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே"

என்று சங்க நூல் சொல்கிறது. அங்கே நகர் என்பது கோவிலைக் காட்டும். கோவிலை மையமாகக் கொண்டு அதையொட்டியே மக்க

ளது வாழ்வு அமைந்திருந்தது. கோவில்கள் மிகப் பழங்காலத்தில் இன்றைக்குள்ள முறையில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனல் ஏதோ ஒரு வடிவில் கோயில்கள் இருந்திருக்கின்றன. பிற்காலத்து வந்த மன்னர்கள் அவற்றை விரிவுபடுத்தி நல்ல முறையில் வழிபாடு நடைபெற வகை செய்தார்கள். கோவில் இல்லாத ஊரை ஊராக எண்ணுவதில்லை. **அப்பர் சுவாமிகள்** சொல்கிருர் ; கோவில் இல்லாத ஊரைக் காடு என்று சொல்கிருர். காடு என்ருலும் முனிவர்கள் இருப்பார்கள் அல்லவா? முனிவர்கள் இல்லாமல் வெறும் விலங்குகள் மட்டும் உள்ள இடத்திற்கு அடவி என்று பெயர். திருக்கோவில் இல்லாத இடத்தை, "அடவி காடே" என்கிருர் திருத்தாண்டகத்தில். காடு என்ருலும் அடவி என்ருலும் ஒன்றுதான். அடவி என்று சொன்னதனுலே ஒரு குறிப்பு இருக்கிறது. அங்கே உள்ளவர்கள் விலங்குக்குச் சமானம் என்ற பொருள் தொனிக்கிறது. அதனுல் தான், 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி தோன்றியது. இப்போது சினிமா இல்லாத ஊரில் சேர்ந்திருக்க வேண்டாம் என்ற புதுமொழி உண்டாகியிருக்கிறது.

கோ என்ருல் அரசனுக்குப் பெயர் ; தலைவனுக்கும் பெயர். கோவில் என்பது பெரிய தலைவனும், அரசனும் ஆகிய சிவபெருமானுடைய இடத்திற்குப் பெயர். சிவராஜா, ரங்கராஜா என்று சிவபெருமானையும், திருமாலையும் சொல்வது வழக்கம். அந்த அரசர்கள் ஆளுகிற ஆட்சி என்றும் நிலையாக இருப்பது.

கல்லின் தலையில் பாலை ஊற்றுகிருர்களே என்று சிலர் சொல்கிருர்கள். அன்னபிஷேகம் என்று சொல்லிச் சோற்றை வீணடிக்கிருர்களே என்று சிலர் வாதிடுகிருர்கள். இந்தப் பழக்கம் எல்லாம் பழங்காலத்தில் தோன்றியவை. அந்தக் காலத்தில் பாலும், சோறும் மிகுதியாகக் கிடைத்தன. மிஞ்சிப் போவதனல், 'எதற்காக இவ்வளவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்?' என்ற எண்ணச் சோர்வு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மிகுதியான எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கச் செய்தார்கள். இதை விட உயர்ந்த பயன் என்ன இருக்கிறது? 'இன்னும் அதிகமாக அந்த வளத்தைப் பெருக்க வேண்டும்' என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாவதற்கு இந்தப் பழக்கங்களை எல்லாம் ஏற்படுத்தினுர்கள். சில காலத்திற்கு

முன்னுல் அமெரிக்காவில் கோதுமை அமோகமாக விளைந்ததனுல் மிச்சமானதைக் கடலில் கொண்டு போய்க் கொட்டினுர்கள் என்ற செய்தி வந்தது. அதனுல் அடுத்த ஆண்டு விளைச்சல் குறைந்தது. காரணம், கடலில் கொண்டுபோய்க் கொட்டுவதற்காக ஏன் இவ்வளவு சிரமப்பட்டு உற்பத்தி செய்யவேண்டும் என்ற எண்ணம் அந்நாட்டு மக்களிடையே ஏற்பட்டது. அது இயல்பு. எவ்வளவு அதிகமாக உற்பத்தியானுலும் அதற்கு மிக உயர்ந்த பயன் இருக் கிறது என்று தெரிந்தால் யாரும் இத்தகைய சோர்வு உணர்ச்சியை அடையமாட்டார்கள். இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது போன்ற செயல் வேறு இல்லை, ஆகவே எத்தனை மிஞ்சினுலும் அவற்றை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் வகையில் பழக்கங்களை வைத் திருந்தார்கள். இப்போதுதான் அத்தகைய வளம் இல்லையே என் பதற்காக அந்தப் பழக்கங்கத்தை விட்டு விட்டால் அடியோடு மறந்து விடும். ஆகவே ஒரு சொட்டுப் பாலாவது அபிஷேகம் செய்கிற பழக்கம் நம்மிடையே இருப்பது நல்லது.

அது மாத்திரம் அன்று. நாம் ஒருவரிடத்தில் மிகவும் பிரியமாக இருந்தால் அவருக்கு அதிகமாக உபசாரம் செய்து உணவு வகைகளைக் கொடுப்போம். அவர் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னுலும் நாம் வற்புறுத்துவோம். அது போல நாம் எந்த எந்தப் பொருள்களை விரும்புகிருேமோ அவற்றை எல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வது நம் வழக்கமாக இருக்கிறது.

இந்தக் காலத்தில் ஒரு நகரம் என்று சொன்னுல் அதற்குச் சில இலக்கணங்கள் வேண்டும். நாம் நன்ருக உலவி வர மைதானம் வேண்டும். பூஞ்சோலைகள் வேண்டும். தார்ச் சாலைகள் வேண்டும். இவற்றை எல்லாம் அதிகமாகப் பெற்ற பெரிய நகரங்களுக்குப் பெருமை அதிகம். அந்தக் காலத்தில் ஒரு பெரிய நகரம் என்ருல் பெரிய கோவில் இருக்கும். அந்தக் கோவிலின் பிராகாரங்கள் பெரியனவாக இருக்கும். அந்தப் பிராகாரங்களில் நந்தவனம் இருக்கும். காலாற ஒரு முறை பிராகாரத்தைச் சுற்றி வந்தால் போதும். நல்ல ஆரோக்கியமான காற்று, மூலிகைகளுடன் சேர்ந்த காற்று, உடலை வளம் பெறச் செய்யும். கோவில் முழுவதும் சிறந்த கலைச்சாலைகளாக இருந்தன. இப்போது நகரத்தில் பொருட்

காட்சி என்று பற்பல இடங்களில் உள்ளவற்றைச் சேகரித்துக் கொண்டு வந்து காட்டுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு கோவிலும் நிரந்தரமான காட்சிச் சாலைகளாக இருந்து வந்தன. இன்றும் அங்கே உள்ள சிற்பங்கள் சித்திரங்கள் ஆகியவற்றின் பெருமையைச் சொல்லவா வேண்டும்? சிறிய ஊர்களிலும் கோயில்கள் இருக்கின்றன.

அந்தக் காலத்தில் மன்னனும், மற்றக் குடி மக்களும் கோவிலுக்குச் சென்று வழிபடுவதைக் கடமையாகக் கொண்டிருந்தார்கள்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று ஒரு பாண்டியன். முதுகுடுமி என்றால் அவன் குடுமி பழையது என்பது பொருள் அல்ல. மதிலின் மேல் கலசம் போல அங்கங்கே வைக்கப்பட்டிருப்பதற்குக் குடுமி என்று பெயர். அவனது மதிலின் மேலுள்ள குடுமிகள் மிகப் பழமையானவை. அதாவது, எதிரிகள் யாரும் அந்நகரை முற்றுகையிட்டு, அந்த மதில் குடுமிகளுக்குச் சேதம் விளைவிக்கவில்லை. ஆதலாலே அவை முதுகுடுமி. அவற்றினால் அவனது வீரம் புலனாகிறது. அவன் பல யாகங்களைச் செய்தவன். ஆதலால் பல்யாகசாலை என்ற பெயர் சேர்ந்தது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி என்பது அவனுடைய முழுப் பெயர்.

ஒரு நாள் அவனுடைய அவைக்களப் புலவர்கள் அவன் முன் அமர்ந்து அவனுடைய புகழைப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அவனது புகழைச் சொன்னார். ஒரு புலவர், "உன்னுடைய குடை எங்கும் பரவட்டும்" என்று சொன்னார். அரசாட்சிக்கு அடையாளமாக இருப்பது குடை. 'மன்னனுடைய குடை நிழலில் தங்குகிறேன்' என்று சொல்வது வழக்கம். "உன் குடை உலகம் முழுவதும் பரவி நிழற்ற வேண்டும்" என்று அந்தப் புலவர் பாடினார்.

மற்றொருவர், "உன் தலை வணங்காமல் இருக்கட்டும்" என்று பாடினார். பின்னும் ஒருவர், "பகைவர்களைக் கண்டவுடன் உனக்குக் கோபம் வரும்போது, கண் சிவக்கிறது. அந்தச் சிவப்பு எங்களுக்குப் பாதுகாப்பு. அந்தச் சிவப்பு அழகாக நிலவட்டும்" என்று சொன்னார்.

வேருெருவர், "உன் கண்ணி வாடாமல் சிறப்பாக விளங்க வேண்டும்" என்று பாடினுர்.

அந்தச் சபையில் காரிகிழார் என்ற புலவரும் வீற்றிருந்தார். இளைஞர்கள் எல்லாம் இப்படிப் பாடின பிறகு, காரிகிழார் ஒன்றும் பாடவில்லையே என்று திரும்பிப் பார்த்தார்கள். அப்போது அந்தப் புலவர் பாடத் தொடங்கினுர்.

"இங்கே உள்ள யாவரும் அரசர் பெருமானை மிகச் சிறப்பாகச் சொன்னீர்கள். நான் ஒன்றும் சொல்லவில்லையே என்று இருக்கும். நானும் சொல்லப்போகிறேன். நான் சொல்வது உங்களுக்குச் சற்று வருத்தமாக இருக்கலாம். பொறுமையுடன் கேட்டால் என் கருத்து விளங்கும்" என்று பீடிகை போட்டுக்கொண்டு ஆரம்பித்தார். "புலவர்களே, மன்னர்பிரான் குடை எங்கும் விரியட்டும் என்று சொன்னீர்கள். அந்தக் குடை மடங்கட்டும் என்று நான் சொல்கிறேன்." எல்லோருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படிப் பேசுகிருர் என்று தோன்றியது.

அடுத்து அவர் சொன்னுர், "உன் கண்ணி வாடட்டும்" என்று. அவையில் இருந்த மற்றப் புலவர்களுடைய கலக்கம் அதிகமாயிற்று. அடுத்தபடி சொன்னுர், "உன் தலை வணங்கட்டும்" என்று. கடைசியில், "உன் கண்களில் உள்ள கோபம் அவியட்டும்" என்ருர். அதோடு நிறுத்தியிருந்தால் அவர் ஒரு பெரும்புலவர் ஆக முடியுமா? விடுகதைக்கு விடைகொடுப்பதுபோலத் தம் பாட்டை மேலும் சொன்னுர்.

"உன்னுடைய குடை சிவபெருமானுடைய கோவிலை வலம் வரும்போது மடங்கட்டும்" என்ருர். எல்லோருக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று. "நான்கு வேதங்களையும் படித்துணர்ந்த அந்தணாளர்கள் முன்பு உன் தலை வணங்கட்டும்" என்ருர். போர்க் காலத்தில் பகை அரசர்களுடைய நாட்டைக் கொளுத்துவது வீரத்திற்கு அழகு என்று கருதினுர்கள். "பகைவர்களுடைய நாட்டை நீ கொளுத்தும்போது அந்தப் புகையினுல் உன்னுடைய கண்ணி வாடட்டும்" என்ருர் புலவர். கடைசியில், "அந்தப்புரத்தில் பெருந்தேவி ஊடலுடன் இருக்கும்போது நின் கோபம்

அவியட்டும்'' என்ருர். இப்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கையும் காரிகிழார் சொல்லிவிட்டார். அந்தப் பாட்டிலேதான்,

> ''பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
> முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே''

என்று சொல்கிருர்.

அதிலிருந்து மாபெரும் அரசர்களும் கூடத் திருக்கோவிலே வலம் வந்தார்கள் என்று தெரியவருகிறது. பிற்காலத்தில் அரசர்கள் எவ்வளவு பெரிய பெரிய கோவில்களேக் கட்டினர்கள் என்பதை நாம் அறிவோம்.

முருகப் பெருமான் பல தலங்களேத் தரிசனம் செய்துகொண்ட தோடு புதிதாக லிங்கப் பிரதிஷ்டை செய்தும் நமக்கு வழிகாட்டினன் என்று கொள்ளவேண்டும். முருகப் பெருமானின் அவதாரமான சம்பந்தப் பெருமான், தலங்கள் தோறும் சென்று தம் அற்புதப் பாடல்களினல் வழிபட்டார். அதனல் தலங்களுக்கு மகிமை மிகுதியாயிற்று.

பாலே வருணனே

காவியங்களேப் பாடும்போது ஐந்து திணேகளேயும் பாடவேண்டு மென்பது ஒரு மரபு. கந்த புராணக்காரர் அந்த மரபைப் பின்பற்றி, இங்கே திணேகளேச் சொல்ல வந்தவர், முருகப் பெருமான் போகிற வழியில் பாலேநிலம் இருந்தது என்றும் சொல்கிருர்.

அந்தப் பாலேவனத்தை விரிவாகச் சொல்கிருர். பாலேவனத் தின் அனல் சொல்லி முடியாது. சூரியனுடைய சாரதி அருணன். அவனுக்கு இரண்டு கால்களும் இல்லே; முடவன். சூரியனுடைய ரதத்திற்கு ஒரு சக்கரந்தான். இந்த இரண்டையும் எண்ணிக் கற்பனேயாக ஒரு காரணம் சொல்கிருர் கச்சியப்பர். அந்தப் பாலே வனத்தின் மேலே தேரில் சென்ற போது அதன் வெம்மை தாங்காமல் தேரின் ஒரு சக்கரம் போய்விட்டதாம். அதே வெம்மையினல் தேர்ச் சாரதியின் இரண்டு கால்களும் போய்விட்டனவாம்.

வேக வெய்யவன் புடையுரு தவ்வன மிசையே
போக ஓரிறை எழுந்தழல் சுட்டது போலும் !
ஏகு தேரொரு காலிலா திழந்ததால்; இருகால்
பாகி ழந்தனன்; அவன்கதிர் அங்கிபட் டனவே.

(சுரம்புகு. 9.)

[வெய்யவன் - சூரியன். இறை - கணம். ஒருகால் - ஒரு சக்கரம். பாகு - பாகன்.]

இத்தகைய பாலைவனத்தினூடே முருகப் பெருமான் தன்னுடைய படைகளுடன் சென்றான். அவன் போனதனால் பாலைநிலம் குளிர்ந்து விட்டது. மழை பொழிந்தால் எப்படி நிலம் குளிர்ந்து புல்பூண்டுகள் வளம் பெற்றிருக்குமோ அது போல ஆண்டவன் சென்ற பாலைநிலம் குறிஞ்சி நிலம் போல ஆகிவிட்டதாம்.

இன்ன தாகிய பாலையஞ் சுரத்திடை இறைவன்
தன்ன தாகிய தானைக ளொடுந்தலைப் படலும்
மின்னு மாமுகில் பொழிந்தபின் தண்ணளி மிக்கு
மன்னு கின்றபூங் குறிஞ்சிபோல் ஆயதவ் வனமே.

(சுரம்புகு. 20.)

[சுரம் - வழி. குறிஞ்சி - மலையும் மலையைச் சார்ந்த இடமும்.]

மிகவும் தூயவனாகிய ஆண்டவன் அருள்மயமாக இருக்கிறான். அவன் பாலைவனத்தில் சென்றதனால் பாலையின் வெம்மை அவனை ஒன்றும் செய்யவில்லை. அவன் அருளால் அது குளிர்ந்தது. அவன் தான் போகிற இடங்களை எல்லாம் குளிர்ச்சியாகவும், புனிதமாகவும் ஆக்குகிறவன்.

பசுகரணங்கள் எல்லாம் இறைவனுடைய தொடர்பால் பதி கரணம் ஆகிவிடும் என்பது சாத்திரம். அது போல இறைவன் போன பாலைநிலம் குறிஞ்சி நிலம் ஆகிவிட்டது. முருகன் குறிஞ்சி நிலத் தெய்வம். அவன் போனதால் பாலையும் குறிஞ்சியாகிவிட்டது.

காதல் நீங்கலா தலமரும் ஆருயிர்க் கரணம்
ஆதி ஈசன தருளினால் அவனதா கியபோல்
ஏதும் நீர்இலா தழல்படு வெய்யகான், இளையோன்
போத லால்குளிர் கொண்டது, நறுமலர்ப் பொழிலாய்.

(சுரம்புகு. 22.)

[அலமரும் - உழல்கின்ற. ஆருயிர்க் கரணம் - பசுகரணம். அவனது - பதிகரணம். கான் - பாலை.]

கங்கையின் சிறப்பு

நம்முடைய நாட்டிலே தீர்த்தங்களுக்கும், கோவில்களுக்கும் பெருமை கூறுவார்கள். தென்னாட்டில் கோவில்களுக்கு விசேஷம்.

வடநாட்டில் தீர்த்தங்களுக்கு விசேஷம். எல்லா ஆறுகளிலும் சிறந்தது கங்கை. உலகத்தில் மிக நீளமான நதி நைல் நதி. மிக அகலமான நதி அமேசான். அத்தகைய நீளமோ, அகலமோ உடைய நதி அல்ல கங்கை. ஆனால் அவை எல்லாவற்றுக்கும் இல்லாத தனிச் சிறப்பு, கங்கைக்கு இருக்கிறது.

"இன்னறுநீர்க் கங்கையா றெங்கள் யாறே"

என்று **பாரதியார்** பாடினர். காரணம் என்ன? ஆற்றுக்குப் பெருமை அதனுடைய நீளமோ, அகலமோ அன்று. அதிலுள்ள தண்ணீரினால்தான் அது பெருமை பெறுகிறது. நாங்கள் வசிக்கிற ஊரில் ஒரு நதி இருக்கிறது. ஆனால் யாரும், "நான் கூவம் நதிக் கரையில் வசிக்கிறேன்" என்று பெருமைப்பட்டுக் கொள்ள மாட்டோம். அது நதியா? வெறும் சாக்கடைத் தண்ணீர் ஓடுகிற கால்வாயாகத்தான் இருக்கிறது.

கங்கை அத்தகையது அன்று. உலகத்திலுள்ள எல்லா ஆறுகளிலிருந்தும் ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்து தனித்தனியாகச் சில மாதங்கள் வைத்திருந்தால், புழுப் புழுத்துவிடும். ஆனால் கங்கைத் தண்ணீர் எத்தனை மாதங்கள் ஆனாலும், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் புழுக்காது. இமாசலத்திலிருந்து வருவதனால் அது அவ்வளவு தூயதாக இருக்கிறது என்று சொல்லலாம். அங்கிருந்து வருகிற சிந்து, பிரம்மபுத்திரா நதிகளுக்கு இந்தப் பெருமை இல்லை. கங்கைநீர், வருகிற இடத்தில் அழுக்குச் சேராமல், விஞ்ஞான முறைப்படி பாதுகாக்கப்படுகிறது என்று சொல்லலாம். அப்படி ஒன்றும் கிடையாது. பலபல நகரங்களின் வழியாக வருகிற கங்கையில் அந்த அந்த நகரங்களின் சாக்கடைகள் விழுகின்றன. அதுமாத்திரம் அல்ல. இந்த நாட்டில் ஒரு நம்பிக்கை உண்டு. காசியில் இறந்தால் மோட்சம் என்று சொல்வார்கள். ஆகவே, கிழங்கள் காசிக்குப் போய் இறந்துவிடுவார்கள். அவர்களது சரீரத்தைச் சிதையில் வைத்துத் தீயிடுவார்கள். பாதி வெந்ததும் வேகாததுமாகக் கங்கையில் இழுத்துவிடுவார்கள். சாக்கடைகளும், சாகும் கட்டைகளும் கங்கையை அழுக்காக்குகின்றன. இப்படி எத்தனை அழுக்குப் படிந்தாலும் இவற்றால் கங்கை தன் புனிதத்தை

இழப்பதில்லை. அதனோடு சேர்ந்த பொருள்கள் புனிதமாகின்றன. அதற்குக் காரணம் என்ன ?

கங்கையில்தான் முருகப் பெருமான் வந்தான் என்று முன்பே நாம் பார்த்தோம். அதனால்தான் காங்கேயன் என்று பெயர். அவனைக் கங்கை தாங்கியதால்தான் அது புனிதம் அடைந்தது. புனிதமற்ற எத்தனை காரியங்களைச் செய்தாலும் அதன் புனிதம் மாறவில்லை. கங்கைக்குப் புனிதம் தந்த புனிதனாகிய ஆண்டவன் பாலைநிலத்தின் வழியாகச் சென்றபோது அது தண்ணிய பூம்பொழிலாயிற்று என்பது என்ன ஆச்சரியம் ?

முனிபுங்கவர்கள் எங்கிருந்தாலும் அது சோலையாக இருக்கும். காரணம், அவர்களுடைய எண்ணம் குளிர்ச்சியாக இருப்பது. நாமோ பொல்லாத எண்ணங்கள் கொண்டிருக்கிறோம். பொறாமை கொண்டிருக்கிறோம். நம்முடைய உணர்ச்சியின் கொதிப்பு மூச்சுக்காற்று வழியாக வருகிறது. நல்ல புல்பூண்டு இருக்கிற இடத்தில் மனிதன் மூச்சுக்காற்றுப் பட்டால் அழிந்துவிடும்.

விசுவாமித்திரர் இராமபிரானை அழைத்துச் சென்றபோது அரண்யத்தில் பாலைவனம் தோன்றியது. "திடீரென்று இது என்ன இப்படி இருக்கிறதே!" என்று இராமன் கேட்டான். அப்போது விசுவாமித்திரர், "பாவி, பாதகி, தாடகை கண்பட்டு இந்த இடம் பாலை ஆயிற்று" என்று சொன்னார். ஆனால் இராமன் காட்டில் போனபோது கல்லெல்லாம் கள்ளுடை மலர்களே போல் ஆயின என்று கம்பன் பாடுகிறான். பொல்லாதவர்கள் கண்பட்டால் நல்ல இடமும் பட்டுப் போகும். நல்லவர்கள் கண்பட்டால் பொல்லாத இடமும் நல்லதாகும். முருகப் பெருமானுடைய சம்பந்தத்தால் பாலை நிலம் சோலை நிலம் ஆயிற்று.

ஜீவன் முக்தி

இதற்குக் கச்சியப்-சிவாசாரியார் சொல்கிற உவமை இந்த நாட்டுக்கே உரிய சிறப்பான உவமை.

மற்ற மதங்கள் எல்லாம் இறைவனது திருவருளைப் பெற வேண்டுமென்றே பாடுபடுகின்றன. இந்த உடம்பில் இருக்கும் போது வழிபட்டால் இந்தப் பிறவிக்குப் பின் மோட்சத்தைப் பெறலாம் என்று மற்றச் சமயங்கள் சொல்கின்றன.

இந்து சமயம், உடம்பு இருக்கும்போதே மோட்ச இன்பத்தை அடையலாம் என்று சொல்லும். இந்த நிலையை ஜீவன் முக்தி என்று கூறுவார்கள் பெரியவர்கள். இந்த உடம்பே நமக்கு இப் போது துன்பமாக இருக்கிறது. கருவி கரணங்கள் எல்லாம் நம் முடைய அறியாமைக்குத் தூபம் போடுகின்றன. ஆண்டவன் திரு வருளால் அநுபவம் பெற்ற பிறகு இந்தக் கருவி கரணங்களே நமக்கு நலம் செய்யும். அப்போது பதிகரணம் ஆகிவிடும் என்று சொல் வார்கள்.

"பொய்ச்சினத்தை மாற்றி மெய்ச்சினத்தை ஏற்றிப்
பொற்பதத்துள் ஆக்கு புலியூரா"

[சினம் - சின்னம், கரணங்கள்.]

என்கிறார் **அருணகிரியார்.**

"இத்தேகமொடு காண்பனோ"

என்று **தாயுமானவர்** பாடுகிறார்.

பார்வைக்கு நம்மைப் போலவேதான் ஜீவன் முத்தர்களும் தோற்றுவார்கள். அப்படியானால் அவர்களை எப்படித் தெரிந்து கொள்வது?

ஒரு வீட்டுப் பெண்மணி கார்த்திகைக்குப் பொரி பொரிக்க வேண்டுமென்று இரண்டு படி நெல் வாங்கி வந்தாள். வாணலியில் மணலைக் கொட்டி ஒரு படி நெல்லை இட்டு வறுக்கத் தொடங்கினாள். அந்தச் சமயம் அவசரமாக அந்தப் பெண்மணியை ஒருவர் வந்து அழைக்க, இன்னும் பொரியாகாமல் இருந்த நெல்லை எடுத்துவைத்து விட்டுப் போய்விட்டாள். வாணலியில் கொட்டாமல் இருந்த ஒரு படி நெல்லும், வாணலியில் கொட்டிச் சூடேறின ஒரு படி நெல்லும் பார்வைக்கு ஒன்றாகவே இருந்தன. ஆனாலும் வறுத்த நெல்லைப் பூமியில் போட்டால் முளைக்காது. அதுதான் வேறுபாடு. அப்படித் தான் ஞானக்கனலால் வறுக்கப்பட்டவர்கள் ஜீவன் முக்தர்கள். மறுபடியும் உலகத்தில் அவர்கள் முளைக்கமாட்டார்கள். அவர்களுடைய பசுகரணம் எல்லாம் பதிகரணமாக மாறிப் போய்விடும்.

காதல் நீங்கலா தலமரும் ஆருயிர்க் கரணம்
ஆதி ஈசன தருளினுல் அவனதா கியபோல்
ஏதும் நீரிலா தழல்படு வெய்யகான் இனையோன்
போத லால்குளிர் கொண்டது நறுமலர்ப் பொழிலாய்.

(சுரம் புகு. 22.)

என்று இங்கே அந்த உபமானத்தைச் சொல்கிருர், கச்சியப்பர்.

ஆண்டவன் பாலைநிலத்தைக் கடந்து திருப்பரங்குன்றத்திற்கு வந்தான். அங்கே தவம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் பராசரருடைய பிள்ளைகளாகிய முனிவர்கள். அவர்களைப் பற்றி முன்பே பார்த்தோம். அவர்கள் ஆண்டவனை வணங்கினுர்கள். முருகப் பெருமானுடைய படைகளுடன் அவர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

திருச்செந்தூரை அடைதல்

பின்னர் முருகன் திருச்செந்தூரை அடைந்தான். திருச்சீரலைவாயாகிய அங்கே ஓர் அழகிய மண்டபத்தை அமைக்கும்படி விசுவகர்மாவிடம் சொல்ல, அவன் அங்கே அழகிய மண்டபத்தையும் நகரையும் அமைத்தான். முருகப் பெருமான் அந்த மண்டபத்திடையே எழுந்தருளி, எல்லோரும் தன்னைச் சேவிக்க வீற்றிருந்தான்.

அசுரர்களின் தோற்றம்

வீரவாகு தேவர் பக்கத்தில் வாளை ஏந்திக்கொண்டு நிற்க, மற்றத் தம்பிமார்கள் எட்டுப் பேர்களும் லட்சம் வீரர்களும் சூழ்ந்து கொண்டு நிற்க, முருகப் பெருமான் இரத்தின சிம்மாசனத்தில் எழுந் தருளி இருந்தான். அப்போது அவன் இந்திரனைப் பார்த்து ஒன்றும் தெரியாதவன் போல, "சூரன் முதலியவர்களுடைய வரலாற்றைச் சொல்வாயாக" என்று கேட்டான். இந்திரன், தேவகுருவான வியாழபகவானிடம், "நீங்கள் சொல்லுங்கள்" என்று சொன்னான்.

வியாழன் சொல்லத் தொடங்குதல்

முருகப் பெருமான் ஒன்றும் அறியாதவனைப் போலப் பிருகஸ்பதி சொல்லத் தொடங்கிய அசுரகுல வரலாற்றைக் கேட்கலானான். இதைக் கொண்டு முருகன் அறியாமல் கேட்கிறான் என்று எண்ணக் கூடாது.

ஒரு தாய் கணிதத்தில் மிகவும் கெட்டிக்காரி; எம். எஸ். ஸி. படித்துத் தேர்ச்சி பெற்றவள். தன் சின்னக் குழந்தையிடம் நாலும் நாலும் என்ன என்று கேட்கிறாள். அவளுக்குத் தெரியாமல் கேட் கிறாள் என்று சொல்வது?

பூகோள வாத்தியார் படிக்கிற பையனைப் பார்த்து, "லண்டன் எங்கே இருக்கிறது?" என்று கேட்கிறார்; "இவ்வளவு படித்த உங் களுக்கு லண்டன் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லையே!" என்று பையன் கேட்கலாமா? இத்தகைய வினாக்களை அறிவினா என்று இலக்கணம் சொல்லும். முன்பே இதைப்பற்றிச் சொல்லி யிருக்கிறேன். அசுரகுல வரலாற்றைச் சொல்லச் சொன்னவுடன் வியாழபகவான் மிகுந்த அடக்கத்துடன் தொடங்கினார்

"எம்பெருமானே, நீ எல்லாப் பொருள்களையும் நன்றாக அறிவாய். எல்லா உயிர்களிடத்திலும் அந்தர்யாமியாக இருக்கிறாய். எங்களுடைய துன்பத்தை நீக்குவதற்காக நீ குழந்தை உருக்கொண்டு வந்திருக்கிறாயே அன்றி, உன்னுடைய இயல்பினை அறிந்தவர்கள் யார்?"

அறிதி எப்பொருளும்; ஆவிகள் தோறும்
செறிதி; எங்கள்துயர் சிந்துதல் முன்னிக்
குறிய சேயுருவு கொண்டனை ; யார்க்கும்
இறைவ, நின்செயலை யார்உணர் கிற்பார் ?

(திருச்செந்திப். 15.)

[அறிதி - அறிவாய். செறிதி - தங்குவாய். முன்னி - திருவுள்ளம் கொண்டு. சேய் உருவு - குமாரனாகிய வடிவத்தை.]

" விபு ஆக இருக்கிற நீயே விசுவரூபம் கொள்ளத் தக்கவனாக வும் இருக்கிறாய். எங்களுக்கு உண்டான துயரைப் போக்கச் சின்னப் பாலனாக வந்திருக்கிறாயே தவிர, உன் செயலை யார் உணர் வார்கள்? உனக்குத் தெரியாதது என்ன ? அசுரர்களின் தன்மைகள் எல்லாம் நீ அறிந்தவைதாமே? என்னைக் கேட்பதனால் என்னால் முடிந்தவரை சொல்கிறேன் " என்று குமாரநாயகனைப் பார்த்துப் பிருகஸ்பதி சொன்னார்.

ஆகையால் அவுணர் தன்மைகள் எல்லாம்
போகும் எல்லைபுகல் கின்றனன் என்னா,
வாகை சேர்குமர வள்ளலை நோக்கி
ஓகை யோடரசன் ஓதிடு கின்றான்.

[போகும் எல்லை – இயன்ற வரையில். ஓகை - மகிழ்ச்சி. அரசன் - பிருகஸ்பதி.]

இங்கே 'அரசன் ஓதிடுகின்றான்' என்று பிருகஸ்பதியைக் குறிக்கிறார். வியாழ பகவானுக்கு ராஜா என்று பெயர். அதனால் அவனை அரசன் என்று சொன்னார்.

இது முதல் அசுரர்கள் வரலாற்றைச் சொல்கிறார். அசுர காண்டம் தொடங்குகிறது.

தேவரும் அசுரரும்

இதுவரை சொன்னவை யாவும் உற்பத்தி காண்டம். இனி மேல் வருவது அசுர காண்டம். எதைச் செய்ய வேண்டுமென்பதை இதுவரைக்கும் பார்த்தோம். எதைச் செய்யக்கூடாதென்பதை இனி நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

" செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் "

என்று கூறுவார் வள்ளுவர். அறநூல்கள், இன்னது செய்ய வேண்டும், இன்னது செய்யக் கூடாதென்று கூறும். வேதமே விதி களையும், விலக்குகளையும் சொல்லும்.

இதுவரைக்கும் பார்த்த உற்பத்தி காண்டத்தில், தேவர்கள் இறைவனை வணங்குவது முதலிய நல்ல காரியங்களைத் தெரிந்து கொண்டோம். இந்த அசுர காண்டத்தினுல் அசுரர்கள் செய்த பொல்லாத காரியங்கள் எல்லாம் தெரியும்.

மனிதன் அகங்காரம் கொள்ளக் கூடாது; பிறருக்குத் துன்பம் தரக் கூடாது; அப்படித் தந்தால் அதற்கேற்ற தண்டனையை இறைவன் வழங்குவான் என்ற செய்திகளை அசுர காண்டத்தினுல் தெரிந்துகொள்ளலாம்.

தர்மத்தை நேர்முகமாகத் தெரிந்து கொள்வது ஒருவகை. மறை முகமாகச் சொல்ல அறிவது ஒருவகை. தர்மநெறிப்படி வாழ்ந்தவர் கள் தமக்கும் மற்றவர்களுக்கும் நலம் செய்து தர்மத்தை நிலைநிறுத்தி இறைவன் அருளைப் பெற்றதாகப் புராணங்களில் வரும். அதர்மத்தைக் கடைப்பிடித்த அசுரர்கள் மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கி, தாமும் துன்பப்பட்டுத் தர்மத்தை நிலைகுலைத்தார்கள். ஆண்டவன் அவர்களைத் தண்டித்துத் தர்மத்தை மறுபடியும் நிலை நாட்டினுன். அதர்மம் நில்லாது, தர்மந்தான் வெல்லும் என்ற உண்மை நமக்கு அறிவுறுத்தப்படும். ஆக, அசுர காண்டத்தில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, எதைச் செய்யக் கூடாது என்பதைத்தான்.

தேவர்கள் முப்பத்து மூன்று கோடிப் பேர்கள். அசுரர்கள் அறு பத்தாறு கோடிப் பேர்கள். எப்போதும் உலகத்தில் நன்மை குறை வாக இருக்கும்; பொல்லாதது இரண்டு பங்காக இருக்கும். இந்தக் காலத்தில் பலமடங்கு பொல்லாங்கு அதிகமாகி யிருக்கின்றது.

மாயை

தேவர்களுக்குத் தலைவன் இந்திரன். அவனைச் சுரேந்திரன் என்று சொல்வார்கள். அப்படியே அசுரர்களுக்கு எல்லாம் ஒரு தலைவன் உண்டு. அவனுக்கு அசுரேந்திரன் என்று பெயர். அவுணர்களுக்கு அரசனுகிய அசுரேந்திரன் மங்கலகேசியை மணந்தான். அவள் சுரசை என்ற பெண்ணைப் பெற்றுள். அந்தப் பெண்ணுக்கு அசுரர் களுடைய குருவாகிய சுக்கிராசாரியார் மந்திரம், மாயம் முதலியவற் றைச் சொல்லிக் கொடுத்தார். சுக்கிராசாரியர் அடுத்துக் கெடுக்கும்

ஆசாரியர். எவற்றைச் செய்தால் கெடுவார்களோ அந்த வழிகளைச் சொல்லிக் கொடுப்பார். அவர்களை மொத்தமாக அழிக்கும் எண்ணம் உடையவர். ஆகவே சுரசைக்கு மாயா ஜாலம் அத்தனையும் சொல்லிக் கொடுத்து, மந்திரோபதேசம் செய்து, அவளுக்கு மாயை என்றும் பெயரிட்டார்.

உலகத்தில் தவருகப் பல நடக்கின்றன; போலியாகப் பல நடக்கின்றன. எல்லாவற்றையும் மாயை என்று சொல்வது வழக்கம். மூன்று மலங்களில் ஒன்று மாயை. மாயையை மூன்று வகையாகச் சொல்வார்கள். சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்று மூன்று. சுத்த மாயை மகாமூர்த்திகளுக்கு உயர்ந்த தேகத்தை உண்டாக்குவது. அசுத்த மாயை அடுத்த தத்துவங்களை உண்டாக்குவது. பிரகிருதி மாயை ஆன்ம தத்துவங்களுக்குக் காரணமாக இருப்பவை. இந்த மூன்று மாயைகளிலும் மிகப் பெரியது சுத்த மாயை. சைவசித்தாந்தத்தில் சுத்த மாயா புவனம் என்று சொல்லப் படும். அதிலிருந்து நன்மையும் உண்டாகும்.

ஆனல் அத்வைதத்தில் மாயையை எப்பொழுதும் பொய் என்று சொல்வார்கள். உலகத்தில் நடைபெறுகிற காரியங்கள் அனைத்தையும் அவர்கள் மாயையின் காரியம் என்று சொல்வதனல் அவர்களை மாயாவாதிகள் என்று மற்றவர்கள் சொல்வது வழக்கம்.

மிகப் பெரிய மாயை ஆகிய சுத்த மாயையைக் களைகின்ற பெருமான் முருகப்பெருமான். மற்ற மாயைகள் அவனுக்கு எம்மாத்திரம்? பிரகிருதி மாயையில் அகப்பட்டிருக்கிற நாம் முருகப் பெருமானை வணங்கினல் அவன் நமக்கு அனுக்கிரகம் செய்வான். இதை **அருணகிரிநாதர்** ஒரு பாட்டில் சொல்கிருர்.

"மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே,
அகமா டைமடந் தையரென் றயரும்
சகமா யையுள்நின் றுதயங் குவதே."

இங்கே மகமாயை என்பது சுத்த மாயை. சகமாயை என்பது பிரகிருதி மாயை. திருவள்ளுவர்,

"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணப் பிறப்பு"

என்று சொல்வார். அதுவும் ஒருவகை மாயை. அதை அவித்தை, அஞ்ஞானம் என்று சொல்வார்கள். மருள் என்பது மயக்கம் என்ற பொருளுடையது. உண்மை அல்லாதவற்றை உண்மை என்று நினைக்கிற நிலை எதுவோ அது அஞ்ஞான நிலை. வீதியில் கிடக்கிற மாலையைப் பார்த்துப் பாம்பு என்று மருள்வதைப் போன்றது அது.

மாயையின் சம்பந்தம் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் பல விதமான தோற்றங்கள், தவறுகள் உண்டாகும். மாயையின் சொரூபமாகவே சுரசை இருந்தாள்.

அசுர சம்பத்து, தேவ சம்பத்து என்று இரண்டு சொல்வது வழக்கம். கண்ணபிரான் **கீதையில்** அவற்றைப் பற்றிச் சொல்கிறார். மனிதர்களுடைய நல்ல குணங்கள் தேவ சம்பத்து. பொல்லாத குணங்கள் அசுர சம்பத்து. நமக்குள் தேவாசுர யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. தேவர்களுக்குப் பலம் அதிகமாக வேண்டும். அவர்களுக்குப் பலம் முருகனாகிய தேவசேனாபதியால் உண்டாயிற்று, நம் உள்ளத்திலுள்ள பொல்லாத குணங்கள் போக, எம்பெருமானைத் தியானம் பண்ண வேண்டும். அவனது திருவருள் ஆட்சி ஏற்பட்டால் அசுர சம்பத்துக்கள் அடங்கிவிடும். கந்தபுராணத்தின் ஒட்டு மொத்தமான கருத்து இதுதான்.

நம்முடைய மனமாகிய யுத்த களத்தில் சூரன் முதலியவர்களைப் போன்ற கெட்ட குணங்கள் எல்லாம், நல்ல குணங்களாகிய தேவர்களோடு பொரும். அது காரணமாகத் தேவர்கள் கை தாழும். நல்ல குணங்கள் எல்லாம் அழிந்து போகும். அந்தச் சமயத்தில் இறைவனது திருவருள் கிடைத்தால் அவன் நமக்குத் துணை வருவான். மீண்டும் தேவ குணங்கள் தலைப்படும்.

அசுரர்கள் அஞ்ஞான சொரூபிகள். அதற்கு மாற்று ஞானம். அசுரர்களால் உண்டாகும் பெரும் பிணியைப் போக்குவதற்கு நம்மால் முடியாது. முருகப் பெருமானை நினைக்க வேண்டும். அவன் வந்தால் நம் பிணி நீங்கும்.

"நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்"

என்று **அருணகிரிநாதர்** முருகப் பெருமானை வேண்டுகிறார்.

அவன் திருக்கரத்திலுள்ள சிறந்த படையாகிய வேல் ஞான மயமானது. அதனுல் அதை ஞானசக்தி என்று சொல்வார்கள். நம் உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தை நீக்குவதற்கு அவன் ஞான சக்தியோடு ஞான மூர்த்தியாக வருகிருன்.

அஞ்ஞானம் எவ்வாறு வருகிறது? அதுதான் மாயையால் உண்டாவது. அகண்டமாயை, கண்ட மாயை என்று இரண்டு உண்டு. எங்கும் பரந்திருக்கிற மாயை அகண்ட மாயை. ஒவ்வொருவர் மனத்திலும் இருக்கிற மாயை கண்ட மாயை. நம்முடைய மனத்தை மாயையின் குஞ்சு என்று சொல்லலாம். மனம் அற்றவனிடத்தில் மாயை வராது.

மாயை நித்தியமானது என்று சைவ சித்தாந்தம் சொல்லும். எது இல்லையோ அது மாயை என்று வேதாந்தம் சொல்லும்.

எங்கும் இருப்பது மாயை என்ருல் இறைவன் திருவருளைப் பெற்றவர்களுக்கு மாயை எப்படி இல்லையாகும் என்று கேள்வி எழலாம். அவர்கள் அளவில் மாயை இல்லையென்ருலும் உலகத்தில் நிச்சயமாக இருக்கும். எங்கும் மழை பெய்கிறது என்ருலும் குடை உடையவனுக்கு அந்த மழை எவ்விதத் துன்பத்தையும் அளிப்பதில்லை. அது போல எங்கும் மாயை இருக்கிறது என்ருலும் இறைவன் திருவருளைப் பெற்றவர்களுக்கு அந்த மாயை அடங்கி நிற்கும். இறைவன் திருவருளைப் பெற்றவர்களிடத்தில் மாயை அடங்கி நிற்கும் என்பதுதான் சைவ சித்தாந்தம். மாயை அழிந்தே விடும் என்பது வேதாந்தம். எப்படியோ மாயையினுல் உண்டாகின்ற உறைப்பு, அருள் பெற்ற ஆன்மாக்களுக்கு இல்லாமல் போகும் என்பது இரண்டு பேர்களுக்கும் பொதுவான செய்தி.

வெயிலுக்குப் பாதுகாப்பாகக் குடை பிடிக்கிருேம். குடையைப் பிடித்துக்கொள்வதனுல் வெயில் நிற்பதில்லை குடையைப் பிடித்துக் கொண்டிருக்கின்றவன் அளவில் அது உறைப்பதில்லை. அது போலப் பாசத்தோடு இணைந்திருக்கிற பசு, பதியோடு கலந்தபிறகு அதனிடத்தில் மாயை அடங்கி நிற்கும். பாசத்தினுல் உண்டாகின்ற துன்பம் பசுவுக்கு அப்போது கிடையாது.

அஞ்ஞான சொரூபமாகிய அசுர மகள் சுரசைக்குக் குருவாகச் சுக்கிராசாரியார் இருந்தார். எதற்கும் ஒரு குரு வேண்டும். கடவுள் இல்லையென்று சொல்பவர்களுக்குக் கூட அதைச் சொல்லிக் கொடுக்க ஒரு குரு வேண்டும். திருடப் போகிறவனுக்குக் கூடத் திருட்டைச் சொல்லிக் கொடுக்க ஒரு குரு இருக்க வேண்டும். வடமொழியில் சோர சாஸ்திரம் என்பதைக் கர்ணீசுதர் என்பவர் எழுதினராம். குருவானவர் மாணவர்களுக்கு உபதேசம் செய்து விட்டு ஒரு தீட்சா நாமத்தையும் கொடுப்பார். சுரசையாகிய அசுரப் பெண்ணுக்கு உபதேசம் செய்த சுக்கிராசாரியார் அவளுக்கு மாயை என்ற தீட்சா நாமத்தையும் கொடுத்தார்.

மாயையும் காசியப முனிவரும்

மாயை தன்னுடைய மாயா ஜாலத்தை யாரிடம் காட்டுவது என்று எண்ணிப் பார்த்தாள். சாமானிய மனிதர்களிடம் காட்டு வதில் பயன் இல்லை. மிகப் பெரியவர்களிடத்தில் காட்டவேண்டு மென்று நினைத்தாள்.

காசியப முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் போய் மாயை நின்றாள். இனிய பாட்டுப் பாடினாள். அவர் கண்ணைத் திறந்து பார்த்தார். கண்ணைக் கவரும் அழகான வடிவோடு மாயை நின்றாள். காசியபருக்கு மனம் கலங்கியது. மாயையின் ஜால வேலை தொடங்கியது. ஞானம் முதிர்ந்து தவம் பண்ணினவருக்கே மனம் மாறிற்று என்றால் மற்றவர்கள் எப்படி இருப்பார்கள்?

மாயை செய்த முதல் காரியம் இது. மாயை காசியபருடைய உள்ளத்தை இழுத்துத் தன் வசமாக்கிக்கொண்டாள். ஆசை காட்டினாள். காசியபர் அவள் ஆசையால் மெலிந்து, அவள் கால்களில் விழுந்து கெஞ்சிப் புலம்புவதைப் பல பாடல்களில் சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

சூரபன்மன் தோற்றம்

காசியபருக்குத் தென்றல் காற்றுப் புலிபோலக் கொல்கிறதாம். நிலா எரிகிறதாம். இப்படி, காமம் மீதூர்ந்த காசியபரை மாயை முதல் சாமத்தில் கலந்தாள். ரிஷி கர்ப்பம் ஆகையாலே அவளுக்குச்

சூரபன்மன் என்ற அசுரன் உடனே பிறந்தான். அவன் பிறந்த போதே இந்திராதி தேவர்கள் நடுங்கினுர்கள்.

அந்த வேலையில் முகுந்தனும் அம்புயத் தவனும்
இந்தி ராதியர் யாவரும் முனிவரர் எவரும்
தந்தம் உள்ளமேல் நடுக்குற, மாயவள் தன்பால்
வந்து தோன்றினன் சூரபன் மாஎனும் வலியோன்.

(அசுரர் தோற்று. 17.)

[அம்புயத்தவன் - பிரமன்.]

உலகத்தில் பூகம்பம் ஏற்படுகிறது. அது ஏற்படுவதற்கு முன்னுலே பூமிக்குள்ளே பல விதமான நிகழ்ச்சிகள் உண்டாகும். இனிமேல் இந்திராதி தேவர்களுக்குப் பெரிய கேடு வரப்போகிறது. அது சூரன் பிறந்தவுடன் அவர்களுக்குக் குறிப்பாகத் தெரிந்தது. அவர்களுடைய உடம்புகள் நடுங்கின. மாயை, காசியபர் ஆகிய வர்களுடைய உடம்பில் தோன்றிய வியர்வையிலிருந்து முப்பதாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினுர்கள்.

அத்துடன் காம விளையாட்டு நிற்கவில்லை. இரண்டு பேரும் ஓடிப் பிடித்து விளையாடினுர்கள். பல பல மண்டபங்களை உண்டாக்கி, அங்கங்கே கலந்து கலந்து அளவளாவினுர்கள்.

சிங்கமுகன் பிறப்பு

வேருேர் இடத்திற்குச் சென்று, மாயை பெண் சிங்க உருவத் தோடு இருந்தாள். காசியபரும் ஆண்சிங்க வடிவத்தை எடுத்தார். அப்போது இரண்டாம் சாமம். அந்த நேரம் அவர்கள் கலந்தபோது ஒரு குழந்தை பிறந்தது ; ஆயிரம் சிங்க முகங்களையும் இரண்டாயிரம் கைகளையும் உடைய ஓர் அசுரன் பிறந்தான். அவனுக்குச் சிங்க முகாசுரன் என்று பெயர்.

மங்கை யோடவன் மடங்கலாய் மகிழ்வுடன் புணரக்
கங்குல் வாய்இரண் டாகிய யாமமேற் கடிதே
அங்கை ஓரிரண் டாயிரம் ஆயிர முகமாய்ச்
சிங்க மாமுகன் தோன்றினன், திடுக்கிடத் திசைகள்.

(அசுரர் தோற்று. 21.)

[மடங்கல் - சிங்கம். கங்குல்வாய் - இரவில்.]

திசைகள் நடுங்கும்படியாகச் சிங்கமுகாசுரன் பிறந்தானும்.

முதலில் மாயை மானைப் போல வந்தாளாம். எல்லா விலங்கு களையும் விட மிகச் சாதுவாக இருப்பது மான். மானுக வந்தவள்

அடுத்துச் சிங்கமாக மாறிவிட்டாள். எல்லா மிருகங்களும் கண்டு பயந்து நடுங்கக் கூடிய வலி படைத்தது சிங்கம்.

மானை நேர்பவள் ஆயிடைத் தொல்உரு மாற்றி
மேன சூரரிப் பிணவுருக் கொள்ளலும், விரைவில்
தானும் ஓர்திறல் மடங்கலே றும்எனச் சமைந்தான்,
மோன மாய்முனம் அருந்தவம் இயற்றிய முதல்வன்.

(அசுரர். 20.)

[மேன - வலிமையால் மேலான. சூர் அரிப்பிணு - அச்சத்தைத் தரும் பெண் சிங்கம். மடங்கல் ஏறு - ஆண் சிங்கம்.]

இவ்வாறு கச்சியப்பர் ஒரு நயத்தைக் காட்டுகிருர். முதலில் மானுகத் தோன்றியவள், செயல் செய்யும்போது சிங்கமாக ஆகிவிட்டாள். அன்பும் காதலும் நிரம்பிய மான் உருவத்தை மாற்றி, மற்ற மிருகங் களுக்கு எல்லாம் அச்சத்தைத் தரும் பெண் சிங்கத்தின் உருவத்தை எடுத்தாள். காசியப முனிவருடைய நிலை என்ன?

மோனமாய் முனம் அருந்தவம் இயற்றிய முனிவன்

அவர். அத்தகைய முனிவர் இப்போது தாமும் ஓர் ஆண்சிங்க வடிவை எடுத்துக்கொண்டார். மோன ஞானியாய் இருந்தவர், காமியான பிறகு கொடூரமான மிருகமாகவே ஆகிவிட்டாராம்.

ஏன் இப்படிக் காசியபரைச் சொல்ல வேண்டும்? தவம் செய் யாதவர்கள் கொடுமையானவர்களோடு சேர்ந்து கலந்து துன்பத்தை உண்டாக்குவது இயற்கை. ஆனல் அருமையான தவத்தைச் செய் தவர் இப்படிச் செய்தார் என்ருல் அது மிகவும் இரங்குவதற்குரியது.

மானை நிகர் மாயையோடு சேர்ந்து சூரனை உண்டாக்கினரே, அதோடு நின்றிருக்கக்கூடாதா? இரண்டாவது முறையும் அவள் பெண் சிங்கமாக மாறினவுடன், அது விலங்கு என்று அவர் ஒதுங்கி இருக்கலாம். காமத்தில் மீதூர்ந்து நின்ருர் காசியபர். ஆகவே அவரும் ஆண்சிங்கமாக மாறி அவளுடன் கலந்தார்.

பொல்லாதவர்களோடு ஒருவன் சேர்ந்தால் நல்ல எண்ணங்கள் மாறி மிகப் பொல்லாதவனுகவே ஆகிவிடுவான் என்பதை இந்தக் கதை காட்டுகிறது.

இரண்டாவது சாமத்தில் உலகம் எல்லாம் நடுங்கும்படியாகச் சிங்கமுகாசுரன் தோன்றினன். குழந்தை பிறந்தபோதே உலகம்

எல்லாம் திடுக்கிட்டன என்று சொன்னால், அவன் வளர்ந்தபோது என்ன ஆகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

காசியபரும் மாயையும் சிங்கவுருவம் எடுத்து இணைந்தபோது, அவர்களுடைய உடம்பிலிருந்து வியர்வை உண்டாயிற்று. அந்த வியர்வையிலிருந்து நாற்பதினுயிர வெள்ளம் அசுரர்கள் சிங்கமுகம் உடையவர்களாகத் தோன்றினர்கள்.

அவ்வாறு தோன்றிய சிங்கமுகாசுரனையும் மற்றவர்களையும், "இங்கேயே இருங்கள்" என்று சொல்லி நிறுத்திவிட்டு, வேறு ஓரிடம் சென்ருள் மாயை. அவளைத் தொடர்ந்து சென்ருர் காசியப முனிவர்.

தாரகன் பிறப்பு

பின் மூன்ரும் சாமத்தில் மாயை பெண்யானை யாகவும் காசியபர் ஆண் யானையாகவும் மாறி இணைந்ததன் விளைவாகத் தாரகாசுரன் தோன்றினன்.

பேரும் மும்மத மால்களிற் றுருக்கொடு பிடிமேல்
சேரு கின்றுழி மூன்றெனச் செல்லும்யா மத்தில்
ஈரி ரண்டுவாள் எயிற்றுடன் யானைமா முகத்துத்
தார காசுரன் தோன்றினன், அவுணர்கள் தழைப்ப.

(அசுரர். 24.)

[பேரும் மும்மத மால் களிற்று உருக்கொடு - வழிகின்ற மூன்று மதங்களை யுடைய ஆண்யானையின் வடிவத்தோடு. வாள் எயிற்றுடன் - கூர்மையான தந்தத்துடன்.]

தாராகாசுரன் முதலியவர்களை அந்த அந்த இடத்திலேயே இருக்கும்படியாகச் சொல்லிவிட்டு, மறுபடியும் ஒரு மண்டபத்தை அவர்கள் அடைந்தார்கள்.

அசமுகி பிறப்பு

நான்காவது சாமத்தில் மாயை பெண் ஆட்டைப்போல உருவைக் கொண்டாள். காசியபமுனிவரும் காமத்தினல் அஜம் ஆகி விட்டார். ஆண் ஆட்டின் வடிவத்தை எடுத்துக்கொண்டு அவளோடு அளவளாவினர். அப்போது ஆட்டின் முகமுடைய அசமுகி என்ற பெண் தோன்றினள்.

அறிவு இல்லாதவரை ஆடு என்று சொல்வார்கள். மாயை ஆடாக மாறினபோது காசியபரும் ஆடாக மாறினர் என்ருல், காமம் ஒருவன் உள்ளத்தில் தோன்றினல் அவன் எத்தகைய இழிந்த நிலையையும் தானே மேற்கொள்வான் என்று தெரிகிறது. அசமுகி தோன்றியதோடு அவர்களது வியர்வையிலிருந்து

முப்பதினுயிர வெள்ளம் ஆட்டு முகமுடைய அசுரர்கள் தோன்றினுர்கள்.

**புணர்ந்த காலையில் அசமுகி தோன்றினன்; புவியோர்க்
கணங்கு செய்தகர் முகவராய் அங்கவர் வியர்ப்பில்
கணங்கொள் முப்பதி னுயிர வெள்ளமாம் கணிதத்து
இணங்கு தானவர் உதித்தனர், இமையவர் கலங்க.**

(அசுரர். 27.)

[அசமுகி - ஆட்டு முகம் உடையவள். அணங்கு செய் - துன்பம் செய்கின்ற. தகர் முகவர் - ஆட்டு முகமுடையவர்கள். கணிதத்து - கணக்கையுடைய. தானவர்- அசுரர்.]

அதன் பின்பும் அவர்கள் யாளி, குதிரை, மான், நரி, பன்றி ஆகிய வடிவங்களை எடுத்துக்கொண்டு புணர்ந்தார்கள். அவ்வப் பொழுது அசுரர்கள் தோன்றினுர்கள். இப்படி அறுபதினுயிர வெள்ளம் அசுரர்கள் தோன்றினுர்கள்.

ஒரு முறை தவறு செய்துவிட்டால் மனிதன் மீண்டும் தவற்றை எளிதாகச் செய்வான். முதலில் தவற்றைச் செய்கின்றவரைக்குந் தான் மனம் நடுங்கும். மாயையினுல் முதலில் தவறு இழைத்துவிட்ட காசியபர், அடுத்தடுத்துக் கொஞ்சமும் நடுக்கமின்றி அவள் எந்த எந்த வடிவத்தை எடுத்தாலும் அந்த அந்த வடிவம் எடுத்து அவளோடு இன்பத்தை நுகர்ந்தார்.

சங்கத்தின் விளைவு

காசியபர் தேவர்களுக்குத் தந்தை. இப்போது அசுரர்களுக்கும் தந்தையாக மாறினுர். அவர் மகாமேரு போன்று தவம் செய்தவர். ஆனுல் மாயையின் சம்பந்தத்தால் படுகுழியில் வீழ்ந்துவிட்டார். ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் விழுந்தாலும், அத்தனையும் பாழாகிவிடும். அதுபோல அவர் செய்த தவம் அனைத்தும் வீணுகிவிட்டது.

இதனுல்தான் பெரியவர்கள் தாம் எவ்வளவு சாதனைகள் செய்திருந்தாலும் சத்சங்கத்தோடே இருக்கவேண்டுமென்று சொல்வார்கள்.

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும்"

என்று பெரியோர்கள் வேண்டுகின்றனர். நல்லார் இணக்கம் இருந்தால்தான் நல்ல பழக்கங்கள் இருக்கும். மிகச் சிறந்த நிலையில்

உள்ளவர்கள்கூடப் பொல்லாதவர்களுடன் இணைந்தால், அவர் களுடைய நல்ல குணங்கள் மாறிவிடும். சைவ சிந்தாந்த நூலாகிய சிவஞானபோதத்தில் 12-ஆவது சூத்திரம் இந்த உண்மை யைத்தான் சொல்கிறது. இறைவனுடைய திருவருளினுல் ஞானம் பெற்று ஜீவன்முக்தி அடைந்தவர்களுக்குக்கூடச் சத்சங்கம் வேண்டு மென்று சொல்கிருர் மெய்கண்டார்.

“செம்மலர் நோன்ருள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே”

என்பது சூத்திரம்.

ஜீவன் முக்தனுக இருந்தாலும் வாசனு மலம் தாக்குகின்ற வாய்ப்பு இருக்குமாகையால், அவன் அடியார்களுடன் சேர்ந்தே இருக்கவேண்டும், ஆண்டவனது திருக்கோவில்களைத் தரிசனம் பண்ண வேண்டுமென்று அந்தச் சூத்திரம் சொல்கிறது.

எவ்வளவு பெரிய விளக்காக இருந்தாலும் காற்று அடிக்கும் இடத்தில் வைத்தால் பாதுகாப்பாக எதைக் கொண்டாவது மூடி வைக்கவேண்டும். பெரிய விளக்காயிற்றே, காற்றில் அணைந்து விடாது என்று எண்ணக் கூடாது.

மாணிக்கவாசகர் ஒன்று சொல்கிருர்; “எம்பெருமானே, உன்னிடத்தில் எம்பெருமாட்டி இருக்கிருள். அவளிடத்தில் நீ இருக்கிருய். நீங்கள் இரண்டு பேரும் என்னுடைய உள்ளத்தில் வந்து இருந்து அனுக்கிரகம் பண்ணத் திருவுள்ளம் கொண்டால் எனக்கு ஒரு பாதுகாப்புத் தரவேண்டும். நீங்கள் என்னுடைய உள்ளத்தில் வந்திருந்தாலும், உங்களுடைய தொடர்பினுல் நான் இன்பம் அடைய வேண்டுமானுல், சத் சங்கம் எனக்கு வேண்டும். அந்தக் கோட்டைக்குள் இருந்தால்தான் எனக்குக் கிடைத்த அரிய தனத்தை நான் காப்பாற்ற முடியும்” என்கிருர். பத்தாயிரம் பொன்னை ஒருவன் தருகிருன். அதை வாங்கிக்கொண்டு வரும்போது திருடன் வருவான். யார் யார் கையில் பணம் வைத்திருக்கிருர்களோ அவர்களுக்குப் பயமும் இருக்கும். ‘மடியில் கனம் இருந்தால் வழியில் பயம்’ என்ற பழமொழி உண்டல்லவா? ஆயிரம் பொன்னைக் கொடுத்தால், அவன்,

"எனக்குக் காவலாகச் சில பேரை அனுப்புங்கள்" என்று சொல்வான். அப்படித்தான் மாணிக்கவாசகர் சொல்கிறார்.

"உடையாள் உன்றன் நடுஇருக்கும்;
உடையாள் நடுவில் நீஇருத்தி;
அடியேன் நடுவில் இருவிரும்
இருத்தி ராகுல், அடியேன் உன்
அடியார் நடுவில் இருக்கும்அரு
ளைப்புரி யாய், பொன் அம்பலத்துள்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே."

"அடியேனுடைய உள்ளத்தில் நீங்கள் இருக்கவேண்டுமானல் நான் அடியார்களுக்கு நடுவில் இருக்கிற அருளைச் செய்வாயாக" என்கிறார். மிக அருமையான பொருளாக இருந்தாலும் அதற்குரிய பாதுகாப்பு இல்லாமல் வைத்துக்கொண்டால் பொருளை இழந்துவிடும்படி நேரும். இந்தக் கருத்தில் அப்படிச் சொன்னர். சத் சங்கத்தினுல் நமக்கு இருக்கிற நல்ல குணங்கள் வளரும். தாழ்ந்தவர்களுடன் சேர்ந்து விட்டால் நல்ல குணங்கள் அடியோடு அழிந்து, மெல்ல மெல்ல மிகத் தாழ்ந்த நிலையே உண்டாகிவிடும். இதைத்தான் காசியபர் வரலாறு நமக்குக் காட்டுகிறது.

சூரபன்மன் ஆட்சி

காசியபர் உபதேசம்

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் ஆகியோர்கள் தம் தந்தையாகிய காசியப முனிவரின் காலில் வீழ்ந்து வணங்கினார்கள். அவர் நல்ல தவ முனிவர். ஆகையால் நல்ல வார்த்தைகள் சொன்னார். தான் கெட்டுப்போனாலும் மற்றவர்களுக்கு நல்லதைச் சொல்வது என்பது மனிதனுடைய இயற்கை. கள் குடிக்கிறவன் ஒருவன் தன் குழந்தையைப் பார்த்து, "நான் கள் குடித்துக் கெட்டுப் போய் விட்டேன். நீ இந்தக் காரியத்தைச் செய்யாதே" என்று சொல்வது வழக்கம். இங்கே காசியபர் தம்மை வணங்கிய குமாரர்களிடத்தில், "நீங்கள் தீமை செய்யாதீர்கள். பரமேசுவரனை நம்புங்கள். அவனை நம்பினால் காலனையும் வெல்லலாம். மார்க்கண்டேயர் கால சங்காரனை பரமேசுவரன் அருளால் பதினாறாயிரம் ஆண்டு வாழ்ந்தார்" என்று சொன்னார்.

இங்கே மார்க்கண்டேயர் கதை விரிவாக வருகிறது.

ஆதலின் மைந்தர்காள், அறத்தை ஆற்றுதிர்;
தீதினை விலக்குதிர்; சிவனை உன்னியே
மாதவம் புரிகுதிர்; மற்ற தன்றியே
ஏதுள தொருசெயல் இயற்றத் தக்கதே?

(காசிபன் உபதேசப். 24.)

[அறத்தை ஆற்றுதிர் - தருமத்தைச் செய்யுங்கள். மற்று அது அன்றியே இயற்றத்தக்கது ஏதுளது?]

"நீங்கள் செய்யவேண்டிய காரியம் வேறு இல்லை, வாழ்க்கையில் பெரிய ஊதியம் எது தெரியுமா? இறைவன் திருவருள். அதை அடைவதற்கு அவனை நோக்கித் தவம் செய்யுங்கள்" என்று தம் மைந்தர்களுக்குக் காசியபர் நல்ல உபதேசம் செய்தார்.

மாயையின் கூற்று

அப்போது அந்தக் குழந்தைகளின் தாயாகிய மாயை குறுக்கிட்டாள். நம்முடைய அநுபவத்ில்கூடப் பார்க்கிறோம். சில இடங்களில் தகப்பனார் தம் குழந்தைகளுக்கு நல்லுபதேசத்தைச் செய்கிறபோது, அவருடைய மனைவி வந்து தடுப்பாள். அதுபோலக்

காசியபர் தம் குழந்தைகளுக்கு நல்ல உபதேசங்கள் செய்வதைக் கேட்டு மாயை வந்து சொன்னாள்; "ஓய்! என்ன உபதேசம் பண்ணுகிறீர்? இப்போதெல்லாம் புதிய யுகம். கர்நாடக சமாசாரத்தைச் சொல்லாதீர்கள். எது இருந்தாலும் இல்லா விட்டாலும் பணத்திற்கு நிகர் எதுவும் கிடையாது. பணம், பதவி ஆகிய இரண்டுமே உயர்வை உண்டாக்கும்" என்று சொன்னாள். அந்தக் காலத்தில் மாயை சொன்ன உபதேசத்தைத்தான் இப்போது பல பேர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

மாயை மேலும் சொன்னாள்; "எவ்வளவு கல்வி, தவம் இருந் தாலும் பயன் இல்லை. பொருள், பதவி சேர்ந்தால்தான் பயன் உண்டு. ஆகையால் பணத்தையும், பதவியையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னாள்; "அதற்கு என்ன உபதேசம் வேண்டுமோ அதைப் பெறுங்கள்" என்றும் சொன்னாள்.

சுக்கிராசாரியார் உபதேசம்

உடனே தங்கள் குருவாகிய சுக்கிராசாரியாரிடம் தம் குழந்தைகளை அவள் அனுப்பினாள். அவர் அவர்களுக்கு ஏற்றபடி உபதேசம் பண்ணினார்.

அவருடைய உபதேசம் பல வகையாக இருந்தது. "இந்த உலகம் எல்லாம் மாயையால் உண்டாவது. நாம் செய்கிற புண்ணிய பாவங்கள் இந்த உடம்புக்கே உரியவை. நாமே கடவுள். நமக்குப் புண்ணிய பாவங்கள் இல்லை. பிள்ளைப்பூச்சி சேற்றில் புரண்டால் சேறு ஒட்டுமா? ஒட்டாது. புண்ணிய பாவம் என்பன எல்லாம் பேதைமை; உடம்போடு சார்ந்தவை. உடம்போடு வந்தது உடம்பு போனால் போய்விடும். ஆகவே எல்லோரும் அவரவர் விருப்பத்தின்படி எதுவும் செய்யலாம்" என்று சொன்னார்.

இப்படிச் சொல்வதற்கு ஒரு குரு இருக்கிறார் என்பதை நினைந்து பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். "நீங்கள் பெரு வீரர்கள் ஆக வேண்டும். உங்களுடைய பதவி எல்லோரையும் உங்களுக்குக் கீழ்ப்படியச் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய யாகம் பண்ணுங்கள். பரமேசுவரன் அருள் செய்வான்" என்றார் சுக்கிராசாரியார்.

யாகம், தவம் என்பன இரண்டு வகைப்படும். ஒரு பொருளை விரும்பிச் செய்கிற யாகம், தவம் ஆகியவை காமிய கர்மாக்கள்; அல்லாதவை நிஷ்காமிய கர்மாக்கள். காம்ய கர்மாக்களினால் மேலும் மேலும் பிறப்பும், துன்பமும் வருமேயன்றி இறைவன் திருவருள் கிடைக்காது. சுக்கிராசாரியார் காம்ய கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று அசுரர்களுக்கு உபதேசித்தார். அப்போது மாயை, "யாகத்திற்கு வேண்டிய பொருள்களை நான் தருகிறேன்" என்று சொன்னாள்.

சூரபன்மன் வேள்வி புரிதல்

சுக்கிராசாரியாருடைய உபதேசப்படி சூரபன்மன் யாகம் செய்யப் போனான். நூறு யோசனைப் பரப்பில் பெரிய வேள்விக் களத்தை உண்டாக்கி, தம்பிமார்களை வேள்வி செய்யச் சொல்லி அவன் தவம் செய்தான்.

நெடுங்காலம் தவம் செய்தும் ஆண்டவன் வரவில்லை. அதற்கு மேல் ஆகாயத்தில் போய்த் தன் உடம்புத் தசைகளையே அறுத்து அவற்றை ஆகுதியாக வேள்வித் தீயில் போட்டான்.

தவத்தின் இயல்பு

தவம் என்பது எத்தகையது என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

"உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்பது அவர் கூறும் இலக்கணம். தவம் என்ற சொல் தபஸ் என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது. தப் என்பது வேர். தப் என்றால் எரித்தல். தன்னைத் தானே எரித்துக்கொள்வதுதான் தவம். அதாவது பட்டினி கிடத்தல், நெருப்பின் வெம்மையைத் தாங்குதல், குளிரைத் தாங்குதல் முதலிய துன்பங்களைத் தானே ஏற்றுக்கொண்டு மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவனை நினைப்பது தவம். இதைத்தான் 'உற்ற நோய் நோன்றல்' என்று சொன்னார். அதோடு தவத்தின் இலக்கணம் நின்றுவிடவில்லை. அதற்கு மேலே முக்கியமாக ஒன்று இருக்கிறது. எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டால் போதாது. பிறருக்கு எந்த விதமான துன்பமும் செய்யாமல் இருப்பது தவத்தின் மற்றோர் இலக்கணம்.

இராவணன், சூரன் ஆகியவர்கள் மிகக் கடுமையாகத் தவம் செய்தார்கள்; தங்களைத் தாங்களே வருத்திக்கொண்டார்கள். அந்தத் தவத்தினால் மிக்க வலிமை பெற்றார்கள், ஆயினும் தாம் பெற்ற பெரிய வலிமையினால் எல்லோரையும் அழிக்க ஆரம்பித்தார்கள். அது அல்ல தவத்தின் இலக்கணம். "உற்ற நோய் நோன்றல்" என்பதை அவர்கள் செய்தார்கள். அதற்கு அடுத்து, "உயிர்க்கு உறுகண் செய்யாமை" என்பதை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. தவத்தின் பயன் அகிம்சை. எந்த உயிருக்கும் தீமை செய்யக் கூடாது. அசுரர்கள் செய்த தவம் எல்லாம் எல்லா உயிர்களுக்கும் தீங்கு செய்வதற்காகவே; எல்லாரினும் சிறந்த வலிமை பெற வேண்டும் என்பதற்குத்தான்.

தனக்குத் துன்பம் ஏற்பட்டபோதும் பிறருக்கு வருத்தம் தரக்கூடாது என்பதுதான் தவத்தினுடைய இலக்கணம் என்று பார்த்தோம். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகமே ஒரு தவந்தான். "பிறர் உனக்குத் துன்பம் செய்தாலும் அதை நீ பொறுத்துக்கொள். அவரை எதிர்த்து உன் விரலைக்கூட நீட்டாதே" என்று அவர் உபதேசம் செய்தார். இதைப்போன்ற தவம் வேறு எங்கும் காண முடியாது. பழைய காலத்தில் உற்ற நோய் நோன்று, உயிர்க்குறுகண் செய்யாது தவம் செய்த பல பெரியவர்கள் இருந்தார்கள். அவர்களை எல்லாம் விடப் பெரியவர் மகாத்மாகாந்தி என்று சொல்வேன். அதற்குக் காரணம் உண்டு. வியாசர் முதலிய பெருமக்கள் தவம் செய்தார்கள். அவர்களுக்குப் பல பேர் சிஷ்யர்கள் இருந்தார்கள். அதிகமாகப் போனால் நூறு சிஷ்யர்கள் இருந்திருக்கலாம். ஆனால் மகாத்மா காந்திக்கு ஆயிரக்கணக்கான பேர்கள் அடியவர்களானார்கள். அவர் காட்டிய சத்தியாக்கிரகத் தவத்தில் அவர்கள் சேர்ந்துகொண்டார்கள். இப்படிப் பெருங் கூட்டமாக, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களைச் சத்தியாக்கிரகம் என்னும் தவத்தில் ஈடுபடுத்திய மகாத்மா உண்மையில் பெரிய முனிபுங்கவர் என்று சொல்ல வேண்டும். தவத்தைச் சொல்லும்பொழுது மகாத்மாவைப் பற்றிய எண்ணம் வந்தது.

சூரன் செயல்

சூரன் ஆகாயத்திலிருந்து தன் உடம்புத் தசைகளை எல்லாம் அரிந்து அக்கினியில் போட்டான். இப்படிப் போடப் போடத்

தனக்குப் பலம் வரும் என்று அவன் எதிர்பார்த்தான். இறைவனுடைய திருவருளை உண்மையாக அடையவேண்டுமானால் இப்படிச் செய்தால் மாத்திரம் போதாது. உள்ளன்பு வேண்டும். திருமூலர் இதைச் சொல்கிறார்.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்பேர டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே."

இந்தப் பாட்டைக் காணும்போது சூரபன்மாவின் நினைவு நமக்கு வருகிறது. அவன் என்பையே விறகாய் அரிந்து அரிந்து போட்டான். ஆனால் உள்ளத்தில் அன்பு இல்லை.

**வான கத்திடை நிற்புறு சூரபன் மாவாம்
தான வர்க்கிறை வாள்கொடே ஈர்ந்துதன் மெய்யின்
ஊன்அ னைத்தையும் அங்கிமேல் அவியென ஒச்சிச்
சோனை ஒத்ததன் குருதியை இழுதெனச் சொரிந்தான்.**

(அசுரர் யாகப். 86.)

[தானவர்க்கு இறை - அசுரர் தலைவனாகிய சூரன். ஈர்ந்து - அறுத்து. ஒச்சி - பெய்து. இழுதென - நெய்யாக.]

சூரன் தன்னுடைய தசையைச் சமித்தாகவும், இரத்தத்தை நெய்யாகவும் பெய்தான். இப்படி ஆயிர வருஷம் யாகம் பண்ணினான். அப்போதும் ஆண்டவன் வரவில்லை.

யாக குண்டத்தின் நடுவில் ஒரு வச்சிரக் கம்பம் இருந்தது. வச்சிரம் எல்லாவற்றையும் அறுக்கக் கூடியது. 'இனி இந்த உடம் போடு இருக்கக்கூடாது' என்று எண்ணி, அந்த வச்சிரக் கம்பத்தின் பக்கத்தில் வந்து அதன் மேலிருந்து வீழ்ந்தான் சூரன்; அவன் உடம்பெல்லாம் பொடிப்பொடி யாகிவிட்டது.

தம்பியர் செயல்

**கடிதின் உச்சிநின் றுருவியே வச்சிர கம்பத்
தடித னிற்சென்று சூரபன் மாவெனும் அவுணன்
படிவ முற்றும்நுண் துகளுற உளம்பதை பதைத்து
முடிய, மற்றது கண்டனன் மடங்கல்மா முகத்தோன்.**

(அசுரர் யாகப். 91.)

[கடிதின் - விரைவில். துகள் உற - பொடியாக. மடங்கல்மா முகத்தோன் - சிங்க முகாசுரன்.]

தன் அண்ணன் வச்சிரக்கம்பத்தில் விழ்ந்து பொடியானதைக் கண்டான் சிங்கமுகாசுரன். மனம் வருத்தமுற்றான். பல வகையாகப் புலம்பினான். தாரகனும் அப்படியே வருந்தினான். இரண்டு பேரும், 'நம் அண்ணன் மறைந்துபோன பிறகு நாம் உயிரோடு இருத்தல் கூடாது' என்று எண்ணினார்கள்.

அன்ன திறல்அவுணன் ஆயிரமென் றுள்ளஅகன்
சென்னிபல வுந்தனது செங்கைவா ளால்ஈர்ந்து
முன்னம் முதல்வன் முயன்ற பெருவேள்வி
வன்னி அதனுள் மறம்பேசி இட்டனனே.

(அசுரர் யாகப். 111.)

[அவுணன் - சிங்கமுகாசுரன். முதல்வன் - தமையனாகிய சூரன். வன்னி - வேள்வித் தீ. மறம் - வீரம்.]

சிங்க முகன் தன் ஆயிரம் தலைகளையும் வெட்டி, சூரன் யாக குண்டத்தில் எங்கு வீழ்ந்தானோ அந்த அக்கினியிலேயே வீசினான். சிங்கமுகன் செய்ததைத் தானும் செய்யவேண்டுமென்று தாரகனும் தன் தலைகளை வெட்டி வேள்வித் தீயில் இட்டனன். அவர்கள் தலைகள் வெட்ட வெட்ட முளைத்துக் கொண்டிருந்தன. 'நாம் இப்படி வாளால் சிரத்தை வெட்டிப் பயன் இல்லை. அண்ணன் உயிர் விட்டதைப்போல உயிர்விடவேண்டும்' என்று எண்ணினார்கள். இருவரும் வச்சிரக்கம்பத்தில் ஏறிக் குதித்தார்கள்.

சிவபெருமான் அருள் புரிதல்

அப்போது சிவபெருமான் அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று எண்ணினான். ஒரு கிழ அந்தணராக வந்து, "ஏன் ஐயா, இப்படிப் பண்ணுகிறீர்கள்?" என்று கேட்டான். "அண்ணன் தவம் பண்ணி இறந்துவிட்டான். அண்ணன் இல்லாவிட்டால் எங்களுக்கு வாழ்வு இல்லை. ஆகவே நாங்களும் இறக்கத் துணிந்தோம்" என்றார்கள். அப்போது இறைவன் கங்கையை அழைக்க, அந்த நதி வந்து புகவே, வேள்வி அக்கினி அவிந்து போயிற்று. அசுரர் யாவரும் எழுந்து வந்தார்கள்.

அரந்தைதனை இகந்தஇரு துணைவர்களும் பாங்குஉற அவுணர் சேனை
பரந்துபல வாழ்த்தெடுப்பச் சூரபன்மன் திகழ்வேலை, படியும் வானும்
நிரந்தபுனற் கங்கைதனை வருவித்து மறையவன்போல் நின்ற எம்மான்
கரந்துதனை உணர்கின்ற உருவினொடு தோன்றினனால் ககன மீதே.

(வரம்பெறு. 16.)

[அரந்தைதனை - துயரத்தை. இகந்த - நீங்கிய. திகழ் வேலை - விளங்கும் சமயத்தில். படியும் - பூமியும். நிரந்த - நிரம்பிய. ககனம் - வானம்.]

சூரபன்மன் யாககுண்டத்திலிருந்து எழுந்து வந்தான். அப்போது சிவபெருமான் இடபாரூடனாக எழுந்தருளி அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணினான்.

சூரனுடைய வழிபாட்டை ஏற்றுக் கொண்டு சிவபெருமான் அவனுக்கு வரம் கொடுக்கலானான். "ஆயிரம் கோடி அண்டங்கள் இருக்கின்றன. அவற்றில் 108 கோடி அண்டங்களுக்கு நீ அரசனாய் இருப்பாய். 108 யுகங்கள் நீ அரசாள்வாய். இந்த அண்டங்களுக்கெல்லாம் நீ நினைத்தவுடன் போவதற்கு உனக்கு ஓர் இந்திரஜாலத் தேர் தருகிறேன். அந்தத் தேர் வாயுவேகத்தோடு போகும்" என்று அனுக்கிரகம் பண்ணினான். அதற்குமேலே, யாராலும் எதிர்த்துப் போரிடுவதற்கு அரிய சக்கராயுதத்தையும் கொடுத்தான்; அவன் ஊர்வதற்குரிய சிங்க வாகனத்தையும் வழங்கினான்.

மண்தனக்கா யிரகோடி அண்டங்கள் உளஆகும்;
மற்ற வற்றுள்
அண்டமோ ராயிரத்தெட் டுகம்நூற்றெட் டாள்கஎன
அருளால் நல்கி
எண்தொகைபெற் றிடுகின்ற அவ்வண்டப் பரப்பெங்கும்
ஏகும் வண்ணம்
திண்டிறல்பெற் றிடுகின்ற இந்திரஞா லமதென்னும்
தேரும் நல்கி;

எண்ணுபல புவனங்கள் கொண்டஅண்டத்
தொகைதன்னை என்றும் போற்றக்
கண்ணனது நேமியினும் வலிபெறுமோர் அடலாழி
கடிதின் நல்கி
அண்ணலுறு சினவேற்றுக் கோளரிஊர் தியும்நல்கி
அகிலத் துள்ள
விண்ணவர்கள் யாவருக்கும் அன்றுமுதல் முதல்வனும்
மேன்மை நல்கி."

(வரம்பெறு. 21, 22.)

[நேமி - சக்கராயுதம். ஆழி - சக்கரம். கடிதின் - விரைவில். அண்ணல் - பெருமை. ஏற்றுக்கோளரி ஊர்தி - ஆண்சிங்க வாகனம்.]

"தேவர்கள் யாவரும் தொழுவதற்கு ஏற்ற வகையில் நீங்கள் மூன்று பேரும் இருந்து அரசாளுங்கள்" என்று சிவபெருமான் அருளினான்.

'இப்போதிருக்கிற மூன்று மூர்த்திகளும் வல்லமை இழப்பார்கள். நீங்களே முதல்வர்களாக இருக்க வேண்டும்' என்று சொல்வது போலச் சொன்னான். "நம் சக்தி வந்தாலொழிய நீங்கள் அழிய மாட்டீர்கள்" என்று அருள் செய்தான்.

தேவர் யாவரும் சென்று தொழப்படும்
மூவ ராகி மொழிந்திடும் நுங்களைத்
தாவி லாதநம் சக்திஒன் றேயலால்
ஏவர் வெல்பவர் என்று விளம்பிமேல்.

(வரம்பெறு. 27.)

[தா இலாத - கேடு இல்லாத.]

இத்தனை வரங்களையும் கொடுத்ததைக் கேட்டுச் சூரபன்மன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். 108 அண்ட ஆட்சியைக் கண்டு மயங்கினான். 'நம்முடைய சக்தியைத் தவிர மற்றென்றாலும் அழிய மாட்டீர்கள்' என்பதிலுள்ள குறிப்பை மறந்துவிட்டான். 'நம் சக்தி உங்களை அழிக்கும்' என்பது அந்தக் குறிப்பு. சிவபிரான் கொடுத்த பெரிய வரங்களுக்கிடையில் இந்தக் குறிப்பை உணரத் தவறிவிட்டான். அநேகமாகப் பெரிய செல்வங்களை உடையவர்களும் கூட ஒரு சிறு குறைக்கு ஆளாகிக் கடைசியில் தங்கள் நிலையை இழப்பார்கள். சூரபன்மன் தனக்குக் கிடைத்த பெரிய வலிமையையும், பாக்கியங்களையும் எண்ணி மதமதத்துப் போய் விட்டான்.

இறைவனே அவர்களைக் கொல்லலாமே என்று தோன்றும். தானே வரம் கொடுத்துவிட்டு அவர்களைக் கொல்வானா?

"தான்வளர்த்ததோர் நச்சுமாமர மாயினும்கொலார்"

என்று **மாணிக்கவாசகர்** சொல்கிறார்.

சிவபெருமான் தங்களுக்கு வரம் கொடுத்தவுடன், தங்கள் மனம்போல என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற தைரியம் அசுரர்களுக்கு உண்டாகிவிட்டது. அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டுச் சிவபெருமான் கைலாசத்திற்குப் போய்விட்டான்.

சூரபன்மன் திக்கு விஜயம்

சூரபன்மன் அதற்குமேல் தன்னுடைய அதிகாரத்தினாலே ஆட்சியைச் செலுத்தத் தொடங்கினான். முதலில் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். குபேரன் இருக்கும் மேற்குத் திசைக்குப் போனான். குபேரன் அவனைக் கண்டு அஞ்சி, "நான் எப்போதும் உன்னைத் தொழுது கொண்டிருக்கிறேன். நான் உன் அடிமை அல்லவா?" என்றான்.

இந்திரன் இருக்கும் கிழக்குப் பக்கம் போனான். அவன் சூரனைக் கண்டு பயந்து மேலே போய்விட்டான். சூரன் அந்த நகரத்தைத் தீயிட்டு எரித்தான். பின்பு அக்கினி மூலைக்குப் போனான். அக்கினி நமக்குச் சக்தி இருக்கிறது என்று எண்ணி அவனோடு சண்டையிட்டான். அவனால் எதிர்த்து நிற்க முடியவில்லை; தோற்று ஓடினான். சூரன் அக்கினியை, "நீ எனக்கு ஏவல் செய்வாயாக!" என்று பணித்தான். அதற்கடுத்துத் தென் திசை நோக்கி எமனை நாடிச் சென்றான் சூரன். அதற்கு முன்பு அக்கினிபட்ட பாட்டை யமன் அறிந்தான். 'இவன் நமக்கே எமனாக வருகிறான்; இவனோடு நமக்கேன் சண்டை?' என்று அஞ்சி, சூரனுக்குப் பூர்ணகும்ப மரியாதை செய்து வணங்கினான். வருணன் இருக்கும் திசையை நாடிச் சென்றான் சூரன். வருணன் பயந்து கடலுக்குள் ஓடி ஒளிந்தான். வாயு திசையை எல்லாம் சூரபன்மன் கொளுத்தினான். பிறகு நாகலோகத்திற்குப் போய் ஒரு கலக்குக் கலக்கினான். அங்கேதான் அமுதம் இருக்கிறது. நஞ்சுக்குப் பக்கத்தில் அமுதத்தை வைத்திருக்கிறான் ஆண்டவன். இது உலக இயற்கை. பலாப்பழம் தின்றால் வரும் துன்பம் அதன் கொட்டையைத் தின்றால் நீங்கும். எங்கே மிகவும் குளிர்ந்த நீர் இருக்கிறதோ அங்கேதான் வெந்நீர் ஓடையை ஆண்டவன் வைத்திருக்கிறான்.

பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த திருமால் சூரனுடன் போர் செய்ய வந்தார். அப்போது அவர் வீசிய சக்கராயுதம் தாரகன் கழுத்தில் மாலையாக விழுந்தது, இரத்தின கண்டி போட்டது போல. 'அறுக்கும் சக்கராயுதமே மாலையாகிவிட்டால் தவத்தின் பயன்தான் என்னே!' என்று இங்கே கச்சியப்ப சிவாசாரியார் தவத்தின் மகிமையை வியக்கிறார்.

ஓரிமை ஒடுங்கும் முன்னர் உலகெலாம்
தொலைக்கும் தன்மைப்
போரயில் நேமி தானும் புராரிதன்
வரத்தாற் சென்று
தாரக அசுரன் கண்டந் தன்னைவந்
தணுகிச் செம்பொன்
ஆரம தாயிற் றம்மா! தவத்தினும்
ஆக்கம் உண்டோ?

(திக்குவிசயப். 93.)

[போர்அயில் நேமி - போரில் பயன்படும் கூர்மையுடைய சக்கராயுதம். புராரி - சிவபிரான். ஆரம் - மாலை.]

தம்முடைய சக்கராயுதத்திற்கு நேர்ந்த கதியைக் கண்ட திருமால், 'இனி இவர்களோடு போர் செய்து பயனில்லை' என்று எண்ணினர். அவர்களைத் தட்டிக் கொடுக்க ஆரம்பித்தார். "பரமேசுவரன் கிருபையால் அல்லவா இவ்வளவு பலம் பெற்றுள்ளீர்கள்? உங்களை வெல்லும் ஆற்றல் யாருக்கு வரும்? நீங்கள் எனக்குப் பந்துக்கள் அல்லவா?" என்று சொல்லி ஆசீர்வாதம் செய்து போய்விட்டார்.

பிறகு சொர்க்கலோகத்திற்குப் போனன். இந்திரனும் அவன் தேவியும் ஓடி மறைந்தார்கள். தேவர்கள் அனைவரும், "பகவானே, நீங்களே கண்கண்ட தெய்வம்" என்று கூறினர்கள். "நாம் இடுகின்ற உத்தரவுப்படி நீங்கள் நடக்கவேண்டும்" என்று பணித்து விட்டு, பிரமலோகத்திற்குப் போனன். திருமாலே சூரனுக்கு ஆசி கூறி நழுவியபோது பிரமன் என்ன செய்ய முடியும்?

காத லால்மிகு காசிபன் மைந்தன்
ஆத லால்அவு ணர்க்கிறை, நின்மூ
தாதை யான்; சர தம்இது; நின்சீர்
ஏதும் என்புகழ்; யான்பிறன் அன்றே.

(திக்குவிசயப். 123.)

[முதாதை - பாட்டன். சரதம் - உறுதி.]

"குழந்தைகளே, நீங்கள் காசியபனுடைய பிள்ளைகள் அல்லவா? காசியபன் என்னுடைய குழந்தை. ஆகையால் நீங்கள் எல்லாம் எனக்குப் பேரன்மார்கள் ஆகிறீர்கள். நீங்கள் சௌக்கியமாக வாழ வேண்டுமென்று நினைப்பேனே தவிர, வேறு இல்லை. பேரர்கள்

அடைகின்ற புகழ் எல்லாம் என்னுடைய புகழ் அல்லவா?" என்று பிரமன் சொல்லி அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தான்; வில், தேர், பிரம்மாஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்தான்.

அதன் பிறகு சூரபன்மன் வைகுண்டத்திற்குப் போனான். பாற் கடலுக்கு வந்தானே என்று அங்கு ஆசீர்வாதம் பண்ணிவிட்டு, வைகுண்டத்திற்கு வந்த நாராயணர், அங்கும் அவன் வந்ததை அறிந்து, "வாருங்கள் குழந்தைகளே!" என்று அங்கும் ஆசீர்வாதம் செய்தார்.

சூரன் முடிசூடுதலும் மணம் புரிதலும்

பிறகு தென் கடலுக்கு வந்து, விசுவகர்மாவை அழைத்துப் பெரிய நகரம் ஒன்றைச் சூரன் உண்டாக்கினான். அந்த நகரத்தில் வேதம் ஓதும் மண்டபத்தை அமைத்தான். அந்த நகரத்திற்கு வீர மகேந்திரபுரம் என்று பெயர் வைத்தான். இந்திரனுடைய ஊருக்கு இந்திரபுரி என்று பெயர். பெருமாள் பெத்த பெருமாள் ஆனது போல, சூரன் தன்னுடைய நகரத்திற்கு வீரமகேந்திரபுரம் என்று பேர் அமைத்தான். வடகடலுக்கு நடுவில் ஆசுரம் என்ற ஒரு நகரத்தை அமைத்துச் சிங்கமுகாசுரனுக்குக் கொடுத்தான். மேற்குப் பக்கம் மாயாபுரி என்னும் நகரத்தை அமைத்துத் தாரகனுக்குக் கொடுத்தான்.

சூரபன்மனுக்குப் பிரம தேவனே முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான்.

> **வந்து சீய மணித்தவி சேறினன்;**
> **அந்த எல்லையில் அச்சுதற் காமெனும்**
> **இந்தி ரத்திரு மாமுடி ஏந்தியே**
> **சுந்த ரத்தொடு நான்முகன் சூட்டினான்.**

(பட்டாபிடேகப். 6.)

(சீய மணித்தவிசு - மாணிக்கங்களாலான சிங்காசனம். எல்லையில் - சமயத்தில். அச்சுதற்கு ஆம் எனும் - திருமாலுக்கு ஏற்றது என்று சொல்லத்தக்க. இந்திரத் திரு மாமுடி - இந்திரன் அணிந்திருந்த அழகிய பெரிய மகுடத்தை.]

விசுவகர்மன் தன் மகளாகிய பதுமகோமளையைச் சூரனுக்கு மணம் செய்து கொடுத்தான். யமன் தன் மகளாகிய விபுதையைச் சிங்கமுகாசுரனுக்கு மணம் செய்து கொடுத்தான். நிருதி தன் புதல்வி சவுரியைத் தாரகாசுரனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

சூரபன்மன் தன் ஆட்சியை நடத்திக்கொண்டு வந்தான். தன் தம்பிமார்கள் அங்கங்கே அரசு செய்ய, சூரபன்மன் எல்லோருக்கும் மேலான பேரரசாகச் சிங்காதனத்தில் வீற்றிருந்து அதிகாரத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

சூரன் அரசாட்சி

அப்போது அவனுடைய ஆட்சியில் அசுரர்கள் மட்டுமின்றித் தேவர்களும் அடங்கியிருந்தார்கள். தேவர்கள் என்ன என்ன பொருள்களை இதுவரை அநுபவித்து வந்தார்களோ அவற்றை எல்லாம் அவன் இப்போது அநுபவிக்கத் தொடங்கினன். தேவர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லோரும் என்னுடைய உணவுக்குக் கடலிலிருந்து மீனைப் பிடித்துச் சுமந்து வாருங்கள்" என்ருன்.

ஊனமுற்றோர் போல்இவ்வா றுலைகின்ற காலத்தில்
ஒருநாட் சூரன்
வானகத்துத் தலைவனையும் அமரரையும் வருகவென
வலித்துக் கூவித்
தானவர்க்குத் தம்பியர்நீர், அவர்பணிநும் பணியன்றே ?
தரங்க வேலை
மீனனைத்தும் சூறைகொண்டு வைகலும்உய்த் திடுதிரென
விளம்பி ஞனல்.

(தேவரை ஏவல் கொள். 3.)

[ஊனம் உற்றோர் - அங்கவீனம் அடைந்தவர்கள். உலைகின்ற - வருந்துகின்ற. வலித்து - வற்புறுத்தி. சூறை கொண்டு - கொள்ளை கொண்டு. வைகலும் - நாள் தோறும். உய்த்திடுதிர் - போடுங்கள்.]

இந்த உத்தரவைக் கேட்டு இந்திராதி தேவர்கள் வருந்தினுர்கள்; 'நம் நிலை இவ்வளவு மோசமாகப் போய்விட்டதே!' என்று எண்ணிப் புலம்பினுர்கள். அப்போது இந்திரன் வருணனை அழைத்து, "நீதான் மீன்களைக் கொண்டுவர வேண்டும்" என்று கூறினுன்; "உனக்குத்தானே கடல் சொந்தம்? மீன்களைக் கொண்டு வந்து ஓரிடத்தில் குவித்து வை. மீன் பிடிக்கிற இழிந்த காரியமாவது எங்களுக்கு இல்லாமல் போகட்டும்" என்று இந்திரன் கேட்டுக்கொண்டான். அப்படியே வருணன் கடலிலிருந்து மீன்களைக் கரையில் கொண்டு வந்து கொட்ட, தேவர்கள் நாள்தோறும் மீன்களைச் சுமந்துவந்து சூரனது மடைப்பள்ளியில் போட, இந்திரன் அவர்களுக்கு மேஸ்திரியாக இருந்தான்.

தடக்கடலின் வேலைதனில் வருணர்பிரான் ஒல்லைதனில்
தந்த மீனத்து
அடுக்கல்முழு வதும்நோக்கிக் கடவுளரை விளித்திவற்றை
ஆற்ற லாலே
எடுப்பதுநும் தொழிலென்றே இந்திரன்ருன் விளம்புதலும்
இமையோர் எல்லாம்
நடுக்கமுடன் உளம்பதைப்ப விழிபனிப்பக் கரம்குலைத்து
நாணுக் கொண்டார்.

(தேவரை ஏவல் கொள். 8.)

[வேலைதனில் - கரையில். ஒல்லைதனில் - விரைவில். மீனத்து அடுக்கல் - மீன் குவியலாகிய மலை. கடவுளரை - தேவர்களை. விழி பனிப்ப - கண்ணில் நீர் ததும்ப.]

இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுக்கு உண்டான இழி நிலைக்கு மிகவும் வருந்தினர்கள். 'கெடு மதியுடைய சூரனுடைய செயலால் நாம் துயர்க்கடலில் ஆழும்படி ஆகிவிட்டதே! வரங்கள் எல்லாம் போய்விட்டனவே! இன்னும் என்ன என்ன விதத்தில் தப்பான காரியங்கள் செய்ய வேண்டி வருமோ?' என்று நினைந்து வருந்தினர்கள். 'உலகம் பழிக்கின்ற காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்' என்று அவர்கள் தங்கள் நிலையை எண்ணி எண்ணி உருகினர்கள்.

பானுகோபன் செயல்

அப்போது சூரபன்மனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை தொட்டிலில் தூங்கும்போது சாளரத்தின் வழியே சூரியனின் கதிர் வந்து கொஞ்சம் சுட்டது. உடனே அந்தக் குழந்தை ஒரு தாவுத் தாவிச் சூரியனைப் பற்றிக் கொண்டு வந்து தன்னுடைய தொட்டிலில் ஒரு குஞ்சத்தைப்போலக் கட்டிவிட்டது.

பார்த்திடு கின்ற மைந்தன் பன்மணித்
தொட்டில் நின்றும்
சீர்த்தெழுந் தண்டம் பாய்ந்து
செங்கதிர்ச் செல்வற் பற்றிக்
கார்த்திடு புயங்கம் கவ்வும் படித்தெனக்
கரத்திற் கொண்டு
பேர்த்துமோர் இறையில் வந்தான்;
தவத்தினும் பெரிதொன் றுண்டோ?

(புதல்வரைப்பெறு. 5.)

[அண்டம் - வானத்தில். கார்த்திடு புயங்கம் - கரிய நிறமுடைய ராகு. இறையில் - கணத்தில்.]

தொட்டிலில் படுத்திருக்கின்றபோதே உலக விளக்காகிய சூரியனைப் பிடித்துவந்தால், பெரியவனானால் என்ன கொடுமை பண்ணுவான் ! உலகத்திற்கு ஒளி தருகின்றவனை அடக்குகின்ற பொல்லாதவன் அவன். ஒளி மயமான மேனி உடையவர்கள் தேவர்கள். அவர்கள் போகிற இடங்களில் ஒளி பரவும். இருளுக்கு எதிரி ஒளி. சூரியனைப் பிடித்துக் கொண்டுவந்து தன் தொட்டிலில் கட்டிவிட்டான் சூரனுடைய பிள்ளை. அதனால் அவனுக்குப் பானுகோபன் என்ற பெயர் ஏற்பட்டது. இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை.

சூரியனை விடுதலை செய்து போகப் பிரமன் சூரனிடம் சென்று வேண்டினான். சூரன் பிரமதேவனை, "என் பிள்ளையாண்டானிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று அனுப்பிவிட்டான். பின்னர்ப் பிரமன் சின்னஞ்சிறு குழந்தையாகிய பானுகோபனிடம் வந்து வணங்கி நின்றான். பொல்லாத காலம் வந்தால் எவ்வளவு பெரியவர் ஆனாலும் இழிந்த நிலையை அடைவார்கள். பிரமன் தன்முன்னே பல்லைக் காட்டிக் கொண்டு வந்து நின்றபோது, பானுகோபன் பார்த்து, "உனக்கு என்ன ஐயா வேண்டும்?" என்று கேட்டான். "சூரியனைத் தாங்கள் சிறையிலிருந்தும் விடுவிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான் பிரமன்.

அப்போது பானுகோபன் பேரம் பேச ஆரம்பித்துவிட்டான். "நான் சும்மா விடுவேனா? எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டான்; "பிரம்மாஸ்திரத்தைத் தருகிறாயா? விடுகிறேன்" என்றான். காரியம் ஆகவேண்டுமானால் கழுதையின் காலையும் பிடித்துத்தான் ஆகவேண்டும் என்பார்கள். சூரியன் இல்லாவிட்டால் உலகம் இருளில் ஆழ்ந்துவிடுமே, எங்கும் இருள் மண்டிப் போகுமே என்று அஞ்சி, நான்முகன் பானுகோபன் சொன்னபடி பிரம்மாஸ்திரத்தைக் கொடுத்தான். பானுகோபன் சூரியனை விடுதலை செய்தான். சொன்ன சொற்படி சூரியனைப் பானுகோபன் விடுதலை செய்தவுடன் பிரமனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. வியாபாரத்தில் வியாபாரி சொன்ன பணத்தைக் கொடுத்துவிட்டால், அவன் கொஞ்சம் கொசுறு போடுவான்; அளவுக்கு மேலும் கொஞ்சம் கொடுப்பான். அதுபோலப் பிரமன் மகிழ்ந்து மோகாஸ்திரத்தையும் கொடுத்தான். முதலில் கொடுத்தது வியாபாரம்.

பின்னால் கொடுத்தது பரிசு. பிரமனும் சூரியனும் விடைபெற்றுச் சென்றார்கள். தன் பிள்ளையின் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்து, சூரபன்மன் அப்போதுதான் அவனுக்குப் பானுகோபன் என்ற பெயரை வைத்தான். விளக்கை அணைக்கிறவன் என்று சொல்கிறமாதிரி அந்தப் பெயர் இருக்கிறது.

பிள்ளைகள் பிறத்தல்

அதன் பிறகு அங்கிமாமுகன், இரணியன், வச்சிரவாகு ஆகியவர்களைப் பதுமகோமளை ஈன்றாள். மற்றத் தேவிமார்கள் மூவாயிரம் பேர்களைப் பெற்றார்கள்.

சிங்கமுகனுக்குப் பட்டத்துத் தேவி மூலம் அதிசூரன் என்ற மகன் ஒருவன் பிறந்தான். மற்றத் தேவிமார்கள் நூற்றுக்கணக்கான அசுரர்களைப் பெற்றார்கள். தாரகனுக்கு அசுரேந்திரன் என்கிற மகன் பிறந்தான்.

வில்வலன் வாதாபி வேள்வி செய்தல்

அசமுகி தவம் செய்து கொண்டிருந்த துர்வாசரை அணுகி, அவர் மனம் பேதலிக்கும்படி செய்து, அவர் மூலமாக இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டாள். அவர்களுக்கு வில்வலன், வாதாபி என்று பெயர். தந்தையைப் போன்ற உருவம் உடையவன் வில்வலன். தாயைப் போல ஆட்டுமுக முடையவன் வாதாபி. இந்த இரண்டு பேர்களும் தம்முடைய தந்தையாரை அணுகி, "உம்முடைய தவம் முழுவதையும் எங்களுக்குத் தரவேண்டும்" என்று கேட்டார்கள். அவர் அதைத் தர முடியாது என்றவுடன் தம் தந்தை துர்வாசரையே கொல்வதற்குப் போனார்கள். அதைக் கண்டு கோபித்த துர்வாசர், "உங்களை அகத்திய முனிவர் வந்து அழிப்பார்" என்று சாபமிட்டுப் போய்விட்டார்.

வில்வலன், வாதாபிக்குத் தம் தந்தையாகிய முனிவரிடம் கோபம் வந்தது. 'எல்லா முனிவர்களையும் அழிக்க வேண்டும்; அதற்குரிய பலம் பெற யாகம் செய்யவேண்டும்' என்று நினைந்து, அவர்கள் இருவரும் பிரமதேவனைக் குறித்து யாகம் செய்ய ஆரம்பித்தார்கள். தம் தகப்பனார் சொல்லித் தந்த மந்திரத்தின்படி வில்வலனும், வாதாபி

யும் தங்கள் உடம்புச் சதைகளை வெட்டிப்போட்டு, இரத்தத்தை நெய்யாகச் சொரிந்து வேள்வி செய்தார்கள்.

வில்வலன் தன் தம்பியாகிய வாதாபியையே வெட்டி வெட்டி வேள்வித் தீயில் போட்டுக் கடுமையான தவம் செய்யலானுன். அந்தச் சமயத்தில் பிரமன் அங்கு வந்து, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். "இந்த நெருப்பில் அவிசாக விழுந்து மாண்டுபோன என் தம்பி உயிரோடு வரவேண்டும்" என்று வில்வலன் வரம் கேட்டான். "அப்படியே உயிர் பிழைப்பான்" என்று பிரம தேவன் சொன்னவுடன், வாதாபி அக்கினி குண்டத்தி லிருந்து பழைய வடிவை எடுத்துக்கொண்டு வந்தான். அப்போது வில்வலன் மற்ருெரு வரத்தைக் கேட்டான்; "என்னுடைய தம்பி யாகிய வாதாபியை நான் எத்தனை முறை வெட்டி, உருமாற்றி னுலும், வாதாபி வா என்ருல் பழைய வடிவோடு அவன் வருவதற்கு வரம் தர வேண்டும்" என்ருன். பிரமனும் அந்த வரத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

வில்வலன் வாதாபியர் செயல்

பிறகு அந்த இருவரும் குடகு ராஜ்யத்தில் நான்கு சந்திகள் சேரும் இடத்தில் பெரிய ஆசிரமம் ஒன்றை நிறுவினுர்கள். வில்வலன் பெரிய முனிவர் மாதிரி இருப்பான். வாதாபி ஆடாகச் சென்று மேய்ந்து கொண்டிருப்பான். யாராவது முனிவர் அந்த வழியே வந் தால், "என்னுடைய ஆசிரமத்திற்கு வந்து விருந்து அருந்த வேண்டும்" என்று வில்வலன் உபசரிப்பான். அவர்கள் வந்தால் அர்க்கிய பாத்தியம் கொடுத்து வரவேற்று, தன் தம்பியாகிய ஆட்டை அறுத்துச் சமைத்து அவர்களுக்கு உணவு வழங்குவான். அவர்கள் உண்ட பிறகு, "வாதாபியே வருக" என்பான். வாதாபி முனிவருடைய வயிற்றைக் கீறிக்கொண்டு வெளியே வந்துவிடுவான், பழைய வடிவத்தோடு. முனிவர் இறந்து போவார். இப்படி எத்தனையோ முனிவர்கள் செத்துப் போனுர்கள். முனிவர்களுக்குத் துன்பம் செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டே இந்தக் காரியத்தைச் செய்து வந்தார்கள். இதனுல் அவர்களுக்கு எத்தகைய லாபமும் இல்லை. இப்படிப் பிறருக்கு உண்டாகும் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்வதுதான் அசுரத்தனம்.

அகத்தியர் அருஞ்செயல்கள்

இந்திரன் சீகாழியில் இருத்தல்

சூரபன்மன் ஒன்பது கோடி அசுரர்களை அழைத்து, "நீங்கள் இந்திரலோகம் சென்று, இந்திரனையும், அவன் மனைவியையும் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று அனுப்பினான். அசுரர்கள் வருவதைத் தேவர்கள் இந்திரனுக்கு உணர்த்தினார்கள். 'இனி இந்த இடத்தில் இருந்தால் ஆபத்து வரும்' என்று எண்ணிய இந்திரன் தன் மனைவியுடன் மாறுவேடம் பூண்டு, அங்கிருந்து புறப் பட்டுப் பூவுலகத்திற்கு வந்து சேர்ந்தான். சூரனுடைய அலுவலாளர் கள் இந்திர லோகத்தில் இந்திரனோ, அவன் மனைவியோ இல்லாததைக் கண்டார்கள். அப்போது இந்திரனுடைய மகனாகிய சயந்தன் வைகுண்டத்தில் தன் சிறிய தகப்பனாருடன் தங்கி யிருந் தான். திருமாலுக்கு உபேந்திரன் என்று பெயர்.

பூவுலகத்திற்கு வந்த இந்திரனும், இந்திராணியும் சீகாழியை அடைந்தார்கள். சயந்தன் வைகுண்டத்திலிருந்து அமராவதி வந்தடைந்தான். அங்கே தன் தாய் தந்தை இல்லாததை அறிந்து வருந்தினான். அப்போது நாரத முனிவர் வந்தார். "நல்லவர் களுக்குக் கேடு வருவதும், பொல்லாதவர்களுக்கு நன்மை வருவதும் எப்போதும் இயல்பு அல்ல. உங்களுக்கு நல்ல காலம் வரும்" என்று அந்த முனிவர் சயந்தனைத் தேற்றிவிட்டுப் போனார்.

இந்திரன் அடைந்த சீகாழிதான் ஞானசம்பந்தப் பெருமான் திரு அவதாரம் செய்த தலம். இது பின்னால் நடந்த நிகழ்ச்சி. சீகாழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

என்று அந்தப் பன்னிரண்டு பெயர்களையும் சொல்வார்கள்.

அந்தத் தலத்தில் இந்திரன் இருக்கும்போது வேறு வேலை இல்லாமையால் இறைவனைப் பூஜை செய்துகொண்டு அமைதியாக

இருக்கலாம் என்று எண்ணினன். அதற்காக நந்தவனத்தை அமைத்தான்; பல மலர்ச் செடிகளை வளர்த்து அவற்றிலிருந்த பூக்களைக் கொய்து சிவ பெருமானுக்குப் பூஜை செய்தான்.

ஒருவனுக்குத் துன்பம் உண்டாகும்போதுதான் இறைவனை எண்ணுகின்ற நினைவு வரும். சம்பந்தர் இறைவனை, "நோயுளார் வாயுளான்" என்று சொல்லியிருக்கிறார்.

நம் நாட்டில் வேலையில்லாமல் யாரும் இருக்கக்கூடாது. அப்படி வேறு வேலை இல்லையென்றாலும் இறைவனை நினைத்துக் கொண்டு இருப்பார்கள். அதனால்தான் யாரும் சும்மா இருந்தேன் என்று சொல்கிற வழக்கம் இல்லை; 'சிவனே என்று இருந்தேன்; தெய்வமே என்று இருந்தேன்' என்று சொல்வார்கள். சும்மா இருக்கும்போதும் இறைவனுடைய சிந்தனையோடு இருக்க வேண்டும்.

காலக்ஷேபம் என்று சொல்வார்கள். அதற்குப் பொருள் பலருக்குத் தெரிவதில்லை. காலக்ஷேபம் என்றால் பொழுது போக்குவது என்று நினைக்கிறார்கள். காலத்தைப் போக்குவது காலக்ஷேபம் என்பது. காலத்தைச் சேமிப்பதுதான் காலக்ஷேபம். நாம் வாழ்நாளில் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம். உத்தியோகம் பண்ணுகிறோம். சம்பளத்தைப் பெற்றுப் பெரும் பகுதியைச் செலவழித்துவிடுகிறோம். கொஞ்சத்தைத்தான் மிச்சப்படுத்தி வைக்கிறோம். அதுதான் வருங்காலத்திற்கு நமக்குச் சேமிப்பாக இருக்கிறது. அதை எய்ப்பில் வைப்பு என்று சொல்வார்கள். அதுபோல, நாம் நம் காலத்தைப் பல வகையான செயல்களில் செலவழித்து விடுகிறோம். அப்படிச் செலவழிக்காமல் காலத்தைச் சேமிக்க வேண்டுமானால் இறைவனது வழிபாட்டில் கழிக்க வேண்டும்; அல்லது அவன் புகழைக் கேட்கவேண்டும். அதுதான் சேமிக்கப்படும் காலம்; காலக்ஷேபம். காலக்ஷேபம் என்றால் இறைவனைப் போற்றி அவன் புகழைக் கேட்கும் செயல். அது சேமிப்பு. அதுதான் பிற்காலத்திற்குப் பயன்படும்; நமக்குத் துன்பம் வரும்போது நம்மைக் காப்பாற்றும்.

"காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின்"

என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார்.

நம்முடைய நாட்டுப் பெரியவர்கள் காலத்தை வீணே போக்கிக் கழிக்காமல் இறைவனை வழிபடுவதில் கழித்து வந்தார்கள். அப்போதெல்லாம் இப்போதுபோல அதிக வேலை இருப்பதில்லை. இப்போதோ உபயோகம் இல்லாத பல வேலைகளைப் பண்ணு கிறோம். ஆகையால் நேரம் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக் கிறோம். பழங்காலத்தில் ஓய்வு நிறைய இருக்கும். உழைக்கும் போது அதிகமாக உழைப்பார்கள். ஓய்வு பெறும்போது நன்றாக ஓய்வு எடுப்பார்கள், இப்போது மேல்நாட்டில்தான் அப்படிச் செய்கிறார்கள். இந்த நாட்டில் ஓய்வு எடுப்பது என்பது இறை வனைக் கும்பிடுவதுதான்.

இந்திரன் சீகாழியில் சும்மா இருக்க விரும்பாமல் நந்தனவனம் வைத்தான். அதிலிருந்து மலர்களைப் பறித்து இறைவனுக்கு வழி பாடு செய்தான். இந்திரனைத் தேடி அசுரர்கள் பூவுலகத்திற்கு வந்தார்கள். அவர்கள் வருவதை அறிந்த இந்திரனும், இந்திராணி யும் ஒரு மூங்கிலுக்குள் ஒளிந்துகொண்டார்கள். இந்திரபோகம் எங்கே? மூங்கிலுக்குள் சிறைப்படும் வாழ்வு எங்கே? சிவனை மதி யாமல் தக்கயாகத்தில் கலந்துகொண்ட பாவத்தினால் வந்த வினை அது. சிவாபராதம் செய்தவர்கள் அதன் பயனை அநுபவிப்பார்கள்.

மழை வறத்தல்

அசுரர்கள் சூரனிடம் சென்று, "இந்திரனைப் பூவுலகத்திலும் காணவில்லை; சீகாழியிலும் தேடிப் பார்த்தோம்; கிடைக்கவில்லை" என்றார்கள். இந்திரன் வைத்த நந்தனவனம் இருக்கிறது; இந்திர னைக் காணவில்லை என்பதைக் கேட்டுச் சூரனுக்குக் கோபம் உண்டாயிற்று. மேகங்களுக்கு ஆணையிட்டு மழை பெய்யாமல் தடுத் தான். சூரன் இயற்கையையே மாற்றுகிற ஆணை பெற்றவன். மழை இல்லாதபோது மழையை வருவிப்பது நல்லவர்கள் வேலை. மழை இருக்கும்போது மழையைத் தடுப்பது பொல்லாதவர்கள் வேலை. இயற்கையான ஆற்றல்களை எல்லாம் தடுத்துத் துன்பப் படுத்துவது அசுரத் தன்மை.

சூரபன்மன் மழை பெய்யக் கூடாது என்று தடுத்தான். மழை இல்லாததால் எங்கும் நீர் இல்லை. இந்திரன் வைத்த நந்தனவனம் வாடத் தொடங்கியது. அதைக் கண்டு இந்திரன் உள்ளம் வாடியது.

நீடிய காமர் பூங்கா நெருப்புறு தன்மைத் தென்ன
வாடின நீரின் ருகி; மற்றது மகத்தின் கோமான்
நாடினன்; கவன்று தொன்னுன் நான்முகத் தவனும் மாலும்
தேடரும் பரனை உன்னி இரங்கினன்; செயல்வே றில்லான்.

(இந்திரன் கரந்துறை. 46.)

[காமர் பூங்கா - அழகிய நந்தவனம். மகத்தின் கோமான் - இந்திரன். கவன்று - கவலையுற்று.]

பரமேசுவரனை நினைந்து இந்திரன் மனம் குமுறினுன்; "தேவரீரை வழிபடுவதற்கு மலர்கள் கிடைக்கவில்லையே! மழை இல்லையே!" என்று வருந்தினுன்.

தெய்வத்திற்கு அடுத்தபடியாக இருப்பது மழை. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடி வான் சிறப்பை வைத்திருக்கிருர். மழை இல்லாவிட்டால் என்ன என்ன காரியம் நடக்காது என்று அவர் சொல்கிருர். புல் கூட முளைக்காது என்று சொன்னுர். பிறகு இறைவனுக்குரிய பூஜை முதலியன நடவா என்று சொல்கிருர்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானேர்க்கும் ஈண்டு"

என்பது திருக்குறள். மழை இல்லாவிட்டால் நல்ல காரியங்கள் நடவா என்று சொல்ல வந்தவர் சிறப்பான உற்சவங்களும், நித்திய பூஜைகளும் நடவா என்று சொன்னுர். அவைகள் எல்லாம் மனித வாழ்வுக்கு இன்றியமையாதன என்று அதனுல் தெரிவிக்கிருர். இந்தப் பாட்டிலே சொன்னபடி மழை இல்லாமையினுல் இந்திரன் பூஜை செய்யமுடியாமல் வாளா இருந்தான்; பரமேசுவரனை நினைந்து என்ன செய்வதென்று தெரியாமல் வருந்தினுன்.

அப்போது ஆகாசத்திலிருந்து ஓர் அசரீரி வாக்குக் கேட்டது.

திருந்தலர் புரமூன் றட்ட சேவகற் பரவ லோடும்
பொருந்தலர் பூங்கா வாடிப் போயின எனினும் பொன்ரு
இருந்தலம்இதனில்யாறென் றெய்துமால்; மகவான், இன்னே
வருந்தலை என்ருேர் மாற்றம் வானிடை எழுந்த தன்றே.

(இந்திரன் கரந்துறை. 47.)

[திருந்தலர் - பகைவர். சேவகன் - வீரனுகிய சிவனை. பரவலோடும் - துதித்தவுடன். பொருந்து அலர் - மலர்கள் பொருந்திய. யாறு ஒன்று - ஒரு நதி. மகவான் - இந்திரனே. இன்னே - இப்பொழுது. வருந்தலை - நீ வருந்த வேண்டாம். மாற்றம் - வார்த்தை.]

“ இந்திரா, வருந்தாதே, பின்னால் ஒரு நதி வரும். அப்போது நந்தனவனத்தைப் பாதுகாக்கலாம் ” என்று ஒரு குரல் கூறியது. இந்திரன் எங்கிருந்து நதி வரப்போகிறது என்று கவலையோடு இருந்தான்.

அப்போது நாரதர் அங்கே வந்தார். அவர் பொல்லாதவர் களிடம் சென்று கலகத்தை உண்டாக்குவார் ; நல்லவர்களிடம் சென்று நன்மையை உண்டாக்குவார். இந்திரன் அவரிடம் தன் குறை களை எடுத்துச் சொன்னான்.

விந்திய மலையின் தருக்கு

இந்திரனிடம் நாரதர் வரும்போது விந்திய மலை குறுக்கே இருந்தது. அதைப் பார்த்து நாரதர் சொன்னார்; “ விந்தியமே, மேரு மலை இருக்கிறதே, அதில் தேவர்கள் இருக்கிறார்கள். இறைவனும் எழுந்தருளியிருக்கிறான். பரமேசுவரன் திரிபுர சங்காரத்தின்போது மேரு மலையை வில்லாக வளைத்தான். அதனால் அது மிகவும் கர்வம் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது ” என்று கூறினார்.

கொன்னே இமையோர் குடிகொண் டதனால்
பொன்னேர் கொடுயர்ந் துபொருந் துதலால்
பன்னே மிகள்சூழ் வருபான் மையினால்
தன்நேர் இலையென் றுதருக் கியதே.

(விந்தகிரிப். 7.)

[பொன் ஏர் கொடு - பொன்னின் அழகைக் கொண்டு. நேமிகள் - வட்டமாகிய சூரிய சந்திரர்கள். சூழ்வரு - வலம் செய்யும். நேர் - ஒப்பு.]

இதைக் கேட்ட விந்திய மலை, “ விநாயகர் தம் கொம்பால் மகா பாரதத்தை எழுதும் சமயத்தில் அதன் மேனி எல்லாம் வருந்தும்படி அவர் கீறினாரே, அப்படிக் காயப்படுத்தியும் கூட அதன் செருக்குத் தணியவில்லையா ? ” என்று பரிகாசம் செய்தது. அப்படிச் சொன்ன தோடு மட்டுமன்றி, மேருவைவிட உயரவேண்டுமென்ற நோக்கத் தோடு, அந்த மலை வளர்ந்தது.

என்னா வடவெற் பைஇழித் துரையா,
அந்நா கம்வியக் கும்அகந் தையினை
நன்னா ரதநீக் குவன்நா டுகென
முன்னும் உருநீத் ததுமோய் வரையே.

(விந்தகிரிப். 28.)

[என்னா - என்று. வடவெற்பை - மேரு மலையை. நாகம் - மலை.]

ஒரு மந்திரத்தை உச்சரித்து, மாயவித்தைபோல விந்தம் மெல்ல மெல்ல வளர்ந்தது; பிரம்ம லோகம் வரைக்கும் வளர்ந்து வழியை அடைத்தது. அப்போது நவக்கிரகங்கள் தங்கள் வழியே போக முடியாமல் தடைப்பட்டன.

ஏன் இப்படிப் போவதற்கு வழியில்லாமல் போயிற்று என்று தேவர்கள் எண்ணும்போது, விந்திய மலையினால் வந்த கலக்கம் என்று தெரிந்து கொண்டார்கள். தங்கள் இயல்பான வழியில் போகவேண்டியவர்கள் வழி அடைபட்டதனால் வருந்தி, என்ன செய்யலாம் என்று யோசனை பண்ணினார்கள்.

அகத்தியர் புறப்படல்

எல்லோரும் சேர்ந்து அகத்தியரை எண்ணிப் பிரார்த்தனை பண்ணினார்கள்.

மல்லற் கிரிவின் நெறிமாற்றலின் மற்றெ மக்கும்
செல்லற் கரிதா யது;பாருடைத் தேய முற்றும்
எல்லைப் பொழுது மயக்குற்ற; இவற்றை நீக்க
ஒல்லைக் குறியோய், வரல்வேண்டுமென் றுன்ன லுற்றார்.

(அகத்தியப். 8.)

[மல்லல் கிரி - வளத்தையுடைய விந்திய மலை. எல்லைப் பொழுது மயக்குற்ற - அளவாகிய பொழுதுகள் தெரியாமல் கலங்கின. ஒல்லை - விரைவில். குறியோய் - குறுமுனிவனே.]

அவர்கள் தங்களுடைய உள்ளத்தால் அகத்தியரை நினைந்து தியானம் செய்தவுடன், அதனை அறிந்த அகத்தியர், தேவர்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்று எண்ணிச் சிவபெருமானைத் தியானித்தார். அப்போது சிவபெருமான் முன் தோன்றி என்ன வேண்டுமென்று கேட்டான். "விந்திய மலை மேருவை விட மிக உயர்ந்து தேவர்கள் செல்லும் வழியை அடைத்துவிட்டது. அதன் வலிமையை அடக்கும்படியான வல்லமை எனக்கு வேண்டும்" என்று தமிழ் முனிவராகிய அகத்தியர் வேண்டினார்.

சிவபெருமான், "அப்படியே உனக்கு ஆற்றலைத் தந்தேன். நீ போய் விந்தியத்தை அடக்கி, பொதிய மலையில்போய் இருப்பாயாக" என்று அருள் செய்தான். அன்றியும் வேறு பல வகையான வரங்களை அவருக்குத் தந்ததோடு ஏழு புண்ணிய நதிகளில் ஒன்றான காவிரியை அவரிடம் கொடுத்தான். கங்கை, யமுனை, கோதாவரி,

நர்மதை, சிந்து, சரஸ்வதி, காவேரி என்பன அந்த ஏழு புண்ணிய நதிகள். கங்கைக்குச் சமானமானது காவேரி. ஆழ்வார்கள் காவேரியைக் கங்கையைவிடப் புனிதமானது என்று சொல்வார்கள்.

"கங்கையிற் புனித மாய காவிரி."

(திருமாலை)

காவேரி ஆற்றின் இரு கரையிலும் திருமாலுக்கும், சிவபெருமானுக்கும் பல கோயில்கள் இருக்கின்றன. ஆதலின் அது மிகச் சிறந்த நதி.

காவேரியைச் சிவபெருமான் நினைத்தவுடன் அவள் வந்தாள். "நீ அகத்தியருடன் போ" என்று சிவபெருமான் பணித்தான். காவேரி ஒரு பெண் அல்லவா? "முனிவராகிய ஆடவரோடு நான் எப்படிப் போவேன்?" என்று கேட்டாள். பெண்கள் மற்ற ஆடவர்களுடன் தனியாகப் போவதற்கு நாணுவார்கள். அது அந்தக் காலத்து இயல்பு. "இவனை மற்ற ஆண்கள் மாதிரி நினைக்காதே. பெண், பொன், மண் ஆகிய ஆசைகளை அடக்கினவன் இவன்; இந்திரிய நிக்கிரகம் பண்ணினவன்; மிக உயர்ந்தவன். இவனுடன் போவதால் எந்த விதமான பழியும் உண்டாகாது" என்று இறைவன் சொன்னான்.

"எவ்வளவு காலம் இவனுடன் போவது?" என்று காவேரி கேட்க, இறைவன், "சரியான ஐயந்தான் கேட்கிறாய்" என்று மகிழ்ந்தான்; "என்றைக்கு இவன் போ என்று சொல்வது போலக் கையைக் காட்டுகிறானோ, அப்போது நீ இவனை விட்டுப் பிரிந்து போகலாம்" என்று சிவபெருமான் கூறினான்.

நன்று நன்றிது, நங்கைநின் காரணத்
தென்று நோக்கி இவன்கரம் காட்டுவன்;
அன்று நீங்கி அவனியின் பாலதாய்ச்
சென்று வைகெனச் செப்பினன் எந்தையே.

(அகத்தியப். 24.)

[நின் காரணத்து - உன்னுடைய காரணத்தினால். அவனியின் பாலதாய் - பூமியிலிருக்கும் நதியாய். வைகு - தங்கு.]

அகத்திய முனிவர் காவேரியைத் தம் கமண்டலத்தில் வாங்கிக் கொண்டார்; தென்திசை நோக்கி நடந்தார்.

கிரௌஞ்சத்தைச் சபித்தல்

அகத்தியர் போகும் வழியில் கிரௌஞ்ச மலை இருந்தது. அந்த மலைக்குரிய தாரகன் அகத்தியருக்குத் தொல்லை கொடுக்க

எண்ணினான். உடன் அந்த மலையில் குகைபோல ஒரு வழியைத் தோன்றச் செய்தான். அந்த வழியில் அகத்தியர் புகுந்தார். அந்த வழி கொஞ்ச தூரம் போனவுடன் நின்றது. வேறு ஒரு வழி தோன்றியது. அந்த வழியில் போனார். அதுவும் நின்றுவிட்டது. வெளியில் போகவும் வழி தெரியவில்லை. அப்போது புகையும், மழையும், சூறைக்காற்றும், நெருப்பும் வந்தன. அதைக் கண்டு அகத்தியருக்குக் கோபம் வந்தது. 'யாரோ அசுரன் இந்த மாயத்தைச் செய்கிறான். இவனுடைய பலத்தை நான் இப்போதே அழித்துவிடுகிறேன்' என்று தம் கைத்தண்டத்தினால் பல இடங்களைக் குத்தினார். அப்படிக் குத்திய இடங்களில் துவாரங்கள் உண்டாயின.

நன்றுநன் றவுணன் கொல்லாம் நமக்கிது புரியும் நீரான்;
இன்றிவன் வன்மை நீப்பன் யானென, அவுண வெய்யோன்
குன்றுரு வதனில் குற்றிக் குறுமுனி பாணித் தண்டால்
துன்றிரும் பூழை ஆக்கிச் சூள்இவை புகல லுற்றான்.

(கிரவுஞ்சப். 10.)

[அவுணன் - அசுரன். நீரான் - இயல்புடையவன். குற்றி - குத்தி. பாணித் தண்டால் - கையிலிருந்த தண்டத்தினால். பூழை - துளை. சூள் - சாபம்.]

உடனே கிரௌஞ்ச கிரியைப் பார்த்து ஒரு சாபமிட்டார். "ஏ அசுரனே, நீ மதி படைத்தவன் தான். மாட்சியுள்ள மதி படைத்தவன் அல்ல" என்று தொடங்கினார். 'மாண்மதி பெறாத வெய்யோய்' என்று கூறி மேலே சொன்னார்.

மாண்மதி பெறாத வெய்யோய், மற்றுநின் தொன்மை நீங்கி
நீள்மலை ஆகி ஈண்டே நின்றுதீ அவுணர்க் கெல்லாம்
ஏண்மிகும் இருக்கை யாகி, இருந்தவத் தோர்க்கும் ஏனைச்
சேண்மலி கடவு ளோர்க்கும் தீத்தொழில் இழைத்தி பன்னாள்.

(கிரவுஞ்சப். 11.)

[வெய்யோய் - கொடியவனே. ஏண் - பெருமை. இருக்கை - வாழ்விடம். சேண் - வானுலகம். கடவுளோர் - தேவர்.]

உலகில் அணுக்குண்டு செய்கிற விஞ்ஞானிகள் அறிவாற்றல் பெற்றவர்களே. ஆனால் அவர்கள் அறிவு உலகத்திற்கு நன்மை செய்வதில்லை. அவர்கள் மாண்மதி பெறாதவர்கள். இங்கே கிரௌஞ்சாசுரன் தனக்குரிய சிறப்பான ஆற்றலைப் பிறருக்குத் துன்பம் செய்வதற்குப் பயன் படுத்தினான். ஆகையால் 'மாண்மதி

பெருத வெய்யோய்' என்ருர். அவனிடம் மதி இருக்கிறது. ஆனல் அது மாட்சி பெறவில்லை. அகத்தியர் அவனுக்குச் சாபமிட்டார்.

"இங்கேயே மலையாகத் தங்குவாய். அசுரர்களுக்கு இருப்பிட மாக விளங்குவாய். தேவர்களுக்கும், மக்களுக்கும் மேலும் மேலும் துன்பம் கொடுத்துக்கொண் டிருப்பாய். பிறகு முருகன் வந்து உன்னைச் சங்காரம் செய்வான்" என்று சொன்னர். தண்டிக்காமல் ஏன் அப்படிச் சொன்னர் என்று தோன்றும். நாம் நம்முடைய சுத்த மான ஆடையில் சிறிது அழுக்குப்பட்டாலும் உடனே கழுவுவோம். அழுக்குத் துணியாக இருந்தால், 'மேலும் மேலும் அழுக்குச் சேரட்டும்; ஒரேயடியாகச் சலவைக்குப் போட்டுக் கொள்ளலாம்' என்று நினைப்போம். அது போல் கிரௌஞ்சாசுரனின் பாவம் அதிகமாக அதிகமாகக் கடைசியில் ஆண்டவனது தண்டனை அவனுக்குக் கிடைக்கும். அதனல் இப்படிச் சொன்னர்.

மாற்படு நமது பாணி வலிகெழு தண்டால் உன்றன்
பாற்படு புழைகள் யாவும் பற்பல மாயைக் கெல்லாம்
ஏற்புடை இருக்கை யாக; எம்பிரான் உதவும் செவ்வேள்
வேற்படை தன்னிற் பின்னுள் விளிகுதி விரைவின் என்ருன்.

(கிரவுஞ்சப். 12.)

[மால்படு - பெருமை பெற்ற. பாணி - கையிலுள்ள. புழைகள் - துவாரங்கள். விளிகுதி - அழிவாய்.]

இவ்வாறு கிரௌஞ்சத்திற்குக் சாபம் கொடுத்துவிட்டு, அகத்திய முனிவர் மீண்டும் தெற்கே போனர். உயர்ந்து நின்ற விந்திய மலையைப் பார்த்து, "வழிவிடு" என்று சொன்னர். அதைக் கேட்ட விந்தியமலை, "சந்திரனுக்கும், சூரியனுக்குமே இடம் கொடுக் காமல் நான் உயர்ந்திருக்கிறேன். திருமால் உயர்ந்ததுபோல நான் இப்போது ஓங்கியிருக்கிறேன். மிகவும் குட்டையான உனக்குப் பயந்து வழிவிடவாவது? என் பெருமையை நீ அறியாய் போலும்! வந்த வழியே திரும்பிப் போ" என்று அகங்காரத்தால் சொல்லியது.

"நான் யாருக்கும் பயப்படவில்லை. சின்னஞ்சிறு வடிவத் தோடு இருக்கும் உனக்கா பயப்படுவேன்? அவர்கள் எல்லாம் எங்கெங்கோ சுற்றிப் போகிருர்கள். நீ என்னையா, பெரியவன்? திரும்பிப் போ" என்று அது கூறியது.

அப்போது அகத்திய முனிவர் சிவபெருமானைத் தியானித்தார். வரும்போது சிவபெருமானிடம் வரம் வாங்கி வந்தவர் அவர். சிவபெருமானைத் தியானித்தவுடன் அகத்தியருடைய கை கிடுகிடு என்று வளர்ந்தது. அவர் உருவம் சிறியதாக இருந்தாலும் மனம் பெரியது. வரமும் பெரியது. இறைவனது வரத்தைப் பெற்றவர் அல்லவா அவர்? ஆகவே அவர் கை மிக மிக நீண்டு விந்திய மலையின் முடியைப் பற்றி ஓர் அமுக்கு அமுக்கிற்று. விந்தியமலை கூனிக் குறுகிப் பாதாளத்திற்குப் போய்விட்டது.

அற்புதம் அமரர் கொள்ள ஆற்றவும் குறியோன் விந்த
வெற்பினை உம்பர் தன்னில் மீயுயர் குடங்கை சேர்த்தி
வற்புற ஊன்ற வல்லே மற்றது புவிக்கண் தாழ்ந்து
சொற்பிலம் புகுந்துசேடன் தொன்னிலை அடைந்த தன்றே.

(விந்தம் பிலம்புகு. 7.)

[ஆற்றவும் - மிகவும். உம்பர் - மேலே. மீ உயர் குடங்கை - மேலே உயர்ந்த உள்ளங்கையை. வற்புற - வலிமை பெற; அழுத்தமாக. வல்லே - விரைவில். சேடன் தொல் நிலை - ஆதிசேடன் உள்ள பழைய இடமாகிய பாதாளம்.]

விந்தியமலை பூமிக்குள் அழுந்தியதோடு பாதாளத்திற்கே போய்ச் சேர்ந்துவிட்டது.

அப்போது அகந்தை குன்றி, அவமானமுற்ற விந்தியம், முனிவரை வணங்கி, "எனக்கு எப்போது விடிவு உண்டாகும்?" என்று கேட்க, "நான் மறுபடியும் இந்த வழியே திரும்பும்போது எழு" என்று சொல்லிப் போனார். ஆனால் அகத்தியர் திரும்பி வரவேயில்லை.

வில்வலன் வாதாபி வதை

பிறகு தெற்குநோக்கி அகத்தியர் வந்து கொண்டிருந்தபோது குடகுக்கு வந்தார். அங்கேதான் வில்வலன், வாதாபி ஆசிரமம் இருந்தது. அந்த இடத்தில் இருந்துகொண்டு அவர்கள் செய்து வந்த மாயத்தை முன்பே பார்த்தோம். மற்ற முனிவர்களைப்போலவே அகத்தியரையும் எண்ணி வில்வலன் அவரை விருந்துக்கு அழைத்தான். "தாங்கள் என்னுடைய ஆசிரமத்திற்கு வருவதற்கு நான் என்ன தவம் செய்தேன்!" என்று உபசாரம் செய்தான்.

அடிகள்நீர் போத இந்நாள் அருந்தவம் புரிந்தேன்; இன்று
முடிவுற வந்தீர்; யானும் முனிவர்தம் நிலைமை பெற்றேன்;
கொடியனேன் இருக்கை ஈதால்; குறுகுதிர் புனித மாகும்
படிஎன உரைத்துப் பின்னும் பணிந்தனன் பதங்கள் தம்மை.
(வில்வலன் வாதாவி. 5.)

[அடிகள் - சுவாமிகள். குறுகுதிர் - வாருங்கள்.]

வில்வலன் கூறிய, "அடிகள்நீர் போத இந்நாள் அருந்தவம் புரிந்தேன்; இன்று முடிவுற வந்தீர்" என்ற வார்த்தையில் குறிப்பாகச் சில செய்திகள் கிடைக்கின்றன. "இன்று முடிவுற வந்தீர்" என்று சொல்கிறான். அதற்கு, "என் தவம் பயனைப்பெற வந்தீர்கள்" என்று ஒரு பொருள். அவன் மனத்துக்குள் நினைத்தது, "உமக்கு முடிவாகும்" என்பது. ஆனால் அதற்குள்ளே, "நாங்கள் முடிவுறும்படி நீங்கள் வந்தீர்கள்" என்ற குறிப்பும் தொனிக்கிறது. கொடியனேன் என்று தன் நிலைமையையும் புலப்படுத்துகிறான்.

இவ்வாறு அகத்தியரை உபசாரம் பண்ணி அழைத்துக் கொண்டுபோய், வழக்கம்போல அவருக்கு வாதாபியாகிய ஆட்டை அடித்து இறைச்சி உணவை அளித்தான். அகத்தியர் அதைச் சாப்பிட்டவுடன், வில்வலன் எப்போதும் போல, "வாதாபி!" என்று அழைத்தான். "இன்று முடிவுற வந்தீர்" என்பதற்கு, 'நாங்கள் முடிவுற' என்று பொருள் கொள்ளும்படி ஆகிவிட்டது. வில்வலன் அழைக்கவும் வாதாபி வெளிவரவில்லை. ஆடாக மாறி அகத்தியர் வயிற்றுக்குள்ளேயே இருந்தான்; உள்ளே இருந்து துள்ளினான்.

எண்ணுமலேமுன்பு கடலுண்ட தேபோல
எனதூனும் உண்ட கொடியோன்
உண்ணுடும் உயிர்கொண்டு வலிகொண்டு குறிதான
உதரம் கிழித்து வருவன்
அண்ணுவில் வலனே எனக்கூறி யேதம்பி
அரிபோல் முழங்கி யிடலும்.
மண்ணுடர் புகழ்கும்ப முனிதீயர் செய்திட்ட
மாயம்தெ ரிந்துவெ குள்வான்.
(வில்வலன் வாதாவி. 30.)

[எண்ணுமலே - நான் இன்னது செய்வேன் என்று எண்ணுமல். கொடியோன் - அகத்தியன். வலிகொண்டு - பலத்தைக்கொண்டு. அரிபோல் - சிங்கத்தைப்போல.]

அகத்தியர் உண்மையை உணர்ந்தார்; அசுரர்கள் செய்கின்ற சூழ்ச்சி என்பதைத் தெரிந்துகொண்டார்; உடனே வயிற்றைத் தடவிக் கொண்டு, "வாதாபி ஸ்வாஹா!" என்று சொன்னார்.

வாதாபி அவர் வயிற்றுக்குள் சங்காரம் ஆகிவிட்டான். மேகம் போன்றிருந்த வில்வலன், தம்பி இறந்துவிட்டதை அறிந்து ஒரு தண்டத்தை எடுத்துக்கொண்டு அகத்திய முனிவரிடம் சண்டை யிட வந்தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று சொல் வார்கள். அகத்தியர் ஒரு புல்லை எடுத்து வில்வலன்மேல் ஏவினார். அந்தப் புல் வில்வலனை அடியோடு அழித்துச் சங்காரம் பண்ணி விட்டது.

மெய்க்கொண்ட தொன்னாள் உருக்கொண்டு முனிதன்னை
வெகுளூற்றோர் தண்டமதனைக்
கைக்கொண்டு கொலைஉன்னி வருபோழ்தில் முனிவன்
கரத்தில் தருப்பைஒன்றை
மைக்கண்டர் படையாக நினைகுற்று விடவில்
வலன்றானும் மடிவெய்தலும்
அக்கண்ட கக்கள்வர் உறையுற்ற இடம்நீங்கி
அப்பால் அகன்றனரே.

(வில்வலன் வாதாவி வதைப். 32.)

[தொன்னாள் உருக்கொண்டு - பழைய காலத்தில் உள்ள அசுர உருவை மேற்கொண்டு. வெகுளூற்று - கோபித்து. மைக்கண்டர் படையாக - பாசுபதாஸ்திர மாக. கண்டகக்கள்வர் - முள்ளைப் போன்ற கொடிய வஞ்சகர்கள்.]

இப்படி வில்வலன், வாதாபி இரண்டு பேரையும் அழித்த பிறகு அகத்தியர் மீட்டும் தென்னாடு நோக்கி நடந்தார். வில்வலன், வாதாபியின் பிரம்மகத்தி தம்மைத் தொடர்ந்தது கண்டு அவர் சிவலிங்கத்தை நிறுவிப் பூஜை பண்ணினார். அதனால் பிரம்மகத்தி நீங்கியது.

காவிரி படர்தல்

அந்தக் காலத்தில் நாரதர் இந்திரனிடம் போனார். அவன் அவரிடம் நந்தவனம் வாடிவிட்டதைச் சொன்னான். "காவேரி வந்தால் உன் குறை தீரும். நீ விநாயகப் பெருமானைப் பூஜை செய்" என்று சொல்லிப் போனார். அவனும் விநாயகரைப் பூஜை செய்ய அந்தப் பெருமான் எழுந்தருளி, "உனக்கு என்ன வேண்டும்?". என்று கேட்டார்.

"அகத்திய முனிவர் கமண்டலத்தில் காவேரி இருக்கிறது. அந்தக் காவேரியை இங்கே பாயும்படியாகச் செய்தால் என் நந்தன வனம் தழைக்கும். இங்குப் பூக்கும் பூக்களைக் கொய்து சிவனை வழிபட வேண்டும் என்பது என் அவா" என்றான்.

அன்னவன் தனது மாட்டோர்
அணிகமண் டலத்தி னூடே
பொன்னிஎன் றுரைக்கும் தீர்த்தம்
பொருந்தியே இருந்த தெந்தாய்,
நன்னதி யதனை நீபோய் ஞாலமேல்
கவிழ்த்து விட்டால்
இன்னதோர் வனத்தில் நண்ணும்;
என்குறை தீரும் என்றான்.

(காவிரி நீங்கு. 33.)

[அன்னவன் என்றது அகத்தியரை. பொன்னி - காவிரி.]

கணபதி அங்கிருந்து புறப்பட்டுக் கொங்கு நாட்டில் அகத்தியர் இருந்த இடத்தை அடைந்து, அவர் கீழே வைத்திருந்த கமண்டலத்தில் ஒரு காக்கையைப் போலப் போய் உட்கார்ந்தார். கணபதியே அப்படி வந்தார் என்பதை அறியாமல், ஏதோ காக்கை வந்துவிட்டது என்று அகத்தியர் எண்ணினார். அதை விரட்டக் கையை ஓச்சினார். அப்போது விநாயகர் கமண்டலத்தைக் கீழே சாய்த்துவிட்டு, காவேரியைப் பார்த்து, "அகத்தியர் நீ போ என்று கையைக் காட்டிவிட்டார். இனிமேல் நீ பூமியில் பாய்வாயாக" என்று சொன்னார்.

காகம் கமண்டலத்தைக் கவிழ்த்ததால் காவேரி எங்கும் பரவியது என்ற இந்த வரலாற்றைப் பழைய நூலாகிய மணிமேகலை கூறுகிறது.

"அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"

என்று வருகிறது. கணபதியைப் பற்றிய செய்தி பழைய சங்க நூல்களில் இல்லை. சங்ககால நூல்கள் எல்லாமே கிடைக்கவில்லை. இப்போது கணபதியைப் பற்றிச் சொல்கிற நூல்கள் எல்லாவற்றுக்கும் மிகப் பழையது மணிமேகலை. அதில் கணபதி வந்து கவிழ்த்தார் என்று சொல்லாவிட்டாலும், அகத்தியருடைய கமண்

டலம் கவிழ்ந்ததால் காவேரி பரவியது என்ற கதை, வேறு எந்தத் தெய்வத்தையும் சார்த்திச் சொல்லப்படவில்லை. மணிமேகலையின் காலத்திலேயே விநாயகப்பெருமான் அகத்தியருடைய கமண்டலத்தைக் கவிழ்த்தார் என்கிற வரலாறு நாட்டில் இருந்திருக்கிறது என்று இதனுல் தெரிந்துகொள்ளலாம்.

காவேரி படர்ந்தவுடன் காக்கையாக வந்த விநாயகர் ஒரு சிறு பிள்ளையின் வடிவம் கொண்டார். அகத்தியர் அவரைத் துரத்திக்கொண்டு போனுர். அருகில் போனவுடன் விநாயகர் தம் வடிவத்தைக் காட்டி நின்ருர். உடனே அகத்தியர் தாமே தம் தலையில் குட்டிக்கொண்டு ஒரு வரம் வேண்டினுர். "எம்பெருமானே, இப்போது நான் என்னுடைய தலையில் குட்டிக்கொண்டாற்போல இரு கைகளாலும் யாராவது குட்டிக்கொண்டு உன்னை வணங்கினுல் அவர்கள் குறைகளைத் தீர்த்து அருள் செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அப்படியே விநாயகர் அருளினுர்.

இன்னே தமியேன் எனவே இனிநின்
முன்னே நுதலில் முறையால் இருகை
கொன்னே கொடுதாக் குநர்தம் குறைதீர்த்
தன்னே எனவந் தருள்செய் எனவே.

(காவிரி நீங்கு. 53.)

[இன்னே - இப்போது. தமியேன் எனவே - துணையில்லாத தனியேனுகிய என்னைப்போல. தாக்குநர் - குட்டிக்கொள்பவர். அன்னே என - அன்னையே போல.]

பின்பு ஓடுகின்ற காவேரி ஆற்று நீரைக் கொஞ்சம் கமண்டலத்தில் மொண்டுகொண்டு அங்கிருந்து அகத்தியர் தெற்கே வந்தார்.

அவ்வாறு வரும்போது சீகாழியில் இந்திரன் வைத்திருந்த நந்தன வனத்தைக் கண்டு களித்தார். காவேரி பாய்ந்து அந்த நந்தனவனம் மிகவும் செழித்திருந்தது. சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலையில் இந்த வரலாற்றை விநாயகர் காப்பில் சொல்கிருர்.

"சுரகு லாதிபன் தூமலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி ஆக்குவாம்."

[சுரகுலாதிபன் - இந்திரனுடைய. வார்கடல் பெய்த வயிற்றினேன் - கடலை விழுங்கி வயிற்றி லிட்ட அகத்தியன். மதகரி - கரிமுகக் கடவுள்.]

திருக்குற்றாலம் அடைதல்

அகத்தியர் பிறகு திருக்குற்றாலம் வந்து சேர்ந்தார். அங்கே கோயில்கொண்டிருந்த நாராயண மூர்த்தியைப் பூஜை செய்யும் வைணவர்கள் இருந்தார்கள். அவர்கள் விஷ்ணுவிடத்தில் பக்தி பண்ணினதோடு சிவ விரோதிகளாக இருந்தார்கள். யாராவது விபூதி பூசி வந்தால் கோவிலுக்குள் விடுவதில்லை.

ஒரு சமயத்தில் பற்று வைத்தவர்கள் அதில் ஆழமான அன்பு உடையவர்களாக இருப்பது தவறு அன்று. ஆனால் மற்றவர்களிடம் பகை காட்டக் கூடாது. சைவர்களிலும் கூடச் சிலர் விஷ்ணு விரோதியாக, வைணவர்களை வெறுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உண்மையான சமய வாணர்கள் அப்படி இருக்கமாட்டார்கள். தங்கள் தங்கள் சமயத்தில் பற்றுக் கொண்டு, தங்களுடைய உபாசன தெய்வங்களைப் பக்தியோடு வணங்குவார்கள்; மற்றத் தெய்வங்களை வெறுக்கமாட்டார்கள்; பிற சமயங்களைக் கண்டனம் செய்யமாட்டார்கள்.

திருக்குற்றாலத்தில் இருந்த வைணவர்களோ சைவ விரோதிகளாக இருந்தார்கள். அவர்களுடைய கர்வத்தைப் போக்கவேண்டுமென்று அகத்திய முனிவர் நினைத்தார்.

அப்பதியில் அச்சுதனுக் காலயமொன் றுளதம்மா ;
  அவனி மீதில்
ஒப்பிலதோர் திருமுற்றம் அஃதென்பர் இம்பரெலாம் ;
  உம்பர் தாமும்
செப்புவர் ;ஆ யிடைதன்னில் அந்தணர்கள்
  அளப்பில்லோர் செறிவர் ; அன்னார்
மெய்ப்படுநூல் முறைகண்டும் மோகத்தால் தமதுமதம்
  மேற்கொண் டுள்ளார்.

(திருக்குற்றாலப். 2.)

[திருமுற்றம் - திருமால் கோயில். இம்பர் - இவ்வுலகில் உள்ளார். நூல்முறை கண்டும் - வேதத்திலுள்ள முறையை அறிந்தும்.]

அகத்தியர் அங்கே போகும்போது நெற்றி நிறைய விபூதியும், கழுத்தில் ருத்திராட்ச கண்டிகையும் அணிந்து சென்றார். அங்கிருந்த வைணவர்கள் அவரைக் கண்டவுன் புலியைக் கண்ட மான்போல அஞ்சினார்கள்.

ஒல்லாத கண்டிகையும் நீறும்அணிந் தனை; அதனால்
 உலகில் தேவர்
எல்லாரும் அறியஐயம் ஏற்றேனுக் கடியவன்நீ;
 ஈண்டு செல்லச்
செல்லாது; கைத்தலத்தில் ஒருகோலும் கொண்டனையால்;
 சிறியை போலும்!
நில்லாய், எம் பெருமான்றன் மாநகரம் அணுகாது
 நீங்கு கென்றார்.

(திருக்குற்றாலப். 5.)

[ஒல்லாத - ஆகாத. கண்டிகை - ருத்திராட்சம். ஐயம் ஏற்றேனுக்கு - பிச்சை வாங்கும் சிவனுக்கு. செல்லச்செல்லாது - வரக்கூடாது. மாநகரம் - பெரிய கோயில்.]

"ஏய்! நாங்கள் சகிக்க முடியாத ருத்திராட்சத்தையும், திருநீற்றையும் பூண்டுகொண்டா வந்தாய்? தேவர்கள் எல்லாம் கண்டு சிரிக்கும்படி யாகப் பிச்சை வாங்கித் திரிகிற ஒருவனுக்கு அடிமை நீ. இங்கே நீ வரக்கூடாது. உன் கையில் ஒற்றைத் தண்டு வேறு கொண்டிருக் கிறாய். இங்கிருந்து நீ போய்விடு" என்று அகத்தியரைப் பார்த்து வெருட்டினார்கள். அகத்தியர் அணிந்திருந்த மங்கலமாகிய சின் னங்களைக் கண்டு அவர்கள் வெறுத்தார்கள்.

திருநீறும் உருத்திராட்சமும்

திருநீற்றைக் கண்டு வெறுக்கின்ற அவர்களை என்ன என்று சொல்வது? இந்த உலகத்தில் கடைசியாக நிற்பது நீறு ஒன்றுதான். எல்லாவற்றையும் எரித்தால் கரியாகும். அதையும் எரித்தால் நீறாகி விடும். நீற்றை எத்தனை முறை எரித்தாலும் அது மாறாது. உலகத்தி லுள்ள எல்லாம் அழிந்தாலும் தான் அழியாமல் இருக்கும் சிவபெரு மானைப் போல இருப்பது நீறு. திருநீற்றுக்குத் தனியே உபநிடதம் இருக்கிறது.

ருத்திராட்சம் இறைவனுடைய கண்களிலிருந்து தோன்றியது. ஆகையால் ருத்திராட்சம் என்ற பெயர் பெற்றது. சிவபெருமான் உயிர்க்கூட்டங்கள் படுகிற துன்பத்தைக் கண்டு கண்ணீர் வடித் தான். அந்தக் கண்ணீர்த்துளிகளே ருத்திராட்சம் ஆயின. ருத்திராட் சத்திற்கு ஒரு பெருமை உண்டு என்று காமகோடி பீடாதிபதிகள் சொல்வார்கள். மனிதன் தாமரை மணியையும், ஸ்படிக மணியையும் அணிந்துகொள்கிறான். அவற்றுக்கெல்லாம் தனியாக ஓட்டை போட்டு

நூலையோ, கம்பியையோ கோத்து அணிய வேண்டும். இயற்கையாக நடுவில் துவாரம் உள்ளது ருத்திராட்சந்தான். நூலையோ, கம்பியையோ கோத்து அதை அணிய வேண்டுமென்றே ஆண்டவன் அதை இயற்கையாகவே துவார முள்ளதாகப் படைத்திருக்கிறான் என்று அவர்கள் சொல்வார்கள்.

சங்க காலத்தில் இவை எல்லாம் இல்லையென்று சிலர் சொல்கிறார்கள். கிடைத்துள்ள பாடல்களில் அந்தச் செய்திகள் இல்லாமல் இருக்கலாம். பாட்டை எழுதிய புலவர்களின் பெயர்கள் இருக்கின்றன. அந்தப் பெயர்களின் மூலமாகவும் சில செய்திகள் கிடைக்கின்றன.

குமரன் என்ற சொல் முருகனுக்கு உரியது. **திருமுருகாற்றுப் படை** முதலிய நூல்களில் அந்தப் பெயர் வருவதில்லை. ஆனால் ஒரு புலவரின் பெயர் மதுரைக் குமரன் என்று இருக்கிறது. ஆகவே குமரன் என்று சொல்கிற வழக்குச் சங்ககாலத்திலேயே இருந்தது என்று அறியலாம். வெண்பூதியார் என்று ஒரு புலவர் இருந்தார். வெண்பூதி என்பது திருநீற்றைக் குறிக்கிறது திருநீற்றைத் தெரிந்துகொள்ளாமல் அந்தப் பெயர் வரக் காரணம் இல்லை. உருத்திரங்கண்ணனார் என்று ஒரு புலவருக்குப் பெயர். பலர் உருத்திரனுடைய பிள்ளையாகிய கண்ணனார் என்று அதற்குப் பொருள் கொள்வர். உருத்திரனுடைய கண்ணை அணிந்தவர், ருத்திராட்சத்தை அணிந்தவர் என்று அதற்குப் பொருள் சொல்லலாம். திருநீறு, உருத்திராட்சம் ஆகியவை சங்ககாலத்திலேயே இருந்தன என்பதை வெண்பூதியார், உருத்திரங்கண்ணனார் என்ற நாமங்கள் தெளிவாக்குகின்றன.

ருத்திராட்சத்தை உரைத்தால் பொன்போலத் தோன்றும். அது கபத்தைப் போக்கும் தன்மையுடையது. கழுத்தில் கட்டிக் கொண்டால் கபத்தால் வருகிற துன்பம் போய்விடும்.

நம்முடைய நாட்டில் எத்தனையோ அருமையான பழக்கங்களை வைத்திருக்கிறார்கள். சிவபெருமான் தீயைப் போன்ற வடிவினன். அவனுக்குக் குளிர்ச்சியான வில்வத்தால் அருச்சனை செய்கிறார்கள். தீக்கு மாற்றுக் குளிர்ச்சி. நாராயணமூர்த்தி எப்போதும் பாற்கடலில் இருக்கிறார். அவர் குளிர்ச்சிமயமானவர். அந்தப்

பெருமானுக்குச் சூடான துளசியினால் அருச்சனை செய்கிறார்கள். துளசி சூடானது; மலேரியா ஜுரத்தைப் போக்குவது. நாராயணர் என்பதற்குத் தண்ணீரோடு தொடர்புடையவர் என்று ஒரு பொருள் கொள்வார்கள். தக்கயாகப் பரணியில் சிவபெருமானை, "அனலன்" என்றும், திருமாலை, "புனலன்" என்றும் சொல்லி யிருக்கிறார் ஒட்டக்கூத்தர். அனலனுக்குக் குளிர்ச்சியான வில்வமும், புனலனுக்குச் சூடான துளசியும் அருச்சனைக்குரியவை யாக உள்ளன.

அகத்தியர் திருமாலைச் சிவபிரானாக மாற்றுதல்

அகத்தியர் அணிந்திருந்த மங்கல வடிவமாகிய திருநீற்றையும், ருத்திராட்சத்தையும் கண்டு வெறுத்தார்கள், திருக்குற்றாலத்தில் இருந்த திருமால் அடியார்கள்; "கொட்டையையும், சாம்பலையும் அணிந்து வந்தாயே!" என்று பரிகாசம் பண்ணினார்கள். அகத்தியர் உடனே, "நான் போய்வருகிறேன்" என்று சொல்லி வெளியே வந்து விட்டார். போனவர் திரும்பப் பன்னிரண்டு திருமண் அணிந்துகொண்டு திருமால் அடியாரைப்போல வந்தார். முன்னே போனவரே திரும்ப வந்திருக்கிறார் என்பதை அங்கிருந்தவர்கள் அறிந்துகொள்ளாமல் மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார்கள். அவருக்கு எதிரே சென்று உபசாரம் செய்து, காலில் வீழ்ந்து பணிந்தார்கள். "எல்லாம் நாராயணனுக்கே ஆகட்டும்" என்று அகத்தியர் ஆசி கூறினார்.

ஆளுடைய நாயகன்பால் அன்புடையான் மாயவன்றன்
அடிய னேபோல்
கோளுடைய மாயத்தால் மேனிகொண்டு மீண்டுமங்கண்
குறுக லோடும்
நீளிடையில் வரக்கண்ட வயிணவர்கள் எதிர்சென்று
நெடிது போற்றித்
தாளிடையின் வீழ்ந்திடலும் நாரணனுக் காகஎனச்
சாற்றி நின்றான்.

[ஆளுடைய நாயகன் - சிவபெருமான். கோளுடைய மாயத்தால் - மேற்கொள்ளுதலையுடைய மாயத்தினால். அங்கண் - அங்கே. குறுகலோடும் - அடைந்தவுடன். நீளிடையில் - நெடுந்தூரத்தில்.]

திருமாலை வணங்குவது தவறு அன்று. அங்கிருந்த வைணவர்கள் திருமாலை வணங்குவதைவிடச் சிவனையும், சைவர்களையும் வெறுப்பதையே தம் வேலையாகக் கொண்டிருந்தார்கள்.

ஞானசம்பந்தப் பெருமான் சமணர்களோடு, அவர்கள் சமணர்களாக இருந்தார்கள் என்பதற்காக வாதாடவில்லை. அவர்கள் சைவர்களுக்குத் தீங்கு செய்தார்கள்; சிவத்துவேஷமான காரியங்களைச் செய்தார்கள். அதற்காகவே அவர்களோடு வாதிட்டார். ஒரு சமயத்துறையில் புகுந்தவன் முதலில் மனிதனாக இருக்க வேண்டும்; மனிதப் பண்பாட்டோடு இருக்க வேண்டும். மனிதப்பண்பு இல்லாதவர்கள் எந்தக் கடவுளை வணங்கினாலும் அவர்களுக்கு அருள் கிடைக்காது.

ஆகவே, திருமாலை வணங்கி இங்கே இருந்தவர்கள் சிவனை வெறுத்தார்கள்; சிவன் அடியார்களை வெறுத்தார்கள். ஆகையால் அவர்களுக்குப் புத்தி புகட்டவேண்டுமென்று அகத்தியர் வந்தார்.

அகத்தியர் கோவிலுக்குள் போய் அங்கே திருமாலாக இருந்த மூர்த்தியை வழிபடத் தொடங்கினார். சந்திரசேகரனை மனத்தில் கொண்டு திருமாலினுடைய வடிவத்தின்மேலே கையை நீட்டி, "குறுகு, குறுகு" என்று சொல்லி அந்த மூர்த்தியைக் குழைவித்துச் சிவலிங்க வடிவம் கொள்ளும்படி செய்துவிட்டார்.

அறுகுமதி நதிபுனையும் செஞ்சடைஎம் பெருமானை
அகத்துட் கொண்டு
சிறுகும்உரு வுடையமுனி நாரணனார் திருமுடிமேல்
செங்கை ஓச்சிக்
குறுகுகுறு கெனஇருத்தி ஒள்ளரக்கிற் புனைபாவைக்
கோல மீது
மறுகுதழல் உற்றென்னக் குழைவித்தோர் சிவலிங்க
வடிவம் செய்தான்.

(திருக்குற்றாலப். 15.)

[ஓச்சி - நீட்டி. பாவைக் கோலம் - பொம்மை வடிவம்.]

இதனால், 'குறுகு குறுகு குற்றாலம்' என்ற பழமொழி வழங்குகிறது. அரக்கினால் ஆகிய பொம்மையின்மேல் நெருப்பை வைத்தால் அது எப்படி உருகி மொத்தையாக ஆகுமோ அப்படித் திருமாலின் வடிவம் குழைந்து சிவலிங்கவடிவம் ஆகிவிட்டதாம். உருவம் ஆக நின்ற திருமால் இப்போது அருவுருவம் ஆகிய சிவலிங்கம் ஆகிவிட்டார்.

அசுரர்களுடைய அவதாரங்களை எல்லாம் சொல்லிவந்த கச்சியப்பர் அகத்திய முனிவருடைய வரலாற்றை இப்படி விரிவாகச் சொல்கிறார். காணத் தகாத பொருளைக் கண்டால் அதற்குப் பரிகார மாகக் கொஞ்சம் அழகான பொருள்களைக் காணுவது வழக்கம். அதுபோல, பாதகர்களாகிய அசுரர் கதைகளைச் சொல்லவந்த கச்சியப்பர் இடையே இப்படிச் சொல்கிறார். கம்பராமாயணத்தில் உத்தரகாண்டம் இல்லை. இராமாயணத்தில் ஏழாவது காண்டம் உத்தரகாண்டம். அது அரக்கர்களின் பிறப்பைச் சொல்வது. கம்பர் அதைப் பாடவில்லை. இராமனுடைய அவதாரத்தைப் பாடிய வாயால் அரக்கர்களின் பிறப்பை ஏன் பாடவேண்டுமென்று பாட வில்லையாம். இங்கே கச்சியப்பருக்கு அரக்கர்களின் வரலாற்றைப் பாடவேண்டிய அவசியம் நேர்ந்தது. அப்போதுதான் முருகப் பெருமானின் உயர்ந்த வீரத்தின் சிறப்புத் தோன்றும். அப்படிப் பாடியவர் இடையில் ஆசுவாசப்படுத்திக்கொள்ள, அகத்தியர் கதையை விரிவாக அமைத்தார்.

"இந்திரன் சிவபூஜை செய்தான். அந்தப் பூஜைக்கு வேண்டிய பூக்களைத் தந்த நந்தவனம் மழை இல்லாமல் வாடியது. சூரபன்மாவினுடைய அதிகாரத்தால் மழை இல்லாமல் போயிற்று. மறுபடியும் காவேரி வந்ததனால் நந்தவனம் தழைத்தது" என்று சொல்ல வந்தவர், அகத்தியர் காவிரியை உண்டாக்கினார் என்று சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் அவருடைய அருஞ்செயல்களை விரிவாகச் சொன்னார். மகாபாவிகளின் செயல்களைச் சொல்லும் போது நடுவில் புண்ணிய மூர்த்தியின் கதைகளும் இருக்கட்டும் என்று சொன்னதுபோலச் சொன்னார்.

திருமால் சிவபெருமானாக மாறினது கண்டு வைணவர்கள் எதிர்த்தார்கள். அப்போது அகத்தியர் கோபத்தில் எழுந்து பார்த்தார். அவர்கள் ஓடிவிட்டார்கள். அன்று முதல் அது சிவத்தலம் ஆகிவிட்டது. "இங்குள்ள சிவலிங்கப்பெருமானை அருச் சித்து வழிபடுங்கள்" என்று அன்பர்களிடம் மொழிந்தார். அங்கே இருந்த சிவபெருமானிடம் அகத்தியர் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் தெற்கே சென்று பொதிய மலையை அடைந்து அங்கே சிவபெருமானைத் தியானித்து, தவம் புரிந்துகொண்டு இன்பமாக அமர்ந்திருந்தார்.

அசமுகியின் சோகமும் சூரன் செய்த தண்டமும்

இந்திரன் மகிழ்ச்சி

காவிரியைக் கண்டவுடன் இந்திரன் மகிழ்ச்சி மிகுதியினுல் ஆடினுன்; சிரித்தான்; எம்பெருமானுடைய அருச்சனை நன்கு நிறைவேறும் என்று பாடினுன்; இறைவன் திருவருளை நினைந்து நினைந்து உருகினுன். அவனது நந்தவனம் தழைத்ததுபோல உள்ளம் தழைத்தது. சிவபெருமானை மிக விரிவாகப் பூஜை பண்ணினுன்.

அப்போது சில தேவர்கள் மிகவும் வருத்தத்துடன் சீகாழியை வந்து அடைந்தார்கள் ; இந்திரனிடம் தங்கள் நிலைமையைப் பற்றிச் சொல்லிப் புலம்பினுர்கள். அப்போது இந்திரன், "சூரபன்மன் ஒரு தீமையை எண்ணி இருக்கிருன்" என்ருன். "என்ன தீமை?" என்று அவர்கள் கேட்டபோது, "என்னுடைய மனைவியாகிய இந்திராணியைப் பற்றுதற்கும், என்னைக் கொடுஞ்சிறையில் வைப்பதற்கும் அந்தத் தீயவன் எண்ணினுன். அதனுல் இங்கே வந்து நானும் அவளும் மறைந்திருந்தோம்" என்று கூறினுன்.

என்னேஅத் தீமை எனவே வினவுங்கால்
பொன்னே அனைய புலோமசையைப் பற்றுதற்கும்
கொன்னே எனையும் கொடுஞ்சிறையில் வைப்பதற்கும்
முன்னே நினைந்தான், முறையில்லாத் தீயவனே.

(தேவர் புலம்புறு. 14.)

[பொன் - திருமகள். புலோமசை - இந்திராணி. கொன்னே - வீணே. தீயவன் - சூரன்.]

தேவர்கள் அந்தப் பெரிய துன்பத்தைத் தீர்ப்பதற்கு ஏதேனும் வழிசெய்ய வேண்டுமென்று சொல்ல, இந்திரன் சிவபெருமானிடம் சென்று முறையிட வேண்டுமென்று கூறினுன்.

இந்திராணி வருந்துதல்

இந்திராணியிடம் போய், "நான் தேவர்களுடன் உமை பாகனிடம் நம் குறைகளைத் தெரிவிப்பதற்காகப் போக இருக்கிறேன் ; அதைச் சொல்லிப் போக வந்தேன்" என்ருன்.

ஆகின்ற துன்பத் தழலால் பதைபதைத்து
வேகின்ற சிந்தை வியன்அமரர் தம்முடன்யான்
பாகொன்று திஞ்சொல் உமைபாகன் பனிவரைக்குப்
போகின்றேன்; ஈது புகலுதற்கு வந்தனனே.

(அயிராணி சோகப். 4.)

[துன்பத்து அழலால் - துன்பமென்னும் நெருப்பினுல். பாகு ஒன்று தீஞ்சொல் - வெல்லப் பாகைப் போன்ற இனிய சொல்லையுடைய.]

அவன் தன்னைப் பிரிந்து செல்வதைச் சொல்ல வந்தான் என்பதை உணர்ந்து இந்திராணி மிகவும் வருந்தினுள். "இந்திர லோகத்தில் உங்களோடு வாழ்ந்திருந்தாலும், வேறு எவ்விடத்தில் வாழ்ந்திருந்தாலும் நீங்கள் உடன் இருப்பதால் எனக்கு எந்த வித மான துன்பமும் உண்டாகவில்லை. இங்கே பூவுலகத்தில் காட்டுக்கு நடுவில் இருந்தாலும் உங்கள் திருவருள் பலத்தினுல் மகிழ்ச்சியோடு இருந்தேன். இப்போது என்னைப் பிரிந்து சென்ருல் எனக்கு யார் துணையாக இருப்பார்கள்? எனக்கு ஏதேனும் தீங்கு உண்டானுல் அதிலிருந்து விடுபடுவதற்கு வழி உண்டா? பொல்லாத வர்களாகிய அசுரர்கள் என்னை இங்கே வந்து கண்டால் என்ன செய்வார்களோ என்று அஞ்சுகிறேன். என்னைக் கொண்டுபோய் ஏதாவது செய்துவிட்டால் என்னுல் என்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதே! ஏதேனும் பழி வந்தால் அது உங்களைத்தானே சாரும்?" என்று வருந்தினுள்.

பொன்னுடு விட்டுப் புவியின் வனத்திருந்தும்
உன்னுல் அருள்கொண்டு உவப்புற்று மேவினனுல்;
என்ஆருயிரே, எனைநீ பிரிவாயேல்
பின்ஆர் துணை? யான் பிழைக்கும் நெறிஉண்டோ?

பல்லாறு ஒழுகிப் பவஞ்செய் அவுணரெனும்
ஒல்லார் எனைக்காணின் ஓடிவந்து பற்றினர்போய்
அல்லா தனபுரிவ ராயின் அனையபழி
எல்லாம்உன் பால்அன்றி யார்கண்ணே சென்றிடுமே?

(அயிராணி சோகப். 9, 15.)

[பொன்னுடு - தேவலோகம். பல்லாறு ஒழுகி - பல வழியில் நடந்து. பவம் செய் - பாவத்தைச் செய்கின்ற. ஒல்லார் - பகைவர்.]

எவ்வளவு சிறந்த வளவாழ்வு உடையவர்களாக இருந்தாலும் நல்ல மகளிர் தம்முடைய நாயகர்களை விட்டு வாழமாட்டார்கள்;

மிகவும் கொடுமையுடைய காடாக இருந்தாலும், தங்கள் நாயகர்கள் வாழ்கின்ற இடத்திலேயே வாழவேண்டுமென்று எண்ணுவார்கள்.

சீதாபிராட்டியிடம் இராமன், காட்டுக்குச் செல்லும்போது விடைபெற்றுக்கொள்ள வந்தான். "நான் போய் வருகிறேன். காடு மிகவும் கொடியது. அங்கே உன்னால் வர முடியாது. நீ வருந்துவாய்" என்று சொன்னதைக் கேட்டு,

"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு"

என்றாள் பிராட்டி.

அதைப்போல இந்திராணி, "உங்களைப் பிரிந்து எப்படி வாழ்வேன்!" என்று வருந்தினாள். "தனியாக இருக்கும் என்னைப் பற்றி அசுரர்கள் அல்லாதன புரிவரானால் நான் என் செய்வேன்!" என்று துடித்தாள்.

நல்லவர்கள் பேச்சும் அல்லாதவர்கள் பேச்சும்

"அசுரர்கள் என்னைக் கெடுத்துவிட்டால் என்னால் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லவில்லை. 'அல்லாதன புரிவ ரானால்' என்றாள். நல்லவர்கள் பொல்லாத வார்த்தைகளை வாயினால் சொல்ல மாட்டார்கள்.

"ஒழுக்க முடையவர்க் கொல்லாவே, தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

என்பது **குறள்.** நல்லவர்கள் பொல்லாத வார்த்தையைக் கூட மாற்றி நல்லதாகச் சொல்வார்கள். 'தாலி அறுந்தது' என்று சொல்லாமல் 'தாலி பெருகிற்று' என்று சொல்வது வழக்கம். பொல்லாதவர்கள் நல்லவற்றைக் கூட இன்னாத வார்த்தைகளாகச் சொல்வார்கள். குழந்தையை, "சீ நாயே" என்று கொஞ்சு வார்கள். நல்ல பாட்டைக் கேட்கும்போது, "கொல்கிறான்" என்று சொல்வார்கள். நல்ல வார்த்தைகளைச் சொல்லிப் பழகாத வர்களுக்கு அப்படித்தான் வரும். தாய் தன் குழந்தையைக் கோபத்தினால் திட்டுகிறாள். அப்படித் திட்டும்போதும், "நாச மற்றுப்போக!" என்று திட்டுவாள். கோபத்தில் திட்டும்போதும் அவள் சொல்கிற வார்த்தையின் பொருள், "உனக்கு நாசம் இல்லாமல் இருப்பதாக" என்பதுதான்,

பெரிய புராணத்தில் மெய்ப்பொருள் நாயனர் வரலாறு வருகிறது. திருக்கோவிலூரில் இருந்து அரசாண்ட மன்னர் மெய்ப் பொருள் நாயனர். முத்திநாதன் அவருடைய விரோதி. அவன் மெய்ப்பொருள் நாயனரை வெல்ல வேண்டுமென்று எண்ணினன். பல முறை படையெடுத்து வந்தான். அவனல் அவரை வெல்ல முடிய வில்லை. அவன் முத்திநாதன் என்ற பெயரை உடையவனக இருந் தாலும் அந்தப் பெயருக்கு ஏற்றபடி இருக்கவில்லை; புத்திநாதனகக் கூட இருக்கவில்லை.

மெய்ப்பொருள் நாயனர் எப்போதும் அடியார்களுடைய தோற்றத்தைக் கண்டு வணங்குவார்; சிவபெருமானுடைய அடியார் களின் வேடம் சிவவேடமே என்று மதிப்பார். திருநீறும், கண்டிகை யும் கண்டால் உடனே வணங்கும் தன்மை உடையவர் அவர்.

வேடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கலாம். வேடம் என்பது ஓர் அடையாளம். இந்தக் காலத்தில் அடையாளம் இல்லாமல் எதுவும் இல்லை. ஒவ்வொரு வகையான உத்தியோகத் திற்கும் தனித்தனி அடையாளங்கள் இருக்கின்றன. அடையாளங் களைப் போலியாக யாராவது மேற்கொண்டால், அதனல் போலியாக இருப்பவனுடைய குற்றம் தெரியுமே தவிர, அடையாளத்திற்கு ஒரு மாசும் இல்லை. சேரமான்பெருமாள் நாயனர், உடம்பெல்லாம் உவர் மண்ணல் வெளுத்திருக்கும் ஒரு வண்ணனைக் கண்டார். அதைத் திருநீறு என்று எண்ணி அவர் அவனை வணங்கியவுடனே, அந்த வண்ணன் நடுங்கிப் போய், "அடியேன் வண்ணன்" என்ருன். "அடியேன் அடிச்சேரன்" என்று சொல்லி அவர் வணங்கினராம். நீறு பூசிய உடம்பைக் கண்டாலே வணங்கும் உள்ளம் அந்தப் பெரிய அடியார்களுக்கு இருந்தது.

முத்திநாதன், மெய்ப்பொருள் நாயனரைப் போர் செய்து வெல்ல முடியாது என்பதைத் தெரிந்துகொண்டான். வஞ்சனையாக வெல்ல எண்ணினன். உடனே உடம்பெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு சிவனடியாரைப்போல அவரது அரண்மனைக்குள் நுழைந் தான். மெய்ப்பொருள் நாயனர் இருக்கிற அரண்மனைக்குக் காவலாகத் தத்தன் என்பவன் இருந்தான். மெய்ப்பொருள் நாயனர் அப்போது தம் மனைவியோடு இளைப்பாறிக் கொண்டிருந்தார். ஆகவே தத்தன்,

முத்திநாதனை, "இப்போது சந்தர்ப்பம் சரியன்று; சிறிது நிற்க" என்று சொன்னான். அடியாரைத் தடுக்க வேண்டுமென்பது அவன் நோக்கம் அல்ல. உள்ளே சென்றால் அடியாருக்கு மரியாதை செய்கின்ற நிலைமையில் மன்னர் இருக்கமாட்டாரே என்று அவன் நினைத்தான். தான் சொன்னதையும் கேட்காமல், அடியார் வேடத்தில் உள்ளே நுழைந்த முத்திநாதனின் செயலைக் கண்டு தத்தனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. எத்தனையோ அடியார்களை அவன் பார்த்திருக்கிறான். அடியார்களிடத்தில் அமைந்திருக்கும் பண்பாட்டை அவன் கண்டிருக்கிறான். ஆகவே இந்த ஆளிடம் ஏதோ கோளாறு இருக்கிறது என்று தெரிந்து கொண்டான்.

உள்ளே நுழைந்த சிவனடியாரைக் கண்டு மெய்ப்பொருள் நாயனார் வணங்கினார். இங்கே எழுந்தருளப் பெற்றது என்ன காரணம் என்று கேட்டார். அப்போது அவன்,

"உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப என்றான்."

அப்படிச் சொல்லும்போதே அவனுடைய வாக்கில் அவன் உள்ளம் வெளிப்பட்டது. சிவனடியார் வேடத்தில் வந்தாலும் நான் அடியான் அல்ல என்ற எண்ணம் உள்ளே இருந்தது. ஆகவே, 'நம் நாயகனார்' என்று சொல்லாமல் 'உங்கள் நாயகனார்' என்று சொல்கிறான். இப்படிப் பொல்லாதவர்கள் உள்ளத்திலுள்ள மாசு, என்னதான் வேடம் போட்டாலும் வெளிவந்துவிடும்.

மெய்ப்பொருள் நாயனார் அந்த ஆகமத்தைக் கேட்க வணங்கினார். அப்போது தன் கையில் ஏட்டுச் சுவடிபோன்ற கட்டினூடே மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திவிட்டான். அங்கே சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனாரை அவன் குத்திவிட்டான் என்று சொல்லவில்லை.

"நான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய"

என்று சொல்கிறார். முன்னாலே அவன் என்ன நினைத்தான் என்பதை அந்தப் புராணத்தில் அவர் சொல்லவில்லை. நல்லதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்; பொல்லாததை நாம் ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குத் தனிப் பயிற்சி தேவையில்லை. அதைத் தம் வாயினால் சொல்லாமல் சொல்லிவிட்டார் சேக்கிழார்.

அப்படியே ஏனதிநாயனர் புராணத்திலும்,

"முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்"

என்று சொல்கிறர். சொல்லத் தகாதவைகளைச் சொல்வதற்குப் பெரியவர்கள் வாய் கூசும்; சொல்ல மாட்டார்கள்.

இராமாயணத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருகிறது. தசரதன் கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுத்தான். இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும், பரதன் நாடாள வேண்டும் என்பன கைகேயி கேட்ட இரண்டு வரங்கள். பரதன் ஆள வேண்டும் என்பதற்குத் தசரதன் தடை சொல்லவில்லை. ஆனல் இராமனைக் காட்டுக்கு அனுப்ப அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. கைகேயியிடம் எத்தனையோ கெஞ்சினன். கடைசியில், "அரசையே நான் தந்து விடுகிறேன். ஆனல் இராமனை மாத்திரம் காட்டுக்கு அனுப்பும்படி சொல்லாதே" என்று இரந்தான்.

"மண்ணே கொள் நீ; மற்றதை ஒன்றும் மறஎன்றன்"

"நீ இந்த இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்" என்றன். பிறகு, "இராமனைக் காட்டுக்கு அனுப்பச் சொல்லாதே" என்று சொல்ல வில்லை; "மற்றதை ஒன்றும் மற" என்றன். இராமனையும் காட்டையும் தனது வார்த்தையில் இணைத்துச் சொல்லக்கூட அவன் அஞ்சினன். பெரியவர்கள் இயல்பு இத்தகையது.

ஆகவே கற்புடைய மங்கையாகிய இந்திராணி அரக்கர்கள் தன்னைக் கெடுத்துவிட்டால் என்ன செய்வது என்று சொல்லவில்லை.

அல்லாதன புரிவரானல்

என்கிறள்.

இந்திரன் தேற்றுதல்

இந்திராணியின் வார்த்தையைக் கேட்ட இந்திரன், "இறைவனு டைய திருவருள் இருக்கும்போது நீ கவலைப்படுவானேன்? சிவபெருமானும் திருமாலும் சேர்ந்து உண்டாக்கிய மகாசாஸ்தா உனக்குப் பாதுகாப்பாக இருப்பான். நீ அஞ்ச வேண்டாம்" என்று சொன்னன்.

செய்ய சடைமேல் சிறந்தமதிக் கோடுபுனை
தூய்யவனும் வேலை துயின்றேனும் சேர்ந்தளித்த
ஐயன், எமக்கோர் அரணுகி யேஇருக்க
நையல் முறையாமோ? நங்காய் நவிலுதியால்.

(அயிராணி. 19.)

[செய்ய - சிவப்பு நிறமுள்ள. மதிக்கோடு - சந்திரனுடைய கீற்று; பிறைச் சந்திரன். வேலை - பாற்கடலில். ஐயன் - சாத்தன் என்னும் அரிகரபுத்திரன். அரண் - பாதுகாப்பு. நையல் - வருந்துதல்.]

மகாசாஸ்தா வருதல்

இங்கே கந்த புராணத்தில் மகாசாஸ்தாவின் வரலாறு வருகிறது. மகாசாஸ்தாவை இந்திரன் அழைக்க, அந்தப் பெருமான் யானையின் மேலே தம் தேவிமார்கள் இருவரும் உடன் இருக்க எழுந்தருளி வந்தார். அவரை வணங்கினுன் இந்திரன்; "இந்திராணியை உன்னிடம் அடைக்கலமாகத் தந்திருக்கிறேன். நீதான் அவளைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

இந்த நாட்டில் சிறிது காலமாக சாஸ்தாவின் வழிபாடு அதிகமாக இருக்கிறது. பழங்காலத்திலும் அவருடைய வழிபாடு ஓரளவு இருந்தது. ஐயனர் திருக்கோவில் ஒவ்வோர் ஊரிலும் உண்டு. ஊருக்குக் காவல் தெய்வமாக அவர் இருக்கிருர்.

இப்போது சபரிமலை மகாசாஸ்தாவை வழிபடுவதற்கு எல்லோரும் விரதம் கொண்டாடுகிருர்கள்; சபரிமலைக்கு யாத்திரை செல்கிருர்கள்.

காஞ்சியில் சாஸ்தா

காஞ்சிபுரத்தில் காமாட்சி கோவிலில் சாத்தனர் காவலாக இருக்கிருர். கரிகால் சோழன் வடக்கே படையெடுத்துச் சென்றுன். வடநாட்டு மன்னரை வெற்றிகொள்ள வேண்டுமென்பது அவனுடைய ஆசை. அதற்காகக் காமாட்சி திருக்கோவிலுக்கு வந்து, மகாசாஸ்தாவை வணங்கி, அவர் கையில் செண்டைக் கொடுத்து வாங்கிக் கொண்டான். சாஸ்தாவின் செண்டு என்பது பூச்செண்டல்ல. குதிரையை அடிக்கின்ற சவுக்கு இருக்கிறதே, அதற்குச் செண்டு என்று பெயர். சுந்தரமூர்த்தி நாயனர், ஐயனர் இவர்களின் கையிலுள்ள ஆயுதத்தைச் செண்டு என்பர். அதற்குக்

குதிரைச் சம்மட்டி என்று அகராதியில் பொருள் இருக்கும். அது சவுக்குத்தான்.

கரிகாலன் மகாசாஸ்தாவின் திருக்கரத்தில் ஒரு செண்டைக் கொடுத்து வாங்கிக்கொண்டு வடக்கே போனான். வடக்கே மேரு மலை இருந்தது. அதைத் தன் சவுக்கினால் அடித்தவுடன் அது வழிவிட்டது என்பது வரலாறு.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டம்காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன் - கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

[கச்சி - காஞ்சிபுரம்; வளைக்கைச்சி - வளையை அணிந்த காமாட்சியம்மை. காமக்கோட்டம் - காமாட்சியம்பிகை திருக்கோயில். கம்பக் களிறு - தறியில் கட்டும் யானை. செம்பொற் கிரி - மேரு.]

இது பழைய பாடல்.

இந்திராணியை இந்திரன் மகாசாஸ்தாவிடம் ஒப்படைத்து, "நான் கைலாசம் வரைக்கும் போகிறேன். நான் திரும்பி வரும் வரைக்கும் நீதான் இவளைப் பாதுகாக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டான். மகாசாஸ்தாவின் பூதகணங்களுக்குள் உயர்ந்தவன் மகாகாளன். சாஸ்தா அந்த மகாகாளனைப் பார்த்து, "நீ இந்திராணியைக் காப்பாயாக" என்று உத்தரவிட்டார். அவருடைய ஏவலின்படி மகாகாளன் அங்கே இருந்து இந்திராணி யைக் காப்பாற்ற முன்வந்தவுடன், இந்திரன் இந்திராணிக்குத் தக்க பாதுகாப்புக் கிடைத்தது என்ற எண்ணத்துடன் கைலாசத்திற்குப் போனான்.

இந்திரன் கைலாசம் செல்லுதல்

கைலாசத்தில் சிவபெருமான் திருக்கோவிலின் வாயிலில் நந்தி தேவர் இருந்தார். அந்தச் சமயத்தில் பெருமான் யோக நிஷ்டையில் இருந்தான். "சில காலம் இங்கே தங்குங்கள்" என்று நந்தி தேவர் சொல்ல, இந்திரன் முதலிய தேவர்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள். தேவர்கள் அங்கே இருக்க, இங்கே சீகாழியில் மகாகாளனுடைய காவலில் இந்திராணி இருந்தாள்.

பிருகஸ்பதி முருகப் பெருமானுக்கு அசுரர்களுடைய வரலாற் றைக் கூறிக்கொண்டு வருகிற இடம் இது. இங்கே சூரபன்ம

னுடைய தங்கையாகிய அசமுகியைப்பற்றிச் சொல்கிறார். அவளை வருணனை செய்கிறார். பல பாடல்கள் இங்கே இருக்கின்றன. ஒன்றைப் பார்க்கலாம்.

அசமுகியின் இயல்பு

அவள் பொறுமை இல்லாதவள்; அருள் இல்லாதவள்; தான் எதை நினைத்தாலும் அதை உடனுக்குடன் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறவள்; தன்னுடைய செயலினாலே புகழைப் போக்கிப் பழியை அடைகிறவள். அவள் புகழ் இல்லாதவள். கற்பு என்பது அவளிடம் இல்லை. பெண்ணுக்குரிய நாணம் அவளுக்கு இல்லை. தர்மம் என்பதைப்பற்றி அறியாதவள். அவள் திருவுருவம் அழகு இல்லாதது. கற்பு என்னும் சிறை அவளுக்குக் கிடையாது. உல குக்கே அவள் ஒரு சிறைபோலத் திரிந்து கொண்டிருந்தாள்.

பொறைஇல்லவள்; அருள்இல்லவள்;
புகழ் இல்லவள்; சிறிதும்
நிறைஇல்லவள்; நாண்இல்லவள்;
நிற்கின்றதொர் அறத்தின்
முறைஇல்லவள்; வடிவில்லவள்;
முடிவில்லதொர் கற்பின்
சிறைஇல்லவள்; உலகோர்க்குஒரு
சிறையாம்எனத் திரிவாள்.

(அசமுகிப். 5.)

[நிறை - மனத்தை அடக்கும் ஆற்றல், கற்பின் சிறை - கற்பாகிய பாதுகாப்பு.]

அசமுகியை வருணிக்க வந்தவர் முதலில் பொறையில்லவள் என்றார். பொதுவாகப் பெண்களுக்குப் பொறுமை அதிகம். சென்னை மருத்துவ மனையில் ஆண் நர்சுகள் என்று முன்னே வைத் திருந்தார்கள். நோயாளிகள் ஏதாவது கேட்டால் அவர்கள் உதவு வார்கள். அடுத்தடுத்துக் கேட்டால் அவர்களுக்குக் கோபம் வந்து விடும். கொஞ்சம் கோபமாகவே பேசுவார்கள். ஆனால் பெண்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். எத்தனை நச்சரித்தாலும் நோயாளி களுக்கு வேண்டியவற்றைச் செய்வார்கள். நோயாளிகளுக்கு உதவி செய்வதற்கு மிகப் பொறுமை வேண்டும். அப்படியே குழந்தை களை வளர்ப்பதிலும் பெண்களுக்குப் பொறுமை அதிகம். குழந்தை

அடிக்கடி ஏதாவது கேட்டால் தகப்பனுருக்குக் கோபம் வரும்; குழந்தையை அடிக்கப் போய்விடுவார். தாய்தான் பொறுமை யோடு எல்லாவற்றையும் சகிப்பாள். ஆகவே, பெண்களுக்கு முக்கிய மான குணமாக இருப்பது பொறை.

அனுமன் சீதாபிராட்டியைக் கண்டதாக இராமனிடம் சொல்லும்போது.

"இல்பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்று பொறையை நடுநாயகமாக வைக்கிருன். அந்தக் குணம் சிறிதேனும் இல்லாதவள் அசமுகி. அடுத்தபடி,

அருள் இல்லவள்

என்கிருர். அருள் என்பது எந்தப் பயனையும் எதிர்பாராமல் எல்லோரிடமும் அன்பு செய்வது. அருள் உடையவர்கள் தேவர்கள். இறைவன் அருள் உடையவன்.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"

என்று **மாணிக்கவாசகர்** பாடுகிருர். தாயைவிடச் சிறந்தவன் என்பதனுல், தாயினிடத்தில் அத்தகைய குணம் உண்டு என்பதும் தெரிகிறது. தாயின் பெருமையை மாணிக்கவாசகர் வேருேர் இடத்தில் சொல்கிருர்.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"

என்கிருர். தாயைவிடப் பரிவு உடையவன் ஆண்டவன் என்று சொல்வதன் மூலம் தாயின் பெருமையையும் குறிப்பிடுகிருர்.

ஒரு வீட்டில் வீட்டுக்காரன் நான்கு அன்பர்களோடு சீட்டு ஆடிக்கொண்டிருக்கிருன். அந்த வீட்டுக்காரி தன் குழந்தையைத் தொட்டிலில் உறங்கவிட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்களோடு பேசிக் கொண்டிருக்கிருள். அப்போது குழந்தை வீல் என்று அழுகிறது. "எறும்பு கடித்துவிட்டதா? பார்" என்று கத்துகிருன் வீட்டுக் காரன். குழந்தையின் அழுகைக்கு எறும்பு கடித்ததாக அவன் பொருள் பண்ணிக்கொள்கிருன். சீட்டாட்டத்திற்கு அது இடை யூருக இருக்கிறது. ஆனுல் அந்த வீட்டுக்காரியுடன் பேசிக்கொண் டிருந்த பெண்களோ, "குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டுமோ?"

என்று கேட்கிறார்கள். தாய் உள்ளே ஓடி அந்தக் குழந்தையை எடுத்துப் பால்கொடுக்கத் தொடங்குகிறாள். குழந்தை அழுவதைக் கேட்டவுடன் ஆணாகிய ஜடம் எறும்பை நினைக்கிறான். பெண் களுடைய தாய் உள்ளம் பாலை நினைக்கிறது. அவர்கள் நினைத்து அதைச் சொல்வதோடு நிற்கிறார்கள். ஆனால் தாயோ பாலூட்ட வேண்டும் என்று நினைத்துக் குழந்தைக்கு ஊட்டுகிறாள். கொடுக் கின்ற உரிமை அந்தக் குழந்தையின் தாய்க்கே உரித்தாகிறது. ஆண்டவன் அந்தத் தாயையும்விட அருள் உடையவன் என்கிறார் **மாணிக்கவாசகர்.** எங்கே அருள் இருக்கிறதோ அங்கே தாய்த் தன்மை உண்டு. இங்கே அசமுகியை வருணிக்க வந்தவர் அவள் அருள் இல்லவள் என்றார்.

அடுத்து 'நிறையில்லவள்' என்று சொல்கிறார். நிறையாவது, உள்ளத்தைக் கண்டபடி ஓடவிடாமல் நிற்குமாறு செய்வது. அது தான் தன்னைக் காத்துக்கொள்கிற பண்பு. அதை,

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறளில் **வள்ளுவர்** சொல்கிறார்.

அடுத்து 'நாண் இல்லாதவள்' என்று அசமுகியின் இயல்பைச் சொல்கிறார். பெண்களுக்கு நாணம் மிகச் சிறந்தது. "உயிரினும் சிறந்தன்று நாணே" என்று **தொல்காப்பியம்** சொல்கிறது. இயல் பாகப் பெண் குழந்தைகளுக்கு நாணம் இருக்கும். ஆண் குழந்தை களுக்கு மிடுக்கு உடன் பிறந்ததாக இருக்கும். தனக்குரிய ஆற்றலை, நாணத்தால் வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருப்பவர்கள் பெண்கள்.

அடுத்து,

நிற்கின்ற தொல் அறத்தின் முறை இல்லவள்

என்கிறார். அறத்தின் முறையைக் காப்பாற்றுபவர்கள் பெண்கள். ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்துவது இல்லறம். என்றாலும் இல்லத்திற்கு உரியவளாக இருப்பவள் மனைவி. அவளைத் தான் இல்லாள் என்பர். ஒருவன் எவ்வளவு பெரிய மாளிகை கட்டிக்கொண்டு வாழ்ந்தாலும் அவனுக்கு மனைவி இல்லாவிட்டால் வீடு வீடாகாது. வீட்டுக்குத் தலைவியாக இருக்கிறவள் பெண்தான்,

இல்லாள் என்ற சொல் உண்டே தவிர இல்லான் என்று கணவனுக்குப் பெயர் கிடையாது. இல்லான் என்ருல் ஒன்றும் இல்லாதவன், வறியவன் என்று பொருள்படுமே தவிர, வீட்டிற்குத் தலைவன் என்ற பொருள் தராது. வீட்டுக்குரியவன் தானம் செய்யும் போது, வீட்டிலுள்ள பெண்மனி நீர் வார்த்தால்தான் அது தானம் ஆகும். அறம் செய்வதற்குரிய துணையாக இருப்பதனல் பெண்ணைத் தர்மபத்தினி என்று சொல்கிருர்கள். பரமேசுவரன் அளித்த இரு பிடி நெல்லைக் கொண்டு 32 தர்மங்களை வளர்த்தாள் பரமேசுவரி. அவளை அறப்பெருஞ்செல்வி என்பர். வடமொழியில் அதனையே தர்ம சம்வர்த்தனி என்பர்.

இந்தப் பாட்டில் அசமுகியிடத்தில் இன்ன குணங்கள் இல்லை என்பதைச் சொன்னலும், மறைமுகமாகப் பெண்களுக்கு என்ன என்ன பண்புகள் இருக்கவேண்டும் என்பதையே குறிப்பிக்கிருர் ஆசிரியர். பொறை, அருள், புகழ், நிறை, நாண், அறத்தின் முறை, வடிவு, கற்பு ஆகிய இவைகள் எல்லாம் யாரிடம் அமைந்திருக்கின்றனவோ அவர் களே சிறந்த மகளிர். ஆனல் இங்கோ அசுரப் பெண்ணுகிய அசமுகி அந்த நல்ல குணங்களில் ஒன்றும் இல்லாமல் இருந்தாள்.

அசமுகி சீகாழி வருநல்

பல இடங்களுக்குச் சென்று திரிந்து வந்த அசமுகி சீகாழிக்கு அருகே வந்தாள். அங்கே இந்திரன் அமைத்திருந்த நந்த வனத்தைக் கண்டாள். துன்முகி என்ற தோழி ஒருத்தியும் அவளுடன் வந்தாள். அவர்களை மகாகாளன் கண்டான்; 'யாரோ புதியவர்களாக இருக்கிருர்கள், என்ன செய்யப் போகிருர்கள் என்று பார்க்கலாம்' என்று மறைவாக இருந்தான்.

அசமுகி இந்திராணியைக் கண்டாள். 'என்னுடைய அண்ணன் காதல் கொண்ட இந்திராணி இங்கே இருக்கிருள். இவளை அடை வதற்கு அவன் எங்கெங்கோ ஆட்களை அனுப்பி, இவளைக் காணமாட் டாமல், இவளை அடையாமல் ஏங்கி இருக்கிருன். நான் இவளைக் கொண்டுபோய் எப்படியேனும் அவனுடன் சேர்த்துவிட்டு, இவளாலே நீ இன்பம் பெறலாம் என்று சொல்லப்போகிறேன்' என்று எண்ணினுள்.

தண்தேன்அமர் குளிர்பூங்குழல் சசிஎன்பவள் தனைநான்
கண்டேன்; இனி இவள்மையலில் கவலாதொழி கென்றே
வண்டுஒலிடு தொடைமன்னவன் மகிழ்வெய்தமுன் உய்ப்பக்
கொண்டேகுவன் யானேஇவள் தனைஎன்று குறித்தாள்.

(அசமுகிப். 20.)

[தேன் - வண்டு. சசி - இந்திராணி. ஒலிடு - முரல்கின்ற. தொடை - மாலை. மன்னவன் - சூரன். உய்ப்ப - விட.]

நல்ல வேளையாகக் காவல் இல்லை என்று மகிழ்ந்து, அவளை எடுத்துக்கொண்டு போக அணுகினாள்.

அசமுகியைக் கண்டவுடன் இந்திராணி அஞ்சி எழுந்தாள்; 'இவள் அசுரப் பெண்ணோ? உலகத்தார் கலங்குவதற்குரிய கூற்றமோ?' என்று குலைவுற்றாள்.

அசமுகியும் இந்திராணியும் உரையாடல்

அப்போது அசமுகி அவளைப் பார்த்து நயமாகச் சொல்லலானாள். "உன் இளமையும், அழகும் வீணே பயன் இல்லாமல் ஒழியும்படி இங்கே நிற்கிறாயே. இப்படித் தவக்கோலத்தோடு நிற்கலாமா? இதை விட்டுவிடு. திருமாலின் மார்பிலுள்ள திருமகள் கூட உன் அழகுக்கு ஒப்பாகமாட்டாள். நீ இருக்க வேண்டிய இடத்தில் அல்லவா இருக்கவேண்டும்? இங்கே வந்து மறைவாகத் தவம் செய்து கொண்டிருக்கிறாயே! உன்னை அடைவதற்குச் சூரபன்மனாகிய அசுரன் தவம் செய்து கொண்டிருக்கிறான். அவனை அடைந்து நீ வாழ்ந்தாயானால் எல்லாத் தேவர்களும் உன்னிடம் வந்து ஏவல் புரிவார்கள். இந்திரன் உனக்கு அடிமையாவான். அசுரர்கள் உனக்குச் சேவகர்களாக இருப்பார்கள். தேவ மகளிர் உனக்குக் குற்றேவல் செய்வார்கள். சூரபன்மன் மிகப் பெரிய வரம் உடையவன். அவனிடத்தில் உன்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன் அவனோடு இருந்து இந்த உலகத்தை எல்லாம் நீ ஆட்சி புரிவாயாக" என்றாள்.

எத்தேவரும் முகிலூர்தியும்
இகல்மேவரும் அவுணக்
கொத்துஏவரும் அணங்கோரும்உன்
குற்றவேல்செய் திடவே
மூத்தேவரும் புகழப்படும்
மொய்ம்புற்றிடு சூர்முன்
உய்த்தேஅவ னொடுகூட்டுவன்
உலகாண்டுஉடன் இருக்க.

(அசமுகிப். 31.)

[முகிலூர்தி - இந்திரன். இகல் - பகை. கொத்து ஏவரும் - கூட்டத்தில் உள்ள எவரும். அணங்கோர் - தெய்வமகளிர். மொய்ம்பு - வலிமை. சூர் - சூரபன்மன். உய்த்தே - கொண்டு போய்.]

அவளுடைய வார்த்தையைக் கேட்ட இந்திராணி, "என்னுடைய உள்ளம் என் நாயகனாகிய இந்திரனையே சார்ந்தது. மாசு இல்லாத கற்புடையவள் நான். என்னிடத்தில் வந்து இதைச் சொல்கிறாயே! இந்த வார்த்தையினால் உன் குலம் அழிந்து போகுமே! அவர்கள் வாழ்வதற்குரிய வார்த்தையாக இல்லையே!" என்று கோபத்தோடு சொன்னாள்.

இந்தி ரற்கலால் ஏவர் பாலினும்
சிந்தை வைத்திடேன் ; தீதில் கற்பினேன்;
'வந்தெ னக்கிது வகுத்தி ; நின்கிளை
உய்ந்தி டத்தகும் உரைய தன்றிதே.

(இந்திராணி மறுதலைப். 9.)

[வகுத்தி - சொல்கிறாய். கிளை - சுற்றம்.]

"ஏவர் பாலினும் சிந்தை வைத்திடேன்; தீதில் கற்பினேன்" என்று சொல்கிறாள். மிக உயர்ந்த கற்பு, சிந்தையினாலும் பிறரை நினைக்காதது. சிந்தை வைத்திலேன் என்றது, 'பிறரை நான் மனத்தாலும் நினைக்கமாட்டேன்' என்று சொன்னதே ஆகும். 'தீதில் கற்பு' என்பது பிறனுடைய உள்ளத்தில் புகாத கற்பு. அத்தகைய கற்பை உயர்ந்த கற்பு என்று சொல்வர். பழைய நூல்களில் இதைப் பற்றிய செய்திகள் வருகின்றன.

இந்திராணி, "உன்னுடைய கிளைகள் எல்லாம் அழிந்துபடத் தகுந்த வார்த்தைகளைச் சொல்கிறாயே!" என்று சொல்லவில்லை.

நின்கிளை, உய்ந்தி டத்தகும் உரைய தன்றிதே

என்றாள். நாகரிகமான பேச்சு அது. "உன்னுடைய சுற்றத்தார்கள் வாழ்வதற்குரிய வார்த்தை அல்லவே இது!" என்று சொன்னாள்.

இங்கே ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. திருவையாற்றுக்குப் பக்கத்தில் திங்களூரில் அப்பூதி அடிகள் என்ற சிவபக்தர் இருந்தார். அவர் எல்லோரும் நடக்கும் சாலையில் ஒரு தண்ணீர்ப் பந்தல் வைத்தார். அவருக்கு அப்பர் சுவாமிகளிடம் மிகுந்த பக்தி. ஆனால் அவர் அப்பர் சுவாமிகளை நேரில் கண்டதில்லை. அவர் இறைவன் திருவருளைப் பெற்றவர் என்ற பெருமதிப்பால் தம் குழந்தைக்குத் திருநாவுக்கரசு என்று பெயர் வைத்தார். திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்று அந்தப் பந்தலுக்குப் பெயர் வைத்தார். ஒரு சமயம்

அப்பர் சுவாமிகள் அந்த வழியே போகும்போது தம்முடைய பெயர் இருப்பதைக் கண்டு, அப்படி வைத்திருப்பவர் யார் என்று விசாரித் தார். திங்களூரில் இருக்கும் அப்பூதி அடிகள் என்று சொன்னார்கள். உடனே அவரைப் பார்க்கத் திங்களூர் சென்றார். அவரைக் கண்டு, "உங்கள் பெயரைத் தண்ணீர்ப் பந்தலுக்கு வைக்காமல் வேறு ஒருவர் பெயரை வைத்திருக்கிறீர்களே! ஏன்?" என்று கேட்டார். அப்பூதி அடிகளுக்குக் கோபம் வந்தது. அவர் மிகவும் பண்பாடு உடையவர். ஆகையால் மிக்க வன்மையான சொல்லைச் சொல்ல வில்லை.

"நன்று அருளிச் செய்திலீர்"

என்று அவர் சொன்னதாகச் சேக்கிழார் பாடுகிறார். "பொல்லாத வார்த்தைகளைச் சொல்கிறீரே" என்று சொல்லவில்லை அதைப் போல இந்திராணி,

நின்கிளை, உய்ந்தி டத்தகும் உரைய தன்றிதே

என்று சொன்னாள்.

அசமுகி கைவெட்டுப் படலம்

உடனே அசமுகி இந்திராணியின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓடினாள். அப்போது இந்திராணி ஐயோ என்று ஓலமிட் டாள்; அரற்றினாள். அந்த ஓலத்தைக் கேட்டு மகாகாளன் வந்தான். திடீரென்று வந்த அந்த வீரன், இந்திராணியைப் பார்த்து, "தாயே, நீ சிறிதும் வருந்த வேண்டாம். அசமுகி என்ற கொடியவளுக்குச் சிறிதும் அஞ்சாதே. உன்னைத் தொட்டு இழுத்த கையை வெட்டி உன்னை விரைவில் விடுவிக்கிறேன் பார்" என்று சொல்லி அங்கே வந்தான்.

கொம்மென வந்த வீரன்
கூவிய சசியை நோக்கி,
அம்மனை, அழுங்கல் வாழி;
அசமுகி என்னும் வெய்யாட்கு
இம்மியின் துணையும் அஞ்சேல்;
ஈண்டுனைத் தீண்டு கின்ற
கைம்முறை தடிந்து வல்லே
விடுவிப்பன் காண்டி என்றான்.

(மகாகாளர் வரு. 6.)

[கொம்மென - விரைவில். சசி - இந்திராணி. அம்மனை - தாயே. அழுங்கல் - வருந்தாதே. வல்லே - விரைவில். காண்டி - பார்.]

தன்னைத் தடுக்க வருகிறவன் யார் என்று அசமுகி யோசித்தாள். 'இந்திரனுடைய ஏவலாட்களுள் ஒருவனாக இருக்க வேண்டும். அவனை இப்பொழுதே அழித்து விடுகிறேன்' என்று கையிலுள்ள சூலத்தை விட்டாள்.

புந்தியில் இதனை உன்னிப் பொள்ளெனச் சினம்மிக் கொள்ள
இந்திரன் தொழுவன் கொல்லாம் எனை இடை தடுக்கும் நீரான்;
சிந்துவன் இவனை என்னாச் செங்கையில் சூலந் தன்னை
உந்தினள்; அதுபோய் வீரன் உரன்எதிர் குறுகிற் றன்றே.

(மகாகாளர். 14.)

[புந்தி - மனம். பொள்ளென - விரைவில். மீக்கொள்ள - ஓங்க. தொழுவன் - ஏவலன். சிந்துவன் - கொல்வேன். உரன் - மார்பு.]

அந்தச் சூலம் மகாகாளனுடைய மார்பை நோக்கிச் சென்றது. அந்தச் சமயத்தில் அந்தப் பெருவீரன் தன் வாளால் அந்தச் சூலத்தை இரண்டு துண்டாக்கினான். துன்முகியின் கையிலிருந்த சூலத்தை வாங்கி, மகாகாளனைத் தாக்க வந்தாள் அசமுகி. அந்தச் சூலத்தையும் தன் வாளால் துண்டாக்கினான் மகாகாளன். அவள் மலையை எடுத்து வீசினாள். அவனது வாள் ஒடிந்தது. "உன்னைத் தின்றாலும் என்னுடைய பசி தீராது. ஆகவே உன்னைத் தொலைக்கிறேன் பார்" என்றாள். "நீ பெண்ணாக இருப்பதனால் நான் உன்னைக் கொல்லவில்லை. நீ இந்திராணியை விட்டுவிட்டு உயிர் பிழைத்துப் போ" என்றான் மாகாளன்.

அசமுகி பார்த்தாள். 'இவனோடு போர் செய்து இவனை வெல்வது அரிதாக இருக்கும். நாம் இந்திராணியைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடவேண்டும்' என்று நினைத்தாள்.

என்றலும் கொடியள் கேளா ஈங்கிவன் வாளும் இன்றி
நின்றனன்; இவனோ டேபோர் நேருதல் நெறிய தன்றால்;
அன்றியும் இவனை வெல்லல் அரிதினிச் சசியைக் கொண்டு
சென்றிடல் துணிபாம் என்னாத் திரும்பினள் சேடி தன்பால்.

(மகாகாளர். 25.)

[கொடியள் - அசமுகி. நெறியது - முறை. துணிபு - உறுதி.]

அதனைப் பார்த்த மகாகாளன், "ஏ அசுரப் பெண்ணே, நில்" என்று சொல்லி, அவள் கூந்தலைப் பற்றி இழுத்து, தன் உடை வாளால், இந்திராணியைத் தொட்டுத் தூக்கிய கையைத் துண்டாக்கினான்.

போகலும் அதனை ஐயன் பொருநரில்
தலைவன் பாரா
ஏகுதி போலும் நில்என் றெய்தியே
உடைவாள் வாங்கிச்
சேகுறு மனத்தான் கூந்தல் செங்கையால்
பற்றி ஈர்த்துத்
தோகையைத் தொட்ட கையைத்
துணித்தனன் விண்ணோர் துள்ள.

(மகாகாளர். 27.)

[ஐயன் பொருநரில் - சாஸ்தாவினுடைய போர் வீரர்களில். ஏகுதி - போகிறாய். சேகு - வைரம், குற்றம். ஈர்த்து - இழுத்து. தோகை - இந்திராணி. துணித்தனன் - வெட்டினன்.]

தேவர்கள் மகிழ்ச்சி அடையும்படி அந்தக் காரியத்தைச் செய்தான். சசி தேவியை விடுதலை செய்து, அவளை மிரட்டின அவுணப் பெண்ணைக் காலால் உதைத்து அப்பால் தள்ளினான். அசமுகியின் துணையாகிய துன்முகியின் கரத்தை வெட்டினான்.

அசமுகி தரையிலிருந்து எழுந்து, பலவாறு கூவினாள்; கதறினாள். துன்முகி அவளுக்கு ஆறுதல் சொல்லிச் சூரபன்மனிடம் போய் இவற்றைச் சொல்லலாம் என்று யோசனை கூறினாள். உடனே அசமுகி, இந்திராணியைப் பார்த்து, "உங்களை எல்லாம் சிறைப்படுத்தாவிட்டால் நான் சூரபன்மனின் தங்கை அல்ல" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

இந்திரனும் இந்திராணியும் மேரு மலையை அடைதல்

சில காலம் கைலாசத்தில் இருந்த இந்திரன், "நாங்கள் பூவுலகத்திற்குச் சென்று, இறைவனுடைய திருவருளைப் பெறத் தவம் செய்கிறோம். நீ திருவருள் பாலிக்க வேண்டும்" என்று நந்தியம் பெருமானிடம் வேண்டிக் கொண்டான்.

கைம்மை யாம்பெயர் அணங்கினோர் பெருவகை கறுத்த
செம்மை யார்களத் தெம்பிரான் எமக்கருள் செய்வான்;
பொய்ம்மை தீர்தவம் இயற்றிட நிலமிசைப் போதும்;
எம்மை ஆங்கருள் புரிந்தனை விடுத்தியென் றியம்ப.

(இந்திரன் மீட்சிப். 6.)

[அணங்கினோர் - தேவமகளிர். செம்மை ஆர் - நிறைவை உடைய. களம் - கழுத்து. போதும் - போவோம். விடுத்தி - அனுப்புவாயாக.]

இங்கே கச்சியப்பர் சிவபெருமானை,

கைம்மை யாம்பெயர் அணங்கினோர் பெருவகை கறுத்த
செம்மை யார்களத் தெம்பிரான்

என்று சொல்கிறார். "எங்களுக்கு முன் ஒரு காலத்தில் அழிவு நேர இருந்தது. நாங்கள் ஆலகால விஷத்தினால் அழிந்து போயிருப் போம். அவ்வாறு அழிந்திருந்தால் எல்லாத் தேவமகளிர்களும் அமங்கலத்தை அடைந்திருப்பார்கள். அத்தகைய நிலையைத் தேவ மகளிர் அடையாமல் ஆலகால விஷத்தை உண்டு, நீல கண்டனாக அமர்ந்திருக்கிற பெருமான் இப்போது மீண்டும் எங்களுக்கு அருள் செய்வான். ஆகையால் அந்த அருளைப் பெறுவதற்கு நான் பூமிக்குச் சென்று தவத்தைச் செய்ய வேண்டும்" என்று இந்திரன் கேட்டான். கேட்டு, விடைபெற்றுக்கொண்டு தவம் செய்வதற்காகச் சீகாழி வந்தடைந்தான். அங்கே வந்த பிறகு அங்கு நடந்த நிகழ்ச்சி களை அறிந்தான் இனி இந்த இடத்தில் இருக்கக் கூடாது என்று கருதி நாயகியை அழைத்துக்கொண்டு மேரு மலைக்குப் போனான்.

அசமுகி சூரனிடம் செல்லுதல்

அசமுகி கை வெட்டுப்பட்ட கோலத்தோடு சூரபன்மன் அரசாண்ட வீரமகேந்திரபுரத்தை அடைந்தாள்.

அசமுகி வீரமகேந்திரபுரத்திற்குச் சென்று கீழ்த்திசை வாயிலை அடைந்தாள். அவள் அங்கே நுழைந்தது மூதேவி உள்ளே நுழைந்ததைப் போல இருந்தது. அவள் உள்ளே நுழைந்தவுடன் சீதேவி மற்றொரு வாயில் வழியே வெளியேறிவிட்டாள். அசமுகி யைக் கண்ட அசுரர்கள் எல்லாம் தங்கள் தங்கள் மனத்தில் தோன்றியதைப் பேசினார்கள். அவள் சூரபன்மாவின் அவைக் களம் சென்று தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைந்து புலம்பத் தொடங்கினாள்.

பெண்கள் அழுதால் வீட்டில் மூதேவி வருவாள் என்று சொல் வது வழக்கம். ஆகையால் பெண்கள் மனம் நொந்து கண்ணீர் விடும்படி செய்யக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அசமுகி அழுதுகொண்டு போனாள். மூதேவி அழுதுகொண்டே உள்ளே புகுந்தாள்.

மறிமுகம் உடைய தீயாள்
மன்றினுக் கணிய ளாகிக்
கிறிசெயும் அன்னை தன்னைக் கேளிரை
மருகா னோரைத்
திறனுடை முன்னை யோரைச்
சிந்தையில் உன்னி ஆண்டைப்
பொறிமகள் இரியல் போகக்
கதறியே புலம்ப லுற்றாள்.

(அசமுகி புலம்புறு. 1.)

[மறிமுகம்-ஆட்டின் முகம். மன்று - அரசவை. கிறி - வஞ்சகம். கேளிரை - உற வினரை. மருகு ஆனோரை - மருகராக உள்ளவர்களை. முன்னையோரை - அண்ணன் மாரை. பொறிமகள்-திருமகள். இரியல் போக-விட்டு நீங்க.]

அசமுகியின் புலம்பலைக் கேட்டுப் பயந்து திருமகள் அந்த இடத்தை விட்டு ஓடிப் போனாளாம்.

தகப்பனாருக்குப் பிள்ளைகளின்மேல் பிரியம் இருக்கும். தாயாருக்குப் பெண்களின்மேல் பிரியம் இருக்கும். இது உலக வழக்கம். இப்போது கூடப் பெண்களின்மேல் பிரியம் இருப்பதனால் மாப்பிள்ளைக்கு அதிக மரியாதை காட்டுவது தாய்மார்கள் வழக்கமாக இருக்கிறது. இந்த இயல்பை எண்ணி அசமுகி புலம்புகிறாள். "தாயே, நீதானே என்னிடம் இரக்கம் காட்டுவாய்? நான் கரத்தை இழந்து, மானத்தை இழந்து உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

தாதையா னவர்அளித்த மைந்தர்கணே
விருப்புறுவர்; தாயார் பெற்ற
மாதரார் பால்உவகை செய்திடுவர் ;
ஈதுலக வழக்கம் என்பார்;
ஆதலால் என்துயரம் அகற்றவந்தாய்
இலை;அந்தோ ! ஆரும் இன்றி
ஏதிலார் போல்தமியேன் கரம்இழந்தும்
இவ்வுயிர்கொண் டிருப்ப தேயோ.

[ஏதிலார் - அயலார்.]

இப்படி அழுதுகொண்டே சூரபன்மனின் அவைக்களத்தில் விழுந்து புரண்டாள்.

என்று பற்பல உரைத்தனள், ஆவலித் திரங்கிப்
பின்தொ டர்ந்திடு துன்முகி தன்னொடும் பெயரா
மன்றின் மேவரு சூரபன் மாவெனும் வலியோன்
பொன்த டங்கழல் முன்னரே வீழ்ந்துபோய்ப் புரண்டாள்.

(சூரன் தண்டஞ்செய். 1.)

[ஆவலித்து - வாய்விட்டுக் கதறி. இரங்கி - அழுது. பெயரா - சென்று.]

கந்த புராணத்தில் இருபது புலம்பல்கள் உள்ளன; மிக அருமையான பாடல்கள்.

சூரனுடைய கோபம்

தங்கை அழுது அடித்துக்கொண்டு புலம்புவதை அசுரனாகிய சூரபன்மன் பார்த்தான்; "யார் இதைச் செய்தது?" என்று கேட்டான். "இந்திரனுடைய மனைவி இந்திராணி பூலோகத்தில்

தவம் செய்து கொண்டிருந்தாள். உன்பால் கொண்டுவர எண்ணி, அவளை எடுத்தேன். அப்போது யாரோ ஒரு தேவன் சினந்து வந்து, நான் இந்திராணியைத் தூக்கி வர முடியாதபடி, என்னை உதைத்து, என் கரத்தைத் துணித்து விட்டான்'' என்று அசமுகி சொன்னாள்.

புரந்த ரன்புணர் புலோமசை புவியில்ஓர் புறத்தில்
இருந்து நோற்றலும் உன்றனக் கென்றுசென் றெடுத்தோம்;
விரைந்து வந்தொரு விண்ணவன் எங்களை வெகுண்டு
கரந்து ணித்துமற் றவளைமீட் டேகினன் கண்டாய்.

(சூரன் தண்டம். 4.)

[புரந்தரன் - இந்திரன். புலோமசை - இந்திராணி. விண்ணவன் - தேவன். துணித்து - வெட்டி.]

சூரனுக்கு இரண்டு வகையில் கோபம் வந்தது. நெடுங்காலமாக இந்திராணியை அடையவேண்டுமென்ற ஆசை அவன் உள்ளத்தில் இருந்தது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இப்போது கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற கோபம் ஒரு பக்கம். தன் தங்கையின் கரத்தை ஒருவன் துணித்துவிட்டானே என்ற கோபம் மற்றொரு பக்கம். கோபம் மிக அதிகமாகப் பொங்கி யெழுந்தது. அவனது கோபக் குரலைக் கேட்டவுடன் முதலில் பூமி நடுங்கியது. பூமியில் உள்ள மக்கள் நடுங்கினார்கள். மற்றவர்களைவிடப் பூமியில் உள்ள மக்கள் பலவீனமானவர்கள். ஆகவே முதலில் நடுங்கினார்கள். பின்பு தேவர்கள் நடுங்கினார்கள். உயிரினங்கள் மாத்திரமா நடுங்கின? உலகிலுள்ள ஜடப் பொருள்கள் எல்லாம் நடுங்கின. கடல்கள் நடுங்கின. சத்திய லோகம், வைகுந்தம் ஆகிய எல்லாமே அசுரேந்திரனாகிய சூரனது கோபத்தைக் கண்டு நடுங்கின. அங்கே யார்தான் நடுங்கவில்லை? 'அவன் மிகப் பெரிய அசுரன். அவனிடத்தில் தோன்றிய சினம் மிகப் பெரியது. அதைக் கண்டு யார் நடுங்காமல் இருப்பார்கள்?' என்று பாடுகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

பார்ந டுங்கின ; விண்ணெலாம் நடுங்கின ; பரவை
நீர்ந டுங்கின ; அயன்பதம் நடுங்கின ; நெடியோன்
ஊர்ந டுங்கின ; அவுணரும் நடுங்கினர் ; உலகத்து
ஆர்ந டுங்கிலர்? அவன்சினம் சிறியதோ அன்றே.

(சூரன் தண்டம். 10.)

[பரவை - கடல். அயன்பதம் - பிரமலோகம். நெடியோன் - திருமால்.]

வீட்டிலுள்ள ஒருவன் கோபித்துக்கொண்டால் வெளியில் இருப்பவர்கள் பார்த்துப் பயப்படுவார்கள். அவனது கோபத்தைப் பார்த்துப் பழகிப் போன மனைவிக்கு அதைக் கண்டு சிறிதும் அச்சம் இராது. இது அவருக்கு வழக்கம் என்று எண்ணியிருப்பாள். அசுரர்கள் சூரனுடைய கோபத்தைப் பல முறை கண்டவர்கள். ஆகவே சூரனுடைய கோபம் அவர்களுக்கு நடுக்கத்தை உண்டாக்காமல் அல்லவா இருக்கவேண்டும்? ஆனால் இப்போது உண்டான கோபம் சாமானிய கோபமா? இயற்கையாக எழுந்த கோபத்தைவிட இது பன்மடங்கு கொடிய கோபம் அல்லவா? ஆகவே அவுணர்களே அஞ்சினார்களாம்.

அவுணரும் நடுங்கினர்.

"நாம் இத்தனை பேர்கள் இருந்தும் என்ன பயன்? என்னுடைய தங்கையின் கை வெட்டுப்படும்படி ஆயிற்றே. என்னிடத்தில் அசுரர்களாகிய நீங்கள் எத்தனை பேர்கள் இருக்கிறீர்கள்? என்னுடைய புதல்வர்கள் இருக்கிறார்கள். எங்கும் நிகர் இல்லாத இந்திரஞாலம் என்னும் தேர் இருக்கிறது. சக்கராயுதம் கையில் இருக்கிறது. உலகமெல்லாம் கண்டு அஞ்சத்தக்க பேர் எனக்கு இருக்கிறது. நானும் இங்கேயே நிற்கின்றேன். யார் இருந்து என்ன பயன்? என் தங்கையின் கை துணிக்கப்பட்டுவிட்டதே!" என்று அவன் வருந்தினான்; கதறினான்.

**நீர்இ ருந்தனிர்; புதல்வரும் இருந்தனர்; நிகரில்
தேர்இ ருந்தது; நேமியும் இருந்தது; சிறிதென்
பேர்இ ருந்தது; யானும்இங் கிருந்தனன்; பின்னை
யார்இ ருந்தும்என்? இருந்துமா கின்றதென் அந்தோ!**

(சூரன் தண்டம். 18.)

[நேமி - சக்கரம்.]

"இவளுடைய கையிலிருந்து ஒழுகிய இரத்தத் துளிகளினால் நம்முடைய புகழே அழிந்து போயிற்று" என்று வருந்தினான்.

பானுகோபன் புறப்பட்டுச் செல்லுதல்

அப்போது அங்கே வந்த பானுகோபன், "நாங்கள் எல்லாம் இருக்கும்போது நீ ஏன் வருந்துகிறாய்?" என்று சூரனைப் பார்த்துக் கேட்டான். சூரனிடமிருந்து செய்தியை அறிந்துகொண்டவுடன்,

"என்னுடைய அத்தையின் கையை வெட்டிய அந்த மனிதனையும், உனக்குக் காதல் உணர்ச்சியை உண்டாக்கிய இந்திராணியையும், அவளுடைய கணவன் இந்திரனையும், அங்கே இருக்கிற தேவர்களையும் பற்றிக்கொண்டு நான் வருகிறேன் பார்" என்று சொல்லி, சூரனையும் சிற்றப்பன்மார்களையும் வணங்கிப் புறப்பட்டான்; "இப்போதே போய் அவர்களை எல்லாம் இழுத்துப் பற்றிக்கொண்டு வருகிறேன்" என்று முழக்கமிட்டுச் சென்றான்.

பானுகோபன் புறப்பட்ட பிறகு பிரமன் பஞ்சாங்கம் சொல்லிக் கொண்டு வந்தான். அசமுகி, துன்முகி ஆகிய இரண்டு பேர்களின் கைகளையும் மீட்டு முன்போலவே உண்டாக்குமாறு பிரமனைப் பணித்தான் சூரன். அப்படியே பிரமன், கைகள் கூடுக என்று சொல்ல, அவர்களுடைய கைகள் பழையபடியே ஆயின.

என்று தான்இவை மொழிதலும் திசைமுகன் இசைந்து
வன்தி றற்கரம் கூடுக மற்றிவர்க் கெனலும்
ஒன்றோர் மாத்திரைப் பொழுதின்முன் அவைவளர்ந் துறலும்
நன்று நன்றுநின் வல்லபம் என்றுசூர் நவின்றான்.

(சூரன் தண்டம். 35.)

[தான் - சூரன். திசைமுகன் - பிரமன்.]

அதைக் கண்டு பிரமனைப் பார்த்து, "உன்னுடைய வல்லமை நல்லது" என்று பாராட்டினான் சூரபன்மன்; துன்முகியைப் பானுகோபனுடன் சென்று இந்திராணி இருந்த இடத்தைக் காட்டப் பணித்தான்.

நவக்கிரகங்கள் பட்ட பாடு

பிறகு நவக்கிரகங்களை அழைத்தான்; "எல்லோரும் வானத்தில் இருக்கிறபோது, ஏன் என் தங்கையின் கையை வெட்டும்படியாக விட்டீர்கள்?" என்று கேட்டான்; "நீங்கள் அவனுக்குத் துணையாகவே இருந்திருக்கிறீர்கள். இல்லையென்றால் அதைப் பார்த்துத் தடுக்காமல் விட்டிருப்பீர்களா?" என்றான்.

மறத்தி றத்தினல் எங்கைதன் கையையோர் வலியோன்
குறைத்த தற்குநீர் அகத்தரே; அல்லது குறிக்கின்
புறத்தர் அன்று; நம் ஆணையால் இத்தொழில் புரிவீர்;
முறைத்தி றங்கொலோ நுங்களுக் கிதுவென மொழிந்தான்.

(சூரன் தண்டம். 41.)

[மறத்திறத்தினல் - அக்கிரமமாக. எங்கைதன் - என்தங்கையின். குறைத்ததற்கு - வெட்டியதற்கு. அகத்தர் - உட்பட்டவர்கள்; துணையானவர்கள். குறிக்கின் - யோசித்தால். புறத்தர் அன்று - அயலார் அல்ல.]

நவக்கிரகங்கள் அவனைப் பார்த்து, "நாங்கள் எங்கள் வழிமேல் கண்களை வைத்துக்கொண்டு சென்ருேம். அங்கே நிகழ்ந்ததைக் காணவில்லை" என்று சொன்னுர்கள். அதைக் கேட்ட சூரபன்மா வுக்குக் கோபம் குறையவில்லை. "இவளுடைய கையைத் துணிப் பதைப் பார்க்கவில்லையாம்! இவர்களின் செயல் மிக்க அழகாக இருக்கிறது! இவர்களை எல்லாம் பிடித்துப் போய்ச் சிறையில் அடையுங்கள்" என்ருன்.

துண்டம் ஆகியே இவள்கரம் துணிபட்ட செய்கை
கண்டி லார்களாம்! கதியிடைச் சென்றவாம் கண்கள்!
அண்டர் தம்செயல் அழகிதென் றனையரை யெல்லாம்
தண்டல் இல்லதோர் சிறைபுரி வித்தனன் தலைவன்.

(சூரன் தண்டம். 43.)

[கதி - வழி. அண்டர் - தேவர். தண்டல் - குறைதல்.]

சூரியன், சந்திரன் முதலானவர்கள் சிறையில் அடைக்கப்பட் டதைப் பிரமன் அறிந்தான். அவன் சூரனைப் பார்த்து, "நீ இவர்கள் பிழையைப் பொறுத்தருள வேண்டும். இவர்கள் இல்லாவிட்டால் உலகத்தில் வெளிச்சம் இருக்காது. எல்லா உலகமும் இருளாகி விடும். அசுரர் குலமும் இருளில் மூழ்கும். இவர்கள் தங்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்காக இவர்களை விடுதலை செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். உடனே சூரன் அவர்களை விடுதலை செய்தான்.

வன்தளை உற்ருேர் தம்மை
மன்னவர் மன்னன் பாரா
என்றும்நம் பணியில் நிற்றிர்;
இந்திர னெடுசேர் கல்லிர்;
சென்றிடும் நுங்கள் தொன்மை
செய்திட என்ன, அன்னேர்
நன்றிது புரிதும் என்ன
நயமொழி புகன்று போனுர்.

(சூரன் தண்டம். 70.)

[வன் தளை - வலிய விலங்கு. மன்னவர் மன்னன் - சூரன். சேர்கல்லிர் - சேரா தீர்கள். தொன்மை - பழைய தொழில்.]

அப்போது அவர்களை அழைத்துச் சூரன், "நீங்கள் என்னு டைய ஏவலின்படி உங்களுடைய வேலைகளைச் செய்து கொண்டு

இருங்கள். இந்திரனுடன் சேரக்கூடாது" என்று புத்திமதி புகட்டி அவர்களை அனுப்பினன். அவர்களும் தாங்கள் அவன் சொற்படி நடப்பதாக நய்மொழி சொல்லிவிட்டுப் போனர்கள்.

பானுகோபனும் சயந்தனும் போர் செய்தல்

பானுகோபன் துன்முகியோடு சீகாழிக்குப் போனன். அங்கே யாரையும் காணவில்லை. பிறகு அங்கிருந்து இந்திர லோகம் போனன். அங்கே இந்திரனையும் இந்திராணியையும் காணவில்லை. ஆனல் வைகுண்டத்திற்குச் சென்றிருந்த இந்திரனுடைய மகனுகிய சயந்தன் திரும்பி வந்து அங்கே தனியாக இருந்தான். பானு கோபன் இந்திர லோகத்திற்கு வருவதைத் தேவர்களால் அறிந்தான் சயந்தன். "என் தந்தையும் தாயும் போன இடம் தெரியவில்லை. நான் எங்கும் போகப் போவதில்லை. வெறும் புலம்பலினல் ஏதும் பயன் இல்லை. வருவது வந்தே தீரும். இங்கேயே இருந்து பானு கோபனுடன் போர் செய்யப் போகிறேன். ஒன்று, இறக்க வேண்டும்; அல்லது, வென்று வாழவேண்டும்" என்று அவன் சொன்னன்.

போவ தில்லை யாண்டும்; இனிப்
புலம்பு மாறும் இல்லை; அதின்
ஆவ தில்லை; வருவதெல்லாம்
அடையும் அன்றி அகலுவதோ ?
ஈவ தில்லை அவர்க்குவெரிந் ;
இறைஞ்சிப் புகழ்வ திலைஎதிர்ந்து
சாவ தல்லால் உய்ந்திடுதல்
இரண்டே உறுதி தமியேற்கே.

(அமரர் சிறை புகு. 24.)

[வெரிந் - முதுகு. வெரிந் ஈவதில்லை - தோற்பதில்லை.]

தேவர்கள் அவனுடைய விரதத்தைக் கேட்டுச் சற்றே நடுங்கி னர்கள். "நான் வீரத்துடன் அவர்களுடன் போர் செய்வதற்குப் போகிறேன். என்னிடத்தில் அன்பு உடையவர்களாக இருந்தால் வாருங்கள். அஞ்சுகிறவர்கள் என்னேடு வரவேண்டிய அவசியம் இல்லை. எல்லோரும் மனத்தில் அச்சம் கொண்டு என்னை விட்டுப் போனலும் நான் சற்றேனும் தளர்ச்சியின்றி அவனை எதிர்த்தே போராடுவேன்" என்றான் சயந்தன்.

தேவர்கள் உடன்வர, அவன் ஐராவதத்தின்மேல் ஏறிப் பானு கோபனை எதிர்த்தான். இரு சாராருக்கும் போர் நடந்தது. அமரர்கள் தோற்று ஓடினார்கள். சயந்தன் நேரே வந்து அம்புகளை வீசினான்; மாயத்தால் பல வடிவாய் நின்று போர் செய்தான்; ஐராவதத்தின் மீது இருந்து அவுணர் படைகளைக் கடலைக் கலக்கு வது போலக் கலக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது பானுகோபன் பஞ்சாட்சரத்தைச் செபித்தான். பஞ்சாட்சரம் உயிர் காக்கும் சொத்து அல்லவா? சுக்கிரன் அந்த மந்திரத்தை அவனுக்கு உபதேசம் செய்திருந்தான். அதைச் செபித் தவுடன் சயந்தன் செய்த மாயைகள் அகன்றன. அப்போது பானு கோபன் அவனைப் பார்த்து, "இந்திரன் பிள்ளையே, நீ வா. உன் மாயையும், வலிமையும் நான் இங்கே வருவதற்கு முன்னரே போய் விட்டதைப் பார்த்தாயே! சூரியனையே பிடித்துச் சிறையில் அடைத் தவன் ஆயிற்றே நான். அவனைப் போலவே உன்னையும் சிறையில் அடைப்பேன். உனக்குச் சக்தி இருந்தால் என்னோடு வந்து போர் செய்வாயாக" என்று அறை கூவினான்.

வருதி இந்திரன் மதலை, நின் மாயையும் வலியும்
கருதி யான்வரு முன்னரே போயின கண்டாய்;
பருதி போலவே நின்னையும் இருஞ்சிறைப் படுப்பன்;
பொருதி வல்லையேல், என்றனன் சூர்தரு புதல்வன்.

(அமரர் சிறைபுகு. 64.)

[வருதி - வா. மதலை - மகனே. பருதி - சூரியன். பொருதி - போர் செய். வல்லையேல் - வலிமையுடையையானால்.]

இருவருக்கும் கடுமையான போர் நடந்தது. அப்போது நீண்ட அம்புகளைப் பானுகோபன் விட, அவை இந்திரனுடைய மகனாகிய சயந்தன் மார்பில் போய்க் குத்தின. ஐராவதத்தின்மேல் அவன் உணர்ச்சியில்லாமல் விழுந்து விட்டான். ஐராவதம் சினந்து சூரன் மகனது தேரைத் தாக்கி அழித்தது; அவனது மார்பில் தன் தந்தங்களால் குத்தியது. அப்போது அதன் தந்தங்கள் முறிந்தன. பானுகோபன் சினந்து அதன் தும்பிக்கையைப் பிடித்து இழுத்து அதன் கவுளில் அறைந்தான். அது மயங்கி விழுந்துவிட்டது. சயந்தன் சற்றே உணர்வு வரவே, பார்த்தான். முன்னே நிகழ்ந் ததைக் கவனித்தான். 'நாம் செய்த மாயை போய்விட்டது. உடன்

இருந்த துணைவர்கள் ஓடிவிட்டார்கள். நாம் தனியாக இருக்கிறோம். தீயவர்கள் நம்மைச் சிறைப்பிடித்துப் போவார்கள். இந்த நகரம் அழியும். இப்படி எல்லாம் எண்ணி மனமே நீ வருந்தாதே. எல்லாம் விதி விட்ட வழிபோலத்தான் நடக்கும்' என்று எண்ணினன்.

மாயைபோயது; தனித்தனம்; குறைந்தது வன்மை;
தீயர் பற்றுவர்; அழியும்இந் நகர்எனச் சிறிதும்
நீஇரங்கலை; இனிமன மே,விதி நெறிகாண்
ஆயின் இங்குஇவை, என்றனன் சயந்தனும் அறிஞன்.

(அமரர் சிறைபுகு. 85.)

[தனித்தனம் - தனியாக இருக்கின்றோம். இரங்கலை - வருந்தாதே. ஆயின் - யோசித்துப் பார்த்தால்.]

அமரர் சிறை புகுதல்

அப்போது பானுகோபன் ஆணையினால் அசுரர்கள் சயந்தனைக் கட்டிச் சிறைப்பிடித்தார்கள். தேவர்களை எல்லாம் சிறைப்பிடித்தார்கள். தேவருலகத்திற்குத் தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

இங்கே கச்சியப்பர் ஒரு நீதி சொல்கிறார். 'அமராவதிப் பட்டணம் பிரளய காலத்தில் அன்றி மற்ற நாட்களில் அழிவுறாது. அது இப்போது புழுதிபட்டுப் போய்விட்டது. எல்லாச் செல்வங்களுக்கும் மேலான செல்வம் இந்திரனுடைய ஐசுவரியம். இந்திர போகம் என்று உதாரணத்திற்குச் சொல்வார்கள். அத்தகைய சிறந்த போகத்தை உடையவனாய் இருந்த இந்திரனே வறியனாகிப் போய்விட்டான். எல்லா வகையான சக்திகளையும் பெற்ற தேவர்கள் சிறையை அடைந்தார்கள். இவற்றை எல்லாம் பார்த்தால் செல்வத்தையும், போகத்தையும் நிலையென மதிக்கலாமா?' என்கிறார் அவர்.

ஊழியின் அன்றி என்றும் ஒழிவுறாத் துறக்க மூதூர்
பூழிய தான தன்றே! புரந்தரன் வறியன் போனான்;
வீழுறு சிறையின் உற்றார் மிக்கவர் என்றால், யாரும்
வாழிய செல்வந் தன்னை நிலைஎன மதிக்க லாமோ?

(அமரர் சிறைபுகு. 95.)

[ஊழி - பிரளய காலம். துறக்க மூதூர் - சொர்க்கம். பூழி - புழுதி. மிக்கவர் - தேவர். வாழிய : அசை.]

பானுகோபன் சயந்தனைக் கட்டிக்கொண்டு சூரனை அடைந்து வணங்கிச் சொல்ல ஆரம்பித்தான்.

"நான் இந்திராணியைக் காணவில்லை. இந்திரனையும் பார்க்க முடியவில்லை. அவர்களுடைய மகனாகிய சயந்தனைக் கொண்டு

வந்தேன். தேவர்களைச் சிறைப்பிடித்து வந்திருக்கிறேன். தேவ லோகம் முழுவதற்கும் தீயிட்டு வந்தேன்" எனத் தன்னுடைய வீரச்செயல்களை அவன் சொன்னான். அதைக் கேட்ட சூரபன்மன் தன் மகனைத் தழுவிக் கொண்டான். தேவர்களைக் கொண்டுபோய் அவர்களுடைய அங்கங்களை வெட்டும்படி சொன்னான்.

அசுரர்கள் தேவர்களுடைய அங்கங்களை வெட்டினார்கள். தேவர்கள் தவ பலம் உடையவர்கள் ஆகையால் வெட்ட வெட்ட அவர்களுடைய அங்கங்கள் மறுபடியும் வளர்ந்துகொண்டு வந்தன. அதைக் கண்டு கோபம் மிக்க சூரன், "இவர்களைக் கொண்டுபோய்க் கடுமையான சிறையில் அடையுங்கள்" என்று சொன்னான். ஏவலாளர்கள் தேவர்களையும், சயந்தனையும் பிடர்பிடித்து உந்திக் கொண்டு போனார்கள் சிறைக்கு.

கண்டனன், முனிந்தின் னோரைக்
காலமொன் றானும் வீடா
எண்தரு நிரயம் போலும்
இருஞ்சிறை இடுதிர் என்றே
திண்திறல் அசுரர் கேட்பச்
செப்பலும், சயந்தன் றன்னை
அண்டரைப் பிடர்தொட் டுந்தி
ஆங்ஙனம் கொண்டு போனார்.

(அமரர் சிறைபுகு. 104.)

[வீடா - அழியாத. நிரயம் - நரகம். அண்டரை - தேவரை. பிடர்தொட்டு உந்தி - கழுத்தைப் பிடித்துத் தள்ளி.]

கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போனார்களாம்; கல்தாக் கொடுத்துத் தள்ளினார்கள். தேவமாதர்களை அழைத்து அசுரப்பெண் களுக்கு ஏவல் செய்யும்படி கட்டளையிட்டான் சூரன்.

போர்க்களத்தில் மயங்கி விழுந்த ஐராவதம் திருவெண்காடு சென்று சிவபெருமானைப் பூஜை செய்துகொண்டிருந்தது.

வாலிய ஒளிகெழு வனத்தில் ஏகியே
மூலம தாகிய முக்கண் மூர்த்தியை
மேலுள தாணுவின் மேவச் செய்துபின்
சீலமோ டருச்சனை செய்து வைகிற்றே.

(அமரர் சிறை. 113.)

[வாலிய ஒளி கெழு வனம் - வெண்மையான ஒளி நிறைந்த காடு; திருவெண்காடு. தாணுவில் - லிங்கத்தில். மேவச்செய்து - ஆவாகனம் பண்ணி.]

இறைவனைப் பூஜை செய்ததன் பயனாக ஐராவதம் இழந்த நான்கு கொம்புகளும் வளர்ந்தன.

இப்படிக் கதை சொல்லி வந்த தேவகுரு முருகனைப் பார்த்து ஒரு விண்ணப்பத்தைச் சொன்னார்.

"பிரமன் சூரபன்மாவுக்குப் பஞ்சாங்கம் சொல்லித் திரிகிறான். திருமால் அவனோடு போர்செய்து தோல்வியுற்றான். சிவபெருமான் சூரனுக்கு நல்ல வரங்களை எல்லாம் அளித்திருக்கிறார். ஆகவே சூரனோடு அவர் போர் புரியவில்லை. இந்த நிலையில் தேவர்கள் துன்புறுகிறார்கள். நீயே சூரபன்மனிடம் சென்று அவனை அழித்து அருளவேண்டும்" என்று தேவகுரு பிரார்த்தித்தார்.

வேதங்களை ஓதுகின்றவன் நான்முகன். இப்போது சூரபன்மாவுக்கு முன்னாலே பஞ்சாங்கம் படிக்கிறான். வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பவை ஐந்து அங்கங்கள். நாம் இப்போது தினக் காலண்டர் வாங்கி வைத்திருக்கிறோம். ஒவ்வொரு நாள் முடிந்தவுடன் ஒரு தாள் கிழிகின்றது. அதில் நாள், நட்சத்திரம் எல்லாம் போட்டிருக்கும். பெரிய கோவில்களில் பஞ்சாங்கம் வாசிப்பதற்கு என்றே ஒருவர் இருப்பார். கணிதம் வல்லவர்கள் காலையில் எழுந்தவுடன் மன்னன் முன்பு சென்று, இன்றைக்கு இன்ன நாள், இன்ன திதி என்று பஞ்சாங்கம் சொல்வார்கள். திருப்பதியில் இன்றைக்கும் நாள்தோறும் பஞ்சாங்கம் படிக்கிறார்கள். அதுபோல் சூரபன்மாவின் அரண்மனையில் உலகத்தை எல்லாம் படைக்கின்ற பிரமன், எப்போதும் வேத பாராயணம் செய்கின்ற பிரமன், இப்போது பஞ்சாங்கம் படித்துக்கொண்டிருந்தான்.

"பரமசிவன் சூரபன்மாவுக்கு வரம் கொடுத்தவர்; ஆகையால் சூரனை அவரே அழிக்க நினைக்கமாட்டார். திருமால் சூரனிடம் தோற்றுப்போன சமாசாரந்தான் உனக்குத் தெரியுமே! நீ ஒருத்தன் தான் எஞ்சியிருக்கிறாய். ஆகவே நீதான் சூரபன்மாவை அழித்து எங்களுக்கெல்லாம் அருள் செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார் பிருகஸ்பதி.

ஐந்தியல் அங்கம் சூரற்கு
அயன்புகன்று உழல்வான் நாளும்;
இந்திரை கேள்வன் போர்செய்து
எஞ்சினன்; எவர்க்கும் மேலாய்,
முந்திய சிவன்அன் னோற்கு
முதல்வரம் அளித்தான்; பின்னர்
வந்துஅடல் புரியான்; நீயே
மற்றுஅவற் கோறல் வேண்டும்.

(அமரர் சிறை. 133.)

[ஐந்தியல் அங்கம் - பஞ்சாங்கம். இந்திரை கேள்வன் - திருமகள் கணவனாகிய திருமால். எஞ்சினன் - தோல்வியடைந்தான். அடல் புரியான் - அழிக்கமாட்டான். கோறல் - அழித்தல்.]

வீரவாகுவின் வீரச் செயல்கள்

இதுவரையில் அசுரகணங்களுடைய கதையைப் பார்த்தோம். இனிமேல் வருவது மகேந்திர காண்டம். சூரபன்மாவின் நகராகிய வீரமகேந்திரபுரத்தில் நடக்கிற நிகழ்ச்சிகளைச் சொல்கிற பகுதி இது. இராமாயணத்தில் சுந்தர காண்டம் எப்படியோ அப்படி உள்ளது இந்தக் காண்டம். சுந்தரகாண்டத்தில் அநுமனுடைய வீரச்செயல்களையும், பேராற்றலையும் பார்க்கலாம். சுந்தர காண்டத்திற்குத் தலைவன் அநுமன். மற்றக் காண்டங்களில் எல்லாம் இராமன் தலைவனாக வருகிறான். சுந்தர காண்டத்திற்கு அநுமன் தலைவன் என்று எப்படித் தெரிகிறது? அதிலுள்ள படலத் தலைப்புகளைப் பார்த்தாலே தெரியும். கடல் தாவு படலம் என்கிறபோது யார் என்று கேட்டால் அது தெளிவாகத் தெரியும். யார் கடலைத் தாவியவர் என்றால் அநுமன் என்று விடை வரும். அப்படியே ஊர் தேடு படலம், காட்சிப் படலம், திருவடி தொழுத படலம் என்று வருகிற படலங்களுக்கு எல்லாம் யார் என்ற கேள்வியைப் போட்டால் எழுவாய் அநுமன் என்று விடை வரும். எனவே சுந்தர காண்டம் முழுவதும் அநுமனையே தலைவனாகக் கொண்டது என்பது வெளிப்படும். அதுபோல் மகேந்திர காண்டத்தில் வீரவாகுவின் செயல்கள் வருகின்றன. அந்தக் காண்டத்துக்குத் தலைவர் வீரவாகு தேவர் என்று சொல்லிவிடலாம்.

வீரவாகுவைத் தூதனுப்ப எண்ணுதல்

சூரபன்மன் பல தேவர்களைச் சிறையில் அடைத்தமை அறிந்தான், திருச்செந்தூர்ப் பாசறையில் எழுந்தருளியிருந்த முருகன். அப்போது பிரமன் முதலியவர்கள் முருகப் பெருமானை அணுகி, உடனே சென்று சூரபன்மாவை அழித்துவிடவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவர்களைப் பார்த்து முருகன் சொன்னான்; "பிரமன் முதலிய தேவர்களையும், முனிவர்களையும் போல அசுரர்கள் கூடச் சிவபெருமானுடைய பிள்ளைகளே. ஆகையால் அவர்களைத் திடீரென்று அழிப்பது நியாயம் ஆகாது. யாரேனும் தூதுவனை அனுப்பித் தேவர்களைச் சிறையிலிருந்து விடச்

சொல்வோம். அவன் தேவர்களைச் சிறை நீக்குவானானால் அவனை வாழும்படி விட்டுவிடலாம். அவன் முடியாது என்றால் நாம் அங்கே போய் அவனைச் சங்காரம் செய்யலாம். இதுதான் தர்மம்" என்றான்.

பொல்லாத பிள்ளையைத் தண்டிப்பதற்குப் பெற்றோருக்கு உரிமை உண்டு. அரசன் பொல்லாதவர்களை அழிப்பதே நியாயம்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (குறள்.)

பயிர்களில் களை மண்டுகிறது. பயிர்கள் நன்றாகத் தழைக்க அந்தக் களைகளை எடுத்தெறிய வேண்டும். அப்படி, நல்லவர்களிடையே பொல்லாதவர்களை இருக்கவிடாமல் அழிப்பதே அரசனுக்குரிய தர்மம் ஆகும்.

போரில் பகைவனுக்குத் தூது அனுப்பி, தூது பயன் தராது போனபின்பே போர் செய்வது முறை. போரிலும் ஒரு தர்மம் உண்டு. பழைய தமிழ் நூல்களில் அறப்போர் என்று சொல்வார்கள்.

"அறத்தாறு நுவலும் பூட்கை, மறம்"

என்று **புறநானூற்றில்** வருகிறது. பகைவர்களுடைய ஊருக்குப் படை எடுத்துச் செல்வதற்கு முன்னால் அங்குள்ள பசுக்களையும், அந்தணர்கள், பெண்கள், நோயாளிகள் ஆகியோர்களையும் காப்பதற்காகத் தாம் படையெடுத்து வரப்போவதாக மன்னர் முரசறைவது வழக்கம். அதை அறியும் அறிவில்லாத பசுமாடுகளை அங்கே போய் அடித்துக்கொண்டுவந்து தங்கள் ஊரில் வைத்துக் காப்பாற்றுவது வழக்கம். இவை எல்லாம் தர்மயுத்தத்தின்பாற் படும்.

முருகப் பெருமான் கோபத்தினாலே, உடனே சென்று சூரனை அழிக்க வேண்டுமென்று எண்ணவில்லை. முறைப்படி போரையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தால் யாரையாவது தூது அனுப்ப வேண்டுமென்று சொன்னான். அதைப் பிரமனும் திருமாலும் ஆமோதித்தார்கள்.

**அடலுடைப் பெரும்போர் எந்தை
ஆற்றுமுன் சூரன் முன்னோர்
மிடலுடைத் தூதன் றன்னை
விடுத்தலே அறத்தா றென்றார்.**

அப்போது, யாரைத் தூதுவராக அனுப்புவது என்ற கேள்வி வந்தது. வாயுதேவன், "என்னாலே வீரமகேந்திரத்திற்குச் செல்ல முடியாது" என்று சொன்னான். "நான் பஞ்சாங்கம் பார்க்கப் போகலாமே தவிரத் தூதுவனாகப் போக முடியாது" என்று நான்முகன் சொன்னான்; "வீரமகேந்திரபுரத்திற்குச் சென்று வரக்கூடிய ஆற்றல் உடையவர் வீரவாகு தேவர் ஒருவர்தாம்" என்றும் சொன்னான். உடனே முருகன் வீரவாகுதேவரைப் பார்த்து, "நீ தூது போய் வா" என்று பணித்தான்.

அப்போது அவர் மிகவும் மகிழ்ந்து, "போகபோக்கியங்களை அனுபவிக்கிற சூரபன்மாவிடம் போய், எம்பெருமானே, நீ அருளிச் செய்தவற்றை எல்லாம் சொல்கிறேன். அவன் என்ன எண்ணுகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்று முருகனைப் பணிந்துவிட்டுப் புறப்பட்டார்.

வெந்திறல் அவுணர் ஈண்டும் வீரமா மகேந்தி ரத்தில்
சுந்தரத் திருவின் வைகும் சூரபன் மாவின் முன்போய்
எந்தைநீ அருளிற் றெல்லாம் இசைத்தவன் உள்ளம் நாடி
வந்திடு கின்றேன் என்னா, வணங்கியே தொழுது போனான்.

(வீரவாகு கந்தமாதனம். 13.)

[ஈண்டும் - கூடியிருக்கும். சுந்தரத் திருவின் வைகும் - அழகிய செல்வ வாழ்விலே வாழ்ந்திருக்கும்.]

அப்போது இந்திரன் வீரவாகு தேவருடன் வெளியே வந்து, தனியாக அவரை அழைத்துச் சில வார்த்தைகள் சொன்னான். தேர்தலில் ஒருவர் வென்று எம். எல். ஏ. ஆகி முதல் முதலாகச் சட்டசபைக் கூட்டத்திற்குச் சென்னை போகிறார். அங்கே போய் என்ன என்ன பேசவேண்டுமென்று ஆலோசித்து நினைத்துப் பார்க்கிறார். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயனுடையன எவை என்பதைப் பற்றிப் பலர் அவரிடத்து எடுத்துச் சொல்கிறார்கள். அவர் ஊருக்குக் கிளம்பும் போது ஒரு நண்பர் வந்து, "சென்னையில் என் மைத்துனர் இருக்கிறார். அவரிடம் போய் நான் இரண்டொரு நாளில் அரிசி அனுப்பி வைப்பதாகச் சொல்லுங்கள். ஏன் கடிதமே போடவில்லை, அங்கே சரிவரத் தண்ணீர் கிடைக்கிறதா என்று நான் கேட்டதாகச் சொல்லுங்கள்" என்று சொல்கிறார். எல்லோருக்கும் உரிய பொதுவான கருத்தோடு, தம்முடைய சொந்தக் கருத்தையும் தனியாகச் சொல்லி

அனுப்புகிருர். அது போல இந்திரன் விரவாகு தேவரை அணுகி, "நீங்கள் தூதுபோய்ச் செய்திகளைச் சொல்வதற்கு முன்பு ஒரு காரியம் செய்யவேண்டும்; என்னுடைய மைந்தன் சயந்தன் சிறையில் இருக்கிருன். அங்கே சென்று அவன் நலமா என்று அறிந்து வாருங்கள். அவனுக்குத் தேறுதல் கூறிவிட்டு வாருங்கள்" என்று சொன்னுன்.

கூர்ந்திடு குலிசத் தண்ணல்
குமரவேள் ஒற்றன் தன்பின்
பேர்ந்தனன் சென்று, வீர,
பெருந்திறற் சூரன் மூதூர்
சார்ந்தனை சிறையில் வானோர்
சயந்தனே டிருந்தார் அங்கட்
சேர்ந்தனை தேற்றிப் பின்உன்
செயலினை முடித்தி என்ருன்.

(வீரவாகு கந்தமாதனம். 14.)

[கூர்ந்திடு - கூர்மையான. குலிசத்து அண்ணல் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன். சார்ந்தனை, சேர்ந்தனை - சார்ந்து, சேர்ந்து; இவை முற்றெச்சங்கள்.]

தேவர்களுக்கு நன்மை கிடைக்கும்போது, அவர்களோடு சேர்ந்து சிறைப்பட்டிருக்கும் தன் மகனையும் முருகப் பெருமான் காப்பாற்றுவான் என்று இந்திரனுக்குத் தோன்றவில்லை என்பதல்ல. சயந்தனை மாத்திரம் காப்பாற்ருமல் முருகன் தனியே விட்டுவிடுவானு? என்ருலும் பிள்ளைப் பாசம் என்பது எல்லாவற்றையும்விட வலிமையுடையது. எவ்வளவு ஞானியாக இருப்பினும் அவர்களைப் பிள்ளைப் பாசம் விடுவதில்லை.

"கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல்"

என்று நைடதத்தில் வருகிறது. ஆகவே, எவ்வளவு பெரியவராக இருந்தாலும், அறிவு உடையவராக இருந்தாலும் தம் குழந்தைகளிடத்தில் பற்று, பாசம், இருக்கும்; இந்திரனிடத்தில் பிள்ளைப்பாசம் இருந்ததில் வியப்பென்ன? அவன் வீரவாகு தேவரிடம் தனியாகத் தன் மகனைப் பார்த்துத் தேறுதல் சொல்லி வரும்படி சொன்னுன்.

வீரவாகு புறப்பட்டுச் செல்லுதல்

வீரவாகு தேவர், முருகப் பெருமான் தம்மைத் தூதுவராக அனுப்பினுனே என்கிற மகிழ்ச்சியோடு புறப்பட்டார். கந்தமாதன வெற்பின் மேலேறிப் பெரிய உருவத்தை எடுத்துக்கொண்டு நின்ருர்.

திருமால், பிரமன் முதலிய தேவர்கள் எல்லாம் அந்த வடிவத்தைக் கண்டு வியந்தார்கள். அங்கிருந்தபடியே சூரனுடைய வீரமகேந்திர புரியைப் பார்த்தார் வீரவாகு தேவர். தம்முடைய கையை நீட்டி அங்கிருக்கிற அத்தனை பேர்களையும் பிசைந்து கொன்றுவிடலாம் என்ற எண்ணம் அவருக்கு வந்தது. என்றாலும் அங்கே இருக்கிற சயந்தனும், பிற தேவர்களும் அழிந்து போவார்களே என்ற எண்ணம் வந்தவுடன் அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டார்.

அந்தப் பிரம்மாண்டமான வடிவு முழுவதையும் தேவர்களால் காண முடியவில்லை. வீரவாகு தேவரின் ஒவ்வோர் உறுப்பைத்தான் கண்டார்கள். அந்த அந்த உறுப்பையே தொழுது, மலர் தூவி, "எங்களுடைய துயரை எல்லாம் மகேந்திரபுரத்திற்குத் தூதுபோய் மாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

விண்ணுலாம் புரிசை வெஞ்சூர்
வியனகர் அதனை நோக்கி
உண்ணிலாம் வெகுளி கொண்டான்;
ஒருகரம் அங்கண் ஓச்சி
நண்ணலார் யாரும் துஞ்ச
நாம்அறப் பிசைகோ என்னா
எண்ணினான்; சிறையில் உற்றோர்க்
கிரங்கிஅவ் வெண்ணம் மீட்டான்.

(வீரவாகு கந்தமாதனம். 40.)

[புரிசை - மதில். ஓச்சி - நீட்டி. நண்ணலார் - பகைவர். நாம் அற - அச்சம் நீங்க. பிசைகோ - பிசையட்டுமா.]

"என்னைப்போல இங்கே தூது போவதற்கு யார் இருக்கிறார்கள்? என்னுடைய வீரத்தை அறிந்துதான் எம்பெருமான் அனுப்பினான்" என்ற அகந்தை சிறிதும் இல்லாமல் வீரவாகு தேவர் அந்தப் பணியை ஏற்றார்; எம்பெருமானை நினைத்துத் தொழுதார்.

எந்தக் காரியம் செய்தாலும் கடவுளை வணங்கிச் செய்வது இந்த நாட்டுப் பழக்கம். ஆகவே தம்மைத் தூதுவனாக அனுப்பிய எம்பெருமானை மனத்தில் தியானம் பண்ணினார்; தொழுதார். அவர் இனிமேல் போய் வீரச்செயல்களைச் செய்யவேண்டும். எனவே, எம்பெருமானின் வீரம் அவருக்கு நினைவு வருகிறது. வீரத்திற்கு இருப்பிடம் தோள். ஆகவே முதலில் எம்பெருமானுடைய பன்னிரண்டு தோள்களை நினைத்து வாழ்த்தினார்.

முருகப் பெருமான் தோள்வலி மிகுதியாக உடையவன் என்பதை வேறு யாருக்கும் இல்லாத பன்னிரண்டு தோள்கள் காட்டு கின்றன. அதன்பிறகு தமக்கு அருள் செய்த ஆறு முகங்களை வாழ்த் தினர். அருள் கொப்புளிக்கும் விழிகளை வாழ்த்தினர். பிறகு வெற்றி தருகின்ற வேலை வாழ்த்தினர். முருகனுடைய திருக்கரத்தி லுள்ள மற்ற மற்ற ஆயுதங்களை வாழ்த்தினர். கடைசியில் பாதார விந்தங்களை வாழ்த்தினர்.

ஆவதோர் காலை எந்தை
ஆறிரு தடந்தோள் வாழ்க !
மூவிரு வதனம் வாழ்க !
முழுதருள் விழிகள் வாழ்க !
தூவுடை நெடுவேல் வாழ்க !
தொல்படை பிறவும் வாழ்க !
தேவர்கள் தேவன் சேயோன்
திருவடி வாழ்க ! என்ருன்.

(வீரவாகு கந்தமாதனம். 49.)

[தூ - ஊன் ; பகைவர்களின் ஊன். படை - ஆயுதங்கள். தேவர்கள் தேவன் சேயோன் - மகாதேவனுடைய புதல்வனுகிய முருகன்.]

பொதுவாக ஆண்டவனை வாழ்த்தும்போது முதலில் திருவடியி லிருந்து தொழுது வாழ்த்துவது வழக்கம். இங்கே சந்தர்ப்பத்திற் கேற்றபடி, வீரச்செயலைச் செய்யப்போகின்ற வீரவாகு தேவர் வீரத் திற்கு இருப்பிடமான பன்னிரண்டு தோள்களை முதலில் வாழ்த்தினர்.

பிறகு தம்முடைய கைகளைத் தலைக்குமேல் கூப்பி, எம் பெருமானைத் தியானித்து ஏத்தும் போது அவர் கண்களில் நீர் ஊற்ருகப் புறப்பட்டது. அந்தக் கண்ணீர் கடலுக்குள் பாய்ந்து அதிலிருந்த உப்பை மாற்றிவிட்டதாம். மயிர்க் கூச்செறிந்ததாம். அது அவர் பூண்ட ருத்திராட்சத்தைப் போலத் தோன்றியதாம்.

ஆண்டகை தொழுத பாணி
அணிமுடிக் கொண்டிவ் வாற்ருல்
ஈண்டுசீர்க் குமர வேளை
ஏத்தலும், அன்பின் கண்ணீர்
வீண்டுதெண் கடலுள் ஏகி
வெள்ளம்மிக் குவரை மாற்றப்
பூண்டகண் டிகையை மானத்
தோன்றின பொடிப்பின் பொம்மல்.

(வீரவாகு தேவர். 50.)

[பாணி - கைகளை. விண்டு - விழ்ந்து. உவரை - உப்புச் சுவையை. கண்டி கையை - ருத்திராட்சத்தை. மான - ஒப்ப. பொடிப்பின் பொம்மல் - மயிர்க்கூச்சின் மிகுதி.]

இறைவன் திருவருளில் ஈடுபட்டவர்களுக்கு, இறைவனை வணங்கும் போது அவர்களை அறியாமலேயே கைகள் தலைக்குமேல் எழுமாம்.

"தொழுதகை தலைமேல் ஏற"

என்று மணிவாசகரைப்பற்றிப் பரஞ்சோதி முனிவர் சொல்கிறார்.

பக்திக்குரிய மெய்ப்பாடுகள்

பக்தி பரவசத்தினால் அடியார்களுக்கு உண்டாகிற மெய்ப்பாடுகள் எல்லாம் அங்கே வீரவாகு தேவருக்கு உண்டானதாகப் பாடுகிறார் ஆசிரியர்.

மீதுகொள் பொடிப்பு மூட
மெய்ப்புலன் சிந்தை ஒன்ற
ஓதுவ தவற என்பும்
உருகிய செருக நாட்டம்
கோதில்பே ரருளின் மூழ்கிக்
குதூகலித் திடுத லோடும்
மூதுல கனைத்தும் ஆவி
முழுவதும் மகிழ்ந்த அன்றே.

(வீரவாகு தேவர். 51.)

[பொடிப்பு - புளகம். ஓதுவ தவற - பேச்சுக் குழற. உருகிய - உருகின. நாட்டம் செருக. ஆவி முழுவதும் - உயிர்கள் யாவும்.]

மனிதனுக்கு மனிதன் அன்பு செய்தாலும், அன்பனுக்குத் துன்பம் நேரும்போது மற்றோர் அன்பன் வருந்துவான்; கண்ணீர் விடுவான். அந்தக் கண்ணீரை அன்புக்கு அறிகுறி என்று சொல்லலாம்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்". (குறள்.)

இறைவனிடத்தில் வைத்த அன்புக்கும் அந்தக் கண்ணீரே அடையாளம். பக்தி என்பது ஒரு குணம். கோபம், பொறுமை என்பன குணங்கள். ஒருவனுக்குக் கோபம் வந்திருக்கிறது என்பதை எப்படித் தெரிந்துகொள்கிறோம்? கோபத்திற்கு வடிவம் கிடையாது. கோபம் உண்டானபோது கண் சிவக்கும். உடம்பு நடுங்கும். வார்த்தைகள் தடித்து வரும். இவைகள் எல்லாம் கோபத்தின் அடையாளம். அவைகளை 'மெய்ப்பாடுகள் என்று தமிழிலும், பாவம் என்று வடமொழியிலும் சொல்வார்கள். பக்தி என்ற குணத்திற்கு அடையாளமாகத் தோன்றுகிற பாவங்கள் பல. கண்களிலிருந்து

நீர் வரும். புளகாங்கிதம் தோன்றும். இறைவனை நினைந்து கண்ணீர் விடுவது பக்தர்களுக்கு அடையாளம் என்பதை மிக அருமையாகத் **தாயுமானவர்** பாடுகிறார்.

"உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி ஊற்ற".

மாணிக்கவாசகரை, 'அழுது அடி அடைந்த அன்பன்' என்று **பரஞ்சோதியார்** சொல்கிறார். மாணிக்கவாசகரே சொல்கிறார்; 'எம்பெருமானே, நான் உன்னிடத்தில் அதிகமாக அன்பு வைத்திருப்பதாக நினைக்கிறேன். ஆனால் நான் பொய்யன். என் நெஞ்சும் பொய். அதனிடத்துள்ள அன்பும் பொய். ஆனால் ஒன்று கேட்கிறேன். என்னை அழும்படி செய். அப்போது நான் உன்னைப் பெறலாம்' என்கிறார்.

"யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்;
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே".

இங்கே ஒரு கேள்வி கேட்கத் தோன்றுகிறது. எல்லாமே பொய்யாகும்போது அழுகை மட்டும் மெய்யாகுமா?

ஓர் ஊரிலுள்ளவர்கள் சிலர் சேர்ந்து நாடகம் போட்டார்கள். வெவ்வேறு வேலைகளைச் செய்கிறவர்கள் அந்த நாடகத்தை நடத்தினார்கள். பலசரக்குக் கடையில் வேலை செய்கிற குப்புசாமி என்பவன் அரசனாக வேடம் பூண்டான். அரசன் நாள்தோறும் தூங்கப் போவதற்கு முன்னாலே அரசியோடு பேசிக்கொண்டிருப்பான்; அவள் தருகிற பாலைக் குடித்துவிட்டுத் தூங்கப் போவான். ஒரு சமயம் அரசி வெளியூருக்குப் போயிருந்தாள். தன் தோழியிடம் இரவில் அரசனுக்குப் பால் கொடுக்கும்படி சொல்லி இருந்தாள். பகைவர்கள் இதுதான் சமயம் என்று அந்தத் தோழியை வசப்படுத்தி அரசனுக்குக் கொடுக்க எடுத்துச் சென்ற பாலில் நஞ்சைக் கலக்கச் செய்தார்கள். தோழி பால் கொடுக்க, அரசன் அதைக் குடித்தான். அவன் இறந்துவிட்டான். பகைவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அரசனுடைய பிள்ளை அரசியோடு சென்றிருந்த காரணத்தினால் தப்பினான். அவன் பல காலம் ஒளிந்து வளர்ந்து, பின் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு, திரும்ப ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இதுதான் கதை.

நாடகம் நடக்கிறது. அரசி அரசனுக்குப் பால் கொடுக்கிருள். நாடகத்தில் பால் கொடுக்கிற காட்சி வரும்போது சுண்ணும்பு நீரையா கொடுப்பார்கள்? ஒரு வெள்ளித் தம்ளரில் பாலேயே கொடுக்கிருர்கள். அதைக் குடிக்கிருன் அரசன். நாடகம் முடிந்த பிறகு, அரசனுக வேஷம் போட்ட பலசரக்குக் கடைக் குப்புசாமி, தன் தலைமேல் இருந்த கிரீடம், இடையில் செருகியிருந்த வாள், அரசனுக்குரிய ஆடையாபரணங்கள் அனைத்தையும் களைந்தெறிகிருன். என்ருலும் அரசனுக வேஷம் போட்டபோது அவன் குடித்த பாலை என்ன செய்ய முடியும்? அது உள்ளுக்குள் போனது போனது தானே? அதை நீக்கமுடியுமா? அப்படி, எல்லாம் பொய்யாக இருந்தாலும் அழுதால் அது உண்மையாகும். அதைத்தான் மாணிக்கவாசகர் சொல்கிருர்.

இராமகிருஷ்ணர் வாக்கு

இராமகிருஷ்ண பரமஹம்சர் இறைவனைக் கண்டவர். அந்தக் காலத்தில் விவேகானந்தராகிய நரேந்திரர் எல்லா நூல்களையும் படித்தறிந்தவராக இருந்தார். அவர் படிக்காத தத்துவ நூல் எதுவும் இல்லை. எந்தச் சந்நியாசியைக் கண்டாலும், "நீர் கடவுளைக் கண்டிருக்கிறீரா?" என்று கேட்பார். தாகூரின் தந்தையாராகிய தேவேந்திரநாத் தாகூர் கங்கையில் ஒரு படகில் தங்கித் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் போய், "நீங்கள் இறைவனைக் கண்டீர்களா?" என்று கேட்டார். அவர் பதில் சொல்லாமல் தட்டிக் கொடுத்து, "நீ மிகவும் சிறப்பாக வாழ்வாய்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். கடைசியில் இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பார்த்தபோதும் அவர் கேட்ட கேள்வி, "நீங்கள் கடவுளைக் கண்டீர்களா?" என்பதுதான். இராமகிருஷ்ணர், "நான் கடவுளைக் கண்டிருக்கிறேன்" என்று பதில் சொல்வார் என்று எதிர்பார்த்தார். அவர் அதற்குமேலே சொன்னுர்; "நான் காட்டுவேன்" என்று கூறினுர். அதோடு விட்டுவிடவில்லை. "இந்த உலகத்தில் வேலை வேண்டும், பிள்ளை வேண்டும் என்றெல்லாம் கேட்கிருர்களேயொழியக் கடவுளைப் பற்றிக் கேட்பவர் யாரும் இல்லை. நீ கேட்கிருயே; நீ அழு. அழுதால் அவனைக் காணலாம்" என்று சொன்னுர். வைகைக் கரையில் இருந்த மாணிக்கவாசகரும் இதைத்தான்

சொன்னர் ; கங்கைக் கரையில் இருந்த இராமகிருஷ்ணரும் சொன்னர். மனம் கரைந்தால் உள்ளத்தில் இறைவனைக் காணலாம் என்று அவர் சொன்னது பலகாலம் பல பேர்கள் அநுபவித்து உணர்ந்து சொன்னதன் எதிரொலியாகும்.

அன்னையின் திருமஞ்சனம்

இன்னும் ஒரு கதை சொல்கிறேன். துர்வாச முனிவர் ஸ்ரீவித்தியா உபாசகர். அவரைக் குரோத பட்டாரகர் என்று சொல்வார்கள். ஸ்ரீ இராஜராஜேசுவரி ஸ்ரீபுரத்தில் எழுந்தருளியிருக்கிருள். நவராத்திரி விழா எங்கும் நடந்தது. அதனல் அம்பிகைக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்தச் செய்தியை இந்திரன் கேள்வியுற்ருன். 'மானிடப் பூச்சிகள் செய்கிற காரியத்தையே அம்பிகை பெரிதாக ஏற்றுக்கொண்டாளா? அப்படியானல் நாம் பூஜை செய்தால் அம்பிகை எவ்வளவோ சந்தோஷப்படுவாள்!' என்று நினைத்தான். உடனே அம்பிகையிடம் சென்று தான் ஒரு பூஜை செய்ய இருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்தான் ; "எம்பெருமாட்டியே, நாளைக்கு என்னுடைய மண்டபப்படியை வைத்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னன். அதற்கு அம்பிகை தனது சம்மதத்தைத் தெரிவித்தாள். மறுநாள் இந்திரன் அம்பிகைக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்தான். அப்போது துர்வாசர் பூவுலகத்திற்கு வந்திருந்தார். மறுநாள் அவர் தேவலோகத்திற்குச் சென்றபோது கூடை கூடையாகப் பலர் நிர்மால்யங்களைக் கொண்டு சென்ருர்கள். "இங்கே என்ன பூஜை நடந்தது?" என்று துர்வாசர் கேட்க, "இது தெரியாதா? அம்பிகைக்கு இந்திரன் பூஜை செய்தான்" என்ருர்கள். "அப்படியா!" என்று துர்வாசருக்கு வியப்பு உண்டாயிற்று. உடனே ஒரு கேள்வி கேட்டார் ; "இந்திரனுக்கு என்ன வந்தது?" என்ருர்.

இந்திரன் முதலிய தேவர்கள் காரணம் இல்லாமல் பூஜை செய்ய மாட்டார்கள். எத்தனையோ தலபுராணங்கள் இருக்கின்றன. பிரமன் பூஜை பண்ணின இடம், வாயு பூஜை பண்ணின இடம் என்றெல்லாம் தலங்கள் இருக்கின்றன. அப்படிப் பூஜை பண்ணினதற்குக் காரணம் இன்னது என்றும் சொல்லியிருப்பார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் செய்த பூஜைகள் எல்லாமே காமிய பூஜைகள்.

ஆகவே இந்திரன் பூஜை பண்ணினுன் என்ருல் அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று நினைத்தார் துர்வாசர். அதனுல் தான், "அவனுக்கு என்ன வந்தது?" என்று கேட்டார். ஒன்றும் இல்லை என்பதை அறிந்தவுடன் அவருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. இந்திரன் பெருமை அது என்று எண்ணவில்லை. எம்பெருமாட்டி செய்த அற்புதம் அது என்று நினைத்தார். எப்போதும் போகத்திலேயே திளைத்திருக்கும் இந்திரன் உள்ளத்திலே நிஷ்காமிய பூஜை பண்ணவேண்டும் என்ற எண்ணத்தைத் தேவி உண்டாக்கினுளே என்று அவள் அருளை வியந்தார்.

அங்கிருந்து ஸ்ரீபுரத்திற்குச் சென்ருர். அம்பிகையை வணங்கி, "கொஞ்சம் பணம் இருந்தாலும் கடவுளை மறக்கும் இந்தக் காலத்தில் எல்லாப் போகங்களையும் உடைய இந்திரன் நிஷ்காமியமாக உன்னைப் பூஜை செய்தானுமே! உன் திருவருள் இருந்தவாறு என்னே!" என்ருர்.

அப்போது அம்பிகை, "என் பக்கத்தில் வந்து பார்" என்ருள். தேவி சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். அவள் உடம்பெல்லாம் கொப்புளமாக இருந்தது. அதைப் பார்த்துத் திடுக்கிட்டார் துர்வாச முனிவர். "இது என்ன அலங்கோலம்? இது என்ன விளையாட்டு?" என்ருர். "நேற்று இந்திரன் பூஜை பண்ணினதைப் பற்றிச் சொன்னுயே! அவன் இமாசலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்தான். மிக மிகக் குளிர்ச்சியான நீரால்தான் அபிஷேகம் பண்ணினுன். ஆனுல், 'இதைப் போல யார் பூஜை பண்ணுவார்கள்?' என்ற அகங்காரத்தினுலே அந்த நீர் வெதும்பியது. அதனுல் இப்படி என் உடம்பெல்லாம் கொப்புளம் ஆகிவிட்டது" என்ருள். அதைக் கேட்ட துர்வாசர் துடிதுடித்துப் போனுர். "இந்தக் கோலத்தைப் பார்த்துக் கொண்டா நான் நிற்பது? தாயே, இதற்குப் பரிகாரம் இல்லையா?" என்ருர். "பரிகாரம் இருக்கிறது; பூலோகத்தில் இன்ன கோவிலில் ஒரு மருத்துவர் இருக்கிருர். அவரிடம் சென்று வா" என்ருள் அம்மை.

உடனே துர்வாசர் வெகு வேகமாகப் பூலோகத்திற்குச் சென்ருர். அம்பிகை குறிப்பிட்ட ஊரில் இருந்த கோவிலுக்குச் சென்ருர். அங்கே எந்த வைத்தியரும் இல்லை. தர்மகர்த்தா

இருந்தார். அர்ச்சகர் இருந்தார். அம்பிகையின் சந்நிதானத்தில் யாரோ ஒருவர் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார். அங்கே எந்த வைத்தியரையும் காணுத துர்வாசர் உடனே ஸ்ரீபுரம் வந்தார்.

அம்பிகையின் சந்நிதானத்தை அடைந்த போது, அம்பிகை ஜல் ஜல் என்று சதங்கை ஒலிக்கச் சந்தோஷமாக நடனமாடிக் கொண்டிருந்தாள். அம்பிகையின் திருமேனி தேசு விட்டு விளங்கியது. "தாயே, இது என்ன ஆச்சரியம்?" என்ருர். "நீ அங்கே நான் சொன்ன வைத்தியனைப் பார்க்கவில்லையா?" என்று கேட்டாள் அம்பிகை. "அங்கே தர்மகர்த்தா இருந்தார். அர்ச்சகர் இருந்தார். யாரோ ஏழை உன் சந்நிதானத்தில் கண்ணில் நீர் வார உன்னைத் தியானித்துக் கொண்டிருந்தான். வேறு வைத்தியர் யாரையும் நான் அங்கே காணவில்லையே!" என்ருர் துர்வாசர். "என்னுடைய சந்நிதானத்தில் என்னை நினைந்து கண்களில் நீர் வர ஒருவன் இருந்தான் என்று சொன்னுயே; அவன்தான் நான் சொன்ன வைத்தியன். அவன் கண்ணீரா விட்டான்? அந்தக் கண்ணீரால் எனக்கு அபிஷேகம் செய்தான். உடனே என் உடம்பிலுள்ள கொப்புளங்கள் போய்விட்டன" என்ருள் அம்பிகை.

அதைக் கேட்ட துர்வாசரின் உள்ளம் குளிர்ந்தது. உண்மை அன்பினல் உள்ளம் உருகி, மனம் கசிந்து விடுகின்ற கண்ணீர் எம்பெருமாட்டியின் திருமஞ்சன நீராகி அவள் உடலையும், உள்ளத்தையும் குளிர்வித்ததே என்று நினைத்துப் போற்றினர்.

"என்பாவும் ஆறுகடல் ஏழிருந்தும் என்அம்மை
அன்பாளர் கண்அருவி ஆடுவது திருவுள்ளம்!"

என்பது **பாசவதைப் பரணி.**

இதுவரைக்கும் சொன்னவற்ருல் அன்புக்கு அடையாளம் கண்ணீர் என்று தெரியும்.

இரு வகை அழுகை

நாமும் கண்ணீர் விடுகிருேம். ஆனல் அன்பினல் அல்ல, உலகத்தில் எதையோ இழந்ததற்காக அழுகிருேம். இதுவும் அன்பர் அழுகையும் ஒன்ருகுமா?

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார்; இரண்டு கோடிக்குச் சொந்தக்காரர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பேருக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தார். அந்தத் தெருவிலேயே வடகோடியில் ஒருவனுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்தார்; தென் கோடியில் ஒருவனுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்தார். இரண்டு புதல்வர்களையும் அவரவர்கள் வீட்டில் குடியேறச் செய்தார். ஒருநாள் இரண்டுகோடி வீட்டிலும் உள்ள பெண்மணிகள் இடுப்பு வலி என்று அழுதார்கள். வடகோடி வீட்டிற்கு ஒரு டாக்டர் வந்தார். தென்கோடி வீட்டாரும் ஒரு பெரிய டாக்டரை அழைத்து வந்திருந் தார்கள். தென்கோடி வீட்டில் அழுதுகொண்டிருந்த பெண்மணியின் ஓலம் குறைந்தது. ஆனல் அந்த வீட்டிற்குள்ளிருந்து குவா, குவா என்று மற்ருேர் அழுகுரல் கேட்டது. வடகோடி வீட்டில் இருந்த பெண்மணி அழுதுகொண்டே இருந்தாள். காரணம் என்ன? இடுப்பு வலி என்று இரண்டு பெண்மணிகளுமே அழுதார்கள்; என்ருலும் தென்கோடி வீட்டுக்காரிக்குப் பிரசவ வேதனை; இன்பமாக முடிகின்ற வேதனை (**sweet agony**). வடகோடி வீட்டுக் காரிக்கோ வாயு வலி. இரண்டு பேர்களும் அழுதது அழுகைதான் என்ருலும் இரண்டும் ஒன்ருகுமா? அதுபோல்தான் நாம் எல்லாம் எது எதற்கோ அழுகிருேம். இறைவனை நினைந்து உருகி இன்பக் கண்ணீர் விடும் அழுகையே சிறந்தது.

“பெற்றவட்கே தெரியும்அந்த வருத்தம்; பிள்ளை
பெருப்பேதை அறிவாளோ? பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம் பலைஉண் டாகும்;
உருதவரே கல்நெஞ்சம் உடைய ராவார்”

என்று **தாயுமானவர்** பாடுகிருர்.

திருவாசகத்தில் ஒரு பாட்டு வருகிறது.

“மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்; உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.”

இவற்றை எல்லாம் கச்சியப்பர் நன்கு அறிந்தவர். ஆகவே வீரவாகு தேவர் அன்பினல் உருகினர் என்பதை அவரிடத்தில்

உண்டான மெய்ப்பாடுகளை விரிவாகச் சொல்லித் தெரிய வைக்கிறார்.

மீதுகொள் பொடிப்பு மூட மெய்ப்புலன் சிந்தை ஒன்ற
ஓதுவ தவற என்பும் உருகிய செருக நாட்டம்
கோதில்பே ரருளின் மூழ்கிக் குதூகலித் திடுத லோடும்
மூதுல கனைத்தும் ஆவி முழுவதும் மகிழ்ந்த வன்றே.

(வீரவாகு தேவர். 51.)

வீரவாகு தேவர் அன்பினாலே உருகியபோது உயிர்கள் மகிழ்ச்சி அடைந்தன. அதன்பிறகு அவர் பழைய வடிவத்தினைக் கொண்டார்.

அந்தப் பக்தி நிலையில் என்பும் உருகிற்று என்கிறார். எலும்பு உருகுவதாவது என்ன? எலும்புருக்கி நோய் வந்ததா? நம் உடம்பில் மிக்க வலிமை உடையதாக இருப்பது எலும்பு. அன்பினால் உள்ளம் குழைகிறபோது எலும்புகள் மென்மை அடைந்து குழைவதுபோல இருக்கும். மாணிக்கவாசகர் பல இடங்களில் எலும்பை உருக்கினான் ஆண்டவன் என்று சொல்வார்;

"இரும்புதரும் மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கி"

என்று பாடுவார்.

வீரசிங்கன் வதை

வீரவாகு தேவர் கடலைத் தாவி யாளிமுகன் வாழும் இலங்கைக்கு அருகே சென்றார். அவர் அங்கே போனபோது யாளிமுகன் சூரபன்மாவைக் காணப் போயிருந்தான். அவன் பிள்ளை அதிவீரன் அங்கே இருந்தான்.

அன்னதோர் வேலை முன்னம் அகன்தலை யாளிப் பேரோன்
துன்னுபல் அனிகத் தோடும் சூரனைக் காண்பான் ஏக,
மன்அதி வீரன் என்னும் மதலைஆ யிரமாம் வெள்ளந்
தன்னொடும் இலங்கை வைகித் தணப்பறப் போற்றி உற்றான்.

(வீரசிங்கன் வதைப். 1.)

[வேலை முன்னம் - காலத்துக்கு முன்னே. அனிகம் - சேனை. மதலை - புதல்வன். தணப்பு அற - நீங்குதலின்றி. போற்றி - பாதுகாத்து.]

வீரவாகு தேவர் போவதைக் கண்ட அதிவீரன் தன்னுடைய படைகளுடன் எழுந்து வழி மறித்தான். போர் தொடங்கியது. வீரவாகு

தேவர் தனியாக இருந்தாலும் இறைவன் திருவருளை உள்ளத்தில் கொண்டு அந்தப் படைகளை எதிர்த்தார். சூரியன் தன் கதிர்களால் பனியையும் இருளையும் சிதற அடிப்பது போல அசுரக் கூட்டத்தை அழித்தார்.

பனிபடர் குழுமல் தன்னைப்
பாயிருட் செறிவை அங்கிக்
கனிபடர் பொற்பின் தோன்றும்
காய்கதிர் முடிக்கு மாபோல்
நனிபடர் அவுணர் தானை
நைந்திடச் சுடர்வாள் ஒன்றால்
தனிபடர் வீர வாகு
தடிந்தனன் திரித லூற்றான்.

(வீரசிங்கன் வதை. 12.)

[குழுமல் - செறிவு. பனி, இருள் என்னும் இரண்டு செறிவையும். அங்கிக்கனி படர் பொற்பின் - அக்கினியாலான பழத்தைப் போன்ற பொலிவோடு. அவுணர் தானை - அசுரர்களின் படை. தனி படர் - தனியாகச் சென்ற. தடிந்தனன் - வெட்டி.]

வீரசிங்கன் என்பவன் சூலத்தை விட்டான். அதை வீரவாகு தேவர் தம் வாளால் இரண்டு துண்டு ஆக்கினார். பின்பு தம் வாளை ஓச்சி அவன் கைகளை வெட்டி, தலையைச் சீவி, ஆழ்கடலிலே வீழ்த்தினார். வீரவாகு தேவர் முதல்முதலாகப் பெற்ற வெற்றி இது. வீரசிங்கன் அழிந்தான்.

இலங்கை வீழ்தல்

இலங்கையில் மூன்று சிகரங்கள் இருந்தன. வீரவாகு தேவர் நடுவில் இருந்த சிகரத்தில் ஏறி ஒரு குதி குதித்தார். இலங்கை என்பது மகேந்திரபுரத்திற்கு வடக்கே இருப்பது. வீரவாகு தேவர் அதன் நடுக்குவட்டில் குதித்தார். அது கடலுக்குள் ஆழ்ந்து மூழ்கியது. அப்போது அங்கே இருந்த அசுரர்கள் எல்லாம் கலங்கினர்; கவலையுற்றார்கள்; புலம்பினார்கள்.

இலங்கைஇது பான்மையின் இருங்கடலுள் மூழ்கக்
குலங்களொடு வைகிய கொடுந்தகுவர் யாரும்
கலங்கினர்; அழுங்கினர்; கவன்றனர்; துவன்றி
மலங்கினர்; புலம்பினர்; மருண்டனர்; வெருண்டார்.

(இலங்கை வீழ். 10.)

[இது பான்மையின் - இவ்வாறு. தகுவர் - அசுரர், கவன்றனர் - கவலையடைந்தனர், துவன்றி - கூடி. மலங்கினர் - மயங்கினர்.]

அதிவீரன் வதை

உடனே அதிவீரன் என்னும் அசுரன் வீரவாகு தேவரை எதிர்க்க வந்தான். அவன் தன் படைகளுடன் வீரவாகு தேவரை எதிர்த்தபோது அவற்றை எல்லாம் தேவர் அழித்தார். மேலும் மேலும் சண்டை நடந்தது. கடைசியில் தேவர் வாளினுலே அவனுடைய இரண்டு அடிகளையும், முடியையும் துணித்து விழ்த்தினர். எமன் அவன் உயிரைக் கொண்டு சென்றுன்.

இடையு குந்ததி வீரன தடிகளோ ரிரண்டும்
முடியும் ஆகமும் தோள்களும் ஆங்கொரு முறையே
சுடர்பி றங்கிய வாளினல் ஆண்டகை துணித்துக்
கடிது வீட்டினன்; நடுவன்வந் தவன்உயிர் கவர்ந்தான்.

(அதிவீரன் வதை. 37.)

[ஆகம் - மார்பு. விட்டினன் - விழ்த்தினன். நடுவன் - யமன்.]

வீரவாகு தேவர் மகேந்திரபுரத்தை அடைதல்

மறுபடியும் வீரவாகு தேவர் எழுந்து ஆகாசத்தின் வழியே புறப்பட்டார். அப்போது கடலுக்குள் அமிழ்ந்திருந்த இலங்கை மீண்டும் மேலே எழுந்தது. பாரங்களை ஏற்றினவுடன் ஓடம் கொஞ்சம் தண்ணீருக்குள் அமிழ்ந்திருக்கும். பாரத்தை எடுத்த பிறகு அது மேலே மிதப்பது போல இப்போது இலங்கை மேலே எழும்பி நின்றது.

எழுந்து வான்வழிச் சேறலும் ஆர்கலி யிடையே
விழுந்து கீழுறும் இலங்கைமீண் டெழுந்தது; விரைவில்
கழிந்த தொல்பரம் நீங்கிய காலையில் கடலூடு
அழுந்து கின்றபொன் தோணிமீச் சென்றிடும் அதுபோல்.

[சேறலும் - சென்றவுடன். ஆர்கலியிடையே - சமுத்திரத்தின் நடுவில். தொல் பரம் - பழைய பாரம். மீச்சென்றிடும் அது போல் - மேலே மிதப்பது போல.]

வான் வழியாகச் சென்ற வீரவாகு தேவர் வீர மகேந்திரபுரத்தின் வடதிசையில் சென்று பார்த்தார். அங்கே உள்ள கோபுரப் பக்கத்தில் கோரன், அதிகோரன் என்ற கொடிய வீரர்கள் படைகளுடன் இருந்தார்கள். 'இவர்களோடு போர் தொடங்கிச் செய்தால் நாம் வந்த காரியம் தாமதப்படும். முருகப்பெருமான் எழுந்

தருளிச் சூரபன்மாவை விரைவில் அழித்தாக வேண்டும்' என்று எண்ணிக் கீழ்வாயிலுக்குப் போய்ச் சேர்ந்தார்.

கயமுகன் வதை

அந்தத் திசையில் கயமுகன் என்ற அசுரன் காவல் காத்து நின்றான். அவனுக்கு ஆயிரம் யானை முகம். வீரவாகு தேவரைக் கண்டவுடன் அவன் எதிர்த்தான். இருவருக்கும் பெரும்போர் மூண்டது. அவன் வீரவாகு தேவரைப் பார்த்து, "மற்ற வாசல் காவல்களை நீக்கி நீ எப்படி இங்கே வந்தாய்? உனக்கு ஏதாவது மாய வித்தை தெரியுமா? என்னுடைய ஆணை இல்லாமல் நீ இந்த வாயிலைக் கடந்து உள்ளே போக முடியாது. இந்த நகரத்தின் காவல் படையின் திறனை நீ அறியாதவன் போலும்! அதுதான் வந்து விட்டாய்" என்று சொல்லி எதிர்த்தான்; ஒரு பெரிய மலையை எடுத்து வீரவாகு தேவர் மீது வீசினான். அந்த மலை தேவரின் தோளில் பட்டவுடன் பொடிப்பொடியாகப் புழுதியாகப் போய் விட்டது.

அப்படி அது பொடியானதற்கு ஓர் உவமை கூறுகிறார் கச்சியப்ப சிவாசாரியார். அவரவர்கள் தம் தம் மனப்போக்குக்கு ஏற்றபடி உவமை சொல்வார்கள். இங்கே, ஒரு விபூதி உருண்டை பொடிப் பொடியாகப் போனதுபோல் மலை பொடியாயிற்று என்கிறார். விபூதி, ருத்திராட்சம் என்று சிவபெருமானோடு சார்ந்தவற்றை நினைக்கின்ற அவருக்கு இங்கே உவமைக்கு விபூதி உருண்டை நினைவு வருகிறது.

வேழத் தோல்முகன் விட்ட பூதரம்
பாழித் தோள்மிசை பட்ட காலையில்
வாழிப் பூதியின் வட்டு விண்டெனப்
பூழித் தாகி உடைந்து போயதே.

(கயமுகன் வதை. 24.)

[வேழத் தோல் முகன் - யானை முகமுடையவன். பூதரம் - மலை. பாழி - வலிமை. பூதியின் வட்டு - விபூதி உருண்டை. பூழித்தாகி - புழுதியை உடையதாகி; பொடிப் பொடியாகி.]

மறுபடியும் பல மலைகளை எடுத்து வீரவாகு தேவர் மீது வீசினான் அந்த அசுரன். அவை யாவும் அவருடைய தோளில் பட்டுப் பொடியாகப் போயின.

அப்படிப் போனது எப்படி இருந்தது? அதற்கு மற்ருேர் உவமை சொல்கிருர் கச்சியப்பர். மிகப் பெரிதாக இருக்கிற மலைகள் எல்லாம் உருத் தெரியாமல் போனதற்கு அந்த உவமை சரியாக இருக்கிறது. மிகப் பெரிய செல்வத்தை ஒருவன் அடைகிருன். அவனுக்குச் சொத்து லட்சக்கணக்கில் இருக்கிறது. அத்தனை செல்வத்தையும் அவன் அறநெறியில் அல்லாமல் தீய நெறியில் சம்பாதித்தான். அந்தச் செல்வம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், எல்லாவற்றையும் மற்றவர்கள் எடுத்துக்கொள்ள, முடிவில் அவன் எல்லாம் இழந்து வறியவனுகவே ஆவான். 'அவனது எல்லாச் செல்வமும் பிறர் கொளப் போவதுபோல எல்லா மலைகளும் பொடியாயின' என்று உவமை சொல்கிருர்.

விறல்கெழு புயத்தி ஞன்மேல் விடுத்திடு கிரிகள் யாவும்
வறிதுபட் டிடலும் காணு மால்கரி முகத்தன் நின்ருன் ;
அறநெறி ஒருவி மொய்ம்பால் ஆற்றிய வெறுக்கை யாவும்
பிறர்கொள உகுத்தி யாதும் ஊதியம் பெறுகி லார்போல்.

(கயமுகன் வதை. 39.)

[விறல் கெழு புயத்தினன் - வீரவாகு தேவர். வறிது பட்டிடலும் - வீணே அழியவும். கரிமுகத்தன் - கஜமுகன். ஒருவி - நீங்கி. மொய்ம்பால் - வலிமையினுல்.]

அதன் பிறகு வீரவாகு தேவர் தம் வாளால் அவன் ஆயிரம் துதிக்கைகளையும் அரிந்தார். தன் துதிக்கைகளை இழந்த அந்த அசுரன் தன் கைகளால் வீரவாகு தேவரைப் பற்ற வந்தான். அவன் கைகளையும் வெட்டி வீழ்த்தினுர். ஆயுதம் ஏந்த முடியாதவனுக இருக்கிற அவனைத் தாம் ஆயுதம் கொண்டு தாக்கக்கூடாது என்று தம் தாளினுல் அவன் மார்பை உதைத்தார். அப்படி உதைத்தவுடன் அவன் ஆ என்று கதறிக்கொண்டு கீழே விழுந்து உயிரை விட்டான். அவனுடைய மார்பிலிருந்து தோன்றிய இரத்த வெள்ளம் கடலில் போய்க் கலந்தது.

உதைத்திடு கின்ற காலை ஒல்லென அரற்றி வீழ்ந்து
மதத்தினை உறுக போல மால்கரி முகத்து வெய்யோன்
பதைத்தனன், ஆவி சிந்திப் பட்டனன் ; பகிர்ந்த மார்பில்
குதித்திடு சோரி நீத்தம் குரைகடற் போய தன்றே.

(கயமுகன் வதை. 48.)

[பகிர்ந்த - பிளந்த. சோரி நீத்தம் - இரத்த வெள்ளம்.]

வீரவாகு தேவர் அப்போது சிந்தித்தார்; 'இன்னும் பலபேர்கள் வந்தால் அவர்களோடு போர் செய்துகொண்டிருந்தால் எடுத்த காரியம் விரைவில் நிறைவேருதே!' என்று எண்ணி, உடனே அணு உருவத்தைக் கொண்டார்.

நொய்யதோர் அணுவின் ஆற்ற
நுணுகியும் மேன்மை தன்னில்
பொய்யில்சீர்ப் பெருமைத் தாயும்
பூரண மாகி வைகும்
செய்யதோர் குமரன் பொற்ருள்
சிந்தைசெய் தன்பிற் போற்றி
ஒய்யென அருளின் நீரால்
ஓர்அணு உருவம் கொண்டான்.

(கயமுகன் வதை. 54.)

[நொய்யது - இலேசானது. அணுவின் - அணுவைப்போல. ஆற்ற - மிகவும். ஒய்யென - விரைவில். அருளின் நீரால் - முருகனது அருளின் தன்மையால்.]

ஓர் அணுவின் உருவம் எடுப்பதற்கு முன்னல் முருகப்பெருமானை வீரவாகு தேவர் சிந்தித்தாராம். முருகன் அணுவுக்கும் அணு வாக, விபுவுக்கும் விபுவாக இருக்கிருன்.

"நுண்ணியான் மிகப்பெரியான்"

என்று ஞானசம்பந்தர் பாடுவார்.

வீரவாகு தேவர் நகரில் புகுதல்

அப்படி அணுவுக்கு அணுவாக இருக்கிற எம்பெருமானை நினைத்து அணு உருவத்தை வீரவாகு தேவர் எடுத்தார். அந்த உருவத்தோடு வீரமகேந்திரபுரம் முழுவதும் சென்று எல்லா இடங்களையும் பார்த்தார். பார்த்தபோது அவருக்கே வியப்பு உண்டாயிற்று. நூற்றெட்டு அண்டங்களுக்கு அதிபதியாக இருந்த வன் சூரபன்மா. அந்த அண்டங்களில் என்ன என்ன அருமையான பொருள்கள் உண்டோ அவற்றை எல்லாம் கொண்டு வந்து இந்த வீரமகேந்திரபுரியில் குவித்திருந்தான். மற்ற மற்ற அண்டங்களுக்கு எல்லாம் போய்ப் பார்த்து எந்த எந்த அண்டத்தில் எத்தகைய அருமையான பொருள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டியதில்லை. அங்கங்கே உள்ளவற்றையெல்லாம் இங்கேயே பார்த்துவிடலாம். அவற்றைப் பார்த்தவுடன் வீரவாகு தேவருக்கு

ஆச்சரியம் மிகுதியாயிற்று. தேவலோகத்திலிருந்த பொருள்களையும் கூடத் தன்னுடைய வலிமையினால் அபகரித்துக்கொண்டு வந்து வைத்திருந்தான்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் பிரிட்டிஷ் மியூசியம் போயிருந்தேன். அங்கே பல வகையான பொருள்களைப் பார்த்தேன். இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பல அருமையான பண்டங்களையும் பார்த்தேன். அப்போது, வெள்ளையரின் ஆட்சிக் காலத்தில் நாம் பறிகொடுத்த பொருள்கள் அவை என்ற எண்ணம் எனக்கு வந்தது. அதுபோல் வீரமகேந்திரபுரியில் சூரபன்மாவுக்கு உரிமையான அண்டங்களில் இருந்த பொருள்கள் மட்டுமல்ல; அவனது வலிமைக்கு அடங்கி, அவனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த அண்டங்களில் இருந்த அருமையான பொருள்களும் அங்கே கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்க வீரவாகு தேவருக்கு வியப்பு உண்டாயிற்று.

ஆனால் அந்த அண்டங்களில் இல்லாத பண்டங்களும் இருந்தன. அவை யாவை என்பதைச் சொல்கிறார் கச்சியப்பர்.

உரைசெய் ஆயிரத் தெட்டெனும் அண்டத்தின் உளவாம்
கரையில் சீரெலாம் தொகுத்தனன்; ஈண்டவை கண்டாம்;
தருமம் மெய்அளி கண்டிலம்; அவற்றையும் தந்து
சுரர்கள் தம்முடன் சிறையிலிட் டான்கொலோ சூரன்?

(நகர்புகு. 8.)

[கரை இல் - எல்லை இல்லாத. அளி - அன்பு. தந்து - கொண்டு வந்து.]

அங்கே தர்மம், சத்தியம், அன்பு என்ற மூன்றையும் அவர் காண வில்லையாம்.

கம்பர்,

"அறம் புகாதந்த அணிநகர்"

என்று இலங்கையைப் பாடினர். இராவணன் நகரில் தர்மம் உள்ளே புகப் பயந்து ஒழிந்தது என்றார். அதுபோல வீரமகேந்திர புரத்தில் தர்மம், சத்தியம், அன்பு ஆகிய மூன்றுமே இல்லையாம். 'அவற்றையும் பற்றிக்கொண்டு வந்து தேவர்களோடு சிறையில் வைத்து விட்டானோ?' என்று வீரவாகு தேவர் நினைத்தார். வீரம் இருந்தும், செல்வம் இருந்தும், வேறுவகையான திறல்கள் இருந்தும்

சத்தியம், தர்மம், அன்பு ஆகிய மூன்றும் இல்லாமையினாலே முடிவில் அந்தப் பட்டணம் அழிய நேர்ந்தது.

'ஒரு பிரம்மா இந்த மகேந்திரபுரியை வகுத்திருக்க முடியாது. கணக்கில் அடங்காத பிரம்மாக்கள் வந்து இந்தப் பெரு நகரத்தை அமைத்திருக்க வேண்டும்' என்று தேவர் நினைத்தார்.

ஒரு செல்வர் ஒரு பெரிய காரை வாங்கினார். அவர் மகனுக்குக் கார் விடத் தெரியாது. அதற்காகப் புதியதாகத் தாம் வாங்கிய காரிலா ஓட்டுவதற்குக் கற்றுக்கொள்ளச் சொல்வார்? முதலில் வேறு ஏதாவது காரில் ஓட்டச் சொல்லிக்கொடுத்துவிட்டு, பிறகு தம் காரை ஓட்டுவதற்கு அவனிடம் கொடுப்பார். அதுபோல, 'இந்திரன் மகேந்திரபுரியை நிர்மாணிப்பதற்கு முன்னால் அமராவதிப் பட்டணத்தையும், மற்ற மற்றத் தேவர்கள் இருக்கிற இடங்களையும் அமைத்து, நல்ல திறனைப் பெற்ற பிறகுதான் இந்தப் பட்டணத்தை அமைத்திருப்பான்' என்று நினைத்தார் வீரவாகு தேவர்.

புரந்த ரன்றன தூலகமும் ஒழிந்தபுத் தேளிர்
இருந்த வானமும் எண்திசை நகரமும் யாவும்
வருந்தி இந்நகர் சமைத்திட முன்னரே வண்கை
திருந்த வேகொலாம் படைத்தனர் திசைமுகத் தலைவர்.

(நகர் புகு. 13.)

[புரந்தரன் - இந்திரன். புத்தேளிர் - தேவர். திசைமுகத் தலைவர் - பிரம தேவர்கள்.]

மற்றொரு கற்பனையும் ஆசிரியருக்கு இங்கே தோன்றுகிறது. 'பானுகோபன் அமராவதிப் பட்டணத்தை எரித்தான் என்று சொல்கிறார்களே, அது வெறும் பொய்க் கதை. இந்த மகேந்திரபுரிப் பட்டணத்தைப் பார்த்து அமராவதிப் பட்டணம் நாணத்தால் தற்கொலை செய்துகொண்டது. அதைச் சொல்லாமல் பானுகோபன் அழித்தான் என்று சொல்கிறார்களே!' என்று சமத்காரமாகக் கச்சியப்பர் ஒரு கற்பனையை அமைக்கிறார்.

மறக்கொ டும்தொழில் இரவியம் பகைஅழல் மடுப்பத்
துறக்கம் மாண்டது பட்டிமை ஆகும்; அத் தொல்லூர்
சிறக்கும் இந்நகர் நோக்கியே தன்னலம் தேய்ந்து
பொறுக்க ரும்பெரு நாண்சுடக் கரிந்தது போலாம்.

(நகர் புகு, 20.)

[இரவியம்பகை - பானுகோபன். தழல் மடுப்ப - எரிக்க. துறக்கம் - அமராவதி. பட்டிமை - பொய். நாண் சுட - வெட்கம் சுடுவதனால்.]

வீரவாகு தேவர் கண்ட காட்சிகள்

மகேந்திரபுரிக்குள் சென்ற வீரவாகு தேவர் ஒவ்வோர் இடமாகப் பார்த்து வந்தார். மடைப்பள்ளிக்குள் சென்ருர். அங்கே தேவர்கள் சமையல் பண்ணிக்கொண்டிருந்தார்கள். வருண தேவன் அரிசியைக் களைந்துகொண்டிருந்தான். அக்கினி பகவான் அந்த அரிசியோடு மாமிசத்தையும் பக்குவம் பண்ணிக்கொண்டிருந்தான். இப்படித் தேவர்கள் எல்லாம் அசுரர்களுக்காக உணவு ஆக்கிக் கொண்டிருந் தனர். அந்த உணவைத் தேவமகளிர் பரிமாற, அசுரர்கள் உண்டார்கள்.

துய்ய வால்அரி புனற்கிறை மண்ணியே தொகுப்பச்
செய்ய தீயவன் ஊன்களோ டவைபதம் செய்ய
மைஅல் மாதரோ டவுணர்கள் அரம்பையர் வழங்க
நெய்அளா வுண்டி உண்குவர் மறுசிகை நீக்கி.

(நகர் புகு. 29.)

[வால் அரி - வெள்ளை அரிசியை. புனற்கு இறை - வருணன். மண்ணி - கழுவி. தீயவன் - அக்கினி. பதம் செய்ய - சமைக்க. அரம்பையர் - தேவமாதர். மறு சிகை - அடுத்த பிடி.]

மறுசிகை நீக்கி உண்குவர் என்று இங்கே வருகிறது. துரியோதனனைப் பற்றிச் சொல்லும் போது,

"தன்எச்சில் தான்உண்ணுத் தன்மையான்"

என்று சொல்வார்கள். ஒரு தட்டில் உள்ள உணவை ஒரு பிடி எடுத்துச் சாப்பிட்டால் மிச்சம் இருப்பது அவனது எச்சில். அதை அவன் சாப்பிடமாட்டான். இன்னும் ஒரு பிடியை வேறொரு தட்டி லிருந்துதான் எடுத்துச் சாப்பிடுவான். அது அவனது வள வாழ்வுக்கு அடையாளம். அப்படி ஒரே தட்டில் இரண்டாவது பிடியை எடுக்காமல் அசுரர்கள் உண்டார்கள். மகேந்திரபுரியில் உணவுத் தட்டுப்பாடே இல்லையாம்.

கல்யாணத்தில் ஜானவாசம் என்று முதல் நாள் ஒரு விழா நடக்கும். அதில் மாப்பிள்ளை அழைப்பு நடைபெறும். மாப்பிள்ளை மாத்திரம் ஒரு காரில் ஏறி உட்காருவார். அந்தச் சமயத்தில் அவரவர்கள் தங்கள் தங்கள் குழந்தைகளையும் அந்தக் காரில் உட்கார வைப்பார்கள். அதுபோல இங்கே ஒரு காட்சியைக் கச்சியப்பர் சொல்கிருர்.

அசுர மகளிர்கள் தங்கள் குழந்தைகளை எடுத்து வருகிறார்கள். அந்தக் குழந்தைகள் அழுகின்றன. அந்தச் சமயத்தில் சூரியன் அங்கே வருகிறான். உடனே அவர்கள் அந்தக் குழந்தைகளை அவனது தேரில் உட்கார வைத்து, "இவர்களைக் கொஞ்ச தூரம் அழைத்துக் கொண்டுபோய், மறுபடியும் கொண்டு வந்துவிடு" என்று சொல்ல, அந்தக் குழந்தைகள் அழுகையை நிறுத்துகின்றன வாம். சூரியனுடைய தேர் அவ்வளவு எளிதாகப் போய்விட்டது அவர்களுக்கு!

மேல்நி லந்தனில் மங்கையர் சிறார்விடா திரங்க
ஊனம் இல்கதிர் தேர்வர அவரைஆண் டுய்த்து
வான கந்தனில் சில்லிடை ஏகிநம் மகவைப்
பானு வந்துநீ தருகென விடுக்குநர் பலரால்.

(நகர் புகு. 43.)

[மேல் நிலந்தனில் - மேல் மாடியில். இரங்க - அழ. கதிர் தேர் - சூரியனுடைய தேர். உய்த்து - ஏற்றி. சில் இடை - சிறிது தூரம். பானு - சூரியனே.]

அந்த நாட்டில் கிழவர்களே இல்லை. நரை திரை அடைந்து தளர்ந்து நடக்கின்றவர்களையே காணவில்லை. எமனால் இறந்து போகிறவர்களைக் காணவில்லை. நோய் உடையவர்களைக் காண வில்லை. வறுமையினால் வாடுகின்ற ஏழைகளும் அங்கு இல்லை. இப்படி ஓர் இடம் இருப்பது ஆச்சரியம் அல்லவா? எங்கே பார்த் தாலும் கட்டிளங் காளைகள் இருந்தார்கள்; முதியவர்கள் இல்லை. பலம் நிறைந்தவர்கள் இருந்தார்கள்; நோயாளிகள் இல்லை. இதற்கு எல்லாம் என்ன காரணம் என்று யோசனை பண்ணினார் வீரவாகு தேவர். 'சூரபன்மா இறைவனை நோக்கிச் செய்த தவத்தின் பயன் இது. தவத்தினால் ஆகாதது எது?' என்று எண்ணி வியப்பு அடைந்தார்.

நாடி மேல்எழத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமுத் தசைந்திடு வோரையும், கூற்றால்
வீடு வோரையும், பிணிஉழப் போரையும், மிடியால்
வாடு வோரையும் கண்டிலம்; இதுதவ வலியே!

(நகர் புகு. 58.)

[நாடி - நரம்பு. உலறியே - வறண்டு. கோடு - தடி. அசைந்திடுவோரை - தளர்பவரை. கூற்றால் - யமனால். வீடுவோர் - இறப்போர். பிணி உழப்போர் - நோயால் வருந்துவோர். மிடி - வறுமை.]

இப்படி, குறை இல்லாத நிறைவு ஆகிய நாடு ஆயிற்றே; அதை எதற்காக அழிக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றும். இங்கே அசுரர்களுடைய அகம்பாவச் செயல்களைக் கச்சியப்பர் காட்டுகிறார். இதோ ஒரு காட்சி.

அசுரர்கள் தாம் தீமை செய்வதோடு நில்லாமல் மற்றவர்களையும் தீமை செய்யும்படியாகத் தூண்டுவார்கள். உலகத்தில் யாராவது கெட்டுப்போய்விட்டால் தம்மைப்போலவே மற்றவர்களையும் கெடுக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். அங்கே உள்ள அசுரர்கள் அத்தகைய மனோபாவம் உடையவர்கள். ஆடவர்கள் தம் மனைவியராகிய அரக்கியர் கொடுத்த கள்ளைக் குடிக்கிறார்கள். அது காம பானம். அவர்களுக்கு வெறி மூள்கிறது. அப்போது அவர்கள் வளர்க்கின்ற கிளி அங்கே இருக்கிறது. அது ஆண் கிளி. அதனைத் தம்முடைய கையில் ஏந்திக் கள்ளை அதற்கும் ஊட்டுகிறார்கள். அதனால் அதற்கும் காம நோய் உண்டாகிறது. அப்போது அசுரர்கள் ஓர் அக்கிரமச் செயலைச் செய்கிறார்கள். அந்த ஆண் கிளியை அருகில் இருந்த பெண் அன்னத்தோடு இணையச் செய்யும் கொடுமையைச் செய்கிறார்கள். பாவம்! அந்தப் பெண் அன்னத்தின் கணவனாகிய ஆண் அன்னமோ மிகவும் வருந்துகிறது. இப்படி ஓர் இனத்தை மற்றோர் இனத்தோடு இணைத்து அக்கிரமம் நடைபெறும்படி செய்கிறார்கள் அசுரர்கள். முறை திறம்பிய செயல்களைச் செய்கிறவர்கள் யாரோ அவர்கள் எல்லாம் அசுரர்கள்.

கள்ளின் ஆற்றலால் களிப்பவர் தேறலைக் கரத்தில்
கிள்ளை ஆணினுக் கூட்டியே காமநோய் கிளர்த்தி
உள்ளம் ஓடிய சேவலும் இரங்கவோ திமத்துப்
புள்ளின் மென்பெடை மீமிசை கலந்திடப் புணர்ப்பார்.

(நகர் புகு. 65.)

[களிப்பவர் - மயங்கிய அசுரர். தேறலை - கள்ளை. கிளர்த்தி - உண்டாகச் செய்து. சேவலும் - ஆண் அன்னமும். ஓதிமம் - அன்னம்.]

அன்னமும் கிளியும் மிக நல்ல பறவைகள். எந்தச் சூழலில் அவை வளருகின்றனவோ அதற்கு ஏற்றபடி அவற்றின் வாழ்வு இருக்கும்.

மண்டனமிச்ரர் வீடு எங்கே இருக்கிறது என்று சங்கரர் கேட்டார். ''எந்த வீட்டு வாசலில் உள்ள கிளிகள் வேதத்தைச்

சொல்லிக்கொண்டிருக்குமோ அந்த வீடுதான் மண்டனமிச்ரர் வீடு" என்று சொன்னார்களாம். **பெரும்பாணாற்றுப்படை**யில் அந்தணர் உறையும் ஊரைச் சொல்ல வரும் புலவர்,

> "வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
> மறைகாப் பாளர் உறைபதி"

என்கிறார். அங்கே இளம்பிள்ளைகள் வேத அத்தியயனம் செய்கிறார்கள். அவர்கள் அத்தியயனம் செய்வதைக் கேட்டுக்கொண்டு அங்கே இருக்கிற கிளிகளும் வேதத்தை ஓதுகின்றனவாம்.

சத்சங்கத்தின் பயன் இது. பொல்லாத சங்கத்தில் சேர்ந்தால் மனத்திற்குப் பிடிக்காத, மாறுபாடான காரியங்களைச் செய்யும்படி நேரும். நம் நாட்டில் நல்லவர்களது இணக்கத்தை மிகச் சிறப்பாகச் சொல்வார்கள். இறைவனைக் காட்டிலும் அடியவர்கள் பெரியவர்கள் என்று சொல்வது வழக்கம். அதனால் திருத்தொண்டர் புராணத்தைப் **பெரிய புராணம்** என்றே சொன்னார்கள்.

துஷ்டர்களுடைய சகவாசத்தினால் பெண் அன்னத்திற்கு ஏற்பட்டுள்ள நிலையைக் கண்டு ஆண் அன்னம் வருந்தும் காட்சியை வீரவாகு தேவர் கண்டார். கோபமும், அருவருப்பும் அவருக்கு ஏற்பட்டன.

இப்படி ஒவ்வோர் இடத்தையும் ஆராய்ந்து பார்த்து வந்த அவர் பானுகோபன் அரண்மனையைப் பார்த்தார். சூரன், தர்ம கோபன் ஆகியவர்களுடைய அரண்மனைகளையும் பார்த்தார்.

சயந்தன் சிறையில் இருத்தல்

இந்திரன் மகனாகிய சயந்தன் வீரமகேந்திரபுரச் சிறையில் இருந்தான். அவனுடன் வேறு பல தேவர்களும் இருந்தார்கள். அவன் அங்கே இருந்ததைக் கச்சியப்ப சிவாசாரியார் சொல்கிறார். நாம் ஒன்றைச் சொன்னால் நேராக எடுத்துச் சொல்வோம். கவிஞர்கள் சற்று வளைத்துச் சொல்வார்கள். அப்படிச் சொல்வதில் ஓர் அழகு இருக்கிறது. சயந்தன் தேவர்களுடன், தங்குவதற்கரிய மிகவும் கடுமையான சிறையில் தங்கினான் என்பதைச் சொல்ல வருகிறார்,

சயந்தன் இந்திராணியினுடைய புதல்வன். சசி என்பது அவளுக்கு ஒரு பெயர். அந்தச் சசியினுடைய நெற்றி சந்திரனைப் போல வளைந்திருக்கிறது. சசி என்பது சந்திரனுக்கும் பெயர். சசம் என்பது முயல். முயல் போன்ற கறையை உடையவனுகை யால் சசி என்ற பெயர் அவனுக்கு வந்தது. அந்தச் சந்திரன் பாற்கடலில் தோன்றியவன். பாற்கடல் திருமாலின் படுக்கையாக உள்ள இடம். திருமால் பரமேசுவரனுக்கு அம்பாக இருந்தவர் ; முப்புரங்களைச் சிவபெருமான் எரித்தபோது அவன் கையில் அம்பாக இருந்தார் திருமால். இவ்வளவையும் நினைத்து ஆசிரியர் பாடுகிறுர். பரமேசுவரனுடைய அம்பாகிய திருமால் படுத்திருந்த பாயலாகிய பாற்கடலில் தோன்றிய சந்திரனைப் போன்ற நுதலை உடைய இந்திராணி பெற்ற குமாரனுகிய சயந்தன் சிறையில் இருந்தான் என்று சொல்கிறுர்.

பரஞ்சுடர் நெடுங்கணை படுத்த பாயலில்
வரும்சசி அனையதோர் வானு தல்சசி
தரும்சிறு குமரனும் சயந்தன் அவ்விடை
அரும்சிறை இருந்தனன் அமரர் தம்மொடும்.

(சயந்தன் புலம்புறு. 1.)

[பரஞ்சுடர் - சிவபெருமான். கணை - இங்கே திருமால். பாயல் - பாற்கடல். வரும் சசி - தோன்றிய சந்திரன். சசி தரும் - இந்திராணி பெற்ற.]

சயந்தன் கறுப்பு நிறம் உடையவன். அரக்கர்கள் கரிய நிறம் உடையவர்கள். தேவர்கள் ஒளி உடைய திருமேனி உடையவர்கள் ; தேஜோமயமான உடம்பு உடையவர்கள் அவர்கள். எங்கும் கரிய அசுரர்கள் சூழுகின்ற இடத்தில் ஒளி படைத்த திருமேனியை உடையவர்களாகிய தேவர்களுக்கு நடுவில் கரிய நிறம் படைத்த சயந்தன் இருந்தான். பல கரிய நாகங்கள் கவர்ந்து செல்ல, அதனல் சோர்வை அடைந்த பெரிய சந்திரனுக்கு நடுவில் முயல் இருப்பதைப் போலச் சயந்தன் இருந்தானும். அசுரர்களுக்கு நாகங் களும், தேவர்களுக்குச் சந்திரனும், சயந்தனுக்கு முயலும் உவமை.

மழைபுரை அவுணர்சூழ் வைப்பில் வால்ஒளி
தழுவிய அமரருள் சயந்தன் மேயினுன்,
கழிதரு பணிபல கவரச் சோர்தரும்
முழுமதி யதனிடை முயலுற் றென்னவே.

(சயந்தன் புலம்புறு. 3.)

[மழைபுரை - கரிய நிறத்தால் மேகத்தை ஒத்த. வைப்பில் - இடத்தில். வாலொளி - வெண்ணிறம். பணி - நாகம்.]

மேலும் ஓர் உவமை சொல்கிறார் ஆசிரியர். நல்ல மரகத மணியைச் சாணையிட்டு அதனால் ஒரு பொம்மை செய்கிறார்கள். அது அழுக்கு அடைந்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தானாம் சயந்தன். நீலோற்பல மலர் மாலை வாடிப்போனால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தான் என்று மற்றோர் உவமையும் கூறுகிறார்.

தேவியல் மரகதம் தெளித்துத் திட்டிய
ஓவிய உருவம்மா சுண்ட தன்மையான்;
ஆவியம் புனலரு தமரும் காவியம்
பூ இயல் மென்தொடை புலர்ந்த தேஅனான்.

(சயந்தன் புலம்புறு. 8.)

[தெளித்து - சாணையிட்டு. ஓவிய உருவம் - சித்திரப் பதுமை. ஆவி - வாவி. காவி அம் பூ - நீலோற்பல மலர். தொடை - மாலை. புலர்ந்தது - வாடியது.]

அவன் தன்னுடைய பழைய நலத்தை நினைத்துப் பார்த்தான். சயந்தன் கற்பக நிழலில் வளர்ந்தவன்; இப்போது அசுரர்களுடைய சிறையில் கிடந்தான். அந்தப் பழைய நிலை நினைவுக்கு வந்தது. அவன் படுக்கிற படுக்கை மெத்தென இருக்கும். அதில் மலர்களை விரித்திருப்பார்கள்; அதில் படுப்பான். இப்போதோ கட்டாந் தரையில் படுத்திருக்கிறான். அங்கே பெண்கள், அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வார்கள். எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பான். அங்கே இந்திர போகம் நிரம்பியிருந்தது. எல்லாப் போகங்களுக்கும் மேலானது இந்திர போகம் என்று சொல்வார்கள். இப்போது இங்கே சிறையில் வாடுகிறான்.

ஐந்தரு நீழலை நினைக்கும்; ஆய்மலர்
தந்தமென் பள்ளியை உன்னும்; தானெனப்
புந்திகொள் மங்கையர் புணர்ப்பை உட்கொளும்;
இந்திரப் பெருவளம் எண்ணிச் சோருமே.

(சயந்தன் புலம்புறு. 15.)

[ஐந்தரு - ஐந்து வகையான கற்பக மரங்கள். ஆய்மலர் - ஆய்ந்தெடுத்த மலர்கள். பள்ளி - படுக்கை. தான் என - தன்னைப் போலவே. புந்திகொள் - அவனைச் சேரும் எண்ணத்தைக் கொண்ட.]

'என்னுடைய தகப்பனார் எங்கே போனாரோ? சூரபன்மன் செய்கிற காரியங்களை இறைவனிடத்தில் சொல்வதற்காகக் கைலாச மலைக்குப் போனாரோ?' என்று எண்ணினான்.

சிகரம் மிக்கசூர் செயிர்த்துச் செய்திடும்
ஆகுலம் முழுவதும் அறைய அம்மையோர்
பாகம துடையநம் பரமன் மால்வரைக்கு
ஏகின னேகொலோ எந்தை என்றிடும்.

(சயந்தன் புலம்புறு. 20.)

[சிகரம் - செல்வம். சூர் - சூரபன்மன். செயிர்த்து - கோபித்து. ஆகுலம் - துன்பம்.]

பிறகு தாயை நினைத்தான். தாய்க்குப் பிள்ளைப் பாசம் அதிகம். அமராவதிப் பட்டணத்தைத் தீ உண்டதும், பிறகு தன்னை அசுரர்கள் இழுத்துக் கொண்டுவந்து சிறையில் அடைத்ததும் ஆகிய செய்திகளைத் தாய் கேட்டால் என்ன ஆவாளோ என்று எண்ணினன். என்ன என்ன நினைத்து அவள் இரங்குவாளோ என்று அவன் தன் நெஞ்சில் எண்ணி எண்ணி இரங்கினன்.

பொன்நகர் கரிந்ததும் புதல்வ னுக்கும்என்
றன்னைஇம் முழுநகர்த் தந்து தானவர்
துன்னரும் சிறையிடு துயரும் கேட்டபின்
என்நினைந் திரங்குமோ ஈன்ற தாய்எனும்.

(சயந்தன் புலம்புறு. 24.)

[பொன்னகர் - அமராவதி. தானவர் - அசுரர்.]

'என்னைத் தாங்கி வந்த ஐராவதம் போர் செய்தபோது தன்னுடைய தந்தங்கள் ஒடிந்துவிடக் கீழே விழுந்ததே! அது தன் கொம்பை இழந்த பிறகு என்ன செய்ததோ! எப்படி வாடுகின்றதோ! அதன் நிலை தெரியவில்லையே!' என்று யானையை நினைத்து வருந்தினன். உயர்ந்த பண்பு உடையவர்கள் தாம் படுகிற துன்பத்தை மாத்திரம் நினைக்காமல் தம்மோடு சேர்ந்த எல்லோருடைய துன்பத்தையும் எண்ணி ஏங்குவார்கள். 'நம் அரசே போய்விட்டதே! யானையைப்பற்றி என்ன கவலை?' என்று சயந்தன் நினைக்கவில்லை. 'அது என்ன ஆயிற்றோ?' என்று அதன் நிலையை நினைந்தும் வருந்தினன்.

தீங்கதிர்ப் பகையொடு செருமு யன்றநாள்
தாங்கிஎற் கொண்டுழித் தந்தம் இற்றிட
ஆங்கனம் வீழ்ந்ததால்; அதற்கு மேற்பட
யாங்குச்சென் றதுகொலோ யானை என்றிடும்.

(சயந்தன் புலம்புறு. 27.)

[கதிர்ப் பகை - பானுகோபன். செரு முயன்ற நாள் - போர் செய்தபோது.]

இப்படிப் பல்வேறான எண்ணத்தால் அவன் உள்ளம் கலங்கியது. அதற்குப் பின்னர்த் தெளிவு பெற்றான். அறிவு உடையவன் ஆகையால் எல்லாம் விதியின்படி நடக்கும் என்று தெளிவு அடைந்தான்.

பிறப்புறு வைகலைத் தொட்டுப் பின்னரே
இறப்புறு நாள்வரை, யாவர்க்கு ஆயினும்
உறப்படு துய்ப்புஎலாம், ஊழின் ஊற்றமால்;
வெறுப்பதுஎன் அவுணரை? வினையி னேன்எனும்.

(சயந்தன் புலம்புறு. 28.)

[பிறப்புறு வைகலைத் தொட்டு - பிறந்த நாள் தொடங்கி. துய்ப்பு - அநுபவம். ஊற்றம் - வலிமை.]

'பிறந்தது முதல் இறக்கும் வரைக்கும் நமக்குக் கிடைக்கின்ற இன்ப துன்பம் ஆகியவை விதி வழியே வரும். அப்படி இருக்க, அசுரர்களை எதற்காக வெறுக்க வேண்டும்? என்னுடைய தீ வினையே எனக்கு இவ்வாறு முடிந்தது' என்று அவன் ஒருவாறு தெளிவு பெற்றான்.

நமக்கு வருகின்ற துன்பங்களும், இன்பங்களும் முன்னை ஊழ்வினையின் பயனாக வருகின்றன. புறநானூற்றில் ஒரு பாடல்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று தொடங்குகிறது. அந்த அடி எல்லோருக்கும் தெரியும். அது வருகிற பாடலில்தான் ஊழ்வினை பற்றிய செய்தி வருகிறது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

என்று அந்தப் புலவர் சொல்கிறார். நமக்கு உண்டாகிற துன்பத்திற்கும் இன்பத்திற்கும் நாம் செய்த செயல்களே காரணம். நீரோட்டத்தில் ஓடம் எப்படி ஓடுமோ அப்படி உயிரானது விதி வழிப்படும் என்று அந்தப் பாட்டில் சொல்கிறார்.

"நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்."

'ஆகையால் பெரியோர்களை வியந்து பாராட்ட மாட்டோம். அப்படி ஒருகால் பாராட்டினாலும் சிறியவர்களை இகழவே மாட்டோம்' என்று பாட்டு முடிகிறது.

"பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."

சயந்தன்,

பிறப்புறு வைகலைத் தொட்டுப் பின்னரே
இறப்புறு நாள்வரை யாவர்க்கு ஆயினும்
உறப்படு துய்ப்பெலாம் ஊழின் ஊற்றமால்

என்று சொன்னான்.

வினைகள்

நம்முடைய வினைகள் மூன்று வகைப்படும்; சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பவை அவை. பிறவிகள்தோறும் நாம் பல செயல்களைச் செய்து வருகிறோம். அவற்றால் உண்டான புண்ணிய பாவத் தொகுதிக்குச் சஞ்சிதம் என்று பெயர். அதிலிருந்து இந்தப் பிறவியை எடுக்கும்போது ஒரு பகுதியை அநுபவித்தற்குக் கொண்டு வருகிறோம். அதற்குப் பிராரப்தம் என்று பெயர். பிராரப்த வினையை அநுபவித்துக் கழித்துவிட்டால் பிறகு அவனுக்குப் பிறவியே வராது. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? பழைய கடனைக் கொடுத்துவிட்டு, புதிய கடனை வாங்குவதுபோல, பிராரப்தமாகிய பழைய வினையால் உண்டான இன்ப துன்ப அநுபவங்களைப் பெற்று, புதிய செயல்களைச் செய்கிறோம்; மறுபடியும் வினைகளை ஈட்டிக் கொள்கிறோம். அப்படி இந்தப் பிறவியில் ஈட்டும் வினைகளுக்கு ஆகாமியம் என்று பெயர்.

ஞானிகளுக்குப் பிராரப்தம் ஒன்றுதான் உண்டு. அவர்கள் இந்த உடம்பு இருக்கும் வரைக்கும் பிராரப்தத்தை அநுபவித்துக் கழிப்பார்கள். 'என்னுடைய செயல் என்பது ஒன்றும் இல்லை. எல்லாம் இறைவனுடைய செயலே' என்று எண்ணி அவர்கள் செயல்படுவதனால் அவர்களுக்குப் புதிய வினை ஒன்றும் சேராது. ஆகவே அவர்களுக்கு ஆகாமியம் இல்லை. ஞானம் பெற்றால் சஞ்சிதம் போய்விடும். சஞ்சிதம் எவ்வாறு போகும் என்று கேட்கலாம்.

வினையை அநுபவிக்க உடம்பு வேண்டும். இந்தப் பிறவியில் ஞானம் பெற்று, இறைவன் திருவருளுக்கு ஆளானவர்களுக்கு இனிமேல் பிறவி இராது. ஆகவே அவர்களுக்குச் சஞ்சித வினைகளை அநுபவிக்கக் கருவிகள் இல்லாமல் போய்விடுகின்றன. இந்தப்

பிறவியில் செய்த வினைகள் இல்லை. ஆகையால் அவற்றின் தொடர்பும் இல்லை. இருப்பதை அநுபவித்துத் தீர்த்துவிடுவார்கள். எனவே வினையின் தொடர்பு இல்லாமல் வினைகள் அற்ற பற்றற்ற நிலையில் இருப்பார்கள்.

ஞானிகளுக்குப் பக்குவம் ஏற ஏற இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் ஏற்படும். புண்ணிய பாவங்கள் ஒத்துப் போவதே இருவினை ஒப்பு. பக்குவம் பெறுவது மலபரிபாகம். இறைவன் திருவருளைப் பெறுவது சத்திநிபாதம்.

'எல்லாம் விதிப்படி நடக்கும்போது நம்மால் என்ன செய்ய முடியும்? ஆகையால் நாம் செய்வன எல்லாம் விதியின் பயனாகச் செய்யப்படுவன' என்று சில போலி வேதாந்திகள் பேசுவார்கள். உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விதியின் விளைவு

முன் பிறவிகளில் செய்த செயலின் பயனாக வருவது ஊழ்வினை. அந்த ஊழ்வினையின் விளைவாகிய அநுபவம் இப்போது இன்ப துன்பங்களாக வருகின்றன. புண்ணிய பாவம் என்பது கர்மம் அல்லது ஊழ்வினை. அவற்றின் விளைவு இன்ப துன்பங்கள். நாம் இப்போது செய்கிற செயல்கள் வேறு; முன்னாலே செய்த செயல்களின் விளைவாகிய அநுபவம் வேறு. இரண்டும் ஒன்றுவதில்லை. நாம் இப்போது செய்கிற செயல்களுக்கு நம் அறிவு வழிகாட்டுகிறது. ஆனால் அநுபவிக்கின்ற அநுபவங்கள் எல்லாம் முன்னாலே வரையறுக்கப் பட்டவை.

நாம் செய்கிற காரியங்களுக்கு மூன்று வகையில் அநுபவம் கிடைக்கும். உடனே சில பேருக்குக் கிடைக்கும். வயல்வழியே நடந்து போகும்போது முள்ளை மிதித்துவிடுகிறோம். அதனால் உடனே காலில் இரத்தம் வருகிறது. செய்த செயலுக்கு உடனே பலன் கிடைத்துவிடுகிறது.

திருடன் ஒருவன் திருடுகிறான். பல காலம் கழித்து அவனைப் போலீசார் பிடித்துவிடுகிறார்கள். பின்பு விசாரணை நடந்து அவனுக்குத் தண்டனை கிடைக்கிறது. ஒருவன் செய்த செயல்களுக்குச் சிறிது காலம் கழிந்தாலும் அந்தப் பிறவியிலேயே

கிடைக்கிற பயன் இது. ஒருவன் பல குற்றங்களைச் செய்கிறான். அவற்றிற்கு இந்தப் பிறவியிலே தண்டனை கிடைப்பதில்லை. அவற்றுக்கெல்லாம் பின் பிறவிகளில் பயன் கிடைக்கிறது. இப்போது கிடைக்காமல் பின் பிறவிகளில் கிடைக்கிறதற்குக் காரணமான வினையை ஊழ்வினை என்று சொல்வார்கள்.

இப்போது அநுபவிக்கிற இன்ப துன்பங்கள் யாவுமே முன் பிறவிகளில் செய்த செயல்களின் விளைவு. விதி என்பது அந்தச் செயல்களுக்கு மூலமானது. இப்போது புதிதாகச் செய்கிற செயல்கள் வேறு. இந்த இரண்டையும் போட்டுக் குழப்பக் கூடாது.

எல்லாம் அவன் செயல்

இப்படிச் சொல்லும்போது வேறு ஒருவர் கூறுவார். "எல்லாம் அவன் செயல் என்று கூறுகிறார்களே ! அப்படி இருக்கும்போது நாம் செய்கிற செயல்கள் எல்லாம் எப்படி நம்முடைய செயல்களாகும்? புண்ணிய பாவம் என்பது எப்படி வரும்?" என்று கேட்பார்; 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பழமொழியை எடுத்துக் காட்டுவார்.

ஒரு பெரும் பணக்காரர் ஒரு கோவிலைக் கட்டினார். நிறையப் பணத்தை ஒரு சிற்பிக்குக் கொடுத்து அந்த கோவிலைக் கட்டச் சொன்னார். சிற்பி மிகச் சிறந்தவர் என்று நினைத்தார். ஆனால் அவன் கோபுரத்தின் ஒரு மூலையிலே ஒரு பொம்மையைச் சரியாகச் செய்யவில்லை. கோவில் கட்டி முடிந்து விட்டது. கோவிலைப் பார்த்த சிலர் அந்தச் செல்வரிடம், "என்ன ஐயா, அந்தப் பொம்மையை இப்படிச் செய்துவிட்டீர்களே!" என்று கேட்கிறார். பணம் கொடுத்துக் கட்டச் சொன்ன பணக்காரர், "அந்தப் படுபாவி இந்த மாதிரி பண்ணிவிட்டான்" என்று சொல்கிறார். அந்தக் கோவிலை யார் கட்டினார்? பணக்காரர் கட்டினார் என்று சொல்லலாம்; சிற்பி கட்டினார் என்றும் சொல்லலாம். கோணலான பொம்மையைக் கட்டினதற்குக் காரணம் சிற்பிதான். பணம் கொடுத்துக் கட்டச் சொன்ன முதலாளியை ஏவுதல் கர்த்தா என்றும் கோவிலைக் கட்டிய சிற்பியை இயற்றுதல் கர்த்தா என்றும் சொல்

வார்கள். கோவிலை முதலாளி கட்டினுர் என்பதற்கும், சிற்பி கட்டினுர் என்பதற்கும் வேறுபாடு உண்டு. முதலாளி அந்தக் கோவிலைக் கட்டுவதற்குரிய பொருளைத் தந்தார். சிற்பி அதை வைத்துக்கொண்டு எல்லோரும் பாராட்டுவதற்குரிய நல்ல முறையில் கட்டலாம்; அல்லது வேறு விதமாகவும் கட்டலாம். மூலகாரணமாக இருந்தவர் செல்வர்; அதைத் தன் அறிவுக் கேற்பக் கட்டினவன் சிற்பி.

அது போல் இந்த உலகத்தில் இறைவன் நமக்குத் தனுகரண புவன போகங்களை எல்லாம் தந்திருக்கிருன். அவற்ருல் செயல்களை நாம் செய்கிருேம். கருவி கரணங்களை ஆண்டவன் நமக்குக் கொடுக் காவிட்டால் நம்மால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. இதை நினைந்தே, 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பார்கள். ஆண்டவன் ஏவுதல் கர்த்தாவாக இருக்கிருன். எல்லாவற்றுக்கும் வேண்டிய மூலப் பொருளைப் படைத்திருக்கிருன். சிற்பியைப் போல அந்தக் கருவிகளை வைத்துக் கொண்டு நாம் வேலை செய்கிருேம். நமக்கு இறைவன் அறிவைக் கொடுத்திருக்கிருன். எது நல்லது, எது அல்லாதது என்று ஆராய்ந்து செய்வதற்குரிய கருவியாக அது இருக்கிறது. நாமே நல்லது பொல்லாததை உணர்ந்து, பொல்லாததை விலக்கி நல்லதைச் செய்ய வேண்டும். முதலாளி பணம் கொடுத்தாலும், கோணலாகச் சிற்பி பொம்மையைப் பண்ணி வைத்தால் அந்தப் பழி சிற்பியினுடையது தானே தவிர முதலாளியினுடையது ஆகாது அதுபோல இறைவன் நமக்கு உடம்பைக் கொடுத்திருக்கிருன்; மனத்தைக் கொடுத்திருக் கிருன். அவற்றைக் கொண்டு நல்வழியிலும் தீய வழியிலும் செயல் செய்வதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது. நாம் செயல் செய்கிருேம். செயல்கள் நம்முடையவைகளே. ஆண்டவன் இந்த உடம்பு முதலிய வற்றைக் கொடுத்திருப்பதனுலும், வாழ்வதற்குரிய பிரபஞ்சத்தை அமைத்திருப்பதனுலும் எல்லாவற்றுக்கும் மூலப்பொருளாக இருக்கிருன். அதனுல் எல்லாம் அவன் செயல் என்று சொல்கிருேம்.

எல்லாம் அவன் செயல் என்று சொல்கிறவர்கள் தாங்கள் செய் கிற தவற்றுக்குச் சமாதானமாக அதைச் சொல்கிருர்களே தவிர, எல்லாவற்றுக்கும் காரணம் ஆண்டவன் என்பதை உணர்ந்து கொள் வதில்லை. உண்மையிலேயே அதை உணர்ந்தவர்களுக்கோ தாமாகச்

செய்கிற காரியம் எதுவும் இராது. அவர்களுக்குப் பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்களாகிவிடும். அவர்கள் செய்கிற செயல்கள் எல்லாமே இறைவன் செயலாகிவிடும். அவர்கள், 'எல்லாம் இறைவன் செயல்' என்று எண்ணுகிருர்கள். நாமோ யாராவது நம்மைக் குறை கூறுவதற்குரிய காரியத்தைச் செய்கிற போது மட்டும், 'அவன் செயல்' என்கிருேம். ஆகவே உயர்ந்த ஞானம் உடையவர்கள் எல்லாம் அவன் செயல் என்பதற்கும், நம் போன்றவர்கள் சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறது. எல்லாம் அவன் செயல் என்று பாவங்களைச் செய்யக் கூடாது. விதியினுல் உண்டாகும் அநுபவத்திற்கும் இப்போது செய்யும் செயலுக்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும்.

சயந்தன் வருந்துதல்

சயந்தன் தன் வினையை நொந்து கொண்டான். பல பல வகையான எண்ணங்களை எண்ணினுன். 'தர்ம தேவதை போய் விட்டதோ? பொல்லாதவர்கள் பிறவி சிறந்துவிட்டதோ? மாதவப் பயன் தேய்ந்து போய்விட்டதோ? நல்ல அம்சம் என்பது இல்லாது ஆகிவிட்டதோ? கலி புருடன் ஆட்சி வந்துவிட்டதோ? வேதம் செத்துவிட்டதோ? சிவபெருமானே இல்லையோ?' என்றெல்லாம் எண்ணி ஏங்கினுன்.

துறந்ததோ பேரறம்? தொலையும் தீம்பவம்
சிறந்ததோ? மாதவப் பயனும் தேய்ந்ததோ?
குறைந்ததோ நன்னெறி? கூடிற் றேகலி?
இறந்ததோ மறை? சிவன் இல்லையோ? எனும்.

(சயந்தன் புலம்புறு. 38.)

[தீம் பவம் - கெட்ட பிறவி; பவம் - பாவம் என்பதுமாம்.]

அவன் அப்போது தான் இழந்தவற்றை எண்ணிப் பார்த்தான். 'என் தகப்பனுர் அமராவதிப் பட்டணத்தை ஆட்சி புரிந்துகொண்டிருந்தபோது நான் எத்தனை வகையான இன்பங்களை அநுபவித்தேன்!' என்று எண்ணிப் பார்க்கவில்லை. 'அப்போது நான் செய்துகொண்டிருந்த நல்ல கடமைகளை எல்லாம் இப்போது செய்ய முடியாமல் இருக்கிறதே!' என்று எண்ணினுன். 'நான் வேத பாராயணம் செய்யாமல் இருக்கிறேனே! சந்தியா காலங்களில்

அக்கினி காரியம் பண்ண வேண்டுமே; அதைப் பண்ணுமல் இருக்கிறேனே! தந்தையை வணங்குவதற்குரிய சந்தர்ப்பம் இப்போது இல்லையே!' என்று அவன் வருந்தினன்.

அந்தியின் மறைமொழி அயர்த்து வைகினன்;
சந்தியில் வினைகளும் தழலும் ஓம்பலன்;
எந்தையை வழிபடும் இயல்பும் நீங்கினேன்;
முந்தையின் உணர்ச்சியும் முடிந்து ளேன்எனும்.

(சயந்தன் புலம்புறு. 35.)

[அந்தியின் - சந்தி வேளைகளில். அயர்த்து - மறந்து. சந்தியில் வினைகள் - சந்தியா வந்தனம். உணர்ச்சி - அறிவு.]

இறைவனிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு நல்ல பழக்கங்கள் இருக்கும். அந்தப் பழக்கங்கள் நன்கு அவர்களிடத்தில் உறைத்திருக்கும். அவற்றை மாற்ற வேண்டுமென்று நினைத்தாலும் அவர்களால் முடியாது. அவர்கள் மறந்துபோனாலும் எப்படியாவது அந்த உணர்ச்சி வந்துவிடும்.

"நற்றவாஉனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே"
என்று சுந்தரமூர்த்தி நாயனர் சொல்கிருர்.

ஒருவர் இறைவன் கோவிலுக்குச் சென்று நாள்தோறும் வழிபடுகிருர். அந்த நேரத்தில் அங்கே போகாவிட்டால் அவரது மனத்திலே ஒரு குறை ஏற்படும். மூக்குப் பொடி போடுவானுக்கு, பொடி போடாமல் இருந்தால் எப்படி ஒரு வகையான ஏக்கம் உண்டாகுமோ, அதுபோல் இறைவனிடத்தில் ஈடுபட்டு, அவனை நாள்தோறும் தரிசிக்கும் வழக்கம் உள்ளவனுக்கு, ஒருநாள் இறைவன் கோவிலுக்குப் போகவில்லையென்ருலும் மனச் சோர்வு உண்டாகும்.

சீதாபிராட்டி அசோக வனத்தில் சிறை இருந்தாள். அப்போது அவள் எண்ணம் பலவாக இருந்தது. இராமனேடு இருந்திருந்தால் எப்படி இன்பம் அநுபவித்திருப்பேன் என்று எண்ணவில்லை. 'என்னுடைய நாயகனுக்கு வேண்டியவற்றை எல்லாம் கொடுத்து நான் அருந்தச் செய்வேனே; இப்போது அந்தப் பாக்கியம் இல்லையே! விருந்தினர்கள் வரும்போது அவர்களை உபசரிப்பதற்கு நான் இல்லையே என்று அவர் எத்துணை வருந்துவாரோ?' என்றெல்லாம் நினைந்து வருந்துகிருள்.

"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்என்று அழுங்கும் ;
விருந்து வந்தபோது என்னுறு மோஎன்று விம்மும்"

என்று இந்திய நாட்டுக்கே பிரதிநிதியாகிய பெருமாட்டி பெண்களின் தர்மத்தை எண்ணிப் பார்க்கிருள்.

அதே வகையில் சயந்தன் தான் பெருமல் போன போகங்களே நினைந்து வருந்தாமல் தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முடியவில்லேயே என்று வருந்தினன்.

நாள்தோறும் மாலே நேரத்தில் பத்து மைலுக்கு அப்பாலுள்ள சிவன் கோவிலுக்குத் தம்முடைய காரில் சென்று சிவபெருமானே வழிபட்டு வருவார் ஒருவர். ஒரு நாள் காரில் போய்க் கொண்டிருக் கும் போது கார் பழுதுபட்டு விட்டது. கார் பழுதுபட்டுவிட்டதே என்று வருந்தாமல், "ஐயோ ! இன்றைக்கு இறைவனுடைய தரிசனம் கிடைக்காமல் போய்விட்டதே!" என்று வருந்துவார். அதுபோன்ற நிலேயில் சயந்தன் வருந்தினன்.

அவன் மறுபடியும் சமாதானம் செய்து கொண்டான். 'நான் என்ன செய்வது ? பழைய காலத்தில் நாம் செய்த வினேயின் பயனுகச் சிவபெருமானே எங்களுக்கு இத்தகைய துன்பங்களே வரும்படி செய்திருக்கிருன்' என்று ஊழ்வினேயை நினேத்தான். இறைவன் தனக்கு எத்தகைய அருள் செய்தாலும், அவனவன் அவனவனது ஊழ்வினேப் படியேதான் அவற்றை அநுபவிக்க முடியும் என்று சயந்தன் தெரிந்துகொண்டிருந்தான்.

இங்கே எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நாள் பரமசிவனும் அம்மையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப் போது அம்பிகை பரமசிவனேப் பார்த்து, "உலகத்தில் எத்தனேயோ பேர் துன்பப்படுகிருர்களே ; எல்லோரும் நம் குழந்தைகள் அல்லவா ? எதற்காகப் பலபேரைத் துன்பம் அடையும்படியாகவும், சில பேரை இன்பம் அடையும்படியாகவும் வைத்திருக்கிறீர்கள் ? எல்லோருக்குமே அருள் செய்வதுதானே ?" என்று கேட்டாள். அப்போது சிவபெருமான் சொன்னுர் ; "நாமா செய்கிறேம் ? அவர வர்கள் செய்த வினேப்படிதான் அவரவர்கள் இன்ப துன்பங்களே அநுபவிக்கிருர்கள். வினேயின் வழியே இன்ப துன்பத்தை அநுப விக்க வேண்டுமென்று நாம் விதித்து விட்ட பிறகு, நாமாக அவர்

களுக்கு அருள் செய்தாலும் அவர்களது வினை அதை அநுபவிக்க அவர்களை விடாதே'' என்றார்; ''எப்படி என்பதை நீயே சோதித்துப் பாரேன்'' என்றார். அம்பிகையின் கருணை ஒரு பிச்சைக்காரன் மீது விழுந்தது.

அந்தப் பிச்சைக்காரன் காளைப் பருவத்தினன். ஒரு குருட்டுப் பிச்சைக்காரனும் அவனுடன் இருந்தான், ஒரு நாள் இந்தப் பிச்சைக்காரன் தனியே போகும் போது இவனுக்கு அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனின் நினைவு வந்தது. 'அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் ஆள் இல்லாத இடத்தில் எல்லாம் கை நீட்டுகிறானே! நமக்குக் கண் இல்லையென்றால் எப்படிப் பிழைப்பது?' என்று நினைந்தவன், 'கண் இல்லையென்றால் எப்படி நடப்பது?' என்று நினைந்து, கண்ணை மூடிக்கொண்டு சில கஜ தூரம் நடந்தான். பிறகு கண்ணைத் திறந்துகொண்டு, 'ஓ எப்படியும் நாம் பிழைத்துக்கொள்ளலாம்' என்று மகிழ்ந்தான். அவன் போகிற பாதையில் அம்பிகை ஆயிரம் ரூபாய் அடங்கிய பையைப் போட்டிருந்தாள். அவன் அந்த இடத்தில்தான் கண்ணை மூடிக்கொண்டு நடந்தான். அந்தப் பண முடிச்சு அவன் கண்ணில் படவில்லை. அவனுக்குப் பயன்படவில்லை. அவனுடைய ஊழ்வினை அதை அநுபவிப்பதைத் தடுத்துவிட்டது. அந்தச் சமயத்தில் அவன் குருடனாகிவிட்டான்.

ஆகவே, நாம் நம்முடைய வினைப்பயனை அநுபவிக்கத்தான் வேண்டும் என்று நினைந்து தெளிவு பெற்றான் சயந்தன். அவனைச் சிறை காவலர்கள் துன்புறுத்தினார்கள். ''இந்திரனும், இந்திராணியும் எங்கே இருக்கிறார்கள்? சொல்லாவிட்டால் உங்கள் உயிரைப் போக்கிவிடுவோம்'' என்று சயந்தனையும், தேவர்களையும் வருத்தினார்கள்.

மன்னும் நம்கோன் தன்பணி நில்லா மகவேந்தும்
மின்னாள் தானும் யாண்டுறு கின்றார்? விரைவாகச்
சொன்னால் உய்வீர்; அல்லதுஉம் ஆவி தொலைவிப்பேம்;
முன்னா ளேபோல் எண்ணலிர்; உண்மை மொழிகென்றார்.

(சயந்தன் புலம்புறு. 44.)

[நம் கோனென்றது சூரபன்மனை. பணி நில்லா - ஏவலில் ஒட்டி நில்லாத, மகவேந்து - இந்திரன். மின்னாள் - இந்திராணி.]

சயந்தனே, "என்னுடைய தாய் தந்தையர் அமராவதிப் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டதைத்தான் நான் அறிவேன். அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாது. எனக்குத் தெரிந்தால்தானே சொல்ல முடியும்?" என்றான்.

என்னும் காலைக் கேட்ட சயந்தன் எம்ஆயும்
மன்னும் வான்நின்று ஓடின கண்டோம்; மற்றன்னார்
பின்அங் குற்ற தன்மையும் ஓராம்; பிணிநோயுள்
துன்னும் தீயேம் யாவது உரைத்தும், சூழ்ந்தென்றான்.

(சயந்தன் புலம்புறு. 45.)

[ஆயும் - தாயும். மன்னும் - இந்திரனும். ஓராம் - தெரிந்துகொள்ளவில்லை. உரைத்தும் - சொல்வோம்.]

அவர்களிடமிருந்து உண்மையை வருவிக்க வேண்டுமென்று காவலர்கள் அவர்களை மிகவும் துன்புறுத்தினார்கள். சயந்தனும் தேவர்களும் துன்பம் தாங்கமாட்டாமல் சிவபெருமானை நினைந்து வேண்டினார்கள்.

பல வகையான ஆயுதங்களினால் காவலர்கள் அவர்களைத் துன்புறுத்தினார்கள். ஆயுதங்கள் மழுங்கிப்போயின. காவலர்களுடைய கைகளும் நோகத் தொடங்கின. 'இவர்களுக்குச் சாவு கிடையாயாதோ? அம்ருதத்தை உண்டவர்களோ? நாம் இவ்வளவு கொடுமை இழைத்தும் இவர்கள் அந்த அளவுக்கு அல்லல்படவில்லையே! இது என்ன அற்புதம்?' என்று அந்தக் காவலர்களே எண்ணி வியந்தார்கள்.

சயந்தனே, "சிவபெருமானே, நாங்கள் படுகிற அல்லல் போதாதா? நாங்கள் படுகிற துன்பங்களை நீ உணரவில்லையா?" என்று சிவனை நினைந்து வருந்தினான்.

கங்கை முடித்தாய், கறைமிடற்றாய், கண்ணுதலாய்,
திங்கள் புனைந்தாய், சிவனே சிவனேஎன்று
இங்கு நினதுஅடியேம் எல்லேங் களும்அரற்றல்
நங்கள் உயிர்க்குயிராம் நாயகநீ கேட்டிலையோ?

(சயந்தன் புலம்புறு. 60.)

[கறைமிடற்றாய் - நஞ்சினால் உண்டான கறுப்பையுடைய கழுத்தை உடையவனே. எல்லேங்கள் - நாங்கள் எல்லாம்.]

அடியார்களுக்கு இரங்கி இறைவன் கங்கையை ஏற்றுச் சடையில் தரித்தான். தேவர்களுக்கு இரங்கி ஆலகால விஷத்தைக்

கழுத்தில் ஏற்றுக்கொண்டான். சந்திரனைக் காப்பாற்றுவதற்காக அவனைத் தன் சடா மகுடத்தில் ஏற்றுக் கொண்டான். இப்படியெல்லாம் தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பவன் சிவன் என்பதை நினைந்து அரற்றினான் சயந்தன். "அடியார்கள் வேண்டும் எல்லாவற்றையும் வேண்டியவாறு அருள் செய்யும் பெருமானுயிற்றே! எங்கள் உயிருக்கு உயிராய் இருக்கிற பெருமானே, நீ இதைப் பார்க்கவில்லையா? இது உனக்குத் தெரியாதா?" என்று அரற்றினான்.

"உயிர்களை எல்லாம் பாசத்திற்குள் அகப்படுத்திப் பிறவிகளைத் தருவோனும், மறுபடியும் பாசத்தை நீக்கி அருளுகிறவனும் ஆண்டவன் என்று வேதம் சொல்கிறது. நாங்கள் உங்களுக்கு இழைத்த குற்றத்திற்கு இந்தத் தண்டனை போதும். நீதான் இனி அருள் செய்யவேண்டும்" என்று வருந்தினான் சயந்தன்.

பாசங்கொண்டு ஆவி பலவும் பிணிப்போனும்
நேசம்கொண்டு ஆங்கதனை நீக்கியருள் செய்வோனும்
ஈசன் சிவனென்று இயம்பும்மறை; நீஇழைத்த
ஆசுஒன்றும் இத்தீமை ஆர்தவிர்க்க வல்லாரே?

(சயந்தன் புலம்புறு. 61.)

[ஆசு ஒன்றும் இத்தீமை - எங்கள் குற்றத்துக்காக எங்களை அடைந்த இந்தத் துன்பத்தை.]

ஆண்டவனை, பயகிருத், பயநாசனன் என்று சொல்வார்கள். பிறவியைத் தருகிறவன் அவன் தான். ஆன்மாக்களுக்குப் பிறவியிலிருந்து விடுதலை தருகிறவனும் அவன்தான். "பந்தமும் வீடும் படைப்போன் காண்க" என்று **திருவாசகத்தில்** வருகிறது.

'எம்பெருமானே, பக்தி உள்ளவர்களுக்கு நீ அருள் செய்கிறாய். பக்தி இல்லாதவர்களுக்கு அருள் செய்வதில்லை. நானோ சிறிதும் பக்தி இல்லாதவன். அதனால்தான் என்னைக் காப்பாற்றாமல் இருக்கிறாய். என்னிடத்தில் அருள் கூர்ந்து நன்மை செய்ய வேண்டுமென்று நான் நொந்து இங்கே அரற்றுவது என்னுடைய அறியாமைதான்' என்று நினைத்தான்.

இறைவன் அருள்

'இறைவன் எல்லோருக்கும் அருள் செய்ய வேண்டியவன். அப்படி இருக்க, சில அன்பர்களுக்கு மாத்திரந்தானே அருள்

செய்கிறுன் ? பலருக்குச் செய்வதில்லேயே !' என்ற கேள்விவரலாம். வேண்டியவர்களுக்குக் கொடுத்து, வேண்டாதவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிற பட்சபாதம் உடையவன் அவன் என்று சொல்ல முடியுமா ?

உண்மையில் ஆண்டவனைப் போன்ற அருளாளர் யாரும் இல்லை. அவன் எல்லோருக்கும் அருள் செய்து கொண்டிருக்கிறுன். பக்குவ ஆன்மாக்கள் சிறந்த அருளைப் பெறுகின்றன.

இறைவனது அருளைப் பொதுவானது, சிறப்பானது என்று இரண்டு வகைப் படுத்தலாம். எல்லோருக்கும் தனு கரண புவன போகங்களை அளித்திருக்கிறுனே, இது பொதுவான அருள். அவன் அளிக்கிற சிறப்பான அருளைப் பக்குவ ஆன்மாக்கள் பெறுகின்றன.

ஒரு நாள் மழை பெய்தது. மழை நீரை ஏந்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு பெண்மணி நினைத்தாள். தன்னுடைய பெண்ணைக் கூப்பிட்டு உள்ளே வைத்திருக்கும் பாத்திரத்தைக் கொண்டு வந்து முற்றத்தில் வைக்கச் சொன்னுள். அந்தப் பெண்ணும் அதைக் கொண்டுவந்து வைத்தாள். ஒரு மணி மழை பெய்தது. மழை நின்ற பிறகு சென்று பார்த்தால் பாத்திரத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் தேங்கவில்லை காரணம் என்ன ? அறைக் குள்ளே பாத்திரத்தைக் கவிழ்த்து வைத்திருந்தார்கள். அந்தப் பெண் அப்படியே எடுத்து வந்து முற்றத்தில் கவிழ்த்து வைத்து விட்டாள். மழை பெய்தாலும், பாத்திரம் நன்ருக இருந்தாலும், அது கவிழ்த்து வைக்கப்பட்ட காரணத்தினுல் அதில் தண்ணீர் ஒரு சொட்டுக் கூடத் தேங்கவில்லை.

இறைவன் எல்லோருக்கும் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கிறுன். ஞானசம்பந்தருக்குக் கொடுத்ததைப்போலவே, ஆழ்வார்களுக்குக் கொடுத்ததைப் போலவே, நமக்கும் கொடுத்திருக்கிறுன். நாம் நமது மனத்தை இறைவனை நோக்கிச் செலுத்தாமல், பிரபஞ்சத்தை நோக்கிச் செலுத்திக்கொண்டிருக்கிறேம். ஆகவேதான் அவன் திருவருள் பதிவை நம்மால் உணர முடியவில்லை. அவன் பட்சபாதமின்றி எல்லோருக்கும் அருள் செய்கிறுன் என்ருலும் அவரவர்களுடைய பக்குவத்திற்கு ஏற்றபடி தான் அநுபவம் அமைகிறது.

சயந்தன் புலம்பல்

சயந்தன் இதை உணர்ந்துகொண்டு சொன்னான்; "இது வரைக்கும் இந்திர போக வாழ்க்கை சிறந்தது என்று இருந்தேன். கற்பக நிழலின்கீழ் வாழ்கின்ற வாழ்க்கை பயனற்றது என்பதை இப்போது தெரிந்து கொண்டேன். உயர்ந்த பதவி, உயர்ந்த நிலை என்பன எல்லாமே நிலையற்றவை. மிக உயர்ந்த பதவியில் இருக்கிறவர்கள் அந்தப் பதவியை இழந்து துன்புறுவதைப் பார்க்கிறோம். உண்மையாக நிலைத்திருப்பது உன்னுடைய தொண்டு ஒன்றுதான்; உன் திருவடி ஒன்றுதான் இன்பம்" என்று சொல்லித் துதித்தான்.

தண்தேன் துளிக்கும் தருநிழற்கீழ் வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன் பெருந்துயரம்; வான்பதமும் கோதுஎன்றே
கண்டேன்; பிறர்தம் பதத்தொலைவும் கண்டனனால்;
தொண்டேன் சிவனேநின் தொல்பதமே வேண்டுவனே.

(சயந்தன் புலம்புறு. 76.)

[தருநிழல்கீழ் - கற்பக நிழலின்கீழ். வெஃகி - விரும்பி. வான் பதமும் - தேவலோக பதவியும். பதத்தொலைவும் - பதவிகளின் அழிவையும். தொண்டேன் - தொண்டைச் செய்யும் நான்: தொண்டனேன் என்பதே இங்கே சாரியை இன்றித் தொண்டேன் என வந்தது.]

இவ்வாறு பல வகையாக வருத்தப்பட்டுச் சயந்தன் அவசமாக வீழ்ந்துவிட்டான்.

சயந்தன் கண்ட கனவு

சிறைக்குள்ளே சயந்தனும், தேவர்களும் துன்பப்படுவதை முருகப் பெருமான் தெரிந்துகொண்டான். எல்லா உயிர்களினிடையும் இருக்கிறவன் அவன். ஆகையால் அவனுக்கு இது தெரிந்தது.

விண்ணு ளார்களும் சயந்தனும் வியன்ம கேந்திரத்தின்
உண்ணி லாம்பெருந் துயருடன் மாழ்கியது உணர்ந்தான்,
எண்ணி லாஉயிர் தோறும்உற்று இன்னருள் புரியும்
அண்ணலார்கும ரேசனும் அறுமுகத் தமலன்.

(சயந்தன் கனவு. 1.)

[மாழ்கியது - வருந்தியதை. அண்ணலார் குமரேசன் - சிவபெருமானுடைய திரு மகனாகிய தெய்வம்; அண்ணல் ஆர் - பெருமையை உடைய என்றும் கொள்ளலாம்.]

சயந்தன் அப்போது ஒரு கனவு கண்டான். தேவர்களுக்கு உண்டான துன்பங்களை நீக்க, சின்னஞ்சிறு குழந்தையாகத் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகன், அவசம் கொண்டு கீழே

விழுந்து விட்ட சயந்தன் கனவில் தோன்றினன். கனவிலேயே சயந்தன் முருகப்பெருமானுடன் பேசலானன்.

"தொண்டனேன் படும் துன்பத்தைப் போக்குவதற்காக மிக்க அருள் கொண்டு தேவரீர் எழுந்தருளியிருக்கிறீர்கள். தங்களைப் பார்த்தால் திருமாலாகவும் தோன்றவில்லை. பிரமனாகவும் தோன்றவில்லை. சிவபெருமானாகவும் தோன்றவில்லை. தேவரீர் யார் என்று தெரிவித்தருளவேண்டும்" என்று வேண்டினன்.

தொண்ட னேன்படும் இடுக்கணை நாடியே தொலைப்பான்
கொண்ட பேரருள் நீர்மையிற் போந்தனை ; குறிக்கின்
விண்டும் அல்லை ;அப் பிரமனும் அல்லை ; மேல்ஆகும்
அண்டர் நாதனும் அல்லைநீ ; எவர்மற்று ? அருளே.

(சயந்தன் கனவு. 6.)

[இடுக்கணை - துன்பத்தை. தொலைப்பான் - நீக்க. விண்டு - விஷ்ணு. அண்டர் நாதன் - சிவபெருமான்.]

முருகன் அந்தக் கனவிலேயே அவனுக்குப் பதில் சொன்னன் ; "உன்னுடைய தந்தையின் துன்பம், உன்னுடைய துன்பம் ஆகியவற்றை எல்லாம் தேவர்கள் நம்பால் வந்து சொல்ல, நாம் எல்லையில்லாப் படைகளுடன் இந்த உலகத்திற்கு வந்திருக்கிறோம். தாரகனையும், கிரௌஞ்ச மலையையும் சங்காரம் செய்தாகிவிட்டது. இந்திரன், பிரமன் முதலியவர்கள் எல்லாம் இப்போது நம்முடன்தான் இருக்கிறார்கள். உன்னுடைய தாய் மேருவில் இருக்கிறாள். நாளைக்கே திருச்செந்தூரை விட்டு வந்து, இந்த வீர மகேந்திரபுரத்தில் தங்கிப் போர் செய்யத் தொடங்குவோம். பத்து நாளில் தேவர்களையும், உன்னையும் விடுதலை செய்வோம். சூரசங்காரம் செய்வோம்" என்று அருளினன்.

நுந்தை தன்குறை நும்குறை யாவையும் நுவன்று
வந்து நந்தமை வேண்டலும் வரம்பில்சே னையொடும்
இந்த ஞாலத்தின் எய்தியே கிரவுஞ்சம் என்னும்
அந்த வெற்பையும் தாரகன் தன்னையும் அட்டாம்.

செல்லும் இப்பகல் கழிந்தபின் நாளையே செந்தி
மல்ல லம்பதி நீங்கிஇந் நகர்க்குஅயல் வைகிச்
சொல்லும் ஐந்திரு வைகலின் அவுணர்தம் தொகையும்
அல்லல் ஆற்றிய சூரனும் முடிந்திட அடுதும்.

(சயந்தன் கனவு. 6, 11.)

[நுந்தை தன்குறை - உன் தந்தையினுடைய காரியம். அட்டாம் - அழித்தோம். இப்பகல் - இந்த நாள். மல்லல் அம் பதி - வளத்தையுடைய அழகிய நகரம். ஐந்து இரு வைகலின் - பத்து நாளில். அடுதும் - அழிப்போம்.]

அதைக் கேட்டவுடன் சயந்தனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. புளகம்போர்த்தது. கண்ணிலிருந்து நீர் வழிந்தது. "எம்பெருமானே, விரைவில் வந்து காத்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். உடனே விழித்துக்கொண்டான். அந்தச் சமயத்தில் தேவர்களுக்கும் அத்தகைய கனவு உண்டாயிற்று.

வீரவாகு தேவர் சயந்தனைக் கண்டு தேற்றுதல்

வீரவாகு தேவர் சிறைக்குள்ளே நுட்பமான உருவத்துடன் சென்று சயந்தன் இருக்கிற இடத்தை அடைந்தார்.

முருகனுடைய மந்திரம் சொல்ல, அதனால் காவல் இருந்த அசுரர்கள் மயக்கம் அடைந்தார்கள். அந்தச் சமயத்தில் வீரவாகு தேவர் புகுந்தார். சித்திரத்தில் இருக்கிறவர்களைப் போல அங்கே உள்ள காவலர்கள் எல்லாரும் செயலிழந்திருந்தார்கள். வீரவாகு தேவரை ச்சயந்தனும், தேவர்களும் பார்த்து, இவர் யார் என்று யோசனை பண்ணினார்கள்.

ஓங்கார மூலப் பொருளாய்உயிர் தோறும் என்றும்
நீங்காது அமரும் குமரேசனை நெஞ்சில் உன்னி
ஆங்கா குவதுஓர் அவன்மந்திரம் அன்பின் ஓதித்
தீங்காம் அவுணர் செறிகாப்பகம் சென்று புக்கான்.

எண்தா னவரில் புடைகாப்பவர் யாரும் மையல்
கொண்டார் குயிற்றப் படும்ஓவியக் கொள்கை மேவத்
தண்தார் அயில்வேல் படைநாயகன் தானை வேந்தைக்
கண்டார், சயந்த னெடுதேவர் ; கருத லுற்றார்.

(வீரவாகு சயந்தனைத் தேற்று. 4, 6.)

[காப்பகம் - காவற்கூடம்; சிறை. தானவரில் - அசுரர்களில். புடைகாப்பவர் - அருகிலிருந்து காவல் புரிபவர்கள். மையல் - மயக்கம். குயிற்றப்படும் - அமைக்கப் படும். தானைவேந்து - படைத்தலைவராகிய வீரவாகு தேவர்.]

வீரவாகு தேவர் முருகனுடைய திருநாமத்தைச் சொல்லி உள்ளே புகுந்தார்.

இங்கே அநுமன் செயல் நினைவுக்கு வருகிறது. அசோக வனத்தில் சீதாபிராட்டி இருந்தாள். அவளைச் சுற்றி நிறைய அரக்கிகள் காவலாக இருந்தார்கள். அநுமன் அசோக வனத்தை அடைந்தவுடன் ஒரு மந்திரம் சொல்லி அரக்கியர்களை மயங்க வைத்தான்.

அவர்கள் மயங்கி இருக்கும் போது சீதாபிராட்டியை அணுகினன். சீதை அநுமனை முன்னர்ப் பார்த்தது இல்லை. அவளுக்கு அவன் யார் என்று சந்தேகம் வந்தது. அரக்கர்களைச் சேர்ந்தவனாக இருப்பானோ, தன்னைத் துன்புறுத்த வருகிறானோ என்று அஞ்சினாள். அநுமன் இராம நாமத்தைச் சொல்லிக்கொண்டு வந்தான். சீதா பிராட்டி அந்த நாமத்தைக் கேட்டவுடன் கிளர்ச்சி கொண்டாள். முதலில் சந்தேகித்தாலும் இராமநாமத்தைச் சொன்னதால் தெளிவு உண்டாயிற்று.

"அரக்கனே ஆக! வேறோர் அமரனே ஆக! அன்றிக்
குரக்கினத் தலைவ னேதான் ஆகுக! கொடுமை ஆக!
இரக்கமே ஆக! வந்திங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான்; உயிர்இதின் உறுதி உண்டோ?"

(கம்பராமாயணம்)

என்று எண்ணி அநுமனோடு பேசத் தொடங்கினாள்.

இங்கே வீரவாகு தேவர் முருகனுடைய திருநாமத்தைச் சொல்லி உள்ளே புகுந்தார்.

செறிகின்ற ஞானத் தனிநாயகச் செம்மல் நாமம்
எறிகின்ற வேலை அமுதின்செவி ஏக லோடும்
மறிகின்ற துன்பிற் சயந்தன்மகிழ் வெய்தி முன்னர்
அறிகின் றிலன்போல் தொழுதுஇன்ன அறைத லுற்றான்.

(வீரவாகு சயந்தனைத். 9.)

[செம்மல் - முருகனுடைய. எறிகின்ற - அலை வீசுகின்ற. அமுதின் - அமுதத்தைப் போல. மறிகின்ற துன்பின் - இறந்ததற்கு ஒப்பாகிய துன்பத்தை உடைய.]

அந்தத் திருநாமம் அமுதத்தைப் போலச் சயந்தனுடைய காதுகளில் புகுந்தது. "தேவரீர் யார்?" என்று சயந்தன் கேட்க, "முருகப் பெருமானுடைய தூதுவன் நான்" என்று வீரவாகு தேவர் சொன்னார். அதைக் கேட்டவுடன் சயந்தனுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

முருகப் பெருமான் கனவில் சொன்ன செய்திகள் அவன் நினைவுக்கு வந்தன. தம்முடைய தவத்தினால் சந்திர மண்டலத்திலுள்ள அமுதத்தை நுகர்ந்த யோகிகள் பாற்கடலில் பிறந்த அமுதத்தையும் பெற்று உண்டால் எப்படி மகிழ்ச்சி அடைவார்களோ, அது போல் முடிவு இல்லாத மகிழ்ச்சி அடைந்தான்.

என்னலும் அமர ரோடும்
இந்திரன் குமரன் கேளாச்
சென்னியின் அமிர்துள் ளூறல்
செய்தவத்து அயின்ற மேலோர்
அன்னதற் பின்னர் நேமி
அமிர்தமும் பெற்றுஉண் டாங்கு
முன்னுறு மகிழ்ச்சி மேலும்
முடிவிலா மகிழ்ச்சி வைத்தான்.

(வீரவாகு தேவர் சயந்தனை. 12.)

[சென்னியின் அமிர்து உள்ளூறல் - தலையிலுள்ள சந்திரமண்டலத்தில் உள்ளே ஊறும் அமுதத்தை. நேமி அமிர்தமும் - பாற்கடலிற் பிறந்த அமுதத்தையும்.]

முருகப் பெருமான் கனவில் அது பற்றி அருள் செய்யக்கேட்டது யோகிகள் அமுதபானம் பண்ணினது போல இருந்ததாம். வீரவாகு தேவரது சொற்களைக் கேட்டது பாற்கடலில் உண்டான அமுதத்தையும் உண்டாற்போல இருந்ததாம்.

நம் உடம்பில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. மூலாதாரத்திற்கு மேலே அக்கினி இருக்கிறது. யோகம் செய்பவர்கள் அந்த அக்கினியை எழுப்புவார்கள். அதற்கு மேல் சுருண்ட பாம்பு போன்ற குண்டலினி சக்தி இருக்கிறது. அந்த அக்கினி எழக் குண்டலினி சுருண்டது நீண்டு முன் போகும். மெல்ல மெல்ல ஒவ்வோர் ஆதாரமாகத் தாண்டி ஆறு ஆதாரங்களுக்கும் மேலே உள்ள சந்திர மண்டலத்தை அந்த அக்கினி தாக்கச் செய்தால் அப்போது அங்கிருந்து அமுதம் உண்டாகும். அதை உண்டவருக்கு நரை, திரை, மூப்புப் போகும் என்று யோகிகள் சொல்வார்கள். அப்படி யோகத்தினல் உள்ளே உள்ள அமுதத்தை உண்டவர்கள், பாற்கடலில் கிடைத்த அமுதத்தையும் உண்டாற்போலச் சயந்தனுக்கு உண்டான மகிழ்ச்சி இருந்தது என்று உபமானம் சொல்கிறுர் கச்சியப்ப சிவாசாரியார்.

வீரவாகு தேவர் அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினர். "எல்லோருக்கும் பிறவியை விதிக்கின்ற பிரமனையே சிறை செய்தவன் முருகப்பெருமான், எல்லா உயிர்களையும் தானே நான்முகனைப்போல இருந்து படைத்த பரஞ்சுடர், உங்களை எல்லாம் சிறையிலிருந்து நீக்குவதற்காக இங்கே வருகிறுன். அதற்குக் காரணம் நீங்கள் செய்த தவமே. உங்களைப் போல வேறு யார்

தவம் செய்திருக்க முடியும்? முருகப் பெருமானே உங்களை விடுவிக்க வருகிறான் என்றால் இது பலகாலம் செய்த தவத்தின் பயனே அன்றி, எளிதில் கிடைக்கின்ற பேறு ஆகாது'' என்று அவர்களைப் பாராட்டினார் வீரவாகு தேவர்.

சீர்செய்த கமலத் தோனைச்
சிறைசெய்து விசும்பி னோடும்
பார்செய்த உயிர்கள் செய்த
பரஞ்சுடர் நும்மை எல்லாம்
சூர்செய்த சிறையின் நீக்கத்
தொடர்ந்துஇவண் உற்றான் என்றால்
நீர்செய்த தவத்தை யாரே
செய்தனர் நெடிய காலம்?

(வீரவாகு சயந்தனை. 17.)

[கமலத்தோனை - பிரமனை. உயிர்கள் செய்த - உயிர்களுக்குரியவற்றைப் படைத்த. சூர் - சூரபன்மன்.]

"நல்லவர்கள் பொல்லாதவர்கள் இருக்கிற இடத்திற்கு வரமாட்டார்கள். கணக்கில்லாப் பாவங்களைச் செய்தவர்கள் அசுரர்கள். இங்கே நன்மை என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது. ஞானிகள் இந்த இடத்திற்கு வரமாட்டார்கள். ஆனால் எம்பெருமான் அருளினால் நான் இங்கே வந்தேன். சாக்கடையில் புகுவது போல வந்தேன். நான் மிகவும் வருந்திக்கொண்டிருந்தேன். உங்களைப் பார்த்ததனால் மகிழ்ச்சி அடைந்தேன்'' என்று வீரவாகு தேவர் சொன்னார்.

சங்கையில் பவங்கள் ஆற்றும்
தானவர் செறிந்த மூதூர்
இங்கிதில் அறிஞர் செல்லார்;
எம்பிரான் அருளி னால்யான்
அங்கணம் படர்வோர் என்ன
அகம்மெலிந் துற்றேன்; ஈண்டே
உங்களை எதிர்த லாலே
உலப்பிலா உவகை பூத்தேன்.

(வீரவாகு சயந்தனை. 18.)

[சங்கை இல் பவங்கள் - கணக்கில்லாத பாவங்களை. தானவர் - அசுரர். அங்கணம் - சாக்கடை. அகம் மெலிந்து - மனம் வருந்தி. எதிர்தலாலே - சந்தித்ததாலே. உலப்பு இலா - அழிவில்லாத.]

சாக்கடையில் மோதிரம் விழுந்துவிட்டது. அதை எடுக்க வேண்டுமானால் சாக்கடையில் கையை விடத்தான் வேண்டும். கை அழுக்காகிவிடுமே என்று எண்ணினால் மோதிரத்தை எடுக்க முடியுமா? அந்த அழுக்கைக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அப்படி வீரவாகு தேவர், "சாக்கடையில் கிடக்கிற உங்களைக் காண நான் வந்திருக்கிறேன்; உங்களைப் பார்த்தவுடன் உவகை பூத்தேன்" என்று சொன்னார். பின்பு முருகப்பெருமான் வரலாறு முதலியவற்றைச் சொன்னார். முருகப்பெருமானுடைய பெருமையை எல்லாம் எடுத்துக் காட்டினார். "எவன் தனக்குச் சமானமாக யாருமின்றித் தானே மேலானவனாக இருக்கிறானோ, பரஞ் சோதியாக இருக்கிறானோ, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாத பராபரமாக இருக்கிறானோ, அவன் முருகப்பெருமானாக, ஆறு திரு முகம் உடைய குழந்தையாக, பன்னிரு திருக்கரங்கள் உடைய வனாகக் கந்தன் என்ற பெயரோடு யாவரும் காண வந்தான்" என்றார்.

தன்நிகர் இன்றி மேலாய்த்
தற்பர ஒளியாய் யாரும்
உன்னரும் பரமாய் நின்ற
ஒருவனே, முகங்கள் ஆறும்
பன்னிரு புயமும் கொண்டு
பாலகன் போன்று கந்தன்
என்னும்ஓர் பெயரும் எய்தி
யாவரும் காண வந்தான்.

(வீரவாகு சயந்தனை. 23.)

[பரமாய் - மேலான பொருளாய்.]

முருகப்பெருமான் அநாதிகாலமாக இருக்கிற பராபரன் என்று வீரவாகு தேவர் சொன்னார். ஐந்து முகக் கடவுள் தன்னுடைய பரம கருணையினாலே ஆறுமுகக் கடவுளாக வந்தான் என்று முன்பு சொன்னதைப் பார்த்தோம். மறைந்திருந்த ஒருவன் மேடையில் தோன்றினாற் போல முருகன் வந்தான். அவன் என்றும் இருப்ப வன். புதியவனாகித் தோன்றினான் என்றால் அது தோற்றம். தோற்றம் உண்டானால் மறைவும் உண்டு. இவன் அழிவற்றவனாதலால் இவன் திடீரென்று புதியவனாகப் பிறந்து வரவில்லை. மற்ற அவதாரங் களுக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. மறைந்திருந்த பொருள்

வெளிப்பட்டது இந்த அவதாரம். அசுரர்களை அழித்துத் தேவர்களுக்கு நலம் பாலிக்கச் சிவபெருமானிடத்தில் மறைந்திருந்த ஒருவன் எழுந்தருளியிருக்கிறான். அவன் புதியவனாக வந்தவன் அல்ல. இந்தத் தத்துவத்தை வீரவாகுதேவர் எடுத்துச் சொன்னார்.

தேவர்கள் படுகிற துன்பத்திற்குக் காரணம் இன்னது என்பதையும் எடுத்துச் சொன்னார் வீரவாகு தேவர் ; "தக்கன் வேள்வி செய்தபோது நியாயமான முறையில் அவிர்ப்பாகம் கொடுக்கவில்லை. அவற்றைத் தேவர்கள் நுகர்ந்தார்கள். வீரபத்திர தேவர் போய் அப்போது அதற்கேற்ற தண்டனையைக் கொடுத்தார். என்றாலும் பாவத்தில் கொஞ்சம் மிச்சம் இருக்கிறது. அதனால் வந்த இந்தத் துன்பம் இப்போது ஆறுமுகப்பெருமான் திருவருளால் நீங்கப் போகிறது. அவனையன்றி இந்தத் துன்பத்தை உங்களிடத்திலிருந்து நீக்குவதற்கு யார் இருக்கிறார்கள்?"

சிறுவிதி வேள்வி நண்ணித்
தீயவி நுகர்ந்த பாவம்
முறைதனில் வீரன் செற்றும்
முற்றவும் முடிந்த தில்லை ;
குறைசில இருந்த ஆற்றால்
கூடியது உமக்குஇத் துன்பம் ;
அறுமுகப் பெருமான் அன்றி
ஆர்இது நீக்கற் பாலார் ?

(வீரவாகு சயந்தனை. 25.)

[சிறுவிதி - தக்கன். தீ அவி - முறையல்லாத கெட்ட அவியை. முறைதனில் - தண்டமுறைப்படி. வீரன் - வீரபத்திரன். செற்றும் - தண்டித்தும்.]

"முருகப் பெருமான் ஆறு முகங்களை உடையவன். அந்த முகங்கள் தாமரை போல இருக்கின்றன. அவன் தன் கையிலுள்ள வேலினால் கிரவுஞ்சத்தையும், தாரகனையும் அழித்தான். இப்போது சூரபன்மாவை அழிக்க வந்திருக்கிறான். தேர் ஓட்டத்திற்கு முன்னாலே வெள்ளோட்டம் விடுவதுபோலச் சூரனைச் சங்காரம் செய்வதற்கு முன்னாலே கிரவுஞ்சத்தையும், தாரகனையும் அழித்தான். அப்போதே சூரனைச் சங்காரம் செய்வதற்கு முகூர்த்தம் வைத்தாகிவிட்டது."

தாட்கொண்ட கமலம் அன்ன
சண்முகத்து எந்தை வேலால்
காட்கொண்ட கிரியி னோடு
தாரகற் கடந்த பூசல்
தோட்கொண்ட மதுகை சான்ற
சூர்முதல் களைய முன்னம்
நாட்கொண்ட தன்மைத் தன்றோ,
நறைகொண்ட அலங்கல் தோளாய்.

(வீரவாகு சயந்தனை. 26.)

[தாள் - காம்பு. காட்கொண்ட - காழ்கொண்ட ; பகையைக் கொண்ட. கிரி - கிரவுஞ்சமலை. பூசல் - போர். மதுகை - வலிமை. சூர் முதல் - சூரனாகிய தலைவனை. நாட்கொண்ட - முகூர்த்தம் வைத்த. நறைகொண்ட அலங்கல் - தேனைக் கொண்ட மாலை.]

"சூரபன்மாவைக் கந்தகிரியிலிருந்தே முருகன் மாய்த்திருக்கலாம். ஆனால் அறத்தை நினைந்து என்னைத் தூதுவனாக விடுத்திருக்கிறான். எம்பெருமான். சூரபன்மனைச் சங்காரம் செய்யாமல் உங்களை எல்லாம் சிறையிலிருந்து மீட்க முடியாது. சூரன் உங்களைச் சிறைவிடுக்க வில்லையென்றால் போர் தொடங்க இருக்கிறான். இது அவன் திருவிளையாடல்."

சுறமறி அளக்கர் வைகும்
சூரபன் மாவின் மார்பில்
எறிசுடர் எஃகம் வீசி
இருபிள வாக்கின் அல்லால்
சிறையுளிர் மீள்கி லாமை
தேற்றியும் பொருநர் செய்யும்
அறநெறி தூக்கி ஒற்றா
அடியனை விடுத்தான் ஐயன்.

நீண்டவன் தனக்கும் எட்டா
நெடியதோர் குமரன் செவ்வேல்
ஆண்டிருந் தேயும் உய்த்தே
அவுணர்யா வரையும் கொல்லும் ;
பாண்டில்அம் தேர்மேற் கொண்டு
படைபுறம் காத்துச் சூழ
ஈண்டுவந்து அடுதல் அன்னாற்கு
இதுவும்ஓர் ஆடல் அன்றே.

(வீரவாகு சயந்தனைத். 29, 31.)

[சுற மறி அளக்கர் - சுறாமீன்கள் துள்ளும் கடலின் நடுவில். எஃகம் - வேலை. தேற்றியும் - தெளிந்தும். பொருநர் - போர் செய்வோர். தூக்கி - எண்ணி. ஒற்றா - தூதுவனாக. நீண்டவன் - திருமால். உய்த்தே - செலுத்தி. பாண்டில் - சக்கரம். படை - சேனை.]

இவ்வாறு வீரவாகு தேவர் சயந்தன் முதலியவர்களுக்குத் தேறுதல் கூறினர். சயந்தன் வீரவாகு தேவருக்கு வாழ்த்துக் கூறினன். "நீங்கள் பெரிய தவத்தை உடையவர்களாக இருக் கிறீர்கள். எங்களைக் கண்ட செய்தியை இந்திரனுக்குத் தெரிவிக்க வேண்டும். இங்கு உங்கள் உள்ளத்தில் கொண்ட எல்லாவற்றையும் நிறைவேற்றிப் போவீராக" என்று அவரை வாழ்த்தினன்.

எண்தரும் ஆசி கூறி
இந்திரன் தனது மைந்தன்
அண்டரொடு அங்கை கூப்பி,
அளியரேம் தன்மை எல்லாம்
கண்டனை தாதை கேட்பக்
கழறுதி ; இவண்நீ உள்ளம்
கொண்டது முடிக்கப் போதி,
குரைகழற் குமர என்ருன்.

(வீரவாகு சயந்தனைத். 31.)

[அண்டரொடு - தேவர்களோடு. அளியரேம் - இரங்கத்தக்கவர்களாகிய யாம். தாதை - இந்திரன். கழறுதி- சொல். குரைகழல் - ஒலிக்கும் வீரகண்டையை அணிந்த.]

வீரவாகு தேவர் அங்கிருந்து புறப்பட்டார்.

வீரவாகு சூரன் அவையில் புகுதல்

சூரனுடைய நகரத்திலுள்ள செல்வங்களை எல்லாம் கண்டு வீரவாகுதேவர் வியப்பு மேலிட நின்ருர். "முன் பிறவியில் யார் யார் சிவபெருமானை வழிபடுகிருர்களோ அவர்கள் எல்லாம் மிகச் சிறந்த வாழ்வைப் பெறுவார்கள். தேவர்கள் அவ்வாறு இறைவனைப் பணிந்து பல வகையான பதவிகளைப் பெற்ருர்கள். ஆனல் சூரபன்மன்பெற்றிருக்கிற சிறப்புகளை வேறு யார் பெற்றிருக்கிருர்கள்? சூரனைப் போலத் தவம் செய்தவர்களும் இல்லை. அவனுக்குச் சிவபெருமான் அருள் செய்ததைப் போல வேறு யாருக்கும் அருள் செய்ததும் இல்லை" என்று எண்ணி வியந்தார்.

மூவரின் முந்திய முக்கணன் அம்பொற்
சேவடி பேணிய தேவர்கள் தம்முள்
தூவுடை வேலுள சூரபன் மாப்போல்
ஏவர் படைத்தனர் இத்திரு வெல்லாம் ?

(அவை புகு. 40.)

[தூவுடை வேல் - ஊனை உடைய வேல்.]

சூரன் வச்சிரக் கம்பத்தில் ஏறி வீழ்ந்து உயிரை விட்டான். அவனைப் போல் தவம் செய்தவர்கள் யாரும் இல்லை. குளிருக்கும், வெப்பத்திற்கும் அஞ்சாமல் தவம் செய்தவர்கள் உண்டு. ஆனால் உயிரைப் பணயம் வைத்துத் தவம் செய்தவர்கள் யாரும் இல்லை. அத்தகைய அரிய தவத்தைச் செய்தவன் சூரன். அதனால் வேறு யாருக்கும் கொடுக்காத பதவியைச் சிவபெருமான் அருளினான்.

இங்கே, "இத்தனை தவம் செய்தவன், அந்தத் தவத்தின் பயனாகப் பெரிய சிறப்புகளைப் பெறுகிறான். நல்ல பதவியில் இருக் கிறான். அப்படி இருக்கும் போது அவனுக்கு எதற்காகக் கேடு வரவேண்டும்?" என்ற கேள்வி எழும். அதற்குக் கச்சியப்ப சிவசாரியார் விடை சொல்கிறார்.

குருவிகள் மரத்தின்மேல் கூடு கட்டியிருக்கும். இராத்திரியில் கூட்டுக்குள் விளக்கு வைக்க வேண்டும் அல்லவா? அதற்காக மின் மினிப் பூச்சியைக் கொண்டு போய் வைக்கும். ஒருநாள் ஒருவன் குடித்துவிட்டுப் போட்ட சிகரெட்டுத் துண்டை—அது நுனியில் நெருப்புடன் இருக்கும் அல்லவா?—மின்மினிப் பூச்சி என்று எண்ணிக் கூட்டிற்கு எடுத்துக் கொண்டு போய் வைத்தது. கூடு முழுவதும் எரிந்து விட்டது. நாம் நம்முடைய குழந்தைக்கு மெத் தென்று இருப்பதற்குத் தொட்டிலில் போடுவனவற்றை விட மென் மையான பொருள்களைக் கொண்டு போய்க் குருவி கூட்டில் வைக்கும். எரிவதற்குரிய பொருள்கள் அங்கே இருக்கும். அந்தக் குருவி தன்னுடைய கூடும் குஞ்சும் அழிவதற்குரிய நெருப்புத் துண் டைத் தானே கொண்டு போய்த் தன் கூட்டில் வைத்துக்கொண்டது போல, இங்கே சூரன் தன்னுடைய குலத்தினரும் தானும் அழியும் படி தேவர்களைக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்தான். அதனால் தான் அவனுக்குக் கேடுகாலம் நெருங்கியது. இவ்வாறு கச்சியப்பர் உபமானம் சொல்கிறார். அவர் சிகரட்டைச் சொல்லவில்லை; கொள்ளியைச் சொல்கிறார்.

மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை
விரகின்மை கொண்ட குருகார்
கச்சோதம் என்று கருதிக் குடம்பை
தனின்உய்த்து மாண்ட கதைபோல்
அச்சோ எனப்பல் இமையோரை ஈண்டு
சிறைவைத்த பாவம் அதனால்
இச்சூர பன்மன் முடிவெய்தும் நாளை;
இதனுக்கோர் ஐயம் இலையே.

(அவை புகு. 43.)

[விரகு இன்மை - தந்திரம் அறியாமல். குருகார் - குருவி; பன்மை, இழிவுக் குறிப்பு. கச்சோதம் - மின்மினிப் பூச்சி. குடம்பை - கூடு. அச்சோ - ஐயோ.]

இதுவரைக்கும் வீரவாகு தேவர் நகரத்தைப் பார்ப்பதற்குச் சூட்சுமமான வடிவத்தில் சென்ருர். இப்போது சூரபன்மாவின் ஆஸ்தான மண்டபத்திற்குள் புகுந்தார். அங்கே புகுந்தவுடன் தம்முடைய பழைய வடிவத்தை எடுத்துக் கொண்டார்; அவையில் உள்ளவர்கள் எல்லாம் காணும்படியாக இயல்பான வடிவத்தை எடுத்துக் கொண்டார்.

இதுவரைக்கும் நுட்பமான வடிவில் இருந்தவர் இப்போது மட்டும் ஏன் தம்முடைய இயல்பான வடிவத்தை எடுத்துக் கொண்டார் என்று கேட்கலாம். அவர் சூரபன்மனுக்குப் பயப்பட்டவர் அல்ல. இயல்பான வடிவுடன் வந்தால் அங்கங்கே உள்ளவர்களுடன் சண்டையிட நேரும், அதனல் காலதாமதம் ஆகுமே என்று நினைந்து சூட்சும வடிவத்தை எடுத்துக் கொண்டு உலாவினர். சூரனிடத்துத் தூது வந்தவர் அல்லவா ? சூரனைப் பார்க்கப் போகிற நிலையில் தம் இயல்பான வடிவத்தை மேற்கொண்டார். இதைக் கச்சியப்ப சிவாசாரியார் கூறுகிருர். இங்கே, 'மாற்றலரால் வெல்லருந்திறல் வீரவாகு' என்கிருர். பகைவர்களால் வெல்வதற்கு முடியாத ஆற்றல் உள்ளவர் வீரவாகு தேவர். 'நாம் பெரிய அசுரனகிய சூரபன்மனுக்கு முன்னல் நம் இயல்பான உருவத்தோடு நின்ருல் அவன் நம்மை என்ன செய்துவிடுவானே ?' என்று அவர் சிறிதும் அஞ்சவில்லை. சூரனைப் பற்றிய பய உணர்ச்சியே அவருக்கு ஏற்படவில்லை. அதனல் எல்லோரும் காணும்படியாகவே தம் இயல்பான வடிவத்தை எடுத்துக்கொண்டார்.

எல்லை இல்லதோர் பெருந்திரு நிகழவிற் றிருந்த
மல்லல் அங்கழல் இறைவனைக் குறுகிமாற் றலரால்
வெல்ல ருந்திறல் வீரவா குப்பெயர் விடலை
தொல்லை நல்லுருக் காட்டினன் அவைக்கெலாம் தோன்ற.

(அவை புகு. 48.)

[பெருந்திரு நிகழ - பெரிய ஐசுவரிய பதவி நடக்க. மல்லல் - வளம். இறைவனை - சூரபன்மனை. விடலை - காளை. தொல்லை - பழைய இயல்பான.]

சூரபன்மன் சிங்காதனத்தின்மேல் இருந்தான். வீரவாகு தேவர் அவைக்களத்தில் போய் நின்ருர். அப்போது ஒரு யோசனை தோன்றியது. 'நான் சூரனுக்கு முன் நிற்கலாமா ? நான் சண்முக நாதனின் தூதுவன் அல்லவா ? இவன் காலடியிலே நான் நின்ருல்

என்னை அனுப்பிய தலைவனுக்கல்லவா இழிவு? மேருவை வில்லாக வளைத்த எம்பெருமானுடைய குமாரனாகிய, வெற்றியை உடைய வேலுடைய சண்முகநாதனின் தூதுவன் நான் என்று சூரபன்மாவுக்கு எதிரிலே கீழே நின்று கொண்டு சொல்வது முருகனுக்கே இழிவு அல்லவா?' என்று எண்ணினர்.

ஒற்றை மேருவில் உடையதோர் பரம்பொருள் உதவும்
கொற்ற வேலுடைப் புங்கவன் தூதெனக் கூறி
இற்றை இப்பகல் அவுணர்கோன் கீழ்ப்யான் எளிவாய்
நிற்றல் எம்பிரான் பெருமையின் இழிபென நினைத்தான்.

(அவை புகு. 49.)

[பரம்பொருள் - சிவபெருமான். புங்கவன் - தெய்வம். எளிவாய் - தாழ்வாக.]

இப்படி எண்ணிக் கொண்டு முருகப் பெருமானைத் தியானம் பண்ணினர். அப்போது முருகப் பெருமான் அவருடைய உள்ளத்தைப் புரிந்து கொண்டான். தன் தொண்டர்களுக்கு எது வேண்டுமோ அதை நன்கு அறிந்து, அதன்படி உதவுகிறவன் எம்பெருமான்; தன் குழந்தை எதைக் கேட்டாலும் கொடுக்கிற தாய் போல அடியார்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தருகிறவன். வீரவாகு தேவர் நினைத்தவுடனே, ஆயிரம் கோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்து ஒளிர்ந்தாற் போலக் கனக மாமணித் தவிசு ஒன்றை வான் வழியாக அனுப்பினான். தங்கம், இரத்தினம் சேர்ந்து அமைத்த பெரிய சிங்காதனம் அது.

இனைய துன்னியே அறுமுகப் பண்ணவன் இருதாள்
நினையும் எல்லையில், ஆங்கவன் அருளினால் நிசியில்
தினக ரத்தொகை ஆயிர கோடிசேர்ந் தென்னக்
கனக மாமணித் தவிசொன்று போந்தது கடிதின்.

(அவை புகு. 51.)

[பண்ணவன் - கடவுள். எல்லையில் - சமயத்தில். நிசியில் - இரவில். தினகரத் தொகை - சூரியர் கூட்டம். தவிசு - சிங்காசனம்.]

தன் தூதுவன் எளியனாக இருக்கக் கூடாதென்று முருகன் நினைந்து அனுப்பினான்.

இங்கே கச்சியப்பர் ஓர் உவமை சொல்கிறார்.

ஞானசம்பந்தப் பெருமான் முருகப் பெருமானுடைய அம்சம்; சிவபெருமானுடைய பிள்ளையார். அதனால் ஆளுடைய பிள்ளையார் என்று சொல்வது வழக்கம்.

பட்டீசுவரத்திற்கு ஞானசம்பந்தப் பெருமான் தல யாத்திரை யாகச் சென்றபோது அவருக்கு வெயில் உறைக்காமல் இருப்பதற்காக முத்துச் சிவிகையையும், முத்துப் பந்தரையும் சிவபெருமான் அனுப்பினன். சிவபெருமான் ஆளுடைய பிள்ளையாரிடம் பரிவு வைத்து முத்துப் பந்தரையும், முத்துச் சிவிகையையும் அனுப்பியதைப் போல இங்கே வீரவாகு தேவருக்கு முருகப் பெருமான் கனக மாமணித் தவிசு ஒன்றை அனுப்பி வைத்தான் என்று ஆசிரியர் சொல்கிருர்.

நித்தி லப்படு பந்தரும் சிவிகையும் நெறியே
மூத்த மிழ்க்கொரு தலைவனும் மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறுஎனக் குமரவேள் வீரனுக்கு உதவ
அத்த லைப்பட வந்தது மடங்கலேற்று அணையே.

(அவை புகு. 52.)

[நித்திலப் படு பந்தர் - முத்துப் பந்தல். சிவிகை - பல்லக்கு. மதலைக்கு - ஞான சம்பந்தருக்கு. முதல்வன் - சிவபிரான். உய்த்தவாறு என - அனுப்பியதுபோல. அத்தலைப்பட - அவ்விடத்திலே தோன்றும்படி. மடங்கலேற்று அணை - சிங்காதனம். வீரனுக்கு - வீரவாகுவுக்கு.]

இங்கே ஞானசம்பந்தப் பெருமானை 'முத்தமிழ்க்கொரு தலைவனும் மதலை' என்று சொல்கிருர். தமிழ் கற்கிறவர்கள் மூன்று தமிழையும் தெரிந்துகொள்ள வேண்டுமானல் ஞானசம்பந்தப் பெருமானுடைய பதிகங்களை நன்கு படிக்கவேண்டும். அவர் மூன்று தமிழுக்கும் தலைவர்.

வீரவாகு தேவர் சூரபன்மாவின் முன்னல் நிற்கக் கூடாது என்று சண்முகநாதன் கனக மாமணித் தவிசு ஒன்றை, சூரபன்மா வின் சிங்காதனத்திற்கு மேலாகத் தோன்றும்படியாக அனுப்பினன். அனுப்பிய முருகனுடைய பெருமையை அந்தச் சிங்காதனம் காட்டியது. தன் பெருமையைக் காத்துக் கொள்ள அவன் அதை அனுப்பினன்.

யாராவது ஒருவர் இரந்தால் இரப்பவனை எண்ணிக் கொடுக்கிற கொடையை விடக் கொடுக்கிறவன் தன் பெருமைக்கேற்பக் கொடுக்க வேண்டும்.

ஒருவர் ஒரு கோவில் கட்டுகிருர். பலரிடம் பொருள் யாசித்துப் பெற்றுக் கட்டுகிருர். 300 ரூபாய் சம்பளக்காரர் 10 ரூபாய் கொடுத்

தார். வருமான வரியாக மூவாயிரம் ரூபாய் மாதம் கட்டுகிறவர் 40 ரூபாய் கொடுக்கிறார். 'அவர் கொடுத்தது பத்து ரூபாய்தான், இவர் நாற்பது ரூபாய் கொடுத்தாரே' என்று நினைப்பார்களா? மாதம் மூவாயிரம் வரியாகக் கட்டுகிறவர் ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டாமா?

பாரியின் பெண்களை வளர்த்து வந்த கபிலர், அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஒளவைப்பாட்டியிடம் கொடுத்தார். தம் தந்தையின் பிரிவால் அந்த இரண்டு பெண்களும் மெலிவாக இருந்தார்கள். அந்த மெலிவை நீக்க ஒரு மருத்துவரைக் கேட்டபோது, ஆட்டுப் பால் கொடுப்பது நல்லது என்று சொன்னார். ஆட்டுப்பாலுக்கு ஒளவைப்பாட்டி எங்கே போவாள்? ஆட்டையும் தெரியாது; ஆடு மேய்க்கிற கோனாரையும் தெரியாது. சேர மன்னனிடம் போகவேண்டி இருந்தது ஒளவைப்பாட்டிக்கு. அப்படிச் சென்றிருந்த போது, "சேர மன்னா, எனக்கு ஓர் ஆடு வேண்டும்" என்று கேட்டார். அதைக் கேட்ட மன்னனுக்கு மிகவும் அதிசயமாக இருந்தது. ஒளவைப்பாட்டி ஆடு கேட்பது அதிசயம் அல்லவா? அவன், "நாளைக்குத் தருகிறேன்" என்று சொன்னான். மறுநாள் ஒளவைப்பாட்டி சேரன் அவைக்களத்திற்குச் சென்றபோது, பொன்னால் ஆன ஆடு ஒன்றைக் கொடுத்தான்.

ஒளவைப்பாட்டிக்கு வியப்பாக இருந்தது. "இது பால் தராதே!" என்றாள். சேர மன்னன் சொன்னான்; "புலமைப் பெருமாட்டியே, உங்களுக்கு வெறும் ஆட்டையா தருவது? நேற்றே உங்கள் இருப்பிடத்திற்கு ஒரு மந்தை ஆட்டையும் அதனை மேய்த்துப் பால் கறந்து தருவதற்குரிய ஆளையும் மற்றப் பொருள்களையும் அனுப்பி விட்டேன். உங்களிடம் கொடுப்பதற்குத் தகுதியுள்ள ஆடு இது" என்றான். ஒளவைப்பாட்டி மிக மகிழ்ந்து, "சேரா, உன் ஆடு பொன்னாடு" என்றாள். உன் ஆடு பொன் ஆடு என்று சொன்னதோடு, உன் நாடு பொன் நாடு என்று வாழ்த்தியதாகவும் அமைந்தது அவள் வார்த்தை.

கொடுப்பவர்கள் தங்கள் தகுதிக்கேற்பக் கொடுக்க வேண்டும். இங்கே வீரவாகு தேவருக்குச் சிங்காதனம் வந்தது. அந்தச் சிங்கா

தனம் முருகப் பெருமானுடைய தகுதிக்கேற்ப இருந்தது. அதைப் பார்த்தார் வீரவாகு தேவர். 'என்னுடைய நாயகன் இதை விடுத்தான்' என்று எண்ணி, முருகப் பெருமானின் திருவடியை வழுத்தி மிகவும் பணிவுடன் அதன்மேல் ஏறி இருந்தார்.

அனைய வான்தவிசு அவுணன்நேர் இருத்தலும், அதுகண்டு
எனது நாயகன் விடுத்தனன் போலும்என்று எண்ணி
மனமகிழ்ச்சியால் அறுமுகப் பிரானடி வழுத்தி
வினையம் நாடுவான் இருந்தனன் ஆங்கதன் மிசையே.

(அவை புகு. 58.)

[வான் தவிசு - பெருமையை உடைய சிங்காதனம். வினையம் - பணிவு.]

வீரவாகு தேவரும் சூரனும் உரையாடல்

தனக்குச் சமானமாக எதிரே மாணிக்கங்கள் பதித்த சிங்காதனத்தில் வீரவாகு தேவர் இருப்பதைப் பார்த்தான் சூரன். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும் அவன் உள்ளத்தில் கோபம் உண்டாயிற்று. "தம்பி, இது என்ன சித்து விளையாட்டு? இந்த மாதிரி விளையாட்டுகளை யார் செய்வார்கள் தெரியுமா? தம் பந்துக்களை விட்டுவிட்டு, சோறு சாப்பிடாமல், வெறும் இலையை உண்டு, விலங்குகள் திரிவதைப்போலக் காட்டில் உழன்று கொண்டிருப்பவர்கள், தம் உடம்பை வருத்துகின்ற சிறிய அறிவுள்ளவர்கள் செய்கிற காரியம் இது. நீ சின்னவன் தானே? இதைக் கற்றிருக்கிறாய் போலிருக்கிறது! எனக்கு முன்னால் அந்தச் சித்து வித்தையைக் காட்டுகிறாய்."

சுற்றம் நீங்கியே இலைஉண்டு விலங்கெனச் சுழன்று
வற்றல் மாமரக் காட்டகத் திருந்துஉடல் வருத்தும்
சிற்றுணர்ச்சியோர் வல்லசித்து இயல்புஇது; சிறியோய்,
கற்றுளாய் கொலாம்! காட்டினை நமதுமுன் காண.

(அவை புகு. 86.)

"இந்த வித்தையை இந்த ஊரில் உள்ள பெண்களும் செய்வார்கள். சின்னக் குழந்தைகூடச் செய்யும். கர்ப்பத்தில் இருக்கிற குழந்தைகூடச் செய்யும். அது மாத்திரம் அல்ல. மலை செய்யும். விலங்குகள் செய்யும். இது ஒரு பெரிய காரியம் என்று நினைத்துச் செய்கிறாய்?" என்று சினந்து சொன்னான்.

உரைசெய் இந்நகர் மகளிரும் செய்வர்; ஊன் முற்றுக்
கருவின் உள்ளுறு குழவியும் செய்திடும்; கருத்தில்
வரைக ளும்செயும்; மாக்க ளும்செயும்; மற்று அதனால்
அரியது அன்றுஅரோ, பேதைநீ புரிந்திடும் ஆடல்.

(அவை புகு. 89.)

[கரு - கர்ப்பம். வரைகள் - மலைகள். மாக்களும் - விலங்குகளும்.]

மாபெரும் சித்தர்களை இழித்துச் சொன்னான்;

சிற்று ணர்ச்சியோர் வல்ல சித்து இயல்பு இது

என்றான். உள்ளத்தில் உதைப்பு இருந்தாலும் வார்த்தையில் அது தெரியாமல் மிகவும் இழித்துப் பேசினான்.

"இந்தச் சித்துக்களை யாரும் செய்யலாம். இது பைத்தியக் காரன் செய்கிற காரியம் அல்லவா? இதை நீ கற்றுக்கொண்டிருக் கிறாய். அதை என்னிடம் காட்ட வந்தாய் போலும்!" என்று அவன் இழிவாகப் பேசினான்.

சித்து விளையாடல்

இங்கே சித்து விளையாடலைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். சித்திகள் எட்டு வகை; அட்டமா சித்தி என்று சொல்வார்கள்; அனிமா, லகிமா முதலியவை; மிகச் சின்ன தாக இருப்பதைப் பெரிதாகக் காட்டுவது, மிகப் பெரியதாக இருப் பதைச் சிறியதாகக் காட்டுவது, நினைப்பதற்கு முன்னாலே நெடுந் தூரம் போவது போன்றவை அவை. இவற்றை எல்லாம் சித்துக்கள் என்று உலகவழக்கில் சொல்வார்கள். தவத்தில் சிறந்தவர்களுக்குச் சித்தி வந்து சித்திக்கும். ஆனால் அவற்றைப் பெரிதாக நினைக்க மாட்டார்கள். மனத்தை அடக்குவது போல வேறு சித்தி கிடையாது.

"சினம்இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே"

என்று தாயுமானவர் பாடுவார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார். ஒரு குருநாதரும், அவர் சீடனும் யமுனை ஆற்றின் அக்கரையில் ஒருவரும், இக்கரையில் ஒருவருமாக இருந்து தவம் செய்தார்கள். தவத்திலிருந்து விழித்துக் கொண்ட சீடன் யமுனையின் அக்கரையில் இருக்கும் தன் குருநாத ரைப் பார்த்து வரவேண்டுமென்று எண்ணினான். யமுனையில்

வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஓடம் இல்லை. உடனே குரு நாதரின் பெயரைச் சொல்லிக் கொண்டு அந்த யமுனையின்மேல் நடந்து சென்றான்; அக்கரையை அடைந்தவுடன் அவனுக்கே வியப்புத் தாங்கவில்லை. குருநாதரின் திருவடியில் விழ்ந்து வணங்கி, "சுவாமி, உங்கள் கிருபையால் தவம் பலித்து விட்டது'' என்றான். "என்னப்பா சொல்கிறாய்? எப்படித் தவம் பலித்தது?'' என்று அவர் கேட்டார். "நான் இப்போது தரையின்மேல் நடந்து வருவது போல யமுனையின்மேல் நடந்து வந்தேன்'' என்றான். "ஐயோ! உன் தவம் ஆறு பைசா மதிப்புடையது தானா? அரையணாக் கொடுத்தால் ஓடத்தில் ஓடக்காரன் அக்கரை கொண்டு போய் விடுகிறானே!'' என்று பரிதாபப்பட்டாராம்.

ஆகவே, சித்து என்பது ஞானத்திற்குப் புறம்பானது. தவத்தின் பயனாக அது இடையில் வந்து சேரும். அதைப் பெரிதாக நினைத்தால் தவம் குலைந்து போகும்.

ரமண பகவான் இதை நையாண்டியாகச் சொல்வார். சாப்பிட்டால் வெளிக்குப் போகும். வெளிக்குப் போக வேண்டும் என்பதற்காக யாராவது சாப்பிடுவார்களா? தவம் செய்தால் இடையில் சித்துகள் வந்து சேரும். ஆனால் சித்துக்காகத் தவம் செய்வது தவறு.

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம், மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்;
சலமேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம்;
தன்நிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது.''

'எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது முடியுமா? அதுதானே சுகம்?' என்று **தாயுமானவர்** பாடுகிருர். உண்மையான சித்து மனத்தை அடக்குவதுதான்.

இக் காலத்தில் மக்கள் சின்னச் சின்னச் செப்பிடு வித்தைகளை எல்லாம் சித்து என்று நினைத்து ஏமாந்து விடுகிருர்கள். மாபெரும் சித்திகளைக்கூட அலட்சியமாக எண்ணுவார்கள் ஞானிகள்.

சூரபன்மன் பேச்சு

சூரபன்மன் இங்கே ஞானியைப் போலப் பேசினுன். "இது என்ன சித்து விளையாட்டப்பா? இதை யாரிடம் காட்டுகிருய்? என்னுடைய ஆற்றலையும், வலிமையையும் எண்ணுமல் எனக்குச் சமானமாக நீ உட்கார்ந்தாயே! இது ஒன்றே போதும், உன்னைக் கொல்வதற்கு. ஆனுல் உன்னைக் கொல்ல விரும்பவில்லை. உன் தலையை என் வாளால் வெட்டி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. ஏன் தெரியுமா? உன்னிடம் கேட்க வேண்டியதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பின்பு அந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று எண்ணுகிறேன்" என்று சொன்னுன் சூரன்.

என்னை எண்ணலை, எதிர்உற இருந்தனை; இதனுல்
மின்னல் வாட்படை உறைகழித்து ஒய்யென வீசிச்
சென்னி வீட்டுவன்; நின்செயல் முற்றவும் தெரிந்து
பின்னர் அத்தொழில் புரிவன்என் றேஉளம் பிடித்தேன்.

(அவை புகு. 90.)

[உறை கழித்து - உறையினின்றும் உருவி. ஒய்யென - விரைவில். வீட்டுவன் - வீழ்த்துவேன்.]

"என் பெருமை உனக்குத் தெரியுமா? போகங்களிலே சிறந்த இந்திர போகத்தைப் பெற்ற இந்திரன் இருக்கிருனே, அவன் என்னைக் கண்டு பயந்து மறைந்து போய்விட்டான். வேறு எந்தத் தேவரும் எனக்குச் சமானமாக வரமாட்டார்கள். மகா விஷ்ணுவும் என்னிடத்தில் வரமாட்டான். எனக்கு வாழ்த்துக் கூறிக்கொண்டேதான் பிரமன் திரிகின்ருன். எல்லோருக்கும் பெரியவனுகிய பரமேசுவரன் என்னிடம் வரமாட்டான். இவ்வளவு துணிச்சலாக என்னிடம் வந்திருக்கிருயே, நீ யார்?" என்று

கேட்டான். பேசும் போதே இந்திரன், பிரம்மா முதலியவர்களை மிகவும் துச்சமாகப் பேசினான்.

வீரவாகு தேவர் பேச்சு

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று தூதுவனுடைய இலக்கணத்தைத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். வீரவாகு தேவர் சிறந்த தூதுவராக வந்தவர். சூரன் யார் யார் தன்னைக் கண்டு அஞ்சுவார்கள் என்று சொன்னானே அதையே அடியாகப் பிடித்துக் கொண்டு அவனிடம் பேசத் தொடங்கினார்.

"சூரபன்மனே, நீ சொன்னாயே, இந்திரன், பிரமா, தேவர்கள் என்றெல்லாம்; அவர்கள் உன்னால் படுகிற துயரைப் போக்கவே திருச்செந்தூரில் வந்து படைவீடு அமைத்துக் கொண்டு தங்கி இருக்கிறான் என் தலைவன். அந்த முருகப் பெருமானின் அடியவன் நான்".

புரந்த ரன்குறை, அயன்முதல் அமரர்தம் புன்மை,
வருந்தும் வானவர் சிறையெலாம் நீக்கி,மற்று அவர்தம்
திருந்து தொல்இறை உதவுவான், செந்திமா நகர்வந்து
இருந்த ஆதியம் பண்ணவன் அடியனேன் யானே.

(அவை புகு. 94.)

[புரந்தரன் - இந்திரன். புன்மை - துன்பம். தொல் இறை - பழைய பதவி.]

"நான் ஒருவன்தான் அடியவன் என்று எண்ணாதே. என்னைப் போல் லட்சத்து ஒன்பது பேர் அங்கே வந்திருக்கிறார்கள். அந்தப் பெரிய கூட்டத்தில் நான் ஒருவன்; நந்திகணத்தைச் சேர்ந்தவன். என் பகைவர்கள் கூட என்னைப் புகழ்ந்து கொண்டு இருப்பார்கள். என் பெயர் வீரவாகு" என்றான்.

துன்னு தானைகட்கு அரசராய், அறுமுகத் தொல்லோன்,
பின்னர் வந்துளார் ஒன்பது லக்கமாம் பெயரால்;
அன்ன வர்க்குளே, ஒருவன்யான்; நந்திபாங்கு அமர்ந்தேன்;
ஒன்ன லார்புகழ் வீரவா கெனும்பெயர் உள்ளேன்.

(அவை புகு. 95.)

[நந்திபாங்கு அமர்ந்தேன் - நந்தியின் பக்கத்தில் இருப்பவன், ஒன்னலார் - பகைவர்.]

இப்படித் தம் பெருமையைச் சொல்லலாமா என்று கேட்கலாம் எதிரிகளுக்கு முன்னாலே தம் புகழைக் கூறலாம் என்று இலக்கணம் கூறுகிறது.

அதற்கு மேல் முருகப் பெருமானுடைய பெருமையை எடுத்துச் சொன்னார் வீரவாகு தேவர். "நான் வணங்கும் தலைவனாகிய முருகன் எத்தகையவன் தெரியுமா? அவன் தாரகாசுரனைச் சங்காரம் பண்ணினான். மலை வடிவத்தில் இருந்த கிரௌஞ்சாசுரனைத் தொலைத்தான். உன்னை அங்கிருந்தபடியே கூட அழித்திருப்பான். ஆனால் மிக்க அருளினால் என்னை உன்னிடத்தில் தூதாக அனுப்பினான்."

தார கப்பெயர் இளவலைத் தடவரை தன்னை
ஓர்இ றைக்குமுன் படுத்தவேல் அறுமுகத்து ஒருவன்
சூர்எ னப்படு நின்னிடைத் தமியனைத் தூதாப்
பேர ருள்திறத்து உய்த்தனன், என்றனன் பெரியோன்.

(அவை புகு. 96.)

[இளவலை - உன் தம்பியை. வரைதன்னை - கிரௌஞ்ச மலையை. இறைக்கு முன் - கணப்போதிற்குள்ளே. படுத்த - அழித்த. பெரியோன் - வீரவாகு தேவர்.]

"நீ பெரிய தப்புக் காரியம் பண்ணியிருக்கிறாய். உன்னைத் தவறான பாதையிலிருந்து மாற்ற வேண்டும் என்பதற்காக நான் இங்கே வந்தேன். நீ இந்திரனையும், இந்திராணியையும் அவர்களுடைய இடத்தில் இருக்கவொட்டாமல் ஓட்டி விட்டு, தேவலோகத்திற்கு நெருப்பை ஊட்டினாய். இந்திரனுடைய புதல்வன் சயந்தனையும், தேவர்களையும் சிறையில் வைத்திருக்கிறாய். இப்படி நீ செய்ததை எம்பெருமான் அறிந்தான்."

மருத்து வன்றனைச் சசியொடு துரந்து,சேண் வதிந்த
புரத்தை ஆரழற்கு ஊட்டியே, அனையவன் புதல்வன்
ஒருத்த னோடுபல் அமரரை உவளகந் தன்னில்
இருத்தி னாய், என வினவினன், அறுமுகத் திறைவன்.

(அவை புகு. 98.)

[மருத்துவன்றனை - இந்திரனை. சசி - இந்திராணி. துரந்து - ஓட்டி. சேண் வதிந்த புரம் - இந்திரன் நகரம். உவளகம் - சிறை. வினவினன் - கேள்வியுற்றான்.]

"நீ காசியபனுடைய பிள்ளை. தேவர்களும் காசியபருடைய தனயர்கள். அப்படிப் பார்த்தால் உனக்குத் தேவர்கள் சகோதரர்கள் ஆகவேண்டும். சொந்தச் சகோதரர்களை இப்படிச் செய்யலாமா?

நீ வேத நெறிக்கு மாருக நடக்கிருய். மிகப் பெரியவர்கள் சிறிய தாக நினைக்கிற பொருளை நீ பெரியதாக நம்பினுய். நீ அரசனுய் இருந்தும் நீதி நிலவும்படி இந்த உலகத்தைக் காப்பாற்றவில்லை.''

தாதை யாகியோன் காசிபன்; ஆங்கவன் தனயன்
ஆதலால் உனக்கு அமரரைச் சிறைசெய்வ தறனே?
வேத மார்க்கமும் பிழைத்தனை; சிறுபொருள் விழைந்தாய்;
நீதி யால்உலகு அளிப்பதே அரசர்தம் நெறியே.

(அவை புகு. 102.)

[தாதை - தந்தை. பிழைத்தனை - தவறினுய். அளிப்பது - காப்பது.]

"குற்றமற்ற தேவர்களை நீ சிறையில் அடைத்து, பல கொடுமைகளை இழைத்து வருகிருய். எத்தனையோ அசுரர்கள் முன்பு தவறு செய்து அழிந்து போனுர்கள். தாரகனைக் கொன்ற எம்பெருமானுடைய கொற்ற வேல் இருக்கிறது. இனிமேலாவது நீ தேவர்களைச் சிறைவிடுத்து, சயந்தனையும் சிறை விடுப்பாயானுல் உனக்குத் துன்பம் உண்டாகாது. நீ மறுத்தால் உனக்குத் துன்பம் உண்டாகும். இது உறுதி'' என்று வீரவாகு தேவர் அறிவுரை கூறினுர்.

கெடுதல் இல்லதோர் அமரர்கள் சிறையிடைக் கிடப்ப
இடுதல் செய்தனை பல்உகம்; அவர்தமை இன்னே
விடுதல் உய்வகை ஆகுமால்; மறுத்தியேல் விளிந்து
படுதலே நினக்கு உறுதியாம்; முறையும்அப் பரிசே.

(அவை புகு. 108.)

[இன்னே - இப்போதே. உய்வகை - நீ பிழைக்கும் வழி. விளிந்து படுதலே - இறந்தொழிவதே. முறையும் - நியாயமும்.]

சூரபன்மன் கூற்று

சூரபன்மன் அதைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "நீ என்ன பேசுகிருய்? ஆயிரத்தெட்டு அண்டங்களை வென்று எல்லாவற்றுக்கும் தனி அரசனுக நான் வீற்றிருக்கிறேன். இன்னும் பல் முளைக்காத ஒரு பிள்ளை எனக்குப் புத்தி சொல்ல உன்னை அனுப்பினுனே?'' என்று சிரித்தான்.

மேலை ஆயிரத் தெட்டெனும் அண்டமும் வென்றே
ஏலு கின்றதோர் தனிஇறை ஆகிய எனக்குக்
கோல வால்எயிறு இன்னமும் தோன்றிலாக் குதலைப்
பால னேகொலாம், இனையன புந்திகள் பகர்வான்!

(அவை புகு. 113.)

[வால் எயிறு - வெண்மையான பல். குதலை - மழலைமொழி.]

"நான் தேவர்களை ஏன் சிறை வைத்தேன் தெரியுமா? என்னுடைய அசுர குலத்தைச் சேர்ந்த பல பேர்களுக்குத் தேவர்கள் துன்பம் இழைத்தார்கள்; அவர்களை அழித்தார்கள். ஆகையால் நான் தேவர்களுடைய பதவியை மாற்றி, ஏவலாளர்களாக வைத்திருக்கிறேன். சிறையிலும் வைத்தேன். அவர்கள் முன்னால் செய்த கொடுமைக்குரிய தண்டனை செய்தேனேயன்றிக் காரணமின்றி ஒரு காரியமும் செய்யவில்லை" என்று அவன் ஒரு சமாதானம் சொன்னான்.

நறைகொள் தார்முடி அவுணர்தம் குலத்தினை நலிந்து
வறுமை செய்தனர் கடவுளர்; அவர்திரு மாற்றிக்
குறிய ஏவலும் கொண்டனன்; ஒழுக்கமும் கொன்றேன்;
சிறையும் வைத்தனன்; எம்குடித் தமர்முறை செய்தேன்.

(அவை புகு. 115.)

[நறை - தேன். நலிந்து - துன்புறுத்தி. வறுமை செய்தனர் - அழித்தார்கள்; பதவியிழந்து வறியவர்களாகும்படி செய்தார்கள் எனலும் ஆம். கடவுளர் - தேவர்கள். குறிய ஏவல் - குற்றேவல். ஒழுக்கமும் - அவர்கள் ஒழுகலாற்றையும். எங்கள் குடித்தமர் முறை - எம் குலத்திலே உதித்தவருக்கு ஏற்ற முறையை.]

பொல்லாதவன் தான் செய்த காரியத்திற்கு ஏதாவது காரணத்தைக் கற்பனையாகச் சொல்வது வழக்கம்.

"இனிமேல் பிரளயம் வந்தாலும், இந்த உலகம் முழுவதும் சமுத்திரத்தில் அமிழ்ந்தாலும் தேவர்களை நான் சிறையிலிருந்து விட மாட்டேன். இவர்களை எல்லாம் எல்லா அண்டங்களுக்கும் மேலாகப் பிரளயத் தண்ணீர் கூடப் புகாத இடத்தில் கொண்டுபோய்ச் சிறை வைத்து விடுவேன்" என்று சூரன் வீருப்புப் பேசினான்.

நெடிய மால்மகன் உறங்கும்நாள் ஆணையை நீங்கித்
தொடுபெ ருங்கடல் உலகெலாம் கொள்ளினும் சுரரை
விடுவன் அல்லன்யான்; வீடரும் சிறையினை விண்மேல்
உடைய அண்டத்தின் உச்சியின் ஒருதலை உய்ப்பேன்.

(அவை புகு. 116.)

[மால்மகன் - பிரமன். அவன் உறங்கும் நாள், பிரளய காலம். ஆணையை நீங்கி - என் ஆணையை விட்டு நீங்கி. வீடரும் - விடுதலை பெறுவதற்கரிய. ஒரு தலை - ஓரிடத்தில்.]

வீரவாகு கூற்று

வீரவாகு தேவர் அதைக் கேட்டார்; "அரக்கனே, நீ உய்வதற்குரிய ஒரு வழியை நான் சொன்னேன். நீ அதைச் சிறிதேனும் உணர

வில்லை. நீ மிகவும் இழிந்தவன். பாம்பையும் சந்திரனையும் ஒன்ருகத் திருமுடியில் வைத்திருக்கிற பரம்பொருளாகிய சிவபெருமானு டைய ஞானக் கண்ணிலிருந்து தோன்றிய முருகப் பெருமானது பெருமையை நீ சிறிதும் உணரவில்லை. பாலன் என்று சொன்னுய்; சிறு பிள்ளை என்று சொன்னுய்'' என்று சொல்லி மேலும் பேசலானுர்.

உய்ய லாவதோர் பரிசினை உணர்வுருது உழலும்
கைய, கேண்மதி; கட்செவி மதியொடு கலந்த
செய்ய வார்சடைப் பரம்பொருள் திருநுதல் விழிசேர்
ஐயன் மேதகவு உணர்ந்திலை; பாலன்என்று அறைந்தாய்.

(அவை புகு. 124.)

(கைய - கீழ்மகனே. கட்செவி - பாம்பு. மேதகவு - மேன்மை. கேண்மதி - கேட்பாயாக.]

'பாம்பும், சந்திரனும் ஒன்றுக்கொன்று பகை. ஆனல் சிவ பெருமான் திருவருளினுல் இரண்டும் ஒன்ருக இருக்கும். அசுரர் களும் தேவர்களும் பகைவர்களாய் இருந்தாலும் இறைவனுடைய திருவருளால் ஒன்ருகத் தீமை நீங்கி வாழலாம். அதற்குரிய முயற் சியைச் செய்' என்ற குறிப்பை வைத்து,

கட்செவி மதியொடு கலந்த
செய்ய வார்சடைப் பரம்பொருள்

என்று சொன்னுர். மேலும் முருகப் பெருமானின் பெருமையைச் சொல்லலானுர்.

''சிறு பிள்ளை என்று நீ சொல்கிருயே; அவனுடைய வயசை உன்னுல் அறிய முடியாது. அறிவுத் திறத்தால் நீ ஒருவரை முன்னவர் என்ருல், அந்த முன்னவருக்கும் அவருக்கு முன்ன வருக்கும் முன்னவனுக இருக்கிறவன் எம்பெருமான். அவனுக்கு ஒப்பார் யாரும் இல்லை. அவனே ஈசன் என்னும் திருநாமத்தைத் தாங்கியிருப்பவன். எல்லா உயிர்களுக்கும் உயிராய், அருவாய், உருவமாய், எல்லோருக்கும் தாய் தந்தையாக இருக்கும் பரம் பொருளே எங்கள் முருகப் பெருமான்.''

முன்ன வர்க்குமுன் ஆகுவோர் தமக்கும்முற் பட்டுத்
தன்னை நேரிலாது ஈசனும் தனிப்பெயர் தாங்கி
இன்உயிர்க் குஉயி ராய்,அரு வுருவமாய், எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும் பரமனே அவன்காண்.

(அவை புகு. 138.)

[நேர் இலாது - ஒப்பாக யாரும் இல்லாமல்.]

"உயிர்க்கு உயிராய்" என்பதை இங்கே சற்றுக் கவனிக்க வேண்டும். "நாம் கடவுளைக் காண்கிறோமா? கண்ணுக்குத் தெரியாமல் கடவுள் இருக்கிறாரே!" என்று பலர் ஐயுறுகிறார்கள்.

ஒரு வீட்டில் ஒரு குழந்தை இறந்துவிட்டது. அதன் தாய் அழுதுகொண்டிருந்தாள். ஒரு பெரியவர் வந்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். "என் குழந்தை இறந்து போய் விட்டது. அழுகிறேன்" என்றாள் தாய். "உன் குழந்தைதான் அதோ இருக்கிறதே; ஏன் அழுகிறாய்?" என்றார் அவர். "குழந்தையின் உயிர் போய்விட்டது" என்று தாய் சொன்னாள். "அந்த உயிர் எப்போது வந்தது? நீ பார்த்தாயா? உயிர் போய்விட்டது என்கிறாயே; போனதையாவது நீ பார்த்தாயா?" என்றார்.

"சுவாமி, இந்தக் குழந்தை நான் கூப்பிட்டால் ஓடி வரும். கையையும் காலையும் அசைக்கும். இப்போது அப்படிச் செய்யவில்லை. முன்பு உயிர் இருந்தது, இப்போது போய்விட்டது" என்று சொன்னாள். உடம்பு இருக்க, அதை இயக்குவது உயிர். அது போல் உயிரை இயக்க ஓர் உயிர் இருக்க வேண்டும் அல்லவா? அதுதான் ஆண்டவன். அதனால் 'உயிர்க்கு உயிர்' என்று இங்கே சொன்னார்.

"பரமசிவனே தன் திருவிளையாடலால் குழந்தையாக வந்திருக்கிறான். சிவபெருமானுக்கும் ஆறு முகமுண்டு; சிவபெருமானுக்கும் இவனுக்கும் பேதம் இல்லை."

ஈசனே அவன் ஆடலால் மதலைஆ யினன்காண்;
ஆசி லாஅவன் அறுமுகத்து உண்மையால் அறிநீ;
பேசில் ஆங்கவன் பரனெடு பேதகன் அல்லன்,
தேசு லாவுஅகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

(அவை புகு. 129.)

[ஈசன் - சிவபெருமான். ஆடலால் - திருவிளையாட்டால். மதலை - குழந்தை. அறுமுகம் சிவனுக்கும் உண்டு. அறிதி - தெரிந்து கொள். பரன் - பரமசிவன். பேதகன் - வேறுபட்டவன். மணி சிவனுக்கும் கதிர் முருகனுக்கும் உவமை.]

"மாணிக்கமும், அதன் ஒளியும் போல அவ்விருவரும் அபேதமானவர்கள்" என்று வீரவாகு தேவர் சூரபன்மாவுக்கு அறிவுறுத்தினர்.

“அவனைப் பிள்ளையென்று சொன்னயே. அவன் எங்கும் நிறைந்திருப்பவன். எல்லா முகங்களும் அவன் முகங்களே. எல்லா விழிகளும் அவன் விழிகளே. எல்லாக் கரங்களும் அவன் கரங்களே. அவன் இல்லாத இடம் இல்லை. எல்லாவற்றினூடேயும் அவன் இருக்கிருன். “சிறுவனுக இருப்பான். குருவைப் போலத் தோற்று வான். தினையை விடச் சிறியவனுகத் தோற்றுவான். நெடியனுகவும் தோற்றுவான். இப்படி எத்தனையோ உருவங்களைக் கொண்டு நிலவுவான். முருகப்பெருமானுடைய திருவிளையாடலை யார் தெரிந்து கொள்ள முடியும்?” என்ருர்.

சிறுவன் போல்உறும்; குரவனே போல்உறும்; தினையிற்
குறியன் போல்உறும்; நெடியவன் ஆகியும் குறுகும்;
நெறியின் இன்னணம் வேறுபல் உருக்கொடு நிலவும்;
அறிவர் நாடரும் கந்தவேள் ஆடல்ஆர் அறிவார்?

(அவை புகு. 137.)

[குரவன் - ஆசாரியன். தினையின் - தினையை விட, குறுகும் - வருவான். இன்னணம் - இப்படி. அறிவர் - ஞானிகள்.]

“நீ ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளுவதாகச் சொல்கிருயே. அவை எங்கள் முருகப் பெருமானின் பெரிய வடிவத்தில் உள்ள ஓர் ரோமத்தின் உள்ள அண்டங்களுக்குச் சமம் ஆகா.”

அன்று கந்தவேள் அமைந்ததுஓர் பெருவடி வதனுள்
ஒன்று ரோமத்தின் இருந்ததற்கு ஆற்றிடாது, உனதாய்த்
துன்றும் ஆயிரத் தெட்டெனும் அண்டமாம் தொகையும்;
இன்று நீஅது தெரிகிலை; சிறுவன்என்று இசைத்தாய்.

(அவை புகு. 144.)

[ரோமத்தின் இருந்ததற்கு ஆற்றிடாது - உரோமத்தில் உள்ள அண்டங்களுக்குச் சமானம் ஆகாது.]

“இவற்றை யெல்லாம் நீ தெரிந்து கொள்ளவில்லை. மிகவும் இழிந்த சொல்லாலே, என்னுடைய பெருமானைச் சொன்ன உன் நாவை நானே வெட்டிவிடுவேன். எனக்கு வருகிற கோபத்தில் உன் உயிரையே ஒரு நொடியில் வாங்கிவிடுவேன். அது என்னுடைய பெருமானின் ஆணை அன்று. அதனல் சும்மா விடுகிறேன். நீ உயிர் பிழைத்திருக்கிருய். எம்பெருமானின் வேலுக்கு நீ இரையாகப் போகிருய். அது உன் தலைவிதி” என்ருர்.

நொய்ய சொற்களால் எந்தையை இகழ்ந்தனை ; நொடிப்பின்
வெய்ய நாத்துமித்து உன்னுயிர் வாங்குவம் ; விடுத்த
ஐயன் ஆணைஅன்று ஆதலின், அளித்தனம் ; அதனுல்
உய்தி இப்பகல்; வேற்படைக்கு உண்டியாய் உறைவோய்!

(அவை புகு. 148.)

[நொய்ய - இழிவான. நொடிப்பின் - நொடிப்போதில். துமித்து - அறுத்து. அளித்தனம் - கொல்லாது விட்டோம்.]

சூரன் கூற்று

சூரனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சிங்காதனம் மேலிருந்து வந்தபோதே அவன் சினம் ஓங்கியது. வீரவாகு தேவர் பேசப் பேசக் கனலில் நெய் வார்த்தாற் போல அந்தக் கோபம் கொழுந்துவிட்டது. "நீ என்ன என்னவோ பேசுகிருய். பல் முளைக்காத சின்னக் குழந்தை தூதாக அனுப்பினுன் என்று நினைந்து உன்னைக் கொல்லாமல் விட்டேன். நீ இந்த இடத்தை விட்டுப் போகாமல் அவன் பெருமையைச் சொல்லுகிருய். வீரம் ஏதோ சொல்கிருய். எனக்கு உண்டாகிற கோபத்தை நீ காணவில்லை."

கூரெயிறு எழாதகுழ விச்சிறுவன் உய்த்த
சார்என நினைந்துனது தன்உயிர் விடுத்தேன் ;
பேரலை ; அவன்பெருமை பின்னும்மொழி கின்ருய் ;
வீரமும் உரைக்குதி; என் வெய்யசினம் உன்னுய்.

(அவை புகு. 151.)

[எயிறு எழாத -பல் முளைக்காத. சார் - தூது. பேரலை - போகாமல் இருக்கிருய்.]

"நீ எத்தனை சொன்னுலும் தேவர்களைச் சிறையிலிருந்து விடுப்பது என்பது நான் கனவிலும் நினைக்காத காரியம். நீ சிறிதும் அச்சம் இல்லாமல் என் எதிரே இருந்து பிதற்றுகிருய். இன்னும் ஒருகணத்தில் உன் வீருப்பு என்னுகிறதென்று காணப்போகிறேன்."

சேண்புரமது ஆகிஅமர் தேவர்சிறை தன்னை
வீண்படு கனுவினும் விடுக்கநினை கில்லேன் ;
ஏண்பல பகர்ந்தனை எனக்குஎதிர் இருந்தே ;
காண்பன்அது எலாம்ஒரு கணத்தில்இனி என்ருன்.

(அவை புகு. 153.)

[சேண் புரமது ஆகி அமர் - தேவலோகம் தம் இடமாகத் தங்கின. ஏண் - பெருமை.]

"இன்னும் ஒரு கணத்தில் நீ படுகிற பாட்டைப் பார்" என்று சொல்லி விட்டுப் பக்கத்தில் இருந்த ஆயிரம் வீரர்களைப்

பார்த்து, "தூதுவனாக வந்த இவனைக் கொல்லாதீர்கள். சிறையில் கொண்டு போய் அடையுங்கள்" என்று சொன்னான்.

கொற்றம்மிகு சூரன்இவை கூறிஅயல் நின்ற
அற்றமறும் மானவருள் ஆயிரரை நோக்கி,
ஒற்றுமைசெய் தோன்உயிர் ஒறுத்தல்பழி ; வல்லே
பற்றி இவனைச்சிறை படுத்திடுதிர் என்றான்.

(அவை புகு. 154.)

[அற்றம் அறும் - சோர்வற்ற. மானவருள் - ஆட்களுள். ஒற்றுமை செய்தோன் - ஒற்றுத் தொழில் செய்தவன்; ஒற்றன். வல்லே - விரைவில்.]

அப்போது வீரவாகு, "நான் எத்தனை அறிவுரை சொல்லியும் நீ உணர்ந்து கொள்ளவில்லை முருகப்பெருமான் பெருமையை உன் காதில் விழும்படி சொன்னேன். அவற்றை நீ கேட்கவில்லை. இனிமேல் உன்னை எம்பெருமானுடைய வேலாயுதம் அழித்திடுவது திண்ணம். அதுவரைக்கும் உன்னுடைய இந்திரியங்களுக்குரிய இன்பங்களை எல்லாம் அநுபவித்துக் கொண்டிரு. நான் போய்விட்டு வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார்.

சதமுகன் வதை

அப்போது சிங்காதனம் மறைந்துவிட்டது. புறப்பட்ட அவரை ஆயிரம் வீரர்களும் வந்து வழிமறித்தார்கள். அவர்களை எல்லாம் ஒரேயடியாக அழித்துக் கொன்றார் வீரவாகு தேவர். சூரன் ஆணையால் நூறு முகமுடைய சதமுகன் என்பவன் ஒருவன் வந்தான்.

கொற்ற வேலுடை அண்ணல்தன் மொழியினைக்
கொண்டிலன் ; இகழ்ந்து என்னைப்
பற்ற ஆயிரர் தங்களை விடுத்தலும்,
படுத்தனன், பெயர்காலை
மற்றும் ஈதொரு வயவனை உய்த்தனன்
மன்னவன் ; இவன்ஆவி
செற்று மாநக ரந்தனை அழித்தனன்
செல்லுவன் இனிஎன்றான்,

(சதமுகன் வதை. 8.)

[படுத்தனன் - அவர்களை அழித்து விட்டு; முற்றெச்சம். பெயர் காலை - வரும் போது. வயவனை - வீரனை. அழித்தனன் - அழித்து.]

சதமுகனோடு லட்சம் பேர் வந்தார்கள் ; அவர்களை அழித்தார். சதமுகன் வந்தான் ; அவனையும் அழித்தார். காவலர்கள் வந்து

எதிர்த்தார்கள். அவர்களையும் அழித்தார். அவரைப் பற்றப் பல பேர் வந்தார்கள். அவர் பெரிய வடிவத்தை எடுத்துக் கொண்டார். அந்த வடிவத்தைக் கண்டே எல்லோரும் அஞ்சி ஓடினார்கள். தம்மை எதிர்த்தவர்களை எல்லாம் வீரவாகு தேவர் அழித்தார்.

மிதித்தனன்; கொதித்தனன்; விடுத்திலன் படுத்தனன்;
சதைத்தனன்; புதைத்தனன்; தகர்த்தனன்; துகைத்தனன்;
உதைத்தனன்; குதித்தனன்; உருட்டினன்; புரட்டினன்;
சிதைத்தனன்; செருத்தனன்; செருக்கினன்; தருக்கினன்.

(காவலாளர். 21.)

[சதைத்தனன் - செதுக்கினான். செருத்தனன் - போரிட்டான்.]

இந்தப் பாட்டின் ஓசையே வீரவாகு தேவரின் வீரச் செயல்களை நன்கு காட்டுகிறது. இப்படிச் செய்ததனால் ஐம்பது வெள்ளம் சேனை அழிந்தது.

பிறகு அந்த நகரை அழித்தான். அப்பால் ஆயிரம் தோள்களை உடைய அசுரர்கள் போரிட வந்து மாண்டார்கள். பத்துத் தலையை உடைய வச்சிரபாகு வந்து போர் செய்து அழிந்தான். இவன் சூரனுடைய மகன். இவர்களை எல்லாம் அழித்துவிட்டு வீரபாகு தேவர் மகேந்திரபுரியை விட்டு நீங்கினார்.

திரும்பும் வழியில் இடையில் இலங்கை இருந்தது. அங்கே ஆயிரம் யாளி முகங்களையும், இரண்டாயிரம் தோள்களையும் உடைய யாளிமுகன் இருந்தான். அவன் சண்டைக்கு வந்தபோது, அவனைத் தம் வாளால் வெட்டினார் வீரவாகு தேவர். அவன் அழிந்தான்.

செந்திலை அடைதல்

பிறகு முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருச்செந்தூருக்கு வீரவாகு தேவர் வந்து சேர்ந்தார்.

பெருமானைக் கண்டவுடன் வீரவாகு தேவருடைய உள்ளம் உருகியது. கண்ணிலிருந்து தாரை தாரையாக வெள்ளம் பெருகிற்று. உடம்பெல்லாம் புளகம் போர்த்தது. பல காலம் பிரிந்த தாயைக் கண்ட குழந்தை போல அவர் அன்பு பொங்க நின்றார்.

"நான் எவ்வளவோ சொல்லியும் சூரபன்மன் தேவர்களைச் சிறை விடுக்கமாட்டேன் என்று சொல்லி விட்டான். ஆகையால் அந்த இடத்தை விட்டு நான் திரும்பினேன்" என்று சொன்னார்.

முருகப் பெருமானிடம் வீரவாகு தேவர் தாம் செய்த வீரச் செயல்களைச் சொல்லவில்லை. மற்றவர்களாய் இருந்தால் போன காரியத்தைச் சொல்லாமல், 'நான் அது செய்தேன்; இது செய்தேன்' என்று வீரம் பேசிக் கொண்டிருப்பார்கள். வீரவாகு தேவர் மிக்க அடக்க முடையவர். ஆகையால் தாம் செய்த வீரச் செயல்களைச் சொல்லாமல் சூரபன்மன் சொன்னதை மட்டும் சுருக்கமாகச் சொன்னார்.

இராமாயணத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருகிறது. அநுமன் இலங்கைக்குச் சென்று சீதாபிராட்டியைப் பார்த்து. இலங்கையை எரி ஊட்டி, எதிர்த்த அரக்கர்களை அழித்துவிட்டு வந்தான். வந்த போது இராமனிடம் ஒன்றும் அவற்றைப் பற்றிச் சொல்லவில்லை. குறிப்பினால் வானர வீரர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று கம்பர் பாடுகிறார்.

முருகப் பெருமானுக்கு வீரவாகு தேவர் என்ன செய்தார் என்று தெரியாதா? அவரைப் பார்த்து, "நீ அங்கே என்ன என்ன காரியம் செய்தாய்? உன் செய்கை பற்றி ஒன்றும் சொல்லவில்லையே! அதைச் சொல்" என்று ஏவினான்.

என்ற காலையின் யாண்டும் வைகியே
நின்று முற்றுஒருங்கு உணர்ந்த நீர்மையான்,
உன்றன் செய்கையுள் ஒன்றும் சொற்றிலை,
நன்று மற்றுஅதும் நவிறி யால்என்றான்.

(வீரவாகு மீட்சி. 14.)

[நீர்மையான் - முருகன். நவிறி - சொல்.]

அதன் பிறகுதான் வீரவாகு தேவர் தமக்கு வந்த தடைகளையும், அவற்றை எல்லாம் எம்பெருமான் திருவருளால் போக்கி வீரச் செயல்கள் புரிந்ததையும் சுருக்கமாகச் சொன்னார்.

தொடக்கம் உற்றுவாழ் சூரன் மாநகர்
அடுத்த காலையின் அகன்ற வேலையில்
நடுத்து ளோரைநின் சரண வன்மையால்
படுத்து வந்தனன்; பான்மை ஈதுஎன்றான்.

(வீரவாகு மீட்சி. 15.)

[தொடக்கம் - முதலில். மா நகர் உற்று. வேலையில் - கடலின் நடுவில். படுத்து - அழித்து.]

உடனே முருகப் பெருமான், "சூரபன்மன் அழிவது அவன் தலைவிதி. அதனால்தான் தேவர்களைச் சிறை விடமாட்டேன் என்று சொல்கிறான். நாளைக்கே புறப்பட்டு அங்கே செய்யவேண்டியதைச் செய்யலாம்" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

வீத லேஅவன் விதியது? ஆதலின்
தீதில் விண்ணவர் சிறைவி டோம்என
ஓதி னான்; அவன் உயர்வு நீக்குவான்
போதும் நாளையாம் எனப்பு கன்றனன்.

(வீரவாகு மீட்சி. 19.)

[வீதலே - அழிவதே. போதும் - போவோம்.]

வீரவாகு தேவர் தனியாக இந்திரனிடம் போய், சயந்தனைப் பார்த்ததையும், அவன் இருக்கிற நிலையையும் சொல்லி அவனைத் தேற்றினார்.

தேவாசுரப் போர்

சூரன் துயரம்

சூரபன்மன் தன்னுடைய மகனாகிய வச்சிரபாகுவும், படை வீரர்களும் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டான். அவனுக்குத் துயர் உண்டாயிற்று. கண்ணில் தாரை தாரையாக நீர் பெருகியது. பெருமூச்சு விட்டான். முன்பே இருந்த சோகம் அதிகமானதால் பல பல புலம்பினான்.

கண்ணிடை நெடும்புனல் கால, மைந்தன்மேல்
உள்நிகழ் அன்புசென்று உயிரை ஈர்ந்திடத்
துண்ணென உயிர்ப்பெனும் புகையும் சுற்றிட
எண்ணரும் செல்லல்கொண்டு இரங்கி ஏங்கினான்.

(சூரன் நகர் புரி. 3.)

[கால - வழிய. உயிர்ப்பு - பெருமூச்சு. ஈர்ந்திட - பிளக்க. செல்லல் - துயரம்.]

"நான் இருந்து என்ன பயன்?" என்று நைந்து கூறினான்; "இப்பொழுதே போய் எல்லோரையும் அழிப்பேன்" என்றான்.

தருமகோபன் கூற்று

அப்போது தருமகோபன் என்ற அமைச்சன் எழுந்தான். அவன் பெயரைப் பார்த்தாலே அவன் இயல்பு தெரிகிறது; தருமத்தைக் கோபிப்பவன் அவன். "உனக்கு உலகில் யாருக்கும் இல்லாத பலம் இருக்கிறது. மிகப் பெரிய வளம் பெற்றிருக்கிறாய். ஆயிரத் தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகங்கள் ஆட்சி செய்வதற்குரிய வரம் இருக்கிறது. உன் உடம்பு வச்சிரத்தாலானது. முப்பத்து முக்கோடி தேவர்களும், அறுபத்தாறு கோடி அசுரர்களும் உன் புகழைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். பணத்தாலும், பலத்தாலும், பதவியாலும், உடம்பு வளத்தாலும், பெற்ற வரத்தாலும் மிகச் சிறந்து விளங்குகிற நீ ஒரு சாதாரண மனிதன் புலம்புவது போலப் புலம்பலாமா?" என்று கேட்டான்.

மெய்ப்புவி அண்டங்கள் பரித்த மேன்மையை;
ஒப்பரும் திருவினை; உலப்பில் ஆயுளை;
செப்பருந் திறலினை; சிறந்த கீர்த்தியை;
இப்பரிசு அழுங்குதல் இயற்கை ஆகுமோ?

(சூரன் நகர் புரி. 9.)

[பரித்த மேன்மையை - தாங்கிய பெருமையை உடையாய். திருவினை - ஐசுவரியத்தை உடையாய். உலப்பில் - அழியாத. அழுங்குதல் - வருந்துதல்.]

நகரை மீண்டும் அமைத்தல்

அப்போது சூரனுக்குக் கொஞ்சம் தெம்பு உண்டாயிற்று. வீரவாகு தேவர் அழித்துவிட்ட மகேந்திரபுரியை மீட்டும் செப்பனிடவேண்டுமென்று எண்ணி, "பிரமனை அழைத்து வாருங்கள்" என்றான்.

அண்டங்கள் பலப் பல. ஒவ்வோர் அண்டத்திற்கும் ஒவ்வொரு பிரமன் இருக்கிறான். நம்முடைய நாட்டில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒவ்வொரு கவர்னர் இருக்கிற மாதிரி, பிரமர்களும் பலர் உண்டு. சூரனுக்குப் பக்கத்தில் இருந்தவர்கள், "நம்முடைய அண்டத்தில் இருந்த பிரமன், பூமிக்குச் சென்று காங்கேயனாகிய முருகனோடு சேர்ந்துவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள்" என்றார்கள்.

ஈங்கிது கேட்டி மன்ன,
    இனையமூ தண்டம் நல்கும்
தேங்கமழ் பதுமத்து அண்ணல்
    தேவர்கோன் ஆதி யான
பாங்கின ரோடு மேவிப்
    படையொடும் புவியில் வந்த
காங்கெயன் தன்கண் உற்றான்
    என்பரால் கண்டோர் என்றார்.

(சூரன் நகர் புரி. 21.)

[இனைய மூதண்டம் நல்கும் - இந்தப் பழைய அண்டத்தைப் படைத்த. பதுமத்து அண்ணல் - பிரமன்.]

உடனே சூரன், "வேறு அண்டங்களிலிருந்து வேறு யாரேனும் ஒரு பிரமனைக் கூட்டி வாருங்கள்" என்று சொன்னான். மற்றோர் அண்டத்திலிருந்து வேறு ஒரு பிரமனைக் கூட்டி வந்தார்கள். அந்தப் பிரமனைக் கொண்டு மீண்டும் பழையபடியே மகேந்திரபுரியை நிர்மாணிக்கச் செய்தான் சூரன்.

ஒற்றர் முருகன் படைத்திறம் அறிந்து வருதல்

போர் செய்கிறவர்கள் மாற்றான் வலியையும் தன் வலியையும் துணை வலியையும் தெரிந்து கொண்டு போர் செய்யப் புகவேண்டுமென்று திருவள்ளுவர் சொல்கிறார்.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

சூரபன்மன் திருச்செந்தூரில் வந்து தங்கியிருக்கும் முருகப் பெருமானின் படை வலியைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்று ஒற்றர்களை அனுப்பினான். அவர்கள் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோலத்தையும், அவனுடைய படை வீரர்களின் கணக்கையும் பார்த்து வந்து சொன்னார்கள்.

ஏற்றவெம் பூத வெள்ளம்
இராயிரம்; படையின் வேந்தர்
நூற்றுடன் எண்மர்; பின்னும்
நுவலரும் சிறப்பின் மிக்கோர்
மேல்திகழ் இலக்கத் தொன்பான்
வீரர்; மற்று இனைய ரோடும்
தோற்றம்இல் பரமன் மைந்தன்
தொடுகடல் உலகின் வந்தான்.

(சூரன் அமைச்சியல். 2.)

[தோற்றம் இல் பரமன் - பிறப்பில்லாத சிவபெருமானுடைய.]

பூதப் படைகள் இரண்டாயிரம் வெள்ளம் நூற்றெட்டுப் படைத் தலைவர்களுடன் இருப்பதை அறிந்தான். பின்னும் லட்சத்து ஒன்பது வீரர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்தான். போய்ப் பார்த்து வந்தவர்கள் இவற்றைச் சொன்னதோடு, "பரமேசுவரனு டைய குமாரனாகிய கந்தசுவாமி நம்மோடு யுத்தம் செய்ய வந்துள்ளான்" என்பதையும் அறிவித்தார்கள்.

சூரன் ஆலோசனை

அதைக் கேட்ட சூரன் யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானான். தன் தம்பிமார்களை அழைத்து ஆலோசனை பண்ணி னான். "நாம் எல்லாம் இங்கே இருந்து என்ன பயன்? நம் மேலே படையெடுத்து முருகன் வந்திருக்கிறான்" என்று சூரன் சொல்லி வருந்தினான்.

சூரன்என்று ஒருபெயர் படைத்த தொல்லையேன்
பாரிடர் தம்மொடும் பாலன் தன்னொடும்
போரினை இழைத்திடல் புரிந்து வெல்லினும்
வீரமது அன்றுஎன வெறிதின் மேவினேன்.

(சூரன் அமைச்சியல். 21.)

[தொல்லையேன் - பழையவனாகிய யான். பாரிடர் - பூதர்கள். வெறிதின் - வீணாக; செயலின்றி.]

"சூரன் என்ற பெயரோடு மிகப் பழையவனுகிய நான் இருக்கிறேன்" என்று அவன் சொன்னுன். பழமையானவன் என்பதைத் தொல்லையேன் என்பதால் குறிக்கிருன். அதற்கு மற்றெரு பொருள் தொனிக்கிறது. 'மிகவும் தொல்லை கொடுப்பவன் நான்' என்றும் பொருள் தொனிக்கிறது; 'இப்போது தொல்லைப் படுகிறவன்' என்னும் மற்றெரு பொருளும் தோன்றுகிறது.

"மிகச் சிறிய பாலகன் என்பதால் நான் போர் செய்யாமல் இருந்தேன். குழந்தையுடன் போர் செய்து வெற்றி பெற்ருல் அது முறையும் ஆகாது; புகழும் ஆகாது. அதற்காகச் சும்மா இருந்தேன். இல்லாவிட்டால் ஒரு கணத்தில் அவனை அழித்திருப்பேன்" என்று அவன் சொன்னுன்.

அப்போது மேதி என்ற அசுரன் எழுந்தான். அவன் மகிஷாசுரன்; "பாலன் என்று முருகனைப் பாராமல் அப்போதே அவனைச் சென்று நீ அழித்திருப்பாயானுல், வீரவாகு இந்த நகரத்துக்கு வந்து இதனை அழித்திருப்பானு? அதை நீ செய்யவில்லை. இப்போது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கலாமா?"

முன்னம்அக் குமரன்மேல் முனிந்து சேறியேல்
உன்னகர்க்கு ஏகுமோ ஒற்று? மற்றுநீ
அன்னது புரிந்திலை; ஆடல் மைந்தனேடு
இந்நகர் அழிந்ததுஎன்று இரங்கற் பாலையோ?

(சூரன் அமைச்சியல். 32.)

[சேறியேல் - சென்றிருந்தால். ஒற்று - தூதுவன். ஆடல் - வெற்றியை உடைய.]

"செய்ய வேண்டிய காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்துவிட்டு நம்முடைய மகன் இறந்துவிட்டானே, நகரம் அழிந்து விட்டதே என்று இப்போது வருந்துவதால் என்ன பயன்? இப்போதே போய்ப் போர் செய்து அவர்களை அழித்து விட வேண்டும்" என்று அவன் சொன்னுன். மற்றவர்களும் அப்படியே சொன்னுர்கள்.

"நீ போக வேண்டாம். படைகளை அனுப்பி அவர்களை அழித்துவரச் சொல்" என்று அவர்கள் சொன்னுர்கள். துர்க்குணன், தருமகோபன், கண்டன், சிங்கன் ஆகியவர்கள் எல்லாம் இதையே சொன்னுர்கள்.

அப்போது சூரன் மகனாகிய பானுகோபன் எழுந்தான்; "தாரகனைக் கொன்றபோதே நீ என்னை விடவில்லை. இப்போதாவது என்னை அனுப்பினால் இரண்டாயிரம் வெள்ளம் சேனையையும், இந்திரன் பிரம்மா முதலியவர்களையும் அழித்து வெற்றியோடு வருவேன்" என்றான்.

ஆண்டெனை விடுத்தியேல் அமர தாற்றிட,
மூண்டிடும் அவர்தொகை முருக்கித் தேவராய்
ஈண்டுறு வோரையும் இமைப்பில் வென்றுபின்
மீண்டிடு வேன்என விளம்பி னான்அரோ.

(சூரன் அமைச்சியல். 75.)

[அமரது ஆற்றிட - போர் செய்ய. முருக்கி - அழித்து.]

சிங்கமுகன் கூற்று

பின்னர்ச் சூரன் தம்பி சிங்கமுகன் எழுந்தான். அவன் மாற்றானை நன்கு உணர்ந்தவன். எப்படி இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணன் சீதையை விட்டுவிட வேண்டுமென்று எடுத்துச் சொன்னானோ அப்படிச் சிங்கமுகன் நல்லது எது என்று தெரிந்து எடுத்துச் சொன்னான்.

அறைகழல் வாசவற்கு அலக்கண் ஆற்றியே
இறையினை அழித்தனை; இருந்த மாநகர்
நிறைதரு வளன்எலாம் நீக்கு வித்தனை;
சிறையிடை உய்த்தனை தேவர் யாரையும்.

(சூரன் அமைச்சியல். 97.)

[வாசவற்கு - இந்திரனுக்கு. அலக்கண் - துன்பம். இறையினை - அரசை.]

மற்றவர்கள் எல்லாம் சூரபன்மாவின் கோபம் மூளும் வகையில், "அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். ஆனால் இவன் மட்டும் சூரனுடைய தவறுகளை எடுத்துக் கூறினான். "நீ இந்திரனை நாட்டை விட்டு விரட்டினாய். அவனது நாட்டிலுள்ள செல்வத்தை அழித்தாய். தேவர்களைச் சிறையில் அடைத்தாய். இவ்வளவு தவறு செய்தாயே; உன் தவறுகளை நீ உணரவில்லையே!"

பேறு தந்திடு பிஞ்ஞகன் பெருந்திரு வுடன்நீர்
நூறு தன்னுடன் எட்டுகம் இரும்என நுவன்றான்;
கூறு கின்றதோர் காலமும் குறுகியது; அதனைத்
தேறு கின்றிலை; விதிவலி யாவரே தீர்ந்தார்?

(சூரன் அமைச்சியல். 100.)

[பேறு - வரம். பிஞ்ஞகன் - சிவபெருமான். காலமும் - முடிவு காலமும்.]

"அப்போதே வரம் கொடுத்த பரமேசுவரன் உனக்கு அவன் அளித்த செல்வத்துடன் நூற்றெட்டு யுகம் வாழலாம் என்று சொன்னான். அந்தக் காலம் முடிந்து விட்டது. இன்னும் சில நாட்களே உள்ளன. ஆகையால் நமக்கு முடிவு வரப்போகிறது. அதனால்தான் நீ இவ்வாறு பேசுகிறாய். விதி வலியை யாவர் வெல்ல முடியும்?"

அமரர் தம்பெரும் சிறையினை நீக்குதி ஆயின்,
குமர நாயகன் ஈண்டுபோர் ஆற்றிடக் குறியான்;
நமது குற்றமும் சிந்தையிற் கொள்ளலன்; நாளை
இமைமொ டுங்குமுன் கயிலையின் மீண்டிடும் எந்தாய்.

(சூரன் அமைச்சியல். *104.*)

[குறியான் - எண்ணமாட்டான்.]

'எந்தாய்' என்று சிங்கமுகன் சொன்னான். 'என் அப்பனே' என்று பொருள். அண்ணா என்று விளிக்கவில்லை. அண்ணன் தம்பிகளிடம் பங்காளிச் சண்டை இருக்கும். எல்லோருக்கும் பிரிய மான சொல்லால் எந்தாய் என்று விளித்தான்.

"தேவர்களைச் சிறை நீக்கினால், குமாரநாதன் போர் செய்ய மாட்டான். அவன் கருணை மிகுந்தவன். நாம் செய்திருக்கும் குற்றங்களைத் தன் பெரும் கருணைத் திறத்தால் மன்னித்துவிடுவான். தன் அடியார்களுக்கு வரும் துன்பத்தை அவன் சகிக்கமாட்டான். ஆகவே, தேவர்களை விட்டுவிடு. நாளைக்கே இங்கிருந்து புறப்பட்டு அவன் கைலாசத்திற்குப் போய்விடுவான்" என்றான்.

சூரன் சினந்து கூறல்

எல்லோரும் பஞ்சில் பெட்ரோலையும், நெருப்பையும் போடும் போது இவன் மட்டும் தண்ணீர்விட்டால் சூரபன்மாவுக்குச் சினம் வராதா? 'நம் கருத்துக்குத் துணையாக நிற்க வேண்டியவன் இவ்வாறு கூறுகிறானே! என்று கோபம் வந்தது. அவன் பேசத் தொடங்கினான்.

"நேற்று வரைக்கும் நமக்கு ஏவல் செய்து வந்தவர்கள் தேவர்கள். நம் செருப்புக்களைத் தூக்கிக்கொண்டு திரிந்தவர்களைக் கண்டு நீ பயப்படுகிறாய். உன் கருத்து அழிந்துவிட்டது. மனத்தில் ஏதோ கோளாறு வந்துவிட்டது. உன் அறிவு போய்விட்டது. மும்மூர்த்திகளையும் அழிக்கின்ற பலம் உள்ள நீ ஏன் இப்படிப்

பயப்படுகிருய்? பூத கணங்களைக் கண்டு பயப்படுகிருயா? அந்தச் சின்னக் குழந்தையைக் கண்டு பயப்படுகிருயா?'' என்ருன்.

ஏவல் தொண்டுசெய்து இன்னமும்
கரந்தஇந் திரற்கும்
தேவர்க் கும்சிறு பாலற்கும்
சிவனுறை கயிலைக்
காவல் பூதர்க்கும் அஞ்சினை;
கருத்துஅழிந் தனையோ?
மூவர்க் கும்வெலற்கு அரியதோர்
மொய்ம்புகொண் டுடையோய்!

(சூரன் அமைச்சியல். 107.)

[கரந்த - மறைந்திருந்த. மொய்ம்பு - வலிமை.]

"ஆதி நாயகனுகிய பரமேசுவரன்தான் நமக்கு வரம் கொடுத்தான். அவனுடைய சக்தியாகிய முருகன் இப்போது வந்துள்ளான் என்கிருய். வரம் கொடுத்தவனே எங்காவது வரத்தை அழிப்பானு?"

ஆதி நாயகன், எம்பெரும் சத்தியே அல்லால்
ஏதி லார்கொலார் என்னினும் சத்தியும் இறையும்
பேத மோ? வரம் கொடுத்தவன் அடும்என்கை பிழையே.
ஓதல் ஆவதோர் வழக்கமே, உண்மை அதுஅன்ருல்.

(சூரன் அமைச்சியல். 110.)

[ஏதிலார் - அயலார். என்னினும் - என்றுசொன்னுலும்.]

சிவன் வேறு, சக்தி வேறு அல்ல. பரமசிவனுக்கும் பராசக்திக்கும் வேறுபாடு இல்லை என்று சித்தாந்தம் சொல்லும் உண்மையைச் சூரன் சொல்கிருன். பொல்லாதவர்கள் சில சமயம் தங்களுடைய கருத்துக்குச் சாதகமாகச் சாத்திரங்களை மேற்கோள் காட்டுவார்கள். அப்படி, சிவனுக்கும் சக்திக்கும் உள்ள அபேதத்தைச் சூரபன்மன் தனக்குச் சாதகமாகச் சொல்கிருன்.

அடுத்தபடியாக, "அந்தச் சின்னப் பிள்ளை என்னை வெல்வான் என்று சொல்வது எப்படி இருக்கிறது தெரியுமா?" என்று சொல்லி ஓர் உவமையைக் கூறினன். "ஒரு குருடன் ஆகாசத்தில் இருந்த சூரியனைப் பார்த்துக் கனி என்று சொன்னுனம். அருகில் இருந்த, இரண்டு கையும் இல்லாத முடவன் அதைத் தின்னலாம் என்று

கையினுல் பற்றினனும். இதைப்போல இருக்கிறது நீ சொல்வது" என்ருன்.

எண்ணி லாததோர் பாலகன் எனவெல்வன் என்கை
விண்ணில் ஆதவன் தன்னைஓர் கனிஎன வெஃகிக்
கண்இ லாதவன் காட்டிடக் கையிலா தவன்போய்
உன்தி லாதபேர் ஆசையால் பற்றுமாறு ஒக்கும்.

(சூரன் அமைச்சியல். 116.)

[என் இலாததோர் பாலகன் - எதையும் எண்ணிப் பார்க்கத் தெரியாத ஒரு பையன். ஆதவன் - சூரியன். வெஃகி - விரும்பி.]

சிங்கமுகன் கூற்று

சிங்கமுகன் அப்போது சொன்னுன்; "வரம் கொடுத்தவன் அழிக்க மாட்டான் என்பது உண்மைதான். அது முறை அல்ல என்பதை மனத்தில் எண்ணியே தன்னுடைய வடிவமேயாகிய தன் பிள்ளையையே இங்கே அனுப்பியுள்ளான். அதனை நீ புரிந்து கொள்ளவில்லையே!" என்ருன்.

வரம்அ ளித்தயாம் அழிப்பது முறையன்று, வரத்தால்
பெருமை பெற்றுள சூரனை அடுவது பிறர்க்கும்
அரிது எனப்பரன் உன்னியே தன்உரு ஆகும்
ஒருமகற்கொடு முடித்தும்என்று உன்னினன் உளத்தில்.

(சூரன் அமைச்சியல். 122.)

[அடுவது - அழிப்பது. பரன் - சிவபெருமான். முடித்தும் - அழிப்போம்.]

மேலும் அவன் அறிவுரை கூறலானுன். "முருகப்பெருமானைச் சிறு பிள்ளை என்று சொல்கிருய். அவன் ஞான சொரூபி. எல்லோருக்கும் குருநாதன். சீலம் இல்லாதவர்களுக்கு அது தெரியாது."

சீலம் இல்லவர்க்கு உணரஒண் ணுதசிற் பரனைப்
பாலன் என்றனை; அவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோன்றிய, சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித் ததுபோல்.

(சூரன் அமைச்சியல். 125.)

இப்படிச் சிங்கமுகன் சொன்னதில் ஒரு குறிப்பு இருக்கிறது. "நீ சீலம் இல்லாதவன். ஆகையால் உனக்கு அவனுடைய பெருமை தெரியவில்லை" என்று குறிப்பித்தான். "அவனை உன்னுல் உணர

முடியாது. ஆலம் வித்திற்குள்ளே ஆலமரத்தின் இலே, கிளை, விழுது எல்லாம் அடங்கியுள்ளன. அப்படி முருகப்பெருமானிடத்தில் எல்லாத் தத்துவங்களும் அடங்கியுள்ளன. இதை நீ எப்படி அறிவாய்?" என்றான்.

அதற்குமேல் அவன் சொல்வது மிகவும் அருமையான வாசகம்.

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன்.

வேதம் மூன்று பகுதியாக இருக்கிறது. உபாசன காண்டம், கர்ம காண்டம், ஞான காண்டம் என்று மூன்று. ஆண்டவன் வேதங்களாலும் அறிய முடியாதவன்.

கர்மகாண்டம் வருணசிரம முறைகளுக்கேற்ப இன்னர் இன்னர் இன்ன இன்ன செயல்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லும். உபாசனகாண்டம் அக்கினி மூலமாக இன்ன இன்ன தேவர்களுக்குப் பிரீதியாக இன்னபடி ஆகுதி செய்ய வேண்டுமென்று சொல்லும். ஞானகாண்டம் என்பது உண்மையான மெய்ப்பொருளைச் சொல்லும். அதை உபநிஷத் என்பர். அதுதான் வேதத்தின் முடிவில் இருப்பது. அதை வேதாந்தம் என்றும் வேதத்தின் கொழுந்து என்றும் சொல்வது வழக்கம். மற்றவைகள் அடிமரம், கிளைகளைப் போன்றவை. உபநிடதம் ஞான சொரூபமாகவே உள்ளது. "அதுவும் கூட ஆண்டவனைக் காண முடியாது" என்று சிங்கமுகன் சொன்னான்.

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரிற் புதியன்;
மூதக் கார்க்குமூ தக்கவன், முடிவிற்கு முடிவாய்
ஆதிக்கு ஆதியாய், உயிர்க்குயி ராய்நின்ற அமலன்.

(சூரன் அமைச்சியல். 127.)

"முருகப்பெருமான் மிகப் புதியவருக்கும் புதியவனாக இருப்பான். மிக மூத்தவருக்கும் மூத்தவனாக இருப்பான். முடிகின்ற பொருளுக்கு முடிவாய் இருப்பான். முதலில் தோன்றிய பொருளுக்கும் முதல்வனாக இருப்பான். எல்லா உயிர்களுக்கும் உயிராய் இருக்கிற பெருமான் அவன்" என்றான்.

இதைத்தான் சிவஞானபோதத்தின் முதல் சூத்திரம் சொல்கிறது.

"அந்தம் ஆதி என்மனார் புலவர்."

எல்லாவற்றுக்கும் கடைசியில் எவன் இருக்கிறானோ, எல்லாம் அழிந்த பின்னும் எவன் இருக்கிறானோ, அவன்தான் முதல் முதலாக உள்ள சிருஷ்டியைச் செய்கிறான். அவனே எல்லோருக்கும் மூத்தவனாக இருக்கிறான்.

ஒரு கோவில். அர்த்த மண்டபம், மகா மண்டபம், கோபுரவாசல் எல்லாம் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திற்கும் ஒரு வாசல், அதற்குக் கதவு, பூட்டு, சாவி இருக்கின்றன. ஆராதனை முடிந்தவுடன் குருக்கள் கர்ப்பக்கிருகத்தை பூட்டிக்கொண்டு வெளி வருகிறார். அர்த்த மண்டபத்தைக் கண்காணிப்பாளர் பூட்டுகிறார். பின்னர் வெளி வாசல் கதவைக் கோவில் காவல்காரன் பூட்டுகிறான். திறக்கும்போது, 'பூட்டிய முறைப்படியேதான் குருக்கள் முதலில் திறக்க வேண்டும். அடுத்துக் கண்காணிப்பாளர் திறக்க வேண்டும். பிறகுதான் காவல்காரன் திறக்கவேண்டும்' என்று சொல்ல முடியுமா? யார் கடைசியில் பூட்டினானோ அவன்தான் முதலில் திறந்துவிடுவான். அப்படி, எல்லாவற்றையும் சங்காரம் பண்ணி, கடைசியில் எஞ்சியிருக்கிற பெருமானே எல்லாவற்றுக்கும் முதலாக இருக்கிறான் என்று **சிவஞானபோதம்** சொல்கிறது.

இங்கே முருகப்பெருமான் சிவனையன்றி வேறு அல்லன் ஆகையால் ஆதிக்கு ஆதியாய், அந்தத்திற்கு அந்தமாய் இருக்கிறான் என்று சிங்கமுகன் சொன்னான்.

இப்படி உள்ள பெருமான் ஞானமே உருவாக உள்ளவன். ஞானம் வேறு, முருகன் வேறு அல்ல. அவனை ஞானபண்டித சாமி என்று **அருணகிரியார்** சொல்வார்.

"நீயான ஞான வினோதந் தனைஎன்று நீ அருள்வாய்"

என்று **கந்தர் அலங்காரத்தில்** சொல்கிறார்.

ஞான சொரூபியாகிய அவனை ஞானம் அடைந்தவர்களால்தான் காண முடியும். பொறி, புலன்களினால் காண ஒண்ணாது. ஞானத்திற்கு வாயிலாக இருப்பது மோனம்.

"மோனம் என்பது ஞான வரம்பு"

என்று ஔவைப்பாட்டி பாடினுள். நம்முடைய உள்ளத்திற்குள் ஆண்டவன் விளக்குப்போலச் சுடர்விடுகிருன். ஆனல் நமக்குத் தெளிவாகத் தெரிவதில்லை. ஐந்து இந்திரியங்களாகிய வாயிலைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கிரேம். ஆகையால் அந்தச் சுடர் அலைகின்றது. நன்ருக எரிகிறது தெரியவில்லை. எல்லாச் சன்னல் களையும் அடைத்தால் இந்த விளக்கு நன்கு எரியும். அதைத் தெரிந்துகொள்ளலாம்.

மோனம் என்பது மூன்று வகை: காஷ்ட மௌனம், வாங் மௌனம், மனே மௌனம் என்று சொல்வார்கள். உடம்பிலுள்ள உறுப்புக்கள் அசையாமல் கட்டைபோல இருப்பது காஷ்ட மௌனம்; வாய் பேசாமல் இருப்பது வாங் மௌனம். இந்த இரண்டும் முயன்ருல் கைகூடும். மனே மௌனம் என்பது மனம் அலைப்பு இல்லாமல் இருப்பது: இது ஆண்டவன் திருவருளால்தான் கிடைக்கும். முழு மௌனம் வந்துவிட்டால் ஞானம் தலைப்படும். இந்த முழு மௌனம் இல்லாதவர்கள் இறைவனைக் காண முடியாது.

ஞானந் தான்உரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்என் ருல்அஃது எளிதோ ?
மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர்; முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை.

(சூரபன்மன் அமைச்சியல். 128.)

[இசைத்தும் - சொல்வோம். தேற்றிலர் - தெரிந்துகொள்ளவில்லை.]

"சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"

என்று அருணகிரியார் பாடுகிற பாடலில் இந்த மூன்று வகையான மௌனங்களையும் சொல்கிருர். சும்மா இரு என்பது காஷ்ட மௌனத்தையும், சொல் அறுதல் என்பது வாங்மௌனத்தையும், ஒன்றும் அறிந்திலனே என்பது மனேமௌனத்தையும் சொல்வன. முன் இரண்டையும் அப்பியாசத்தால் செய்யலாம். பின்னது இறைவன் திருவருளால் கிடைப்பது. அரைகுறை மௌனியாக இருக்கிற முனிவர்கள் இறைவனைக் காண முடியாது. அதைச் சிங்கமுகன் சொன்னுன்.

மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர்; முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை

என்றான்.

'தானும் காண்கிலன்' என்று இந்தப் பாட்டின் ஈற்றடியில் வருகிறது. தன்னைப் பற்றித் தானே தெரிந்துகொள்ளாமல் இருக்கிறானும் இறைவன்.

பாரத நிகழ்ச்சி

பாரதத்தில் ஒரு நிகழ்ச்சி வருகிறது. பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து, பின்பு ஓராண்டு விராட நகரத்தில் மறைவாக வாழ்ந்தார்கள்; அஞ்ஞாதவாசம் செய்தார்கள். 13 ஆண்டுகள் ஆன பிற்பாடு வெளிப்பட்டார்கள். அப்போது என்ன செய்யலாம் என்று பஞ்சபாண்டவர்களைக் கண்ணபிரான் கேட்டான். தருமர், "நாம் மறுபடியும் காட்டுக்கே போய் வாழலாம்" என்றார். "அன்று நீங்கள் எல்லாம் சபதம் செய்தீர்களே, அது என்ன ஆகும்?" என்று கேட்டான் கண்ணன். "அப்படியானால் நீ தூது போய் வா" என்று தருமராஜா சொன்னார். பீமன் கண்ணனைப் பார்த்து, "என்னைத் தூது அனுப்புங்கள். நான் போய் அவர்களைச் சங்காரம் செய்துவிட்டு வருகிறேன்" என்றான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொன்னார்கள். கடைசியில் சகாதேவனைப் பார்த்து, "உன்னுடைய கருத்து என்ன?" என்று கண்ணன் கேட்டான்.

"நீ தூது போனால் என்ன? போகாவிட்டால் என்ன? கடைசியில் நீ எதை நினைத்திருக்கிறாயோ அதுதான் முடியும்" என்று அவன் சொன்னான்.

'எல்லோரும் ஒருவிதமாகச் சொல்ல இவன்மாத்திரம் இப்படிப் பேசுகிறானே!' என்று கண்ணன் யோசித்தான். 'இவனுக்கு ஏதோ இரகசியம் தெரியும் போலிருக்கிறது, எல்லோருக்கும் மத்தியில் கேட்டால் இவன் எதையாவது அவிழ்த்துவிடப் போகிறான்' என்று அவனைத் தனியாக அழைத்துப் போய், "நீ என்ன சொல்கிறாய்? உன் கருத்து என்ன?" என்று கேட்டான். "கண்ணா, நீ எல்லோரையும் பாரத யுத்தத்தில் தீர்த்துவிட எண்ணியிருக்கிறாய். பூமி

தேவி பாரம் பொறுக்காமல் உன்னிடம் முறையிட, நீ அவளுக்கு உதவியாக யாவரையும் அழிக்க வந்திருக்கிறாய்'' என்றான்.

"நீபா ரதஅமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா''

என்றான்.

"அப்படியானால் பாரதப்போர் நடக்காமல் இருக்க நீ ஏதாவது வழியைச் சொல்'' என்று கேட்டான் கண்ணன். அதற்குச் சகா தேவன் சொன்னான்.

"பாராளக் கன்னன் இகல்
பார்த்தனைமுன் கொன்றுஅணங்கின்
காரார் குழல்களைந்து
காவில் தளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து
நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம்
மாபா ரதம்என்றான்."

"நீ சொன்ன நிபந்தனைகள் எல்லாம் நிறைவேறினாலும், என்னை நீ எவ்வாறு கட்டுவாய்?'' என்றான் கண்ணன்.

அப்போது சகாதேவன், "உன்னையே உனக்குத் தெரியாது, கண்ணா. உன்னுடைய இந்த வடிவம் மாத்திரம் அல்ல, உன்னுடைய வடிவங்கள் எல்லாவற்றையும் காட்டு. நான் கட்டிவிடுகிறேன்'' என்று சொன்னான்.

"முன்னம்நீ கூறியவை எல்லாம் முடிந்தாலும்
என்னைநீ கட்டுமாறு எவ்வாறு? எனமாயன்,
உன்னைநீ தானும் உணராதாய்; உன்வடிவம்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யான்என்றான்."

கண்ணன் தன் பெரிய வடிவத்தை எடுத்துக்கொண்டான். எவ்வளவு பெரிய வடிவத்தை எடுத்துக்கொண்டால் என்ன? சகாதேவன் தன்னுடைய அன்பினால் அப்பெருமானின் இரண்டு திருவடிகளையும் தன் கருத்தினால் பிணைத்துவிட்டான். அங்கே சகாதேவன் சொன்னானே, "உன்னை நீ தானும் உணராதாய்'' என்று, அது போலச் சிங்கமுகன் முருகப் பெருமானைச் சொல்லும்போது,

தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை

என்ருன்.

விரிவுரையாற்றுபவர்களுக்கு ஓர் அநுபவம் இருக்கும். பேசும் போது சில புதிய செய்திகள் அவ்வப்போது தாமே வரும். அப்படி ஆண்டவனது பெருமை சமயத்துக்கு ஏற்ப அவ்வப்போது வெளிப் படும். அவனுக்கே தன் கருணையின் திறம் முழுவதும் தெரியாது.

மேலே, இன்னும் முருகப் பெருமானுடைய பெருமையைச் சொல்ல வருகிருன் சிங்கமுகன். காண்பான், காட்சி, கண் ஆகிய மூன்றையும் திரிபுடி என்பார்கள். ஏதேனும் ஒரு பொருளைக் காண்கிருேம். காண்பதற்குரிய கருவியாக இருப்பது கண். காணுவ தாகிய தொழில் காட்சி. காணப்படும் பொருள் ஒன்று இருக்கிறது. இந்த மூன்றுக்கும் மேலே இந்தப் பொருள் இத்தகையது என்று காட்டுகிறவன் ஒருவன் வேண்டும். அப்படி அவன் காட்டாவிட்டால் நம்மால் காணமுடியாது. இறைவன்தான் எல்லாவற்றையும் காட்டுகிருன். மாயை என்னும் திறத்தினல் எல்லாவற்றையும் மறைக்கிறவன் அவன். பின்பு மாயையை எடுத்துவிட்டுக் காட்டு கிறவனும் அவன்தான்.

“குன்ருத மூஉருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி அறுசமயக் கூத்து மாடி
நின்ருயே, மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார்?”

என்கிருர் தாயுமானவர்.

இவ்வாறு கருவி, காண்பவன், காட்சிப்பொருள், காட்டுபவன் என்ற நான்கு பொருளும் அவன்தான். நம் உடம்பில் உள்ள ஐந்து வகையான இந்திரியங்களும் அவன்தான். புண்ணிய பாவம் என்று சொல்கிற வினைகளும் அவனே. காலம் இடம் ஆகிய இரண்டும் அவன்தான். எல்லாவற்றுக்கும் மேலான பலனாக இருக்கிறவன் அவன். முருகப் பெருமானது இந்தத் தத்துவத்தைச் சிங்கமுகன் எடுத்துச் சொன்னான்.

கருவி மெய்ப்புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருள்எ னப்படும் நான்மையும் ஐவகைப் பொறியும்
இருதி றத்தியல் வினைகளும் காலமும் இடனும்
மரபின் முற்றுறு பயனுமாய் நின்றனன் வள்ளல்.

(சூரன் அமைச்சியல். 130.)

[கருவி - இந்திரியங்கள். புலன் - தன்மாத்திரை.]

காலமும் இடமும்

காலம், இடம் அவன்தான் என்று சொன்னான். காலம், இடம் ஆகிய இரண்டின் எல்லைக்குள் நாம் அகப்பட்டிருக்கிறோம். இறைவன் கால இட எல்லையைக் கடந்தவன். கடவுள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நம்மால் காண முடியவில்லை என்கிற காரணத்தினால் கடவுள் இல்லையென்று சொல்லலாமா ?

நாம் நாள் தோறும் பழகுகிற இடமும், காலமும் நமக்குத் தெரிகின்றன. ஆனால் அந்தக் காலம், இடம் ஆகியவை முழுமையும் நமக்குத் தெரிகிறதா ? நாம் இருக்கிற இடம் நமக்குத் தெரிகிறது. இந்த இடம் உலகத்தில் இருக்கிறது. உலகம் பரந்து விரிந்து கிடக்கிறது. இந்த உலகத்தைப் போலப் பல அண்டங்கள் பந்து போலச் சுழலுகின்றன. 'இந்தப் பெருவெளியின் எல்லை எங்கே ? இது எங்கே முடிகிறது ?' என்று எண்ணிப் பார்த்தால் தலை சுழல்கிறது. இடம் எல்லையற்றது என்கிறார்கள். அப்படியே காலத்தையும் எல்லையற்றது என்று சொல்கிறார்கள். நாம் இருக்கிற காலம் இன்ன வருடம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன நேரம் என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இந்தக் காலம் எப்போது தொடங்கியது ? நாம் *1979* என்று சொல்கிறோமே, இது கிறிஸ்து பிறந்த பின்னால். முன்னால் எவ்வளவு காலம் இருந்திருக்கும் ? அது எப்போது தொடங்கியிருக்கும் ? நமக்குத் தெரியாது. காலத்திற்குள்ளும், இடத்திற்குள்ளும் இருக்கிற நமக்கு இந்த இரண்டின் எல்லை தெரிவதில்லை. நமக்குத் தெரிந்த பொருளின் எல்லையையே நம்மால் காணமுடியாத போது, தெரியாத கடவுளை, எல்லையில்லாத கடவுளை, நம்மால் காணமுடியுமா ? "கண்டால்தான் உண்மை என்று ஒப்புக்கொள்வேன்" என்று சொல்லலாமா ?

நாம் ஓர் வீட்டிற்குள் இருக்கிறோம். வீட்டிற்குள் இருந்து வீட்டின் புற எல்லையைப் பார்க்க முடியாது. வீட்டை விட்டு வெளியே வந்து நின்றால் வீட்டின் புற எல்லையைத் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு கால, இட எல்லையை நாம் கடந்து நின்றால் கால இட எல்லைக்கு அப்பால் இருக்கிற இறைவனைத் தெரிந்து கொள்ளலாம்.* இறைவன் கால எல்லைக்கும், இட எல்லைக்கும் அப்பாற்பட்டவன். அவற்றைப் பரிச்சின்னங்கள் என்பர். கால தேச பரிச்சின்னங்

---

* சமீபத்தில் Life After Life என்ற புத்தகத்தைப் படித்தேன். உடம்பிலிருந்து உயிர் போய் விட்டது என்று தீர்மானமான பிறகு, சில நேரம் கழித்து உயிர் மீட்டும் வந்து பிழைத்துக் கொள்கிறவர்கள் சிலர் உண்டு. அத்தகையவர்களை அணுகி, அந்த இடைப்பட்ட காலத்தில் அந்த உயிர்களுக்கு நேர்ந்த அநுபவங்களை விசாரித்துத் தொகுத்து அந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார் ஆசிரியர். அவர்கள் கூறியவற்றில் பல அநுபவங்கள் பொதுவாக உள்ளன. உடலைப் பிரிந்த நிலையில் காலம் என்பதையே அவர்கள் உணர்வதில்லையாம். அதாவது காலம் கடந்த நிலை அது என்று சொல்லலாம்.

களுக்கு அப்பாற்பட்டவன் பரம்பொருள். அவனை அடைந்தவர்கள் கால இட எல்லையைக் கடந்து நிற்பார்கள்.

" சாடும் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்தவல் லாருக்குஉகம்போய்ச் சகம்போய் "
(கந்தர் அலங்காரம்)

என்பார் அருணகிரிநாதர். உகம் என்பதனால் காலத்தையும், சகம் என்பதனால் இடத்தையும் குறிப்பிக்கிறார். கால, இட எல்லைகளைக் கடந்தவர்கள் இறைவனோடு ஒன்றி நிற்பார்கள். அந்தக் காலமாகவும் இடமாகவும் முருகப் பெருமான் இருக்கிறான் என்று சிங்கமுகன் சொன்னான்.

" நீ ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அரசன் என்று எண்ணுகிறாயே. இந்த உலகத்தில் எத்தனையோ கோடி அண்டங்கள் இருக்கின்றன. எண்ணுவதற்கரிய அனந்த கோடியாகிய அண்டங்கள் அனைத்தையும் ஒருகணப் பொழுதில் ஆக்குவான் அவன். ஓர் இமைப்பொழுதில் மாற்றியும் விடுவான். அவன் உன்னோடு போர் பண்ண வேண்டுமென்று எண்ணி, அதனையே தன் திருவிளையாடலாகக்கொண்டு திருச்செந்தூருக்கு வந்திருக்கிறான்."

அன்ன வாகிய அண்டங்கள் அனந்தகோ டியையும்
தன்னது ஆணையால் ஓர்இமைப் பொழுதினில் தரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோர் ஆதியம் பிரான்காண்;
உன்னொ டேபொரும் ஆடலால் செந்திவந் துற்றான்.
(சூரன் அமைச்சியல் 136.)

[தரவும் - படைக்கவும். ஆடலால் - திருவிளையாட்டால்.]

இவ்வாறு மிக விரிவாக முருகப் பெருமானுடைய சிறப்பை எல்லாம் சிங்கமுகன் சொன்னான்.

மரணம் இல்லா வாழ்வு

மேலும் சூரன், " நான் வச்சிர யாக்கை பெற்றவன் " என்று நிமிர்ந்து சொன்னானே, அதற்குப் பதில் தருகிறான். " நீ பல காலம் வாழ்வேன் என்று சொல்கிறாயே; வச்சிர யாக்கை பெற்றிருக்கிற என் உடம்புக்கு அழிவில்லை என்கிறாயே; உலகத்தில் தோன்றியது எல்லாம் அழிந்துவிடும். தேவலோகத்தில் ஆகட்டும், பூ உலகத்தில் ஆகட்டும், உடம்பு எடுத்தவர்கள் இறந்து போவார்கள். இது நிச்சயம். வச்சிர யாக்கையை உடைய நீயும்

உடம்போடு இருப்பதனுல், நிச்சயமாக அந்த உடம்பு அழிந்துவிடும்'' என்று சொன்னுன்.

பெருமை பெற்றிடு வானத்தின் நிலத்திடைப் பிறந்தோர்
இருமை பெற்றிடும் காயமும் இறந்திடும் ; திண்ணம் ;
பருமி தத்துநின் வச்சிர யாக்கையும் பாரின்
உரிமை பெற்றுளது ஆதலால் அழிவின்றி உறுமோ ?

(சூரன் அமைச்சியல். 138.)

[இருமை - ஸ்தூலம், சூக்ருமம். பருமிதத்து - பெரிய அளவையுடைய. பாரின் உரிமை பெற்றது ஆதலால் - பிராகிருத சம்பந்தம் உடைமையால்.]

இங்கே ஒரு செய்தியை நினைப்பூட்டிக்கொள்ள வேண்டும். மரணம் இல்லாப் பெருவாழ்வு என்று ஒன்று சொல்வார்கள். எல்லோரும் மரணம் அடைய வேண்டும் என்ருல் மரணம் இல்லாப் பெருவாழ்வு எப்படிச் சித்திக்கும் என்று கேட்கலாம்.

'' மரண ப்ரமாதம் நமக்கில்லையாம் ; என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும் உண்டே ''

என்பது **கந்தர் அலங்காரம்.** அந்தப் பாட்டில் மரணமில்லாத பெருவாழ்வு ஒன்று உண்டென்று தெரிகிறது. '' மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் '' என்பார் **அருட்பிரகாச வள்ளலார்.** அப்படியானுல் இந்தச் சரீரம் மரணம் அடையாமல் என்றைக்கும் இருக்கக் கூடும் என்றுதானே சொல்லத் தோன்றுகிறது ? ஆனுல் உண்மை அது அன்று.

இந்தச் சரீரம் பஞ்சபூதங்களாலானது, பிரபஞ்சமும் பஞ்ச பூதங்களாலானது. அகண்டமான பஞ்சபூதங்களிலிருந்து மிகச் சிறிய அளவுக்குப் பஞ்சபூதங்களை எடுத்து அம்பிகை இந்தச் சரீரங்களை ஆக்கியிருக்கிருள். அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு. பிரளயகாலத்தில் பஞ்சபூதங்கள் அழியும். மூலமாகிய பஞ்சபூதங் களே அழிகிறபோது, அதிலிருந்து வந்த, பஞ்சபூதச் சேர்க்கையா லான உடம்புகள் அழியாமலா போகும்? நாம் வாழ்கிற காலத்தைவிட, அதிகமான அளவுக்கு, நூறு ஆண்டுகளுக்கு மேலே வேண்டுமானுல் சித்த புருஷர்கள் வாழ்வார்கள். வச்சிர தேகம் என்ருல் இன்னும் கொஞ்சம் அதிக ஆண்டுகள் இருக்கலாம். முடிவில் அதற்கும் அழிவு வந்து தீரும். அப்படியானுல் மரணம் இல்லாத பெருவாழ்வு என்பது என்ன என்று கேட்கலாம்.

சென்னையின் சென்ட்ரல் ஜெயில் இருக்கிறது. அதிலிருந்து ஒரே சமயத்தில் இரண்டு கைதிகள் வெளி வருகிறார்கள். ஒருவர் சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்றவர். மற்றொருவன் திருடன். இருவரும் வெளியே வருகிறார்கள். என்றாலும் தேசத் தியாகிக்கு மாலையிட்டு வீட்டிற்கு அழைத்துப்போக நான்கு பேர் வந்திருக்கிறார்கள். சிறையிலிருந்து வருகிற திருடனை இரண்டு பேர் காவலோடு அழைத்துப் போகிறார்கள். அவனைச் சேலம் ஜெயிலுக்கு மாற்றி அழைத்துப் போகிறார்கள். தியாகிக்கு விடுதலை என்றால், திருடனுக்குச் சிறைமாற்றம். அப்படி, நமக்கெல்லாம் மரணம் என்பது சிறைமாற்றம் போல்வது. இந்த உடம்பை விடுகிறோம். பிறகு வேறோர் உடம்பு எடுக்கிறோம். நமக்கு இறப்பும் பிறப்பும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சரீரத்தை விட்டவுடன் வேறு சரீரம் எடுக்கிறோம். அது சிறை மாற்றம் போன்றது. ஆனால் ஞானிகளோ பிராரப்தம் முடிந்தவுடன், சரீரத்தினின்று விடுதலை பெறுவார்கள். மக்கள் இறந்தால் காலமானார்கள் என்று சொல்வார்கள். ஞானிகள் இறந்தால் பரிபூரணம் அடைந்தார்கள் என்று சொல்வார்கள். அவர்கள் அடைய வேண்டிய இடத்தை அடைந்து விட்டார்கள். இனிமேல் யாத்திரை இல்லை. அது நிறைவடைந்து விட்டது. நமக்கோ ஜீவ யாத்திரை தொடர்ந்து வருகிறது.

மற்றோர் உதாரணம் பார்க்கலாம். திருநெல்வேலியிலிருந்து இரண்டுபேர் ரெயிலில் பயணம் செய்கிறார்கள். ஒருவர் விழுப்புரத்தில் இறங்கி வீட்டிற்குப் போகிறார். மற்றொருவர் அங்கே இறங்கிச் புதுச்சேரிக்கு வண்டி மாறிச் செல்கிறார். இருவரும் விழுப்புரத்தில் இறங்கினாலும் ஒருவர் பயணம் முடிந்துவிடுகிறது. மற்றொருவர் பயணம் இன்னும் தொடர்கிறது. அப்படி, நாம் இறந்தாலும் உடனே மறு பிறப்பு உண்டாவதால் நம் ஜீவப் பயணம் தொடர்கிறது. ஞானிகளுக்கோ ஜீவப் பயணம் முடிகிறது.

ஒருவர் திருநெல்வேலியிலிருந்து முதல் வகுப்பில் வரலாம். இடையிலே வண்டி மாறிக் கிளை மார்க்கத்து ஊருக்குப் போக ஏறும் வண்டியில் முதல் வகுப்பு இல்லாமல் இரண்டாம் வகுப்பில் ஏறி அவதிப்படவும் நேரலாம். முதலில் கிளை மார்க்கத்தில் இரண்டாம் வகுப்பில் வந்தவர் பிறகு வண்டி மாறி முதல் வகுப்புப் பெட்டியில்

ஏறியும் வசதியாகச் செல்லலாம். அது போல இந்தப் பிறப்பில் துன்பப் படுகிறவர்களுக்கு அடுத்த பிறப்பில் இன்பம் வரலாம்; இன்பத்தை அநுபவிக்கின்றவருக்கு அடுத்த பிறப்பில் துன்பமும் வரலாம். இந்தப் பிறப்பில் பாவம் செய்தவன் அடுத்த பிறப்பில் துன்புறுவான். இவர்கள் எல்லாம் ஜனன மரண யாத்திரையில் ஓயாமல் பயணம் செய்துகொண்டிருப்பார்கள். இப்படி உள்ளவர்களுக்கு இறப்பு என்பது மறு பிறப்பை எடுப்பதற்குக் காரணமாக அமைகிறது. இந்த உடம்பை விட்டுப் போன பிறகு மீட்டும் பிறக்காமல் விடுதலை பெறுகிற ஆன்மாக்கள் அடைவதுதான் வீடு. பிறப்பு இறப்பு அற்ற இன்ப துன்பமற்ற நிலைதான் வீடு.

இந்த உடம்பு நமக்குரிய வீடாக இருக்கிறது. இதை விட்டுப் போனல் வேறு ஒரு வீட்டுக்குத்தானே போகிறோம்? அப்படியானல் எதற்காக அஞ்ச வேண்டுமென்று தோன்றலாம்.

"இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ"

என்று தாயுமானவர் சொல்கிறார். ஒரு சிறையில் இருந்தவனை மற்றொரு சிறைக்கு மாற்றுகிறபோது, இங்கே உள்ள காவலரைப் போல அங்கே உள்ளவர்கள் இருப்பார்களோ என்று பயப்படுகிறான். இங்கே நமக்கு வேண்டிய பீடி கிடைக்கிறதே, அங்கே தருவார்களோ என்று அஞ்சுகிறான். ஞானிகள் மரணத்துக்கு அஞ்ச மாட்டார்கள். அவர்கள் வாழ்வுதான் மரணம் இல்லாத பெருவாழ்வு; பரிபூரணமாகும் வாழ்வு.

அண்ணன், தம்பி இரண்டு பேர் கரும்புத் தோட்டம் போட்டார்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, ஆட்கள் ஓடி வந்து, கரும்புத் தோட்டம் பற்றி எரிகிறது என்றார்கள். அண்ணன் கவலைப்படாமல், "போனல் போகட்டும்" என்றான். தம்பியோ, "ஐயோ அப்பா!" என்று அலறிக்கொண்டு ஓடினன். காரணம் என்ன?

அண்ணன் கரும்புகளை வெட்டி, சாறு பிழிந்து, வெல்லமாகக் காய்ச்சி விற்றுவிட்டான். அண்ணன் தோட்டத்தில் இருப்பது வெறும் தோகைதான். அதற்குத் துரும்பு என்று பெயர். அவனே அதை எரித்துவிட எண்ணினன். அவனுக்குத் தீக் குச்சிகூடச் செலவில்லாமல் யாரோ எரித்துவிட்டான். ஆகவே அவனுக்கு

மகிழ்ச்சி. மற்றொருவன் இன்னும் கரும்பை வெட்டவில்லை. அதனால் தான் கதறி ஓடுகிறான். இதை நாலடியார் சொல்கிறது.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயர்ஆண்டு உழவார்;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் காலன்
வருங்கால் துயரம் இலர்."

இறைவனுடைய திருவருளினால் வினைகள் எல்லாம் போய் ஞானம் பெற்றவர்கள், இனிமேல் நமக்கு வீடு கிடைக்கும் என்ற எண்ணத்தினால் இந்த உடம்பை விடுவதற்குக் கவலைப்படமாட்டார்கள்.

"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும்எனலால்
சகமீ திருந்தாலும் மரணம்உண் டென்பதைச்
சதாநிஷ்டர் நினைவதில்லை."

(தாயுமானவர் பாடல்)

ஆகவே, சூரபன்மாவைப் பார்த்துச் சிங்கமுகன் சொன்னது மிகவும் உண்மை. "உனக்கு வச்சிரகாயம் இருக்கிறது என்று எண்ணுகிறாயே. இது அழியத்தான் போகிறது" என்று அறிவுரை பகர்ந்தான்.

"முருகப்பெருமானுடைய பெருமையை விளம்பரப்படுத்த வேண்டுமென்று இவ்வளவும் சொல்லவில்லை. உன்னிடத்திலுள்ள இரக்கத்தால் சொன்னேன். நீயும், உன் சுற்றமும் கேடு இல்லாமல் வாழ்வதற்காகச் சொன்னேன்" என்றான்.

கெடுதல் இல்லதோர் வளனொடு நீயும்நின் கிளையும்
படுதல் இன்றியே, வாழ்திஎன்று இன்னன பகர்ந்தேன்;
இடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரை இன்னே
விடுதல் செய்குதி என்றனன், அறிஞரின் மிக்கான்.

(சூரன் அமைச்சியல். 142.)

[வளன் - போக போக்கியங்கள். படுதல் - அழிதல். இடுதல் கொண்டு இடு சிறையிடை - வலிய இட்டு வந்து இடும் சிறையில்.]

இங்கே சிங்கமுகனை 'அறிஞரின் மிக்கான்' என்று ஆசிரியர் சொல்கிறார். பொல்லாத அசுரக் கூட்டத்தில் இருந்தாலும் அவன் முருகப்பெருமானை நன்றாகத் தெரிந்துகொண்டு, "தேவர்களை விடுதலை

செய்தால் நீ உய்வாய்; உன் கிளையும் உய்யும்" என்று சொன்னுன். அவன் அப்படிச் சொல்லாதிருந்தால் ஆச்சரியம் இல்லை. அவன் அசுர குலத்தைச் சேர்ந்தவன். அறிஞனுடைய பிள்ளை முட்டாளாக இருந்தாலும் முட்டாளுடைய பிள்ளை அறிஞனுக இருந்தாலும் ஆச்சரியம் உண்டாகும். அப்படி அசுர குலத்தைச் சேர்ந்தவன் இப்படிப் பேசுவதை எண்ணி வியந்து, 'அறிஞரில் மிக்கான்' என்ருர்.

சூரன் கூற்று

சூரன் எல்லாவற்றையும் கேட்டான். கேட்டவுடன் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. பொல்லாதவர்களுக்குக் கோபம் வந்தால் வார்த்தை கூடப் படபடப்பாக வரும். "நேற்றுப் பிறந்த பிள்ளை. அவன் யார் என்று எனக்குத் தெரியாதா?" என்ருன்.

காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்குஅலை யுண்டு
வேற்றுப் பேர்முலை உண்டுஅழு தேவிளை யாடும்
நேற்றைப் பாலனை யோபரம் பொருள்என நினைந்தாய்?

(சூரன் அமைச்சியல். 144.)

[வேற்றுப் பேர் - பெற்ற அன்னையல்லாத பிறர்.]

சிவபெருமானுடைய நெற்றியிலிருந்து வந்த பொறிகளை வாயுபகவான் ஏந்திச் சென்ருரே, அதைக் காற்றில் தள்ளுண்டு என்று இழிவாகப் பேசினுன். அப்படியே அக்கினி பகவான் சுமந்து சென்றதை நெருப்பில் சூடுண்டு என்றும், கங்கையிலே அக்கினி பகவான் விட அவன் மிதந்து சென்று சரவணத்தில் தங்கினுனே, அதை ஆற்றில் தாக்குண்டு சரவணம் புக்கு அலையுண்டு என்ருன். கார்த்திகை மாதர்கள் அவனுக்குப் பால் ஊட்டினுர்கள் என்பதை, 'வேற்றுப் பேர் முலையுண்டு' என்ருன். "அவனைப் போய்ப் பரம்பொருள் என்கிருயே!" என்று நையாண்டி செய்தான்.

தத்துவத்தைக் கடந்து நின்ற பெருமான் உலகத்தில் வருவதற்காக அகண்டமான ஐம்பூதங்களோடு சம்பந்தம் பெற்று வந்தான் என்பதை முன்பு பார்த்தோம். அத்தகைய கருணைச் செயலை சூரபன்மா இழித்துப் பேசினுன்.

பிறரிடத்தில் குணம் சிறிதாக இருந்தாலும், அதைப் பெரியவர்கள் மிக உயர்வாக எடுத்துச் சொல்வார்கள். பிறரிடத்தில் காணப்படும் குணம் மிகப் பெரிதாக இருந்தாலும், பொல்லாதவர்கள் அதை மிகவும் இழித்துப் பேசுவார்கள். அவ்வாறு, முருகப் பெருமானுடைய மிக உயர்ந்த குணங்களை எல்லாம் சூரபன்மன் மிகவும் இழித்துப் பேசினன். எவ்வளவு சொல்லியும் அவனுக்கு உண்மை புலனாகவில்லை. " அந்தச் சிறு பிள்ளையைப் போய்ப் பரம்பொருள் என்கிறாயே! நான் தேவர்களை எல்லாம் சும்மா சிறையில் தள்ளினேனா? நம் குலத்தில் தோன்றிய பல பேர்களைத் தேவர்கள் கொன்றார்கள். நம்பால் பகையுடைய அவர்களுக்குத் தண்டனை அளிக்கச் சிறையில் வைத்தேன் " என்றான்.

தொகைமை சான்றநம் குரவர்பல் லோர்உயிர் தொலைத்த
பகைஞர் ஆதலின் அமரரைச் சிறையிடைப் படுத்தேன் ;
மிகைசெய் தார்களை நாடியே வேந்துஒறுத் திடுதல்
தகைமை யேஎன மனுமுறை நூல்களும் சாற்றும்.

(சூரன் அமைச்சியல். 149.)

[தொகைமை - பெரிய கூட்டம். குரவர் - முன்னோர். மிகை - குற்றம். தகைமை - முறை.]

" தவறு செய்பவர்களைத் தண்டிப்பதுதான் அரசனின் கடமை என்று மனுநீதி சொல்லும் " என்று தன்னுடைய செயலுக்குத் தர்ம நூலை ஆதாரம் காட்டுகிறான் சூரன்.

திருக்குறளில்,

" கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் "

என்று வருகிறது. சூரனுக்குத் திருக்குறள் தெரியாது. அதற்கு முன் இருந்தவன் அவன். ஆகவே மனுநீதியைக் காட்டினான்.

" உனக்கு ஆயிரம் தலைகள் இருக்கின்றனவே ; இருந்து என்ன பயன்? கள்ளியின் கிளைகளைப்போலக் கிளைத்த இவ்வளவு தலைகளை வளர்த்து வைத்துக்கொண்டிருக்கிறாய். எண்ணில் அடங்காத கைகளைப் பெற்றும் பயத்தால் அவற்றை நெளித்துக் கொண்டிருக்கிறாய். பல காலமாக வீணே அவற்றைச் சுமந்துகொண்டிருக்கிறாய். உனக்கு அச்சத்தால் வலிமை இல்லாமல் போய்விட்டது. நீ என்ன செய்கிறாய்? "

கிளைத்திடு கள்ளியின் கிளைக ளாமென
வளர்த்தனை பலதலை ; வரம்பில் கைத்தலம்
நெளித்தனை, சுமந்தனை ; நெடிது காலமா
இளைத்தனை ; வலியிலாய் யாது செய்திநீ ?

(சூரன் அமைச்சியல். 156)

[நெளித்தனை-வளையச் செய்தாய்.]

என்று இழித்துப் பேசினன் சூரபன்மன்.

சிங்கமுகன் கூற்று

சிங்கமுகன் பார்த்தான். 'நான் நன்மையை எடுத்துச் சொன்னேன். இவன் கேட்கவில்லை. கெடுமதி கண்ணுக்குத் தெரியாது. தான் அழிந்து போவதற்குரிய வழியையே நாடுகிறான். அறிவில்லாதவனிடத்தில் போய்ச் சொன்னேனே, நான் தான் பேதை.'

உறுதியை உரைத்தனன், உணர்வி லாதவன்
வறிதுஎன இகழ்ந்தனன் ; வருவது ஓர்கிலன் ;
இறும்வகை நாடினன் ; யாதொர் புந்தியை
அறிவிலர்க்கு உரைப்பவர் அவரிற் பேதையோர்.

(சூரன் அமைச்சியல். 162.)

[உறுதியை - நன்மையை. வறிது - வீணே. இறும் வகை - அழியும் வகையை. புந்தியை - புத்திமதியை.]

'இவன் எப்படியும் முருகப்பெருமானின் வேலுக்கு இரையாகத் தான் போகிறான். இங்கே நான் இருந்துகொண்டு இவனுக்கு அறிவுரை கூறுவது வீண்தான். இவன் இறப்பதற்கு முன் நான் இறந்துவிட வேண்டும்' என்று சிங்கமுகன் எண்ணினன்.

மன்னவர் மன்னவன் வள்ளல் வேலினால்
இன்னினி இறந்திடும் : இதுவும் நோக்கியே
பின்னும்இங்கு இருந்திடில் பிழைய தாகுமால்
முன்உற முடிவதே முறைய தாம்எனா.

(சூரன் அமைச்சியல். 168.)

[மன்னவர் மன்னவன் - சூரன். வள்ளல் - முருகன். இன்னினி - இப்பொழுதே.]

உடனே சூரபன்மனைப் பார்த்து, "நான் சொன்ன வார்த்தைகளை எல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். என்னை நீ கோபித்து இகழ வேண்டாம். நான் போர்க்களம் சென்று எதிர்க்கின்ற பகைவர்களோடு பொருது அவர்களை அழிப்பேன்" என்றான்.

பொறுத்தனை கோடிஎன் புன்மை ; உள்ளமேல்
செறுத்துஎனை இகழ்ந்திடல் ; செருவில் சென்றுயான்
மறுத்துஎதிர் மலைந்திடு மாற்ற லார்தமை
ஒறுத்திடு கின்றனன் ; அதனை ஓர்திநீ.

(சூரன் அமைச்சியல். 171.)

[பொறுத்தனை கோடி - பொறுத்துக்கொள். புன்மை - அறிவின்மை. செறுத்து - கோபித்து. மாற்றலார் - பகைவர்கள்.]

இவ்வாறு சொன்னவுடனே சூரன் அவனைத் தழுவிக் கொண்டு பாராட்டினன் ; விடை கொடுத்தான்.

போருக்கு ஆயத்தம் செய்நல்

இங்கே இப்படி இருக்க, திருச்செந்தூரிலிருந்து முருகன் போருக்குக் கிளம்பினன். அவனுடன் 108 தலைவர்களும், இரண் டாயிரம் வெள்ளம் படையினரும் கிளம்பினர்கள். பூதப் படையினர் கடல் வழியே போனர்கள். மற்றவர்கள் வான்வழியே சென்றார்கள். விசுவகர்மா ஒரு பாசறையைக் கட்டினன். அதற்கு ஏமகூடம் என்று பெயர் வைத்தார்கள். அங்கே வந்து அவர்கள் தங்கினர்கள்.

நாரதர் சூரபன்மாவிடம் சென்று இதைச் சொன்னர். வீர மகேந்திர புரத்திற்கு வட எல்லையில் ஏமகூடம் என்கிற பாசறையை அமைத்துக்கொண்டு முருகன் தன் படையினர்களுடன் வந்து தங்கி விட்டான் என்பதை அறிந்தவுடன் சூரனுக்குக் கோபம் வந்தது. வருணனை அழைத்து, "நீ ஏன் வழிவிட்டாய்?" என்று கோபித்தான். அப்போது வருணன் சொன்னன் :

மடல்கெழு நீபத் தண்டார் வள்ளல்வான்
நெறியிற் போத
மிடல்கெழு பூதர் என்பால் மேவினர்
சென்றார் ; அன்னர்
அடிகளின் பரட்டின் காறும் அமைந்திலன் ;
அவரை யானே
தடைசெய வல்லேன் போலும் ! தக்கதே
இதுமற் றன்றே ?

(வரவு கேள்வி. 20.)

[நீபத்தன் தார்-கடம்பமாலை. பூதர்-பூதகணங்கள். அடிகளின் - பாதத்தில் உள்ள. பரடு - கணுக்கால்.]

"எம்பெருமானே, முருகப்பெருமான் ஆகாய வழியில் வந்து விட்டான். பூதப்படைகள்தாம் என் வழியே வந்தார்கள். அவர்கள்

என்னைத் தாண்டி வரும்போது அவர்களுடைய கணுக்காலைத் தொடுவதற்குக் கூட என் ஆழம் பற்றவில்லை. அவர்களை நான் எப்படித் தடை செய்ய முடியும்?'' என்று சொன்னன்.

பானுகோபன் போருக்குப் புறப்படல்

உடனே சூரபன்மன் கோபம் கொண்டு தன் மகனுகிய பானுகோபனை அழைத்தான்.

அந்தண் மாமுகில் உயர்த்தவன் வேண்டலும் அமலன்
தந்த கந்தனைச் சாரதத் தலைவர்க ளோடும்
நந்த மைப்பொர விடுத்தனன்; ஆதலின் நானும்
மைந்த, நிற்கொடு வெற்றிபெற் றிருந்திடல் வழக்கே.

(முதல் நாள் பானுகோபன். 10)

[முகில் உயர்த்தவன் - மேகத்தைக் கொடியாகக் கொண்ட இந்திரன். அமலன் - சிவபெருமான். சாரதத்தலைவர்கள் - பூதகணத்தின் தலைவர்கள்.]

"பரமேசுவரன் அவன் மகன் கந்தனைப் போர்க்களத்திற்கு அனுப்பியுள்ளான். ஆகவே நானும் என்னுடைய மைந்தனுகிய உன்னைப் போர்க்களத்திற்கு அனுப்புவதுதான் சரியாக இருக்கும். நீ போய் எனக்கு வெற்றி தேடித் தருவதுதான் சரி'' என்ருன். தன்னைப் பரமேசுவரனுக்குச் சமானமாக நினைத்துச் சொன்னன், அறியாதவன்.

பானுகோபன் போர்

பானுகோபன் உடனே ஆயுதசாலைக்குச் சென்று படைக் கலங்களை எல்லாம் எடுத்துக்கொண்டான். பத்தாயிரம் வெள்ளம் சேனையுடன் சண்டைக்குப் புறப்பட்டான். அவன் சண்டைக்கு வருவதை அறிந்த முருகப்பெருமான் வீரவாகு தேவரைப் படைவீரர்களுடன் அனுப்பிவைத்தான். பூதத் தலைவர்கள் போர் செய்தார்கள். அசுரத் தலைவர்கள் எதிருன்றிப் பொருதனர். நவ வீரர்களுடன் போர் செய்யப் பானுகோபனே எதிர்வந்தான். நவவீரர்கள் ஒவ்வொருவரும் அவனிடம் தோற்று, மயங்கிப் போனர்கள். பின்பு வீரவாகு தேவரே பானுகோபன் முன்வந்து எதிர்த்தார். இருவருக்கும் கடுமையான போர் நடந்தது.

கதம்அறுக்கும் ; வதம்அறுக்கும் ; தூங்குபுழைக்
கையறுக்கும் ; கபோலத்து ஊறும்
மதம்அறுக்கும் ; நுதல்அறுக்கும் ; வாய்அறுக்கும் ;
செவிஅறுக்கும் ; வயிரக் கோட்டின்
விதம்அறுக்கும் ; வால்அறுக்கும் ; மெய்அறுக்கும் ;
தலைஅறுக்கும் ; வேழம் செல்லும்
பதம்அறுக்கும் ; முரண்அறுக்கும் ; அரண்அறுக்கும்,
வீரன்விடு பகழி மாரி.

(முதல் நாள். 307.)

[கதம் - சினம். வதம்-பூண்ட விரதம். புழைக்கை - துதிக்கை. வயிரக்கோடு - வயிரம் பாய்ந்த கொம்பு. முரண்-வலிமை.]

வீரவாகு தேவர் விட்ட அம்புகள் அசுரர்களுடைய உறுப்புகளை அறுத்து எறிந்தன. மேலும் என்ன என்ன செய்தன என்பதைப் பாட்டே சொல்லும். நவவீரர்கள் எட்டுப் பேர்கள் மயங்கிவிழ, ஒன்பதாவதாக வந்த வீரவாகு தேவரின் போர்த் திறமையைக் கண்டு பானுகோபனே வியந்தான். மிகச் சிறந்த தலைவர்கள் தம்முடைய எதிரிகளானாலும் வீரர்களாய் இருப்பவர்களைப் போற்றுவார்கள் என்பதைக் காவியங்களில் காணலாம். இராமன் இராவணனது வீரத்தைப் புகழ்வதைக் கம்பராமாயணத்தில் பார்க்கலாம். அப்படி வீரவாகுவும் நினைத்தார் ; 'ஆண்மை என்பது இவனிடத்தில்தான் இருக்கிறது. உலகத்தில் வீரன் என்றால் இவன்தான். வேறு யார் இருக்கிறார்கள் ?' என்று வியந்தார்.

நேருறு தனிவில் வாளி நின்றது
நோக்கி நம்பால்
சாருறும் அனிகம் எல்லாம் தடிந்தனன்
இவன்,என்று உன்னி,
ஆரிடை அடங்கிற் றம்மா, ஆண்மைக்கும்
அவதி உண்டோ ?
வீரன்மற்று இவனே அல்லால் வேறு இலை
போலும் என்றான்.

(முதல் நாள். 318.)

[வாளி - அம்பு. அனிகம் - படை. தடிந்தனன் - அழித்தான். அவதி - எல்லை.]

பானுகோபன் மோகாஸ்திரம் விடுக்க, வீரவாகு அமோகாஸ்திரம் விட்டார். வீரவாகு பாசுபதத்தை எடுத்தவுடன் பானுகோபன் மறைந்து அருவமாகிப் போனான். தம்முடைய தலைவனாகிய பானு

கோபன் மறைந்து போகவே, அவனுடன் வந்திருந்த அசுரர்கள் யாவரும் மறைந்து போனுர்கள். அவர்கள் யாவரும் கண்ணுக்குத் தெரியாத அருவுருவத்தில் வீரமகேந்திரப் பட்டணத்திற்குள் போய் விட்டார்கள். அதைக் கண்டு தேவர்கள் எல்லாம் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

> **அயன்மகன் மதலேசேய் அருவ மாகியே**
> **வியன்மிகு தனதுதேர் விடுத்து விண்எழீஇப்**
> **பயனறு முகிலெனப் படர்ந்து வல்லேயின்**
> **நயனறு கடிமதில் நகருட் போயினுன்.**
>
> (முதல் நாள். 361.)

[அயன் மகன் - காசிபன். அவன் மதலே, சூரன்; அவன் சேய், பானு கோபன்.]

வீரவாகு தேவர் தம் பாசறைக்குத் திரும்பினுர். சூரியன் மறைந்தான். போர்க்களத்தில் நடந்ததைத் தூதர்கள் ஓடிப் போய்ச் சூரனிடம் சொன்னுர்கள். அப்போது அவன், “நானே நாளைக்குப் போர் செய்யப் போகிறேன்” என்று சொன்னுன்.

இரண்டாம் நாள் போர்

மறு நாள் காலேயில் சூரபன்மன் எழுந்தான். ‘என் மகனுக்குற்ற வசையைப் போக்குவேன்’ என்று போருக்குப் புறப்பட்டான். சிங்கமுகன் பிள்ளே அதிசூரனேயும், தாரகனின் மகன் அசுரேந்திரனே யும் முன்படையாக அனுப்பினுன்.

இந்திரன் முருகனிடம் சென்று, சூரனே போருக்கு வந்திருப் பதைச் சொன்னுன். வாயு பகவான் தேரை விட முருகன் போருக்குப் புறப்பட்டான். போர் நடந்தது.

உக்கிரன் அதிசூரனே மாய்த்தான். அசுரேந்திரன் முன் வந்து பல பூத கணங்களே மாய்த்தான். லட்ச வீரர்கள் மாண்டார்கள். அப்போது வீரவாகு வந்தார். அசுரேந்திரனே அழித்தார்.

சூரபன்மன் வந்து நாணெலி செய்தான். அதைக் கேட்டு யாவரும் அஞ்சி நடுங்கினுர்கள். பிரமன் அஞ்சினுன். திருமால் நடுங்கினுர். இந்திரனும் நடுங்கினுன். எமன் கூட அஞ்சினுன். தரும தேவதை அஞ்சியது. ஐந்து பூதங்களும் அஞ்சின. உயிர்க் கூட்டங்கள் யாவும் பயப்பட்டன.

வேதன் அஞ்சினன் ; மால்முடி துளக்கினன் ; விண்ணோர்
நாதன் அஞ்சினன் ; மறலியும் அஞ்சினன் ; நடுங்கிக்
கோதில் நல்லறம் அஞ்சின ; ஐவகை கொண்ட
பூதம் அஞ்சின ; உயிர்த்தொகை அஞ்சின பொருமி.

(இரண்டாம் நாள். 130.)

[வேதன் - பிரமன். துளங்கினன் - நடுங்கினுன். பொருமி - கலங்கி.]

நிகழ்ந்த போரில் 108 சேனுபதிகளும் அழிந்தார்கள். லட்சம் வீரர்களும் தோற்றனர். வீரவாகு தேவர் அல்லாத எட்டு வீரர் களும் தோற்றனர். கடைசியில் வீரவாகு தேவர் வந்தார். 'இவன் தான் தூதனுக வந்தான் போலும்!' என்று நினைத்துக் கொண்டான் சூரன். "முன்பு நீ வஞ்சகமாகத் தூதனுய் வந்தாய். இப்போதும் அப்படி வந்தாயானுல் உய்வாய். வார்சிலை பிடித்து வந்தால் மாண்டாய். உன் கடைசி நாள் இதுதான்" என்று சூரன் சொன்னுன்.

பற்று பட்டிமை பயிற்றியே அமைச்சரிற் பன்னி
ஒற்ற ணுகியே இன்னும்வந் தாயெனின் உய்தி ;
மற்ற தேகடன் ; வார்சிலை பிடித்தனை மாண்டாய் ;
இற்றை வைகலோ நின்னுயிர்க் கிறுத்தநாள் என்ருன்.

(இரண்டாம் நாள். 184.)

[பட்டிமை பயிற்றி - வஞ்சகம் செய்து. அமைச்சரின் பன்னி - மந்திரியைப் போலப் பேசி. உய்தி - உயிர் பிழைப்பாய். வைகல் - நாள்.]

அதுகேட்டு வீரவாகு தேவர் சொல்லலானுர்: "எம்பெருமான் திருவருளால் செயல் செய்கிறவன் நான். அவர் திருவுள்ளம் எப்படியோ அப்படியே நடப்பேன். நான் தூதனும் ஆவேன். மந்திரி யும் ஆவேன். எதிர்க்கின்ற பகைவர்களிடம் வீரத்தைக் காட்டிப் போர் நிகழ்த்துவேன். எம்பெருமான் எந்த எந்தப் பணியைக் கொடுக்கிருனே அவற்றை யெல்லாம் செய்வேன். நீ போர் செய்ய வந்தால் போர் செய்" என்ருர்.

தூதும் ஆகுவன் ; அமைச்சனும் ஆகுவன் ; துன்னர்
மீது வெஞ்சமர் ஆற்றுவன் ; இன்னமும் வேலோன்
ஓதி டும்பணி யாவையும் செய்குவன் ; உலகில்
ஏதும் வல்லன்யான் ; வேண்டுபோர் புரிதியால் என்ருன்.

(இரண்டாம் நாள். 185.)

[தூது - தூதுவன். துன்னர் - பகைவர். சமர் - போர். பணி - வேலை.]

பெரும் போர் மூண்டது. வீரவாகு தேவர் பல விதமான அஸ்திரங்களை விட்டார். அவை சூரன்மேல் பட்டு வலியிழந்து போயின. அவன், "உன் படைகள் எல்லாம் என்ன ஆயின, பார். என்னுடனா போர் செய்ய வந்தாய்?" என்று சினந்து தன் கதையினால் வீரவாகு தேவரின் மார்பில் அடித்தான். அப்போது தேவர் மயங்கி வீழ்ந்தார்.

ஆழ்ந்திடு சோரியன், அவுணன் தண்டினால்
போழ்ந்திடு மார்பினன், புகையும் நெஞ்சினன்,
தாழ்ந்திடும் விறலினன், தளரும் யாக்கையன்,
வீழ்ந்தனன், அமரர்கள் வெருவி ஓடவே.

(இரண்டாம் நாள். 227.)

[ஆழ்ந்திடு சோரியன் - இரத்தப் பெருக்கில் ஆழ்ந்தவன். தண்டினால் - கதாயுதத்தால்.]

விசாலி என்ற தேர்ப்பாகன் தேரை ஒரு பக்கம் கொண்டு போனான்.

இப்படி எல்லோரும் வலியிழந்ததை முருகன் பார்த்தான். போர் முகத்திற்குத் தன் தேரை விடச் சொன்னான். போர்க்களத்திற்கு முன்வந்து நிற்கும் முருகப் பெருமானைச் சூரபன்மன் பார்த்தான்.

முண்டகம் மலர்ந்த தென்ன மூவிரு
 முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன் மவுலியும்
 கோல மார்பும்
எண்தரு கரம்ஈ ராறும் இலங்கெழிற்
 படைகள் யாவும்
தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணமும்
 தெரியக் கண்டான்.

(இரண்டாம் நாள். 235.)

[முண்டகம்-தாமரை. நிரை-வரிசை. மவுலி-முடி.]

முகம், கண், கிரீடம், குண்டலம், படை, கால், தண்டை, சிலம்பு முதலியன எல்லாம் அழகாகத் தெரிந்தன. அவற்றைக் கண்டான் சூரன். அநுபவித்தான் என்று சொல்லவில்லை. "இப்படிக் காண்பதற்குரிய பெரிய தவம் அவன்பண்ணி இருந்தான். அவன் இந்த யுத்தத்தில் வென்றால் என்ன? தோற்றால் என்ன? போதத்தில் சிறந்த ஞானிகளின் நெஞ்சினால் உன்னவொண்ணாத குமார மூர்த்தியைக் கண்

முன்னுல் காண்கிருனே, அதுவே பெரிய பாக்கியம் அல்லவா? அவனது தீமை அப்பொழுதே கழிந்தது போலாயிற்று; அல்லவா?" என்கிருர் கச்சியப்பர்.

எஞ்சலில் அவுணர் செம்மல்
இங்ஙனம் அமர தாற்றித்
துஞ்சில்என்? தொலைவுற் ருல்என்?
தூயவா லறிவின் மிக்கோர்
நெஞ்சினும் அளத்தற் கொண்ணு
நிருமலக் குமர மூர்த்தி
செஞ்சுடர் வடிவம் கண்டு
தீவினை நீங்கி உய்ந்தான்.

(இரண்டாம் நாள். 237.)

[எஞ்சல் இல் - அழிவில்லாத. துஞ்சில்-இறந்தால்.]

சூரபன்மன் முருகனைப் பார்த்து, "இங்கே வந்தவர்கள் எல்லோரும் அழிந்து போனுர்கள். உன் படைகள் வலிமை ஒழிந்தன. உன் படைகளுக்கு எல்லாம் தலைவனுக முன்பு தூதுவனுக வந்த வீரனும் சண்டையிட்டு உயிர் இழந்துவிட்டான். நீ சிறு பிள்ளை. நீயா என்னேடு போர் செய்து வெற்றிபெற வந்திருக்கிருய்? உன் துணிச்சல் நன்ருக இருக்கிறது!" என்று கூறி நகைத்தான்.

இற்ற நின்பெரும் படைக்கெலாம் தலைவனுய் என்பால்
ஒற்று வந்துள வீரனும் பொருதுஉயிர் ஒழிந்தான்;
மற்று நீஒரு பாலனே என்னெடு மலைந்து
கொற்றம் எய்துதி? நன்றுநன்று உன்உளக் குறிப்பு!

(இரண்டாம் நாள். 243.)

[இற்ற-அழிந்த. மலைந்து-போர் செய்து. கொற்றம்-வெற்றி.]

அதற்கு முருகன் பதில் சொன்னுன்; "நமக்கு வெற்றி முன்னுலே உண்டாயிருக்கிறது, நாம் அதிக ஆற்றல் உடையோம், பெரிய புகழையும் படைத்திருக்கிருேம், சேனையாகிய பெருங்கடல் நமக்கு உள்ளது என்று அகந்தை கொள்ளாதே. அவற்றை எல்லாம் விரைவில் மாற்றிவிடுவேன். போர் செய்" என்ருன்.

வெற்றியும் உடையம், ஆற்றல்
மிகுதியும் உடையம், மேன்மை
பற்றியும் உடையம், எண்ணில்
படைகளும் உடையம், வீயாப்
பெற்றியும் உடையம், தானைப்
பெருங்கடல் உடையம், என்று
மற்றினி அகந்தை கொள்ளேல்;
மாற்றுகம் வல்லை மன்னே.

(இரண்டாம் நாள். 249.)

[வீயாப் பெற்றி-அழியாத இயல்பு. தானை-சேனை. மாற்றுகம் - அழிப்போம்.]

போர் மூண்டது. முருகன் விட்ட சக்கரம் எல்லா வீரர்களையும் அழித்தது. சூரன் பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம் ஆகியவற்றை விட்டான். முருகப்பெருமானது வேல் அவற்றை விழுங்கியது. சூரன் பாசுபதாஸ்திரத்தை விட்டான். முருகப்பெருமான் கையை நீட்ட அது அவன் கையில் வந்து சேர்ந்தது, கொடுத்தவன் வாங்கிக் கொண்டாற்போல. அதைச் சூரன் கண்டு வியந்தான். "உண்மையில் இவன் மகா வீரனே. இவனோடு போர்செய்வதற்கு என்னைத் தவிர வேறு யாருக்குத் தகுதி இருக்கிறது?" என்று முருகனைப் புகழ்ந்ததோடு தன்னையே உயர்த்திக் கொண்டான்.

என்னொ டேபொரற்கு இவனலால் வேறிலை ; இனையோன்
தன்னொ டேபொரற்கு யானலாது இலை ;இது சரதம் ;
அன்ன பான்மையின் எனக்குநே ராம்இவன் அலது
பின்னை யார்உளர் தமியனுக்கு உவமையாப் பேச ?

(இரண்டாம் நாள். 310.)

[சரதம்-உண்மை. தமியனுக்கு-ஒப்பில்லாத எனக்கு.]

முருகப்பெருமான் சூரனுடைய படைகளை எல்லாம் அழித்தான். தனியாக நின்றான் சூரபன்மன். அவனைப் பார்த்து முருகன் பேசலானான். "என்னிடத்தில் தாரகனைக் கொன்ற வேல் இருக்கிறது. அதுவே இப்போது உன்னையும் கொன்றுவிடும். அது அரிய காரியம் அன்று. ஆயுதம் அற்ற உன்னை அழித்தால் பழியாகிவிடும். அதனால் நாம் தாமதிக்கிறோம்."

நெடிய தாரகற் செற்றவேல் இருந்தது ; நின்னை
அடுதல் இங்கொரு பொருளுமன்று ; அரிதுமற் றன்றால்;
படைஇ ழந்திடு நின்உயிர் உண்டிடின் பழியாய்
முடியும் என்றுதாழ்க் கின்றனம், தருமத்தின் முறையால்.

(இரண்டாம் நாள். 316.)

[செற்ற - கொன்ற. தாழ்க்கின்றனம் - தாமதம் செய்கின்றோம்.]

"நீ தேவர்களைச் சிறைவிட்டுவிட்டாயானால் உன்னுடைய உயிரைப் போக்க மாட்டோம். நீ அப்படிச் செய்யாமல் மறுத்தாயானால் உன்னைச் சங்காரம் பண்ணிவிடுவோம். உன் எண்ணம் என்ன?" என்று கேட்டான்.

பன்னு கின்றதென் பற்பல? விண்ணுளோர் பலரும்
துன்னு தொல்சிறை விடுத்தியேல், உன்உயிர் தொலேயேம்;
அன்ன தன்மையை மறுத்திடின் ஒல்லேநாம் அடுதும்;
என்னே கொல்உன தெண்ணங்கள்? உரைத்தியால் என்றுன்.

(இரண்டாம் நாள். 317.)

[பன்னுகின்றது - திருப்பித் திருப்பிச் சொல்வது. ஒல்லே - விரைவில். அடுதும் - சங்காரம் செய்வோம்.]

மிகவும் பொல்லாதவனுகிய சூரன் தன் முன்னுல் நிற்பதைக் கண்டு முருகன் அவனே அழித்திருக்கலாம். ஆனுல் அறத்தையும், கருணேயையும் உடைய எம்பெருமான் ஆயுதம் இன்றி இருக்கிற அவனேக் கொல்வது அறம் அன்று என எண்ணினுன். ஒருகால் மனம் மாறித் தன்னுடைய தவறுகளே மாற்றிக் கொண்டான் என்றுல் அவனே மன்னித்துச் சுகமாக இருக்க விடலாம் என்ற கருணேத் திறம் காட்டினுன். அதனுல் அப்படிச் சொன்னுன்.

சூரன் அப்போது நினேத்தான்; 'என்னே இவன் கொல்ல முடியாது. நான் வச்சிர சரீரம் உடையவன். ஆனுல் இப்போது இவனே என்னுல் வெல்லவும் முடியாது. இன்றைக்கு நகரத்திற்குத் திரும்பிச் சென்று மறுபடியும் நாளேப் படைகளுடன் வந்து போர் செய்யலாம்' என்று எண்ணி மாயத்தினுல் மறைந்து தன் அரண்மனேக்குப் போய்விட்டான்.

என்னே அங்கவன் முடித்திடல் அரியதால்; யானும்
அன்ன வன்றனே இத்துணே வெல்வதும் அனேத்தே;
தொன்ன கர்ப்பெரு வளத்தொடும் படையொடும் துன்னிப்
பின்னர் வந்துஅமர் இயற்றியே பெருந்திறல் புரிவேன்.

(இரண்டாம் நாள். 323.)

[இத்துணே - இவ்வளவில்.]

மூன்ரும் நாள் போர்

மூன்ரும் நாள் யுத்தத்திற்குப் பானுகோபன் புறப்பட்டான். அப்போது மாயை பல அஸ்திரங்களேக் கொடுத்தாள். பானுகோபன் பல விதமான ஆயுதங்களுடன் போருக்கு வருகிறுன் என்பதை வீரவாகு தேவர் அறிந்தார். அவர் அவனேடு சண்டையிடுவதற்கு முருகப் பெருமான் ஆணேயைப் பெற்றுச் சென்ருர். வீரவாகு தேவருக்கும், பானுகோபனுக்கும் பெரும் போர் மூண்டது. வீரவாகு

தேவர் விட்ட அஸ்திரங்கள் பானுகோபனிடம் இருந்த எல்லாப் படைகளையும் அழித்தன. அப்போது அவன் ஆகாயத்திற்குச் சென்றான். மற்றவர்கள் ஓடிப் போனார்கள். ஆகாயத்திலிருந்தே மாயை கொடுத்த மாயா அஸ்திரத்தைப் பானுகோபன் விட்டான். அது எல்லோரையும் உணர்வழியச் செய்து ஏழு கடலுக்கும் அப்பால் அவர்களைக் கொண்டு போய்ச் சிறை செய்தது. அவர்களை அங்கிருந்தே காவல் செய்தது.

போயது சூரன் மைந்தன்
புந்தியிற் கதிமேற் கொண்டு
மாயிரு நேமி ஆறும்
வல்லையில் தப்பி அப்பால்
தூயதெண் புனலாய் ஆன்ற
தொல்கடல் அழுவம் நண்ணி
ஆயவர் தொகையை இட்டே
அகன்றிடாது ஓம்பிற் றன்றே.

(மூன்றாம் நாள். 167.)

[சூரன் மைந்தன் புந்தியின் - பானுகோபனுடைய மனத்தைப் போல. நேமி - கடல். வல்லையில் - விரைவில். அழுவம் - பரப்பு.]

பானுகோபன் எல்லோரும் போனது கண்டு மமதையோடு தன் தந்தையிடம் சென்று தன் வீரப் பிரதாபங்களைக் கூறினான்.

அப்போது நாரதர் முருகப்பெருமானை அடைந்து யுத்த களத்தில் நடந்த வரலாற்றைச் சொன்னார். முருகன் தன் திருக் கரத்தில் இருந்த வேலைப் பார்த்து, "அவர்களைக் கொண்டு சென்ற மாயா அஸ்திரத்தை அழித்து வீரர்களுடைய மயக்கத்தைப் போக்கி அவர்களை மறுபடியும் இங்கே வரும்படி செய்ய நீ செல்வாயாக" என்றான்.

கங்கை அன்னதோர் வாலிதா கியபுனற் கடற்போய்
அங்கண் வைகிய மாயமாப் படையினை அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே, அனையவர் விரைவில்
இங்கு வந்திடத் தந்துநீ செல்கென இசைத்தான்.

(மூன்றாம் நாள். 186.)

[வாலிதாகிய புனற் கடல் - தூய நீருள்ள கடல். மாயமாப்படை - மாயாஸ்திரம். மால்-மயக்கம்.]

வேல் வெகு வேகமாக அங்கே சென்றது. அருணோதயத்திற்கு முன்னால் இருள் அகன்றாற்போல அது போவதற்கு முன்னே மாயப்

படை போய்விட்டது. அங்கே கிடந்தவர்கள், தூக்கம் நீங்கி எழுந்து பழைய ஞானம் பெற்றவர்களைப் போல மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள்.

அடைதரு கின்ற முன்னர் அவர்உணர்வு
உண்ட மாயப்
படையது நீங்கிற் ருகப் பதைபதைத்து
உயிர்த்து மெல்ல
மடிதுயில் அகன்று தொல்லை வாலறிவு
ஒருங்கு கூடக்
கடிதினில் எழுந்தார், அங்கண் உதித்திடு
கதிர்கள் என்ன.

(மூன்றும் நாள். 206.)

[உயிர்த்து - மூச்சு விட்டு. மடி துயில் - படுத்துக்கிடந்த தூக்கம். வாலறிவு - தெளிந்த அறிவு. கடிதினில்-விரைவில்.]

அப்போது மயக்கம் தீர்ந்து வேலாயுதத்தைப் பார்த்து வீரவாகு தேவர், "நீ முருகப் பெருமானுக்குச் சமானம். உன்னுடைய கிருபையால் இந்தக் கவலையை நீத்தோம். உன்னை எம்பெருமானகவே நினைக்கிறோம்" என்று சொன்னர்.

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம்
படைத்த பண்பால்
எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால்
சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால்
தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக்
கவலை நீத்தேம்.

(மூன்றும் நாள். 212.)

[எந்தைகண்நின்றும் - சிவபிரானிடத்திலிருந்தும், சிவபிரான் கண்ணிலிருந்தும்.]

வேலுக்கு ஒரு தனிப் பெருமை. முருகன் ஒளி உடையவன். வேலாயுதமும் ஒளி உடையது. அதைத்தான் 'அந்தமில் ஒளியின் சீரால்' என்ருர். முருகனுக்கு ஆறுமுகம் உண்டு. வேலுக்கும் ஆறு பட்டைகள் உண்டு. அதனல் தான் 'அறுமுகம் படைத்த பண்பால்' என்ருர். முருகன் சிவபெருமானிடத்துத் தோன்றினன். சிவபெருமானே முருகனுக்கு வேல் தந்தார். முருகன் சிவனுடைய சக்தி. வேலுக்கும் சக்தி என்ற பெயர் உண்டு. இவற்ருல் வேலும்,

முருகனும் வேறல்ல, இரண்டு பேரும் ஒப்பவர்கள் என்று வீரவாகு தேவர் சொன்னார்.

பல சமயங்களில் வேலையே முருகனாக வைத்து வழிபடும் வழக்கம் உண்டு. வேலையே நட்டு வழிபடும் இடத்தை வேற்கோட்டம் என்று சொல்வார்கள். அதைப்பற்றி முன்பும் சொல்லியிருக்கிறேன். வேலுக்கும் வேலனுக்கும் வேறுபாடு இல்லையென்பதை உணர்ந்து வீரவாகு தேவர் வேலைப் புகழ்ந்தார். அந்த வேல் அவர்களை எல்லாம் இறைவனிடத்தில் அழைத்துச் சென்றது.

வீரவாகு தேவர் செய்த சபதம்

வீரவாகு தேவர் அப்போது ஒரு சபதம் செய்தார். "சண்டை போடுவதற்கு ஆற்றாளாகி, வஞ்சனை புரிந்து, நம்மை மாயத்தால் வென்ற கள்வனாகிய பானுகோபனின் உயிரைக் குடித்தாலன்றி முருகப் பெருமானின் திவ்ய பாதாரவிந்தத்தை நான் போய்க் காணப் போவதில்லை" என்று சூளுரை செய்தார்.

வெஞ்சமர்க்கு ஆற்றல் இன்றி வெருவிப்போய்
விண்ணில் நின்று
வஞ்சனை புரிந்து நம்மை மாயத்தால்
வென்று மீண்டும்
உஞ்சனன் இருந்த கள்வன் உயிர்குடித்து
அன்றி ஐயன்
செஞ்சரண் அதனைக் காணச் செல்லுவ
தில்லை யானே.

(நகர் புகு. 3.)

[சமர்க்கு - சண்டை செய்வதற்கு. ஆற்றலின்றி - வலிமையில்லாமல்.]

சபதம் செய்த பிறகு அவருக்கு ஓர் ஊக்கம் உண்டாயிற்று. நாமே ஏதேனும் ஒரு கொள்கை வைத்துக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்தால் ஊக்கம் உண்டாகும். நமக்கு வேண்டிய உபகரணங்கள் எல்லாம் இருந்தும் கொள்கை இல்லாமையினால் நம்மால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடிவதில்லை. நாம் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று.

'ஒருவன் தான் எண்ணியதை எண்ணியபடி அடையலாம்' என்று சொல்கிறார் வள்ளுவர். அப்படி அவர் சொல்லும்போது

சித்த புருஷர்களில் ஒருவராகிய திருவள்ளுவர் அப்படிச் சொல். கிறரே, அது என்ன என்று கேட்கலாம் என்று தோன்றுகிறது. '' எண்ணிய எண்ணியாங் கெய்துப '' என்றவுடன் நமது நாக்கில் நீர் ஊறுகிறது. அதற்கு அவர் ஒரு நிபந்தனை சொல்கிறர், '' எண்ணியார் திண்ணியராகப் பெறின் '' என்று. எண்ணியவர்கள் திண்ணியராக இருக்க வேண்டுமென்று சொல்கிறர். திண்ணி யர்கள் என்ருல் உடம்பினல் பலம் உடையவர்களாக இருப்பது என்பது அன்று. எண்ணம் என்பது மனத்தில் உண்டாகிறது. ஆகவே மனம் திண்மையாக இருந்தால் எண்ணம் திண்மையாக இருக்கும். அவர்கள் எண்ணியதை எண்ணியபடி அடைவார்கள் என்கிறர்.

மனம் திண்மையாக இருப்பதாவது, ஏதேனும் ஒன்றை நினைத் தால் அதன்படி செய்ய முற்பட வேண்டும். வெற்றி பெறுகிற வரைக்கும் மீட்டும் மீட்டும் அதைப் பற்றியே எண்ணிச் செயல்பட வேண்டும். நாம் அப்படி இருப்பது இல்லை. ஒன்றை முதலில் எண்ணுகிறேம். மறுபடியும் மறந்து போகிறேம். பிறகு வேறென்றை எண்ணுகிறேம்.

ஒரு பெண் கருவுறுகிறள். அந்தக் கருவைப் பத்து மாதம் வயிற்றில் அவள் சுமக்க வேண்டும். இடையில் ஏதாவது இடையூறு வந்தால் குழந்தையைக் காண முடியாது. அந்தக் கருவைப் போல நம் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றுகிறது. அந்த எண்ணம் செய லாகும் மட்டும் திடமாக இருக்க வேண்டும். நாம் அப்படி இருப்பது இல்லை. அந்த எண்ணத்தை நாமே மாற்றுகிறேம். அப்போது கருச்சிதைவு போல, எண்ணச் சிதைவு ஏற்பட்டு விடுகிறது. பிறகு எண்ணிய செய்கை நடக்காது. எவன் ஓர் எண்ணத்தை மீட்டும் மீட்டும் எண்ணி அது செயலாகும் மட்டும் திண்மை உடையவனுக இருக்கிறனே, அவன் எதை நினைத்தாலும் அதைச் செய்ய முடியும். அதைத் தான் **வள்ளுவர்** சொல்கிறர்.

'' எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். ''

மனத்திலே திண்மை வரவேண்டுமானல் அதற்குப் பயிற்சி வேண்டும். மனம் போனபடி எதையாவது சொல்லி விடுவது,

பெரும்பாலும் பிறகு அதைச் செய்ய வேண்டுமே என்று கவலைப் படுவதில்லை. இது சாமானிய மக்கள் நிலை. எவன் சொன்னபடி செய்கிறானோ அவன் உத்தமமானவன்.

ஒருவன் ஒரு தோட்டத்திற்குச் சென்றான். அங்கே பாதிரி, மா, பலா ஆகிய மரங்கள் இருந்தன. பாதிரி மரத்தைப் பார்த்தான். அது நிறையப் பூப் பூத்திருந்தது. அந்தப் பூக்களைப் பார்த்தவுடன் அவை எல்லாம் காயாகும் என்று நினைத்தான். பல நாட்கள் அதைத் தொடர்ந்து பார்த்தான். அது பூப்பதும், பூத்த பூக்களை எல்லாம் உதிர்ப்பதுமாகவே இருந்தது. காய் காய்க்கவில்லை. மா மரத்தைப் பார்த்தான். அதில் பூக்களும் இருந்தன. காயும் காய்த்திருந்தது.. பலா மரத்தைப் பார்த்தான். பூவே இல்லை. 'இது எங்கே காய்க்கப் போகிறது, பழுக்கப் போகிறது?' என்று எண்ணியிருந்தான். ஆனால் குலைகுலையாக அது காய்த்துத் தொங்கியது. ஔவைப் பாட்டியிடம், "பாட்டி, இந்த அதிசயத்தைப் பார்த்தாயா?" என்றான். பாட்டி அதைப் பார்த்துச் சொன்னாள்; " அப்பா, உலகத்தில் சொல்பவர்கள் பல பேர் இருக்கிறார்கள். சொல்கிறபடி செய்கிறவர்கள் சில பேர்தாம். சொல்லாமலே செய்கிறவர் மிகச் சில பேர். சொல்லாமல் செய்கிறவர்கள் உத்தமர்கள். பூக்காமலே காய்க்கும் பலாமரத்தைப் போன்றவர்கள் அவர்கள். பூத்துக் காய்க்கின்ற மாமரத்தைப் போன்றவர்கள், சொல்லிச் செய்கிறவர்கள், இவர்கள் மத்திம மானவர்கள். சொல்லியும் செய்யாதவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் பாதிரி மரத்தைப் போன்றவர்கள் ; மிகவும் தாழ்ந்தவர்கள்" என்றாள்.

"சொல்லாமலேபெரியர் ; சொல்லிச்செய் வார்சிறியர் ;
சொல்லியும் செய்யார் கயவரே ; — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய், கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்."

ஆகவே, சொல்லியபடி, எண்ணிய எண்ணத்தின்படி, செயல் படுகிறவன் எவனோ அவன்தான் திண்மையான மனம் உடையவன். நாம் இன்ன செய்ய வேண்டும் என்ற கொள்கை மனத்தில் இருக்க வேண்டும். வாழ்க்கையில் நமக்குக் கருவி கரணங்கள் இருந்தாலும், எதைச் செய்ய வேண்டுமென்ற திடமான கொள்கை இருந்தால் தான் அத்தனையும் பயன்படும்.

குழந்தையாக இருக்கும்போது தின்பண்டங்கள் தின்ன ஆசை உண்டாகிறது. அப்போது எது சுவையாக இருக்கிறதோ அதைத் தேர்ந்தெடுக்கிறோம். அப்போது ஒரு வகை அறிவு இருக்கிறது. அப்போதே நம் வாழ்க்கையின் குறிக்கோள் இன்னது என்று தெரிந்துகொள்ளலாம். அப்போதும் தெரிந்து கொள்ளவில்லை. **அப்பர் சுவாமிகள்**, "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று சொல்கிறார். 'குழந்தையாக இருக்கிற போது ஓரளவு அறிவு பெற்றேன். அப்போதே குறிக்கோளைத் தெரிந்துகொண்டிருக்கலாம்; தெரிந்துகொள்ளவில்லை. பின்பு இளைஞன் ஆனேன். நல்ல சுகம் இன்னது என்று தெரிந்து கொண்டேன். மங்கைமார்களுடன் சேர்ந்திருத்தல் சுகம் என்று தெரிந்தது. அந்தப் பருவத்திலும் என்னுடைய குறிக்கோள் இன்னது என்று தெரிந்துகொள்ள வில்லை. அதற்குப் பிறகு முதுமை வந்தது. ரெயில் வருவதற்கு முன்னால் முதல் மணி அடிப்பதைப்போல நரை, திரையாகியவை வந்து விட்டன. அடுத்தது மரணந்தான். அப்போதும் என்னுடைய குறிக்கோளைத் தெரிந்துகொள்ளவில்லையே!' என்கிறார்.

"பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை யார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்."

நாமும் ஆழ்வார்கள், ஞானசம்பந்தர் ஆகிய பெருமக்களைப் போலக் கருவிகரணங்களைக் கொண்டிருக்கிறோம். என்றாலும் அவர்கள் எல்லாம் வாழ்நாளின் குறிக்கோள் என்ன, லட்சியம் என்ன என்பதைக் தெரிந்து கொண்டார்கள். நாம் தெரிந்து கொள்ளவில்லை.

ஆண்டவன் நமக்குத் தனுகரண புவன போகங்களைத் தந்திருக்கிறான். என்ன செய்ய வேண்டுமென்ற ஞாபகம் இல்லாமல், குறிக்கோள் இல்லாமல், நாம் வாழ்கிறோம்.

"பானுகோபனை அழித்தாலன்றி, நான் எம்பெருமான் திருவடியைக் காணமாட்டேன்" என்று சங்கற்பம் செய்து கொண்டார் வீரவாகு தேவர்.

வீரவாகு தேவர் நகரை அழித்தல்

வீரவாகு தேவர் வீரமகேந்திரபுரத்து மேற்கு வாசல் வழியே உள்ளே நுழைய முயன்றார். அங்கே இருந்த புலிமுகன் எதிர்த்துப் போரிட்டான். வீரவாகு தேவருடன் சென்ற சிங்கன் அந்தப் புலி முகனைக் கொன்றான். வீரவாகு தேவர் ஆக்நேயாஸ்திரம், வாயவாஸ்திரம் ஆகிய இரண்டையும் சேர்த்து விட்டார். அக்கினியும், வாயுவும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? ஒரு வீட்டில் தீப்பற்றுகிற போது, காற்று வந்தால் மிக விரைவில் வீடு எரிந்து விடும். வீரவாகு தேவர் இரண்டு அஸ்திரங்களையும் சேர்த்து விட்டவுடன் அந்த நகர் அழிந்தது.

அப்போது சூரபன்மன் எல்லா மேகங்களையும் வரவழைத்தான். வீரவாகு தேவரின் அனல்படையின் வெம்மை பொறுக்காமல் அவைகள் சிதறி ஓடின. அங்கங்கே மழையாகப் பொழிந்து நெருப்பை அவித்தன. அப்போது சூரன் தன் மகன் இரணியனை அழைத்தான். அவனுக்கு மூன்று தலைகள். அவனைப் போருக்குச் சென்று பகைவர்களை அழித்து வரச் சொன்னான்.

இரணியன் கூறுதல்

இரணியன் நல்ல அறிவு உடையவன். "தேவர்களை நாம் சிறையிலிருந்து விடாவிட்டால் கேடு வரும். நம் செல்வம் எல்லாம் போய்விடும்" என்று சூரனிடம் சொன்னான். முன்பு என்ன என்ன நிகழ்ந்தன என்பதை அவன் தெரிந்து வைத்திருந்தான். "முருகன் திருக்கரத்திலுள்ள வேல் தாரகனைக் கொன்றது. கிரவுஞ்ச மலையைத் தூளாக்கியது. ஏழு சமுத்திரத்திற்கு அப்பால் இருந்த வீரர்களை மீட்டுக் கொண்டு வந்தது. அந்த வேலைப் போற்றி, எம்பெருமானின் திருவடியைப் பணிவதன்றி, அவனோடு போர் செய்வோம் என்று எழுவது அறிவுடை ஒருவன் செய்கிற காரியம் அன்று" என்று இரணியன் சொன்னான்.

தாரகற் செற்ற தென்றால் தடவரை
பொடித்த தென்றால்
வார்புனற் கடலுள் உய்த்த வலியரை
மீட்ட தென்றால்
கூருடைத் தனிவேல் போற்றிக் குமரன்தாள்
பணிவ தல்லால்
போரினைப் புரிதும் என்கை புலமையோர்
கடன தாமோ?

(இரணியன் யுத்தப். 32.)

[தடவரை - விசாலமான கிரௌஞ்சமலையை. பொடித்தது - பொடியாக்கியது. புலமையோர் - அறிவுடையவர்.]

அறிவு மூன்று வகையினால் வரும். சுருதி, யுக்தி, அநுபவம் என்று சொல்வார்கள். சுருதி என்பது நூல். பெரியவர்கள் தம் அநுபவங்களை நிலையாக நூல்வடிவில் எழுதிவைத்திருக்கிறார்கள். அவற்றைக் கொண்டு அறிவு பெறலாம். யுக்தி என்பது சொந்த அறிவால் இப்படிச் செய்தால் இப்படியாகும் என்று தெரிந்து கொள்வது. அநுபவம் என்பது நாம் நம் அநுபவத்திலே தெரிந்துகொண்டது. இப்போது யுக்தியினாலும், அநுபவத்தினாலும் அறிந்தவற்றை இரணியன் சொன்னான்.

இரணியன் போர் செய்து மறைதல்

அவன் யோசனையைக் கேட்டபோது சூரனுக்குக் கோபம் வந்தது. பாம்புக்குப் பால் வார்ப்பது கெடுதியாகவே முடியும். 'நாம் சொல்வதை இவன் கேட்கமாட்டான்' என்று இரணியன் உணர்ந்த உடனே, சூரனைப் பணிந்து, "நான் சொன்ன வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்வாயாக ; நான் போருக்குப் புறப்படுகிறேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.

போர் நடந்தது. நிச்சயம் இந்தப் போரில் நாம் இறக்கப் போகிறோம் என்பதை அவன் உணர்ந்தான். தன் தந்தையும் பிழைக்கமாட்டான் என்பதை அறிந்துகொண்டான். அவன் இறந்த பிறகு தந்தைக்கு ஈமக் கடன் ஆற்ற யாரும் இருக்க மாட்டார்கள். 'தந்தைக்கு நாம் செய்ய வேண்டிய கடன் இருக்கிறது ; ஆகவே நாம் இங்கே இருக்கக் கூடாது. இவர்கள் எதிரில் இல்லாமலேயே மறைந்து விடவேண்டும்' என்று போர்க் களத்தை விட்டு ஓடிவிட்டான்.

மைந்தனைப்பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக்கு ஏற்றிட
அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றோ ?

(இரணியன் யுத்தப். 126.)

[போற்றி - பாதுகாத்து. கடன் - ஈமக் கடன்.]

ஒரு மந்திரத்தை உச்சரித்து, மீன் உருவம் எடுத்துக்கொண்டு, கடலுக்குப் போய் யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொண்டான்.

ஆவ துன்னிஎன் ஆருயிர் போற்றியே
போவ தேகடன், என்று பொருக்கெனத்
தாவி வான்முகில் தன்னிடைப் போய்ஒரு
தேவு மந்திரம் சிந்தையில் உன்னினுன்.

உன்ன லோடும் உருஅரு வாதலும்
தன்னை யாரும் தெரிவரும் தன்மையால்
பொன்உ லாய புணரியுட் போயினுன்
மின்னு தண்சுடர் மீன்உரு வாகியே.

(இரணியன் யுத்தப். 129, 130.)

[பொருக்கென - விரைவில். உரு அருவாதலும் - வடிவம் மறைந்தவுடன். பொன் - செல்வம். புணரி - கடல்.]

நான்காம் நாள் அக்கினிமுகாசுரன் போர்

மூன்ரும் நாள் போர் முடிந்தது. நான்காம் நாள் போர் தொடங்கியது. சூரனுடைய மகன் அக்கினிமுகாசுரன் போருக்கு வந்தான். அவன் சந்திரனைச் சிறை செய்தவன். அவனுக்கும் வீரவாகுவுக்கும் போர் நடந்தது.

நவ வீரர்களில் ஏழு பேர் மாண்டார்கள். அத்தனை பேரும் கைலாசத்திற்குப் போய்விட்டார்கள். வீரத்துடனும், சினத்துடனும் வீரவாகு தேவர் கையில் வாளுடன் வந்தார். அப்போது அக்கினி முகாசுரன் சபதம் செய்தான்.

பூண்பால் முலைமாதர் புணர்ச்சியெனும்
மாண்போர் தனிலேவலி அற்றுஅழியும்
ஆண்பால் ஒருவன்அவ னேஅலனே ?
ஏண்பால் உனையான்இவண் வென்றிலனேல்.

(அக்கினிமுகாசுரன் வதை. 72.)

"உன்னை நான் வெல்லா விட்டால் பெண்களோடு போகம் புரிவதில் வலியில்லாமல் போகும் ஆண்மகன் ஆவேன்" என்று சபதமிட்டான். சபதம் செய்வதிலேயே ஒருவனது மன இயல்பு தெரியும். இவனுக்குக் காமம் மிகுதி என்பது இந்தச் சபதத்தினல் தெரிய வருகிறது.

நெடுஞ்செழியன் என்ற பாண்டிய அரசன் மிகவும் இளையவனக இருந்தான். அவனுடைய இளமையைக் கண்டு அவனுடைய பகைவர்கள் அவனேடு போர் புரிந்து வென்று விடலாம் என்று

எண்ணினார்கள். 'இவன் இளையன்' என்று அவர்கள் பேசுவதைக் கேட்டு நெடுஞ்செழியனுக்குக் கோபம் வந்து அவன் சபதம் செய்தான்.

"அவர்கள் என்னை இளைஞன் என்று பேசுகிறார்கள். அவர்களால் நான் தோல்வியுற்றேன் ஆனால் என்னை எந்தப் புலவர்களும் பாடாது ஒழியட்டும். குடிகள் பழி தூற்றட்டும். இரப்பவர்களுக்கு ஈயாத வறுமை எனக்கு வரட்டும்" என்றெல்லாம் சபதம் செய்கிறான். இந்தச் சபதத்தில் அவனுடைய நல்லெண்ணங்கள் தெரிகின்றன. அக்கினிமுகாசுரன் செய்த சபதத்தைப் பார்த்தோம். அதில் அவனுடைய இழிந்த மன இயல்பு புலனாகிறது. நெடுஞ்செழியன் செய்த சபதத்தில் அவனது பண்பாடு தெரிகிறது.

அக்கினிமுகாசுரன் போர்க்களத்தில் வீரவாகு தேவரோடு மோதினான்; தோற்று ஓடினான்.

அக்கினி முகாசுரன் முதலியோர் இறத்தல்

பின்பு அவன் வந்து பிரம்மாஸ்திரத்தை விட்டான். வீரவாகு தேவர் வீரபத்திராஸ்திரம் விட்டார். அது பிரம்மாஸ்திரத்தை அழித்தது.

அன்னமிசை யோன்படை அழிந்திடலும் வீரன்
தன்னது நெடும்படை தடுப்பில்வகை ஏகி
வன்னிமுகன் ஆவிகொடு மாமுடிகள் தள்ளி
மின்னுவென வீரனிடை மீண்டுபடர்ந் தன்றே.

(அக்கினிமுகாசுரன். 145.)

[அன்ன மிசையோன் - பிரமன். வீரன் தன்னது நெடும்படை - வீரபத்திராஸ்திரம். வன்னி முகன் - அக்கினிமுகாசுரன். படர்ந்தன்று - வந்தது.]

அது அக்கினி முகாசுரனைக் கொன்று, வீரவாகு தேவரிடம் வந்து சேர்ந்தது.

அப்போது தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்த மகிழ்ச்சியின் பெருக்கினாலே தம்முடைய ஆடைகளை எல்லாம் அவிழ்த்து வீசினார்கள். பூண் துறந்தார்கள். நாண் துறந்தார்கள். பிறந்தமேனிக்கு இருந்தார்களாம்.

புறந்தரு கலிங்கமும் பூணும் நாணமும்
துறந்தனர், உவகையால்; சொல்லும் ஆடலர்;
சிறந்துடன் ஆர்த்தனர், தேவர்; அற்றைநாள்
பிறந்திடு மைந்தர்தம் பெற்றி எய்தினார்.

(அக்கினிமுகாசுரன். 147.)

[கலிங்கம் - ஆடை. சொல்லும் ஆடலர் - பேசவில்லை.]

இங்கே எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. இந்திரஜித் இறந்தபோது தேவர்கள் எல்லாம் அதைக் கண்டு ஆனந்தம் அடைந்தார்கள். தம் இடையில் இருந்த ஆடைகளை எடுத்து வீசினர்கள். அது எப்படி இருந்தது? கொல்லாத நோன்புடைய சௌர்களின் தெய்வங்களாகிய தீர்த்தங்கரர்கள் எப்படி இருக்கிறர்களோ அப்படி இருந்தனர் என்று கம்பர் அங்கே வருணிக்கிறர்.

> "வில்லாளர் ஆனர்க்கு எல்லாம் மேலவன் விளித லோடும்
> செல்லாதவ் விலங்கை வேந்தற்கு அரசெனக் களித்த தேவர்
> எல்லாரும் தூசு நீக்கி ஏறிட ஆர்த்த போது
> கொல்லாத விரதத் தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார்."

இங்கே பிறந்த மேனிக்கு இருந்தார்கள் என்று கச்சியப்பர் சொல்கிறர். உணர்ச்சி மிகுந்தால் அறிவு மறைந்துவிடும். 'நாம் இப்படி இருக்கிறேமே; பிறர் பார்த்தால் பரிகாசம் பண்ணுவார் களே!' என்று எண்ணமல், நாணத்தைத் துறந்து, உணர்ச்சி வசப்பட்டு ஆடைகளை எல்லாம் அவிழ்த்து வீசி ஆடினர்கள், தேவர்கள் எல்லாம்.

தம்பிமார்கள் இறந்த செய்தியைத் தூதுவர்கள் முருகப் பெரு மானிடம் போய்ச் சொன்னர்கள். அவன் ஓர் அம்பில் மடல் தீட்டி, 'என் தம்பிமார்கள் உயிரைக் கொண்டுவந்து அவரவர்களது உடலில் சேர்க்க வேண்டும்' என்று எமனுக்கு அனுப்பினன். எம்பெருமான் உத்தரவிட்டபடியே எமன் செய்தான்; நவவீரர்கள் உடலில் உயிரைச் செலுத்தி அவர்களை எழுப்பினன்.

> **புக்க காலையின் எழுவரும் தம்உடல் புகுந்தார்;**
> **மிக்க பாரிடத் தலைவர்கள் யாவரும் விரைவில்**
> **தொக்கு வீழ்தரும் யாக்கைகள் உற்றனர்; சுரர்கள்**
> **அக்க ணந்தனிற் பூமழை தூவிநின்று ஆர்த்தார்.**
>
> (அக்கினிமுகாசுரன். 221.)

[பாரிடத் தலைவர்கள் - பூதகணத் தலைவர்கள்.]

இந்தச் செய்திகளை அறிந்த சூரன் அழுது புலம்பினன். போருக்கு மூவாயிரம் புதல்வர்களை அனுப்பினன். அவர்களும் அழிந்து விட்டார்கள். அதனல் மேலும் மேலும் அவன் துன்பத்தை அடைந்தான். நான்காவது நாள் இரவு தருமகோபன் வந்தான். அவன் புண்டரிகம் என்னும் யானையின்மேல் ஏறிப் போர் செய்தான். அந்த யானையும் அழிந்தது; அவனும் அழிந்தான்.

பானுகோபன் வதை

ஐந்தாம் நாள் போர்

பிறகு ஐந்தாம் நாள் போர் தொடங்கியது. தூதர்கள் சூரனிடம் போய்ச் செய்திகளைச் சொன்னார்கள்.

அவன் எழுது சித்திரப்பாவை போல உணர்வு போய் இருந்தான். தூதர்கள் பானுகோபனிடம் போய்ச் சொன்னார்கள். அக்கினி முகாசுரன் இறந்து போனதை அவன் அறிந்தான். இரணியன் போர்க்களத்தை விட்டே பயந்து எங்கோ ஓடிப்போய் விட்டதையும் அறிந்தான். உடனே தன் தந்தையிடம் வந்து அவனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான்.

பானுகோபன் அறிவுரை

இராமாயணத்தில் இந்திரஜித்துக் கூடத் தன் தந்தையாகிய இராவணனுக்கு போர் தொடங்கிய பிறகு அறிவுரை கூறுகிறான். அதுபோலப் பானுகோபன் சூரபன்மனிடம் வந்து அறிவுரை சொல்லத் தொடங்கினான்.

"தந்தையே, உன்னுடைய வேல் ஒடிந்து விட்டது. மானம் இல்லாமல் தோற்றுப் போனாய். உன்னுடைய வரங்கள் பயன்பட வில்லை. முருகவேள் உன்னிடம் கோபம் கொள்ளவில்லை. அவன் உண்மையாகக் கோபம் கொண்டானானால் சர்வாண்டங்களும் அந்தக் கோபத்தை ஆற்றாது."

ஏற்ற தோர்சிலை இழந்தனை ; மானமும் இன்றித்
தோற்று வந்தனை ; தொல்வரத்து இயற்கையும் தொலைந்தாய் ;
சீற்றம் உற்றிலன் முருகவேள் ; அவன்சினம் செய்யின்
ஆற்று மோஎலா அண்டமும், புவனங்கள் அனைத்தும் ?

(பானுகோபன் வதை. 14.)

[சிலை - வில்லை. தொல் வரத்து இயற்கையும் - நீ பெற்ற பழைய வரங்களின் இயல்புகளும்.]

"காட்டிலே சாமான்ய மிருகங்களை வேட்டையாடி அழிக்கிறார்கள் சிலர் ; வேட்டையாடுவதிலே மிகவும் ஊக்கத்தோடு இருக்கிறார்கள். அப்போது புதர்க்குள் மறைந்திருக்கும் புலியானது

அவர்களை எல்லாம் அழித்து விடுகிறது. அது போலத் தேவர்களைத் துன்புறுத்தி வந்த நாம் முருகப் பெருமான் கணையால் தொலைந்து விடுவோம்'' என்று அவன் சொன்னான்.

புல்லி தாகிய விலங்கினைப் படுப்பவர், புதலுள்
வல்லி யந்தனக்கு உண்டியாய் மாய்ந்திடும் கதைபோல்
எல்லை இல்பகல் அமரரை அலைத்திடும் யாமும்
தொல்லை நாள்வலி சிந்தியே, குமரனால் தொலைந்தோம்.

(பானுகோபன். 16.)

[புல்லிதாகிய விலங்கினை - அற்ப மிருகங்களை. படுப்பவர் - கொல்பவர். புதல் - புதர். வல்லியம் - புலி. எல்லை - அளவு. அலைத்திடும் - துன்புறுத்தும்.]

''நாம் நம்முடைய ஆற்றலின் அளவைத் தெரிந்துகொள்ளவில்லை. ஊக்கத்தினால் அளவிற்குமேல் போய்விட்டோம்'' என்று அவன் பேசினான். **வள்ளுவர்** ஒரு குறள் சொல்கிறார்.

''நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.''

'தன்னுடைய பலத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு, எந்த அளவுக்கு அதைப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன் படுத்த வேண்டுமே தவிர, முன்னாலே கிடைத்த சிறு வெற்றிகளை வைத்து, கர்வம் பெற்று மேலும் மேலும் அளவுக்கு மிஞ்சிப் போனால் உள்ள பலங்கள் எல்லாம் போய்விடும்' என்று அந்தக் குறள் சொல்கிறது.

பானுகோபன் சூரபன்மாவுக்குச் சொன்ன அறிவுரையில் அந்தக் கருத்துக்கள் இருக்கின்றன. ''மிருகங்களைக் கொன்று விட்டோம் என்ற செருக்கில் இருந்த போது வேடனைப் புலிகொல்வது போல, முருகன் நம்மை அழித்துவிடுவான்'' என்றான்.

''இப்போதே மிக்க ஆற்றலுள்ள பல புதல்வர்களை நீ இழந்து விட்டாய். நான்கு வகையான சேனையை இழந்து கொண்டு வருகிறாய். நானும் நீயுமே மிஞ்சியிருக்கிறோம். எல்லோருக்கும் மேலாக இருந்த உன் குலத்தையே வேரோடு அழிக்கக் கூற்றுவனைப் போல வந்துள்ள முருகப் பெருமானை நீ தெரிந்து கொள்ளவில்லை. இன்னமும் பகை உணர்ச்சி கொண்டு சண்டையை மேற்கொண் டிருக்கிறாய்.''

ஆற்றல் மைந்தரை இழந்தனை; நால்வகை அனிகத்து
ஏற்றம் அற்றனை; என்னுடன் ஒருவன்நீ இருந்தாய் ;
மேல்தி கழ்ந்தநின் குலத்தினை வேரொடு வீட்டக்
கூற்றம் வந்ததும் உணர்கிலை; இகலைமேற் கொண்டாய்.

(பானுகோபன். 19.)

[அனிகம் - படை. வீட்ட - அழிக்க. இகல் - பகை.]

"நான் ஓர் உறுதியைக் கூறுகிறேன், கேள். தேவர்களைச் சிறை விட்டு, உள்ளத்திலுள்ள பகை உணர்ச்சியை நீக்கிவிடு. அப்போது உன்னுடைய பெருவளம் நிலைக்கும். முருகன் இங்கு வராமல் தன் ஊருக்குப் போய்விடுவான்" என்று தந்தைக்கு உபதேசம் செய்தான்.

உறுதி ஒன்றுஇனி மொழிகுவன்; பொன்னகர் உள்ளார்
சிறைவி டுக்குதி; நம்மிடைச் செற்றமது அகற்றி
அறுமு கத்தவன் வந்துழி மீண்டிடும்; அதற்பின்
இறுதி யில்பகல் நிலைக்கும்நின் பெருவளம் என்றான்.

(பானுகோபன். 21.)

[உறுதி - மேற்கொள்ளத்தக்க நல்ல செயல். பொன் நகர் - அமராவதி. செற்றம் - கோபம். வந்துழி - வந்த இடத்துக்கு.]

இன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகே பானு கோபன் இவ்வாறு சொன்னான். முன்பு அவனே போர் செய்தான். "பட்டறி, கெட்டறி, பத்தெட்டிறுத்தறி" என்பார்கள். தன்னு டைய ஆற்றலையும், தன் படையாற்றலையும் நினைந்து முருகப் பெருமான் படைக்கு முன்னாலே நின்று அவன் அப்போது போர் செய்தான். முன்னாலே அறியாமையால் போய் எதிர்த்து நின்றாலும், அநுபவத்தைப் பெற்ற பிறகு அந்த அறிவு அவனுக்குப் பயன் பட்டது. 'நாம் எதிர்த்து முருகப் பெருமானை அழிக்க முடியாது' என்று தெரிந்துகொண்டான். தான் உணர்ந்ததைத் தன் தந்தைக்குச் சொன்னான்.

உலகத்தில் உத்தமர்களாக இருக்கிறவர்கள் சுருதி, யுக்தி யினால் விஷயத்தைத் தெரிந்துகொண்டு, நல்ல வழியில் நடப்பார்கள். மத்திமமானவர்கள் அநுபவத்தை அடைந்த பிறகே நல்ல வழிக்கு வருவார்கள். அதமர்கள் எத்தனை அநுபவம் இருந்தாலும் தாம் கொண்ட தவறான கொள்கையை மாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

'மூர்க்கனும், முதலையும் கொண்டது விடா.' அதனால் மேலும் மேலும் பல துன்பத்தையே அடைவார்கள்.

சூரன் சினந்துரைத்தல்

பானுகோபன் அநுபவத்தால் தான் உணர்ந்த நல்வழியை எடுத்துரைத்தான். அதைக்கேட்ட சூரனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"நீ என்ன சொல்கிறாய்? என் பிள்ளையாகிய நீ இப்படி எதிர்த்துப் பேசலாமா? நான் எளியனாகி, தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கிவிட்டால் அரசர்களுக்கு அரசன் என்று என்னை உரைக்கின்ற பதவி என்ன ஆகும்? என்னை யார் மதிப்பார்கள்? அதோடு எனக்கு அழியாப் பழியும் வந்துவிடாதா?" என்றான்.

என்இவை உரைத்தாய் மைந்த?
இன்றுயான் எளியன் ஆகிப்
பொன்உல குள்ள தேவர் புலம்புகொள்
சிறையை நீக்கின்
மன்னவர் மன்னன் என்றே
யார்எனை மதிக்கற் பாலார்?
அன்னதும் அன்றி, நீங்கா
வசையும்வந்து அடையும் மாதோ.

(பானுகோபன். 23.)

[பொன் உலகு - தேவலோகம். புலம்புகொள் - தனித்திருக்கும், வருந்தும்.]

"என் இவை உரைத்தாய் மைந்த" என்று சொல்லும்போது, தந்தையிடத்தில் இப்படிப் பேசுகிறாயே, இப்படிப் பேசலாமா என்ற குறிப்பு இருக்கிறது. அதோடு தன் பதவிக்கு ஏதோ கௌரவம் இருப்பதுபோலவும், அது அழிந்து விடுவது போலவும் பேசினான். "மன்னவர் மன்னன் என்றே யார் எனை மதிக்கற் பாலார்?" என்று கேட்டான்.

"கூன், செவிடு, முடம், குருடு, ஊமை என்பனபோன்ற குறையோடு உடம்பு இருந்தால் அவை உடம்போடு போகும். ஆனால் மானம் போய்விட்டால் உலகத்தில் இந்த உடம்பு போனாலும் கூட அந்தப் பழி நிற்கும் அல்லவா? இதை நீ தெரிந்து கொள்ளவில்லையே!"

கூனெடு வெதிரே பங்கு குருடுபே ருமை ஆனோர்
ஊனமது அடைந்த புன்மை யாக்கையோடு ஒழியும் அம்மா!
மானமது அழிந்து தொல்லை வலிஇழந்து உலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டோ ?

(பானுகோபன். 24.)

[வெதிர் - செவிடு. பங்கு - முடம். ஊனமது - எழுவாய். புன்மை - இழிவு. வசையின் மாற்றம் - பழிக்கும் சொல்.]

"அழகு, இளமை, ஆற்றல், செல்வம், வீரம், சொந்தச் சுற்றத்தார், வச்சிர சரீரம் இவைகள் எல்லாம் இருந்தும், நிச்சயமாக இவைகள் அழிந்துவிடும். இது உனக்குத் தெரியும். ஆனால் புகழ் ஒன்று மாத்திரம் அழியாது. பகைவர்களோடு போரிட்டு உயிர் விட்டாலும் கூட நமக்குப் புகழ் அழியாது. அந்த மாதிரி உயிர் விட்டாலும் விடுவேனே தவிரத் தேவர்களைச் சிறைவிடமாட்டேன்" என்று வீராவேசமாகப் பேசினான் சூரன்.

பேரெழில், இளமை, ஆற்றல், பெறலரும் வெறுக்கை, வீரம்,
நேரறு சுற்றம், யாக்கை, யாவையும் நிலையா அன்றே ;
சீர்எனப் பட்ட தன்றோ நிற்பது ? செறுநர் போரில்
ஆருயிர் விடினும் வானோர் அருஞ்சிறை விடுவ துண்டோ ?

(பானுகோபன். 26.)

[வெறுக்கை - செல்வம். நேர் அறு - ஒப்பற்ற. சீர் - புகழ். செறுநர் - போரிடும் வீரர்.]

மேலும் அவன் பேசினான்; "நான் இறக்கும்படி நேர்ந்தாலும் மானத்தை விடமாட்டேன். பெரியவர்கள் மரணம் வந்தாலும் ஏற்றுக் கொள்வார்கள் ; மானத்தை விட மாட்டார்கள். இரண்டு நாள் இருக்கும் செல்வத்தை நம்பி, மேற்கொண்ட கொள்கையை விடமாட்டேன். சூரன் என்று எனக்கு ஒரு பேர் இருக்கிறது. அந்தப் பெயரை மாற்றிக்கொள்ள விரும்பேன்" என்றான்.

இறந்திட வரினும் அல்லால்
இடுக்கணொன் றுறினும் தம்பால்
பிறந்திடு மானந் தன்னை விடுவரோ,
பெரிய ரானோர் ?
சிறந்திடும் இரண்டு நாளைச்
செல்வத்தை விரும்பி, யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை;
சூரன்என்று ஒருபேர் பெற்றேன்.

(பானுகோபன். 27.)

[இடுக்கண் - துன்பம்.]

உயர்ந்த மானத்தைப் பற்றிப் பேசாமல், தாம் கொண்ட கொள்கை பெரிய கொள்கைபோலவும், அது அழிந்தால் மானம் போய்விடுவதுபோலவும் பேசுகிறுன். பொல்லாதவர்கள் சிறந்த நீதியைத் தமக்கு மேற்கோள் காட்டுகிற பான்மையை இது தெரிவிக்கிறது.

அவன் மேலும் சொன்னுன்: "மைந்த, நீ அவர்களேக் கண்டு அஞ்சிவிட்டாய் போலிருக்கிறது, நான் போகிறேன் சண்டைக்கு. நீ பயப்படாதே. நீ உன்னுடைய அரண்மனேக்குப் போய்ச் சுகமாகத் தூங்கு."

அஞ்சினே போலும் மைந்த; அளியநின் இருக்கை போகித்
துஞ்சுதி ; துஞ்சல் இல்லா வரத்தினேன் தொலேவது இல்லே;
நெஞ்சிடை இரங்கி யாதும் நினேயலே ; நேர லார்மேல்
வெஞ்சமர் புரியப் போவேன்; என்றனன் வெகுளி மேலான்.

(பானுகோபன். 29.)

[அளிய - அன்பை உடைய. துஞ்சுதி - தூங்கு. துஞ்சல் இல்லா - அழிவில்லாத. நேரலார் - பகைவர்.]

பானுகோபன் கூற்று

பானுகோபன் அதைக் கேட்டான். 'இனி எத்தனே சொன்னு லும் இவனுக்கு உய்வில்லே. விதியை யாரால் வெல்ல முடியும்? விதி எப்படித் தள்ளுகிறதோ அதற்கேற்றபடி செய்வோம்' என்று எண்ணித் தன் தந்தையைப் பார்த்துச் சொல்லலானுன்.

"அப்பா, நான் சிறிதும் அறிவு இல்லாதவன். நான் சொன்ன வார்த்தைகளே நீ மனத்தில் கொள்ளக் கூடாது. தயை செய்து பொறுத்துக் கொள்ள வேண்டும். சின்னப் பிள்ளேகள் ஏதாவது சொன்னுல் முதுமை உடையவர்கள் அதைக் கண்டு சிரிப்பார்களே யல்லாமல் கோபிக்க மாட்டார்கள்".

அறிவொரு சிறிதும் இல்லேன்;
அடியனேன் மொழிந்த தீமை
இறையதும் உள்ளம் கொள்ளாது
எந்தைநீ பொறுத்தி கண்டாய்;
சிறியதோர் பருவப் பாலர்
தீமொழி புகன்ருரேனும்
முறுவல்செய் திடுவ தன்றி
முனிவரோ மூப்பின் மேலோர்?

(பானுகோபன். 31.)

[தீமை - தீய சொற்கள். இறையதும் - சிறிதளவும்.]

"ஆகவே" என்னை நீ பொறுத்தருள வேண்டும்" என்று சொல்லி அவன் போருக்குப் புறப்பட்டான்.

பானுகோபன் போர்

போர்க்களத்திலே அவனுடைய வீரச் செயலைத் தாங்கமாட்டாது பூத கணங்கள் எல்லாம் ஓட்டம் எடுத்தன. வீரவாகு தேவர் பானு கோபனை எதிர்க்க முன் வந்தார். இருவரும் மாறி மாறி வெவ்வேறு படை தொடுத்தனர். அப்போது பானுகோபன் ஒரு மந்திரத்தைச் சொல்லி, வானத்தில் தேரோடு மறைந்து போனான்.

விஞ்சை மாய வியன்முது மந்திரம்
நெஞ்ச மீது நெறிப்பட எண்ணியே
செஞ்சு டர்க்கதி ரைச்சிறை செய்திடு
வஞ்ச மைந்தன் மறைந்தனன் தேரொடும்.

(பானுகோபன். 100.)

[விஞ்சை மாய வியன்முது மந்திரம் - வித்தையாகிய மாயமான பெரிய பழைய மந்திரம்.]

அவன் மாயமாக மறைந்து போனதைக் கண்ட வீரவாகு தேவர் ஞானாஸ்திரத்தை விட்டார். அப்போது எங்கும் கப்பிக் கொண்டிருந்த இருள் மறைந்து விட்டது. அவன் செய்த மாயம் அழிவு பெற்றது. தேரும் தானுமாக வந்து நின்றான்.

பொருவரும் திறலோன் விட்ட
போதகப் படையே பானுள்
இருளினை இரியல் செய்யும்
இரவிபோல் சேற லோடும்
விரைவொடு விஞ்சை மாயம் விளிந்தது ;
வேந்தன் மைந்தன்
ஒருபெருந் தேரும் தானும் ஆகியே
உம்பர் நின்றான்.

(பானுகோபன். 106.)

[பொருவரும் - ஒப்பற்ற. போதகப் படை - ஞானாஸ்திரம். பானுள் இருளினை - பாதிராத்திரி இருட்டை. இரியல் செய்யும் - ஓடச் செய்யும். இரவிபோல் - சூரியனைப் போல. விஞ்சை மாயம் - மந்திரத்தால் உண்டான மறைப்பு. விளிந்தது - நீங்கியது.]

வீரவாகு தேவர் ஞானாஸ்திரத்தை விட்டவுடன் பானுகோபன் மாயம் அழிந்ததை இங்கே நாம் காண்கிறோம். இவை எல்லாம் ஒரு குறிப்பை உடையன. மாயம் என்பது அறியாமைக்கு மூல காரணம். அறியாமை என்பது இருள் போன்றது. அதனால் பொருளே

தெரியாமல் மறைந்து போகின்றன. பொருள் அல்லவற்றைப் பொருள் என்று நினைக்கிறோம்.

"பொருள்அல் லவற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மாணுப் பிறப்பு"

என்று வள்ளுவர் சொல்கிறார். அந்த அறியாமை ஞானத்தால் போகும். மாயையில் வல்லான் மறைய அந்த மறைப்பை ஞானஸ்திரம் அழித்தது என்று இங்கே கதை வருகிறது. அறியாமையைப் போக்க ஞானம் வருகிறது. இந்தத் தத்துவத்தை நாம் இங்கே பார்க்கிறோம்.

பானுகோபன் கண்முன்னால் தோன்றினவுடன் வீரவாகு தேவர் அவனைப் பார்த்து, "ஏ வஞ்சகனே, இனி நீ எங்கே போவாய்? இப்போதே உன்னை அடுகிறேன்" என்று சொல்லி, தம்முடைய தேரோடு வானத்திற்குச் சென்றார். இரண்டு பேர்களுக்கும் கடும் போர் நடந்தது. தேவர்கள் முதலியவர்கள் அவர்கள் செய்த கடும் போரைப் பார்த்தார்கள். இதற்குமுன் கண்டிராத அளவில் போர் நடந்து கொண்டிருந்தது. இருவரும் தம் தம் படைகளை விட்டார்கள். அதனைப் பார்த்து, "இவர்களைப் போலப் போர் செய்கிறவர்கள் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்!" என்று எல்லோரும் வியந்தார்கள்.

பானுகோபன் இறத்தல்

பானுகோபன் பிரமன் தந்த வேலை விட்டான். வீரவாகு தேவர் பல அம்புகளை விட்டு அந்த வேலைத் துண்டு துண்டாக்கினார். பிறகு வீரவாகு தேவர் வாளை எடுத்து முருகப் பெருமான் திருவடிகளை நினைந்து வீசினார். பானுகோபனுடைய வலத் தோளை வெட்டினார். பானுகோபன் உடனே தன் இடக் கையில் வாளேந்திப் பொர வந்தான். தன் வாளினால் அவனது இடத் தோளையும் அரிந்தார். அவன் தன் பாட்டியாகிய மாயை தந்த படையை ஏவ நினைந்தான். வீரவாகு தேவர் அவன் தலையையும் வெட்டி வீழ்த்தினார்.

**அன்ன காலையில் இளையவன் அறுமுகத் தமலன்
பொன்னின் சேவடி புந்தியில் உன்னியே புகழ்ந்து
மின்னு ஆனதன் வாட்படை வீசியே, விரைந்து
துன்ன லன்வலத் தோளினை வலியொடு துணித்தான்.**

துணித்த காலேயில் வலதுகை தன்னெடு தொடர்ந்த
பணித்த னிச்சுடர் வாளினை இடக்கையால் பறித்து
மணித்த சும்புகொள் மொய்ம்புடை அவுணர்கோன் மற்றும்
தனிப்ப ருஞ்சினம் தன்னெடு முயன்றனன் சமரே.

தீய வன்தனி முயற்சியை நோக்கியே திறலோன்
தூய வாள்கொடே அன்னவன் இடக்கையைத் துணிப்ப
மாயை தொல்படை விடுத்திடு வேன்என மதித்தான்;
ஆய காலேயில் அறிஞனும் அவன்தலே அறுத்தான்.

(பானுகோபன். *141, 142, 143.*)

[இளேயவன் - வீரவாகு. மின்னு ஆன - மின்னலேப் போன்றுள்ள. துன்னலன் - பகைவனுகிய பானுகோபனுடைய. துணித்தான் - வெட்டினன். பணி - ஏவுதலேப் பெற்ற. மணித்தசும்புகொள் மொய்ம்புடை - மாணிக்கத்தாலான குடத்தைப் போன்ற தோளே உடைய ; வன்மைக்கு உவமை.]

வீரவாகு முருகனிடம் செல்லல்

"நாம் செய்த சபதம் இப்போது நிறைவேறி விட்டது. மாயையினுல் நம்மைப் பல வகையிலும் அலேத்த பானுகோபனே அழித்துவிட்டோம். இனி எம்பெருமான் திருவடியைச் சென்று வணங்குவோம்" என்று வீரவாகு தேவர் எண்ணி, முருகப் பெருமானேத் தரிசனம் பண்ணப் புறப்பட்டார்.

ஆன தொல்பெரு மாயையால் நம்மைமுன் அலேத்த
பானு கோபனே அட்டனம்; பகர்ந்தசூ ளுறவு
தானும் முற்றிய தால்; இனி எம்பிரான் தன்முன்
சேனே தன்னெடு மேவுதும்; செல்லுதிர் என்முன்.

(பானுகோபன். *148.*)

[அலேத்த - துன்புறுத்திய. அட்டனம் - அழித்தோம். சூளுறவு - சபதம். செல்லுதிர் - வாருங்கள்.]

சூரன் ஆணவத்தின் வடிவம். அகங்காரம், மமகாரம் என்று இரண்டு. அகங்காரம் என்பது நான் என்பது. முதலில் நான் என்பது தோன்றி, பிறகு எனது என்பது வரும். நான் என்பது அடிமரம் போன்றது. எனது என்பது கிளேகளேப்போன்றது. நான் என்பது தோன்றியவுடன் எனது உடம்பு, என் தந்தை, என் மனேவி, எனது வீடு, என் பிள்ளேகள் என்கிற மமகாரம் அளவின்றி விரிந்துகொண்டே போகிறது. மமகாரம் வளர வளர மனிதன் பாசவலேயில் நன்ருகச் சிக்கிக் கொள்வான்.

அழியும்போது இந்த முறை மாருக இருக்கும். மமகாரம் போய்க் கடைசியில் அகங்காரம் போகும்.

இங்கே சூரபன்மன் அகங்கார சொரூபம். அவனுடைய தம்பி மார்கள், பிள்ளைமார்கள் எல்லாம் மமகாரங்கள். யான், எனது என்பதை அகப்பற்று, புறப்பற்று என்று சொல்வார்கள். இந்த இரண்டும் அழிந்தால்தான் நலன் உண்டாகும்.

முருகப் பெருமான் அவன் மமகாரங்களை எல்லாம் அழித்துக் கொண்டு வருகிருர். பின்பு அகங்காரமாகிய அவனை அழிக்கப் போகிருர்.

"உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீஅலையோ?
எல்லாம்அற என்னை இழந்தநலம்
சொல்லாய்முரு காசுர பூபதியே"

(கந்தர் அநுபூதி)

என்று சொல்வார் **அருணகிரியார்**. எல்லாம் என்பதற்கு எனது என்று சொல்கிற மமகாரம் யாவும் என்பது பொருள். 'என்னை இழந்த நலம்' என்பது அகங்காரத்தை விடுவதைச் சொல்வது.

"யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று **வள்ளுவர்** சொல்கிருர். சூரனுடைய மமகாரங்களில் ஒன்ருகிய பானுகோபன் இப்போது அழிந்தான்.

வீரவாகு தேவர் தம்முடைய படைகளாகிய துணைவர்களோடு பாசறைக்குச் சென்று முருகப் பெருமான் திருவடிகளைப் பல முறை வணங்கினர்.

சோதி நீடிய பாசறை புகுந்திடு தூயோன்
பூதர் தம்மொடும் துணைவர்கள் தம்மொடும் போந்து
காத லாகியே அறுமுகத் தையனைக் கண்டு
பாத பங்கயம் தன்னிடைப் பன்முறை பணிந்தான்.

(பானுகோபன். 151.)

செய்வதாகச் சொன்ன காரியத்தைச் செய்து முடித்தவர் அல்லவா வீரவாகு தேவர்? "செய்வினை முடித்த செம்மல் உள்ளம்" என்று சங்ககால நூல்களில் வரும். அப்படி, தாம்

சொன்ன சபதத்தை நிறைவேற்றி வந்த வீரவாகு தேவரிடம் அகங்காரம் எதுவும் இல்லை. எல்லாம் முருகப் பெருமான் திருவருளால் நடந்தன என்ற எண்ணத்தோடு அவன் திருவடியை வணங்கினர். அப்போது முருகப் பெருமான் அவரைப் பார்த்துப் பேசினன்.

"சூரன் மகனேடு போர் செய்து மிகவும் நீ அல்லல்பட்டாய். எவ்வளவோ ஆற்றலுள்ள அவனை நீ மிகவும் வருந்தி அழித் திருக்கிருய். அதனுல் நாம் திருவுள்ளம் மகிழ்ந்தோம். உனக்கு என்ன வேண்டும், கேள்" என மிக்க மகிழ்ச்சியோடு முருகன் சொன்னன்.

பரிந்து பன்முறை வணங்கியே எழுதலும், பகவன்
தெரிந்து நோக்கிநீ சூர்மக னேடுபோர் செய்து
வருந்தி ஆங்கவற் செற்றனை; ஆதலின் மகிழ்ந்தாம்;
விரைந்து கேண்மதி; நல்குதும் வேண்டுவது என்ருன்.

(பானுகோபன். 152.)

[பகவன் - முருகன். செற்றனை - அழித்தாய். கேண்மதி - கேள்.]

வீரவாகு வேண்டுதல்

வீரவாகு தேவர் என்ன கேட்டிருப்பார்? நாமாக இருந்தால், பெரிய பதவி வேண்டும், பணம் வேண்டுமென்று கேட்டிருப்போம். அவர் அவ்வாறு கேட்கவில்லை. "எம்பெருமானே, எனக்குப் பெரிய பதவிகள் வேண்டாம். குபேரனுடைய வாழ்க்கை எனக்குத் தேவையில்லை. இந்திரன் அரசினைக் கனவிலும் விரும்பமாட்டேன். திருமால் பதவியும், பிரமன் பதவியும் வேண்டேன்." கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிக் கொண்டே வந்தார். "பின்னே என்ன வேண்டுமென்ருல், உன் பதத்தில் என்றும் மாருத அன்பை வேண்டு கின்றேன் தமியேன்" என்று சொன்னர்.

கோலம் நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்;
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்;
மால்அ யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்;
சால நின்பதத்து அன்பையே வேண்டுவன் தமியேன்.

(பானுகோபன். 154.)

[கோலம் - ஆடம்பரம். நிதிபதி - குபேரன். குறியேன் - அடைய எண்ணமாட் டேன்' வெஃகேன் - விரும்பமாட்டேன். பதத்தையும் - பதவியையும்.]

மனிதர்கள் முதலில் பணத்தை விரும்புவார்கள். பணம் இருந்தால் பதவியை விரும்புவார்கள். அதிலும் கவனர் பதவியை விரும்புவார்கள். அது கிடைத்துவிட்டால் ராஷ்டிரபதி பதவியை விரும்புவார்கள். மனிதனுக்கு வர வர ஆசை மிகுதியாகும். ஆசைப்படுகிறவன் ஆசைப்படும் பொருளை அடைந்துவிட்டால், அதற்குமேலே ஆசை தோன்ருது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் ஆசையின் தன்மை அத்தகையது அன்று. ஆசையைப் பொருளால் அழித்துவிடுவது என்பது, நெருப்பை நெய்யினாலே அவித்து விடலாம் என்று நினைப்பது போன்றது என்று வள்ளுவர் சொல்கிருர்.

ஆகவே, உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டவுடன் வீரவாகு தேவர், "எனக்குப் பணம் வேண்டியதில்லை. பணத்திற்கு அதிபதியாகிய குபேர பதவி வேண்டாம். அதற்குமேல் பெரிய பதவி இந்திர பதவி ; அந்த அரசாட்சியையும் வேண்டேன். அதை விடப் பெரிய பதவி பிரமபதவி, திருமால் பதவி ; அவையும் வேண்டாம். வேண்டுவது உன் திருவடிக்கண் நிலைத்து இருக்கும் அன்புதான்" என்று சொன்னுர்.

அடியார் இயல்பு

சேக்கிழார் **பெரிய புராணத்தில்** அடியார்களின் தன்மையைச் சுருக்கமாகத் திருக்கூட்டச் சிறப்பு என்ற தலைப்பில் சொல்கிருர். தொண்டர்கள் எப்படி இருக்கிருர்கள்? அவர்களிடத்திலுள்ள ஐசுவர்யத்திற்குச் சமானம் வேறு எதுவும் இல்லை. உலகத்திலுள்ள பணத்திற்கு லாப நஷ்டம் உண்டு ; கேடு, ஆக்கம் உண்டு. ஆனால் அவர்களிடத்திலுள்ள ஐசுவர்யத்திற்குக் கேடும் ஆக்கமும் இல்லை.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் ;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்."

ஓட்டையும், பொன்னையும் ஒன்ருகவேதான் பார்ப்பார்கள் என்கிருர் சேக்கிழார். ஓடும் செம்பொன்னும் என்பதற்குப் பதில் பொன்னும் ஓடும் என்று மாற்றிப் போட்டால் பொருள் வேருகிவிடும். ஓட்டைப் பார்த்து அது பயன்படாது என்று ஒதுக்குவது போலப் பொன்னைப் பார்த்து அதையும் ஒதுக்குவார்களாம்.

'பொன்னையும் ஓட்டையும் ஒக்கவே நோக்குவார்' என்றால் பொன் பயன்படும் என்று சேமித்துக் கொள்வதைப் போலவே, ஓட்டையும் எதற்காவது பயன்படும் என்று சேமித்துக் கொள்வார்கள் என்று பொருள்பட்டு விடும். ஆகவேதான் முன்னால் ஓட்டைச் சொல்லி, பின் செம்பொன்னைச் சொன்னார்

"கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்று பாடுகிறார். மோட்ச சாம்ராஜ்யம் கூட அவர்களுக்கு வேண்டியதில்லையாம். இறைவனிடத்தில் அன்பு ஒன்றே போதும்.

பரிபாடலில் இந்தக் கருத்து வருகிறது.

"துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்
இன்னும் இன்னும் அவை ஆகுக."

'உன்னை மீட்டும் மீட்டும் அடைந்து வழிபடுவது, அதற்கு அப்பால் ஒரு பயனைக் குறித்தன்று; மீட்டும் மீட்டும் இப்படியே வழிபட்டுக் கொண்டே இருக்க வேண்டும்' என்று புலவர் முருகனைப் பார்த்து வேண்டுகிறார்.

மிக உயர்ந்த பக்குவம் உடைய தொண்டர்கள் வேறு எந்தப் பதவியையும் வேண்டமாட்டார்கள். இறைவனுடைய அடியாராக இருந்து தொண்டு செய்யவேண்டுமென்றே அவர்கள் சொல்வார்கள்.

"எம்பெருமானே, உன்னுடைய திருவடிக்கு அன்பு கொண்டு வாழ்வது ஒன்று முத்தியைவிட அரிது. எல்லோருக்கும் கிடைப்பதற்கு அரியது; தவம் செய்கிறவர்கள் கூடப் பெறுவதற்கு அரியது. சிறியேன் உய்ந்திடும் வண்ணம் அந்த அன்பை எனக்கு அருள் செய்திட வேண்டும்" என்று வீரவாகு தேவர் கேட்டுக்கொண்டார்.

**அந்த நல்வரம் முத்தியின் அரியதொன்று; அதனைச்
சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர்; சிறியேன்
உய்ந்தி டும்வகை அருள்செய வேண்டுமென்று உரைப்ப
எந்தை கந்தவேள் உனக்கது புரிந்தனம் என்றான்.**

(பானுகோபன். 155.)

[முத்தியின் - முத்தியை விட.]

முருகப் பெருமான், "அப்படியே ஆகுக" என்றான்.

சூரன் புலம்பல்

தூதுவர்கள் வீரமகேந்திரபுரத்திலுள்ள சூரபன்மனிடம் சென்று, "உன் மகன், வீரவாகு தேவரால் முடிந்துவிட்டான்" என்று சொன்னார்கள். அவன் பலபடியாகப் புலம்பினான். அந்தப் புலம்பல் மிக விரிவாக இருக்கும்; சுவையாக இருக்கும்.

"எத்தனையோ பிள்ளைகள் மாய்ந்தார்கள். மற்றவர்கள் மாய்ந்து போனாலும் நீ எனக்குப் பெரிய பலம், துணை என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இப்போது என்னைத் தனியே வைத்து நீயும் போய்விட்டாயே! இனிமேல் எனக்கு உயிர் வாழ்கின்ற திறன் உண்டா?"

வன்னச் சிறுவர்பலர் மாய்ந்தார்; அவர்மாய்ந்தும்
உன்னைத் துணையென் றுளங்கொண் டிருந்தனனால்;
என்னைத் தனியேவைத்து எந்தையும்ஓ குற்றனையால்;
பின்னைத் தமியேன் பிழைக்கும் படிஉண்டோ?

(பானுகோபன். 165.)

"பகைவர்களைச் சிறைவிட்டால் நாம் பிழைத்துவிடலாம் என்று முன்பு சொன்னாய். நான் நீ சொன்ன பேச்சைக் கேளாமல் உன்னைத் தோற்றுவிட்டேன். இனிமேல் அதனை எண்ணி என்ன பயன்? எல்லாம் அவரவர்கள் செய்த வினையின் படியே வருகிறது" என்று நொந்து கொண்டான் சூரபன்மன்.

ஒன்னார் சிறையைவிடின் உய்வுண்டாம் என்றுமுனம்
சொன்னாய்; அதுவும் இகழ்ந்துன்னைத் தோற்றனனால்;
என்னாம் இனிஅதனை எண்ணுவது? யாவருக்கும்
தன்னால் வராத வினையுளதோ தக்கோனே.

(பானுகோபன். 166.)

[ஒன்னார் - பகைவர்களுடைய. உய்வு - பிழைத்தல்.]

'தன்னால் வராத வினையுளதோ' என்று சூரபன்மனுக்குக் கொஞ்சம் அறிவு வருகிறது. ஆயினும் அந்த அறிவு நெடுநேரம் நிற்கவில்லை.

பின்பு சூர்பன்மனுடைய மனைவி பதுமகோமளை வந்தாள். தன் மகன் இறந்து கிடப்பதைப் பார்த்தாள். "நான் அப்பொழுதே சொன்னேன். தேவர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாது, அவர்களை

விட்டுவிட வேண்டுமென்று சொன்னேன். அதைச் சிறிதேனும் கேளாமல் இருந்தான் மன்னன். இப்போது உன்னைத் தோற்று விட்டானே. அவனும் இனிமேல் உயிர் வாழவா போகிறான்? என்ன செய்வேன்!'' என்று மிகவும் வருந்தினாள்.

நையா நிற்கும் தேவர் தமக்கு நனிதுன்பம்
செய்யா நிற்றல் நன்றல என்றேன்; அதுதேராது
ஐயா நின்னைத் தோற்றனன் மன்னன்; அவனுந்தான்
உய்வான் கொல்லோ, தன்னுயிர் தானும் ஒழியாதே.

(பானுகோபன். 204.)

[நையா நிற்கும் - வருந்தும்.]

அப்போது சூரபன்மன், ''இவன் உடலை ஓரிடத்தில் வையுங்கள். ஓர் யாகம் செய்து மறுபடியும் என் மகனை எழுப்பு வேன்'' என்று சொன்னான்.

சிங்கமுகாசுரன் வதை

சூரபன்மன் ஆசுரம் என்ற இடத்தில் இருந்த சிங்கமுகனுக்கு ஆள் அனுப்பி வரும்படி சொன்னான். அப்படியே சிங்கமுகனும் தன்னுடைய இடத்திலிருந்து வீரமகேந்திரபுரம் வந்தான். அவன் வரும்போது தேவர்கள் எல்லாம் அவன் தோற்றத்தைக் கண்டு ஓடினார்கள். சூரபன்மன் அவனைப் பார்த்து, "நீ போய்ப் போர் செய்வாயாக" என்று சொன்னான்.

சிங்கமுகன் சூரபன்மனிடம் கூறுதல்

அப்போது சிங்கமுகாசுரன், அறிவுரை கூறுவது போன்று, "அண்ணா, முருகப் பெருமான் தனக்கு மூலமும் முடிவும் இல்லா தவன். அவனைக் குழந்தை என்று நீ நினைக்கிறாய். எல்லாம் அழிந்து விடும் என்பதை நீ பார்க்கவில்லை. நான் முன்பே எத்தனையோ எடுத்துச் சொன்னேன். அவ்வளவும் உனக்கு விஷம் போல ஆகிவிட்டன. விதிதான் எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கும். அந்த விதியை யாரால்தான் வெல்ல முடியும்?"

மூலமும் முடிவும்இல் லாத மூர்த்தியைப்
பாலன்என்று எண்ணினை ; படுவது ஓர்ந்திலை ;
ஆலம தானதே ஐய என்மொழி ;
மேலையின் விதியையார் வெல்லும் நீரினார் ?

(சிங்கமுகாசுரன். 23.)

[படுவது - மேல் விளைவதை. மேலையின் விதி - முன்பே வரையறுக்கப்பட்ட விதி.]

"எனக்கு நீ உத்தரவிட்டபடி நான் போருக்குப் போகிறேன். முருகப் பெருமானை நிச்சயமாக வெல்ல முடியாது. அவனை வென்றால் நான் உன்னை வந்து பார்ப்பேன். அது இல்லையேல் நிச்சயமாக எல்லோரும் அழிந்து போவார்கள். உன் மனத்திற்குத் தோன் றியதை நீ செய்வாயாக".

கந்தனும் ஒருவனைக் கடக்கப் பெற்றிடின்
வந்துனைக் காண்பனால் ; மற்று அது இல்லையேல்
அந்தமது அடைவரால் ஆரும் ; ஐயநீ
புந்தியின் நினைந்தன புரிதி யால்என்றான்.

(சிங்கமுகாசுரன். 25.)

[கடக்கப் பெற்றிடின் - வெல்லும் செயல் கைகூடினால்.]

இவ்வாறு சொல்லிப் போருக்குப் புறப்பட்டான்.

சிங்கமுகன் செய்த கடும் போர்

சிங்கமுகாசுரன் போர்க்களத்திற்கு வந்தவுடன் அமரர்கள் முருகனிடம் வந்து அவன் வந்ததைக் கூறினர்கள். அப்போது வீரவாகு தம்மைப் போர்க்களத்திற்கு அனுப்பும்படி வேண்டினர். அதைக் கண்டு முருகன், "இறந்து போவதற்காகவே வந்திருக்கிற பகைவனேடு போர் செய்யவேண்டுமென்று விரும்பினய். இங்குள்ள படைகளுடன் நீயே போருக்குச் செல்வாயாக" என்ருன்.

ஆண்டகை முரலொடு அம்மொழி கேளா
மாண்டிட வந்திடும் மாற்றலன் வெம்போர்
வேண்டினே ; நன்று ; விடுத்தனம் ; முந்நீ
ஈண்டுள தானையொடு ஏகுதி என்ருன்.

(சிங்கமுகாசுரன். 68.)

[ஆண்டகை - முருகன். முரலொடு - புன்னகையோடு. மாற்றலன் - பகைவன்.]

வீரவாகு ஒன்பது லட்சம் வீரர்களுடன் புறப்பட்டார். போர் மூண்டது.

சிங்கமுகாசுரனுக்கு ஆயிரம் தலைகள். பல விதமான மாயங்களில் வல்லவன் அவன். அவனுக்கு மிஞ்சி வேறு யாரும் இல்லை. இரண்டு பேர்களும் கடும்போர் செய்தார்கள். சிங்கமுகாசுரனின் முன்னணிப்படைகள் அழிந்தன. தசமுகன் என்பவன் முன் வந்து சிங்கனை எதிர்த்தான். சிங்கன் என்னும் வீரன் தசமுகனைக் கொன்ருன். தன் பக்கத்தில் யாவரும் தோற்பது கண்டு சிங்கமுகனே முன்னணிக்கு வந்தான். பூதர்கள் பெரிய பெரிய மலைகளை எடுத்து அவனைத் தாக்கினர்கள். அவைகள் எல்லாம் சிங்கமுகன் விட்ட அம்புகளினல் பொடிப்பொடி யாயின. சிங்கமுகன் தன் கையிலே அகப்பட்ட பூதர்களைப் பற்றிக் கடலிலே வீசினன். பலரைப் பற்றி மலையிலே வீசினன். சிலரைச் சூரிய மண்டலத்திற்குப் போகும்படி வீசினன். அவன் செய்த போரில் வீரர்கள் லட்சத்து எண்மர்களும் தோற்றுப் போனர்கள்.

பார்மேல் எற்றும் சிற்சிலர் தம்மைப் பகைவிண்ணேர்
ஊர்மேல் எற்றும் சிற்சிலர் தம்மை ; உயர்பானுத்
தேர்மேல் எற்றும் சிற்சிலர் தம்மைத் திரைசேர்முந்
நீர்மேல் எற்றும் ; சிற்சிலர் தம்மை நெடிதோச்சும்.

(சிங்கமுகாசுரன். 138.)

[எற்றும் - மோதுவான். பானு - சூரியனுடைய. முந்நீர் - கடல். நெடிது ஓச்சும் - உயரே தூக்கி எறிவான்.]

சிங்கமுகாசுரன் தன் தேர்மேல் ஏறிக்கொண்டு போர் செய்தான். அதை வீரவாகு தேவர் கண்டார். மிகவும் கோபத்துடன் அவனை எதிர்த்தார். பல அவுணர்கள் மடிந்தார்கள். சிங்கமுகாசுரனின் புதல்வர்கள் நூறு பேர் வந்து எதிர்த்தார்கள்.

வளைந்தனர், வீரன் தோளில் மார்பினில்
கரத்தில் மொய்ம்பில்
களந்தனில் சென்னி தன்னில் கருதினர்
இலக்கம் நாடிக்
கிளர்ந்திடு நாந்த கத்தால் கிட்டினர்
எறித லோடும்
உளம்நளர் வில்லோன், மேனிக்கு உற்றில
சிறிதும் ஊறு.

(சிங்கமுகாசுரன். 197.)

[வீரன் - வீரவாகு. மொய்ம்பில் - தோளில். களந்தனில் - கழுத்தில். இலக்கம் - குறி. நாந்தகம் - வாள். ஊறு - துன்பம்.]

அவர்கள் வீரவாகு தேவரின் ஒவ்வோர் அங்கத்திலும் அம்புகளை எடுத்து விட்டார்கள். அவற்றால் வீரவாகு தேவருக்குச் சிறிதும் துன்பம் உண்டாகவில்லை. அவர் சிங்கமுகாசுரன் பிள்ளைகள் நூறு பேரையும் அழித்தார். அப்போது சிங்கமுகன் சினந்து வந்து எதிர்த்தான்.

சிங்கமுகன் வினவுதல்

வீரவாகு தேவரைப் பார்த்து அவன் பேசத் தொடங்கினான். "சிவபெருமான் தந்த மைந்தனாகிய முருகப் பெருமான் நீ அல்ல; அவனுக்கு ஆறுமுகம் உண்டு. லட்சம் வீரர்கள் என்று சொல்கிறார்களே" அவர்களுக்கு எல்லாம் நீ தலைவனா? அல்லது எட்டுப்பேர் இறந்து போனார்களே, அவர்களுள் ஒருவனா? முன்பு எங்கள் ஊருக்கு வந்த தூதன் நீதானோ? நீ யார்?" என்று கேட்டான்.

ஆதிதந் தருளும் மைந்தன் அறுமுகன்
அவன்நீ அல்லை;
ஏதிலா இலக்கர் என்றே இசைத்திடு
வோர்கள் தம்முள்
நாதனோ? எண்மர் தம்முள் ஒருவனோ?
நம்மூர் வந்த
தூதனோ? இனையர் தம்முள் யாரைநீ
சொல்லு கென்றான்.

(சிங்கமுகாசுரன். 207.)

[ஆதி - சிவ பெருமான். ஏது - தீங்கு. யாரை : ஐ, சாரியை.]

அதற்கு வீரவாகு தேவர் விடைசொல்லத் தொடங்கினார்.

வீரவாகு தேவர் விடை

" நீலகண்டப் பெருமான் தந்த ஆறுமுகனுக்கு நான் அடியேன். சில காலத்திற்கு முன் உங்கள் ஊரையெல்லாம் கொளுத்தியவனும், தூதனாக வந்து திரும்பியவனும் நான்தான். கணக்கில்லாத உங்களைச் சேர்ந்தவர்களை எல்லாம் அழித்துவிட்டுப் போவதற்காக வந்திருக்கிறேன். என் பெயர் வீரவாகு" என்று சொன்னார்.

அல்லுறழ் கண்டன் தந்த அறுமுகற்கு
அடியன் ஆனேன் ;
தொல்லையும் மூதூர் அட்டுத் தூதனும்
ஆகி மீண்டேன் ;
எல்லையில் நுமரை எல்லாம் ஈண்டொரு
கணத்தின் அட்டு
வெல்லுவது அமைந்து நின்றேன் ; வீரவா
கென்பேர் என்றான்.

(சிங்கமுகாசுரன். 208.)

[அல்லுறழ் கண்டன் - நீல கண்டப் பெருமான். அட்டு - அழித்து. நுமரை - உங்களைச் சேர்ந்தவர்களை.]

போர் தொடர்தல்

சிங்கமுகனை அழிக்க வீரவாகு விட்ட பல விதமான ஆயுதங்கள் அழிந்து போயின. சிங்கமுகனுடைய வல்லமையைக் கண்டு வீரவாகு தேவர் ஆச்சரியப்பட்டார். 'நாம் விடுகின்ற அம்புகள் எல்லாம் இவனை ஒன்றும் செய்யவில்லையே! அவற்றால் இவனுக்கு எந்த விதமான காயமும் உண்டாக வில்லை. நாம் எவ்வளவு சிறப்பான ஆயுதத்தை விட்டாலும் இவன் அழிய வில்லை. இவன் எம்பெருமான் குமாரநாதனுடைய கையிலிருந்து விடுகின்ற ஆயுதத்தினால் தான் இறப்பான்' என்று எண்ணினர்.

விடலுறு பகழியால் மெய்யில் ஊறு இலான் ;
அடலுறு படையினும் அழிவு பெற்றிலான் ;
கொடியதோர் அரிமுகன், குமரன் செங்கையில்
படைகளின் அன்றியே படுகி லான்அரோ.

(சிங்கமுகன். 235.)

[பகழியால் - அம்புகளால். ஊறு - காயம். படை - பிற ஆயுதங்கள். அரிமுகன் - சிங்கமுகாசுரன். படுகிலான் அழியமாட்டான்.]

மறுபடியும் பல நேரம் போர் செய்து வீரவாகு தேவர் சிங்கமுகனது வில்லை அறுத்தார். வில்லிழந்த நிலையில் சிங்கமுகன் இருந்தான். வில் இழந்த போதே அவன் மானமும் போய்விட்டது.

வில்இ ழந்தனன், மானமும் இழந்தனன், வீரச்
சொல்இ ழந்தனன், பெருமிதம் இழந்தனன், தொல்சீர்
எல்இ ழந்தனன், பெருமையும் இழந்தனன், இலங்கும்
பலஇ ழந்திடு விடஅரா ஒத்தனன் பதகன்.

(சிங்கமுகாசுரன். 277.)

[பெருமிதம் - பெருமை. எல் - ஒளி. பதகன் - பாவி.]

உடனே சிங்கமுகாசுரன் தன் கையில் இருந்த பாசத்தை எடுத்து வீசினன். அந்தப் பாசம் எல்லோரையும் கட்டி, மயங்கச் செய்தது. வீரவாகு தேவரும் லட்சத்து ஒன்பது வீரர்களும் மயங்கிப் போனர்கள். அவ்வளவு பேரையும் கட்டித் தூக்கிக்கொண்டு போய் உதயகிரியில் கொண்டுபோய்ப் போட்டது. அங்கிருந்து அவர்கள் வெளியேறிவிடாமல் காவலும் காத்தது.

கதிபடர் கின்ற காலிற் கருத்தினிற் கடிதின் ஏகித்
துதியுறு திருவின் கேள்வன் துயில்புரி கடலில் துஞ்சும்
உதயமால் வரையின் எய்தி, உயிர்ப்புஇலாது உறங்கு கின்ற
மதவலி வீரர் தம்மை வைத்துடன் இருந்தது அன்றே.

(சிங்கமுகாசுரன். 290.)

[கதி - வேகம். காலின் - காற்றைவிட. கடிதின் - விரைவில். திருவின் கேள்வன் - திருமால். கடலில் - கடலைப்போல. உயிர்ப்பு - மூச்சு. மதவலி - மிக்க வலிமை,]

முருகன் போர்க்களம் வருதல்

இப்படிச் சிங்கமுகாசுரன் விட்ட பாசத்தினல் வீரவாகு தேவர் முதலியவர்கள் மயங்கியதையும். உதயகிரியில் போய்க் கிடப்பதையும் சில தூதர்கள் முருகப் பெருமானிடம் போய் அறிவித்தார்கள். அப்போது முருகப் பெருமான் ஆயுதங்களே ஏந்திக் கொண்டு தானே போர்க்களத்திற்கு வந்து சேர்ந்தான். முருகப் பெருமான் வரும்போது திருச்சின்னங்கள் அவன் பெருமையை எல்லாம் சொல்லி ஊதின.

மூவர்கள் முதல்வன் வந்தான், முக்கணன்
குமரன் வந்தான் ;
மேவலர் மடங்கல் வந்தான் ; வேற்படை
வீரன் வந்தான் ;
ஏவரும் தெரிதல் தேற்ருது இருந்திடும்
ஒருவன் வந்தான் ;
தேவர்கள் தேவன் வந்தான், என்றன
சின்னம் எல்லாம்.

(சிங்கமுகாசுரன். 303.)

[மேவலர் மடங்கல் - பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன். தெரிதல் தேற்ருது - அறிய முடியாமல்.]

சிங்கமுகாசுரனேடு போரிட வருகின்றவன் ஆகையால் 'மேவலர் மடங்கல் வந்தான்' என்று முருகனையே சிங்கமாகச் சின்னங்கள் கூறின.

சிங்கமுகன் மாயையால் ஒரு பெரிய வடிவம் எடுத்து வந்தான். பூத கணங்களைத் தன் வாயிலிட்டு விழுங்கினுன். இங்கே நடக்கிற செய்திகளைத் தூதர்கள் போய்ச் சூரனிடம் சொல்ல, அவன் சிங்க முகனுக்குத் துணையாக வேறு படைகளையும் அனுப்பி விட்டு, அரண்மனைக்கு நடுவில் உள்ள கோபுரத்தின்மேல் ஏறி நின்று போர்க் களத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முருகப் பெருமான் சிங்கமுகனுக்கு முன்னுல் வந்து நாணெலி செய்தான். அந்த நாணெலி கேட்ட அவுணர்கள் தம் கைகளி லிருந்து ஆயுதங்கள் நழுவக் கீழே விழ்ந்தார்கள். யானைகளும், குதிரைகளும் கவிழ்ந்து வீழ்ந்தன. தேர்கள் உடைந்தன.

அப்பெரு நாணின் ஓதை அரிமுகன்
　　தானை மன்னர்
செப்புறு கேள்வி ஆற்றும் செவிப்புலம்
　　புகுத லோடும்
கைப்படை சிந்தி வீழ்ந்தார் ; கவிழ்ந்தன
　　களிறும் மாவும் ;
ஒப்பில்சீர் உருளித் தேர்கள் ஒல்லென
　　உடைந்த அன்றே.

(சிங்கமுகாசுரன். 345.)

[ஓதை - ஓசை. அரிமுகன் - சிங்கமுகாசுரனுடைய. செவிப்புலம் - காதில். மா - குதிரை. உருளி - சக்கரம்.]

சிங்கமுகன் கூற்று

அப்போது முருகனைப் பார்த்துச் சிங்கமுகன் பேசலானுன். "நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் மைந்தனே, நான் ஒன்று சொல்கிறேன். அதைக் கவனமாகக் கேள். பகைவர்களது பலத்தை மாற்றித் தோல்வியுறச் செய்வது அரசர்களது கடமை. எங்களுக்குப் பகைவர்களாகிய தேவர்களை, எங்கள் அரசு நிலை பெறத் தண்டித் தோம். அது முறையான காரியம். நீ தேவர்களைச் சேர்ந்தவன் அல்லன். அப்படி இருக்க ஏன் நீ போருக்காக வந்தாய்? நீ எங்களுக்குப் பகைவன் அல்லவே?" என்று சிங்கமுகாசுரன் கேட்டான்.

கண்ணுதல் முதல்வன் மைந்த, கழறுவன்
ஒன்று கேண்மோ :
எண்ணலர் வலியை மாற்றல் இறையவர்
கடனே ; அற்றால்
விண்ணவர் தமைத்தண் டித்தோம் ; அவர்க்குளும்
அல்லை ; வேறோர்
நண்ணலன் எமருக்கு இல்லை ; நடந்ததுஎன்
அமருக்கு என்றான்.

(சிங்கமுகாசுரன். 348.)

[கேண்மோ - கேள். எண்ணலர் - பகைவருடைய. இறையவர் - அரசர்களுடைய. அற்றால் - அதனால். நண்ணலன் - பகைவன்.]

முருகன் மொழிதல்

"எளியவரை வலியவர் அடக்கினால், வலியவரைத் தெய்வம் அடக்கும் என்ற பழமொழியை நீ கேட்டதில்லையா? வலியவர்களாகிய நீங்கள் எளியவர்களாகிய தேவர்களுக்குத் துன்பம் செய்தீர்கள். அதற்கேற்ற தண்டனையை உங்களுக்குக் கொடுத்து, எல்லா அண்டங்களையும் ஆட்சிபுரிய வந்திருக்கிறோம். தேவர்களுக்கு நீங்கள் இட்ட சிறையினை நீக்க வந்தோம். அதற்காகத்தான் சண்டை" என்று முருகப் பெருமான் சொன்னான்.

உறைதரும் அளியன் தன்னை வலியவன்
ஒறுக்கின் நாடி
முறைகெழு தண்டம் ஆற்றி அண்டங்கள்
முழுவ துக்கும்
இறையினைப் புரிதும் ; அற்றால் நீவிர்கள்
இமையோர்க்கு இட்ட
சிறையினை அகற்ற வந்தேம் ; செருவும்அத்
திறத்துக் கென்றான்.

(சிங்கமுகாசுரன். 349.)

[அளியன் - இரங்கத்தக்க பலவீனன். ஒறுக்கின் - துன்புறுத்தினால். தண்டம் - தண்டனை. இறை - அரசாட்சி. செருவும் - இந்தப் போரும்.]

"எல்லா அண்டங்களுக்கும் நம்முடைய ஆதிக்கம் செல்லும். ஆகையால் நாம் தேவர்களுடைய துன்பத்தை நீக்க வந்தோம்" என்று ஆண்டவன் சொன்னான்,

சிங்கமுகன் கூற்று

அதற்குச் சிங்கமுகாசுரன் சொல்லலானான்; "இந்திரனுடைய குமாரனையும், தேவர்களையும் கொண்டுபோய் வைத்திருக்கும். சிறையிலிருந்து அவர்களை நீக்குவது என்பது சந்திரனைத் தலையில் தரித்த சிவபெருமானாலேயே முடியாது. அப்படி இருக்கக் குழந்தையாகிய நீ எப்படி அந்தக் காரியத்தைச் செய்ய முடியும்?"

இந்திர குமரன் தன்னை இமையவர்
குழுவை வாரி
வெந்தளை மூழ்கு வித்து விட்டிய
சிறையை நீக்கல்
சந்திர மௌலி அண்ணல் தன்னினும்
முடியாது என்றால்
மைந்தன்நீ ஒருவன் கொல்லோ முடித்திட
வல்லை? மன்னே.

(சிங்கமுகாசுரன். 352.)

[இந்திரகுமரன் - சயந்தன். தளை - விலங்கு, விட்டிய - விழச்செய்த. வல்லை - வலிமையை உடையாய்.]

"இங்கே வந்து போர் செய்த உன்னுடைய கட்சி வீரர்கள் எல்லோரும் மாய்ந்து போனார்கள். அவர்கள் எல்லாம் உதய கிரியில் போய்க் கிடக்கிறார்கள். இங்கே மிஞ்சி இருந்தவர்கள் என் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். நீ மாத்திரம் தனியாக நிற்கிறாய். இப்படி எல்லோரும் போன பிறகுகூடப் போர் செய்வோம் என்று எதிர்க்கிறாயே. உன்னுடைய ஊக்கம் மிக நன்றாக இருக்கிறது!" என்று ஏசிப் பேசினான்.

பொருதிறல் வயவர் யாரும் பூதரில்
பலரும் மாய்ந்தே
எரிகதிர் உதயம் புக்கார்; ஏனையோர்
நீயும் காண
விரைவில்என் அகடு சேர்ந்து விளிந்தனர்;
தமியன் நின்றாய்;
செருவினை இழைத்தும் என்னும் ஊக்கமே
சீரி தம்மா!

(சிங்கமுகாசுரன். 355.)

[வயவர் - வீரர். உதயம் - உதயகிரி. அகடு - வயிறு. விளிந்தனர் - இறந்தார். தமியன் - தனியனாக. இழைத்தும் - செய்வோம்.]

சிங்கமுகனும் முருகனும் பொருதல்

அப்போது முருகப் பெருமான் ஓர் அம்பு விட, அது சிங்கமுகா சுரன் மார்பை ஊடுருவிச் சென்றது. ஆண்டவன் எய்த அம்பினல் அந்த அரக்கனது மார்பிலும், முதுகிலும் துளைகள் உண்டாயின. அந்தத் துவாரங்களின் வழியே, சிங்கமுகாசுரனின் வயிற்றுக்குள் இருந்த பூத கணங்கள் எல்லாம் புற்றிலிருந்து வெளியில் வருகிற கறையான்களைப் போல வெளி வந்துவிட்டன.

கற்றையங் கதிர்வேல் அண்ணல் காமரு
பகழி பாய
மற்றுஅவன் புறனும் மார்பும் வாயில்கள்
ஆத லோடும்
அற்றது நோக்கித் தீயோன் அகட்டுறை
கணங்கள் முற்றும்
புற்றெழு சிதலை என்ன அந்நெறி
துருவிப் போந்த.

(சிங்கமுகாசுரன். 360.)

[காமரு - அழகையுடைய. பகழி - அம்பு. புறனும் - முதுகிலும். அற்று அது - அத்தகைய நிலையை. அகடு - வயிறு. சிதலை - கறையான்.]

சிங்கமுகன் ஒரு தண்டத்தை விட்டான். அதை முருகப் பெருமான் ஒரு பாணத்தால் அறுத்தான். பிறகு முருகப் பெருமான் ஓர் அம்பை ஏவ, அது சிங்கமுகாசுரன் நெற்றியில் பட்டது. அவன் அப்படியே மயங்கினன். மயங்கி விழுந்தபோது அவன் வாய் திறந்து கொண்டது. வாய் வழியே தேவர்கள் வந்துவிடக் கூடாது என்று கையினல் அதைப் பற்றிக்கொண்டான். கையும் கீழே சோர்ந்து விழ, அவன் வாய் வழியாகவும் அவனது வயிற்றுக்குள் இருந்த பூத கணத்தினர் வெளி வந்தார்கள்.

அறந்தவிர்ந்து ஒழுகினேன் ஆகந் தன்னிடைத்
திறந்திடு நெறிகளால் சிறையின் வைப்புஒரீ இப்
பறந்திடு புள்ளெனப் படர்ந்து கந்தவேள்
புறந்தனில் வந்தன, பூதம் யாவுமே.

(சிங்கமுகாசுரன். 365.)

[ஆகம் - உடம்பு. நெறி - வழி. சிறையின் வைப்பு - சிறைபோன்ற கூடு. ஒரீஇ - நீங்கி.]

இப்படி அவன் உடம்பில் பட்ட துவாரங்களிலிருந்து பூத கணத்தினர் யாவரும் வெளியில் வந்து விட்டார்கள்.

மயங்கிய வீரர் வருதல்

உதயகிரியில் போய் மயங்கிக் கிடக்கிற வீரர்களை எண்ணினன் ஆண்டவன். உடனே ஓர் அம்பு விட்டு, அங்குள்ள வீரர்களை எல்லாம் அழைத்து வரும்படி செய்தான். அந்த அம்பு அங்கே சென்று வீரர்களைக் கட்டியிருந்த பாசப்படையை அறுத்தது. வீரர்கள் முருகன் திருவருளால் தூங்கி எழுந்தவர்களைப் போல எழுந்தார்கள். பாசத்தளை அற, அவர்கள் நல்லுணர்வு பெற்றவுடன் முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடினர்கள்; வாழ்த்தினர்கள்.

பாசத் தளையில் படுவார் அதுநீங்கி
மாசற்ற நல்உணர்வு வந்துஎய்த உய்ந்தனராய்ப்
பேசற் கரியஇன்பம் பெற்றோர்கள் தாமாகி
ஈசற் கினியான் இணையடிகள் வாழ்த்தெடுத்தார்.

(சிங்கமுகாசுரன். 369.)

[பாசத்தளை - பாசமென்னும் விலங்கு. உணர்வு - ஞானம்.]

அவர்கள் உணர்வு பெற்று எழுந்தது, பாசம் என்னும் தளைப் பட்டவர்கள் ஞானத்தினல் அது நீங்கி உய்ந்து வந்தவர்களைப் போல வந்தார்களாம்.

முருகப் பெருமான் விட்ட அந்த அம்பானது பிரம்மா உண்டாக்கின புட்பக விமானத்தைப் போலப் பெரிதாக நின்று, அங்கிருந்த வீரர்கள் அனைவரையும் சுமந்துகொண்டு, விசும்பின் வழியே வந்து, போர்க்களத்தில் கொண்டுவந்து விட்டது.

ஆங்கதுகா லத்தில் அறுமுகவேள் உய்த்தகணை
பூங்கமலத் தோன்உதவு புட்பகத்தின் மாட்சியதாய்த்
தீங்கில்இள மைந்தர்தமைச் சேனை யொடுமுகந்து
தாங்கு விசும்பின் தலைக்கொண்டு சென்றதுவே.

(சிங்கமுகாசுரன். 370.)

[பூங்கமலத் தோன் - பிரமன்.]

ஆண்டவன் அவர்கள் அனைவருக்கும் அனுக்கிரகம் செய்தான். "மிகவும் வருந்தினீர்கள் போலும்!" என்று அவர்களைப் பார்த்துச் சொன்னன்.

உடனே அவர்கள், "எங்களுக்குப் பழைய உணர்வு போனல் என்ன? அல்லது உயிர் போய் நரகத்தில் அழுந்தினல்தான் என்ன?

துயரத்தில் மூழ்குகின்ற பிறவியை அடைந்தால்தான் என்ன? எம் தந்தையே, உங்கள் அருள் எங்களுக்கு இருந்தால் எந்த இடத்திலும் எங்களுக்கு எந்தக் குறையும் வராது" என்று சொன்னார்கள்.

முந்தை உணர்வு முடிந்தால்என்? ஆருயிர்போய்
அந்த நிரயத்து அழுந்தி அயர்ந்தால்என்?
வெந்துயரம் மூழ்கி வினைப்பிறவி புக்கால்என்?
எந்தை அருள்உண்டேல் எமக்குஎன் குறைஎன்றார்.

(சிங்கமுகாசுரன். 375.)

[முந்தை உணர்வு - முன் இருந்த நினைவு. நிரயத்து - நரகத்தில்.]

இறைவனுடைய திருவருள் இருந்தால் எந்த நிலையிலும் இன்பத்தைப் பெறலாம். பிரகலாதன் முதலியவர்கள் எத்தனை துன்பம் அடைந்தாலும் அவற்றால் துன்புறாமல் இறைவன் திருவடியை நினைந்து இன்ப நிலையில் இருந்தார்கள். அப்பர் சுவாமிகளை மன்னன் சுண்ணாம்புக் காளவாயில் போட்டான். அப்போதும் அவர் துன்பம் அடையவில்லை. சுண்ணாம்புக் காளவாயில் சுண்ணாம்பு வெந்து மலர்ந்து வெப்பத்தைத் தந்து கொண்டிருக்கும். அந்த ஒளி அவருக்கு நிலாப்போல இருந்ததாம். அப்போது ஒரு வகையான சத்தம் உண்டாகும். அது வீணையொலி போல இருந்ததாம்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

(தேவாரம்)

சுண்ணாம்புக் காளவாய் அவருக்கு ஆண்டவன் திருவடி நிழலில் இருந்ததைப் போன்ற தன்மையை அளித்ததாம். நாவுக்கரசரைக் கல்லில் சேர்த்துக் கடலில் இட்டார்கள். அந்தக் கல்லே அவருக்குத் தெப்பமாக மிதந்தது. மதம் பிடித்த யானையை அவர் மேல் விட்டார்கள். அவர் ஒரு பதிகம் பாடினவுடன் அந்த யானை ஓடிப் போயிற்று. இறைவனிடத்தில் உண்மையான பக்தி உள்ளவர்களுக்கு எந்த விதமான தீங்கும் அணுகமாட்டாது.

மாணிக்கவாசகர் ஒன்று சொல்கிறார். "நான் நரகம் பெற்றாலும் அஞ்சமாட்டேன். உன்னுடைய திருவருளால் அந்த நிலை எனக்குக் கிடைத்தது என்றால் அங்கும் நான் சுகமாக

இருப்பேன்'' என்று சொல்கிருர். ''நரகம் பெறினும் எள்ளேன் நின் திருவருளால் இருக்கப்பெறின்.'' விளக்கை எடுத்துக்கொண்டு இருட்டைத் தேடியது போலாகும் அது. ஆண்டவன் திருவருள் இருந்தால் அவருக்கு அப்போது அங்கே இன்பந்தான் இருக்கும். நரகம் சொர்க்கம் ஆகிவிடும்.

அப்பர் சுவாமிகள் ஓரிடத்தில் சொல்கிருர்; ''ஆண்டவனே, புழுவாகப் பிறந்தாலும் பிறப்பேன். உன் திருவடி என் மனத்து வழுவாமல் இருந்தால், அதனுல் எனக்குக் குறை வராது'' என்று சொல்கிருர்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டும்."

வீரவாகு தேவர் இங்கே, ''வெந்துயரம் மூழ்கி வினைப் பிறவி புக்கால் என்?'' என்று சொல்வதும் அதை ஒத்திருக்கிறது.

அதற்கு மாருக, ஆண்டவனிடத்தில் அன்பு இல்லாமல் உலகில் ஈடுபட்ட மக்களுக்கு இந்த உலகமே பகையாக இருக்கும். கருவி கரணங்கள் பகைவர்களைப் போல இருக்கும். மனமே பெரிய பகையாக இருக்கும். இந்திரியங்களின் வாயிலாகப் பல பொருளில் ஈடுபட்டு அவற்றை இந்த உலக வாழ்க்கையில் அடையும் போது, மேலும் மேலும் ஆசை வளருமேயன்றிக் குறையாது. அதனுல் துன்பம் வரும்.

"ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்"

என்று திருமூலர் பேசுவார்.

ஐந்து இந்திரியங்களும் இறைவனிடத்தில் உண்மையான அன்பு உடையவர்களுக்கு அநுகூலம் செய்கின்றவையாக மாறுகின்றன. மனம் கூட இறைவனை நினைத்தால் சாத்துவிக மனம் ஆகிவிடும். நம்மிடத்திலுள்ள அகப் பகை ஒழிந்துவிடுமானுல், மனமும் இந்திரியங்களும் மாறிவிடுமானுல், நமக்கு என்ன துன்பம் வரும்? ஆகவேதான் வீரவாகு தேவர்,

எந்தை அருள்உண்டேல் எமக்குஎன் குறை?

என்றுர்.

சிங்கமுகன் வீழ்ச்சி

சிங்கமுகாசுரனுக்கும், முருகனுக்கும் பெரும்போர் நடந்தது. முருகன் விட்ட அம்புகள் வெவ்வேறு வடிவம் கொண்டு அசுரர்

கூட்டத்தை அழித்தன. சில அம்புகள் மேகத்தைப் பிளந்தன. கடலைச் சுவற அடித்தன. சூரியனுடைய தேரைப் பிளந்தன. கடலுக்கு அடியிலுள்ள வடவாமுகாக்கினியை விழுங்கின. அமரர்களுடைய உலகத்தைப் பிளந்தன. பூமியைப் பிளந்தன. இப்படிப் பல வகையான முறைகளில் அந்த அம்புகள் வேலை செய்துகொண்டிருந்தன.

கார்பி ளந்திடும்; அளக்கரை உண்டிடும்; கதிரோன்
தேர்பி ளந்திடும்; வடவையை விழுங்குறும்; தேவர்
ஊர்பி ளந்திடும்; மேருவைப் பிளந்திடும்; உலவாப்
பார்பி ளந்திடும், ஞானநா யகன்விடும் பகழி.

(சிங்கமுகாசுரன். 387.)

[அளக்கரை - கடலினை. உலவா - எங்கும் உலவி. பகழி - அம்பு.]

மேலே சூழ்ந்து கொண்டிருக்கிற எல்லா அண்டங்களுக்கும் சென்று அந்த அம்புகள் அங்கங்கே ஒலிகளைச் செய்தன. மாயையினால் மிகப் பெரிய வடிவத்தை எடுத்துக் கொண்டிருந்த சிங்கமுகாசுரன் மயங்கி, உணர்வு அழிந்து, செயலற்றுத் தன் தேரின் மேலே நின்றான்.

மீஉ யர்ந்துசூழ் அண்டத்தின் அளவெலாம் விரவ
மாய வன்மையில் கொண்டிடு பெருந்தகை வடிவம்
தூயன் வாளிகள் பட்டுஉணர்வு அழிதலால் தொலைந்து
சீய மாமுகன், தொன்மைபோல் நின்றனன் தேர்மேல்.

(சிங்கமுகாசுரன். 398.)

[மீ - மேலே. பெருந்தகை - சிங்கமுகன். சீயமாமுகன் - சிங்கமுகன்.]

அப்போது முருகன் அவனுடைய தேரையும் அழித்தான். கீழே நின்றபடியே சிங்கமுகாசுரன் தண்டு சூலம் முதலியவற்றை வீசினான். அவன் அவ்வாறு செய்வதைக் கண்ட முருகன், இரண்டாயிரம் அம்புகளை விட்டு, அவனுடைய இரண்டாயிரம் கைகளையும் அறுத்தான். அப்படி அறுக்க அறுக்க அவன் கைகள் முளைத்துக் கொண்டிருந்தன. சிங்கமுகாசுரனுடைய தோள்களை அரிந்தான். சிரங்களை அரிந்தான். தேவர்கள் குதூகலித்தார்கள். திரும்பத் திரும்ப அவை முன் போலவே முளைத்தெழுந்தன. அதைக் கண்டு தேவர்கள் துன்புற்றார்கள்.

அன்பற்றவன் மொய்ம்புகள் அற்றனகண்டு
இன்புற்றனர் வானவர் ; ஈண்டியவை
முன்புஉற்றது போல முளைத்துஎழலும்
துன்புற்றனர் ; யாக்கை துளங்குறுவார்.

(சிங்கமுகாசுரன். 424.)

[மொய்ம்புகள் - தோள்கள். துளங்குறுவார் - நடுங்குவார்.]

தேவர்கள் உடம்பெல்லாம் நடுங்கின. அப்போது முருகப் பெருமான் பின்னும் பல அம்புகளை விட்டு, அவனுடைய ஒரு தலையையும் இரண்டு கைகளையும் மாத்திரம் விட்டு விட்டு, மற்றவற்றையெல்லாம் அறுத்தான். அப்படி அறுத்த போதும் மறுபடியும் அவைகள் முளைத்து விட்டன.

இதை முருகப் பெருமான் கண்டான். அப்போது நான்கு திசையில் உள்ள தேவர்களும் பயப்படும்படியாக, மிகவும் சீற்றம் கொண்டானைப் போல முருகப் பெருமான் உங்காரம் செய்தான். அந்த உங்காரத்தினாலே உண்டான வேகம் சிங்கமுகாசுரனிடத்தில் தோற்றிய புதிய தலைகளையும், தோள்களையும், கரங்களையும் உள்ளே அழுத்திவிட்டது. மறுபடியும் அவைகள் தோன்றவில்லை. தலையையும், காலையையும் நீட்டிக் கொண்டிருந்த ஆமை யாரையாவது கண்டால் எப்படி அவற்றை எல்லாம் உள்ளே அடக்கிக் கொள்ளுமோ அது போலச் சிங்கமுகாசுரனுடைய கைகளும், மற்ற முகங்களும் உள்ளே ஒடுங்கின.

ஐயனது உங்கா ரத்தால் அரிமுகன்
சிரமும் மொய்ம்பும்
மெய்யிடை ஒடுங்கிற்று அம்மா ; மேவினர்
தம்மை நோக்கி
மையுறு கருந்தாது அன்ன வன்புறக்
கமடம் சென்னி
ஒய்யென யாக்கை தன்னில் ஒளிந்திடும்
தன்மை யேபோல்.

(சிங்கமுகாசுரன். 447.)

[அரிமுகன் - சிங்கமுகன். கருந்தாது - இரும்பு. வன்புறக் கமடம் - வலிய முதுகு ஓட்டை உடைய ஆமை.]

அப்போது சிங்கமுகாசுரன், ஒரு தலையையும், இரண்டு கைகளையும் கொண்டு உலகத்தை எல்லாம் அழிப்பான் போன்று போராடினான். மலைகளைப் பிடுங்கி எறிந்தான். அவற்றை முருகன்

பொடிப்பொடி யாக்கினன். தண்டை எடுத்து விட்டான் சிங்கமுகா சுரன். முருகப் பெருமான் தன் கையிலுள்ள வச்சிராயுதத்தை ஓச்சினன். அது சென்று சிங்கமுகாசுரன் விட்ட தண்டைப் பொடிப் பொடி யாக்கியது; சிங்கமுகாசுரன் மார்பைத் தாக்கி அவன் உயிரைப் போக்கியது. அவன் மார்பிலிருந்து இரத்தம் கொப் புளித்தது.

விடுத்திடு குலிசம் ஏகி, விரைந்துஎதிர்
தண்டந் தன்னைப்
பொடித்தது போலும் என்னப் பூழிசெய்து
அடுக்கல் செல்லும்
இடித்தொகை என்ன மார்பத்து எய்தியே,
அவுணன் ஆவி
குடித்தது; புறத்துச் செந்நீர் கொப்புளித்து
ஏகிற் றன்றே.

(சிங்கமுகாசுரன். 454.)

[குலிசம் - வச்சிராயுதம். தண்டம் - கதை. பூழிசெய்து - புழுதியாக்கி. அடுக்கல் - மலைமேல். செந்நீர் - இரத்தம்.]

வச்சிராயுதத்தால் தாக்கப்பட்டு, உயிர் நீத்த சிங்கமுகன் கீழே கிடந்தான். அவனைக் கொன்ற வச்சிராயுதம் ஆகாச கங்கைக்குச் சென்று தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, திரும்பவும் எம் பெருமானிடம் வந்து சேர்ந்தது.

அங்குஅப் பொழுதில் அடர்குலிசம் வான்போகிக்
கங்கைப் புனல்ஆழ்ந்து, காமருபூந் தாதுஆடிச்
சங்கத் தவர்க்குள் தலையாம் தமிழ்ப்புலவன்
செங்கைக்குள் வந்து சிறப்புற்று இருந்துளதால்.

(சிங்கமுகாசுரன். 456.)

[காமருபூந்தாது ஆடி - அழகிய மலர்களில் உள்ள தாதைப் பூசிக்கொண்டு.]

இந்தப் பாட்டில் கச்சியப்பர் முருகப் பெருமானை, "சங்கத்தவர்க் குள் தலையாம் தமிழ்ப் புலவன்" என்று சொல்கிறார்.

முருகப் பெருமானுக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழை மூன்று சங்கங்கள் வளர்த்தன என்று சொல்வார்கள். முதல் சங்கம் இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கில் உள்ள மதுரையில் இருந்தது. இரண்டாவது கபாடபுரத்தில் இருந்தது. மூன்றாவது சங்கம் இப்போது நாம் காணும் மதுரையில் இருந்தது.

முதல் சங்கத்தின் தலைமைப் புலவர்களாகத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த குமரவேளும் இருந்தார்கள். இறையனர் அகப்பொருள் உரையில் இந்தச் சங்கங்களைப் பற்றிய வரலாறு வருகிறது. அங்கே மூன்று சங்கங்களைப் பற்றிய செய்திகளும் தெளிவாகக் காணப்படுகின்றன. முருகப் பெருமான் முதல் சங்கத்தில் புலவனுக இருந்தான் என்பதை எண்ணி,

"சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ"

என்று குமரகுருபர சுவாமிகள் பாடுகிறுர். இங்கே கச்சியப்பர்,

சங்கத் தவர்க்குள் தலையாம் தமிழ்ப்புலவன்

என்று சொல்லுகிறுர்,

தன் தம்பியாகிய சிங்கமுகன் உயிரிழந்து கீழே விழுந்து கிடப்பதைக் கோபுரத்திலிருந்து பார்த்தான் சூரபன்மன். அவன் மயங்கி விழுந்து கிடக்கிறுன் என்றே நினைத்தான்.

ஆனல், அவன் இறந்து விட்டான் என்ற செய்தியை ஒற்றர்கள் வந்து சூரபன்மாவிடம் சொன்னுர்கள். உடனே கோபுரத்திலிருந்து கீழே இறங்கி வந்து இறந்து கிடந்த தன் தம்பியைப் பார்த்தான். அவனுக்குத் துயரம் பொத்துக் கொண்டு வந்தது. பல வகையாகப் புலம்பினுன்.

மங்குல் எனவீழ்ந்து மறிந்து நிலமிசையே
அங்கை புடைத்திட்டு அலமந்து தொல்வலியும்
துங்க விறலும் நலனும் தொலைவுஎய்தப்
பொங்கு துயர்க்கடலில் மூழ்கிப் புலம்புறுவான்.

(சிங்கமுகாசுரன். 465.)

[மங்குல் - மேகம்.]

சூரன் புலம்பல்

"பொன்னை இழந்தால் திரும்பப் பெறலாம். நிலத்தை இழந்தால் பெறலாம். புதல்வர்கள் இறந்து போனல் மீண்டும் பெறலாம். மங்கையர்களைப் பெறலாம். எந்தப் பொருளை இழந்தாலும் திரும்பப் பெறலாம். ஆனல் எனக்குத் தம்பியாகிய உன்னை நான் இழந்து விட்டேனே! உன்னை எப்படித் திரும்பப் பெறுவேன்? உன்னைப்போல் வேறு யார் எனக்குத் தம்பி வருவார்கள்?"

பொன்னைநிலந் தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை உளபொருளை எல்லாம் பெறலாகும் ;
என்னை உடைய இளையோனே, இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவ துண்டோ ? உரையாயே.

(சிங்கமுகாசுரன். 460.)

" கிரவுஞ்ச மலைப் பக்கத்தில் இருந்து ஆட்சி செய்த தாரகன் இறந்தபோதே என்னுடைய ஒரு கை போயிற்று. அப்போதே என் உள்ளம் துயரை அடைந்தது. இப்போது நீ போனதனால் என்னுடைய இரண்டாவது கையும் போயிற்று. எல்லாவற்றையும் இழந்த வறியவனாக இருக்கிறேன், நான்" என்று சூரன் புலம்பினான்.

பொற்றைக்கு அயல்இருந்த பூட்கைமுகன் துஞ்சியபின்
ஒற்றைப் புயம்போய் உளம்தளர்ந்து வைகினன்யான் ;
இற்றைப் பகல்நீ இறந்தாய், அரிமுகனே !
மற்றைப் புயமும் இழந்தேன் வறியேனே.

(சிங்கமுகாசுரன். 473.)

[பொற்றை - மலை ; இங்கே கிரவுஞ்சகிரி. பூட்கைமுகன் - யானை முகமுடைய தாரகாசுரன்.]

"நாளைக்கே அந்த முருகனுடன் போரிட்டு அவனை அழிப்பேன்" என்று வீரசபதம் செய்தான் சூரன்.

சூரபன்மன் வதை

ஏழாவது நாள் சூரபன்மன் தானே போருக்கு வரலானான். ஆயிரத்தெட்டு அண்டங்களில் உள்ள படைகளையெல்லாம் சூரபன்மன் வருவித்தான். கவசம் முதலியன பூண்டு இந்திரஞாலத் தேரில் ஏறிப் போர்க்களம் வந்தான். முருகப் பெருமான் வாயுதேவன் செலுத்திய தேரில் ஏறி வந்தான்.

முருகனுக்கும் சூரனுக்கும் நிகழ்ந்த போர்

போர் மூண்டது. முன்னால் சென்ற பூத கணங்கள் தோற்று ஓடினார்கள். வீரவாகு தேவர் சூரனை எதிர்த்து நின்று தாக்குப் பிடிக்க முடியாமல் மீண்டார். இப்படிப் படைகள் எல்லாம் அழிந்து, வீரவாகு தேவரும் மற்றவர்களும் இளைப்புற்று மீண்டதைப் பார்த்தான் முருகன். சிறிது புன்னகை செய்தான்.

பாரி டங்களின் படையெலாம் நெக்கதும் பாங்கர்
வீர மொய்ம்பனும் இளைஞரும் வருந்திமீண் டதுவும்
கார்இ னம்புரை அவுணர்தம் செய்கையும் காணா
மூரல் செய்தனன், எவ்வகைத் தேவர்க்கும் முதல்வன்.

(சூரபன்மன் வதை. 84.)

[பாரிடங்களின் படை - பூதகணங்களின் சேனை. நெக்கதும் - தோல்வியுற்றதும். வீர மொய்ம்பன் - வீரவாகு. கார் இனம்புரை - மேகக்கூட்டத்தை ஒத்த.]

போர்க்களத்திற்கு வந்த முருகன், அசுரர்கள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் தேரை ஓட்டச் செய்து கணைகளை விட்டான். இடதுசாரி, வலதுசாரியாகச் சுழன்று ஆங்காங்குள்ள அவுணர்களை மாய்த்தான். அங்கே இருந்த அவுணர்கள் மாய மாய வெவ்வேறு அண்டங்களிலிருந்து அசுரர்கள் வந்து எதிர்த்தார்கள். இப்படி அசுரர்கள் அழிய அழிய, மேலும் மேலும் வெவ்வேறு அண்டங்களிலிருந்து புதிய ஆட்கள் வருவதைக் கண்ட முருகப் பெருமான் அம்புகளை மாரிபோல் விட்டு அண்டகோளத்தின் மேலுள்ள உச்சி வாயிலை அடைந்து விட்டான்.

அறுத்து வெம்முனைத் தானையை ஆண்டுசெல் அனிகம்
மறித்தும் வந்துவந்து அடைதரும் இவன்என மனத்துள்
குறித்து வெங்கணை மாரியால் அண்டகோ ளகையின்
நெறித்த ரும்பெரு வாயிலை அடைத்தனன் நிமலன்.

(சூரபன்மன் வதை. 146.)

[வெம்முனைத்தானையை - கொடுமையான போர்க்களத்தில் வந்த சேனையை. அனிகம் - படை.]

சூரன் கூறுதல்

அப்போது சூரன் முருகனை எதிர்த்து வந்து நின்றான். "சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமானுடைய கிருபையினால் நான் சாகா வரம் பெற்றிருக்கிறேன். எப்போதும் இதே பொலிவோடு இருப்பேன். தேவர்கள் மறந்தும் கூட என்னோடு போர் செய்யமாட்டார்கள். தவறி என்னோடு சண்டையிட்டு இறந்து போனவர் பல பேர். சிறு பையனாகிய நீ இதைத் தெரிந்துகொள்ள வில்லை போலிருக்கிறது!"

சிறந்த வான்மதி மிலைச்சினோன் அருள்புரி செயலால்
இறந்தி டேனியான்; என்றும்இப் பெற்றியாய் இருப்பேன்;
மறந்தும் என்னொடு பொருதிலர் தேவரும்; மலைந்தே
இறந்து ளார்பலர்; உணர்ந்திலை போலும்நீ, இதுவே.

(சூரபன்மன் வதை. 154.)

[மிலைச்சினோன் - சூடியவன். மலைந்தே - போர் செய்தே.]

"என்னுடைய பெரிய படைகளை எல்லாம் அழித்தாய். சிறு பிள்ளை என்று உன்னை நான் நினைத்திருந்தேன். இனிமேல் அப்படி நினைத்து உன்னை விடுவதில்லை. நீ புற முதுகு காட்டி ஓடினாலும் விரைவில் உன்னை அழித்து விடுவேன். உனக்குப் பக்க பலமாகிய தேவர்களையும், பூத கணங்களையும் பொடிப் பொடியாக அழித்து விடுவேன்" என்று சூரபன்மன் வீரம் பேசினான்.

உடைப்பெ ரும்படை செறுத்தனை; பாலன்என்று உன்னை
விடுப்பது இல்லையால்; வெரிநது கொடுக்கினும் விரைவில்
படுப்பன்; வானவர் தொகையுடன் பாரிடர் தமையும்
கெடுப்பன் என்றனன், தன்பெருங் கிளையுடன் கெடுவான்.

(சூரபன்மன் வதை. 156.)

[செறுத்தனை - அழித்தாய். வெரிந் - முதுகு. படுப்பன் - அழிப்பேன். பாரிடர் - பூதகணத்தினர்.]

முருகன் கூறுதல்

"பொல்லாத காரியங்களுக்கு எல்லாம் ஒருவன் என்று சொல்லும்படி இருக்கிற கயவனே, நீ வீணே வம்பு வார்த்தைகளைப் பேசுகின்றாய். அதனால் எந்தப் பயனும் உண்டாகப் போவதில்லை. நாம் விடுகின்ற அம்பினால் உன் மார்பு பிளக்கப்பட்டுச் சிவப்பாகப் போகிறது. இந்த அம்புதான் உனக்குப் பதில் சொல்லும்" என்றான் முருகன்.

வெம்பு ரைத்தொழிற்கு ஒருவனும் உயவநீ வெறிதே
வம்புஉ ரைத்தனை ; ஆவதுஒன்று இல்லை;நின் மார்பம்
செம்பு ரைப்பட யாம்விடு கின்றதோர் திறல்வாய்
அம்புஉ ரைத்திடும் மாறுஉனக்கு என்றனன் அமலன்.

(சூரபன்மன் வதை. 157.)

[வெம்புரைத்தொழிற்கு - கொடிய குற்றச் செயல்களுக்கு. வெறிதே - வீணே. செம்புரைப்பட - சிவப்பான துளைபடும்படி. மாறு - விடை.]

"வாயால் பேசுவதில் பயன் இல்லை. அம்பினால் பேசுவேன்" என்றான் முருகன்.

போர் தொடர்தல்

அப்போது வீரவாகு தேவர் முருகனுக்குத் துணையாக நின்று பொருதார். சூரன் அவரைப் பிடித்து வானில் நெடுந்தூரம் செல்லும் படி எறிந்தான். அங்கிருந்து அவர் முருகனை வந்தடைந்தார். மேலும் முருகனும் சூரனும் சண்டையிட்டனர். தேவர்கள் அக்கினியை முருகனுக்குக் கொடியாக இருக்க வேண்டும் என்று வேண்டினர். அப்படியே அவன் முருகப் பெருமானுக்குக் கொடியாக வந்தான். கோழிக் கொடியைப் போல உருவெடுத்து, தேவ தேவனின் தேர்மிசை இருந்து குரல் கொடுத்தான்.

ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி ஆகியே
தேவ தேவன் திருநெடுந் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட.

(சூரபன்மன் வதை. 206.)

[தழல்பண்ணவன் - அக்கினிதேவன். வாவு - தாவும். குக்குடம் - கோழி.]

நேருக்கு நேராக நின்று பல காலம் போரிட்ட சூரன் உடல் நலிந்தான். திடீரென்று மறைந்தான். கடல் நடுவிற்குப் போனான். விண்ணுக்குப் போனான். மேருவுக்குப் போனான். பாதாளத்திற்குள் போனான். முருகனும் அங்கங்கே அவனோடு சென்று பொருதான். சூரன் தேர் அழிந்தது. உடனே சூரன் இந்திரஞாலத் தேரை நினைத்தான். அது வந்தவுடன் அதில் ஏறிப் போர் செய்தான். அண்டங்களின் முகட்டுக்குச் சென்று முருகப் பெருமான் அடைத்திருந்த வாயில்களைத் தகர்த்தான். மறுபடியும் அவனுக்கு உதவி யாகப் படைகள் வந்தன. முருகன் சிறிது விழித்துப் பார்த்தான்.

அந்தப் படைகள் யாவும் அழிந்தன. மறுபடியும் படைகள் வரவே, முருகன் உங்காரம் செய்தான். அவை யாவும் அழிந்தன. மறுபடியும் படைகள் வந்து கொண்டிருந்தன.

நம்முடைய ஊர்களில் மேல்மாடியில் நெல்லை உலர்த்துவார்கள். பின்னர் அவற்றைக் குவித்துத் தளத்தில் உள்ள ஓர் ஓட்டை வழியே தள்ளுவார்கள். மேல் இருந்த அந்த ஓட்டை வழியே தள்ளினால் கீழே நெல் விழுந்துகொண்டே இருக்கும். அதுபோல அண்ட கோளத்தின் துவாரம் வழியாக அசுரர்கள் புங்கானு புங்கமாக வந்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்தான் முருகப் பெருமான். அப்போது அப்பெருமான் தன் கையில் இருந்த வேல் அல்லாத மற்ற ஆயுதங்களைப் பார்த்து, "நீங்கள் வெவ்வேறு உருவாகச் சென்று அசுரர்களின் தானையை அடுங்கள்" என்று சொன்னான்.

திருந்தகு மதுரை தன்னில் சிவன்பொருள்
நிறுக்கு மாற்றல்
உருத்திர சன்ம னாகி உற்றிடும்
நிமலன், வெம்போர்
அருத்திகொள் கணிச்சி, சூலம், ஆழி, தண்டு
எழுவ தாகும்
கரத்தினில் படைகள் தம்மை நோக்கியே
கழற லுற்றான்.

வென்றியம் படைகள் கேண்மோ: விரைந்துடன்
தழுவி நம்பால்
சென்றிடும் அனிகந் தன்னைச் செல்நெறி
பெறமல் அப்பால்
நின்றிடு படையை எல்லாம் நீவிர்பல்
உருக்கொண் டேகிக்
கொன்றிவண் வருதிர் என்று கூறிமற்
றவற்றைத் தொட்டான்.

(சூரபன்மன் வதை. 261, 262.)

[சிவன் பொருள் நிறுக்கும் ஆற்றல் - சிவபெருமான் இயற்றிய பொருளிலக்கணத்தின் உரையை ஆய்ந்து பார்க்கும் முறையினால். போர் அருத்தி - போர் செய்வதில் ஆசை. கணிச்சி - மழு. ஆழி - சக்கரம். எழு - உலக்கை. கேண்மோ - கேளுங்கள். அனிகம் - படை. தொட்டான் - ஏவினான்.]

இங்கே கச்சியப்பர் ஒரு வரலாற்றை நினைவூட்டுகிறார்,

உருந்திர ஜன்மன் வரலாறு

திருத்தகு மதுரை தன்னில் சிவன்பொருள் நிறுக்கு மாற்றல்
உருத்திர சன்ம ஞகி உற்றிடும் நிமலன்

என்கிருர். அது பழைய கதை.

ஒரு காலத்தில் பாண்டி நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் வந்தது. தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் அந்தப் பஞ்சம் இருந்தது. தானும், தன் குடும்பமும் வருந்துவதைப் பாண்டியன் எண்ணவில்லை. அங்கே இருந்த புலவர்கள் பசியினுல் வருந்துவார்களே என்று எண்ணி, வளமுள்ள இடத்திற்கு அவர்களைப் போகச் சொன்னுன். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு பஞ்சம் தீர்ந்தது. புலவர் பெருமக்களைத் திரும்ப அழைத்துக் கொண்டான்.

பாண்டியனுக்கு, முன்னுலேயே ஓர் ஆசை இருந்தது. தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்கள் உண்டு. அதில் பொருளதிகாரம் இருக்கிறது. என்ருலும் தமிழுக்கே சிறப்பான அகப்பொருள் பற்றித் தனியாகவே ஓர் இலக்கண நூல் இல்லையே என்று பாண்டியன் நினைந்தான். எந்தப் புலவரையேனும் தனியாக அகப்பொருள் இலக்கணம் இயற்றச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான். நடுவில் பஞ்சம் வந்தது. பஞ்சம் தீர்ந்தவுடன் திரும்பப் புலவர் பெருமக்கள் வந்து கூடினர். ஆயினும் பொருளிலக்கணத்தில் சிறந்த புலமையையுடையவர் யாரும் வரவில்லை. அதனுல் பாண்டியன் வருந்தினுன். ஆலவாய்ப் பெருமானிடம் சென்று, "பஞ்சம் போனுலும், என் மனத்திலுள்ள பஞ்சம் போக வில்லையே!" என்று வருந்தினுன்.

ஒரு நாள் கோவிலில் பூசைசெய்யும் சிவாசாரியார் ஆண்டவனது பீடத்தைக் துடைக்கும்போது ஜல் ஜல் என்ற தாமிரத் தகடு ஓசை கேட்டது. அவற்றை எடுத்துப் பார்த்தால் அந்தத் தகடுகளில், "அன்பின் ஐந்திணை" என்று தொடங்கி 60 சூத்திரங்கள் இருந்தன. அகப்பொருள் நூலாக அது இருப்பதைக் கண்டு பாண்டியனிடம் கொண்டுபோய்க் கொடுத்தார். எம்பெருமான் திருவருளால் குறை தீர்ந்தது என்று பாண்டியன் மகிழ்ந்தான். கடைச்சங்கத்தில் இருந்த 49 பேர்களிடமும் அதைக் கொடுத்து உரை எழுதச் சொன்னுன் பாண்டியன். 49 உரைகள் கிடைத்தன.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பாக இருந்தது. எதைச் சிறந்த உரையாகத் தேர்ந்தெடுப்பது என்று அவனுக்குப் பெரும் கவலையாகிவிட்டது.

உடனே ஆலவாய்ப் பெருமானிடம் சென்று தன் குறையைச் சொல்லி வருந்தினன். அப்போது அசரீரியாக ஆண்டவன் சொன்னன்: "இந்த ஊரில் உப்பூரிகுடிகிழார் என்ற வணிகர் வீட்டில் ஒரு பிள்ளை வளர்கிருன். அவன் பெயர் உருத்திர சன்மன். அவனை அழைத்து வந்து, உயர்ந்த பீடம் இட்டு உட்கார வைத்து ஒவ்வொரு புலவருடைய உரையாகப் படிக்கச் சொல். அந்த ஊமைப் பிள்ளை யாருடைய உரையைக் கேட்கிறபோது கண்ணில் நீர் மல்க உடம்பு புளகாங்கிதம் அடைகிருனே, அவருடைய உரைதான் சிறந்தது" என்ருன்.

பாண்டியன் அப்படியே செய்தான். ஒவ்வோர் உரையாகப் புலவர்கள் படித்து வந்தார்கள். அவன் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்தானே தவிர, அவனிடத்தில் எந்த மெய்ப்பாடும் தோன்றவில்லை. மாங்குடி மருதனர் உரையைக் கேட்டபோது கொஞ்சம் புன்னகை பூத்தான். பிறகு நக்கீரர் தம் உரையைப் படித்தபோது அவனிடத்து இறைவன் சொன்ன மெய்ப்பாடுகள் எல்லாம் ஏற்பட்டன. உடனே அதுவே சிறந்த உரை என்று தெரிந்து கொண்டார்கள். இந்த வரலாற்றை நினைந்தே,

திருத்தகு மதுரை தன்னில் சிவன்பொருள் நிறுக்கு மாற்ருல்
உருத்திர சன்ம ளுகி உற்றிடும் நிமலன்.

என்று கச்சியப்பர் சொல்கிருர்.

திருமுருகாற்றுப் படை பாடிய நக்கீரர் முருகப் பெருமான் தம்முடைய உரையைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்தான் என்று சொல்ல எண்ணினர். அபப்டிச் சொன்னல் அகங்காரத்தின்பாற்படும். அவர் தம் அகங்காரத்தினுலேயே துன்புற்று, சிறையில் அடைபட்டார். ஆகவே தம்மைப்பற்றிச் சொல்லாது 'நூலறி புலவ' என்று குறிப்பாகச் சொன்னர். நூல் என்பது இலக்கணத்தைக் குறிக்கும். 'இலக்கணத் தன்மையை அறிந்த புலவனே' என்று பொருள். அகப்பொருளுக்குத் தாம் எழுதிய உரையை நடுவனக இருந்து

உருத்திர சன்மன் தேர்ந்தெடுத்த செய்தியைக் குறிப்பாகச் சொல்வதாகத் தோன்றுகிறது.

குமரப் பெருமானைச் சுற்றி இருந்த அவுணப் படைகளை, அவன் விட்ட ஐந்து ஆயுதங்களும் ஒழித்து விட்டன. ஆயிரத்தோர் அண்டங்களிலிருந்து எழுந்து வந்த படைகளை எல்லாம் அட்டுச் சங்காரம் பண்ணிவிட்டு உலாவின.

அப்போது சூரபன்மன் சிவபெருமான் அருளிய சக்கராயுதத்தை எடுத்து விட்டான். எம்பெருமான் அதை அழிக்க எந்த அம்பையும் விடவில்லை. தன் கையை நீட்டினான், சக்கரம் அவன் கையில் போய் நின்றது. பல வகையான மாயங்களைச் சூரன் செய்தபோது, எம்பெருமான் ஞானாஸ்திரத்தை விட்டான். சூரனுடைய மாயம் அகன்றது. தனியாகத் தன் தேரில் நின்றான் சூரன். வெவ்வேறு அண்டங்களுக்கு ஓடினான். முருகனும் அவனைத் தொடர்ந்து சென்று பொருதான். முருகப் பெருமானுடைய தாக்குதலினால் சூரன் தன் வலிமையை இழந்தான்.

சூரன் அமுதசீத மந்தர கூடத்தைக் கொணர்தல்

அப்போது அவன் தன்னுடைய தாய் மாயையை நினைந்தான். மாயை வந்தாள். "நீ தேவர்களைச் சிறையில் வைத்தாய். அதனால் உனக்கு இந்தத் துன்பம் வந்தது. இருந்தாலும் உனக்கு நல்ல வழியைச் சொல்கிறேன். இறந்து போனவர்களை மறுபடியும் எழுப்ப வேண்டுமானால் ஒரு காரியம் செய். பாற்கடலுக்கு அப்பாலே ஒரு பக்கத்தில் அமுத சீத மந்தர கூடம் என்ற மலை இருக்கிறது. அந்த மலையை நீ இங்கே கொண்டு வந்தாயானால் இறந்துபோன வீரர்கள் எழுவார்கள்" என்று சொன்னாள்.

நின்றிட அனைய தன்மை நின்உளம் மகிழும் ஆற்றால்
பொன்றினர் எழுதல் வேண்டின் புறக்கடற்கு ஒருசார் ஆக
மன்றல்கொள் அமுத சீத மந்தர கூடம் என்றோர்
குன்றுளது ; அதனை ஈண்டே கொணருதி, "கூடும்" என்றாள்.

(சூரபன்மன் வதை. 296.)

[பொன்றினர் - இறந்தவர்கள். மன்றல் - நறுமணம்.]

அதைக் கேட்ட சூரபன்மன் ஒரு சிங்கத்தில் ஏறிக்கொண்டு, இந்திரஞாலத் தேரைப் பார்த்து, "நீ போய் அந்த மந்தர மலையைக்

கொண்டு வா" என்றான். அந்தத் தேர் அப்படியே பாற்கடலுக்கு அப்பால் சென்று மந்தரகூடக் குன்றைக் கொண்டு வந்தது. அதன் காற்றுப் பட்டவுடன் இறந்தவர்கள் எல்லோரும் எழுந்தார்கள்.

எழுந்தான்வயப் புலிமாமுகன் ; இரவிப்பகை எழுந்தான் ;
எழுந்தான்எரி முகவெய்யவன் ; இளமைந்தனும் எழுந்தான் ;
எழுந்தான்அறத் தினைக்காய்பவன் ; இருபாலரும் எழுந்தார் ;
எழுந்தார்ஒரு மூவாயிரர் ; ஏனோர்களும் எழுந்தார்.

(சூரபன்மன் வதை. 306.)

[வயம் - வலிமை. இரவிப்பகை - பானுகோபன். எரிமுக வெய்யவன் - அக்கினி முகாசுரன். அறத்தினைக் காய்பவன் - தருமகோபன்.]

அவர்கள் அத்தனை பேரும் முருகப் பெருமானுடன் போர் செய்ய வந்தார்கள்.

எழுந்தவர் அழிதல்

முருகன் பாசுபதாஸ்திரத்தை வீசினான். எழுந்து நின்ற அத்தனை பேர்களையும், அது பல படைக்கலன்களாகச் சென்று அழித்துவிட்டது. அதோடு நிற்காமல் இந்திர ஞாலத் தேர்மேல் இருந்த மந்தரகூட மலையைத் தூள் தூளாக ஆக்கியது. பின்னர் முருகப்பெருமானிடம் வந்து சேர்ந்தது.

முந்து வெய்யசூர்ப் பரிசனத் தொகையெலாம் முருக்கி
இந்தி ரப்பெரு ஞாலமாம் தேர்மிசை இருந்த
மந்த ரப்பெருங் கிரியினைத் துகளெழ மாய்த்துக்
கந்த வேள்புடை மீண்டது சிவன்படைக் கலமே.

(சூரபன்மன் வதை. 330.)

[பரிசனத் தொகை - உறவினர் கூட்டம். முருக்கி - அழித்து. சிவன்படைக் கலம் - பாசுபதாஸ்திரம்.]

மறுபடியும் சூரன் தனியாக நின்றான். அவன் அப்போது இந்திரஞாலத் தேரைப் பார்த்து, "நீ பூதர்களை அள்ளிக் கொண்டு அண்டத்து உச்சியில் கொண்டு போய் வை" என்றான். அப்படியே அந்தத் தேர் வீரவாகு முதலிய யாவரையும் தூக்கிச் சென்று அண்டகோள உச்சியில் வைத்து அங்கேயே இருந்தது. முருகன் ஒரு கணையை விட்டுத் தேரோடு அவர்களைக் கொண்டு வரச் செய்தான். இந்திர ஞாலத் தேரைப் பார்த்து, "நீ இனி மேல் சூரனிடத்தில் போகாதே. இங்கேயே நில்" என்று அதட்டினான்.

தொல்லையில் வரம்பெறு சூரன் தன்புடை
செல்லலை ; ஆங்கவன் முடிகை திண்ணமால் ;
மல்லலந் திருவுடை மாயத் தேரைநீ
நில்இவண் என்றனன் நிகரில் ஆணையான்.

(சூரபன்மன் வதை. 348.)

[செல்லலை - போகாதே. மாயத் தேரை - இந்திர ஞாலத் தேரை.]

அது மேலே நகர முடியாமல் நின்றுவிட்டது.

சூரன் பல வகையில் பொருதல்

இந்திரஞாலத் தேர் பயன்படாமையினல் சூரன் சிங்கவாகனத்தில் ஏறி வந்து போர் செய்தான். அப்போது முருகன் சிங்க வாகனத்தை அழித்தான். சூரன் பெரிய சக்கரவாகப் புள் ஆகிப் பூத கணங்களை அலைத்தான். அப்போது முருகன் தேரில் நின்று அவனோடு போர் செய்வது சரியன்று என நினைத்தான். இந்திரன் உடனே மயில் உருவத்தை எடுத்துக் கொண்டு வந்து முருகப் பெருமானைத் தாங்கினன்.

இந்திரன் அனைய காலை எம்பிரான்
குறிப்பும், தன்மேல்
அந்தம்இல் அருள்வைத் துள்ள தன்மையும்
அறிந்து நோக்கிச்
சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா
மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி ; மரகத
மலைபோல் நின்ருன்.

(சூரபன்மன் வதை. 378.)

முருகன் அதன்மேல் ஏறிப் போர் செய்யத் தொடங்கினன். மயிலும் சக்கரவாகமும் பொருதன. முருகன் அம்பு விட்டான். முருகப் பெருமானின் வில்லைக் கடிக்கலாம் என்று சக்கரவாகப் புள் உருவம் கொண்டு சூரன் வந்தான். அப்போது தன்னுடைய வாளை வீசிச் சக்கரவாகப் புள்ளின் உடம்பை இரண்டு துண்டாக்கினன் முருகன். தேவர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

வருவது நிமலன் காணு மலர்க்கரம் ஒன்றில் வைகும்
ஒருதனி ஒள்வாள் வீசி ஒன்னலன் பறவை யாக்கை
இருதுணி யாகி வீழ எறிந்தனன் ; எறித லோடும்
அரிஅயன் முதலாம் தேவர் அனைவரும் ஆடல் கொண்டார்.

(சூரபன்மன் வதை. 391.)

[ஒன்னலன் - பகைவனுகிய சூரன். துணி - துண்டுகள். ஆடல் - மகிழ்ச்சியினல் ஆடுதல்.]

சூரன் அதோடு நிற்கவில்லை. வெவ்வேறு வடிவங்கள் எடுத்தான். பூமியைப் போல நின்றான். புனல் போல நின்றான். நெருப்பாக, காற்றாக மாறினான். எல்லாவற்றையும் அம்பால் முருகன் அட்டான்.

இப்படி நான்கு நாட்கள் கடும் சண்டை நடந்தது. அவன் மூவர்களில் ஒருவனாக வந்தான். தேவர்களில் ஒருவனாக வந்தான். பாம்பு, முகில், இடி, இருள், மலை, களிறு எனப் பலப் பல உருவங்களில் வந்தான். தன் பிள்ளைகளைப் போல எல்லாம் வந்தான். அவன் எந்த எந்த வடிவத்தோடு வந்தாலும் அந்த அந்த வடிவத்தை முருகன் அழித்தான். முடிவில் சூரன் எல்லாம் அழிந்து தனியாக நின்றான்.

முருகன் விசுவ ரூபம் காட்டல்

முருகப் பெருமான் அவனைப் பார்த்து, "இது வரை நீ பற்பல வடிவங்கள் கொண்டாய். எல்லா வடிவங்களையும் நான் அழித்தேன். இப்போது என்னுடைய வடிவத்தை நீ பார்ப்பாயாக" என்று சொல்லி விசுவரூபத்தை எடுத்துக் கொண்டான்.

**வெம்புயல் இடையில் தோன்றி விளிந்திடும் மின்னு என்ன
இம்பரில் எமது முன்னம் எல்லையில் உருவம் கொண்டாய்;
அம்பினில் அவற்றை எல்லாம் அட்டனம்; அழிவு இலாத
எம்பெரு வடிவம் கொள்வம்; நன்றுகண் டிடுதி என்றான்.**

(சூரபன்மன் வதை. 421.)

[புயல் - மேகம். இம்பரில் - இங்கே. அட்டனம் - அழித்தோம்.]

சூரபன்மன் போர்க்களத்திற்கு வந்த போது, ஆண்டவனுக்கு அவனை அழிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகவில்லை. சூரபன்மன் முருகனைப் பகைவனாக எண்ணினானே தவிர, முருகன் அவனை அவ்வாறு எண்ணவில்லை. பொல்லாத பிள்ளையை அழிக்க வேண்டுமென்று பெற்றோர் நினையார்; திருத்த வேண்டுமென்றே விரும்புவர். அப்படியே அவனுக்கு அருள் செய்யவேண்டுமென்ற எண்ணம் முருகனுக்கு உண்டாயிற்று. சூரபன்மனுக்கு அகங்காரம் வருவதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தான். சூரனுடைய பலம், வரம், துணைவர்களுடைய ஆற்றல் எல்லாம் அவனுடைய கர்வத்தை மிகுதிப்படுத்தின. இப்போது அவற்றை எல்லாம்

ஒவ்வொன்ருகக் களைந்தான் முருகன். அவை போனல் அவனது அகங்காரம் குறையும் என்று எண்ணினன். ஆனல் அகங்காரத்திற்குக் காரணமான பலம் குறையக் குறைய அவனது அகங்காரம் மிகுதி யாயிற்றே தவிரக் குறையவில்லை.

முருகனது திருவுள்ளம்

'சூரனுக்கு அருள் செய்தால் அதனை ஏற்கக் கூடிய தகுதி அவனுக்கு உண்டா? உள்ளம் உருகுவானு?' என்று சோதனை செய்ய எண்ணினன். 'இவ்வளவு காலம் நம் முன் நின்று போர் செய்தானே; நம் அழகைக் கண்டாலே எல்லோரும் மனம் உருகுவார் களே! இவன் உருகாமல் இருக்கிருனே!' என்று திருவுள்ளத்தில் எண்ணம் பிறந்தது. அப்போது உண்மை தெரிந்தது.

சூரபன்மாவின் கண்ணுக்கு முருகன் வடிவம் தெரிந்ததே தவிர அழகு தெரியவில்லை. அவன் மிகவும் பெரிய வடிவத்தைக் கொண்டிருந்தான். அவனுடையகண்ணுக்கு முருகப் பெருமானது திருவுருவம் மிகச் சின்ன வடிவமாகத் தோன்றியது. அதனல் அழகு தோன்றவில்லை.

இது எப்படி இயல்பாக இருக்கும் என்று கேட்கலாம். நம் வீடுகளில் எறும்புகள் வரிசை வரிசையாகச் செல்வதைப் பார்க்கி ருேம். அந்த எறும்புகளில் ஓர் ஆண் எறும்புக்குக் கல்யாணம் நடக்கிறது. மணமகள் எறும்பு அழகாகத்தான் இருக்கும். நமக்கு அந்த எறும்புகளின் வடிவம் தெரியுமேயொழிய அழகு தெரிவ தில்லை நம் கண்ணுக்கு அவை மிகச் சிறியனவாக இருக்கின்றன.

அது போல் சூரனுக்கு முருகப் பெருமானுடைய வடிவு தெரிந் ததேயன்றி அழகு தெரியவில்லை. ஆகவே, அவன் தன்னுடைய அழகை நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று முருகப் பெருமான் பெரிய வடிவத்தை எடுத்துக் கொண்டான். கண் மங்கிப் போனவர்களுக்குச் கொட்டை எழுத்துப் புத்தகத்தைக் கொடுத்து, கையில் பூதக் கண்ணடியையும் கொடுப்பதைப்போல முருகப் பெருமான் தன்னுடைய விசுவரூபத்தைக் காட்டியதோடு சிறிது ஞானத்தையும் கொடுத்தான். எப்படியாவது அவன் தன்னைக் கண்டு மனம் உருகி நிற்க வேண்டுமென்பது முருகனுடைய

திருவுள்ளம். ஆகவே அவன் அவனுக்குச் சிறிது உணர்ச்சியைத் தந்தான்.

இறுதியும் முதலும் இல்லா இப்பெரு வடிவந் தன்னைக்
கறைவிடம் உறழும் சூரன் கண்டுவிம் மிதத்தின் நிற்ப
அறிவரும் உணர்தல் தேற்று ஆறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் உணர்ச்சி நல்க, இனையன செப்பல் உற்றான்.

(சூரபன்மன் வதை. 430.)

[கறை விடம் உறழும் சூரன் - கறுப்பாகிய விடத்தை ஒத்த சூரன். விம்மிதத்தின் - வியப்பினால்.]

எம்பெருமானுடைய பெரிய திருவடிவத்தைச் சூரபன்மன் பார்த்தான். முருகப் பெருமானுடைய அழகு முழுக்க அவனுக்குத் தெரிந்தது. அவன் கையிலுள்ள ஆயுதங்கள் நழுவின. அவனுக்குப் பெரிய வியப்பு உண்டாயிற்று. அந்த உருவப் பேரழகில் ஈடுபட்டான். இதற்கு முன்னாலே அவன் பார்த்தாலும் ஞானம் இல்லாத பார்வையாக இருந்ததனால் உண்மை தெரியவில்லை. இப்போது ஆண்டவன் ஞானம் தந்ததனால் நன்றாகப் பார்த்தான்.

அறிவுக் கண்

வெறும் கண் கொண்டு பார்க்கிற பார்வை சிறப்புடையது அன்று. அறிவோடு சேர்ந்திருந்தால்தான் பார்வை சிறப்புடையதாக இருக்கும். அறிவு இல்லாத கண் பார்வை அரைப் பார்வை. நாம் பார்க்கிற பார்வைக்கும் குழந்தை பார்க்கிற பார்வைக்கும் வேறுபாடு உண்டு.

ஒரு சின்னஞ் சிறு குழந்தை கூடத்தில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. அப்போது ஒரு நாகப் பாம்பு அதன்முன் படம் எடுத்து ஆடுகிறது. குழந்தை அந்தப் படத்தின் பளபளப்பைக் கண்டு அதைப் பிடிக்கப் போகிறது. அந்தக் குழந்தைக்குப் பாம்பின் இயல்பு தெரியாது. கண்ணில் கண்ட பளபளப்பில் மயங்கி அதைப் பிடிக்கச் செல்கிறது. அந்தக் குழந்தையின் தாய் அப்போது வருகிறாள். அவளுக்கும் அந்தப் பாம்பின் பளபளப்புத் தெரிகிறது. அவளுக்கு அறிவு என்ற கண்ணும் உண்டு. ஆகையால் பாம்பைப் பார்த்தவுடன் திடுக்கிட்டுத் தன் குழந்தையை எடுத்துக் கொண்டு, பாம்பை அடிக்க ஓடுகிறாள். இரண்டு பேரும் நாகப் பாம்பின் படத்தைப்

பார்த்தாலும் குழந்தை தன் முகக் கண்ணேடு பார்த்தது. தாயோ தன் முகக்கண்ணேடு, அறிவாகிய அகக்கண்ணேடும் பார்த்தாள். இப்படிப் பார்த்த பார்வையே முழுப் பார்வை, குழந்தை பார்த்த பார்வையோடு நின்றிருந்தால், அதற்குத் தீங்கு வந்திருக்கும். அந்தப் படத்திடையே தன் குழந்தையைக் கொல்லும் நஞ்சு இருக்கிறது என்பதை அறிவினுல் உணர்ந்து கொண்டவள் தாய். அதனுல் குழந்தையைக் காப்பாற்றினுள்.

கல்வியினுல் அறிவு உண்டாகும். நம்முடைய கண்கள் பொருளேப் பார்த்தாலும் கூட, அவற்றைப் பற்றிய முழு அறிவு கல்வியினுல் கிடைக்கும்.

"கண்ணுடையார் என்பவர் கற்ரோர் ; முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்." (குறள்)

கற்றவர்களுக்கும் கண் இருக்கிறது. கல்லாதவர்களுக்கும் கண் இருக்கிறது. கல்வி கற்றவர்கள் கண்ணுடையவர்கள் என்ருல். கல்லாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் என்று சொல்ல வேண்டும், புண் உடையார் என்கிருர் **வள்ளுவர்**. ஒரு குழந்தை கீழே விழுந்தது. அதன் காலில் ஒரு சிறிய காயம் பட்டிருக்கிறது. தாய் அதைக் குளிப்பாட்டுகிருள். அதன் உடம்பில் அவள் கையை வைத்துத் தேய்க்கும்போது அந்தக் குழந்தை அழுகிறது. காரணம், அந்தக் காயத்தில் கை பட்டுவிட்டது. புண்ணில் கை பட்டால் எரியும். கண்ணில் கை பட்டாலும் எரியும். படிக்காதவர்களுக்குக் கை பட்டால் எரியுமளவுக்கே கண் இருக்கிறது. அதுவன்றிப் பொருளே ஆராய்ந்து பார்க்கிற தன்மை அதற்கு இல்லே. அதனுல் படிக்காதவர்களது கண்ணேப் புண் என்று சொன்னுர் வள்ளுவர்.

முருகன் கருணே

சிலப்பதிகாரத்தில் மூன்று போர்களின் கால அளவைச் சொல்கிருர் இளங்கோவடிகள். பதினெட்டு நாள் நடந்தது ஒரு போர். பதினெட்டு மாதம் நடந்தது மற்ருென்று. பதினெட்டு வருடங்கள் நடந்தது ஒரு போர். பதினெட்டு நாள் நடந்த போர் தான் மகாபாரதப் போர். பதினெட்டு மாதம் நடந்தது இராம

இராவண யுத்தம். பதினெட்டு ஆண்டு நடந்தது தேவாசுர யுத்தம்.* தேவாசுர யுத்தம் என்று முருகனுக்கும் சூரபன்மாவுக்கும் நடந்த யுத்தத்தைச் சொல்வார்கள். பத்து நாள் என்று கந்த புராணம் சொல்லுகிறது. அது சண்முகமானம்போலும்! சிலப்பதி காரம் நம் கணக்குப்படி 18 வருஷம் என்கிறது. இதைக் கேட்டால் நமக்கு என்ன தெரிகிறது? சூரபன்மன் அத்தகைய பலம் உடையவனா? அவனை வெல்வதற்கு முருகனுக்குப் பதினெட்டு ஆண்டு கள் பிடித்தன என்றால் முருகன் பலமற்றவன் போலிருக்கிறது என்று தோன்றும். பதினெட்டு ஆண்டுக் காலம் அவன் தன் பகைவனை அழிக்காமல் போர் செய்தான் என்றால், உண்மை என்ன? முருகப் பெருமான் சூரபன்மனை அழிக்க வேண்டுமென்றே எண்ணவில்லை. அவனோடு போர் செய்வதாகவே அவன் எண்ணவில்லை, அவனைத் திருத்த எண்ணினான். ஆகையால் நெடுங்காலம் போரிட்டுப் பார்த்தான். அவன் திருந்தவில்லை.

பக்குவம் வேண்டும்

இறைவனுடைய திருவருள் கிடைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ள ஒரு பக்குவம் வேண்டும். பக்குவம் இல்லாதவர்களுக்குத் திருவருள் பலிக்காது. **மாணிக்கவாசகர்** இதைச் சொல்கிறார். "ஆண்டவனே நீ, உன் பேரருளால் கருணை வழங்குகிறாய். ஆனால் அதை எனக்கு அநுபவிக்கின்ற திறமை இல்லை. நீ உன் அருள் என்ற அமுதத்தை வழங்கினாய். நான் வாரிக்கொண்டு விழுங்கினேன். எனக்குப் பக்குவம் இல்லாமையினால் விக்கிவிட்டது. அந்த விக்கல் தீரவும், அருள் அமுதம் பயன்படவும் தண்ணீர் கொடு" என்று வேண்டுகிறார்.

"வழக்குகின் றாய்க்குஉன் அருள்ஆர் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேன்என் விதிஇன்மையால்;
தழங்குஅரும் தேன்அன்ன தண்ணீர் பருகத்தந்து உய்யக்கொள்ளாய்;
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே."

---

* "உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டியென்று, யாண்டும் மதியும் நாளும் கடிகையும், ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள" (சிலப். நீர்ப்படைக். 8-10) என்பதையும், 'உயிர்த்தொகை உண்டனவாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற் றிரட்டி என்று அவற்றோடே கூட்டி எண்ண, தேவாசுரயுத்தம் பதினெட் டாண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த யுத்தம் பதி னெட்டு நாழிகையிலும் முடிந்த வென்று எண்ண' என்ற அதன் உரையையும் காண்க.

சூரபன்மனுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று எண்ணிய முருகன் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதி அவனிடத்து இருக்கிறதா என்று பார்த்தறிய நினைத்தான். தன் விசுவரூபத்தைக் காட்டி, சிறிதளவு அறிவைக் கொடுத்தான். அந்த அறிவு இப்போது வேலை செய்யத் தொடங்கியது.

சூரபன்மனுடைய உணர்ச்சி

சூரபன்மன் முருகப் பெருமானின் திருவுருவத்தைக் கண்டு, 'இதுவரைக்கும் நாம் இந்தப் பெருமானின் தன்மையை அறிந்து கொள்ளவில்லையே!' என்று நினைத்தான். 'யாரோ சிறு பிள்ளை, மயில் மீது வந்தான். நேற்றுப் பிறந்த பிள்ளை என்றெல்லாம் சொன்னேன். பச்சைப் பாலன் என்று இழித்துப் பேசினேன். இப்போதுள்ள தன்மையை நான் தெரிந்து கொள்ளவில்லையே!' என்று இரங்கினன். இப்போது அவன் என்ன கண்டான்? 'இவன் திருமால் பிரமன் முதலிய தேவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மூலமாக இருக்கின்ற பொருள் என்றல்லவா தெரிகிறது? இதை நான் இதுவரைக்கும் தெரிந்து கொள்ளவில்லையே!' என்று கழிந்ததற்காக இரங்கினன்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய
குமரன் தன்னைப்
பாலன்என்று இருந்தேன் அந்நாள்; பரிசிவை
உணர்ந்தி லேன்யான்;
மால்அயன் தமக்கும் ஏனை வானவர்
தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம்
மூர்த்தி அன்றே?

(சூரபன்மன் வதை. 433.)

[கோலம் - அழகு. அந்நாள் - இதற்கு முன்பு.]

'இதற்கு முன்னல் ஒற்றனாக வந்த வீரவாகு முருகப்பெருமானது பெருமையை எல்லாம் எடுத்துச் சொன்னன். ஞானசாகரனாகிய எம்பெருமான் விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலைமையில் இருக்கிற பராபரன் என்று சொன்னன். நான் அவற்றை உண்மையென்று கொள்ளவில்லை; ஏதோ பைத்தியக்காரன் பேச்சு என்று நிராகரித்து விட்டேன். இப்போது அல்லவா அவன் சொன்னது உண்மை

என்று தெரிகிறது? இவன்தான் ஈசன் என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன்."

ஒற்றென முன்னம் வந்தோன் ஒருதனி
வேலோன் தன்னைப்
பற்றுஇகல் இன்றி நின்ற பராபர
முதல்வன் என்றே
சொற்றனன்; சொற்ற எல்லாம் துணிபெனக்
கொண்டி லேனல்;
இற்றைஇப் பொழுதில் ஈசன் இவன்எனும்
தன்மை கண்டேன்.

(சூரபன்மன் வதை. 434.)

[பற்று இகல் - விருப்பு வெறுப்பு. துணிபு - உண்மை.]

"சிறப்புடைய இந்தக் குமரநாயகன் கொண்ட இந்த வடிவத்தில் ஒளி இருக்கிறது. சிறப்பு இருக்கிறது. இளமை இருக்கிறது. அழகு இருக்கிறது. இவைகள் எல்லாம் உலகத்தில் வேறு யாருக்கு இருக்கின்றன? பல முறை இந்த வடிவத்தைப் பார்த்தாலும் தெவிட்டவில்லையே! கண்ணால் மேலும் மேலும் காணவேண்டுமென்ற ஆவலே மீதூர்கிறது" என்று வியந்து பேசினன்.

சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெரு
வடிவந் தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும்
எழிலும் எல்லாம்
ஆர்க்குஉள உலகில், அம்மா! அற்புதத்
தோடும் பல்கால்
பார்க்கினும் தெவிட்டிற் றில்லை இன்னும்என்
பார்வை தானும்.

(சூரபன்மன் வதை. 437.)

[ஏர்க்கு உறும் - எழுச்சிக்கு ஏற்றபடி அமைந்த.]

முருகனுடைய அழகு

அடுத்தபடியாக அந்தப் பெருமானுடைய அழகை வியந்து பேசுகிறான். முருகன் என்பதற்கு முருகு உடையவன் என்று பொருள். முருகு என்பதற்கு இருபதுக்கும் மேற்பட்ட பொருள் உண்டு. அவற்றில் நான்கு முக்கியமானவை. **திருமுருகாற்றுப்**

படையில் அந்த நான்கையும் நினைந்து குறிப்பாக நக்கீரர் பாடுகிறார். இளமை, அழகு, மணம், அருள் என்பவை அந்த நான்கு.

"மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி"

மணம் என்பது ஞான மணம்; தெய்வத்து : அருள்; இள - இளமை; நலம் என்பது அழகு.

முருகப் பெருமான் என்றைக்கும் அழியாத அழகு உடையவன்.

"என்றும் இளையாய் அழகியாய்"

என்ற பழைய பாட்டு ஒன்று சொல்கிறது.

சோதி வடிவத்தை உடைய ஆண்டவனைப் பார்க்கப் பார்க்கச் சூரபன்மாவினுடைய கண் கூசவில்லை. மேலும் மேலும் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் மீதூர்ந்தது.

இப்போது முருகப் பெருமானுடைய அழகைப் பற்றிச் சொல்கிறான். உலகத்தில் அழகைப் பற்றி எண்ணும்போது மன்மதன் நினைவு வருகிறது. அவனை அழகுக்கு அரசன் என்று சொல்வார்கள். அவனுக்கும், இவனுக்குந்தான் எத்தனை வேறுபாடு! வேள் என்ற பெயர் காமனுக்கும் உண்டு. முருகப் பெருமானுக்கும் உண்டு. காமன் கருவேள். முருகன் செவ்வேள். காமனுடைய காரியம் எல்லாம் இருட்டில் நடைபெறும். முருகப் பெருமான் வரும் இடங்கள் எல்லாம் ஒளி நிரம்பி இருக்கும். இருட்டுக்கும் திருட்டுக்கும் சொந்தம் உண்டு. ஆனால் முருகப் பெருமானுடைய திருவருளால் எங்கேயும் ஒளி, ஞானம் இவைகளே பரவி இருக்கும், பிறப்புக்குக் காரணமானது மாரனுடைய செயல். பிறப்பை நீக்குவதற்குக் காரணமானது குமாரனுடைய திருவருள். எம்பெருமானுடைய பேரழகுக்கு இன்னது என்ற எல்லை கிடையாது.

இப்போது அவனுடைய திருவடியைப் பார்த்துச் சூரபன்மன் சொன்னான்: "இந்தப் பெருமானுடைய திருவடியின் அழகுக்கு ஆயிரம் கோடி காமர்களுடைய அழகு எல்லாம் திரண்டு வந்து நின்றாலும் ஒப்புமை யாகுமா?" என்று வியந்தான்.

ஆயிரம் கோடி காமர் அழகெலாம்
திரண்டுஒன்று ஆகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம்
சரணந் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது என்றிடின்
இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார்
வகுக்க வல்லார்?

(சூரபன்மன் வதை. 439.)

எம்பெருமானுடைய சரணத்தை, 'விமலமாம் சரணம்' என்று சொன்னான். மலம் இல்லாத திருவடி என்று பொருள் கொள்வதைவிட, தான் சென்று சேரும் இடங்களை எல்லாம் மலம் அற்றதாக ஆக்கும் திருவடி என்று சொல்வது பொருத்தம்.

அந்தப் பெருமானது சரணாரவிந்தத்தின் எழிலை, "தூய நல் எழில்" என்று சொல்கிறான் சூரபன்மன். அழகில் தூய எழில், மாய எழில் என்று இரண்டு வகை உண்டு. மாய எழில் நம் உள்ளத்தில் விகாரத்தை உண்டாக்கும். தூய எழில் தூய்மையை உண்டாக்கும். பொதுவாக எழில் என்று சொன்னால் மங்கைமாரை நினைக்கிறோம். 'மங்கைமாரின் எழில் மயக்காமல் என்ன செய்யும்? மாமுனிவர்களையே மயக்கிவிடும்' என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் வேறோர் எழில் இருக்கிறது. நம் பக்கத்து வீட்டில் கொழு கொழு என்று ஒரு குழந்தை வளர்கிறது: அந்தக் குழந்தை வெளியில் வரும்போது, அதைக் கட்டிப் பிடித்து முத்தமிடுகிறோம். அப்படி முத்தமிடும்போது நம் உள்ளத்தில் விகார உணர்ச்சியா உண்டாகிறது? நாமே குழந்தை ஆகிவிடுகிறோம். மங்கையை முத்தமிடுவதற்கும், குழந்தையை முத்தமிடுவதற்கும் வேறுபாடு நமக்குத் தெரிகிறது. குழந்தையை முத்தமிடுகிற போது விகாரம் இல்லை. நாமும் குழந்தையாகி விடுகிறோம். உலகக் குழந்தையே இப்படி என்றால் தெய்வக் குழந்தையாகிய முருகப் பெருமானின் அழகு நம் விகாரத்தைப் போக்கி நம்மை அருள் இன்பத்தில் ஆழ வைக்கும் என்பதில் என்ன தடை? "ஆயிரம் கோடி காமர்களுடைய அழகும் எம்பெருமானுடைய சரணத்திலுள்ள தூய எழிலுக்கு ஆற்றாது" என்று சூரன் சொன்னான்.

மன்மதன் அழகு மாய அழகு. உள்ளத்தை மயக்கும் அழகு அது. உள்ள மயக்கத்தை நீக்கும் அழகு எம்பெருமானுடைய அழகு. "இவன் திருவடி அழகே ஆயிரம் கோடி காமர்களுடைய அழகுக்கு சரியாகாது என்று சொன்னால் இவன் வடிவம் எல்லாவற்றுக்கும் எங்கே நான் உபமானம் காண்பேன்?" என்றான் சூரபன்மன்.

இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?

'இனைய தொல்லோன்' என்று இங்கே சொல்கிருன். 'இப்படி இருக்கிற பழையவன்' என்று பொருள். "நான் இவனைப் பாலன் என்று எண்ணி இருந்தேன். அநாதிகாலமாக இருக்கிற மிகப் பழையவன் என்றல்லவா இப்போது தோன்றுகிறது, என் உள்ளத்தில்?"

இனைய தொல்லோன்—இங்கே இருக்கும் பழையவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு என்று இரண்டு சுட்டுகள் உண்டு. அகரச் சுட்டு சேய்மையில் இருப்பதைச் சுட்டுவது; இகரச் சுட்டு பக்கத்தில் இருப்பதைச் சொல்வது. ஆண்டவன் சேய்மையில் இருப்பவன். அவனை அவன் என்றும் அது என்றும் வேதங்கள் சொல்லும். வேதமே அவனைத் தூரத்தில் இருக்கும் பொருளாக அவன் என்று சொல்கிறது. ஆனல் இங்கே சூரபன்மன், 'இங்கே இருக்கும் தொல்லோன்' என்று சொல்கிருன், ஏன்? தென்மொழி வேதமாகிய தேவாரம் 'இவன்' என்று சொல்கிறது.

"பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே"

என்று **ஞானசம்பந்தப் பெருமான்** பாடுகிருர். சிவபெருமான் அந்தப் பெருமானுக்கு முன்னல் தோன்றி மறைந்த பிறகு பாடிய பாட்டு இது. பக்கத்தில் இருந்த போது பாடினலும் பொருள் உண்டு. அவர் மறைந்த பிறகு அவன் என்று அல்லவா சொல்ல வேண்டும்? இங்கே **புறநானூற்றுப்** பாட்டு ஒன்று நினைவு வருகிறது.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் ஒரு சபதம் செய்கிருன். 'சிங்கம் போலச் சினந்து மிக்க படையுடைய வேந்தர்கள் எல்லாம் ஒருங்கு கூடி என்னேடு போர் செய்ய வரும்போது அவர்களிடம் நான் தோற்றேன் ஆயின் இன்ன இன்ன இழிவு எனக்கு உண்டாகுக' என்று சபதம் செய்கிருன். அப்போது, 'என்னுடைய மனைவியினின்றும் பிரிவேனக' என்று சொல்கிருன்.

"சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக"

என்கிருன். அவன் மனைவி அந்தப்புரத்தில் இருக்கிருள். அந்தப் புரத்திலுள்ள மனைவியை அவள் என்றல்லவா சொல்ல வேண்டும்?

' இவள் ' என்கிறுனே என்றல், நெஞ்சுக்கு அணியளாதலின் இவள் என்றுன். அதாவது உடம்பு தூரத்தில் இருந்தாலும் உள்ளத்தில் இருக்கிறுள். அதனல் இவள் என்று அணிமைச் சுட்டாகக் கூறினுன். இப்படி உரைகாரர் எழுதுகிறுர்.

இதற்கு வேறு சான்று எதையும் தேட வேண்டாம். நம்முடைய நாட்டில் ஒரு பெண் இருக்கிறுள். அவள் கணவன் லண்டனில் படிக்கிறுன். அந்தப் பெண் இந்த ஊரிலே இருக்கிறுள். அவளிடம், "உன் கணவர் எங்கே?" என்றல், "இவர் லண்டனில் இருக்கிறுர்" என்று சொல்வாள். பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலே இருக்கிற கணவனை அவள் இவர் என்று சொல்கிறுளே என்றல், அவள் நெஞ்சில் அவன் எப்போதும் இருப்பதனல் அப்படிச் சொல்கிறுள்.

ஆகவே, சூரபன்மன் தனக்கு முன்னே இவ்வளவு காலமாக முருகன் நின்றுலும் உணர்ந்து கொள்ளவில்லை, இப்போது உணர்ந் தான். அவன் நெஞ்சில் முருகன் இருக்கிறுன். ஆகையால்,

இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?

என்று **'இனைய தொல்லோன்'** என்று அண்மைச் சுட்டினல் சொல்கிறுன்.

இறைவன் திருவடி

இங்கே மற்றெரு நயத்தையும் காணவேண்டும். முருகப் பெருமான் பெரிய திருவடியைக் கொண்டவன். அந்தத் திருவடியின் அழகிலே தன் உள்ளத்தைச் செலுத்தி எண்ணிப் பார்க்கிறுன் சூரபன்மன். ஆண்டவனது வடிவத்தைக் காணுகின்ற அடியார்கள் ஒருவாறு எல்லா அங்கங்களையும் பார்த்தாலும் தங்களுக்குரிய புகலிடமாக அவன் திருவடியைப் பார்ப்பார்கள். ஒரு குழந்தை தாயின் மடியில் தவழ்கிறது. அவள் இடையில் ஏறுகிறது. ஆனல் பசி வந்தால் பால் தரும் அங்கத்தையே நோக்கும். அது போல உருகுகின்ற அன்பர்கள் இறைவன் திருவடியையே பார்ப்பார்கள். இதனை நினைந்தே **திருவள்ளுவர்** கடவுள் வாழ்த்தில் இறைவன் திருவடியைச் சொல்கிறுர். ஆண்டவனுடைய அடியை லட்சியமாகக் கொண்டவர்களானதால் அவர்களுக்கு அடியார்கள் என்ற பெயர்

ஏற்பட்டது. இங்கே சூரபன்மன் மெய்யடியான் ஆகிவிட்டான். ஆகவே,

செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில்

ஈடுபட்டுக் கண்டு சொக்கிப் போகிருன்.

பரிபாடலில் இறைவனுடைய திருவடியைப் பற்றி ஒரு பாட்டு வருகிறது. "உன்னைக் காட்டிலும் உன் திருவடிகள் எனக்குச் சிறந்தவை" என்று சொல்கிருர் புலவர்.

"நின்னிற் சிறந்தன நின்திருவடியவை"

என்பது பாட்டு. இது எப்படிப் பொருத்தமாக இருக்கலாம் என்ற கேள்வி எழும். ஆண்டவன் அங்கி; திருவடி அங்கம். ஆண்டவனை விட ஆண்டவன் திருவடி சிறப்பாகும் என்ருல் அங்கியைவிட, அங்கம் சிறப்பானதா என்று தோன்றும். ஓர் உதாரணம் சொன்னல் நன்ருக விளங்கும்.

ஒரு வீட்டில் ஓர் ஏழை இருக்கிருன். அவனுக்கு ஒரு சின்னக் குழந்தை. அது அடிக்கடி அழும். அவனது பக்கத்து வீட்டில் பல மாடுகளை வைத்துக் கொண்டு பால் வியாபாரம் செய்கிறவன் இருக்கிருன். "ஏன் அந்தக் குழந்தை அழுகிறது?" என்று கேட்டபோது, "அது பாலுக்காக அழுகிறது, அவன் நல்ல பாலாக வாங்கி அழும்போதெல்லாம் கொடுக்க எங்கே போவான்? வயிற்றுக்குப் பால் போதாமல் அழுகிறது" என்று சொல்லத் தெரிந்து கொண்டான். தனக்குக் குழத்தை பிறந்தால் இப்படி யெல்லாம் அழவிடக் கூடாது என்று எண்ணினுன். சில காலத்துக் குப்பின் அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று எண்ணினுன். பல பசுக்களிடமிருந்து அண்டாவில் பால் கறந்தான். பத்துப் படிப் பால் உள்ள பாத்திரத்தை அப்படியே குழந்தை வாயில் சாய்ப்பானு? அண்டாவில் பால் இருந்தாலும், அதைக் குண்டாவில் எடுத்து வந்து, பாலோடையில் விட்டுக் குழந்தைக்குப் புகட்டுவான். அண்டா இருந்தாலும், குண்டா இருந்தாலும், பாலோடை இருந்தாலும் குழந்தைக்கு நேரே பயன் தருவது பாலோடையின் மூக்குத்தான். அது போல ஆண்டவனுடைய அடியவர்களுக்கு அணிமையிலிருந்து

நலம் தருவது அவனுடைய திருவடிதான். ஆண்டவன் வடிவம் மிகப் பெரியது. ஆனல் அவன் திருவடி நிலத்திற் பதிந்து அடியவர் களுக்கு அண்மையில் இருக்கும். அதைப் பற்றிக் கொண்டால் எல்லா வகையான இன்பமும் கிடைக்கும்.

தாய் ஆறடி உயரம். தவழ்ந்து வருகிற குழந்தை அன்னையின் கால்களைப் பற்றிக்கொண்டவுடன் அவள் அதைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொள்கிருள். அப்படி, நாம் இறைவனது திருவடியைப் பற்றிக்கொண்டால் எல்லாவற்றுக்கும் மேலான உயர்ந்த இடத்திற்கு ஆண்டவன் நம்மை ஏற்றி விடுவான்.

ஆண்டவனுடைய பேரழகை அவனுடைய பக்தர்கள் எல்லாம் பாராட்டுகிருர்கள். அழகான குழந்தையை யாவரும் பாராட்டு வார்கள். ஆனல் பகைவனுக இருக்கிறவன் பாராட்டினல் அந்த அழகு உண்மை யாகும். இங்கே பகைவனுக இருக்கிற சூரபன்மன் ஆண்டவன் அழகில் சொக்கிப்போய்ப் பாராட்டுகிருன்.

அருணகிரியார்,

"மாலோன் முருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான்முகனே"

(கந்தர் அலங்காரம்)

என்று பாடுகிருர். 'நாலாயிரம் கண் இல்லையே!' என்று கூறுவது முருகப் பெருமான் பல கண்களால் பார்ப்பதற்குரிய பேரழகன் என்பதைக் குறிப்பிக்கிறது.

எல்லையிறந்த அழகு

இப்போது சூரபன்மன் இறைவனுடைய மேனி அழகு முழு வதையும் பார்த்தான். ஆண்டவனைப் பாட வேண்டுமானல் அடி முதல் முடிவரைக்கும் பாட வேண்டும். அதைப் பாதாதி கேசம் என்பார்கள். உண்மை அடியானுக அவன் எம்பெருமானின் திருவடி முதல் முடி வரைக்கும் கண்டு வியக்கிருன். 'பாதாதி கேசம் பார்த்தால் எத்தனை காலம் பார்த்தாலும், எப்படிப் பார்த்தாலும் என்னுடைய கண்ணுல் பார்த்து அடங்காது போல் இருக்கிறதே. கண்ணைக் காட்டிலும் வேகமானது கருத்து. மனத்தினல் நினைக்கலாமோ

என்ருல் மனத்திற்கும் அவன் அழகு அடங்காது'' என்று சொல்கிருன். ''என்பால் எம்பெருமான் போர் செய்ய வந்திருக்கிருன். இது எனக்கும் அவனுக்கும் நடக்கும் போர் என்ரு சொல்வது? எனக்கு அருள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு அவன் வந்திருக்கிருன். இது அவனுடைய அருள்'' என்கிருன்.

அண்ணலார் குமரன் மேனி அடிமுதல்
முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம்
நோக்கி ஞலும்
கண்ணிஞல் அடங்காது; உன்னின் கருத்திஞல்
அடங்காது; என்பால்
நண்ணிஞன் அமருக்கு என்கை அருள்என
நாட்ட லாமே.

(சூரபன்மன் வதை. 441.)

[ஊழி - யுகம். என்கை - என்பது.]

முருகன் திருவருள்

முருகப் பெருமான் சூரபன்மனை ஆட்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். அவனுல் ஆட்கொள்ளப்பட வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லாதவன் அந்த அசுரன். உண்மையில் ஆண்டவனுக்கு நம்மை ஆட்கொள்ள வேண்டுமென்ற அருள் மிகுதியாக இருக்கிறது. நாம் அவனை எண்ணமல் இருந்தாலும் அவன் நம்மை எண்ணிக்கொண்டு இருக்கிருன்.

ஒரு புஞ்சைக் காடு, அதில் ஒரு பெரிய கிணறு; அதில் தண்ணீர் இறைக்கிறபோது ஒரு பெண் குடத்தைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டாள். அவள் கணவன் வந்தான். அவள் அவனிடம், ''குடத்தைக் கிணற்றுக்குள் போட்டு விட்டேன்: யாரையாவது ஆளைக் கூப்பிடுங்கள், எடுக்கவேண்டும்'' என்ருள். ''ஏன், என்னைப் பார்த்தால் ஆளாகத் தோன்றவில்லையா?'' என்று சொல்லிக்கொண்டே அவன் குடத்தை எடுக்கக் கிணற்றுக்குள் குதித்தான். ஒரு தரம் மூழ்கினன். குடம் தட்டுப் படவில்லை. மறுபடியும் மூழ்கினன்; குடம் கிடைக்கவில்லை. எட்டுத் தடவை மூழ்கியும் அகப்படவில்லை. ஒன்பதாவது தடவை மூழ்கினபோது தான் குடம் அகப்பட்டது. குடம் ஒரு தரந்தான் மூழ்கியது. அந்தக்

குடத்திற்குரியவனே அந்தக் குடத்தை எடுக்க ஒன்பது தடவை மூழ்கினன். 'உடைமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு' என்பார்கள். அதுபோல நாம் பிறவிப் பெருங்கடலில் ஒரு முறை விழுந்து விட்டோம். நம்மைக் கரையேற்ற இறைவன் எத்தனையோ வடிவங்களை எடுத்துக் கொண்டு வருகிருன். அவன் நம்மிடத்திலுள்ள பரம கருணையினலே என்ன என்னவோ உபாயம் செய்து நம்மைக் கரையேற்ற எண்ணுகிருன்.

இதைச் சூரபன்மன் நன்ருகத் தெரிந்துகொண்டு சொல்கிருன். "எம்பெருமான் என்னை ஆட்கொள்ள வேண்டுமென்று எண்ணினன். நான் அவன் இருக்கும் கோவிலுக்குப் போகமாட்டேன். அவன் இருக்கும் திசையை நோக்கமாட்டேன். என்னை அவன் இருக்கும் கோவிலுக்கு வா என்ருல் நான் போவேனு? கோவிலுக்குப் போகிறவர்களையும் தடுத்து நிறுத்துகிறவன் நான். ஆகவே, என்னை எப்படி ஆட்கொள்ள வேண்டுமென்று முருகன் பார்த்தான். என்னேடு போர் செய்வது என்று தீர்மானித்தான். "போருக்கு என்று சென்ருல், அவன் மானம் தாங்காமல் போர் செய்ய வருவான். போர்க்களத்தையே நம் சந்நிதியாக்கலாம்" என்று திருவுள்ளம் கொண்டு, போர் செய்வானைப்போல வேலை எடுத்துக்கொண்டு என்னை ஆள வந்தான். தன் அழகு வலையை வீசி என்னை உருக்கி என்னை ஆட்கொள்ளவே வந்தான்' என்று எண்ணுகிருன்.

இங்கே ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். சாலையோரத்தில் இருக்கிற மாமரத்தில் ஒரு குரங்கு இருக்கிறது. அந்த மாமரத்தில் நிறையக் காய்கள் உள்ளன. அந்தப் பக்கமாகப் போகிற பையன் ஒருவனுக்கு மாங்காயைப் பார்த்தவுடன் நாக்கில் ஜலம் ஊறுகிறது. மரத்திலே குரங்கு இருப்பதைப் பார்க்கிருன். சாலையோரத்தில் இருந்த சிறு கல்லை எடுத்துக் குரங்கின் மேலே வீசுகிருன். மனிதன் செய்வது போலக் குரங்கும் செய்யுமல்லவா? மரத்தில் கல்லா இருக்கிறது? குரங்கு மரத்தில் இருந்த மாங்காயைப் பறித்து வீசுகிறது. அவனுக்கு மாங்காய் கிடைக்கிறது. அவன் செய்த தந்திரம் பலித்தது. அப்படி, சூரபன்மாவை ஆட்கொள்ள அவனேடு போர் செய்வதாக வந்தான் முருகன். சூரனும் முருகனுடன் போர் செய்ய வந்தான். வந்து தன் எழிலுருவத்தைக் காட்டி உருகச் செய்தான்.

"அவன் போர் செய்ய வந்தது என்னை ஆட்கொள்வதற்கு அல்லவா ?" என்று சூரன் சொல்கிறான்.

என்பால்
நண்ணினன் ஆமருக்கு என்கை அருள் என நாட்டலாமே

என்கிறான். 'அருள் என நவிலலாமே' என்று கூடச் சொல்லவில்லை. நிச்சயமாகச் சொல்லலாம், துணிச்சலாகச் சொல்லலாம் என்ற பொருளில் 'நாட்டலாம்' என்று சொல்கிறான்.

'சண்டை போட வந்தவனை, அருள் செய்ய வந்தான் என்று எப்படிச் சொல்லலாம் ?' என்று கேட்கலாம். இறைவன் இன்னபடி தான் அருள் செய்வான் என்று வரையறையாகச் சொல்ல முடியாது. சூரனுடன் செய்த போர் பார்ப்பதற்குப் போர் போல இருந்தாலும் அது தனியான அருளாகத்தான் முடிந்தது.

ஒரு மிட்டாய்க் கடை: கோவாவினால் பச்சை மிளகாய், பாகற் காய், எலுமிச்சம்பழம் போல மிட்டாய்கள் பண்ணி வைத்திருக்கிறான். குழந்தை, "ஒரு பச்சை மிளகாய் கொடு ; ஒரு பாகற்காய் கொடு" என்று காசு கொடுத்து வாங்குகிறது. பார்ப்பதற்குப் பச்சை வண்ணத்தோடு பச்சை மிளகாய் போலவே இருந்தாலும் அது உறைக்குமா? பாகற்காய் போல இருக்கும் மிட்டாய் கசக்குமா ? எல்லாம் கோவாவினால் ஆனவை. பாகற்காயைத் தின்றாலும் இனிக்கும், பச்சை மிளகாயைத் தின்றாலும் இனிக்கும் என்பது குழந்தைக்குத் தெரியும். அதுபோல, முருகப் பெருமான் செய்வது போர் போலத் தோன்றினாலும் அது அருள்தான். அதைச் சூரன் தெரிந்து கொண்டான்.

சூரன் மெய்ப்பாடு

அவனிடம் இருந்த கோபம் எல்லாம் போய்விட்டது. யுத்தம் செய்ய வேண்டுமென்றிருந்த ஊக்கம் போய்விட்டது. உடம் பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது. கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகியது. முருகப் பெருமானிடம் முன்பு இல்லாத பேரன்பு பிறந்தது. அவன் உள்ளம் உருகியது. எலும்பெல்லாம் மெழுகு போலக் குழைந்தது.

திருகிய வெகுளி முற்றும் தீர்ந்தன;
 செருவில் ஊக்கம்
அருகியது; உரோமம் புள்ளி ஆயின;
 விழியில் தூநீர்
பெருகியது; இவன்பால் அன்பு பிறந்தன;
 தமியேற்கு உள்ளம்
உருகியது; என்பு தானும் உலமெழுகு
 ஆகும் அன்றே.

(சூரபன்மன் வதை. 442.)

[திருகிய - என் உள்ளத்தை மாற்றிய. வெகுளி - சினம். அருகியது - குறைந்தது.]

முருகப் பெருமான் இந்த நிலையைக் கண்டு மிகவும் அருள் கூர்ந்தான். சூரபன்மன் உருகும் தன்மை உடையவன் என்பதைத் தெரிந்து கொண்டான்.

அதற்கு மேல் சூரன் சொல்கிறான். இதுவரைக்கும் அவனுக்கு அகங்காரம் இருந்தது. நான் எனது என்ற பற்று இருந்தது. அதனால் உண்மையான ஞானம் வரவில்லை. அகந்தை போனால் ஞானம் உண்டாகும்.

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்
உளக்கோயிற் கேற்றும் விளக்கே"

(மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

என்று **குமரகுருபரர்** பாடுகிறார். உள்ளத்தில் அகந்தை என்ற கிழங்கு ஆழமாகப் பதிந்திருந்தது. அதிலிருந்து மயக்கமாகிய கொடி ஓடிக்கொண்டிருந்தது. அதனால் இருள் அடைந்து அங்கே யிருந்த பொருள் எதுவும் தெரியவில்லை. அந்த அகந்தைக் கிழங்கை அடியோடு அகழ்ந்து எறிந்து விட்டால், அப்போது மயக்கமாகிய கொடிகள் அற்றுப் போகும். அங்கே ஞான விளக்கை ஏற்றினால் பொருள்களின் உண்மையான நிலை தெரியும்.

அகங்காரம் போதல்

இப்போது சூரபன்மனுக்கு அகங்காரம் போய்விட்டது. அந்த இடத்தில் ஞானம் புகுந்தது. இவை சூரபன்மாவுக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்பதைத் தெரிவித்தன. அதற்கேற்றபடி சகுனங்கள் உண்டாயின. வலத் தோளும், வலக் கண்ணும் துடித்தன. அவன் சுற்றிப் பார்க்கிறான். இதற்குமுன் பார்த்த பார்வை வேறு.

இப்போது பார்க்கிற பார்வை வேறு. இதற்குமுன், 'எனக்கு வேண்டியவைகள், வேண்டாதவைகள்' என்ற பற்று இருந்தது. வேண்டியவற்றில் அன்பும், வேண்டாதவற்றில் கோபமும் எழுந்தன. தன்னுடையன அல்லாத பொருள்களைத் தன்னுடையவை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை எழுந்தது. இப்போது, எங்கே பார்த்தாலும் இறைவனுடைய வடிவமாகத் தோன்றியது. எல்லாம் அவனுடைய சொந்தப் பொருள் என்ற உணர்வு வந்து விட்டது.

தலையில் பெரிய கனமான மூட்டையைச் சுமந்து கொண்டு அங்கும் இங்கும் திரும்பாமல் வருகிறான் ஒருவன். மூட்டையைச் சுமைதாங்கி மேல் வைத்துவிட்டுக் கழுத்தைத் திருப்பி இரண்டு பக்கமும் பார்க்கிறான். அவன் கண்ணுக்கு அழகான பூஞ்சோலையும் மற்றக் காட்சிகளும் தெரிகின்றன. இதுவரைக்கும் அவற்றைக் காணவில்லையே என்று ஆச்சரியப்படுகிறான்.

அது போல, இங்கே சூரன் தன் தலைக்கனம், அகங்காரம் போன பிறகு பார்க்கிறபோது எல்லாமே இறைவனோடு தொடர்பு உடையன வாகத் தோன்றின. இதை அவன் சொல்கின்றான்.

போயின அகந்தை ; போதம் புகுந்தன ;
வலத்த வான
தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன ;
புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு
கின்ற ; விண்ணோர்
நாயகன் வடிவம் கண்டேன் ; நற்றவப்
பயன்ஈ தன்றோ ?

(சூரபன்மன் வதை. 413.)

[போதம் - ஞானம். வெளிப்படுகின்ற - உண்மையான உருவத்தோடு தோன்றுகின்றன.]

"இதற்கெல்லாம் என்ன காரணம் ? நல்ல தவத்தினால் பெறுகிற பயன் இது அல்லவா ? எம்பெருமான் வடிவத்தை நான் கண்டேன்." என்று அவன் சொல்கிறான்.

மானம் தடுத்தல்

மனத்தில் அகங்காரம் போக, அன்பினால் உள்ளம் உருக, உடம்பெல்லாம் புளகம் போர்த்து நின்ற சூரபன்மன் அடுத்தபடி

உடம்பினால் ஆண்டவனை வழிபட வேண்டுமென்று எண்ணினான். "அவன் திருவடிகளைப் பலமுறை வலம் செய்ய வேண்டும்; அவனை கைகுவித்து வணங்க வேண்டும்; அவன் பாதத்தில் வீழ்ந்து தலையால் வணங்க வேண்டும்; தீமை எல்லாம் போய் அவனுக்கு அடிமையாக வாழ வேண்டும் என்று என் நெஞ்சம் சொல்கிறது" என்றான்.

அப்போது எம்பெருமான் சற்றே திரை போட்டான். உடனே, "இப்படி எல்லாம் ஆசை இருந்தாலும் மானம் தடுக்கிறதே!" என்று சூரன் சொன்னான்.

சூழுதல் வேண்டும் தாள்கள்; தொழுதிடல்
வேண்டும் அங்கை;
தாழுதல் வேண்டும் சென்னி; துதித்திடல்
வேண்டும் தாலு;
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான்
இவற்கு ஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம்; தடுத்தது
மானம் ஒன்றே.

(சூரபன்மன் வதை. 444.)

[சூழுதல் - வலம் வருதல். வேண்டும் - விரும்புகின்றன. கால்கள் சூழுதலை வேண்டுகின்றன. தாலு - நாக்கு.]

"கடம்ப மாலையை அணிந்த எம்பெருமான் இவ்வளவு காலம் நீளமான போரை ஆக்கினான். இது அவனுடைய திருவிளையாடலின் இயற்கை என்று தெரிந்துகொண்டேன். அவன் என்னைச் சங்காரம் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தால் அதை யார் மாற்ற முடியும்? ஒரு கணத்தில் செய்துவிடுவானே! எனக்குத் தனது தரிசனத்தைக் கொடுக்க வேண்டுமென்று அல்லவா வந்திருக்கிறான்?"

ஏடவிழ் அலங்கல் மார்பன் என்னுடன்
இந்நாள் காறும்
நீடிய இகற்போர் ஆற்றி நீங்கலான்,
நின்றதெல்லாம்
ஆடலின் இயற்கை என்றே அறிந்தனன்;
அஃதான்று, அன்னான்
சாடிய வேண்டும் என்னின் யார்அது
தாங்கற் பாலார்?

(சூரபன்மன் வதை. 446.)

[ஏடு - இதழ். அலங்கல் - மாலை. இகற்போர் - பகைத்தலையுடைய போர். ஆடலின் இயற்கை - திருவிளையாடலின் இயல்பு. அஃதான்று - அப்படியல்லாமல். சாடிய - அழிக்க.]

"என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாம் தேவர்களைச் சிறை செய்தது தவறு என்று சொன்னார்கள். அப்படிச் செய்ததனால்தான் நான் ஆண்டவன் வடிவத்தைத் தரிசனம் செய்கிறேன். வேதத்தாலும் காணமுடியாத எம்பெருமானை, பிரமனும் தேவர்களும் காண்பதற் கரிய எம்பெருமானை, நான் இங்கே என் கண்முன்னால் காண்கிறேன் என்றால், நான் அப்படிச் செய்ததும் நன்றாயிற்று."

ஏதம்இல் அமரர் தம்மை யான்சிறை
செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர் ; அன்னதன்
செய்கை யாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர்
பலரும் காணா
நாதன்இங்கு அணுகப் பெற்றேன் ; நன்றுஅதே
ஆனது அன்றே !

(சூரபன்மன் வதை. 447.)

"தனக்குச் சமானமாக யாரும் இல்லாத, தானே தனி மூர்த்தி யாக இருக்கிறவன் பெருமான், அவனுக்கு முன்னால் நான் நின்று அமர் செய்தேன் என்பது எனக்குப் பெருமை அல்லவா? இனிமேல் நெஞ்சம் தளரமாட்டேன். என்னைப்போன்ற வீரன் யார் இருக்க முடியும்? முருகப் பெருமானுக்கு நேர்நின்று போர் செய்தேன் என்ற புகழ் எப்போதும் இருக்குமே! இந்த மாய உடம்பு நில்லாது. இது போனால் போகட்டும். முருகனுடன் போர் செய்தான் என்ற புகழ் போதும்" என்றான்.

ஒன்றொரு முதல்வ னாகி உறைதரும் மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள்; நெஞ்சினித் தளரேன் அம்மா !
நன்றிதோர் பெருமை பெற்றேன் ; வீரனும் நானே ஆனேன் ;
என்றும்இப் புகழே நிற்கும்; இவ்வுடல் நிற்ப துண்டோ ?

(சூரபன்மன் வதை. 448.)

[ஒன்றொரு முதல்வன் - தனிமுதல்வன்.]

சூரபன்மன் தன் வடிவைக் கண்டு மனம் உருகி, சிறந்த அடியான்போல நிற்பதை ஆண்டவன் பார்த்தான். இனி விரைவில் ஆட்கொள்ள வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டான்.

சூரன் மீண்டும் தன் பழைய நிலையை அடைதல்

ஒரு பெரிய நாடகத்தை ஒருவர் நடத்துகிறார். ஏழு அங்கங்கள் உடைய நாடகம் அது. நான்காவது அங்கம் நடந்துகொண்டிருக்கும் போது அவர் மகன் நோய்வாய்ப்பட்டு அபாய நிலையில் இருக்கிறானென்று தந்தி வருகிறது. உடனே அப்படியே நாடகத்தை முடித்து விட்டுப் போய்விடுவாரா? அவர் பெரும் கலைஞர். ஆகையாலே ஏழு அங்க நாடகத்தைச் சட்டென்று ஐந்து அங்க நாடகமாகச் சுருக்கி, நாடகத்தை விரைவில் முடித்துக்கொண்டு ஊருக்குப் புறப்படுகிறார்.

முருகப் பெருமான் இவ்வளவு காலம் சூரனோடு போர் செய்வதாக நாடகத்தை நீட்டிக் கொண்டிருந்தான்; அவனுக்கு மனம் உருகுகின்ற பக்குவம் உண்டு என்பதை உணர்ந்தவுடன், போரை இனி நீடிக்கக் கூடாது என்று திருவுள்ளம் கொண்டான். சூரனது உள்ளத்தில் தோன்றிய போதத்தைச் சிறிதே மாற்றிவிட்டான். தன்னுடைய பழைய குழந்தைத் திருவடிவத்தை எடுத்துக் கொண்டான்.

என்னஇத் தகைய பன்னி நிற்றலும்,
எவர்க்கும் மேலோன்
உன்னரும் தகைத்தாய் நின்ற
ஒருபெருந் தோற்றம் நீத்து,
மின்இவர் கலாபம் ஊர்ந்த
வியன்உருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போதம் மாற்றித்
தொன்மைபோ லாகச் செய்தான்.

(சூரபன்மன் வதை. 450.)

[பன்னி - சொல்லி. கலாபம் - மயில். துன்னலன் - பகைவனாகிய சூரன்.]

உடனே சூரபன்மனிடம் பழையபடி கோபமும், பகை உணர்ச்சியும் வந்து சேர்ந்தன. போர் செய்யப் புறப்பட்டான். சூரன் இருள் வடிவம் கொண்டான். அப்போது தேவர்கள் எல்லாம் ஓலம் இட்டனர். முருகன் தன் வேலாயுதத்தை ஏவினான். பேரொளி படைத்த வேலாயுதம் போனவுடன் அவுணன் கொண்ட இருள் வடிவம் முற்றும் மறைந்து ஓடிவிட்டது.

ஏவென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட, அவுணன் கொண்ட
மாயிருள் உருவம் முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே.

(சூரபன்மன் வதை. 465.)

[தொட்ட - ஏவிய. இருதலை - நுனியும் அடியும். ஞாங்கர் - வேல். அருக்கரில் - சூரியர்களைப் போல. சிகழி - கொழுந்து. வல்விரைந்து - மிகவேகமாக.]

முருகன் சூர்மாத் தடிதல்

அப்போது சூரன் கடலுக்கு நடுவே சென்று மாமர வடிவாக நின்றான். இங்கே கச்சியப்பர் தொனி நயம் அமையும்படி ஒரு பாட்டுப் பாட்டுகிறார்.

அத்தியின் அரசு பேர, ஆலமும் தெரிக்கின் ஏங்க,
மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற, வீரை யாவும்
தத்தம திருப்பை நீங்கத் நாதவிழ் நீபத் தாரோன்
உய்த்திடு தனிவேல் முன்னர் ஒருதனி மாவாய் நின்றான்.

(சூரபன்மன் வதை. 474)

[அத்தி - கடல். அரசு - வருணன். ஆலம் - விஷம். வன்னி - அக்கினி. வீரை - கடல். நீபம் - கடம்பு.]

இந்தப் பாட்டில் அத்தி, அரசு, ஆலம், வாகை, வன்னி, இருப்பை, நீபம், வேல் என்ற மரங்களின் பேர் தொனிக்கின்றன. மா மரமானன் என்று சொல்ல வந்தவர் அதோடு பல மரங்களின் பெயர்கள் தொனிக்கும்படி பாடுகிறார். 'கடலுக்கு அரசனான வருணன் பிளந்து போகவும், ஆலகால விஷமும் ஏங்கவும், உண்மையான பலத்தையும் வெற்றி மாலையையும் உடைய அக்கினி மெலிவு அடையவும், கடல்கள் எல்லாம் தம்முடைய நிலை நீங்கித் தத்தளிக்கவும், கடம்ப மாலையை உடைய முருகப் பெருமான் விடுத்த வேலாயுதத்திற்கு முன்னாலே மிக உயர்ந்த தனி மாமரமாகச் சூரன் நின்றான்' என்பது இந்தப் பாட்டின் பொருள்.

அந்த வேல் மாமரத்தைத் துண்டாக்கி விட்டது. அப்போது சூரன் பழைய உருவத்தோடு, கையில் வாள் கொண்டு முருகனோடு போரிட வந்தான். வேலாயுதம் அப்படி வந்த சூரனை எதிர்த்து, அவன் மார்பைக் கிழித்து இரண்டு கூறாக்கி, வேதங்கள் எல்லாம் ஆரவாரம் செய்ய, ஆகாசத்தில் போய்க் கங்கையில் நீராடி மீண்டும் முருகப் பெருமான் திருக்கரத்தை வந்து அடைந்தது.

செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன்று
உருமின் ஆர்த்துத்
துங்கமொடு எதிர்ந்து சீறும் சூர்உரம்
கிழித்துப் பின்னும்
அங்கமது இருகூ றுக்கி அலைகடல்
வரைப்பில் விட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப எஃகம்வான்
போயிற்று அம்மா.

(சூரபன்மன் வதை. 490.)

[அயில் - கூர்மை. உருமின் - இடியைப் போல. உரம் - மார்பு. கடல் வரைப்பில்- கடலாகிய இடத்தில். விட்டி - வீழ்த்தி. எஃகம் - வேல்.]

சேவலும் மயிலும்

இரண்டு கூருகிய சூரனுடைய உடம்பில் ஒரு கூறு சேவலாகவும், மற்ரெரு கூறு மயிலாகவும் வந்து சினத்தோடு முருகனை எதிர்க்க வந்தன. அந்தப் பறவைகளின் வடிவத்தில் வந்த சூரனை, முருகப் பெருமான் தன் கருணை பொழியும் விழிகளால் பார்க்க, அவன் பகை உணர்வு நீங்கினுன். சித்தர்கள் பார்வையினுல் இரும்பு பொன்னுவது போல, எம்பெருமானின் கருணைப் பார்வையினுல் சூரன் தன் பகையுணர்வுபோய் நின்ருன். போர் செய்ய மிக வேகத்தோடு வந்த இரண்டு பறவைகளும் மிகவும் தெருள்கெழு மனத்தோடு நின்றன.

மருள்கெழு புள்ளே போல வந்திடு
சூரன் எந்தை
அருள்கெழு நாட்டம் சேர்த்த, ஆங்கவன்
இகலை நீங்கித்
தெருள்கெழு மனத்த னுகி நின்றனன்,
சிறந்தார் நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன்
ஆகிய இயற்கை யேபோல்.

(சூரபன்மன் வதை. 495.)

[மருள் - மயக்கம். இகல் - பகையுணர்வு. தெருள் - தெளிவு. கரும் பொன் - இரும்பு.]

ஆண்டவன் அப்போது சேவலைப் பார்த்து, "நீ எனக்குக் கொடியாய் நிற்பாயாக!" என்றும், மயிலைப் பார்த்து, "நீ எனக்கு

வாகனமாக இருப்பாயாக!" என்றும் சொல்லி அந்த இரண்டையும் முறையே கொடியாகவும், வாகனமாகவும் ஏற்றுக் கொண்டான்.

வரம்பிலா அருள்

சூரனுக்கும், முருகப் பெருமானுக்கும் நடந்த சண்டையில் யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்ற கேள்விக்கு இடமில்லை. மற்றச் சண்டைகளைப் போலப் பகைவன் இங்கே அழியவில்லை. சூரபன்மனது வடிவம் போயிற்றே யொழிய அவன் வேறு வடிவம் கொண்டு ஆண்டவனுக்கு அணுக்கத் தொண்டன் ஆகிவிட்டான்.

ஒருவன் பெரிய பணக்காரன். அவன் தன்னுடைய நண்பன் ஒருவனுடைய ஓட்டு வில்லை வீட்டை இடித்தான். அதைக் கண்டு பலபேருக்குக் கோபம் வந்தது. ஆனால் அடுத்த சில மாதங்களில் ஏழடுக்கு மாளிகை ஒன்றைக் கட்டித் தந்தான். அப்போதுதான் உண்மை தெரிந்தது, இடித்தது இடிப்பதற்காக அல்ல, அவனுக்குப் பெரிய வீடு கட்டித் தருவதற்காக என்று.

முருகப் பெருமான் அவுணனாகிய சூரனது வடிவத்தை மாற்றினானே தவிர அவனை அடியோடு நாசம் செய்யவில்லை. அவனைக் கோழியாகவும், மயிலாகவும் ஆக்கித் தன்னுடைய கொடியாகவும், வாகனமாகவும் கொண்டான். இந்த அற்புதமான அருளைப் பாராட்டுகிறார் கச்சியப்பர். "குமார நாயகனுக்கு முன்னாலே அவன் சந்நிதியில் வந்து சேர்ந்தால் பொல்லாதவர்களாக இருந்தாலும் நல்லவர்களாக ஆகிவிடுவார்கள். நாம் நல்லவர்களாக, தீமை அற்றவர்களாக இருந்தால்தான் அவன் திருவடியை அடைய முடியும் என்று இல்லை. நாம் தீயவர்களாக, பொல்லாதவர்களாக இருந்தாலும் அவன் திருவடியை அடைந்து விட்டால் போதும். அவன் முதலில் நம்முடைய அழுக்கைப் போக்கிப் பின்பு நம் தகுதிக்கேற்பத் தன் அருளுக்கு ஆளாக்கிக் கொள்வான். இதற்குச் சூரபன்மனே சான்று" என்கிறார்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள்
　　திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி
　　அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ?
　　அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா
　　அருள்பெற் றுய்ந்தான்?

(சூரபன்மன் வதை. 496.)

"அவனுடைய சந்நிதியில் உற்றவர்கள் முதலில் தம் அழுக்கு நீங்க, பிறகு அவன் திருவருளைப் பெறுவார்கள். இந்த உண்மை யைத் தெரிந்து கொள்ளப் பெரிய ஆராய்ச்சி செய்ய வேண்டாம். எல்லோருடைய மயக்கத்திற்கும் காரணமாகிய மாயையின் சொந்தப் பிள்ளையாகிய சூரனே எல்லையில்லா அருளைப் பெற்று உய்ந்தான். அதிலிருந்து இது தெரியவில்லையா ?" என்று பாடுகிறுர் கச்சியப்பர்.

காவேரிக்குப் போகிறவன் முதலில் தன் கையை அந்த நீரில் கழுவிக் கொள்வான். பின்பு தண்ணீர் குடிப்பான். கழுவுவதற்கு வேறு தண்ணீர் வேண்டும் என்பது இல்லை. அதுபோல் முருகப் பெருமானது சந்நிதானத்திற்குப் போனுல் முதலில் நம்முடைய பற்றுக் கள் போய்விடும். பிறகு அவன் திருவருளால் இன்பம் அடையலாம். நம் பற்றுக்கள் போகவும் அவன் திருவருள் வேண்டும். பேரின்பம் கிடைப்பதற்கும் அவன் திருவருள் வேண்டும். அழுக்கு இருக்கிறதே என்று அஞ்சியிருக்கக்கூடாது. அவனைச் சரணடைய வேண்டும். இந்த உயர்ந்த தத்துவத்தைச் சூரசங்காரம் நமக்கு உணர்த்துகிறது என்று எடுத்துக் காட்டுகிறுர் கச்சியப்பர்.

மயிலின் இயல்பு

முருகப் பெருமானுக்கு மூன்று மயில்கள் உண்டு. எப்போதும் உள்ள மயில் பிரணவம்.

"ஆன தனிமந்த்ர ரூப நிலைகொண்ட தாடு மயில்"

(திருப்புகழ்)

என்பர் அருணகிரியார். போர் நடந்தபோது இந்திரன் மயிலாக வந்தான். அதை முன்பு பார்த்தோம். இப்போது சூரன் மயிலாக வந்து விட்டான். சூரனுக இருந்த போது அவனுக்கிருந்த இயல் புகள் இப்போது இல்லை. அவற்றுக்கு நேர்மாறுன மென்மையுடைய மயிலானுன், சூரபன்மனுக இருந்த போது அவன் கண்பட்ட இடங்கள் புண்பட்டுப் போயின. யார் தன் முன்னுலே வாழ்வு பெற்றுலும் அதை மாற்றிவிட்டான் சூரன். யாருக்கும் அநுகூலம் செய்யமாட்டான் ; பிரதிகூலம் செய்வான். ஆனுல் இப்போது மயிலாக இருக்கும்போது எப்படி இருக்கிறுன் ?

"திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்சணகு சேகு தாளத் தோடு—நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேஎப் போது—வருவாயே"

என்கிறார் அருணகிரியார்.

'துங்க அநுகூலப் பார்வையை உடைய மயில்' என்று சொல்கிறார். இந்த மயில் ஆண்டவனுடைய அடியார்கள் வந்தால் அநுகூலம் செய்கிறதாம். யாரேனும் முருகா என்று அழைத்தால் முருகப் பெருமானை அங்கே கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அதுதான் வாகனம் செய்கிற அநுகூலம்.

திருமுருகாற்றுப்படையில் முருகனோடு இருக்கிற அடியார்கள் புதியதாக வந்த அடியானுக்குச் சிபாரிசு செய்கிறார்களாம். 'உன்னை நினைந்து வந்திருக்கிறான். உன் அருளுக்குப் பாத்திர மானவன்" என்று சிபாரிசு செய்கிறார்கள். அது போல் மயிலானது யாரேனும் அடியார்கள் முருகா என்று அழைத்தால் அங்கே முருகப் பெருமானை உடனே ஏற்றி வந்து காட்சி தரும்படி செய்யும். சூரன் பிரதிகூலப் பார்வையுடன் இருந்தான்; மயிலான பிறகு அந்தப் பார்வை துங்க அநுகூலப் பார்வையாகிவிட்டது.

**அக்கணம் எம்பி ரான்தன் அருளினால் உணர்வு சான்ற
குக்குட உருவை நோக்கிக் கடிதில்நீ கொடியே ஆகி
மிக்குயர் நமது தேரில் மேவினை ஆர்த்தி என்னத்
தக்கதே பணிஇது என்றா எழுந்தது தமித்து விண்மேல்.**

**சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியின் இருக்கை நீங்கி உணர்வுகொண்டு ஒழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை ஏறிச் சுமக்குதி எம்மை என்னாப்
பார்திசை வானம் முற்றும் பரியென நடாத்தல் உற்றான்.**

(சூரபன்மன் வதை. 497, 499.)

[குக்குட உருவம் - கோழி வடிவம். கடிதில் - விரைவில். மேவினை ஆர்த்தி - சேர்ந்து கூவுவாயாக. பணி - ஏவல். தமித்து - தனித்து. தொல்லை ஊர்தி - பழைய வாகனம். இருக்கை - இருப்பதை. பரி என - வாகனமாக.]

அதைக் கண்டு தேவர்கள் எல்லாம் போற்றினார்கள்,

முருகன் செந்தூர் வருதல்

சூரபன்மன் மறைந்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவனுடைய மனைவியாகிய பதுகோமளை உடனே உயிர் விட்டாள். அவள் உத்தமப் பெண்மணி ஆகையால் கேட்ட மாத்திரத்தில் ஆவி நீத்தாள்.

காவல் மன்னவன் இறந்தனன் எனும்உரை கன்னத்துள்
மேவும் எல்லையில் அசனிஏ றுண்டவெம் பணியேபோல்
தேவி யாகிய பதுமகோ மளையெனும் திருமங்கை
ஆவி நீங்கினள் ; தலையளி ஆகியது அதுவன்றோ ?

(இரணியன் புலம்புறு. 2.)

[கன்னத்துள் - காதில். அசனியேறுண்ட - இடி விழப்பெற்ற. பணி - பாம்பு. தலையளி - உத்தமமான அன்பு.]

அப்போது இரணியன்—முன்பு கடலில் போய் மீனாக இருந்தானே அவன்—வந்து தந்தைக்கு ஈமக் கடன் செய்தான்.

வீரவாகு தேவரை முருகப் பெருமான் அனுப்பிச் சிறையில் இருந்த தேவர்களை விடுதலை செய்து வரச் செய்தான். போர்க் களத்தில் இறந்த பூதர்களை எழுப்பினான். வருணனை அழைத்து வீர மகேந்திரபுரத்தைக் கடலுள் ஆழ்த்தச் சொன்னான். பொல்லாத வர்கள் வாழ்ந்த இடத்தில் அந்த அம்சம் இருக்கும், அதை விட்டு வைக்கக் கூடாது என்றே கடலுக்குள் அழுந்தச் செய்தான்.

பின்பு மற்றவர்களுடன் திருச்செந்தூர் வந்து சேர்ந்தான். அங்கே ஆண்டவனைச் சிங்காதனத்தில் அமர்த்தித் தேவர்கள் பூஜை செய்தார்கள். தேவத்தச்சனாகிய விசுவகர்மாவைக் கொண்டு அங்கே ஒரு கோவில் கட்டச் செய்தார்கள். அங்கே முருகப் பெருமான் சிவ லிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜை பண்ணினான். இன்றும் திருச் செந்தூரில் முருகப் பெருமான் பூஜை பண்ணின சிவலிங்கத்தைப் பார்க்கலாம்.

தெய்வயானை திருமணம்

முருகன் திருப்பரங்குன்றை அடைதல்

திருச்செந்தூரில் சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணி இறைவனை வழிபட்ட பிறகு, முருகப் பெருமான் தன் பெரு வீரர்களுடன் திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தான். இடையிலுள்ள ஐந்து நிலங்களையும் கடந்து மதுரைக்கு மேற்கேயுள்ள திருப்பரங்குன்றத்தை அடைந்தான். மதுரைக்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருப்பதாகக் கந்த புராணம் சொல்கிறது.

இடனுறு குறிஞ்சியில் இனைய தன்மையால்
நடவைகொள் பெரும்படை நடுவண் ஏகியே
சுடர்பொழி வேலினன் தூய கூடலின்
குடதிசை அமர்பரங் குன்றை எய்தினன்.

(திருப்பரங்குன்று. 22.)

[நடவைகொள் - நடந்த. கூடல் - மதுரை.]

திருமுருகாற்றுப் படையிலும் மதுரைக்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருப்பதாகத்தான் உள்ளது. முதலில் அந்தப் பகுதி எல்லாம் குறிஞ்சி நிலமாக இருந்தது. மதுரை நகர் விரிந்து பரந்து விட்டது. இப்போது மதுரைக்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருப்பதாகச் சொல்ல முடியாது. நான்கு திசையிலும் மதுரை பரந்து வளர்ந்திருக்கிறது.

இந்திரன் வேண்டுகோள்

திருப்பரங்குன்றத்திற்குச் சென்ற முருகப் பெருமான் தேவத் தச்சனை அழைத்து அங்கே ஒரு கோவிலை அமைக்கச் செய்தான். அப்போது இந்திரன் முருகப் பெருமானை அணுகினான். தேவர்கள் முப்பத்து முக்கோடி பேர்களாக இருந்தும் போர்க்களத்தில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பூத கணங்களே போர் செய்தன. தேவர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முடிவில், கை தட்டுவது போலப் பூமாரி பொழிந்தார்கள். 'எம்பெருமான் எங்களுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறான். அவனுக்கு என்ன கைம்மாறு செய்வது?' என்று இந்திரன் யோசித்

தான். அமிருதவல்லி, சுந்தரவல்லி என்ற இரு பெண்கள் முருகனை அடைவதற்குத் தவம் செய்தார்கள் என்பதை முன்பே பார்த்திருக்கிறோம். அவர்களில் அமிருதவல்லி இந்திரனிடம் போய்த் தேவசேனை என்ற பெயரோடு வளர்ந்தாள். இந்திரனிடம் இருந்த ஐராவதம் அவளுக்குப் பாதுகாப்பாக இருந்தது. அதனால் தேவயானை, என்றும் தேவகுஞ்சரி என்றும் பெயர் அவளுக்கு ஏற்பட்டன.

இந்திரன் தன்னுடைய நாட்டையே முருகப் பெருமானுக்குத் தருவதாகச் சொன்னான். அப்போது முருகப் பெருமான் அதை ஏற்க மறுத்தான். தேவசேனைக்குத் தலைவனாகவே இருக்கிறேன் என்று சொன்னான்.

"வானோர் வணக்குவில் தானைத் தலைவ"

என்று **திருமுருகாற்றுப்படை** சொல்கிறது. தேவசேனாபதி என்றால் தேவர்களின் படைக்குத் தலைவன் என்று பொருள். அதுமட்டுமன்று. அவனே எல்லோருக்கும் தலைவன். அமெரிக்காவில் ஜனாதிபதி படைக்கெல்லாம் தலைவராகவும் அந்தக் குடியரசுக்குத் தலைவராகவும் எப்படி இருக்கிறாரோ அப்படியே தேவசேனாபதியாகிய முருகன் இந்திராதி தேவர்களுக்கு எல்லாம் பெரிய தலைவனாக விளங்கினான். போர்க்களத்தில் தேவ சேனைகளுக்கு எல்லாம் அதிபதியாக, தேவசேனாபதியாக விளங்கினான். கடைசியில் சூரபன்மாவை ஆட்கொண்டான். இந்திராதி தேவர்கள் செய்த பாவத்தினாலும், கொண்ட தருக்கினாலும் சூரபன்மாவினுடைய ஆணைக்கு அவர்கள் அடங்கி நிற்க வேண்டி வந்தது. சூரனோடு ஆண்டவன் போர் செய்த போது, அவன் தங்களுக்குச் செய்த பரமோபகாரத்தைக் கண்ணால் கண்டு களித்தார்கள். மறுபடியும் அகங்காரம் வராமல் இருக்க வேண்டுமென்று இந்திரன் எண்ணினான்.

"எம்பெருமானே, நீ தேவசேனாபதியாக இருந்து எங்களுக்கு நலம் செய்தாய். எங்களுடைய பழைய அரசை வாங்கித் தந்தாய். நாங்கள் பழையபடி பதவியைப் பெற்றோம். மறுபடியும் எங்களுக்குப் பதவியினால் தருக்கு உண்டாகாமல் இருக்க வேண்டும். நீ தேவசேனாபதி என்ற நினைவு எப்போதும் எங்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் மறுபடியும் போர் உண்டாக, படைக்கு நீ தலைவனாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. வேறு ஓர் வகையில் நீ

என்றும் தேவசேனுபதியாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். என் பெண் தேவசேனை உன்னை அடைவதற்காகத் தவம் செய்து கொண்டிருக்கிருள். அவளை நீ திருமணம் செய்து கொண்டருள வேண்டும். என்றுமே தேவசேனுபதியாக விளங்க வேண்டும். அதைக் கண்டு நீ செய்த உபகாரம் எங்களுக்கு நினைவு வரும். மறுபடியும் தருக்கு அடையாமல் இருப்போம்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான். முருகன் அவன் விருப்பத்தை ஏற்றுக் கொண்டான்.

தேவயானை வருதல்

இந்திரன் தன்னுடைய மகளை மனத்தில் நினைத்தான்.

காய்ந்திடு தம்பகை கடந்து பொன்னகர்
வேந்தியல் முறையருள் வேற்கை வீரற்குக்
கூந்தலஞ் சிறுபுறக் குஞ்ச ரந்தனை
ஈந்திட மகபதி இதயத் தெண்ணினுன்.

(தெய்வயானை திருமணம். 1.)

[கடந்து - வென்று. பொன்னகர் வேந்து இயல் - தேவலோகத்துக்கு அரசாகும் இயல்பை. முறை அருள் - முறையாக அருளிய. கூந்தல் அம் சிறுபுறக் குஞ்சரம் - கூந்தல் தாழும் சிறிய முதுகையுடைய தேவயானையை. மகபதி - இந்திரன்.]

ஓர் ஒற்றனை அனுப்பி இந்திராணியையும், புதல்வி தேவசேனை யையும் அழைத்துவரச் செய்தான்.

மற்றது போழ்தினின் மகத்தின் செம்மலோர்
ஒற்றனை நோக்கியே ஒல்லை மேருவாம்
பொற்றையில் மனைவியைப் புதல்வி தன்னுடன்
இற்றையில் விளித்தனை ஏகுநீ என்ருன்.

(தெய்வயானை. 5.)

[மகத்தின் செம்மல் - இந்திரன். ஒல்லை - விரைவில். பொற்றையில் - மலையில். இற்றையில் - இன்று. விளித்தனை ஏகு - அழைத்து வா.]

அந்த இரண்டுபேரும் வந்து முருகப் பெருமானை வணங்கினர்கள்.

இந்திராணி தேவர்களை எல்லாம் பார்த்தாள். அந்தத் தேவர்கள் கூட்டத்திலே சயந்தன் இருந்தான். அவனைப் பார்த்த வுடன் இந்திராணிக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. பல காலம் பிரிந்திருந்த தன் மகனைக் கண்டவுடனே அவனை மகிழ்ச்சி யுடன் தழுவிக் கொண்டாள்.

கண்டனள் மதலையைக் கருணை யால்தழீஇக்
கொண்டனள், மகிழ்ந்தனள்; கொங்கை பாலுக
விண்டனள் கவற்சியை, வெறுமை யுற்றுளோர்
பண்டுள பெருநிதி படைத்த பான்மைபோல்.

(தெய்வயானை. 14.)

[விண்டனள் கவற்சியை - கவலைப்படுவதை விட்டாள். வெறுமை - வறுமை.]

பெரும் நிதி ஒன்றை ஏழை பெற்றது போன்ற இன்பத்தை அவள் அடைந்தாள். அப்போது இந்திரன் முருகப் பெருமானிடத்தில் செய்ந்நன்றிக்கு அடையாளமாகத் தன்னுடைய மகள் தேவசேனையைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொன்னான்.

கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்;
இந்நின்ற தேவர் சிறைமீட்டனை; என்றனக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாய்; அது முற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன்செயத் தக்க துண்டோ?

(தெய்வயானை. 17.)

[கல் நின்ற மொய்ம்பின் - கல்போன்ற தோள்களை உடைய. அவுணக்களை - அசுரர்களாகிய களையை. கட்டல் செய்தாய் - பிடுங்கினாய்.]

"முன்னாலே நான் வளர்த்து வந்த மங்கை இங்கே வந்திருக்கிறாள். அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று சொன்னான்.

முந்தேதமி யேன்பெறு மங்கையிம் மொய்வ ரைக்கண்
வந்தே அமர்வாள்; அவள்தன்னை வதுவை செய்து,
கந்தே புரைநின் பெருந்தோளிற் கலத்தி; யாங்கள்
உய்ந்தே பிறவிப் பயன்பெற்றனம் ஓங்க என்றான்.

(தெய்வயானை. 18.)

[கந்தே புரை - தறியை யொத்த.]

இந்தப் பாட்டில் முருகப் பெருமானுடைய தோளை, "கந்தே புரை நின் பெருந்தோளில்" என்கிறான். கந்து என்பது யானையைக் கட்டும் தறி. தேவசேனையைத் தேவயானை என்றும் சொல்வார்கள். அந்த யானையைக் கட்டுவதற்குரிய தூணைப் போல இருக்கிறது ஆண்டவனின் திருத்தோள் என்ற குறிப்பும் இங்கே தெரிகிறது.

தர்மம் என்னும் பயிர் உலகத்தில் வளர்ந்தால்தான் எங்கும் சுபிட்சம் உண்டாகும். அந்தப் பயிருக்குத் தடையாக ஏதேனும் வந்தால், தர்மம் குறைந்தால், மக்களுக்குத் துன்பம் உண்டாகும்.

எப்படி உடம்புக்கு உணவு வேண்டுமோ அதுபோல் உயிருக்குத் தர்மம் வேண்டும். உணவை உண்டாக்குகின்ற பயிர்களுக்குத் தடையாகக் களை முளைத்தால் பயிர் பாழாகிவிடும்.

உயிர்கள் மேலும் மேலும் இன்புற்று வாழவேண்டுமானல் தர்மம் என்னும் பயிர் தழைக்க வேண்டும். அந்தத் தர்மத்திற்குக் களையாக அசுரர்கள் முளைத்தார்கள். 'சூரபன்மனுடைய அண்டத்தில் எல்லாம் இருந்தன. ஆனல் தர்மம் இல்லை' என்பதை முன்பே வீரவாகு சொன்னதைப் பார்த்தோம். தர்மம் என்ற பயிர் வளராமல் அவர்கள் தடுத்தார்கள். அசுரர்களாகிய களை வளர்ந்து வந்தது. அத்தகைய களையைப் போக்குவதற்குத் தேவர்களிடத்தில் தகுதியான ஆயுதங்கள் இல்லை. முருகப் பெருமான் ஞானசக்தியாகிய தன் வேலாயுதத்தைக் கொண்டு அறத்திற்குப் பகையாக உள்ள அசுரர்களாகிய களையை அழித்தான். அதனல் மீண்டும் தர்மம் வளரத் தொடங்கியது.

தேவர்கள் பத்துப் பேர் சேர்ந்தாற்போல இருந்தால் அதைப் பார்க்கச் சூரன் மனம் சகிக்கவில்லை. அப்படிக் கூடினல் அவர்களைத் தண்டித்தான், தேவர்கள் நல்ல குணத்திற்கு அடையாளம். நல்ல குணங்களைச் சேரவொட்டாமல் செய்வன தீய குணங்கள். அசுரர்கள் தேவர்களைக் கூடாமல் பிரித்து வைத்தார்கள். இவை எல்லாம் நல்ல குணங்களைத் தீய குணங்கள் அழிக்கும் தன்மையைக் காட்டுகின்ற அடையாளங்கள். அசுரக் களைகளை ஆண்டவன் தன் வேலாகிற ஞானசக்தியினல் அழித்ததும், தேவ கணங்கள் தழைத்தன ; நல்ல குணங்கள் தழைத்தன.

அசுரர்களால் சிறைப்படுத்தப்பட்டிருந்த தேவர்கள் அதனினின்றும் நீங்கினர்கள். இவற்றை எல்லாம் இந்திரன் நினைந்து பார்க்கிருன். முருகனிடம் அதனை வாயாரச் சொல்லுகிருன்.

கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்
இந்நின்ற தேவர் சிறைமீட்டனை.

முதலில் அவுணர்களைக் களை எடுத்து, பிறகு தேவர்களைச் சிறை மீட்டான். யாருக்கேனும் நோய் வந்தால் முதலில் நோய் தீர மருந்து கொடுப்பார்கள். அதற்குப் பிறகு நோயினல் பலம்

குன்றிய உடம்பு வலுப்பெற 'டானிக்' கொடுப்பார்கள். முதலில் துன்ப நீக்கமும் பின்பு இன்ப ஆக்கமும் உண்டாகும்.

முதலில் முருகன் அவுணர்களாகிய களையை எடுத்தான். பின்பு தேவர்களைச் சிறை மீட்டான். பழையபடி அவர்கள் தங்கள் தங்கள் பதவியைப் பெற்று வாழும்படி செய்தான். இவற்றை எல்லாம் எண்ணிப் பாராட்டுகிறான் இந்திரன். முருகப் பெருமான் செய்த எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து, அதற்குக் கைம்மாருக ஏதேனும் செய்ய முடியாதா என்று நினைக்கிருன்.

இறைவன் தன் கருணையினுல் நமக்கு எத்தனையோ நலங்களைச் செய்து வருகிருன். தனு கரண புவன போகங்களைக் கொடுக்கிருன், அவனை நாம் வழிபடுவதன்றி, அவனுக்கு நாம் வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும்? உண்மையில் இறைவன் நம்மிடத்தில் எதையும் எதிர்பார்த்துச் செய்வதில்லை.

உலகத்தில் கடவுளுக்கு அடுத்தபடியாக இருப்பவள் தாய். தாய் செய்கிற உதவிக்காவது கைம்மாறு செய்ய முடியுமா? பிற்காலத்தில் இவன் நம்மைக் காப்பாற்றுவான் என்று நினைந்து அவள் நம்மைக் காப்பாற்றுவது இல்லை. தன் உடம்பையே உருக்கி, தன் இரத்தத்தைப் பாலாக்கி ஊட்டுகிருள். இந்த உலகத்திலுள்ள பெண்ணே கைம்மாறு கருதாது தன் குழந்தைக்கு அருள் பாலிக் கிருள் என்ருல் எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கிற ஆண்டவன் நம்மிடம் கைம்மாற்றை எதிர்பார்த்தா செய்வான்?

ஒரு பெண்மணி பன்னிரண்டு பவுனில் ஒரு சங்கிலி போட்டி ருந்தாள். பல ஆண்டுகள் கழித்து, வேறு ஒரு சங்கிலி போட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைத்தாள். பழைய சங்கிலியை அழித்து, புதுச் சங்கிலியைப் பண்ணச் சொன்னுள். பொற்கொல்லர் அந்தப் பழைய சங்கிலியை எடை போட்டுப் பார்த்தார். "முன்பு எவ்வளவு பவுன் இருந்தது?" என்று கேட்டார். அவள் பன்னிரண்டு பவுன் என்ருள். "இப்போது அரைப்பவுன் சேதாரம்" என்று பொற்கொல்லர் சொன்னுர். அழகை ஊட்டுவதாக, ஆபத்துக்குப் பயன்படுவதாக அந்த அம்மாளின் திருமேனியில் இருந்த சங்கிலி அது. அதனுல் அந்த அம்மாளுக்குப் பயன் உண்டு.

ஆனால் அந்த அம்மாளால் அது எந்தப் பயனையும் பெறவில்லை. இந்த உவமையைப் பட்டினத்தார் சொல்கிறார்.

" பொன்னாற் ப்ரயோசனம் பொன்படைத் தாற்குண்டு ;
பொன்படைத்தான்
தன்னாற் ப்ரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத்
தன்மையைப்போல்
உன்னாற் ப்ரயோசனம் வேணதெல் லாமுண்
டுனைப்பணியும்
என்னாற் ப்ரயோசன மேதுண்டு காளத்தி
யீச்சுரனே. "

முருகன் இசைதல்

இந்திரன் செய்துகொண்ட விண்ணப்பத்தை முருகப் பெருமான் கேட்டான். " அந்தப் பெண் முன்பே நம்மை நோக்கித் தவம் செய்தாள். ஆகையால் அவளை உன் விருப்பப்படி மணம் செய்து கொள்கிறேன் " என்று பெருமான் சொன்னான்.

என்னும் துணையில் அமரேசனை எந்தை நோக்கி,
அந்நங்கை தானும் மிகநோற்றனள், ஆத லால்நீ
முன்னும் படியே மணம்நாளை முடித்தும் என்னத்
தன்னும் கடந்த மகிழ்வெய்தித் தருக்கி நின்றான்.

(தெய்வயானை. 19.)

[என்னும் துணையில் - என்று சொன்ன அளவில்; என்றவுடன். தன்னும் - தன்னையும்.]

இவ்வாறு சொன்னதற்குக் காரணம் : இந்திரன் இப்போது மிகவும் பணிவுடன் பேசினாலும், பின்னாலே தருக்கு வந்தால், " நான் தானே என் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தேன் ? " என்று சொல்லக் கூடும் அல்லவா ? அதனால், " முன்னாலேயே அவள் நோற்றாள் " என்று முருகன் சொன்னான்.

பின்னர் முருகன் விசுவகர்மாவை நினைந்தான். அவன் வந்தவுடன் அங்கே ஒரு நகரமும், மண்டபமும் அமைக்க வேண்டுமென்று சொன்னான். அப்படியே விசுவகர்மா தன் மனத்தினால் நினைத்து அங்கே ஓர் அழகான கல்யாண மண்டபத்தை அமைத்துவிட்டான்.

முருகப் பெருமானுடைய திருமணத்திற்கு வரவேண்டுமென்று பலருக்கும் இந்திரன் திருமணவோலை அனுப்பினான்,

முசுகுந்தன் வரலாறு

எல்லோரும் போல முசுகுந்த சக்கிரவர்த்தியும் முருகப் பெருமானுடைய திருமணத்திற்கு வந்தான். அதைக் கச்சியப்பர் விரிவாகச் சொல்கிறார். முசுகுந்தன் கரூரில் இருந்து ஆண்டவன். அவன் குரங்கு முகம் உடையவன்.

ஒரு நாள் சிவபெருமானும், பார்வதி தேவியும் கயிலாயத்தில் வில்வ மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். குரங்குகள் அங்கே வந்தன.

கல்லருவி தூங்குகயி லைப்பொழிலின் மேனாள்
அல்லுறழ் மிடற்றவனும் அம்பிகையு மாக
எல்லையின் மகிழ்ச்சியொ டிருப்பமுசு ஈட்டம்
வில்லுவ மரந்தொறும் வியன்கிளையில் உற்ற.

(தெய்வயானை. 32.)

[கல் அருவி தூங்கு - பாறையில் அருவி விழும். அல் உறழ் மிடற்றவன் - இருளை ஒத்த நீலகண்டனாகிய சிவபெருமான். முசு ஈட்டம் - குரங்குக் கூட்டம்.]

கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்த குரங்குகளில் ஒன்று இருவரும் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு நேரே இருந்த கிளையில் அமர்ந்து ஒவ்வொரு வில்வ இலையாகப் பறித்துப் போட்டது. அப்படி அது உட்கார்ந்திருந்தது எப்படி இருந்தது என்றால் முனிவர்கள் முள்காந்திருந்ததைப் போல இருந்ததாம்.

முற்றுணர் கருத்தின்முனி வோர்கள்என முள்காந்
துற்றிடு முசுக்கலையுள் ஒன்றிருவர் மீதும்
மற்றொருவில் வத்திலை வரம்பில பறித்துத்
துற்றிடுவ தென்னநனி தூர்த்துளதை யன்றே.

(தெய்வயானை. 33.)

[முள்காந்து - உட்கார்ந்து. முசுக்கலை - ஆண் குரங்கு. மற்று : அசை. துற்று இடுவது என்ன - நெருங்கும்படி போடுவது போல. தூர்த்துளது - கீழே போட்டது. ஐ : சாரியை அன்று, ஏ : அசை நிலைகள்.]

முள்கார்தல்-உட்கார்தல்.

"முசுப்போல முள்காந்திருப்பார்"

என்று முனிவர்களைப் பற்றி ஒரு பாடல் இருக்கிறது. கையையும், காலையும் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் நிலை அது.

எங்கும் தாவித் தாவிப் பாய்ந்து, ஒரு கணமும் சும்மா இருக்காத குரங்கு அந்த இடத்தில் முனிவர்களைப் போல இருந்தது.

நம் ஊர்க் குரங்கு அப்படி இருக்குமா? கைலாசத்தில் இருக்கும் குரங்கு ஆகையால் அந்த இடத்தின் சூழ்நிலையினால் அப்படி இருந்தது.

நல்லவர்கள் இருக்கும் இடத்தில் பொல்லாதவர்கள் சேர்ந்தாலும் அவர்கள் மாறி நல்ல பழக்கங்கள் உடையவர்கள் ஆவார்கள். பொல்லாதவர்கள் ஆற்றல் உடையவர்களாக இருந்தால், அவர்களோடு சேருகிற நல்லவர்களும் கூடப் பொல்லாதவர்கள் ஆகிவிடுவார்கள். நல்ல பழக்கங்களும், நல்ல எண்ணமும், தெய்விக ஆற்றலும் நிறைந்த பெரியவர்களிடத்தில் எவ்வளவு பொல்லாதவர்களாக இருந்தாலும் போய்ச் சேர்ந்தால் திருந்திவிடுவார்கள்.

திருவையாற்றுக் குரங்கு

ஞானசம்பந்தப் பெருமான் சொல்கிற ஒரு பாட்டு இங்கே நினைவுக்கு வருகிறது. அவர் திருவையாற்றுக்குப் போய் அங்கேயுள்ள ஆண்டவனைப் பாடியிருக்கிறார். ஒரு பாட்டில் அங்கே உள்ள மந்திகளைப் பற்றிப் பாடுகிறார். மந்திகள் சுறுசுறுப்பாக இருக்கும். அங்கே பிராகாரத்தைச் சுற்றி மகளிர் நடமாடிக்கொண்டு வருகிறார்கள். அப்போது மிருதங்கம் வாசிக்கிறார்கள். அங்கே இருக்கின்ற மந்திகள் இதைப் பார்க்கின்றன. பெண்கள் ஆடுவதைப் பார்த்தபோது மயில்கள் ஆடுவது போலத் தோன்றுகிறது. முழவின் ஓசை இடி போல இருக்கிறது. மயில் ஆடுவதும், இடி இடிப்பதுமாக இருக்கும் நிலை மழை வருவதைக் காட்டும். தமக்கென்று பாதுகாப்புத் தேடிக் கொள்ளாத மந்திகள் இப்போது மயில் ஆடுகிறதே, இடி இடிக்கிறதே, மழை வந்துவிடுமோ என்று எண்ணி, பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டுமே என்று மரத்தின் மேலேறி முகிலை அண்ணாந்து பார்க்கின்றனவாம்.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமரும் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவை யாறே,"

மேகராகக் குறிஞ்சியில் பாடுகிற பாட்டு இது. இதைப் பண்ணோடு பாடினால் மழை பெய்யும். இயற்கை அழகைச் சொல்வது சம்பந்தப் பெருமான் வழக்கம். அதில் இறைவனது தன்மையையும் சேர்த்துச் சொல்வார். குரங்குகள் மழை வராமல் இருக்கிறபோதே, அதை நினைப்பூட்டுகிற செயலைப் பார்த்தவுடன் தமக்குப் பாது காப்புத் தேடிக் கொள்கிற இடம் திருவையாறு. நாமும் அதைப் போல மரணம் வருவதற்குள் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். அப்படி அந்த இரண்டு செயலையும் ஒட்டிப் பார்க்கும் படியாக இந்த அழகான பாசுரத்தைப் பாடுகிறார் ஞானசம்பந்தர்.

வேறு இடங்களிலுள்ள குரங்குகள் என்ன செய்யும்? தூக் கணாங்குருவி நன்மை சொல்லப்போக, அதனுடைய கூட்டையே குரங்கு பிய்த்துப் போட்டது என்பதை நாம் கதையில் படிக்கிறோம். ஆனால் சூழ்நிலையின் விசேஷத்தினால்தான் திருவையாற்றிலுள்ள மந்திகள் வருமுன் காக்கும் செயல்களைச் செய்கின்றன.

கைலாச நிகழ்ச்சி

அதுபோல் கைலாசத்தில் இருக்கிற குரங்கு பார்வதியும் பரமேசுவரனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த வில்வ மரத்தின் மேல் அமைதியாக உட்கார்ந்துகொண்டு ஒவ்வொரு வில்வ இலை யாகப் பறித்து அவர்கள் மேலே போட்டுக் கொண்டிருந்ததாம். குரங்கு இலையைப் பறித்துப் போடப் போட உமா தேவியார் சற்றுக் கோபம் கொண்டார். அதைக் கண்ட சிவபெருமான், "நம்மிடத்தில் அன்புடன் அருச்சனை செய்கிறதே! இதைக் கோபிக்கலாமா? நீ சினம் கொள்ளக் கூடாது" என்று அருளினான்.

தூர்த்ததொரு காலைதனிற் சுந்தரிபொ ருளாய்ச்
சீர்த்திடலும் ஆங்கவள் செயற்கைதனை அண்ணல்
பார்த்துநமை ஈண்டுவழி பட்டுளது தன்னை
வேர்த்திடுவ தென்இது விடுத்தி இனி என்றான்.

(தெய்வயானை. 34.)

[தூர்த்ததொரு காலைதனில் - இலையைப் பறித்துக் கீழே போட்ட சமயத்தில். சுந்தரி - உமா தேவி. சீர்த்திடலும் - கோபித்தவுடன். வேர்த்திடுவது - கோபித்தல்.]

உடனே அம்பிகை கோபம் தணிந்தாள். சிவபெருமான் அந்தக் குரங்குக்கு நல்ல ஞானம் உண்டாகும்படி அருளினான். அதன் உள்ளத்தில் இருந்த அறியாமை நீங்கியது.

என்றிடலும் அம்பிகை இகற்சின மிலாளாய்
நன்றருள் புரிந்திடலும் ஞானவடி வானோன்
வன்றிறல் முசுக்கலை மனத்திருள் அகற்றி
ஒன்றியமர் வாலுணர்வு ஒருங்குதவி னுனல்.

(தெய்வயானை. 35.)

[மனத்து இருள் - அறியாமை. வாலுணர்வு - மெய்ஞ்ஞானம்.]

இங்கே இறைவன் அருளியதை 'வாலறிவு' என்று சொன்னார். வாலறிவு என்பது மெய்ஞ்ஞானம். அது இறைவன் அருளினால் உண்டாவது. நூலினால் உண்டாவது நூலறிவு. இறைவன் அருளினால் உண்டாவது வாலறிவு.

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற குறளில் இந்த இரண்டு அறிவையும் சொல்கிறார். கற்றுத் தெரிந்து கொள்வது நூலறிவு; இறைவனுடைய திருவருளால் கிடைக்கின்ற மெய்ஞ்ஞானம் வாலறிவு. நூலறிவை அபர ஞானம் என்றும், வாலறிவைப் பர ஞானம் என்றும் சொல்வார்கள். நூலறிவோடு நின்றால் பயன் இல்லை. நூல் கற்றதன் பயன் மெல்ல மெல்ல இறைவனைத் தெரிந்துகொண்டு வாலறிவு பெறுவதுதான். இதைக் காரைக்கால் அம்மையார் சொல்வார்.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக;
நீல மணிமிடற்றான் நீர்மையே—மேலுவந்த
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம்"

என்பது அற்புதத் திருவந்தாதி.

சிவபெருமான் அந்தக் குரங்குக்கு வாலறிவைத் தந்தான். நாம் எல்லாம் இறைவனுடைய பிம்பத்தை வைத்து அருச்சனை செய்கிறோம். அதற்குக் கிடைக்கிற பயனே அதிகம். வில்வம் மிக உயர்ந்தது. அதனால் பூஜை பண்ணி, நிர்மாலியம் ஆகிவிட்டாலும் கூட மறுபடியும் அதைக் கழுவி இறைவனை அருச்சனை செய்யலாம். இறைவனுடைய மூன்று நேத்திரங்கள் போல மூன்று தளங்கள் கொண்டது வில்வம். வில்வமரம் திருமகளுக்குரியது, அதைத் திருத்தரு என்பர். திருத்தருப்பூண்டி என்ற ஊரில் உள்ள கோயிலில் வில்வந்தான் தல விருட்சம். திருத்தருவை உடைய

பூண்டி என்று அதற்குப் பொருள். சிவபெருமானுக்கு வில்வ அருச்சனை மிகவும் உயர்ந்தது. அதுவும் சாட்சாத் ஆண்டவனையே, வில்வத்தினால் குரங்கு பூஜை பண்ணினால் அதற்குக் கைமேல் பலன் கிடைக்காதா? ஆண்டவன் அதற்கு உன்னதமான ஞானத்தை அருளினான்.

உடனே அந்தக் குரங்கு மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்து மிகவும் பயபக்தியுடன் இறைவனை வணங்கியது; "நான் இது வரைக்கும் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டியது.

மெய்யுணர்வு சேர்தலும் வியன்சினையின் நின்றும்
ஒய்யென இழிந்துமுசு உட்குவரல் எய்தி
ஐயனையும் ஆய்தனையும் ஆர்வமொடு தாழ்ந்து
பொய்யபடிய னேன்பிழை பொறுத்திர்என லோடும்.

(தெய்வயானை. 36.)

[வியன் சினை - அகன்ற கிளை. ஒய்யென - விரைவில். முசு - குரங்கு. உட்குவரல் - அச்சம்.]

இந்தக் குரங்கு பிழை செய்தது என்றாலும் இறைவனிடத்தில் உண்மையான பக்தி உடையவர்கள் என்ன செய்வார்களோ அதை அல்லவா செய்தது? "நீ செய்தது பிழை ஆகாது. நீ அதற்காக அஞ்ச வேண்டாம். மிகவும் உயர்ந்த வில்வ இலையை எடுத்து நீ அருச்சனை பண்ணிவிட்டாய். இதன் பயனாக நீ மனிதனாகப் பிறந்து உலகத்தை ஆளுகின்ற சக்கரவர்த்தி யாவாய்" என்று அநுக்கிரகம் பண்ணினான் ஆண்டவன்.

பிழையிதென அச்சமொடு பேசல்; எமை ஈண்டே
விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைகள் இட்டு
வழிபடல் புரிந்தனை; மனுக்குலம் உதித்து
முழுதுலகை ஆளுகென முன்னவன் மொழிந்தான்.

[விழுமியது - மேலானதாகிய. கூவிளை - வில்வம். மனுக்குலம் - மனித சாதி.]

கூவிளம்

வில்வத்திற்குக் கூவிளம் என்று பெயர்.

கூவிளையின் மெல்லிலைகள் இட்டு

என்கிறார். பழைய காலத்தில் வில்வ அருச்சனை எங்கும் நடந்து வந்தது. எல்லோருக்கும் வில்வம் என்றால் தெரியும். இலக்கணத்

திற்கு உதாரணம் காட்ட வேண்டுமென்ருல் பழைய காலத்தில் எல்லோருக்கும் தெரிந்ததையே சொல்வார்கள். யாப்பிலக்கணத்தில் சீர்களுக்கு வாய்பாடு சொல்கிறபோது, "தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்" என்ற தொடர்கள் வருகின்றன. இனிய பழத்தைத் தருகின்ற மா தேமா. புளிப்பாக இருக்கும் காயைத் தருவது புளிமா. கருவிளம் என்பது விளாம்பழம். கூவிளம் என்பது எல்லோருக்கும் தெரிந்த வில்வம்.

யாப்பிலக்கணத்தில் கூவிளம் என்பது நேர்நிரை என்ற சீருக்கு வாய்பாடாக வருவதால், எல்லோருக்கும் வில்வம் தெரியும் என்று தெரிகிறது. வில்வம் தெரியும் என்ருல் அது சிவார்ச்சனைக் குப் பயன்படும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். பல பேர் வில்வத்திஞலே சிவபெருமானை அருச்சனை செய்து வந்தார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம். திருப்பதியில் வேங்கடாசல பதிக்கு வெள்ளிக்கிழமை தோறும் வில்வ அருச்சனை நடக்கிறது. அவ்வளவு உயர்ந்தது வில்வம்.

குரங்கின் வேண்டுகோள்

"நீ போய்ச் சக்கரவர்த்தியாக அரசாட்சி செய்வாய்" என்று சிவபெருமான் சொன்னதைக் கேட்ட குரங்கு மகிழ்ச்சி அடைய வில்லை. நமக்கெல்லாம் சிறிய பதவி கிடைத்தாலும் உடனே மகிழ்ச்சி அடைவோம். பதவி கிடைக்காதா என்று ஏங்கிக்கொண் டிருப்போம். உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் கூட மேலும் பதவி உயர்வு வேண்டும் என்று எண்ணிக் காரியங்களைச் செய்துகொண்டி ருக்கிருர்கள். அந்தக் குரங்கோ சாமானியக் குரங்காக இருந்தால் அதை ஏற்றுக்கொண்டிருக்கும். அது வாலறிவு பெற்ற குரங்கு. ஆகவே அந்தக் குரங்கு சொல்லிற்று : "எம்பெருமானே, இதுவரைக் கும் நான் உங்கள் சமீபத்திலேயே இருந்துகொண்டு நாள்தோறும் உங்களைத் தரிசித்து வந்தேன் ; மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தேன். இந்த இடத்தை விட்டு நான் பூவுலகத்திற்குச் சக்கரவர்த் தியாகப் போனல் என் மனம் எப்படி மாறுமோ ? பதவியும், செல்வமும் மனத்தை மாற்றிவிடுமே ! நல்ல எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் போகுமே ! அத்தகைய செல்வ வலையில் பட்டால் நான் உஜ்ஜீவனம் பெற முடியுமா ? இப்படி நாள்தோறும் மிகவும்

சமீபத்தில் இருந்து உங்களைத் தரிசனம் செய்யத் தவம் செய்திருக்க வேண்டும். இப்போது தவத்தின் பயனாக மேலான பதவியைக் கொடுக்கிறேன் என்று கீழே போகும்படி சொல்கிறீர்களே ; நான் எவ்வாறு உய்வேன் ?'' என்று அந்தக் குரங்கு சொல்லியது.

நுங்களை வைகலும் நோக்கி உவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை எங்ஙனம் உய்கேன்.

(தெய்வயானை 39.)

[வைகலும் - நாள்தோறும். இகந்து - நீங்கி. நிலம் - பூமி.]

சுந்தரமூர்த்தி சுவாமிகளை எம்பெருமான், '' நீ பூவுலகத்திற்குப் போய் வாழ்வாயாக'' என்று சொன்னபோது அவர் இப்படித் தான் சொன்னார். அப்போது, '' நான் அங்கே வந்து உன்னைத் தடுத்தாட்கொள்கிறேன் '' என்று சிவபெருமான் சொல்லி அனுப்பிய தாகப் **பெரிய புராணம்** சொல்கிறது.

மனிதனுடைய உள்ளத்தில் பல வகையான ஆசைகள் இருந் தாலும் அவற்றைப் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்று மூன்று வகைக்குள் அடக்குவார்கள். மண்ணாசை அரசர்களுக்கு அதிகமாக இருக்கும். பெண்ணாசை பருவம் உள்ளவர்களுக்கே இருக்கும். பொன்னாசையோ எல்லோருக்கும் இருக்கும். அந்த ஆசை உடையவருக்கு இறைவனது அருள் எளிதில் கிடைக்காது. 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும் ; பணக்காரன் சொர்க்கத்திற்குப் போகமாட்டான்' என்று பைபிளில் ஒரு வாக்கியம் வருகிறது.

பழைய காலத்தில் செல்வம் படைத்தவர்கள் அதனால் தமக்கு அகங்காரம் வரக்கூடாது என்று அதை அறத்திற்குப் பயன்படுத்து வார்கள். தாம் பெற்றதைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து அதனால் எல்லோருக்கும் இன்பம் செய்வதே இந்த நாட்டுத் தர்மம். அதை ஒரு வகையில் சமதர்மம் என்று சொல்ல வேண்டும்.

''செல்வத்துப் பயனே ஈதல்'' என்பது சங்க நூல். ''இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்'' என்று சொல்வார் நாவுக்கரசர்.

அதனால்தான் இந்த நாட்டில் தர்மம் செய்ய வேண்டுமென்று அடிக்கடி சாத்திரங்கள் வற்புறுத்துகின்றன.

'சத்யம் வத, தர்மம் சர'

என்று வேதம் சொல்கிறது. "அறம் செய விரும்பு" என்று பாட்டி, சிறு குழந்தைகள் படிக்கும் ஆத்திசூடியில் சொல்கிருள். மகாத்மா காந்தி அடிகளும் செல்வம் வைத்திருக்கிறவர்கள் தர்ம கர்த்தா மாதிரி அதனை வைத்திருக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிருர். அப்படி யில்லாமல் நாம் அநுபவிக்கப் பணம் இருக் கிறது என்று நினைப்போமானல் அந்தப் பணத்தினல் நமக்கு நன்மை விளையாது; மேலும் மேலும் அறியாமையும், பிறப்பும் உண்டாகும்.

மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை எங்ஙனம் உய்கேன்

என்று குரங்கு சொன்னதைக் கேட்ட சிவபெருமான், "நீ அப்படி நினைப்பது நல்லதுதான். ஆனலும் நீ உலகத்தில் சக்கரவர்த்தி யாக வாழ்ந்துவிட்டு இங்கே வந்து நம்மை அடைவாயாக! சிறிதும் மயங்க வேண்டாம்" என்று அநுக்கிரகம் பண்ணினன்.

என்னலும் அன்னதை எம்இறை கேளா,
நின்உளம் நன்று; நிலத்திடை வைகிப்
பின்இவண் மீள்குதி; பேதுறல் எய்தி
முன்னலை யாதும், முசுக்கலை என்ருன்.

(தெய்வயானை. 40.)

[வைகி - தங்கி. பேதுறல் எய்தி - மயக்கத்தை அடைந்து. முன்னலை - யோசிக் காதே.]

அப்போது அந்தக் குரங்கு, "எம்பெருமானே, புலால் உடம்பைப் பெற்றுப் பூவுலகத்திற்குச் சென்ருலும் உன்னை மறந்து போகாமல் இருப்பதற்கு இப்போதுள்ள நிலையும் ஞாபகம் வரும்படி செய்யவேண்டும். அதற்காக இந்தக் குரங்கு முகமே அந்தப் பிறவியிலும் இருக்கும்படி அருள் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டது.

பொய்ம்மறை யான புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை அற்ற முருமே
இம்முக னேடுற எற்கருள் என்ன
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே.

(தெய்வயானை. 41.)

[பொய்ம்மறை - பொய்யை மறைக்கும் பண்டம். அம்மையில் - அந்தப் பிறவியில், அற்றம் - சோர்வு; மறதி.]

இந்த உடம்பு பொய்யான புலால் உடம்பு. பொய்யை மறைத்து மெய் என்ற பெயருடன் இருப்பது இந்த உடம்பு.

குரங்கு முசுகுந்தனுகப் பிறந்தல்

இறைவனுடைய திருவுள்ளப்படி அந்த முசுக்கலை அரிச்சந்திரன் குலத்தில் உதித்தது. குரங்கு முகத்தோடு பிறந்ததனுல் முசுகுந்தன் என்ற பெயர் உண்டாயிற்று. முகம் தவிர மற்றப் பாகம் எல்லாம் மன்மதனைப் போன்ற அழகுடன் அமைந்தனவாக இருந்தன.

மாமுக மேமுசு, மற்றுள எல்லாம்
காமரின் ஏர்தரு காட்சிய வாகிக்
கோமுறை சேர்முசு குந்தன் எனுவோர்
நாம இயற்பெயர் நண்ணிய தன்றே.

(தெய்வயானை. 44.)

[முசு - குரங்கு. காமரின் - மன்மதனைப் போல. ஏர்தரு - அழகைத் தரும். கோ முறை சேர் - அரசனுக்குரிய முறையைச் சேரும்.]

முசுகுந்தன் சக்கரவர்த்தியாகி இந்த உலகத்தை எல்லாம் காப்பாற்றி வந்தான்.

ஆய வழிப்படும் அம்முசு குந்தன்
தூய பொலன்முடி தொன்முறை சூடி
மாயிரு ஞால வளாகம துள்ள
தேய மெலாமொர் செகிற்கொடு காத்தான்.

(தெய்வயானை. 45.)

[ஞால வளாகம் - உலகப் பரப்பு. செகில் - தோள்.]

தியாகராசாவைப் பெறுதல்

முசுகுந்தனைப் பற்றி மற்றொரு வரலாறு உண்டு. திருமால் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறுர். அப்படிப் படுத்திருக்கிற அவர் தம் மார்பில் சோமாஸ்கந்த மூர்த்தியை வைத்துப் பூஜித்து வந்தார். அப்போது ஹம்ஸ மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந் தார். அது வாயினுலே சொல்லி ஜபிக்கும் மந்திரம் அல்ல. உஸ்வாச நிஸ்வாசத்துடன் சொல்வது. அதனுல் அதற்கு அஜபா மந்திரம் என்று பெயர். ஹம்ஸ மந்திரம் என்றும் சொல்வார்கள். அப்படி அவர் அந்த மந்திரத்தை, மூச்சை இழுத்தும் விட்டும் நினைக்கும்போது அவர் மார்பில் இருந்த சோமாஸ்கந்த மூர்த்தி

மெல்ல அசைவார். அவர்தாம் தியாகராசா. அவர் அமர்ந்த கோலத்தில் ஆடினுர். நடராசப் பெருமான் நின்ருடும் அழகர்; தியாகராசப் பெருமான் இருந்தாடும் அழகர். திருமால் அந்த மூர்த்தியை இந்திரனுக்கு வழங்கினுர். இந்திரனுக்கு முசுகுந்தன் துணையாக வந்தான். ஆகவே முசுகுந்த சக்கிரவர்த்திக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று நினைத்து, உனக்கு என்ன வேண்டு மென்று கேட்டான். அப்போது முசுகுந்தன் இந்திரனிடம் இருந்த தியாகராசப் பெருமானைத் தரும்படி கேட்டான். இந்திரனுக்குத் தியாகராசாவைக் கொடுக்க மனம் வரவில்லை. ஆயினும் அதே மாதிரி வேறு ஓர் வடிவம் செய்து அதை முசுகுந்தனிடம் தந்தான். முசுகுந்தனுக்குஅது தெரிந்து, அதை வேண்டாம் என்று சொன்னுன். மறுபடியும் மறுபடியும் அந்தத் தியாகராசாவைப் போலவே வேறு வடிவங்கள் செய்து முசுகுந்த சக்கரவர்த்தியிடம் கொடுத்தான். இப்படியே ஆறு வடிவங்களை மறுத்தபின் இந்திரன் மூலமான தியாகராசாவை அவனுக்கே தந்து மற்ற ஆறு வடிவங்களையும் கொடுத்துவிட்டான்.

முசுகுந்தன் திருமணத்துக்கு வருதல்

அத்தகைய தியாகராச பக்தனுகிய முசுகுந்த சக்கரவர்த்தி இப்போது தேவயானையின் திருமணத்திற்கு வந்துகொண்டிருந் தான். வேதபாரகர்களாகிய முனிவர்களும் தேவர்களும் முசுகுந்தன் வரும்போது அவன்மேல் மலர்மாரி சொரிந்தார்கள். அப்போது அந்த மலர்க் கூட்டங்கள் எல்லாம் முருகப் பெருமானைக் காண் பதற்கு நட்சத்திரக் கூட்டம் வந்ததுபோல இருந்ததாம்.

ஆரண முனிவர் தாமும் அமரரும் அகல்வான் செல்வார்
சீரணி முசுகுந் தன்மேல் திருமலர் சிதற லுற்ருர்,
காரண மில்லா வள்ளல் கடிமணம் தாமும் காண்பான்
தாரணி தன்னிற் செல்லும் தாரகா கணங்கொ லென்ன.

(தெய்வயானை. 94.)

[காரணம் இல்லா - தனக்கு மூலம் இல்லாத. தாரகாகணம் - நட்சத்திரக் கூட்டம்.]

இறைவனுடைய சேனு கணங்களும், மற்றப் பக்தர்களும் மிகப்பெரும் கூட்டமாகத் திருப்பரங்குன்றத்தை வந்து அடைந்தார் கள். வெவ்வேறு தேசத்திலுள்ள மன்னர்கள் வந்து சேர்ந்தார்கள்,

திருப்பரங்குன்றத்தில் அவரவர்களுக்கு என்று அமைத்திருந்த மண்டபங்களில் போய்த் தங்கினார்கள்.

திருமண நிகழ்ச்சிகள்

தேவமகளிர் தேவயானையிடம் வந்து அவளுக்குப் பலவகையாக அலங்காரம் செய்தார்கள். "சூரபன்மாவை அழித்து வெற்றி பெற்ற வீரப்படையை உடைய எம்பெருமானுக்கு நீ மனைவியாகப் போகிறாய். இந்த உலகத்திற்கு எல்லாம் நீதான் தலைவியாவாய்" என்று அந்தப் பெருமாட்டியின் திருவடியைப் பணிந்து ஏத்தினார்கள்.

திருமண மண்டபத்திற்கு முருகப் பெருமான் எழுந்தருளி வந்தான். பிரமன் முதலிய தேவர்கள் வந்து அவனை வணங்கி வரவேற்றார்கள். இந்திரன் வேண்டுகோளுக்கிணங்க அவன் மயில் மேல் ஏறி வந்தான். தேவர்களும் முனிவர்களும் அவனை வாழ்த்தினார்கள். இந்திரனுடைய கட்டளையினால் அமைக்கப்பெற்ற மணி மண்டபத்தில் வந்து முருகன் அமர்ந்தான். அப்போது இந்திராணி எம்பெருமானை எதிர்கொண்டு பசுவின் பாலினால் முருகப் பெருமானுடைய பாதங்களை ஆட்டி வணங்கினாள். பாத பூஜை செய்தாள். விளக்குகள் ஏற்றி, மூன்று முறை வலமாக வந்தாள். இந்தக் காலத்திலும் திருமணத்தில் மாமியார் மாப்பிள்ளை காலைப் பாலால் அலம்புவதும், விளக்கை எடுத்துச் சுற்றுவதும் வழக்கமாக இருக்கின்றன. இவற்றை எல்லாம் எண்ணிக் கச்சியப்பர் முருகப் பெருமானின் திருமணத்தில் அத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தன என்று சொல்லியிருக்கிறார்.

எதிர்பு குந்திடும் இந்தி ராணிதன்
புதிய தோர்பசுப் பொழிந்த தீயபால்
நிதியின் கொள்கலம் நிரப்பி வந்துவேள்
பதயு கங்களில் பரிவொ டாட்டினாள்.

(தெய்வயானை. 206.)

[தீய பால் - இனிய பால். நிதியின் கொள்கலம் - பணம் வைத்திருக்கும் பாத்திரத்தில்; நிதி - பொன்னும் ஆம். பதயுகங்களில் - இரண்டு திருவடிகளில்.]

சிவனும் உமாதேவியும் வருதல்

இப்படி இங்கே முருகப்பெருமானுக்குத் திருமணம் நடந்து கொண்டிருக்கிற தருணத்தில், அந்த மணத்தைக் காணவேண்டு

மென்ற ஆசையினல் பார்வதி பரமேசுவரர் விமானத்தில் வான்வழியாக வந்தார்கள்.

ஆன காலே அரிஅயன் நாடொணு
ஞான நாயகன் நங்கையும் தானுமோர்
மான மேல்கொண்டு மாயிருஞ் சாரதர்
சேனே சூழ்தரச் சேணிடைத் தோன்றினன்.

(தெய்வயானே. 213.)

[மானம் - விமானம். சாரதர் - பூதகணம். சேணிடை - வானத்தில்.]

திருமணத்திற்கு அம்மையும் அப்பனும் எழுந்தருளியது கண்டு மிக்க மகிழ்ச்சியை அடைந்த முருகவேள் உடனே தன் ஆசனத்திலிருந்து எழுந்து இறங்கி வந்தான். அவர்களே ஒரு மணியாசனத்தில் அமர்த்தி வணங்கினன்.

அம்மை யுந்தன தத்தனும் வந்தது
செம்மல் கண்டு சிறப்புடை ஓகையால்
விம்மி தங்கொண்டு மேதகும் அன்பினல்
இம்மெ னக்கடி தேஎழுந் தானரோ.

அனேய காலேயில் ஆதியம் பண்ணவன்
இனிது மானத் திழிந்து கணத்துடன்
புனித நீடு பொலன்மணிச் சாலேயுள்
வனிதை யாளொடும் வந்துபுக் கானரோ.

(தெய்வயானே. 214, 216.)

[செம்மல் - முருகன். ஓகை - மகிழ்ச்சி. விம்மிதம் - வியப்பு. மானத்து - விமானத்தினின்றும்.]

முருகன் தன் முடி தாழ்த்தித் தாய்தந்தையர்களுடைய பாதாரவிந்தங்களே வணங்கினன். அப்போது அவனுடைய முடி சூரியனேப் போல இருந்ததாம். அம்மையப்பனுடைய பாதங்கள் கமலங்கள் போல இருந்தனவாம்.

அதுகண் டுநடந் தறுமா முகவன்
எதிர்கொண் டுவிரைந் திருவோர் பதமும்
முதிரன் பொடுதன் முடிசூ டினனல்,
கதிரும் கமலங் களும்மே வியபோல்.

(தெய்வயானே. 217.)

அம்மைக்கும், அத்தனுக்கும் இரண்டு வகையான மகிழ்ச்சி இப்போது உண்டாயின. முருகன் சூரசங்காரம் செய்துவிட்டு

வெற்றியுடன் வந்திருக்கிறான். அவனுடைய திரு அவதாரத்தின் பயனே அதுதான். அதனால் சிவபெருமானுக்கு ஒருவகை மகிழ்ச்சி உண்டாயிற்று. அதுமாத்திரம் அல்லாமல் இப்போது தன்னுடைய தலைமைப் பீடத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தக்கபடி அவன் திரு மணம் செய்துகொள்கிறான் என்பது இரண்டாவது வகை மகிழ்ச்சி.

சிவபெருமான் விமானத்திலிருந்து கீழே இறங்கினவுடன் முருகப் பெருமான் தானே போய் அம்மையப்பனை வணங்கினான் என்று கச்சியப்பர் சொல்கிறார். நல்ல பிள்ளை எப்படி நடப்பான் என்பதை இதன் மூலம் காட்டுகிறார்.

சிவபெருமானும் அம்பிகையும் தக்க இடத்தில் அமர்ந் தார்கள்.

திருமணம்

அப்போது இந்திரன் தன் மகளை அழைத்துக்கொண்டு வந்தான். முனிவர்களும், தேவர்களும் அவளை வாழ்த்தினார்கள். உமாதேவி அவர்களை அழைத்துச் சென்று திருமணப் பீடிகையில் அமர்த்தி வைத்தாள்.

திருத்த குந்திறற் சேயையும் சேண்மிசை
அருத்தி பெற்ற அணங்கையும் முற்படும்
பெருத்த பொன்மணிப் பீடிகை மீமிசை
இருத்தி வைத்தனள் யாவையும் ஈன்றுளாள்.

(தெய்வயானை. 236.)

[சேயையும் - முருகனையும். சேண்மிசை - வானத்தில். பீடிகை - பீடம்.]

அப்போது இந்திரன் தன் மகள் தேவசேனையின் கரங்களைப் பற்றி முருகப் பெருமான் திருக்கரத்தில் கொடுத்து, " உன் அடியவ னாகிய யான் இவளை உனக்குக் கொடுத்தேன் " என்று கூறினான்.

அன்னுழி இந்திரன் ஆறுமு கேசன்
தன்னொரு கையிடைத் தந்தியை நல்கி,
நின்அடி யேன்இவண் நேர்ந்தனன் என்னாக்
கன்னல் உமிழ்ந்த கடிப்புனல் உய்த்தான்.

(தெய்வயானை. 245.)

[அன்னுழி - அப்போது. தந்தியை - தேவயானையை. நேர்ந்தனன் - கொடுத் தேன். கன்னல் - பாத்திரம்.]

"நான் உன் அடிமை. இவளை உனக்கு மனைவியாக நான் கொடுத்தேன்" என்று சொல்லித் தாரை வார்த்தான். இந்திரன் வேத மந்திரத்தினால் தாரை வார்த்து, தன் மகளைக் கொடுக்க, அந்தக் கன்னிகாதானத்தை முருகப் பெருமான் ஏற்றான்.

மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன னல்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்.

(தெய்வயானை. 246.)

[மருத்துவன் - இந்திரன். உய்ப்ப - வார்க்க. அருத்தி - விப்பம்.]

தன்பால் அன்பு செய்தவர்களுக்கு இக வாழ்வையும், பர வாழ்வையும் கொடுக்கிற பரம தாதாவாகிய ஆண்டவன் இங்கே இந்திரன் கொடுக்கத் தேவசேனையை ஏற்றான். அது அவன் கருணையைக் காட்டுகிறது. தேவசேனை செய்த தவத்தின் பயனாக அவளை ஏற்றுக்கொண்டான்.

அப்போது பிரமன் மங்கல நாண் கொடுக்க அதை வாங்கித் தேவசேனையின் திருக்கழுத்தில் கட்டி, அவளுக்கு மாலை சூட்டினான்.

செங்கம லத்திறை சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்.

(தெய்வயானை. 247.)

[செங்கமலத் திறை - பிரமன். சிந்தையின் ஆற்றி - மனத்தினால் இயற்றி. மணிக் களம் ஆர்த்து - அழகிய கழுத்தில் கட்டி. சூழ்ந்தான் - சுற்றினான்.]

முருகப் பெருமான் தேவசேனைக்குத் தாலி கட்டியதாகக் கச்சியப்பர் சொல்கிறார்.

தாலி

சில ஆராய்ச்சிக்காரர்கள் பழங்காலத்தில் தமிழ் நாட்டில் தாலி இல்லையென்று சொல்வார்கள். **சிலப்பதிகாரத்தில்** கோவலன் கண்ணகிக்குத் தாலி கட்டியதாக வருகிறது. வட நாட்டில் தாலி கட்டும் வழக்கம் இல்லை. தமிழ் நாட்டில் வீரன் ஒருவன் தன்னுடைய வீரத்தைக் காட்டுவதற்குப் புலியின் பல்லைக் கொண்டுவந்து

தன் காதலிக்குத் தருவான். அதை அலங்காரமாக அவள் கழுத்தில் அணிந்து கொள்வாள்.

இரண்டு வகையான தாலி உண்டு. ஒன்று அச்சுத் தாலி. மற்றொன்று ஆமைத்தாலி. அவற்றையே காசு, பிறப்பு என்று சொல்வார்கள், யாப்பிலக்கணத்தில், வெண்பாவின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும் என்பார்கள். அச்சுத் தாலியைக் குறிப்பது காசு; ஆமைத்தாலியைக் குறிப்பது பிறப்பு. வாய்பாடாக வரும் சொல் எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்க வேண்டும். அக் காலத்தில் இவை இருவகைத் தாலிகளா தலின் யாவருக்கும் தெரிந்திருந்தன.

முருகப் பெருமான் பிறகு அக்கினியை வலம் செய்து சப்தபதி முடித்து, தேவசேனையின் திருவடியை அம்மியின்மேல் வைத்து வலம் வந்தான். பிரமனின் உச்சியின்மேல் அடி வைத்த எம் பெருமான் இப்போது தேவசேனையின் திருவடியைப் பிடித்து அம்மி யின்மேல் வைத்தானும்.

உலகருள் காரணன் ஒண்ணுத லோடும்
வலமுறை யாக வயங்கனல் சூழ்ந்து
சிலையிடை அன்னவள் சீறடி தந்தான்
மலரயன் உச்சியின் மேலடி வைத்தான்.

(தெய்வயானை. 252.)

[சிலையிடை - அம்மியின் மேல். சீறடி - சிறிய அடியை.]

தேவசேனையைத் திருமணம் செய்துகொண்ட முருகப் பெருமான் தேவசேனையோடு தாயையும் தந்தையையும் வலம் வந்தான்; வணங்கினன்.

இவ்வகை மன்றல் இயற்றிய பின்னைத்
தெய்வத மாதொடு செங்கதிர் வேலோன்
அவ்வையொ டத்தனை அன்பொடு சூழ்ந்து
செவ்விதின் மும்முறை சேவடி தாழ்ந்தான்.

(தெய்வயானை. 254.)

[மன்றல் - திருமணம். தெய்வமாது - தேவயானை. அவ்வை - தாய். சூழ்ந்து - வலம் வந்து.]

மூன்று முறை தாய் தந்தையர்களை வணங்கியதாகக் கச்சியப்பர் சொல்கிறார்.

முருகன் தலைமைப் பதவி பெறுதல்

முதலில் தாயை முருகன் வணங்கினான். தம்முடைய திருவடியில் வணங்கிய முருகனையும், தேவயானையையும் அன்போடு எடுத்து அணைத்து, "உங்களுக்கு எங்களுடைய தலைமைப் பதவியைக் கொடுத்தோம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

இந்தச் செய்தியை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக மாமியாருக்கும், மருமகளுக்கும் ஆவது இல்லை என்ற கெட்ட எண்ணம் நம் நாட்டில் நிலவி வருகிறது. தன்னிடத்தில் அன்பு உடைய மகன், மனைவி வந்துவிட்டால் தன்னைப் புறக்கணிப்பான் என்ற எண்ணம் இங்கே நிலவுகிறது. ஆகவே, முருகப் பெருமானுக்குத் திருமணம் ஆனவுடன் முதலில் தாயை வணங்கினான் என்பதில், மகன் செய்ய வேண்டிய கடமைக் குறிப்பு இருக்கிறது. அப்போது மகிழ்ச்சியுடன் இருந்த பார்வதியும், பரமேசுவரனும் முருகனைப் பார்த்து, "உங்களுக்குத் தலைமைப் பதவி தந்தோம்" என்றார்கள்.

அடித்த லத்தில்வீழ் மக்களை இருவரும் ஆர்வத்
தெடுத்த ணைத்தருள் செய்துதம் பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்த்துமக் கெம்முறு முதன்மை
கொடுத்தும் என்றனர் உவகையால் மிக்ககொள் கையினர்.

(தெய்வயானை. 255.)

[பாங்கரில் - பக்கத்தில். கொடுத்தும் - தந்தோம்.]

இதுவரைக்கும் தலைமைப் பதவியைக் கொடுக்காததற்குக் காரணம் வாழ்க்கைக்குத் துணை ஒருத்தி இல்லாததுதான். இப்போது முருகப் பெருமானுக்குரிய தகுதி முழுமையாயிற்று. ஆகையால் தலைமைப் பதவியை அருளினார்கள்.

திருமணம் ஆகாத ஒருவனை முழு மனிதன் என்று சொல்ல முடியாது. அவன் சொந்தத்தில் வீட்டைக் கட்டலாம். ஆயினும் வீட்டுக்குரியவன் ஆகமாட்டான். மனைவி வந்தால்தான் அந்த இல்லம் அழகுடையதாகும். இல்லாள் இல்லாதது அழகு இல்லாதது.

இவ்வாறு சிவபெருமானும் அம்பிகையும் முருகனுக்கும் தேவசேனைக்கும் தலைமை கொடுத்து, அங்குள்ளவர்களை வாழ்த்தி அருள் புரிந்து மறைந்து போனார்கள். தேவர்கள் முருகனையும் தெய்வயானையையும் வணங்கினார்கள்,

மலைமட ந்தையும் இறைவனும் மைந்தற்கும் மகட்கும்
தலைமை செய்தருள் புரிதலும் சாலையுள் இருந்த
அலர வன்முதல் அமரரும் முனிவரும் அணங்கின்
குலமட ங்கலும் அவரடி முடிமிசைக் கொண்டார்.

(தெய்வயானை. 256.)

[சாலை - மணமண்டபம். அணங்கின் குலம் - தேவமகளிர் கூட்டம். அவர் அடி - முருகனடியையும் தேவயானையின் அடியையும்.]

இறைவனும், இறைவியும் இருந்த ஆசனத்தில் முருகப்பெருமானும், தேவசேனையும் அமர்ந்தார்கள். பதவியைக் கொடுத்த பிறகு அவர்கள் அங்கே இருக்கலாமா? பதவியைக் கொடுத்தோம் என்று சொன்னவுடன் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக அவர்கள் மறைந்து போனார்கள்.

எத்தனையோ பேர், "என் பிள்ளையிடம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன்" என்பார்கள். பிறகும் அங்கேயே இருந்து பல குழப்பத்தை உண்டாக்குவார்கள்.

புராணங்களில் வரும் நிகழ்ச்சிகளை வெறும் கதைகள் என்று நினைக்கக் கூடாது. மனிதன் வாழவேண்டிய முறையை வகுத்துக் காட்டுபவை அவை.

தேவசேனையை மணந்துகொண்ட எம்பெருமான் அவளோடு இணைந்தான். அதனை அலங்காரமாகப் பாடுகிறார் கச்சியப்பர். 'தேவயானை என்ற யானையை முருகப் பெருமான் ஒரு கயிற்றால் கட்டி, தன் ஊருக்குக் கொண்டு வந்து, அங்குசத்தைக் கையில் கொண்டு ஒரு தூணில் பிணித்தான்' என்று தொனிக்கும்படி சொல்கிறார்.

சேனை தித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வேள்
நாணி னிற்கட்டி நகரிடைத் தந்துநற் கலன்கள்
பூணு தற்றுறும் அங்குசம் கைக்கொடு புயமாம்
தூணு றப்பிணித் தணைத்தனன் அருளெனும் தொடரால்.

(தெய்வானை. 264.)

நாணினிற் கட்டி என்பதற்கு மங்கல நாணால் கட்டி என்பது ஒரு பொருள்; கயிற்றினால் கட்டி என்று மற்றொரு பொருளும் தொனித்தது. பூணுதல் துறும்-பூணுதலைச் செறிந்த. அங்குசம் கைக்கொடு-அங்குசம் என்னும் ஆயுதத்தைக் கையில் கொண்டு என்பது ஒரு

பொருள் ; அழகான தனத்தைக் கைக்கொண்டு என்பது ஒரு பொருள். அருள் என்னும் சங்கிலியால் புயமாகிற தூணில் கட்டினனும்.

இந்திரன் மகுடாபிஷேகம்

திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடந்த பிறகு தேவலோகத் திற்கு எழுந்தருளினன் முருகன். சூர சங்காரம் ஆன பிறகு இந்திரன் தன் ராஜ்யத்தைப் பெற்றிருந்தான். மறுபடியும் அவனுக்குப் பட்டாபிஷேகம் ஆகவேண்டும். அதற்காக முருகப் பெருமான் தேவ லோகத்திற்கு எழுந்தருளினன். இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து மணி முடி சூட்டி அநுக்கிரகம் பண்ணினன்.

அரசியல் உரிமைத் தெல்லாம்
ஆங்கவர் அழைத்துக் கங்கைத்
திரைசெறி தெண்ணீர் ஆட்டிச்
செழுந்துகில் கலன்கள் சாந்தம்
விரைசெய்தார் புனைந்து சீய
வியன்பெருந் தவிசின் ஏற்றி
வரிசையோ டிந்தி ரற்கு
மணிமுடி சூட்டி னூரால்.

(விண்குடியேற்று. 40.)

[அரசியல் உரிமைத்து எல்லாம் - அரசியல் உரிமைக்கு உரிய எல்லாவற்றையும்; உரிமைத்து: தொகுதி யொருமை. விரை - வாசனை. சீய வியன் பெருந்தவிசு - சிங்காதனம்.]

புதிய மண்டபம் ஒன்றை அமைத்து, ஆகாச கங்கையிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து இந்திரனுக்கு ஆட்டினர்கள். முறைப்படி இந்திரனைச் சிம்மாசனத்தில் அமர்த்தி மணி முடி சூட்ட, அந்தச் செயலை நிகழ்த்தி வைத்தான் பெருமான்.

அப்போது முடிசூட்டிக்கொண்ட இந்திரன் முருகப் பெருமானின் திருவடியில் தன் முடியை வைத்து வணங்கினன். "எம்பெருமானே, நீ எழுந்தருளித் தேவலோகத்தையும் பதவியையும் சிறப்பையும் பழையபடியே பரிபூரணமாக எனக்கு வாங்கித் தந்தாய். அதனல் நான் உய்தி அடைந்தேன். இதற்கும் மேலே வேறேதேனும் ஊதியம் எனக்கு உண்டோ ?" என்று உருகிப் புணிந்தான்,

எம்பெருமான் அவனுக்கு அருள் செய்து அங்கிருந்து திருக் கயிலாயத்தை அடைந்தான். பிறகு தன்னுடைய கந்தகிரிக்கு எழுந்தருளினன். இமையோர் நாட்டில் அறக்கொடியை ஏற்றி வைத்த பெருமானகிய முருகன் உலகத்திற்கு அருள் செய்துகொண்டு சிவபெருமான் அளித்த தலைமையோடு தேவசேனையுடன் அங்கே எழுந்தருளி இருந்தான்.

பழையபடி தேவர்கள் தம் நிலையைப் பெறும்படி முருகன் செய்தான். தேவலோகத்தில் பழையபடி அவர்களைக் குடியேற்றி னன். இதை அருணகிரிநாதர் பாடுகிறர் :

> "இமையவர் நாட்டினில் நிறைகுடி ஏற்றிய
> எழுகரை நாட்டவர் தம்பிரானே!"

(திருப்புகழ்.)

தக்க யாக சங்காரம்

சயந்தன் வினவுதல்

தேவலோகத்தில் எல்லோரும் இந்திரனுக்கு முடி சூட்டியபின் மகிழ்ச்சியோடு அமர்ந்திருந்தார்கள். அப்போது இந்திரனுடைய மகன் சயந்தன் பிரகஸ்பதி பகவானிடம் ஒரு கேள்வி கேட்க ஆரம்பித்தான். "தக்கன் வேள்வி செய்தான். பரமேசுவரனை அழைக்காமல் மற்றத் தேவர்களை அழைத்தான். அந்த யாகத்தில் அளிக்கப்பட்ட அவியைத் தேவர்கள் நுகர்ந்தார்கள். அதனால்தான் அவர்களுக்குச் சூரபன்மாவினாலே துன்பம் ஏற்பட்டது என்று சொல்கிறார்களே ; அந்த வரலாறு யாது? எனக்குக் கூற வேண்டும்" என்று கேட்டான். அந்த வரலாற்றைப் பிரகஸ்பதி கூற ஆரம் பித்தார்.

அந்தப் பகுதி, அதனோடு தொடர்புடைய செய்திகள் யாவும் தனியாக, '**தக்க காண்டம்**' என்ற பெயருடன் கந்த புராணத்தில் இருக்கின்றன. அந்தப் பகுதியில் சிவபெருமானுடைய பெருமைகள் பலபடியாக வருகின்றன. அவனுடைய வீரச் செயல்களும், திரு விளையாடல்களும் அங்கே விரிவாக உள்ளன. தக்கனுடைய வர லாற்றைப் பிரகஸ்பதி கூற ஆரம்பித்தார்.

தக்கன் தவம் செய்தல்

பிரம்மாவுக்குப் பத்துப் பிள்ளைகள். அவர்களைப் பிரம்மாவைப் போலவே பிரஜாபதி என்று சொல்வார்கள். அவர்களில் ஒருவன் தக்கப் பிரஜாபதி. அவன் தவம் செய்தபோது சிவபெருமான் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டான்.

தன்னை வருத்திக்கொண்டு பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது எதுவோ அதுதான் உயர்ந்த தவம். தவம் என்றும் நற்றவம் என்றும் இரண்டு உண்டு.

"தவம் செய்வார்க்கிடம், நற்றவம்செய் வார்க்கிடம்"

என்று **சிந்தாமணியில்** வருகிறது. பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்வது நல்ல தவம். ஏதேனும்

லாபத்தை உத்தேசித்துச் செய்கிற தவம் நல்ல தவம் ஆகாது. அதைவிட மோசமானது ஒன்று உண்டு; தவத்தின் ஆற்றலால் பிறருக்குத் துன்பம் செய்து, தான் உயர்ந்த தலைவனாக இருக்க வேண்டுமென்று நினைப்பது அது. இந்தத் தவம் அசுரத் தவம். இராட்சசர்களில் இராவணனும், அசுரர்களில் சூரனும் தவத்தில் உயர்ந்தவர்கள். அவர்கள் செய்ததுபோல யாரும் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் எல்லோருக்கும் மேலான பதவி வகிக்க வேண்டும், எல்லோரையும் அடக்கி ஆளவேண்டுமென்ற நோக்கத்தோடு தவம் செய்தார்கள். நல்ல தவம் என்பது இறைவனிடம் மாறாத அன்பு கொண்டு செய்வது. எளியோரிடத்தில் பரிவும், இரக்கமும் காட்டுகின்றவனே உண்மையான தபஸ்வி ஆவான். நற்றவம் என்பது பிறப்பை அறுப்பதற்குச் செய்யும் தவம் என்றும் கொள்ள லாம். திருக்குறளில்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்கிற இடத்தில், 'பிறவிப் பிணிக்கு மருந்தாதலின் நற்றாள் என்றார்' என்று பரிமேலழகர் உரை செய்கிறார். ஞானசம்பந்தப் பெருமான் பாட்டை 'நற்றமிழ்' என்று **அப்பர் சுவாமிகள்** சொல்வார்.

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்."

இங்கே நற்றமிழ் என்பதற்குப் பிறவிப் பிணிக்கு மருந்தாக இருக்கும் தமிழ் என்று பொருள்கொள்வது சிறப்பு. அதுபோல் நற்றவம் என்பது பிறவியை அறுப்பதற்குச் செய்யும் தவம் என்று கொள்ள வேண்டும்.

தக்கன் செய்த தவம் தன்னலம் காரணமாகச் செய்த தவம்.

தக்கன் பெற்ற வரம்

அவன் இறைவனிடம் வரம் கேட்டான்; "இந்த உலகத்தில் உள்ளவர்களும், தேவலோகத்தில் உள்ளவர்களும் என் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். உன்னை வந்து வழிபட்டு வணங்கு கிற உயிர்கள் எல்லாம் என்னை வந்து வழிபட வேண்டும். உன்னை அல்லாமல் வேறு யாரையும் வழிபடாத நிலை எனக்குத் தர வேண்டும்" என்று வேண்டினான்.

நீள்நி லப்பெரு வைப்பும் நிகர்இலா
வீணை வல்லவர் ஏனையர் மேவிய
சேணும் மால்அயன் ஊரும் திசையும்என்
ஆணை செல்ல அளித்தருள் செய்தியால்.

உன்னை வந்து வழுத்தும் உயிர்எலாம்
என்னை வந்து வழுத்தவும் யான்இனி
நின்னை யன்றிநெஞ் சாலும் பிறர்தமைப்
பின்னை வந்தியாப் பெற்றியும் ஈதியால்.

(தக்கன் தவம் செய். 11, 12.)

[வீணைவல்லவர் - கந்தருவர். சேணும் - தேவலோகமும்.]

அதோடு மற்றொரு வரத்தையும் கேட்டான்; "எல்லாவற்றையும் ஈந்து அருளுகின்ற தாயாகிய எம்பெருமாட்டி உன் சரீரத்தில் பாதியாக இருக்கிறாள். அந்தப் பராசக்தி என்னுடைய மகளாகத் தோன்ற வேண்டும். நீ மறையவனாக வந்து அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று கேட்டான்.

ஆதி யாகி அனைத்தையும் ஈன்றநின்
பாதி யான பராபரை யான்பெறும்
மாத ராக மறையவன் ஆகிநீ
காத லாகக் கடிமணம் செய்தியால்.

(தக்கன் தவம் செய். 14.)

அம்பிகை எல்லோருக்கும் தாய். அம்பிகை என்ற பெயரே அதைத்தான் காட்டுகிறது. எல்லாத் தத்துவங்களுக்கும் மேலான சக்தி அவள். அந்தப் பெருமாட்டி யிடமிருந்துதான் உலகங்கள் எல்லாம் தோன்றுகின்றன. இறைவனுடைய அருளே அந்த வடிவம். உலகத்திலுள்ள உயிர்க் கூட்டங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று அருள் பாலிக்கின்ற பெருமாட்டி அந்தத் தாய்.

தக்கன் அகங்காரத்தினாலே கேட்டான்; "எல்லா உலகத்தையும் ஈன்ற தாய் என்னுடைய மகளாக வரவேண்டும்" என்று கேட்டான். 'எல்லா உலகத்தையும் ஈன்ற தாயை நான் பெறுகின்ற பேறு எனக்குக் கிடைக்க வேண்டும்' என்று கேட்டிருந்தால் அவன் பணிவு நன்றாகத் தெரியும். ஆனால் இங்கே, "எல்லாவற்றையும் ஈன்ற பராசக்தி நான் பெறும் மகளாக இருக்கவேண்டும்" என்று சொல்கிறான்.

அதில் அவன் அகங்காரம் தொனிக்கிறது ஆண்டவன் மறையவனாக வந்து திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டான். மறையவன்-அந்தணன். சிவபெருமானை அந்தணன் என்று சொல்வது வழக்கம்.

"யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்"

என்று அகநானூறு சொல்கிறது. சிவபெருமானே அநாதியாகிய அந்தணன். ஆகையால்தான் மறையவனாக நீ வரவேண்டுமென்று தக்கன் கேட்டுக் கொண்டான்.

தக்கன் மணம் புரிந்து மக்களைப் பெறுதல்

இறைவன் தக்கனுக்கு அவன் கேட்ட வரங்களை அருளிச் செய்தான். உடனே தக்கன் தனக்கென்று தக்கமாபுரி என்ற ஊரை அமைத்துக் கொண்டான். எல்லோரையும் தன் ஆட்சிக்குள் அடக்கி ஆண்டான். வேதவல்லி என்பவளை மணந்தான். அவள் வாயிலாக ஆயிரம் மைந்தர்களைப் பெற்றான். அந்தக் குழந்தைகளிடம் நாரதர் சென்று, உலகத்திலுள்ள எல்லோரும் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைய வேண்டுமென்று அறிவுறுத்த, அவர்கள் தவம் செய்யப் போய்விட்டார்கள். உண்மையான தவத்தை அவர்கள் செய்தார்கள். அதைக் கண்டு தக்கன், 'இவர்கள் நமக்குப் பயன்படாத பிள்ளைகளாக ஆகிவிட்டார்களே!' என்று, மறுபடியும் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்றான். நாரதர் மறுபடியும் வந்து அவர்களுக்கு உபதேசம் செய்ய, அவர்கள் எல்லாம் தவம் செய்யப் போய்விட்டார்கள்.

'பிள்ளைகளைப் பெறுவதனால் எந்த விதமான பயனும் இல்லை. ஆகையால் நாம் இனிமேல் பெண்களையே பெறவேண்டும்' என்று தீர்மானித்தான் தக்கன். முதலில் இருபத்து மூன்று பெண்களைப் பெற்றான். தர்மன், பிருகு, மரீசி முதலியவர்களுக்கு அவர்களை மணம் புரிந்து கொடுத்தான். அதற்குப் பிறகு இருபத்தேழு நட்சத்திரங்களைப் பெற்றுச் சந்திரனுக்கு மணம் செய்வித்தான்.

சந்திரன் பெற்ற சாபம்

சந்திரன் கார்த்திகை, ரோகிணி என்ற இரண்டு பெண்களிடத்தில் மாத்திரம் அதிக விருப்பம் கொண்டு மிகவும் காதல்

உடையவனாக இருந்தான். அதைக் கண்ட மற்ற இருபத்தைந்து பெண்களுக்கும் வருத்தம் உண்டாயிற்று. ஆகவே அவர்கள் சந்திரனிடம் ஊடல் கொண்டு தம் தந்தையாகிய தக்கனிடத்தில் போய் முறையிட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்ட தக்கன் மிகவும் கோபம் கொண்டு சந்திரனுக்கு ஒரு சாபத்தைத் தந்தான். "உன்னுடைய கலைகள் எல்லாம் வரவரத் தேய்ந்து நீ அழிந்து போவாயாக!" என்று சாபம் இட்டான்.

> **போந்தனர் தக்கன் தன்பால்,**
> **பொருமியே பொலம்பூண் கொங்கை**
> **ஏந்திழை மாதர் தங்கள்**
> **கேள்வனது இயற்கை கூறக்**
> **காந்திய உளத்த னாகிக்**
> **கனன்றுஅவன் கலைகள் எல்லாம்**
> **தேய்ந்துஇல வாக என்று**
> **தீமொழிச் சாபம் செய்தான்.**

(சந்திர சாபம். 6.)

[காந்திய - கோபம் கொண்ட.]

அவன் இட்ட சாபத்தின் பயனாகச் சந்திரனுக்கு ஒவ்வொரு கலையாகக் குறைந்துகொண்டு வந்தது. ஒரே ஒரு கலை மாத்திரம் எஞ்சி இருந்தது. அப்போது சந்திரன் அந்தக் கலையும் தேய்ந்து விட்டால் நாம் அழிந்து போவோமே என்று அஞ்சி, யாரை அடைந்தால் நமக்கு நலம் உண்டாகும் என்று எண்ணிப் பார்த்தான். தக்கனுக்கு வந்த அதிகாரமும், ஆற்றலும் பரமேசுவரனுடைய கிருபையினால் அல்லவா வந்தன என்று தெரிந்து கொண்டான். உடனே அவன் இறைவனிடம் சென்று முறையிட்டான்.

இறைவன் சந்திரனுக்கு அருள் புரிதல்

தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பதையே தன்னுடைய கடமையாகக் கொண்ட பரமேசுவரன் அந்த ஒரே ஒரு கலையையுடைய சந்திரனை எடுத்துத் தன் முடியில் வைத்துக் கொண்டான். இறைவனுடைய திருமுடியில் சேர்ந்த பிறகு சந்திரனுடைய கலை தேயவில்லை. தக்கனுடைய சாபம் அந்த இடத்திற்குச் செல்ல முடியாது.

> **தீர்ந்தன அன்றியே, திங்கள் தன்னிடை**
> **ஆர்ந்திடு கலையினை அங்கை யாற்கொளா**
> **வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினன் ;**
> **சார்ந்திலது அவ்வழித் தக்கன் சாபமே.**

(சந்திர சாபம். 41,)

[வயங்க - விளங்க.]

சந்திரன் ஒவ்வொரு கலையும் பௌர்ணமி வரைக்கும் வளர்ந்து முழுமையும் நிரம்பியவுடன் ஒவ்வொரு கலையாகத் தேய்ந்தான். ஆனல் ஒரு கலை அழியாமல் அப்படியே நின்றது.

ஒன்று வைகலுக்கு ஓர்கலை யாய்நிறைந் தோங்கி
நின்ற தொன்னிலை நிரம்பியே பின்உற நெறியே
சென்று தேய்ந்துவந்து, ஒருகலை சிதைவுரு தாகி
என்றும் ஆவதும் அழிவதும் போன்றனன் இரவோன்.

(சந்திர சாபம். 47.)

[ஒன்று வைகலுக்கு - சேருகின்ற ஒவ்வொரு நாளுக்கும். இரவோன் - சந்திரன்.]

சிவபெருமானுடைய கிருபையினல் வானத்திலுள்ள சந்திரனுக்குத் தேய்வும், வளர்ச்சியும் அமைந்தன. சிவபெருமானுடைய திரு முடியிலுள்ள சந்திரன் ஒரு கலையோடு இருந்தான். சந்திரன் அழிந்து போவான் என்று எண்ணிய தக்கன், அவன் கலைகளைப் பெற்று வளர்வதும், தேய்வதுமாக இருந்ததைக் கண்டு மிகவும் கோபம் கொண்டான்.

அப்போது புலகன் என்ற முனிவன் வந்து அவனைச் சமாதானப் படுத்தினன். "பதினறு கலைகளில் ஒரு கலையைத்தானே சந்திரன் பெற்றிருக்கிருன்? முழுமையும் அவனுக்குத் தரவில்லையே! மாமனர் என்று உனக்கும் மரியாதை கொடுத்திருக்கிருன் அல்லவா?" என்று சமாதானம் சொன்னன். அதனல் தக்கன் சிறிது சினம் மாறினன்.

தாட்சாயணி திருமணம்

அம்பிகை தன் பெண்ணக வரவேண்டுமென்று வரம் கேட்டுப் பெற்றவன் ஆகையால் தக்கன் யமுனைக் கரையில் இருந்து தவம் செய்தான். அப்போது அம்பிகை சிறு குழந்தையாக வந்தாள். 'நமக்கு இறைவன் அருள் செய்தபடி இந்தக் குழந்தை வந்தது' என்று எண்ணி எடுத்து வீட்டிற்குக் கொண்டுபோய் வளர்த்தான். அம்பிகை பெரியவளாகி வளர்ந்தாள். தட்சன் பெண்ணக வந்த தனல் அம்பிகைக்குத் தாட்சாயணி என்ற பெயர் அமைந்தது.

சிவபெருமானைக் கணவனக அடைய வேண்டுமென்று தாட்சா யணி தவம் செய்யப் போனள். அப்போது ஆண்டவன் அந்தணனக எழுந்தருளினன். பல விதமான சோதனைகளைச் செய்தான். "சாம்பல்

ஆண்டியையா மணக்கப் போகிருய்?'' என்று கேட்டான். தாட்சாயணி தன்னுடைய கொள்கையில் உறுதியோடு இருந்தாள். அதனைக் கண்டு மகிழ்ந்த இறைவன் மறைந்தான்.

தக்கன் தன் பெண்ணுகிய தாட்சாயணியைச் சிவபெருமானுக்கு மணம் செய்துகொடுக்க வேண்டுமென்று எண்ணினன். சிவபெருமானுக்கு அழைப்பு அனுப்பி, வரவழைத்துத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தான். திருமணம் நன்ருக நடந்தது. திருமண நிகழ்ச்சி நடந்த பிறகு எல்லோரும் சாப்பிடச் சித்தமாக இருந்தார்கள். அப்போது சிவபெருமான் திடீரென்று மறைந்துவிட்டான். சொல்லிக்கொள்ளாமல் இப்படி மறைந்ததைக் கண்ட தக்கனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''நம் மாப்பிள்ளை நம் மூக்கை அறுத்து விட்டானே; அவனைப் பித்தன் என்று சொல்வது சரியாக இருக்கிறது'' என்று சொல்லி வருந்தினன் தக்கன்.

அப்போது தாட்சாயணி தனியாக ஒரு மாளிகைக்குச் சென்று தவம் செய்தாள். அங்கே சிவபெருமான் சென்று அவளைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான். இந்தச் செய்தியை அறிந்த தக்கனுக்குக் கோபம் மிகுதியாயிற்று. வஞ்சகமாகத் தன் பெண்ணை அழைத்துச் சென்றுவிட்டான் என்பதனுல் அவன் கோபம் மேலும் பொங்கியது. ''நான் நேரிலே போய் அவனைக் கேட்கிறேன்'' என்று தக்கன் கைலாசத்திற்குச் சென்ருன். எம்பெருமானுடைய திருக்கோவிலுக்குள் புக எண்ணியபோது நந்திதேவர் வழிவிட மறுத்துவிட்டார். அப்போது தக்கன் சினம் மிகவும் மூண்டது. ''உங்களை எல்லாம் என்ன செய்கிறேன், பாருங்கள். இந்த உலகத்தில் உங்களை யாரும் போற்ருமல், உங்களை வந்து பணியாமல் செய்துவிடுகிறேன்'' என்று கோபத்தினுல் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

தேற்ருமல் இன்ன வகைசூழ்ந்தநும் தேவை யாரும்
போற்ருமல் வந்து பணியாமல் புகழ்ந்து மேன்மை
சாற்ருமல் எள்ளல் புரிபான்மை சமைப்பன் என்ன
மேல்தான் இழைத்த வினைஉய்த்திட மீண்டு போனுன்.

(தக்கன் கயிலை செல். 19.)

[தேற்ருமல் - எண்ணுமல். எள்ளல் புரிபான்மை சமைப்பன் - இகழும் நிலையை உண்டாக்குவேன். வினை உய்த்திட - பாவம் செலுத்த.]

பிரமன் யாகம் குலைதல்

பிறகு ஒரு சமயத்தில் பிரமன் ஒரு யாகம் பண்ணினான். அவியை வாங்கிக்கொள்ளப் பரமேசுவரனை அழைத்தான். அப்போது இறைவனுக்குரிய அவியை வாங்கிக்கொள்ள, இறைவனுடைய ஏவலின்படி நந்தியம்பெருமான் வந்து நின்றார். அப்போது அங்கிருந்த தக்கன் அவனுக்கு அவியைக் கொடுக்கக் கூடாது என்று தடுத்தான். அதனைக் கண்ட நந்தியம்பெருமானுக்குக் கோபம் உண்டாயிற்று. அப்போது நந்தி தக்கனைப் பார்த்து, "எம்பெருமானை நீ இகழ்ந்தாய். அப்படி இகழ்ந்த உன் வாயை நான் துளைத்திருப்பேன். ஆனால் என்னுடைய பெருமான் ஆணை அது அன்று என்று விடுகிறேன். அதனால் நீ தப்பிப் பிழைத்தாய். இனி இப்படிப் பேசாதே. பேசினால் உன் சிரத்தை நான் வெட்டுவேன்" என்று சினந்தார்.

ஈது வேலையில் நந்திஅத் தக்கனை
　　எரிவிழித்து எதிர்நோக்கி
மாது பாகனை இகழ்ந்தனை ; ஈண்டுநின்
　　வாய்துளைத் திடுவேனால் ;
ஆதி தன்அருள் அன்றென விடுத்தனன் ;
　　ஆதலின் உய்ந்தாய்நீ ;
தீது மற்றினி உரைத்தியேல் வல்லைநின்
　　சிரம்துணிக் குவன்என்றான்.

(பிரமயாகம். 23.)

[ஈது வேலையில் - இந்தச் சமயத்தில். ஆதி - சிவப்பெருமான். வல்லை - விரைவில்.]

"அன்பு இல்லாத மனத்தை உடைய இழிந்தவன் ஆகிய உன்னைச் சாருகின்ற தேவர்களும் ஒரு சமயத்தில் உயிர்களை எல்லாம் இழந்து போய், வீரபத்திரனால் அழிக்கப்படுவார்கள். எழுந்த பிறகு மறுபடியும் சூரன் என்னும் அசுரனால் துயரில் மூழ்குவார்கள்" என்று சாபம் இட்டார்.

ஈரம்இல் புன்மனத்து இழுதை மற்றுனைச்
சாருறு கடவுளர் தாமும் ஓர்பகல்
ஆருயிர் மாண்டுஎழீஇ, அளப்பி லாஉகம்
சூரெனும் அவுணனால் துயரின் மூழ்கவே.

(பிரமயாகம். 27.)

[ஈரம் - அன்பு. இழுதை - இழிந்தவன். கடவுளர் - தேவர்.]

அந்த யாகம் நடக்கவில்லை ; குலைந்து விட்டது. அங்கே வந்தவர்கள் பயந்து போய்விட்டார்கள். "இந்தச் சிவபெருமானை அழைக்

காமல் நானே ஒரு யாகம் நடத்துகிறேன்" என்று தக்கன் அறைகூவினான்.

தக்கன் யாகம் செய்தல்

யாகம் செய்வதற்குத் தலைவன் வேண்டுமே! இறைவனுக்கு யக்ஞேசுவரன் என்று ஒரு பெயர். அவன்தான் வேள்வித் தலைவன். தக்கன் திருமாலையே தலைவனாக வைத்து யாகம் செய்யத் தொடங்கினான். அப்போது எத்தனையோ கெட்ட சகுனங்கள் உண்டாயின. அவற்றை எல்லாம் தக்கன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. திருமாலுக்கும் பிரமனுக்கும் உபசாரம் செய்து அவர்களைப் பூஜை பண்ணினான்.

இதனை அறிந்த நாரதர் சிவபெருமானிடம் சென்று தக்கன் யாகம் பண்ணத் தொடங்கியதைக் கூறினார். அதனை அம்பிகை கேட்டாள். பெண்மணிகளுக்கு எப்போதும் பிறந்த அகத்திலே பாசம் இருக்கும். "நான் என்னுடைய தகப்பனார் செய்யும் வேள்வியைப் போய்ப் பார்த்துவிட்டு விரைவில் வந்து விடுகிறேன். சம்பிரதாயத்திற்குத் தலை காட்டிவிட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்வதுபோலச் சொன்னாள். "எனக்கு விடை கொடுங்கள்" என்று கேட்டாள்.

தந்தை எனப்படு தக்கன் இயற்றும்
அந்த மகந்தனை அன்பொடு நோக்கி
வந்திடு கின்றனன் வல்லையில்; இன்னே
எந்தை பிரான்விடை ஈகுதி என்றாள்.

(உமைவரு. 9.)

[மகம் - வேள்வி. வல்லையில் - விரைவில்.]

அப்போது சிவபெருமான், "தக்கன் உனக்கு அழைப்பு அனுப்பவில்லையே! நம்மைப்பற்றி எண்ணாத தேவர்கள் கூட்டம் அங்கே இருக்கிறது. அவர்களின் மதி மயங்கிவிட்டது. ஆகவே, நீ அங்கே போக வேண்டாம்" என்று சொன்னான்.

"என்னுடைய தந்தை செய்யும் பிழையைப் பொறுக்க வேண்டும். நான் போக அனுமதி கொடுங்கள்" என்று வேண்டி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தக்கன் யாகம் செய்கின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தாள் அம்பிகை.

தக்கன் அம்பிகையை அவமதித்தல்

அவளைக் கண்டவுடன், தன் மகள் வந்தாளே என்று அன்புடன் வரவேற்கவில்லை தக்கன். சிவபெருமானுடைய மனைவி என்றே அவளை எண்ணி மிகவும் கோபத்துடன் பேசத் தொடங்கினான். "என்னுடைய மகளைப் போல வந்தாயே! ஏன் வந்தாய்? தந்தை இன்னார் என்று தெரியாமல், தாய் இன்னார் என்று தெரியாமல் இருக்கிற ஒருவனுடைய மனைவி நீ. நான் யாகம் செய்யும்போது எதற்காக வந்தாய்? நீ வரவேண்டுமென்று நான் உனக்கு அழைப்பு அனுப்பவில்லையே! அழையாத இடத்தில் நுழையலாமா? நீ போ இங்கிருந்து" என்று கோபத்துடன் பேசினான்.

தந்தை தன்னொடும் தாய்இ லாதவன்
சிந்தை அன்புறும் தேவி ஆனநீ
இந்த வேள்வியான் இயற்றும் வேளையில்
வந்தது என்கொலோ, மகளிர் போலவே.

மல்லல் சேரும்இம் மாம கந்தனக்கு
ஒல்லை வாஎன உரைத்து விட்டதும்
இல்லை; ஈண்டுநீ ஏக லாகுமோ?
செல்லு மீண்டுநின் சிலம்பில் என்னவே.

(உமைவரு. 29, 30.)

[மகளிர் - புத்திரிகள். மல்லல் - வளம், பெருமை. மகம் - யாகம். சிலம்பில் - கைலாய மலைக்கு.]

இதைக் கேட்ட தாட்சாயணிக்குக் கோபம் வரவில்லை. "உன்னுடைய பெண்களாகப் பிறந்த என்னுடைய தங்கைமார்களுக்கும், மாப்பிள்ளைகளுக்கும் தக்க சீரை எல்லாம் செய்திருக்கிறாயே! அவர்களோடு உறவு பூண்டிருக்கிறாயே! எங்களை மாத்திரம் எண்ணாமல் இருக்கலாமா? நான் உன் மகள் அல்லவா?" என்று தக்கனிடம் சொன்னாள்.

மங்கை கூறுவாள்: மருகர் யார்க்கும்என்
தங்கை மார்க்கும்நீ தக்க தக்கசீர்
உங்கு நல்கியே உறவு செய்துளாய்;
எங்கள் தம்மைஓர் இறையும் எண்ணலாய்.

(உமைவரு. 31.)

[மருகர் - மாப்பிள்ளைமார். உங்கு - இங்கே. இறையும் - சிறிதளவும்.]

"உன் கணவன் அகங்காரம் பிடித்தவன். நீயும் அவனோடு சேர்ந்து அகங்காரம் கொண்டிருக்கிறாய். தலைக்கனம் கொண்டிருக்கிற உங்களை நான் அழைக்கவில்லை. உன் தங்கைமார்களுடைய கணவர்கள் எனக்கு வேண்டியவர்கள் ; உன்னைவிட எனக்கு இனியவர்கள். அதனால்தான் அவர்கள் எல்லோரையும் அழைத்தேன். அவர்களுக்கு மரியாதை செய்கிறேன் ; சிறப்புச் செய்கிறேன். உலகத்தை எல்லாம் தம் வயிற்றில் அடக்கிய திருமாலும், அவருடைய புதல்வராகிய பிரமனும் மற்றத் தேவர்களும் இங்கே வந்து என்னைத் துதி பாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிவபெருமானும் நீயும் சிறிதளவு கூட என்னை மதிக்கவில்லை. அப்படி இருக்கும்போது எனக்கு எப்படி உங்களிடம் அன்பு உண்டாகும்? உங்களிடத்தில் எனக்குச் சிறிதளவும் மகிழ்ச்சி கிடையாது" என்று பேசினான்.

புவனம் உண்டமால் புதல்வன் ஆதியாம்
எவரும் வந்துஎனை ஏத்து கின்றனர் ;
சிவனும் நீயும்ஓர் சிறிதும் எண்ணலிர் ;
உவகை இன்றுஎனக்கு உங்கள் பாங்கரில்.

(உமைவரு. 36.)

[புதல்வன் - பிரமன். உவகை இன்று - மகிழ்ச்சி இல்லை. உங்கள் பாங்கரில் - உங்களிடத்தில்.]

அதைக் கேட்ட தாட்சாயணிக்குக் கோபம் வந்தது. "என்னை நீ இகழ்ந்ததற்காக நான் கவலைப்படவில்லை. என்னுடைய நாயகராகிய சிவபெருமானை நீ இகழ்ந்து பேசினாய். அதை நான் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அவர் உலகத்திற்கு எல்லாம் தெய்வம். எனக்கும் அவரே தெய்வம். அவரை இழித்துப் பேசினதை நான் சிறிதும் சகிக்க முடியாது. என்னுடைய காதிலே நஞ்சை வார்த்தது போல இருந்தது உன்னுடைய பேச்சு" என்றாள்.

என்னை நீஇவண் இகழ்ந்த தன்மையை
உன்ன லேன் ; எனை உடைய நாயகன்
தன்னை எள்ளினாய் ; தரிக்கி லேன்; அதுஎன்
கன்ன மூடுசெல் கடுவு போலுமால்.

(உமைவரு. 46.)

[எள்ளினாய் - இகழ்ந்தாய். தரிக்கிலேன் - பொறுக்கவில்லை. கன்னமூடு - காதில். கடுவு - நஞ்சு.]

அப்போது தக்கன், "அழிக்கும் வேலையைச் செய்கிறவன் சிவபெருமான்" என்று இகழ்ந்தான். "உண்மை தெரியாமல்

இப்படிப் பேசுகின்ருய்" எனத் தன் தந்தையைப் பார்த்து அம்பிகை உண்மையை உரைத்தாள்; "எம்பெருமான் சங்காரம் செய்கிருர் என்கிருயே; அது தீயது அல்ல. அவர் அருளால் உயிர்க் கூட்டங்கள் இறந்தும், பிறந்தும் உய்வு இல்லாமல் உழலுகின்றன. மகாசங்கார காலத்தில் அவ்வாறு திரியாமல் எல்லா உயிர்களேயும் தம்மிடத்தில் வரவழைத்து, அடக்கி அவர்களுக்கு உய்வு கொடுக் கிருர். ஆகையால் அது ஒரு வகையான அருள்" என்று சொன்னுள்.

மிகவும் அல்லற்பட்ட குழந்தைகள் பல பல இடங்களுக்குப் போய் வெவ்வேறு வகையான வேலேகளேச் செய்து வருகிருர்கள். சில குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டு வருகிருர்கள். அவர்கள் வீட்டுக்கு வந்தவுடன், சாப்பாடு போட்டு, படுக்கை விரித்து, படுக்க வைத்து அவர்களே உறங்கச் செய்கிருள் தாய். சிறு குழந்தையைத் தாலாட்டுப் பாடி உறங்கச் செய்கிருள். எல்லோரும் நன்ருக உறங்குவதைப் பார்த்து, 'இவ்வளவு காலம் உழைத்து வந்த குழந்தைகள் இப்போதுதான் ஓய்வாகப் படுத்திருக் கிருர்கள்' என்று சந்தோஷப்படுகிருள். அதுபோல மகாசங்கார காலத்தில் ஆண்டவன் உயிர்க்கூட்டங்களே எல்லாம் தன்னகத்தே ஒடுக்கிக்கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடுகிருன். இந்தக் காரியத்தை அம்பிகை தக்கனுக்கு எடுத்துரைத்தாள்.

> **தீய தன்றுஅடும் செயலும்; நல்லருள்;**
> **ஆயின் ஆவிகள் அழிந்தும் தோன்றியும்**
> **ஓய்வி லாதுஉழன்று உலேவு ருமலே**
> **மாய்வு செய்துஇறை வருத்தம் ஆற்றலால்.**

(உமைவரு. 49.)

[அடும் செயல் - சங்காரம் செய்தல். உலேவுருமல் - வருந்தாமல். இறை - இறைவன். ஆற்றலால் நல்லருள் என்று கூட்டுக.]

அவள் இதை எல்லாம் எடுத்துச் சொல்லி, "உனக்கு உரிய தண்டனே நிச்சயமாகக் கிடைக்கும்" என்று கூறி அங்கிருந்து புறப் பட்டுவிட்டாள். நேரே இறைவனிடம் வந்து தான் சென்றதையும், பிறவற்றையும் உரைத்து அந்த யாகத்தைச் சிதைத்தருள வேண்டு மென்று கேட்டுக்கொண்டாள்.

வீரபத்திரனும் காளியும் தோற்றுதல்

அப்போது சிவபெருமான் தன் திருவுள்ளத்தில் நினேத்தபோது அவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரன் வந்து தோன்றி

னன். அவன் திருமேனி செக்கச் செவேல் என்று சிவனைப்போல இருந்தது. சிவபெருமான் திருமேனி அப்படித்தான் இருக்கும். அவன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து எம்பெருமானது வடிவத்தை எடுத்துக்கொண்டு தோன்றி முன்னாலே வந்து நின்றான்.

அந்தி வான்பொரு மேனியன், கறைமிடறு அணிந்த
எந்தை தன்வடி வாய்அவன் நுதல்விழி யிடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
மூந்து வீரபத் திரனெனும் திறலுடை முதல்வன்.

(வீரபத்திரப். 14.)

வீரபத்திரன் என்பதற்கு வீரத்தினால் மங்கலத்தை உண்டாக்குகிறவன் என்று பொருள். அப்போது அங்கே இருந்த உமாதேவியார் கோபம் கொண்டு பத்திரகாளியை உண்டாக்கினாள். இரண்டாயிரம் கைகளுடன் சிவந்த முகத்தை உடையவளாகக் காளி தோன்றினாள். அந்தக் காளி வீரபத்திரனை அணுகி அவனோடு சேர்ந்து நின்றாள்.

வீரபத்திரன் சிவபெருமானிடம், "நான் செய்ய வேண்டிய பணி யாது?" என்று கேட்டான். "தக்கனிடம் சென்று எனக்குரிய அவிர்பாகத்தை வாங்கி வா. அவன் தர மறுத்தால் அவன் தலையைத் தடிந்து, அங்குள்ளவர்களை அழித்துவிடு. நாம் வருவோம். இப்போதே அங்கே போ" என்று சிவபெருமான் உத்தரவிட்டான்.

என்ற வீரனை நோக்கியே கண்ணுதல், எம்மை
அன்றி வேள்விசெய் கின்றனன் தக்கன்; அவ் விடைநீ
சென்று மற்றுஎமது அவியினைக் கேட்டி; அத் தீயோன்
நன்று தந்தன னேஎனின் இவ்விடை நடத்தி.

தருதல் இன்றெனின் அன்னவன் தலையினைத் தடிந்து
பரிவி னால்அவன் பால்உறு வோரையும் படுத்துப்
புரியும் எச்சமும் கலக்குதி; அங்கது பொழுதின்
வருதும் ஆயிடை; ஏகுதி என்றனன் வள்ளல்.

(வீரபத்திரப். 20, 21.)

[கண்ணுதல் - சிவபெருமான். அவ்விடை - அவ்விடத்தில். இவ்விடை - இவ்விடத்திற்கு. தடிந்து - வெட்டி. பரிவினால் - அன்போடு. படுத்து - அழித்து. எச்சம் - யக்ஞம்; வேள்வி. வருதும் - வருவோம்.]

வீரபத்திரன் வேள்விச் சாலையை அடைதல்

வீரபத்திரன் பல பல வீரர்களை உண்டாக்கி அந்த வீரர் கூட்டத்தோடு தக்கன் யாகம் செய்யும் இடத்தை அணுகினான்,

பத்திரகாளியும் தன்னைப் போலவே பல காளிகளை உண்டாக்கி அந்தப் பெரும்படையுடன் சென்றாள்.

யாகசாலையை அடைந்த வீரபத்திரன் படைத் தலைவர்களை எல்லாம் வாயிலில் நிறுத்தினன்; "யாரும் வெளியில் போகாமல் காவல் செய்யுங்கள்" என்று பணித்தான்.

பற்றலர் புரம்மூன்று அட்ட
பரமனை இகழ்ந்து நீக்கிச்
சிற்றினம் பொருள்என்று உன்னிச்
சிறுவிதி என்னும் தீயோன்
இற்றிடும் நெறியால் வேள்வி
இயற்றும்இச் சாலை வாயில்
சுற்றொடு சேமம் செய்து
துயக்கறக் காத்திர் என்றான்.

(வீரபத்திரப். 59.)

[பற்றலர் - பகைவர். சிறுவிதி - தட்சப் பிரசாபதி. இற்றிடும் நெறியால் - அழிவதற்குரிய வழியில். சேமம் செய்து - காவல் புரிந்து. துயக்கு அற - வருந்தம் இன்றி.]

"எல்லோருக்கும் பெரியவனாகிய ஆண்டவனை விட்டுவிட்டுச் சிற்றினம் ஆகிய தேவர்களை வைத்துக்கொண்டு அந்தப் பலத்தினால் வேள்வியைச் செய்யலாம் என்று இவன் நினைக்கிறானே!" என்று வீரபத்திரன் சொன்னான்.

இவ்வாறு வீரபத்திரன் பூதகணங்களுடன் வேள்விச் சாலையை முற்றுகையிட்டபோது, அந்தப் பூத கணங்களைத் தேவர்கள் பார்த்தார்கள். எங்கே பார்த்தாலும் கணங்கள் மயமாக இருந்ததைப் பார்த்து அஞ்சினார்கள். வெளியில் போக முடியாதே என்ற பயம் உண்டாயிற்று. எதற்காக இவர்கள் வந்தார்கள் என்று எண்ணினார்கள். 'நாம் எல்லாம் ஓடி ஒளிவதற்குரிய இடம் கூட இல்லையே! இன்றோடு நம் வாழ்வே போய்விடும் போலிருக்கிறதே! இது யார் செய்த காரியம்?' என்று தேவர்கள் தங்கள் தங்களுக்குள் பேசிப் பயம் அடைந்து நின்றார்கள். சுற்றிச் சூழக் காட்டிலே தீ எரிந்து கனிந்து கொண்டிருக்கிறபோது நடுவில் யானைக் கூட்டம் இருந்தால் எப்படி இருக்குமோ, அது போலத் தேவர்கள் இருந்தார்கள்,

ஈடுறு பூதர் யாரும் எங்கணும்
வளைந்தார் என்பார்;
ஓடவும் அரிதுஇங்கு என்பார்;
ஒளித்திடற்கு இடம்ஏது என்பார்;
வீடினம் காணும் என்பார்;
மேல்இனிச் செயல்என் என்பார்;
பாடுசூழ் அங்கி நாப்பண்
பட்டபல் களிறு போன்றார்.

(யாகசங்காரப். 6.)

[ஈடு - பெருமை. வீடினம் - அழிந்தோம். பாடு சூழ் - பக்கத்தில் சூழ்ந்திருக்கும். அங்கி - தீ.]

வீரபத்திரன் செயல்

அப்போது தக்கன் வந்து, "நீங்கள் எல்லாம் யார்? எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டான். வீரபத்திரன், "நான் சங்கரனுடைய பிள்ளை. உன்னுடைய வேள்வியில் சிவபெருமானுக்குரிய அவிர்பாகத்தைத் தா. அதை வாங்கிக் கொள்வதற்காக அவன் அருளைத் துணைகொண்டு வந்திருக்கிறேன்" என்று சொன்னான்.

இங்குவந்து அடைந்தது என்கொல்?
யாரைநீ என்ன லோடும்,
சங்கரன் தனது சேய்யான்;
தக்கநின் வேள்வி தன்னின்
அங்குஅவற்கு உதவும் பாகம்
அருளுதி; அதற்கா அந்தப்
புங்கவன் அருளி னாலே
போந்தனன் ஈண்டை என்றான்.

(யாகசங்காரப். 13.)

[யாரை: ஐ, சாரியை. பாகம் - அவிர்பாகம். புங்கவன் - கடவுள்.]

அதனைக் கேட்ட தக்கன், "உங்கள் தகப்பனுக்கு அவிர்பாகம் கிடையாது. இனிமேல் இந்த உலகத்தில் யாரும் தாங்கள் செய்யும் வேள்வியில் அவனுக்கு அவிர்பாகம் கொடுக்கமாட்டார்கள்" என்று சொன்னான்.

அப்போது அங்கே இருந்த நான்கு வேதங்களும், பிரணவமும் எழுந்து சொல்ல ஆரம்பித்தன; "முடிவே இல்லாத எல்லா உயிர்களுக்கும் இறைவனே தலைவன் ஆவான். அவனே வேள்விக்கும் தலைவன். வேள்விக்குத் தலைவனாக வேறு எந்தத் தெய்வமும் இல்லை,

ஆகவே சிவபெருமானுக்குரிய அவிர்பாகத்தை நீ சற்றும் தாமதம் இல்லாமல் கொடுப்பாயாக" என்றன.

நம்முடைய நாட்டில் இந்து மதத்திற்கு ஆதாரமாக இருப்பது வேதமும், வேள்வியும். சமணர்கள் வேத வேள்வியை நிந்தனை செய்தார்கள். அதனால் ஞானசம்பந்தர் அவர்களோடு வாதிட்டார்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே!
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே!"

என்று அவர் பாடினார். ஆண்டவன் வேத சொரூபமாகவும், வேள்வியின் சொரூபமாகவும் இருக்கிறான்.

இப்படி வேதங்கள் கூறியும் தக்கன் கேட்கவில்லை. ஆகவே, அவை அந்த இடத்தை விட்டுத் தமக்குரிய இடத்திற்குப் போய் விட்டன. இப்போது சிவபெருமானைத் தலைவனாகக் கொள்ளாமையால் அது வேள்வியாக இல்லை. வேதத்தின் தொடர்பும் இல்லாமல் போய்விடவே அதற்குச் சிறிதும் மதிப்பு இல்லாமல் போய் விட்டது.

வீரபத்திரன் தக்கனைப் பார்த்து, "வேதங்களும், பிரணவமும் சொன்ன உயர்ந்த பொருளை நீ கேட்டாய் அல்லவா? எம்பெருமானுக்குரிய அவிசை நீ தருவாயாக" என்று மறுபடியும் கேட்டான். அப்போதும் தக்கன், "சுடுகாட்டில் பெண்ணோடு கூத்தாடுகின்ற பித்தனுக்கு நான் கொடுக்க மாட்டேன்" என்று கர்வத்தோடு சொன்னான்.

போதலும் தக்கன் தன்னைப்
பொலங்கழல் வீரன் பாரா,
வேதமும் பிறவும் கூறும்
விழுப்பொருள் கேட்டி அன்றே;
ஈதிஎம் பெருமாற்கு உள்ள
இன்னவி எனலும், கானில்
பேதையொடு ஆடல் செய்யும்
பித்தனுக்கு ஈயேன் என்றான்.

(யாகசங்காரப். 17.)

[கேட்டி - கேட்டாய். ஈதி-தருவாயாக. இன் அவி - இனிய அவிர்பாகம். கானில் - சுடுகாட்டில். பேதையொடு - பெண்ணோடு.]

அப்போது வீரபத்திரன் அங்கே இருந்த பிரமன் முதலிய தேவர்களைப் பார்த்தான். "எம்பெருமானுக்கு அவிசு அளிக்காமல் இந்த வேள்வியைச் செய்கின்ற தக்கனுக்கு நீங்களும் துணையாக இருக்கிறீர்களே! எம்பெருமானை இழித்து, அவனுக்குரிய அவிர் பாகத்தைத் தராமல் இவன் இருப்பது உங்களுக்கும் சம்மதமா?" என்று அவர்களைக் கேட்டான்.

ஆங்கது கேளா அண்ணல்
அம்புயன் ஆதி யாகிப்
பாங்குற விரவும் வானோர்
பல்குழு அதனை நோக்கி,
நீங்களும் இவன்பால் ஆனீர்;
நிமலனுக்கு அவிநல் காமல்
ஈங்குஇவன் இகழும் தன்மை
இசைவுகொல் உமக்கும் என்றான்.

(யாகசங்காரப். 18.)

[பாங்குற விரவும் - பக்கத்தில் இருக்கும். இசைவுகொல் - சம்மதமோ.]

அப்படி வீரபத்திரன் கேட்டபோது தேவர்கள் பராமுகமாக அதனைக் கேளாதவர்போல இருந்தார்கள். அவர்களுக்கும் பொல்லாத காலமாகையால் வேதம் சொன்னதைக் கேட்கவில்லை; வீரபத்திரன் சொன்னதையும் கேட்கவில்லை.

தேவரைத் தண்டித்தல்

தக்கன் தான் சொன்னதைக் கேட்காமல் இருக்க, மற்றவர்களும் அவனுக்கு உடந்தையாக இருப்பதைப் பார்த்த வீரபத்திரனுக்குக் கோபம் மிகுதியாயிற்று. பல்லைக் கடித்தான். கண்களில் தீ எழுந்தது. மேருவைப் போலப் பெரிதாக இருக்கிற கதாயுதத்தை எடுத்துத் தக்கனுடைய மார்பில் அடித்தான். அவன் திருமாலின் காலில் போய் வீழ்ந்தான்.

கடித்தனன் எயிறு; செந்தீக் கான்றனன்; கனன்று கையில்
பிடித்திடு மேரு அன்ன பெருந்திறல் கதைய தொன்றால்
தடித்திடும் அகல மார்பத் தடவரை அகடு சாய
அடித்தனன்; தக்கன் உள்ளம் வெருவர, அரிமுன் வீழ்ந்தான்.

(யாகசங்காரப். 20.)

[அகல மார்பத் தடவரை அகடு சாய - அகலத்தையுடைய மார்பாகிய விசால மான மலையின் நடுவிடம் சாயும்படி.]

வீரபத்திரன் பிரமனைப் பார்த்து, அவன் தலையில் முருகப் பெருமான் குட்டியதுபோலக் குட்டினான். அவன் வீரபத்திரன் காலில் வழிபடுபவனைப்போலத் தலை வைத்து விழ்ந்தான். கலைமகளுடைய மூக்கை வீரன் அரிந்து அனுப்பினான்.

விட்டுமுன் வீழ்த லோடும்,
வீரருள் வீரத்து அண்ணல்
மட்டுறு கமலப் போதில்
வான்பெருந் தவிசில் வைகும்
சிட்டனை நோக்கி அன்னான்
சிரத்திடை உருமுற் றென்னக்
குட்டினன், ஒருதன் கையால்
மேல்வரும் குமர னேபோல்.

தாக்குத லோடும் ஐயன் சரணிடைப்
பணிவான் போல
மேக்குறு சென்னி சோர
விரிஞ்சனும் வீழ, அன்னான்
வாக்குறு தேவி தன்னை
மற்றவர் தம்மை வாளால்
மூக்கொடு குயமும் கொய்தான்;
இறுதிநாள் முதல்வன் போல்வான்.

(யாகசங்காரப். 21, 22.)

[விட்டுமுன் - திருமாலுக்குமுன். சிட்டன் - பிரமன். உரும் உற்றென்ன - இடி விழுந்தாற்போல. மேல் வரும் - இனி அவதரிக்கப் போகும். மேக்கு உறு - மேலே உள்ள. வாக்குறு தேவி - நாவிலுள்ள கலைமகள். மற்றவர் - வேறு தேவமகளிர். குயம் - தனம். முதல்வன் - பிரளயகால ருத்திரன்.]

சரசுவதிக்கு ஏன் தண்டனை கொடுத்தான் என்று தோன்றும். அவள் கலைமகள்; கலைக்கெல்லாம் தலைவி; தன்னுடைய நாயகனுக்கு அறிவு ஊட்ட வேண்டியவள். உயர்ந்த அறிவுக் களஞ்சியமாகிய வேதமே அங்கே நிற்காமல் போனபோது, ஒரு புத்தகத்தைக் கையில் வைத்திருக்கிற சரசுவதி உடன் போகவேண்டாமா? ஆகவே, அவளுக்கும் தண்டனை கிடைத்தது.

இங்கே ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. ஒட்டக்கூத்தர் கலைமகளின் அடியார். கூத்தனூர் என்ற ஊரில் அவர் வழிபட்ட சரசுவதிக்குக் கோவில் இருக்கிறது. அவர் தக்கயாக சங்காரத்தைப் பற்றி ஒரு தனி நூலே பாடினார். வீரபத்திரனுடைய வீர விளையாடல்

களைச் சொல்லியிருக்கிறார். அதற்குத் **தக்கயாகப் பரணி** என்று பெயர். வீரபத்திரன் தக்கனுடைய யாகத்திற்கு வந்தவர்களுக்குப் பல வகையான தண்டனை கொடுத்ததாக அங்கே சொல்கிறார். ஆனால் அதில் கலைமகளின் மூக்கை அரிந்ததாக மாத்திரம் சொல்லவில்லை. காரணம், ஒட்டக்கூத்தர் கலைமகளின் பக்தர்.

வீரபத்திரன் சந்திரனைக் காலால் தேய்த்தான். சூரியனது பல்லை உதிர்த்தான். பகன் என்னும் சூரியனுடைய கண்ணைப் பறித்தான். எமனது தலையை வெட்டினான். தப்பிக் கொள்வதற்கு இந்திரன் குயில் வடிவம் எடுத்து ஓடினான். அவனது சிறகை வெட்டினான். வேள்வியில் இருந்த அக்கினியின் கையையும், நாக்கையும் அறுத்தான்.

தக்கன் கழிந்ததற்கு இரங்குதல்

இப்படித் தேவர்கள் எல்லாம் தண்டனை பெற்று நிலைகுலைந்து நிற்பதைத் தக்கன் பார்த்தான். அவனுக்கு உணர்வு சிறிது வந்தது. 'நமக்கு எத்தனையோ வளங்களை எல்லாம் தந்து இத்தகைய அதிகாரத்தை வழங்கிய எம்பெருமானை மனத்தில் நினைத்துப் போற்றவில்லையே ! செல்வச் செருக்கால் மயங்கிப் போய்விட்டேனே! தாட்சாயணியை மகளாகப் பெற்று, அவளை அவனுக்குக் கொடுத்த தனால் அவனை எனக்கு அடங்கிய மருகன் என்று எண்ணி அல்லவா ஏமாந்து போனேன் ?'

பெருவளம் நல்கிய பிரானைச் சிந்தையில்
கருதுதல் செய்கிலன் ; கசிந்து போற்றிலன் ;
திருவிடை மயங்கினன் ; சிவையை நல்கியே
மருகன்என்று அவனையான் மன்ற எள்ளினேன்.

(யாகசங்காரப். 41.)

[திருவிடை - செல்வத்தினால். சிவை - அம்பிகை. மன்ற - மிகுதியாக.]

'வேதங்களுக்கு முடிவாக ஆண்டவன் இருக்கிறான் என்று அறி யாமல் அவற்றை நிந்தித்தேனே ! இறப்பதற்கு ஏதுவான காரணங் களை எல்லாம் செய்துவிட்டேன். விதியின் வழியே என் புத்தி போய்விட்டதே' என்று மனத்தில் நினைந்து வருந்தினான்.

துதிதரு மறைப்பொருள் துணிபு நாடியும்
நதிமுடி அமலனை நன்று நிந்தியா
இதுபொழுது இறப்பதற்கு ஏது ஆயினேன் ;
விதிவழி புந்தியும் மேவு மேகொலாம்.

(யாகசங்காரப். 46.)

[துணிபு - துணிந்த உண்மை. நாடியும் - தெரிந்துங் கூட.]

இப்போதுதான் அவன் எம்பெருமானைப் பற்றி நினைப்பதற்கு அறிவு உண்டாயிற்று. இங்கே ஒரு கருத்தை நாம் நினைக்க வேண்டும்.

ஆண்டவனை வணங்கினால் நமக்கு நன்மை உண்டாகும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிறவியைப் போக்கி மோட்சத்தை அடைவதற்கு அவன் திருத்தாளை வணங்கவேண்டு மென்று சிலர் சொல்கிறார்கள். இவற்றை எப்படி நம்புவது என்று நாம் கேட்கலாம்.

நன்றியறிவும் பக்தியும்

இறைவனை வழிபட மற்றொரு காரணம் உண்டு. நாம் பெற்றிருக்கிற தனுகரண புவன போகங்கள் எல்லாம் அவன் தந்தவை. அவற்றை எல்லாம் பெற்றதனாலே நாம் வாழ்கிறோம். நம்மிடத்திலிருந்து எதையும் எதிர்பாராமல் இறைவன் நமக்கு அவற்றை எல்லாம் தந்திருக்கிறான். அதற்காகவே நாம் அவனை நன்றியறிவுடன் நினைக்க வேண்டும். இனிமேல் அவன் நமக்கு உபகாரம் செய்யப் போகிறான் என்ற நம்பிக்கையோடு அவனை வழி படுவது இருக்கட்டும். இதுவரைக்கும் அவன் நமக்குச் செய்தி ருக்கிற நன்மைகளை நினைந்தே நாம் வழிபட்டாகவேண்டும். 'நமக்கு அவன் எதையும் எதிர்பாராமல், இத்துணை நன்மைகளைச் செய்திருக் கிறானே!' என்று எண்ணிப்பார்த்தால் அன்பு செய்யத் தோன்றும்.

'நமக்கு என்ன செய்துவிட்டான்? ஞானசம்பந்தப் பெரு மானைப் போல நமக்கு விசேஷமாக எதையாவது நல்கினானா?' என்று சிலர் எண்ணலாம். நமக்கு ஆண்டவன் தந்திருக்கிற நலன் களை எண்ணிப்பார்ப்பதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. வாய் பேசாத ஊமையை நாம் பார்க்கிறோம். நம்மை அவனைப்போல ஊமை ஆக்கிவிடாமல் பேசும் சக்தி கொடுத்தானே என்று நினைத்துப்

பார்த்தால் அந்த அருமை தெரியும்; அவனை வாழ்த்துவோம். கை கால் இல்லாத முடத்தைப் பார்க்கிறோம். நம்மை நல்ல உறுதியான கை கால் உடையவனாக ஆக்கினானே என்று நினைந்தால் அப்போது இறைவனை நினைந்து உருகுவதற்கு வாய்ப்பு உண்டு. நம்மிலும் தாழ்ந்தவர்களை நோக்கி, 'நம்மை இந்த அளவுக்காவது உயர்ந்த நிலையில் இருக்கும்படியாக ஆண்டவன் செய்தானே!' என்று நன்றி அறிவோடு பார்க்கலாம். அற்புதங்கள் நிகழ்ந்தால்தான் அவனைப் பாராட்டலாம் என்று நினைக்க வேண்டுமென்பதில்லை. இது வரைக்கும் நாம் பெற்ற நன்மைகளை, நாம் இருக்கும் நிலையினை, எண்ணிப் பார்த்தாலே அவன் நமக்குச் செய்திருக்கும் உதவிகளை உணரலாம்.

இப்படி எண்ணிப் பார்க்கிற புத்தி தக்கனுக்கு இப்போதுதான் வந்தது. தனக்குப் பெரு வளம் வழங்கிய பிரான் என்று இறைவனை எண்ணிப் பார்க்கிறான். 'வேதத்தின் பொருளை எல்லாம் நான் தெரிந்திருக்கிறேன். அப்படித் தெரிந்திருந்தும் கூட இறைவனுடைய பெருமையை நினைக்கவில்லையே! என்னுடைய அறிவானது விதியின் வழியே போய்விட்டதே!' என்று வருந்தினான்.

தக்கன் பெற்ற தண்டனை

அப்போது வீரபத்திரன் கோபத்தோடு தக்கனை அணுகி, "தேவர்களின் துணை கொண்டு நீ எம்பெருமானை இகழ்ந்தாய். ஆகையால் உனக்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று தன் வாளால் அவன் தலையை வெட்டினான். அந்தச் சென்னி கீழே விழுவதற்கு முன்னால் அதைக் கையினால் பற்றி அங்கே உள்ள வேள்விக் குண்டத்தில் இட்டு அக்கினிக்கு இரையாக்கினான். ஒரு கணத்தில் அந்தத் தலை பஸ்மம் ஆகிவிட்டது.

பத்திரகாளியின் செயல்

அந்தச் சமயத்தில் பத்திரகாளி தக்கனுடைய மனைவி, மற்றும் அங்கிருந்த பெண்களாகியவர்களுடைய தலைகளை எல்லாம் சீவி அவற்றைக் கையில் பந்துபோல அடித்து விளையாடினாள்.

அந்த வேலையில், மறைக்கொடி தன்னைமுன் அணுகி
முந்தி வார்குழை இறுத்தனள்; ஏனையர் முடியும்
தந்த நங்கையர் சென்னியும், வாள்கொடு தடிந்து,
கந்து கங்கள்போல் அடித்தனள் பத்திர காளி.

(யாகசங்காரப். 53.)

[மறைக்கொடி - தக்கன் மனைவியாகிய வேதவல்லி. குழை இறுத்தனள் - காதை அறுத்தான்; குழை; ஆகுபெயர். கந்துகங்கள் - பந்துகள்.]

இப்படியே அங்கே இருந்த பூதகணங்கள் எல்லாம் தக்கனுக்கு உறவாக இருந்த மருமகன்மாரை அடித்தார்கள். வாயினுல் சொல்ல வொண்ணுதபடி அவர்களுக்குத் தண்டனே விதித்தார்கள். ஆண்டவனே நினேந்து நல்ல வகையில் வேள்வி நடக்க வேண்டிய அந்த இடத்தில் குத்து, வெட்டு என்ற ஒலிகளே எழுந்தன. வேதகானம் கேட்க வேண்டிய இடத்தில் இப்படிச் சங்காரம் பண்ணுவதற்குரிய வார்த்தைகள் எழுந்தன.

திருமால் பொருதல்

அப்போது திருமால் வீரபத்திரனே எதிர்க்கச் சென்ருர். அவர் கருடனே நினேத்தவுடன் அவன் வந்தான். அவன்மேல் ஏறிக்கொண்டு வீரபத்திரனேடு சண்டையிடப் புறப்பட்டார். கருடன் போரில் அழிந்தான். பிறகு தம் கோபத்தையே கருடனுக்கி அதன்மேல் ஏறிப் பொர வந்தார், திருமால். கருட வாகனத்தின் மேல் அவர் ஏறியதைப் பார்த்தபோது, வீரபத்திரன் ஏறி நின்று போர் செய்யச் சிவபெருமான் ஒரு தேரை அங்கே வரும்படியாக அருள் பாலித்தான்.

வெருவரும் பெருந்திறல் வீரன், தண்துழாய்
அரியொடு போர்செய்ய, ஆதி நாயகன்,
திரைகடல் உலகமும் சிறிது தான்என
ஒருபெருந் தேரினே உய்த்திட் டான்அரோ.

(யாகசங்காரப். 92.)

அப்போது மயங்கி விழுந்திருந்த பிரமன், மயக்கம் தெளிந்து எழ, வீரபத்திரனது தேரைச் செலுத்துவதற்கு எண்ணினுன். "நீயும், உன் துணேவி ஆகிய பத்திர காளியும் இந்தத் தேரில் ஏறிக் கொள்ளுங்கள்" என்று அவர்களே வேண்டினுன். அப்படியே அவர்கள் தேரில் ஏறிக் கொண்டவுடன் பிரமன் அந்தத் தேரைச் செலுத்தினுன்.

அப்போது திருமால் வீரபத்திரனேப் பார்த்துக் கேட்கத் தொடங்கினர்; "சிவபெருமானேப் பழித்த தக்கனே நீ அழித்தது நியாயம். ஆனல் சிறிதும் குற்றம் இல்லாத தேவர்களே நீ ஏன் அழித்தாய்? யாகத்தை ஏன் நீ அழித்தாய்? இதற்கெல்லாம் காரணம் சொல்" என்று கேட்டார்.

தெழித்த வார்புனற் கங்கையஞ் சடைமுடிச் சிவனைப்
பழித்த தக்கனை அடுவதல் லால்அவன் பாலில்
இழுக்கில் தேவரை அடுவதென் ? வேள்வியை எல்லாம்
அழித்த தென்னைநீ ? புகலுதி யால்என அறைந்தான்.

(யாகசங்காரப். 103.)

[தெழித்த - ஒலித்த. அவன்பாலில் - அவனிடம் இருந்த.]

அதற்கு வீரபத்திரதேவன் பதில் சொன்னான். "நான் சட்டப்படிதான் தண்டனை அளித்தேன். பரமேசுவரனை இகழ்ந்தவர்களைத் தண்டிக்கும்படி வேதம் சொல்கிறது. அதன்படிதான் தண்டித்தேன். பரமேசுவரனை இகழ்ந்து வேள்வி செய்தான் தக்கன். அந்த வேள்வியில் அவிநுகர்ந்தவர்கள் எல்லாம் தவறு செய்தவர்களே. ஆகையால் அவர்களும் தண்டனைக்குரியவர்கள். உன்னையும் நான் தண்டிப்பேன். உன்னால் முடியுமானால் அந்தத் தண்டனையிலிருந்து உன்னைப் பாதுகாத்துக்கொள்."

எல்லை இல்லதோர் பரமனை இகழ்ந்தவன் இயற்றும்
மல்லல் வேள்வியில் அவிநுகர்ந் தோர்க்கெலாம் மறைமுன்
சொல்லும் தண்டமே புரிந்தனம் ; நின்னையும் தொலைப்பாம் ;
வல்லை யேல்அது காத்திஎன் றனன்உமை மைந்தன்.

(யாகசங்காரப். 105.)

[தண்டம் - தண்டனை. வல்லையேல் - நீ வல்லமை உடையவனானால். உமை மைந்தன் - வீரபத்திரன்.]

திருமாலுக்கும், வீரபத்திரனுக்கும் போர் நிகழ்ந்தது. வீரபத்திரன் திருமாலின் நெற்றியில் ஒரு கணை எய்தான். அது அவர் நெற்றியிலே பாய்ந்து, அவருக்குத் தளர்ச்சியை உண்டாக்கியது. திருமால் மயங்கியதைப் பார்த்த வீரன், போர் செய்யாமல், தன் வில்லைத் தேரிலே ஊன்றிக்கொண்டு, அம்புகளை விடாமல் நின்று திருமால் தெளிவு பெறட்டும் என்று காத்திருந்தான். திருமால் மறுபடியும் தெளிவு பெற்றுப் போர் செய்யப் புகுந்தார். திருமால் தம்மைப் போலப் பல திருமால்களை உண்டாக்கிப் போர் செய்தார். அந்தத் திருமால் கூட்டங்களை வீரபத்திரன் தன் விழியால் பார்த்தான். திருமால் கூட்டம் அடியோடு அழிந்தது. உடனே திருமால் தன் கையிலுள்ள சக்கராயுதத்தை வீசினார்.

அங்குஅவர் யாரையும், அமலன் வெய்யகட்
பொங்குஅழல் கொளுவிநுண் பொடிய தாக்கலும்
பங்கய விழியினன், பரமன் அன்றுஅருள்
செங்கையில் ஆழியைச் செல்கென் றேவினன்.

(யாகசங்காரப். 121.)

[அமலன் - வீரபத்திரன். கொளுவி - மூட்டி. பங்கய விழியினன் - திருமால். ஆழி - சக்கராயுதம்.]

திருமாலை, 'பங்கய விழியினன்' என்கிறார் ஆசிரியர். திருமாலுக்கு ஆயுதமாக இருப்பது சக்கரம். அந்தச் சக்கராயுதத்தைச் சிவபெருமானிடம் இருந்துதான் திருமால் பெற்றார். ஒரு சமயம் ஆயிரத்தெட்டுத் தாமரை மலர்களால் சிவபெருமானை அவர் அருச்சித்தார். ஒரு மலர் இல்லாமல் போக, தம் விழியையே பங்கயமாகக் கொண்டு பறித்து அருச்சனை பண்ணினார். சிவபெருமான் மகிழ்ந்து அவருக்குச் சக்கராயுதத்தை வழங்கினான். அவ்வளவு அருமையாக, சிவனைத் தம் தாமரை போன்ற கண்ணையே பறித்து அருச்சனை செய்து சக்கராயுதத்தைப் பெற்றவருக்குக் கூட இப்போது உண்மை தெரியவில்லை. 'சிவனை நினைக்காத வேள்வியில் நாம் எல்லாம் கலந்து கொண்டாமே!' என்று தோன்றவில்லை. பெரியவர்களுக்குக் கூடச் சில சமயம் அறிவு மயக்கம் உண்டாகும் என்பதை இது காட்டுகிறது.

அந்தச் சக்கராயுதத்தை எடுத்து வீரபத்திரன் விழுங்கி விட்டான். திருமால் தம் கையிலுள்ள கதாயுதத்தை எறிய, அதை வீரன் தன் கையிலுள்ள கத்தியினால் தடுத்தான். திருமால் ஓச்சுவதற்குத் தம் கை வாளை உருவினார். வீரபத்திரன் உங்காரம் செய்தான். திருமால் மயங்கிக் கையும் வாளுமாய் நின்றார்.

அந்தச் சமயத்தில் அசரீரியாக இறைவன் ஒன்று சொன்னான்.

''அப்பா, நீ கோபப்படாதே. உன் கோபம் போகட்டும்'' என்று குரல் கொடுத்தான். கண்ணுதலானாகிய பரமேசுவரனே, அசரீரியாக அந்த வார்த்தையைச் சொன்னான். அதைக் கேட்ட வீரபத்திரன் சினம் ஆறினான். அப்போது திருமாலும் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்.

''என்னுடைய பெரிய வில்லையும் அழித்து, வேறு வகையான ஆயுதங்களையும் செயல்படாமல் செய்து, பகைவர்களுடைய உயிர்களை எல்லாம் உண்டு வீரம் காட்டிய சக்கராயுதத்தையும் விழுங்கி, இந்த யுத்தத்தில் என்னை வென்றாயே; நீ மிக்க புகழைப் பெற்றிருக்கிறாய். உன் தகைமையை யார் சொல்ல முடியும்? யார் தெரிந்துகொள்ள முடியும்?''

பாரவெஞ் சிலையும் வீட்டிப் பல்படைக் கலனும் சிந்திச்
சேரலர் உயிர்கள் உண்ட திகிரியும் செல்ல நுங்கிப்
போரிடை எனையும் வென்று புகழ்புனைந் திடுதி என்றால்
வீரநின் தகைமை, யாரே முடிவுற விளம்ப வல்லார்?

(யாகசங்காரப். 129.)

[பார வெஞ்சிலை - கனமான கொடிய வில். வீட்டி - அழித்து. சேரலர் - பகைவர். திகிரி - சக்கரம். நுங்கி - விழுங்கி.]

"பிரமனுடைய மகனாகிய தக்கன் செய்த வேள்வியில் பூஜைபெற வேண்டுமென்று எண்ணி இங்கே வந்தேன். அப்போதே நான் சிறிதும் யோசிக்கவில்லை. அதனால் இப்போது இந்த அவமானத்தைப் பெற்றேன். இது வருந்துவதற்குரியது. ஈசனை இகழ்ந்தவர்களோடு இருப்பது தவறு என்பது இப்போது தெரிந்துவிட்டது" என்று சொன்னார்.

ஆசறு நெறியின் நீங்கும் அயன்மகன் இயற்று கின்ற
பூசனை விரும்பி, வேள்வி புகுந்தனன்; புந்தி யில்லேன்;
மாசறு புகழாய், நின்னால் மற்றிது பெற்றேன்; அந்தோ!
ஈசனை இகழ்ந்தோர் தம்பால் இருப்பரோ எண்ணம் மிக்கோர்.

(யாகசங்காரப். 130.)

[ஆசறு நெறியின் நீங்கும் அயன்மகன் - குற்றமில்லாத வழியினின்றும் விலகிய பிரமபுத்திரனாகிய தக்கன். மற்று: அசை. இது - இந்தத் தண்டனை.]

சிற்றினம் சேராமை

நாம் நல்லவர்களாக இருந்தாலும் பொல்லாதவர்களோடு சேரக் கூடாது. சிற்றினம் சேர்ந்தவர்கள் எளிதில் தவறு செய்யப் பழகுவார்கள். நல்ல மாம்பழங்கள் பத்து இருந்தாலும், அவற்றில் ஏதேனும் ஒரு பழம் அழுகிவிட்டால் எல்லாப் பழங்களும் பாழாகி விடும். ஆகையால் பெரியவர்கள் எப்போதும் நல்ல இனத்தோடு இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். **அபிராமிபட்டர்** என்ற தேவி உபாசகர் நல்ல இனம் வேண்டுமென்பதை வற்புறுத்துகிறார். அதைச் சொல்லும்போது, "பொல்லாக இனத்தைக் கண்டு அஞ்சி ஒதுங்கினேன்" என்று அவர் சொல்கிறார்.

"அறிந்தேன் எவரும் அறியா மறையை; அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கே;திரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே."

இங்கே, ''வெருவிப் பிரிந்தேன்'' என்று சொல்கிறார். புலியைக் கண்டால் எப்படிப் பயந்து மக்கள் ஓடுவார்களோ, அப்படிப் பொல்லாதவர்களைக் கண்டால் ஓடிவிட வேண்டும்.

ஆயிரம் பேர் இருக்கிற கூட்டத்தில் ஒருவன் தனியாக நிற்க முடியாது. அவர்கள் போகிற போக்கில்தான் போவான். ஆகவே, நாம் எவ்வளவு நல்லவராக இருந்தாலும், நல்ல பழக்கங்களை மேற்கொண்டாலும் பொல்லாதவர்களோடு சேர்ந்தால் ஒரு கணத்தில் மாறிவிடுவோம். விளக்கை ஏற்றிய பிறகு அதைச் சுற்றிச் சூழப் பாதுகாப்பு வைத்தால்தான் வெளிக் காற்றினால் அணையாமல் இருக்கும். அப்படி நல்ல இனத்தோடு இருந்தால்தான் நல்ல குணங்கள் நிலைபெறும். பொல்லாத இனத்தோடு சேரக் கூடாது.

திருமால் அறிவு உடையவர். பொல்லாத இனத்தோடு சேர்ந்ததால்தான் இந்தத் துன்பத்தை அடைந்தார். ஆகவேதான்,

ஈசனை இகழ்ந்தோர் தம்பால் இருப்பரோ எண்ணம் மிக்கோர்

என்று வீரபத்திரனிடம் சொன்னார்.

சிவபெருமான் தோன்றி அருள்புரிதல்

அப்போது சிவபெருமான் அங்கே தோன்றினான். எம்பெருமாட்டியும் உடன் வந்தாள். தக்கனுடைய யாகத்தை அழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட அந்தப் பெருமாட்டி, இப்போது எல்லோரும் அங்கே அழிந்திருப்பதைக் கண்டு மிகவும் இரக்கம் அடைந்தாள். தாயின் இயற்கையே அத்தகையதுதான். கோபத்தினாலே தன் குழந்தையை அடித்துவிடுவாள். பின்பு, ''நான் பாவி, அடித்துவிட்டேனே!'' என்று இரங்குவாள். அதேபோல் தாட்சாயணி, தன் தகப்பனாகிய தக்கன் வேள்விக்குப் போய் வந்தவுடன் இறைவனிடம், ''நீங்கள் அந்த யாகத்தை அழிக்க வேண்டும்'' என்று முதலில் வேண்டிக்கொண்டாள். இப்போது தேவர்களும் பிறரும் தண்டனை பெற்றதைக் கண்டு மனம் இரங்கினாள். உடனே இறைவனைப் பார்த்து வேண்டினாள்; ''நான் முன்பு இவர்களை எல்லாம் அழிக்க வேண்டுமென்று விரும்பியவுடன், அடியேனுடைய விருப்பத்தை நிறைவேற்ற வீரபத்திரனை அனுப்பி அப்படியே செய்தீர்கள். இப்போது இவர்கள் எல்லாம் உயிர்பெற்று எழும்

வண்ணம் கிருபை செய்ய வேண்டும். இந்த வரத்தை எனக்கு அருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தாள் அம்பிகை.

முந்தும் இவரை முடித்தியென வெஃகியதும்
தந்து முடிந்தாய், தனிவீர னால்; அனையர்
உய்ந்து குறைபோய் உயிர்பெற் றெழும்வண்ணம்
இந்த வரமும் எனக்கருளாய் எம்கோவே.

(யாகசங்காரப். 142.)

[முடித்தி என வெஃகியதும் - அழிப்பாயாக என்று விரும்பியவுடன். குறைபோய் - குற்றம் நீங்கி.]

தேவர் எழுதல்

உடனே சிவபெருமான் வீரபத்திரனைப் பார்த்து, "இவர்களை எல்லாம் எழுப்புவாயாக!'' என, அவன் யாவரையும் எழுப்பினன். உயிர்பெற்று எழுந்தவர்கள் எல்லாம் சிவபெருமானைப் பணிந்து, "உங்கள் திருவடிக்கு நாங்கள் பெரிய அபராதத்தைச் செய்து விட்டோம். வீரபத்திரன் என்னும் சிங்கத்தின் கையால் நாங்கள் அழிந்து ஒழிந்தோம். ஆனல் அப்படிக் கிடைத்தது எங்களுக்குத் தண்டனை என்று சொல்லக் கூடாது. அதனல் நாங்கள் இப்போது தூயவர்கள் ஆகிவிட்டோம். எங்களுக்கு அங்கஹீனம் வந்தது என்று நினைக்கவில்லை. அங்கங்களுக்கு எல்லாம் ஆபரணம் கிடைத்தது போன்ற நிலை வந்தது என்று நினைக்கிறோம். இப்போது அறிவுத் தெளிவு பெற்றிருக்கிறோம்'' என்று எல்லோரும் சொன்னர்கள்.

இங்குஉன் அடிபிழைத்தோம் எல்லோமும் வீரன்எனும்
சிங்கம்தன் கையால் சிதைபட்ட வாறுஎல்லாம்
பங்கங்கள் அன்றே; பவித்திரமாய் மற்றெங்கள்
அங்கங்கட் கெல்லாம் அணிந்த அணியன்றோ?

(யாகசங்காரப். 154.)

[பங்கங்கள் - குறைபாடுகள். பவித்திரமாய் - சுத்தமடைந்து. சிதைபட்ட - சிதைவடைந்த.]

தக்கன் ஆட்டுத் தலை பெறுதல்

எல்லோரும் அங்கே இருந்தார்கள். தக்கனை மாத்திரம் காணவில்லை. அம்பிகை, அவனைக் காணவில்லையே என்று கேட்டாள். அப்போது வீரபத்திரன் பானுகம்பனைத் தக்கனுடைய குறையுடலைக் கொண்டுவரும்படி ஏவினன். வேள்விக்கு அவிசாகிய ஆட்டின்

தலையை எடுத்து அந்த முண்டத்தோடு சேர்த்தான். உடனே ஆட்டின் தலையோடு தக்கன் எழுந்து வந்தான்.

வித்தக வலிகொள் பூதன்
வீரபத் திரன்தன் முன்னர்
உய்த்தலும், அதன்மேல் வேள்விக்கு
உண்டியாம் பசுவுள் வீந்த
மைத்தலை கண்டு சேர்த்தி
எழுகென்றான், மறைகள்போற்றும்
அத்தனை இகழும் நீரர்
ஆவர்இப் பரிசே என்ன.

(யாகசங்காரப். 163.)

[பூதன் - பானுகம்பன். அதன்மேல் - அந்த முண்டத்தின்மேல். மைத்தலை - ஆட்டின் தலையை.]

தக்கன் எழுந்து வந்து எம்பெருமானை வணங்கி, "என் அபராதங்களை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினான். "நீ அஞ்சாதே" என்று ஆண்டவன் அவனுக்கு அபயம் கொடுத்தான்.

"தீயவனாகிய நான் புரிந்த தீமையை மனத்தில் கொள்ளக் கூடாது. நான் செய்த தீமைக்கு அளவே யில்லை. இப்போது நினைக்கும்போது என்னுடைய நெஞ்சமே எரிகிறது. நீ எனக்கு அருள் செய்தமையினால் நான் உஜ்ஜீவனம் அடைந்தேன்" என்று சொல்லித் தக்கன் மனம் உருகி நின்றான்.

அஞ்சலென்று அருள லோடும் அசமுகத் தக்கன் எங்கோன்
செஞ்சரண் முன்னர்த் தாழ்ந்து, தீயனேன் புரிந்த தீமை
நெஞ்சினும் அளக்கொ ணாதால்; நினைதொறும் சுடுவ தையா,
உஞ்சனன், அவற்றை நீக்கி உனதருள் புரிந்த பண்பால்.

(யாகசங்காரப். 166.)

[அசமுகத் தக்கன் - ஆட்டுத்தலையைப் பெற்ற தக்கன்.]

அதன் பிறகு சிவபூஜை செய்து தக்கன் புனிதன் ஆனான்.

இவ்வாறு பழைய கதையைப் பிரகஸ்பதி பகவான் சயந்தனுக்குச் சொல்லி முடித்தார்.

வள்ளியம்மை திருமணம்

மலரும் கனியும்

முருகன் திரு அவதாரம் செய்தது சூரசங்காரத்திற்காக என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. ஆனால் கந்தபுராணம் சூரசங்காரத்துடன் முடியவில்லை. அதன் கடைசியில் வள்ளி திருமணம் இருக்கிறது. சூரசங்காரம் என்பது துன்பத்தை நீக்கும் செயல்; வள்ளி திருமணந்தான் இன்ப ஆக்கத்தைச் சொல்வது. கந்தபுராணம் என்னும் கற்பக மரத்தில் சூரசங்காரம் மலராக இருந்தால், அதன் கனி வள்ளியம்மை திருமணம். இறைவனுடைய திருவருளை அடைவதற்கு ஆன்மா முயற்சி செய்ய வேண்டும். அவனிடத்தில் பக்தி கொள்ளவேண்டும். இறைவன் மிக்க கருணை உடையவன். முருகப்பெருமானுடைய பெரும் கருணையைக் காட்டும் ஒரு செயல், சூரசங்காரம்; மற்றொன்று வள்ளிநாயகியின் திருமணம். முருகப்பெருமான் தன்னோடு போர் புரிய வந்தது அவன் அருளே என்று சூரன் முன்பு சொன்னதைப் பார்த்தோம். வள்ளியம்மையின் திருமணத்தில் முருகப்பெருமானின் மற்றொரு பேரருளின் சிறப்பைப் பார்க்கப் போகிறோம்.

நம்பி ராசன்

தொண்டை நாட்டில் மேற்பாடி என்பது ஓர் ஊர். அது வள்ளிமலைக்கு அருகே உள்ளது. அது மிகவும் பழம்பதி என்று சொல்வார்கள்.

அயன்ப டைத்திடும் அண்டத்துக் காதியாய்ப்
பயன்ப டைத்த பழம்பதி என்பரால்,
நயன்ப டைத்திடு நற்றொண்டை நாட்டினுள்
வியன்ப டைத்து விளங்கும்மேற் பாடியே.

(வள்ளியம்மை திருமணம். 2.)

[நயன் - நீதி. வியன்படைத்து - விரிவை உடையதாகி.]

வள்ளிமலை என்ற பெயர் வள்ளியம்பெருமாட்டி தோன்றியதால் உண்டாகி இருக்கலாம். அந்த மலையில் மிகுதியாக வள்ளிக் கிழங்கு உண்டானது என்பதனாலும் பிறந்திருக்கலாம். அதுவும் அதைச்

சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலம். குறிஞ்சியில் இருக்கும் ஊருக்குக் குறிச்சி என்று பெயர். மேற்பாடியும் ஒருவகைக் குறிச்சிதான். அந்தப் பகுதியை நம்பிராசன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் பல மைந்தர்களைப் பெற்றான். பல பிள்ளைகள் இருந்தாலும் ஒரு பெண் இல்லையே என்ற குறை அவனுக்கு இருந்தது. பெரும்பாலும் உலகத்தில் பெண்கள் பிறக்கும்; ஆண்கள் இல்லையே என்ற குறை இருக்கும். ஆனால் இங்கே அதற்கு மாறாக நம்பிராசன் ஆண் இருந்தும் பெண் இல்லையே என்று எண்ணினான். வள்ளி திருமணத்தில் இப்படியே உலகியலுக்கு வேறுபட்ட பல செய்திகள் வரும்.

தனக்கு ஒரு பெண்பிள்ளை இல்லையே என்று தன்னுடைய குலதெய்வமாகிய முருகப் பெருமானை நினைத்து முறையிட்டுக் கொண்டான் நம்பி ராசன். அவன் செய்த தவத்தின் பயனாக அவனுக்கு ஒரு பெண்ணை முருகன் வழங்க எண்ணினான்.

ஆயதோர் குறிச்சி தன்னில்
அமர்தரும் கிராதர்க் கெல்லாம்
நாயக நுகம்பூண் டுள்ளான்,
நாமவேல் நம்பி என்போன்;
மாயிருந் தவமுன் செய்தோன்.
மைந்தர்கள் சிலரைத் தந்து
சேயிழை மகட்பேறு உன்னித்
தெய்வதம் பராவி உற்றான்.

(வள்ளியம்மை. 18.)

[குறிச்சி - குறிஞ்சிநிலத்து ஊர். கிராதர் - வேடர். நாயக நுகம் - தலைமைப் பொறுப்பு. நாம வேல் - பகைவர்களுக்கு அச்சத்தைத் தரும் வேல். சேயிழை மகட்பேறு - செம்பொன்னாலாகிய ஆபரணங்களை அணியும் மகள் பெறுவதை.]

வள்ளியம்மை அவதரித்தல்

அந்த மலைச்சாரலில் உள்ள காட்டில் சிவமுனிவர் என்னும் பெரியவர் தவம் செய்துகொண்டிருந்தார். அப்போது திருமகள் அம்சமாகிய மான் ஒன்று அங்கே ஓடி வந்தது. சிவமுனிவர் திருமாலின் அம்சம். முனிவர் அந்த அழகிய மானைக் கண்டார். அதன் அழகில் அவருக்கு மயக்கம் உண்டாயிற்று. கண்ணால் அதை நன்றாகப் பார்த்தார். தவம் செய்பவர்கள் கண்ணால் பார்த்

தாலே அதற்கு மிக்க பயன் உண்டு. தவம் நிறைந்த சிவமுனிவர் பார்த்தவுடன் மான் வயிற்றில் கர்ப்பம் தோன்றியது. 'ரிஷி கர்ப்பம் இராத் தங்காது' என்பார்கள். அப்போதே கர்ப்பம் முதிர்ந்துவிட்டது. அந்த மான் வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் ஒரு பெண் குழந்தையை ஈன்றது. தான் ஈன்ற குழந்தையை மான் பார்த்தபோது, அது தன் இனம் போல இல்லாமல் வேறு இனம்போல இருந்ததால், அப்படியே அங்கு அதை விட்டுவிட்டு ஓடி விட்டது. அந்தக் குழந்தை குழியில் கிடந்து அழுதுகொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் வேட்டை ஆடுவதற்குக் காட்டுக்கு நம்பி ராசன் வந்தான். குழந்தையின் அழுகுரலைக் கேட்டு, அங்கே சென்று பார்த்தபோது, வள்ளிக்கிழங்கை அகழ்ந்த குழியில் ஒளி படைத்த ஒரு பெண் குழந்தை இருப்பதைக் கண்டான். முருகப் பெருமானை எண்ணித் தவம் செய்ததன் பயனே இது என்பதை உணர்ந்தான். ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் பெண் குழந்தையினிடத்தில் ஆசை உண்டாகும். ஆகவே அந்தக் குழந் தையை எடுத்துச் சென்று, "இந்தா பெண் குழந்தை" என்று தன் மனைவியிடம் கொடுத்தான்.

வந்தான் முதல்எடுத்த வள்ளிக் குழியில்வைகும்
நந்தா விளக்கனைய நங்கை தனைநோக்கி,
இந்தா இலைதோர் இளங்குழவி என்றெடுத்துச்
சிந்தா குலம்தீரத் தேவிகையில் ஈந்தனனே.

(வள்ளியம்மை. 35.)

[முதல் எடுத்த - கிழங்கைத் தோண்டிய. சிந்தாகுலம் - மனக் கவலை.]

'சேயிழை மகட்பேறு உன்னித் தெய்வதம் பராவி உற்றான்' என்று முன்பு சொன்னார். அங்கே தாயின் குறையைச் சொல்ல வில்லை. இங்கே அதை நன்றாகத் தெரிவிக்கிறார். தனக்குப் பெண் குழந்தை இல்லையே என்ற எண்ணம் தாய்க்கு இருந்து வருத்தியது. அந்தக் கவலை தீரும்படியாக அவள் கையில் அந்தப் பெண் குழந்தையை நம்பி ராசன் கொடுத்தானாம்.

பெண்களுக்கு ஆண் குழந்தைகள் எத்தனை இருந்தாலும் ஒரு பெண் குழந்தையாவது வேண்டுமென்று இருக்கும். அதற்குக் காரணம் உண்டு. வயது வந்த ஆண்பிள்ளைகள் தாய் பக்கத்தில்

இருந்தாலும் அவர்களைத் தொட்டுப் பேச முடியாது. ஆனால் பெண்ணோ தாயோடு நெருங்கிப் பழகலாம். அவளுக்கு வேண்டிய தொண்டினைச் செய்யலாம். இந்த உரிமைபற்றியே தாய்க்குப் பெண்ணிடத்தில் அதிக அன்பு உண்டாகிறது.

சிந்தாகுலம் தீரத் தன் தேவி கையில் நம்பி ராசன் அந்தப் பெண் குழந்தையைத் தந்தான்.

'நந்தா விளக்கனைய நங்கை' என்று அந்தக் குழந்தையைச் சொல்கிறார் சிவாசாரியார். அவியாமல் ஒளி படைத்த விளக்குப் போன்ற பெண் என்பது பொருள். விளக்கு, தன்னைக் காட்டி, தன்னுடைய ஒளியால் பிற பொருளைக் காட்டும் தகைமைத்து. இங்கே வள்ளிநாயகியாகிய விளக்கு, தன்னை முதலில் காட்டிக்கொண்டது. பின்பு தன் மூலமாக முருகப்பெருமானைக் காட்டப்போகிறது. ஆகவே விளக்கு என்ற உவமை மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

வள்ளிக்கிழங்கை அகழ்ந்த குழியில் இருந்தமையால் குழந்தைக்கு வள்ளி என்ற பெயரிட்டு அழைத்தார்கள்.

நம்பி ராசனும், அவனுடைய மனைவியும் குழந்தையை மிகவும் செல்வத்துடன் வளர்த்தார்கள். அந்தக் குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பன்னிரண்டு வயது நிரம்பியது.

வள்ளிநாயகி தினைப்புனம் காத்தல்

குறவாணர்கள் தம்முடைய பெண்களைத் தினைப்புனம் காக்கும் படி அனுப்புவார்கள். அங்கே பரணை அமைத்து, அதன்மேலே தம்முடைய பெண்கள் இருந்து, கிளிகளை ஓட்டும்படி செய்வார்கள். அந்த மகளிர் அங்கே போய் இருப்பது வழக்கம். பகற் காலத்தில் நிகழும் நிகழ்ச்சி இது. கவண் கல்லைக் கையில் வைத்துக்கொண்டு, ஆலோலம் பாடிக் குருவிகளையும், கிளிகளையும் தினைப்புனம் காக்கும் பெண்கள் ஓட்டுவார்கள். இராக்காலத்தில் இந்தப் பரணில் ஆடவர்கள் இருந்து யானை முதலியன வராமல் பாதுகாப்பார்கள். தன் குல மரபுப்படி நம்பி ராசன் தன் பெண் குழந்தையாகிய வள்ளி நாயகியைப் பரண்மேல் வைத்துத் தினைப்புனத்தைக் காவல் காக்கும்

படி செய்தான். வள்ளி நாயகியின் அருமை தெரியாமல் மற்றக் குறப்பெண்களைப்போல எண்ணி இந்தச் சிறிய காரியத்தை அவன் செய்தான். இங்கே கச்சியப்பர் ஓர் உவமை சொல்கிறார்.

குருவிகள் கூடு கட்டும். அந்தக் கூட்டுக்குள் ஒளி உண்டாவதற்காக மின்மினிப் பூச்சியைக் கொண்டு வந்து வைக்கும். ஒரு குருவி மிக உயர்ந்த இரத்தினத்தை, ஒளி உடையதாக இருப்பதைக் கண்டு மின்மினி என்று எடுத்து வந்து தன் கூட்டுக்குள் வைத்தது. மின்மினி எங்கே? நாயகம் ஆகிய இரத்தினம் எங்கே? குருவிக்கு அதன் அருமை தெரியுமா? மின்மினிப் பூச்சியைப் போலவே அதையும் நினைத்து எடுத்துவந்து வைத்தது. அதுபோல, முருகப் பெருமானுடைய தேவியாக வரப்போகிற அமுதம் போன்ற வள்ளிநாயகியை, கையிலே வில்பிடித்த வேடர்கள் புனம் காக்கும்படி வைத்தார்கள் என்று சொல்கிறார் கச்சியப்பர்.

காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுஉய்த்த வாறன்றே?
தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனம்காப்ப வைத்ததுவே.

(வள்ளியம்மை. 49.)

[கடவுள் மணி - தெய்வத்தன்மை பொருந்திய மாணிக்கம். குருகு - பறவை. சிலை - வில்.]

வள்ளிநாயகி தினைப்புனத்தில் ஆலோலம் பாடித் தோழிமார்களோடு விளையாடிக் கொண்டு தினையைக் காவல் செய்திருந்தாள்.

முருகன் தினைப்புனம் வருதல்

அப்போது முருகன் கந்தகிரியிலிருந்து திருத்தணி மலைக்கு வந்து அமர்ந்திருந்தான். வள்ளிநாயகியை ஆட்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டதால் அந்தப் பெருமான் அங்கே வந்தான். நாரத முனிவர் திருத்தணி போய் முருகப்பெருமானைத் தரிசித்து, "அருகில் உள்ள வள்ளிமலையில் வள்ளி என்ற ஒருத்தி இருக்கிறாள். அவள் மிக்க பேரழகி. அவளை நீ திருமணம் செய்துகொள்ள வேண்டும்" என்று சொன்னார். நாரதர் சொன்னதைக் கேட்டு, புதிதாக வள்ளியைப் பற்றித் தெரிந்துகொண்டவனைப் போல முருகன் மனமுவந்தான். அவனுக்குத் தெரியாதா இது? என்றாலும்

தெய்வ கைங்கர்யத்தில் பலரையும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டு மென்பது அவன் ஆசை: பிறர் சொல்வதைக் கேட்டுச் செய்வது போலச் செய்தான். இதனல் நாரதருக்கு மகிழ்ச்சி உண்டாகும் அல்லவா ?

உடனே முருகப்பெருமான் ஒரு வேடன் போல் வேடம் தாங்கி வள்ளி மலையை நோக்கி வந்தான். இயல்பாக இருப்பதைக் காட்டிலும் வேடம் புனைகிறவன் மிகவும் சிறப்பாக நடிப்பான். முருகப் பெருமானும் வேடர்களுக்குரிய வேடத்தைத் தக்கவண்ணம் பூண்டு கொண்டு வந்தான். அவனுடைய காலில் வீரக்கழல் விளங்கியது. இடையிலே கச்சை அணிந்திருந்தான். தோளிலே மாலை அணிந் திருந்தான். கையில் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டான். கரிய குஞ்சியை உடையவனுக, நெடிய உருவம் உடையவனுக, வேட்டுவக் கோலத்தோடு குமரன் தோன்றினுன்.

காலில் கட்டிய கழலினன், கச்சினன்,
மாலைத் தோளினன், வரிவில் வாளியன்,
நீலக் குஞ்சியன், நெடியன், வேட்டுவக்
கோலத் தைக்கொடு குமரன் தோன்றினுன்.

(வள்ளியம்மை. 66.)

[கழல் - வீரகண்டை. கச்சு, இடுப்பிலே கட்டுவது. வாளி - அம்பு. குஞ்சி - கேசம்.]

முருகப்பெருமான் நெடிய வடிவம் உடையவன்.

" நெடியன் தொடியணி தோளன் "

என்று பாடுவார் நக்கீரர். வள்ளிக்கேற்ற நாயகன் அவன். வேட்டுவக் கோலத்தோடு வள்ளிநாயகி இருக்கும் தினைப் புனத்தை அணுகினுன். அவளோடு பேச எண்ணினுன். ஆனல் அந்தப் பெருமாட்டியோ சற்றும் அவனைக் கவனிக்கவில்லை சற்றே அவனைப் பார்த்துப் பிறகு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்தப் பார்வையில் அன்பு இல்லை ; கோபந்தான் இருந்தது.

முருகன் பேசுதல்

அதைக் கண்ட பிறகு முருகப்பெருமான் அவளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான். " அழகிய பெண்ணே, உன்னுடைய கண் வாளைப்போல என் உயிரை உண்ணுகிறது. நான் சொல்லும் ஒரு வார்த்தையைக் கேட்கக் கூடாதா ? " என்று தொடங்கினுன்.

நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேள்.

[நாந்தகம் - வாள்.]

உண் கண் என்பதற்கு மையுண்ட கண் என்று பொருள் எழுது வார்கள். மற்ற இடங்களில் அது பொருத்தமாக இருக்கும். ஆனல் இங்கே, உயிரை உண்ணும் கண் என்று சொல்வதுதான் பொருந்தும். வாளை உவமை கூறுவதற்கு ஏற்ப அந்தப் பொருள் இருக்கும்.

மேலே இறைவன் பேசுகிருன். "இந்த உலகத்தில் எல்லாப் பெண்களுக்கும் தலைவியாக இருக்கிற பேரழகி நீ. அவர்கள் தங்க ளுடைய அழகு முழுமை பெறுவதற்காக நகைகளை அணிந்திருப் பார்கள். ஆனல் நீயோ நகைக்கு அழகு தருகிருய்."

ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் உன்னை.

"இவ்வளவு அழகுடைய உன்னை எப்படி வைத்துப் பார்க்க வேண்டும்? நவரத்தின கசிதமான சிங்காதனத்தில் வைத்து, பக்கத்தில் அரம்பை, மேனகை முதலிய தேவமாதர்கள் கவரி வீசி உபசாரம் செய்யச் சொல்லிப் பார்க்க வேண்டும். அப்படியில்லாமல் உன்னை இங்கே தனியாக வைத்திருக்கிருர்கள். மூங்கிலினுல் ஆன பரணின்மேல் உன்னை அமர்த்தி யிருக்கிருர்கள். உயிரோடு உள்ளவர்களை மூங்கிலின்மேல் வைப்பார்களா? அப்படித்தான் வைத்தார்களே; உன்னை மிக உயர்ந்த பொருள்களுக்குக் காவலாக வைத்து, பக்கத்தில் அவர்கள் இருந்து உன்னைக் காக்க வேண் டாமா? அற்பமான தானியமாகிய தினையைக் காக்கும்படி உன்னை வைத்துவிட்டுப் போய்விட்டார்களே!" என்று சொல்கிருன்.

ஏந்திழை யார்கட் கெல்லாம்
இறைவியாய் இருக்கும் உன்னைப்
பூந்தினை காக்க வைத்துப்
போயினர் புளின ராஞேர்.

[புளினர் - வேடர்.]

அப்படிச் செய்த வேடர்களின்மேலே எம்பெருமானுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அந்த முட்டாள்கள் இப்படிச் செய்து விட்டார்களே!' என்று சொல்ல எண்ணினன். அப்போது ஒரு நினைவு வந்தது. அவன் வள்ளிநாயகியின் அருளுக்கு ஏங்கி

நிற்கிருன். அப் பெருமாட்டியின் விழிப் பார்வைக்கும், நல்ல வார்த்தைக்குமாக ஏங்கும்போது அவளுடைய உள்ளம் குளிரும்படி யாக அல்லவா பேச வேண்டும்? அவளுடைய தாய் தந்தையரைக் குறைகூறினல் அந்தப் பெருமாட்டிக்குக் கோபம் வராதா? கிளிமேல் வீசும் கவண் கல்லே அவன் மேலல்லவா விசிவிடுவாள்? நம்முடைய நாட்டில் வீட்டுக்காரனுக்கும், வீட்டுக்காரிக்கும் வருகிற சண்டையைப் பார்க்க வேண்டும். வீட்டுக்காரன் கோபத்தில், "உன்னுடைய தகப்பன் பெரிதாகச் செய்துவிட்டானே?" என்று சொல்வான். அதைக் கேட்ட இல்லத்தரசி, "என்னை என்ன வேண்டுமானலும் சொல்லுங்கள். என் தகப்பனரைச் சொல்ல உங்களுக்கு உரிமை இல்லே" என்று சொல்வாள். பெண்களிடத்தில் நயமாகப் பழகு கின்றவர்கள் அவர்களுடைய தாய் வீட்டாரைச் சிறப்பித்துப் பேச வேண்டும். இந்த யுக்தி இறைவனுக்குத் தெரியாதா?

முருகப்பெருமான் எண்ணிப் பார்த்தான். வேடர்கள்மேல் குறை சொன்னல் வள்ளிநாயகிக்குப் பரிவு தோன்ருது; மாருகக் கோபம் வரும். ஆனலும் அவர்கள் செய்த செயல் முருகனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. அந்தக் கோபத்தையும் காட்ட வேண்டும். அவர்களேத் திட்டவும் கூடாது. இதற்கு என்ன வழி?

என்னுடைய பக்கத்து வீட்டில் ஒரு பையன் இருந்தான். ஒருநாள் அவன் அழுக்குச் சட்டை போட்டுக்கொண்டு என்னிடம் வந்தான். நான் அவனேப் பார்த்து, "என்னடா முட்டாள்! இந்த அழுக்குச் சட்டையைப் போட்டுக்கொண்டு வந்திருக்கிருய். வேறு சட்டை போட்டுக் கொள்ளக்கூடாது?" என்று கேட்க நினேந்தேன். ஆனுல் அவன் ஆளும் கட்சித் தலேவர்களில் ஒருவனுடைய பையன். அவன் தந்தையிடம் எனக்கு ஆகவேண்டிய காரியம் இருந்தது. அப்படியானல் நான் நினேந்ததை அப்படியே கேட்பேனு? அந்தப் பையனே நான் நேராகத் திட்டமாட்டேன். என்ருலும் என் கோபத் தைக் காட்டுவதற்கு ஒரு வழி வேண்டும். "என்னப்பா, அந்த முட்டாள் சலவைக்காரன் சலவைத் துணியைக் கொண்டுவந்து தரவில்லேயோ?" என்று கேட்பேன்.

அதுபோல, இங்கே முருகப்பெருமான் ஒரு யுக்தி செய்தான். "அந்தப் பிரமன் இருக்கிருனே, அவன் ஆய்ந்து பார்க்கும் அறிவை இவர்களுக்குக் கொடுக்கவில்லேயோ?" என்று கேட்கிருன்.

நாந்தகம் அனைய உண்கண்
நங்கைகேள் ; ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம்
இறைவியாய் இருக்கும் உன்னைப்
பூந்தினை காக்க வைத்துப்
போயினர் ; புளின ரானோர்க்கு
ஆய்ந்திடும் உணர்வு சற்றும்
அயன்படைத் திலன்கொல் என்றான்.

(வள்ளியம்மை. 70.)

புராணங்கள், காவியங்கள் ஆகியவற்றில் உலகியலை உணர்ந்த புலவர்கள் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் குறிப்பாகக் காட்டுவார்கள். பெண்களுடைய மனம் நோவாமல் நடந்து கொள்வதற்குரிய வழியை இங்கே குறிப்பாகக் கச்சியப்பர் காட்டுகிறார்.

அதைக் கேட்டு வள்ளிநாயகி திரும்பினாள். உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டு அவனுக்கு முதுகைக் காட்டினாள். முருகன் அதைப் பார்த்துச் சொல்கிறான். "உன்னுடைய கூந்தல் எவ்வளவு நீளமாக இருக்கிறது!" என்று சொல்வானைப் போல,

வாரிருங் கூந்தல் நல்லாய் !

[நீண்ட கரிய கூந்தலையுடைய பெண்ணே.]

என்று அழைக்கிறான்.

"என்னுடைய மதி தளர்கிறது. அந்தத் தளர்ச்சி போக வேண்டுமானால் நீ அருள்செய்ய வேண்டும். உன்னுடைய பெயரைச் சொல். ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது என்று சொல்வார்கள். அப்படியானால் உன்னுடைய ஊரையாவது சொல். பேரையும், ஊரையும் சொல்ல முடியாது என்றால் உன்னுடைய ஊருக்குப் போகும் வழியையாவது சொல்" என்று கெஞ்சுகிறான்.

வாரிருங் கூந்தல் நல்லாய்,
மதிதளர் வேனுக் குன்றன்
பேரினை உரைத்தி ; மற்றுன்
பேரினை உரையாய் என்னின்
ஊரினை உரைத்தி ; ஊரும்
உரைத்திட முடியாது என்னின்
சீரிய நின்சீ றூர்க்குச் செல்வழி
உரைத்தி என்றான்.

(வள்ளியம்மை. 71.)

[உரைத்தி - உரைப்பாய். சீறூர் - சிறிய ஊர்.]

மறுபடியும் பேசுகிறான். "உன் ஊர், பேர் முதலியவற்றைச் சொல்லும்போது உன்னுடைய நாக்குக்கும், உதட்டுக்கும் துன்பம் உண்டாகும். ஆகவே அந்தக் கஷ்டம் உனக்கு வேண்டாம். சிறிதே புன்னகை காட்டமாட்டாயா? அதற்குக் கூடச் சிறிது முயற்சி வேண்டுமென்று எண்ணுவாயோ? அப்படியானால் உன்னுடைய கண்ணினால் ஒரு பார்வை பார், போதும். விரகத்தினால் மிகவும் துன்புறுகிற எனக்கு ஏதேனும் ஒரு வழியைக் காட்டு. நான் எத்தனையோ சொன்னேனே! இவற்றில் ஒன்றுகூட நீ செய்யக் கூடாதா? நான் உய்வதற்கு எந்த வழியையும் காட்டாமல், உன்னுடைய மனம் எனக்கு உருகாமல் இருந்தால், நான் ஏதாவது செய்து கொள்வேன். அதனால் பழி உன்னை வந்து சூழும். ஆகவே என்னைப் புறக்கணிக்காதே; பராமுகமாக இருக்காதே" என்று மீண்டும் அவன் தளர்ந்து பேசுகிறான்.

மொழிஒன்று புகலாய் ஆயின்,
முறுவலும் புரியாய் ஆயின்,
விழிஒன்று நோக்காய் ஆயின்,
விரகம்மிக்கு உழல்வேன் உய்யும்
வழிஒன்று காட்டாய் ஆயின்,
மனமும்சற்று உருகாய் ஆயின்,
பழியொன்று நின்பால் சூழும்;
பராமுகம் தவிர்தி என்றான்.

(வள்ளியம்மை. 72.)

ஆறுமுகன் ஆடல்

இங்கே, 'முருகப்பெருமான் இப்படிக் கெஞ்சிக் கூத்தாடி நிற்கிறானே; இது நியாயம் ஆகுமா?' என்ற ஐயம் தோன்றும். வள்ளி நாயகியைத் தடுத்து ஆட்கொள்வதற்காக முருகப் பெருமான் வந்திருக்கிறான்; அவளைச் சோதனைபோட்டு, அவளுடைய உள்ளத்திலுள்ள அன்பை நன்கு அறிந்து, அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வந்திருக்கிறான். 'என்றாலும் இப்படி ஒரு பெண்ணின் முன்னே பல்லைக் காட்டிப் பரிதவிக்கலாமா?' என்று கேட்கத் தோன்றும். இது அவன் செய்த நாடகம். இந்த இடத்தில் கச்சியப்ப சிவாசாரியார் ஒரு விளக்கம் சொல்கிறார்.

ஒரு சிற்றூரில் காலையில் நல்ல மழை பெய்தது. மழை நின்றவுடன் அங்கங்கே தண்ணீர் வடிந்துவிட்டது. என்றாலும், ஒரு தெருவின் ஓரத்தில் இருந்த சிறிய பள்ளத்தில் தண்ணீர் தேங்கி இருந்தது. அன்று பௌர்ணமி. மாலையில் சந்திரன் தோன்றினான். மாலை நேரத்தில் நல்ல துலாம்பரமாக இருந்த சமயம். குழந்தைகள் எல்லாம் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது ஒரு பையன் தெரு ஓரத்தில் தேங்கியிருந்த தண்ணீரில் சந்திரனுடைய முழு வடிவம் தெரிவதைக் கண்டான். ஒரு சிறு கல்லை எடுத்து அந்தத் தண்ணீரில் போட்டான். அதில் தெரிந்த சந்திர பிம்பம் ஆயிரம் சுக்கலாக உடைந்தாற்போலத் தோற்றம் அளித்தது. அவன், "சந்திரனை உடைத்துவிட்டேன், உடைத்துவிட்டேன்!" என்று கூவினான். உண்மையில் சந்திரனை உடைத்தானா? தண்ணீரில் கண்ட பிரதி பிம்பம் உடைந்தாற்போலத் தோன்றியதேயன்றி, வானத்தில் இருந்த சந்திரன் எந்த விதமான கலக்கமும் அடையாமல் இருந்தான்.

அதுபோல, எம்பெருமான் இங்கே கலக்கம் அடைந்தானைப் போலக் காட்டுவது வெறும் தோற்றம்; வள்ளிநாயகிக்கு அருள் செய்வதற்காகச் செய்த நாடகம் என்று விளக்கம் தருகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

உலைப்படு மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல வருந்தியே இரங்கா நின்றான்;
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்?

(வள்ளியம்மை. 73.)

[கலைப்படு மதியப்புத்தேள் - கிரணங்களை உடைய சந்திரன்.]

முருகன் உவகை

வள்ளிநாயகியிடம் முருகப்பெருமான் கெஞ்சுகின்ற கோலத்தைப் பக்தர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்வார்கள். வள்ளி நாயகியிடம் முருகப்பெருமான் ஆடிய திருவிளையாடலை முருகன் அடியார்கள் வெவ்வேறு வகையில் எடுத்துரைப்பார்கள். வள்ளி நாயகி வேடர் வேடத்துடன் வந்த முருகப்பெருமானைக் கோபித்துக் கொண்டு, "ஏடா, வேடா, போடா, மூடா!" என்றாள். அதனைக் கேட்ட முருகப்பெருமானுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. "நம்முடன் பேசி விட்டாளே!" என்ற மகிழ்ச்சிதான்,

ஒரு பையன், "என்னேடு கவர்னர் பேசினர்" என்ருன். "கவர்னர் எப்படிப் பேசினர்?" என்று கேட்டான் மற்ருெருவன். "நான் நடுரோடில் போய்க் கொண்டிருந்தேன். கவர்னர் கார் வந்தது. சட்டென்று கார் நின்றது. 'அட முட்டாளே! சாலை ஓரமாகப் போ' என்று சொன்னர்" என்ருன் அந்தப் பையன்.

அதுபோல வள்ளிநாயகியினுடைய கோபமான வார்த்தைகள் முருகப்பெருமானுக்கு இனித்தன. அருணகிரிநாதப் பெருமான் இதனைக் குறிப்பாக ஒரு பாட்டில் சொல்கிருர்.

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்"

(கந்தர் அலங்காரம்)

என்று பாடுகிருர். தமிழினிடத்தில் முருகப்பெருமானுக்கு உள்ள காதலைச் சொல்கிற பாடல் இது. வாழ்த்துவாரை வாழவைப்பது என்பது எல்லோருக்கும் இயல்பு. ஆனல் முருகப்பெருமானே மூன்று தமிழிலும் வைதாரையும் வாழவைப்பவன் என்கிருர். எப்படி என்று கேட்கலாம். அதற்கு ஒரு காரணம் முதலில் சொல்கிருர்.

முருகன் முதல் முதலாக வேடக்கோலத்தோடு சென்றபோது வள்ளிநாயகி வரவேற்கவில்லை; புகழவில்லை. அவள் வாயிலிருந்து கோபமான சொற்களே, வசவுச் சொற்களே வந்தன. அவை எம் பெருமானுக்கு இனித்தன. வள்ளியின் வாயிலிருந்து முதல்முதலாகக் கேட்ட வார்த்தைகள் அவை. ஆகையால் அவை இன்பம் தந்தன.

ஒரு பெண் நன்ருகப் பாடுவாள். திருப்புகழ் பாடினல் மிகவும் அற்புதமாக இருக்கும். கச்சேரியும் செய்வாள். அவளைத் திருமணம் செய்துகொள்வதற்கு ஒரு கட்டிளங்காளை வந்து அவளைப் பார்த்தான். அப்போது, "விறல்மாறன் ஐந்து" என்ற திருப்புகழை அவள் பாடினள். அவன் மிகவும் மகிழ்ந்து திருமணத்திற்குச் சம்மதம் கொடுத்தான். திருமணம் ஆயிற்று. திருமணத்திற்குப் பிறகு அவள் தொடர்ந்து கச்சேரி செய்து வந்தாள்.

டில்லியில் அவள் கச்சேரி நடந்தது. ராஷ்டிரபதி தலைமை வகித்து, பதக்கம் கொடுத்து, பொன்னடை போர்த்தினர். கச்சேரி முடிந்து அவர்கள் தங்கும் இடத்துக்கு வந்தார்கள்.

அந்தப் பெண் தன் கணவனிடம், "இன்றைக்கு எப்படி இருந்தது என்னுடைய பாட்டு?" என்று கேட்டாள். "பாட்டு அமுதம் போல இருந்தது; ராஷ்டிரபதியே பாராட்டியிருக்கிறார். உன் பெருமையை நான் சொல்ல வேண்டுமா?" என்றான். "ராஷ்டிரபதி பாராட்டினாலும் என் பதி மகிழவேண்டாமா?" என்றாள், கொஞ்சலாக. "மிகவும் அற்புதமாகத்தான் இருந்தது. என்றாலும் நான் முதல் முதலாக உன்னைப் பெண் பார்க்க வந்த போது, 'விறல் மாரனைந்து' என்ற திருப்புகழைப் பாடினாயே; அதற்குச் சமானம் ஆகாது" என்று சொன்னான். காரணம், முதல் முதலாக உணர்ச்சியை உண்டாக்கிய அதுவே அவனுக்குச் சிறந்ததாகத் தோன்றுகிறது.

அதுபோல முருகன் வள்ளிநாயகியிடம் முதல் முதலாக அவன் சொன்ன வசவுகளைக் கேட்டான். யாரேனும் தமிழில் வைதால் உடனே அவனுக்கு அந்த நினைவு வந்துவிடுகிறது. 'இப்படித்தானே முதல் முதலாக வள்ளி நம்மோடு பேசினாள்?' என்ற எண்ணம் தோன்ற உள்ளம் கிளுகிளுக்கிறது. உடனே அநுக்கிரகம் பண்ணுகிறான். இந்தக் கருத்தை வைத்துத்தான்,

> "மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
> வைதா ரையும்அங்கு வாழவைப் போன், வெய்ய வாரணம்போல்
> கைதான் இருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
> எய்தான் மருகன், உமையாள் பயந்த இலஞ்சியமே"

என்று பாடுகிறார், **அருணகிரியார்**. 'மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்; அதனால் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன்' என்று குறிப்பாகத் தோன்றும்படி சொல்கிறார்.

கண்ணபிரான் ராதையிடம் கெஞ்சியதாக அஷ்டபதியில் வருகிறது. அவள் திருவடியில் வீழ்ந்து அவன் கெஞ்சினான் என்றும் வருகிறது. அப்படியேதான் முருகப்பெருமான் வள்ளிநாயகியின் திருவடியில் வீழ்ந்தான் என்று **அருணகிரியார்** சொல்வார்.

> "நாதா குமரா நமவென் றரனார்
> ஓதாய் எனஓ தியதெப் பொருள்தான்?
> வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
> பாதா குறமின் பதசே கரனே!"

(கந்தர் அநுபூதி)

'பிரமன் முதலிய தேவாதி தேவர்களின் தலைகள் எல்லாம் உன் காலில் இருக்க, உன் தலை வள்ளிநாயகியின் காலில் இருக்கிறது' என்று சொல்கிறார். இந்தப் பாட்டில், "குறமின் பத சேகரனே" என்ற தொடரில் அந்தப் பொருள் இருக்கிறது. திருப்புகழில் குறமகளாகிய வள்ளியின் பாதத்தை அவன் வருடினன் என்பார் அருணகிரியார்.

"பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா".

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் மிக அழகிய பாட்டு ஒன்றைச் சொல்கிறார்.

"மீனேறு குண்டகழி நீவாய் மடுத்ததனி
வில்லியார் இளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட ஐயர்க்கும் அம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரான்என்று மும்முதற் கடவுளும்
அடித்தொழும் பாற்ற, மற்றக்
கூனேறு மதிநுதல தெய்வக்குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவள்தொண்டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை ஆடியருளே!
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள,
செங்கீரை ஆடியருளே"

என்பது அந்தப் பாட்டு. "குறவர் மகட்குச் சலாமிடற்கு ஏக்கறு குமரன்" என்று வேறோர் இடத்தில் பாடுவார்.

கெஞ்சலாமா?

'வள்ளிநாயகியிடம் தன்னுடைய கோலத்தை வெளிப்படையாகக் காட்டி அநுக்கிரகம் பண்ணினால் என்ன?' என்ற கேள்வி எழும். குறிஞ்சி நில மக்கள் எப்போதும் முருகனிடத்தில் அன்பு உடையவர்கள். வள்ளிநாயகி முருகனிடத்தில் அன்பு உடையவளாக

இருந்தாள். அந்த அன்பைச் சோதிக்கவே முருகன் இவ்வாறு வேடம் போட்டு வந்தான். அவள் சற்றும் இளகவில்லை. இந்த உறுதியைத் தெரிந்து மகிழ்ச்சி அடைந்தான்.

அவளிடம் அவன் கெஞ்சி, பல்லைக் காட்டி நின்றாலும் அதுவும் ஒருவகை அருள்தான். அவன் சூரனோடு போர் செய்தது அவனுடைய அருளின் விளைவு என்பதைக் கண்டோம். அது போல இங்கே மிகவும் முதிர்ந்த காதலுடையவனாகக் கெஞ்சிப் பேசியதும் அவனுடைய திருவருளைக் காட்டும் அடையாள மென்றே கொள்ளவேண்டும்.

ஒரு வீட்டின் வாயிலில் பிச்சைக்காரி ஒருத்தி, "அம்மா! ஒரு பிடி" என்று சொல்லிக் கெஞ்சிக் கொண்டிருக்கிறாள். அதே சமயத்தில் உள்ளே, "அம்மா! ஒரு பிடி" என்ற குரல் கேட்கிறது. வெளியில் பிச்சைக்காரி எழுப்புகிற குரலைப்போலவே உள்ளே இருந்து வருவதால் உள்ளேயும் ஒரு பிச்சைக்காரி இருந்து பிச்சை கேட்கிறாளோ என்று எண்ணத் தோன்றும். ஆனால் உள்ளே இருப்பவள் யார், தெரியுமா? தாய், தன் குழந்தைக்குச் சோறு ஊட்டுகிறாள். "அம்மா! ஒரு பிடி" என்று கெஞ்சிக் கெஞ்சி ஒவ்வொரு பிடியாக ஊட்டுகிறாள். வெளியிலே கேட்ட ஒலி இரப்பவள் ஒலி. உள்ளே கேட்பது இடுபவள் ஒலி. ஆகவே, புறத்தோற்றத்தைக் கண்டு நாம் தீர்மானம் பண்ணக் கூடாது. உள்ளே புகுந்து தாயின் அன்பைத் தெரிந்து கொண்டால், அன்பு உடையவர்கள் கெஞ்சியும் ஊட்டுவார்கள் என்பதைக் தெரிந்துகொள்ளலாம். இங்கே, பேரருளாளனாகிய ஆண்டவன், கெஞ்சி வள்ளிநாயகிக்குத் தன் அருளைக் கொடுக்க வேண்டுமென்று வந்தான். இந்தச் செயல் ஆண்டவனின் பேரருட் செயல் என்பதை அந்தப் பெருமானுடைய திருவருளைப் பெற்ற **அருணகிரிநாதர்** சொல்கிறார்.

"எம்பெருமானே, என்னுடைய மனமாகிய கல் மிகவும் செறிவாக இருக்கிறது; பிறவிதோறும் படர்ந்த வாசனையினால் அடர்ந்து இறுகிக் கிடக்கிறது. உன்னுடைய திருத்தாளாகிய தாமரை இந்தக் கல்லில் மலருமா? தாமரை தண்ணீரில்தானே அலரும்? மனம் உருகி, அன்பு நீர் நிறைந்தால், அப்போது அங்கே உன்னுடைய திருவடித் தாமரை அலரும். ஆனால்

என் நெஞ்சமோ கல்லாக இருக்கிறது. உன்னுடைய பாதமோ தாமரை. தாமரை கல்லில் அலர்வது இயல்பன்று. என் மனம் கல்லாக இருப்பது அதன் குற்றம். எப்படி இந்த மனமாகிய கல்லில் தாமரையாகிய உன் பாதம் மலர முடியும்?" என்று வருந்துகிறார்.

"திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ?"

(கந்தர் அநுபூதி)

பின்பு அவருக்கு வேறு யோசனை ஒன்று தோன்றுகிறது. 'முருகனுடைய பாதம் தாமரை போன்றதுதான். என்றாலும் வள்ளி நாயகிக்கு அருள் செய்வதற்காக அது கல்லிலும், முள்ளிலும் நடந்திருக்கிறதே' என்ற எண்ணம் வந்தவுடன், அந்தக் கதையை நினைப்பூட்டுகிறார். முருகப்பெருமான் வள்ளிநாயகிக்கு முன்னாலே நின்று, "எனக்கு ஏதாவது குற்றேவலை இடு" என்று கேட்கிறானாம். ஏதேனும் ஒரு வேலை கொடு என்று சொல்லவில்லை.

"பணியாவென வள்ளி பதம்பணியும்
தணியா அதி மோக தயாபரனே"

என்று சொல்கிறார், அருணகிரியார். "நான் செய்ய வேண்டிய பணிகள் யாவை?" என்று பன்மையில் கேட்கிறானாம். யா - யாவை. "ஏதோ ஒரு சின்னக் காரியத்தைச் சொல்லிவிட்டால், சிறிது நேரந்தான் உன்னோடு இருக்க முடியும். நாள்தோறும் உன்னோடு இருக்கும்படி பல பல வேலைகளை இடுவாயாக!" என்று கேட்பது போலக் கேட்கிறான்.

அவன் எத்தகையவன்? மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்று சொல்வார்கள். இந்த மோகமோ தணியாத மோகம். எல்லா மோகங்களையும் விடப் பெரியது; அதி மோகம். முதிர்ந்த மோகம் உடையவனா ஆண்டவன் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அங்கே நுட்பமாக ஒன்றைச் சொல்கிறார். தணியாத அதி மோகம் போல இருந்தாலும் அது முருகனுடைய தயை என்று சொல்கிறார்.

"தணியா அதிமோக தயாபரனே."

'தயாபரனே' என்பதில் குறிப்பு இருக்கிறது. முன்னே எப்படிப் போர் செய்கின்ற வீரம் அருளாக மலர்ந்ததோ, அதுபோல வள்ளி நாயகியின்முன் காதலே அருளாக மலர்ந்தது.

'தணியாத அதிமோகமாகிய தயையை உடையவனே' என்று சொல்கிறார் அருணகிரியார்.

முருகன் வேங்கை மரமாதல்

இப்படி முருகப்பெருமான் வள்ளிநாயகியோடு பேசிக் கொண்டிருந்த சமயத்தில், வேடர்கள் பறை கொட்டிக்கொண்டு வந்தார்கள். நம்பி ராசனும் உடன் வந்தான். அப்போது முருகப் பெருமான் ஒரு வேங்கைமரமாக நின்றான். அது காட்டிலுள்ள வேங்கை மரம் போன்றதா? அந்த வேங்கை மரத்தின் அடிமரம் வேதங்கள். நடுவிலுள்ள பகுதிகள் ஆகமங்கள். பக்கத்தில் விட்டிருக்கிற கிளைகள் எல்லாம் பல வகையான கலைகள். இவற்றை எல்லாம் சேர்த்துக்கொண்டு ஒரு வேங்கை மரமாக வேலாயுதப் பெருமான் நின்றான்.

ஆங்கது காலை தன்னின் அடிமுதல் மறைக ளாக
ஓங்கிய நடுவண் எல்லாம் உயர்சிவ நூல்க ளாகப்
பாங்கமர் கவடு முற்றும் பல்கலை யாகத் தான்ஓர்
வேங்கையின் உருவ மாக வேற்படை வீரன் நின்றான்.

(வள்ளியம்மை. 75.)

[நடுவண் - நடுப்பகுதி. சிவநூல் - சிவாகமம். கவடு - கிளை.]

வேதமே முருகனுடைய உருவம். அது இப்போது நிழல் தருகின்ற வேங்கை மரமாக இருந்தது.

அதைக் கண்ட வேடர்கள் அதை வெட்டிவிட வேண்டுமென்று சொன்னார்கள். "இது புதிய மரம்; இது பேயோ, பிசாசோ?" என்று எண்ணி இருக்க வேண்டும். ஆனால் நம்பிராசன் பார்த்தான். "இங்கே வெயிலில் இவள் வாடிக் கொண்டிருக்கிறாள். இவளுக்கு நிழல் தர இது இருக்கிறது. இவளுக்குத் துணையாக இது இருக்கட்டும்" என்று அவன் சொன்னான். நம் நாட்டில் பச்சை மரங்களை வெட்டுவதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். அதனாலும் தன்னுடைய மகளுக்கு நலம் செய்யும் என்ற எண்ணத்தாலும் அப்படிச் சொன்னான். அப்படிச் சொல்லுகின்ற வார்த்தையில் ஒரு தொனி இருக்கிறது.

என்றிவை சொற்றபின், ஏந்திழை அஞ்சேல்;
நன்றுஇவண் வைகுதி; நாண்மலர் வேங்கை
இன்துணை யாய்இவண் எய்தியது என்னாக்
குன்றவன் வேடர் குழாத்தொடு சென்றான்.

(வள்ளியம்மை. 81.)

[ஏந்திழை - நகைகளை அணிந்திருக்கும் பெண்ணே. வைகுதி - தங்கியிருப்பாயாக.]

'இன் துணையாய் இவண் எய்தியது' என்று நம்பிராசன் சொல்கிறான். 'உனக்கு ஏற்ற பாதுகாப்பாக இது நிற்கிறது' என்று மேலாகப் பொருள் தோன்றும். ஆனால், 'இவளுக்கு இன்துணைவனாக இவன் வந்திருக்கிறான்' என்ற குறிப்பும் இதன் உள்ளே இருக்கிறது. பின்னாலே நடக்கிறவற்றை முன்னாலே பேசுகின்றவர்களுடைய வாக்கில் அவர்கள் அறியாமலேயே வைத்துச் சொல்வது ஒரு மரபு. அதைத் தொனி என்பார்கள். பெரிய காப்பியங்களில் அத்தகைய இடங்கள் பல உண்டு.

மீட்டும் முருகன் கோலம் மாறுதல்

நம்பிராசனும் வேடர்களும் தம்முடைய ஊருக்குச் சென்று விட்டார்கள். மறுபடியும் முருகப்பெருமான் தன்னுடைய பழைய வேடக் கோலத்தை எடுத்துக்கொண்டு நின்றான். மீண்டும் வள்ளிநாயகியைப் பார்த்துக் கெஞ்சத் தொடங்கினான். "நான் இங்கே மனிதனாக நிற்பதனால் என்னை ஏற்றுக்கொள்ளாமல் நீ இருக்கிறாய். நீ ஆடுகின்ற சுனையாக நான் இருந்திருந்தால் உன்னைத் தீண்டும் இன்பம் எனக்குக் கிடைத்திருக்கும். நீ அணிகின்ற சந்தனமாக இருந்தால் உன் திருமேனி முழுவதையும் அளைவேன். நீ தலையில் சூடுகின்ற மலர்களாகப் பிறந்திருந்தால் உன்னோடு எப்போதும் இருப்பேனே!" என்று சொல்லிச் சொல்லித் தன் வாட்டத்தை வெளிப்படுத்தினான். "இனி நான் என்ன செய்யட்டும்?" என்று கேட்டான் முருகன்.

> **கோடிவர் நெடுவரைக் குறவர் மாதுநீ**
> **ஆடிய சுனையதாய், அணியும் சாந்தமாய்ச்**
> **சூடிய மலர்களாய்த் தோயப் பெற்றிலேன்;**
> **வாடினன்; இனிச்செயும் வண்ணம் யாவதே?**
>
> (வள்ளியம்மை. 87.)

[கோடு இவர் - சிகரங்கள் பொருந்திய. சாந்தம் - சந்தனம்.]

வள்ளிநாயகி முன்னாலே வேடனைக் கண்டவுடன் கோபம் கொண்டாள். இப்போது கோபம் கொள்ளவில்லை. வேங்கையாக நின்று மறுபடியும் வேடனாக வந்தவுடன், 'இவன் சாதாரண வேடன் அல்லன்' என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அவள் உள்ளத்தில் அவளையறியாமலே கொஞ்சம் அன்பு முளைத்திருக்க வேண்டும். 'இவன் ஏனைய வேடர்களைப் போன்றவன் அல்லன்' என்ற

உணர்வும் ஏற்பட்டிருக்க வேண்டும். மரமாகி, மீண்டும் வேடனுனது கண்டு, இவனிடம் தெய்வத்தன்மை இருக்கிறதென்று எண்ணியிருக்க வேண்டும். இல்லையானுல் மறுபடியும் அவனை வைதிருப்பாள் அல்லவா ?

இருவரும் உரையாடல்

"நீ என்னை ஏற்றுக்கொண்டால் நல்ல தேவப் பெண்கள் எல்லாம் உனக்கு ஏவல் செய்வார்கள்" என்று ஆண்டவன் சொன்னுன். அவற்றை எல்லாம் கேட்ட வள்ளிநாயகியின் உள்ளத்திலே போராட்டம் நிகழ்ந்தது.

"சுவாமி, தேவப் பெண்கள் ஏவல் செய்வார்கள் என்று சொன்னீர்கள். அதனுல் நீங்கள் பெரிய அரசர், பெரிய நிலையில் உள்ளவர் என்று தெரிகிறது. நானே மிகவும் இழிந்த குலமாகிய வேட்டுவச் சாதியில் பிறந்தவள். உலகத்திற்கு எல்லாம் அருள்பாலிக்கின்ற முதல்வராகத் தோன்றுகிற நீங்கள் என்னை அணைப்பதற்கு இப்படி மிகவும் இழிந்த வார்த்தைகளைச் சொல்லுதல் உங்களுக்குப் பழி அல்லவா ? உங்கள் நிலைக்கு இது ஏற்குமா ?" என்று சொன்னுள்.

இழிகுலம் ஆகிய எயினர் பாவைநான் ;
முழுதுல கருள்புரி முதல்வர் நீர் ; எனைத்
தழுவுதல் உன்னியே தாழ்ச்சி செப்புதல்
பழியது வேயலால் பான்மைத் தாகுமோ ?

(வள்ளியம்மை. 90.)

[எயினர் பாவை - வேடர் பெண். தாழ்ச்சி - தாழ்வான வார்த்தையை.]

இங்கே வேடர் குலத்தை இழிகுலம் என்கிறுள். அதற்கு விளக்கம் போல அருணகிரியார்,

"கொலையேபுரி வேடர் குலப்பிடிதோய்
மலையே"

என்பார். வேடர்கள் வீட்டில் ஏதேனும் சிறப்பு நிகழ்ச்சி நடந்தால் ஆயிரம் மானை அடித்துக் கொன்று விருந்து வைப்பார்கள். அவர்கள் வீரம் காட்ட வேண்டுமானுல் அப்போதும் மிருகங்களைக் கொல்வார்கள். விளையாட்டிலும் வினையாட்டிலும் அவர்கள் செய்வது கொலைதான். ஆகவே, 'கொலையே புரி வேடர்' என்று சொன்னுர்.

கொலே செய்வது எல்லாவற்றிலும் இழிந்தது ஆகையால் 'இழிகுலம்' என்று வள்ளிநாயகி சொன்னுள்.

முருகன் கிழக்கோலம் பூணுதல்

இப்படி மறுபடியும் இருவரும் உரையாடிக்கொண்டிருந்த சமயத்தில் மீண்டும் வேடர்குலத் தலைவன் தன் படையுடன் அங்கே வந்தான். வேடனுக வந்த முருகனிடம் இயல்பாக வள்ளி கோபம் கொண்டிருந்தால், தன் தந்தை வருவதைக் கண்டவுடன் அவளுக்கு மகிழ்ச்சி உண்டாகியிருக்க வேண்டும் 'நல்ல வேளையாக நமக்குப் பாதுகாப்பு வந்துவிட்டது. அவர்களிடம் சொல்லி இவனைத் தண்டிக்க வேண்டும்' என்ற எண்ணம் தோன்றும் ஆனல் இப்பொழுதோ அவர்கள் வந்ததைக் கண்டு அவள் நெஞ்சம் நடுங்கியது.

என்றிவை பலப்பலவும் ஏந்திழை இயம்பா
நின்றபொழு தத்தில்அவள் நெஞ்சம்வெருக் கொள்ள
வென்றிகெழு தொண்டகம் வியன்துடி இயம்பக்
குன்றிறைவன் வேட்டுவர் குழாத்தினெடும் வந்தான்.

(வள்ளியம்மை. 92.)

[வெருக்கொள - அச்சமடைய. தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை. துடி - உடுக்கை. குன்றிறைவன் - நம்பிராசன்.]

காப்பியத்தில் பாத்திரங்களை வருணிக்கிறவர்கள் அவர்கள் மனத்திலே உண்டாகும் மாறுதல்களைக் குறிப்பாகப் புலப்படும்படி சொல்வார்கள். மனம் மாறினதால் இப்படிச் செய்தார்கள் என்று வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள். ஆனல், நுட்பமாக அமையும் செயல்களும், கூற்றுக்களும் பாத்திரங்களின் மனமாற்றத்தைத் தெரிவிக்கும்.

வள்ளி நாயகியின் உள்ளம் மெல்ல மெல்ல முருகனிடத்தில் ஈடுபட்டதை அவளுடைய செயல்களின் மூலமாகக் கச்சியப்பர் காட்டுகிருர்.

வேடர்கள் வருவதைக் கண்டவுடன் வள்ளிநாயகிக்கு நடுக்கம் உண்டாயிற்று. என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே முருகனைப் பார்த்து, " இதோ வருகிற வேடர்கள் மிகவும் பொல்லாதவர்கள்; கொடுமையானவர்கள். நீங்கள் இங்கே இருப்பதைப்

பார்த்தால் உங்களுக்குத் தீங்கு இழைக்கக் கூடும். ஆகையால் தயை செய்து உடனே நீங்கள் உயிர்பிழைக்கும்படியாக ஓடுங்கள்" என்று தெரிவித்தாள்.

அவனிடத்தில் கோபம் இருக்குமானல் வருகிறவர்களைப் பார்த்து, "சீக்கிரம் வாருங்கள்" என்று சொல்வாள். அப்படி இல்லாமல் வருகிறவர்களைக் கண்டு நடுங்கி, "நீங்கள் சீக்கிரம் ஓடுங்கள்" என்று சொன்னாள். இந்தப் பாட்டில் அவள் மனத்தில் தோன்றுகிற மாற்றம் குறிப்பாகப் புலனாகிறது.

வந்தபடி கண்டுமட மான்நடு நடுங்கிச்
சிந்தைவெரு விக்கடவுள் செய்யமுகம் நோக்கி
வெந்திறல்கொள் வேடுவர்கள் வெய்யர்;இவண் நில்லாது
உய்ந்திட நினைந்துகடிது ஓடும்இனி என்றாள்.

(வள்ளியம்மை. 93.)

[வெருவி - பயந்து. வெய்யர் - கொடியவர்.]

அவளுடைய பேச்சினூடே இருக்கிற மாற்றத்தை இறைவன் தெரிந்துகொண்டான். "நீ ஓடு" என்று அவள் சொன்ன வார்த்தையில் அவள் கோபம் தெரியவில்லை. 'நம்மிடத்திலுள்ள அன்பினால் இப்படிச் சொல்கிறாள். நமக்குத் தீங்கு நேரக்கூடாது என்ற எண்ணம் இருக்கிறது' என்று உணர்ந்து கொண்டான். ஆகவே அவனுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று.

அப்போது ஒரு கிழவன் வேடத்தை ஏற்றுக்கொண்டு அங்கு வந்திருக்கிற வேடர்களிடையே போனான்.

ஓடுமின் என்றவள் உரைத்தமொழி கேளா
நீடுமகிழ் வெய்திஅவண் நின்றகும ரேசன்
நாடுபுகழ் சைவநெறி நற்றவ விருத்த
வேடமது கொண்டுவரும் வேடர்எதிர் சென்றான்.

(வள்ளியம்மை. 94.)

[விருத்த வேடம் - கிழக் கோலம்.]

முதியவன் கூறுதல்

நம்பி ராசன் அவனைக் கண்டு, யார் என்று கேட்டான். அப்போது கிழக்கோலத்திலுள்ள முருகப் பெருமான், "வீரம் மிக்க அரசனே, நெடுங்காலமாக எனக்குக் கிழத்தனம் இருக்கிறது. மனத்தில் கொஞ்சம் மயக்கம் இருக்கிறது. இந்த இரண்டும்

நீங்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. இங்கே ஏதோ குமரி தீர்த்தம் இருக்கிறதாம். அதில் ஆடினால் என்னுடைய மூப்பும் மயக்கமும் நீங்கும் என்று சொன்னார்கள். ஆகையால் நான் வந்தேன்'' என்று சொல்கிறான்.

ஆண்தொழிலின் மேதகைய அண்ணல்இது கேண்மோ:
நீண்டதனி மூப்பகல நெஞ்சம்மருள் நீங்க
ஈண்டுநும் வரைக்குமரி எய்திஇனி தாட
வேண்டிவரு கின்றனன், மெலிந்துகடிது என்றான்.

(வள்ளியம்மை. 97.)

[ஆண் தொழிலில் மேதகைய - ஆண்மைச் செயல்களில் மேம்பட்ட. மருள் - மயக்கம். ஆட - நீராட.]

இந்தப் பாட்டில் குறிப்பாக ஒரு பொருள் தொனிக்கிறது. 'குமரி தீர்த்தத்தில் ஆட வருகிறேன்' என்பது மேலாகத் தோன்றும் பொருள். 'உன்னுடைய பெண்ணாகிய குமரியை எய்தி இனிது இன்புறுவதற்கு வருகிறேன்' என்ற பொருளும் தொனிக்கிறது. ஆகவே, முருகன் சொன்ன வார்த்தையில் பொய் ஒன்றும் இல்லை. மேலாகப் பார்க்கிறவர்களுக்கு, தீர்த்தத்தில் ஆட வந்தேன் என்று சொன்னதாகத் தோன்றும். ஆனால் ஆழ்ந்து பார்க்கிறவர்களுக்கு, முருகப் பெருமானது திருவுள்ளம் நன்கு தெரியும்.

நம்பிராசன் அகலுதல்

அந்த வார்த்தையைக் கேட்டான் நம்பி ராசன்; "உங்கள் விருப்பப்படியே நாள்தோறும் அந்தத் தீர்த்தத்தில் ஆடுங்கள். எங்களுடைய பெண் தனியாக இருக்கிறாள். அவளுக்கு நீங்கள் தனித் துணையாகி இங்கேயே இருங்கள்'' என்று அவன் சொல்ல, "நல்லது, அழகு!'' என்று முருகப் பெருமான் பதில் அளித்தான். முருகப் பெருமான் உள்ளக் கிடக்கையை அறியாமலேயே, "நீங்கள் இங்கே என்னுடைய பெண்ணுக்குத் துணையாக இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகள் நம்பி ராசனுடைய வாயிலிருந்து வந்தன.

நற்றவன் மொழியைக் கேளா,
நன்றுநீர் நவின்ற தீர்த்தம்
நிற்றலும் ஆடி எங்கள்
நேரிழை தமியள் ஆகி

உற்றனள், அவளுக்கு எந்தை
ஒருதனித் துணைய தாகி
மற்றிவண் இருத்திர் என்ன,
அழகிதாம் மன்ன என்றான்.

(வள்ளியம்மை, 98.)

[நிற்றலும் : நித்தலும் என்பது எதுகை நோக்கி விகாரமாயிற்று. மற்று: அசை.]

தன்னுடைய மகளுக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது என்ற மகிழ்ச்சியோடு நம்பி ராசன் மீண்டு சென்றான்.

முதியவன் செயல்

வேடர்கள் போன பிறகு முதியவன் வள்ளிநாயகியைப் பார்த்து, "எனக்கு மிகவும் பசியாய் இருக்கிறது; என்ன செய்வேன்!" என்று சொன்னான்.

அப்போது வள்ளிநாயகி தேனும், பழமும், தினைமாவும் முருகனுடைய கையில் கொடுத்தாள். அவற்றை ஏற்றுக்கொண்டு உண்ட முருகன், "மிகவும் வெப்பமாய் இருக்கிறது; தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும்" என்று கேட்டான். வள்ளிநாயகி உணவுப் பொருளைக் கையில் கொடுத்தபோது அவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். அதற்குமேல் அவன், "எனக்கு விடாய் உண்டாயிற்று" என்று சொல்லவே, வள்ளிநாயகி, "சுவாமி, ஏழு மலைகளுக்கு அப்பாலே ஒரு சுனை இருக்கிறது. அங்கே சென்று நீர் உண்டு வாருங்கள்" என்றாள்.

கிழவனாக வந்த முருகன், "பெண்ணே, என்னைப் பார்த்தால் ஏழு மலை நடந்து செல்லக் கூடியவனாகத் தெரிகிறதா? எனக்கு அந்தத் தீர்த்தம் எங்கே இருக்கிறது என்றே தெரியாதே! நீயும் துணையாக வந்தால் நன்றாக இருக்கும்" என்றான். தன்னை அறியாமலே முதியவனிடத்தில் அன்பு வள்ளிநாயகியின் அடிமனத்தில் தோன்றியிருக்கிறது. ஆகவே அவனுடன் சென்றாள். சுனையைக் காட்டினாள். அங்கே முருகப் பெருமான் நீரைக் குடித்தான். அதற்கு மேல் அவன் பேச ஆரம்பித்தான்.

"பெண்ணே, நீ எனக்குத் துன்பத்தைத் தருகிற பசியைத் தீர்த்தாய். அதற்குமேல் எனக்கு உண்டான தாகத்தையும் தீர்த்தாய்.

இந்தப் பசியும் தாகமும் போனாலும், இன்னும் என்னுடைய தளர்ச்சி போகவில்லையே! அந்தத் தளர்ச்சி என்ன என்று கேட்கிறாயா? என்னுடைய உள்ளத்தில் மோகம் எழும்பியிருக்கிறது. அதை நீ தணித்துவிட்டால் எனக்குள்ள குறை போய்விடும்" என்றான்.

ஆகத்தை வருத்து கின்ற அரும்பசி
அவித்தாய் ; தெண்ணீர்த்
தாகத்தை அவித்தாய் ; இன்னும்
தவிர்ந்தில தளர்ச்சி மன்னே ;
மேகத்தை அனைய கூந்தல்
மெல்லியல், வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தி யாயின்
முடிந்ததுஎன் குறையது என்றான்.

(வள்ளியம்மை. 104.)

[ஆகத்தை - உடம்பை. அவித்தாய் - நீக்கினாய்.]

மோகம் என்னும் வெப்பத்தினால் வருந்திய முருகப் பெருமான் அந்த வெப்பம் தீர்வதற்கு மேகத்தின் நிழலைக் கேட்பவனைப்போல, "மேகத்தை அனைய கூந்தல்" என்று சொல்கிறான்.

"கொய்தாம வாசக் குழல்நிழற்கீழ் ஆறேனோ
வெய்தாம்அக் காம விடாய்"

என்று நளவெண்பாவில் வருகிறது.

வள்ளி சினந்து கூறுதல்

அந்த வார்த்தையைக் கேட்டபோது வள்ளிக்குக் கோபம் மிகுதியாயிற்று. "உம்மைப் பார்த்தால் கிழவரைப் போல இருக்கிறீர். உம்முடைய கேசம் எல்லாம் நரைத்துப் பூத்திருக்கிறது. ஆனால் உமக்கு நல்லறிவு சற்றும் இல்லையே! முதுமையினால் வரவேண்டிய அறிவு உமக்கு உண்டாகவில்லை. இழிந்த குலத்தில் பிறந்த என்னை விரும்பிப் பித்துப் பிடித்தவரைப்போலப் பேசுகின்றீர். வேடர் குலத்திற்குக் கொடும் பழியை உண்டாக்கி விட்டீரே!" என்றாள்.

நத்துப் புரைமுடியீர், நல்லறிவு சற்றும்இலீர்!
எத்துக்கு மூத்தீர்? இழிகுலத்தேன் தன்னைவெஃகிப்
பித்துக்கொண் டார்போல், பிதற்றுவீர் ; இவ்வேடர்
கொத்துக்கெ லாம்ஓர் கொடும்பழியைச் செய்தீரே.

(வள்ளியம்மை. 108.)

[நத்துப்புரை முடியீர் - சங்கைப்போல வெளுத்த கேசத்தை உடையவரே. எத்துக்கு - எதற்கு. வெஃகி - விரும்பி.]

"இனி நான் என்னுடைய வேலையைப் பார்க்கப் போகிறேன்; தினை காவல் செய்யப் போகிறேன்" என்று வள்ளிநாயகி புறப்பட்டு விட்டாள்.

அவள் இவ்வாறு கூறக் கூற ஆண்டவனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுதியாயிற்று. தான் செய்யும் சோதனையில் அவள் வென்றுகொண்டே வருகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

வள்ளி நாயகியின் உள்ளம்

உள்ளத்தில் முருகப் பெருமானிடம் அன்பு உடையவள் வள்ளி; அயலாரைக் கண்கொண்டும் பாராதவள். என்றாலும், வேங்கையாகவும், வேடனாகவும், கிழவனாகவும் வந்த பெருமானை நோக்கி ஏதோ ஐயம் எழுந்திருக்க வேண்டும். ஆகையால் அந்தப் பெருமானிடத்தில் அவள் உள்ளம் ஒன்றிப் பற்றிக்கொண்டது. 'யாரேனும் தெய்வந்தான் இப்படி வந்திருக்க முடியும். மனிதனாக இருந்தால் இப்படி வர முடியாது' என்று, அறிவுடைய பெருமாட்டியாகையால் யோசித்திருப்பாள். தன்னுடைய குலத்திற்குக் காவலாகிய முருகப் பெருமானே இப்படி வந்திருப்பானோ என்ற ஐயமும் அவளுடைய உள்ளத்தில் தோன்றியிருக்கும். என்றாலும் நிச்சயமாகவில்லை. ஆகவேதான் இவ்வாறு நடந்து கொண்டாள்.

விநாயகர் வருதல்

இனிமேல் வள்ளிநாயகியைச் சோதிக்கக் கூடாது என்று முருகப் பெருமான் எண்ணினான். தனக்கும் அவளுக்கும் இடையிலுள்ள தடைகளை நீக்க வேண்டும். அந்தத் தடையை நீக்குவதற்குரியவன் விநாயகப் பெருமான். அவன்தான் விக்கினங்களைப் போக்கும் விக்கினேசுவரன். ஒரு காரியத்தைச் செய்யப் போகிறவன் பெரியவர்களை முன்னிட்டுக் கொண்டு போவதுபோல, தனக்கு மூத்தவனாகிய விநாயகப் பெருமானை முன்னிட்டு வள்ளிநாயகியோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணினான் முருகன்.

திருமகளைப் போன்ற வள்ளி நாயகி வேகமாக முன்னால் போவதை முருகன் பார்த்தான். இனிமேல் என்ன செய்வது என்று

எண்ணி, தன் அண்ணனை அழைத்தால்தான் காரியம் அநுகூலம் ஆகும் என்று எண்ணினான். "என்னுடைய அண்ணா, நீ இங்கே வரவேண்டும்" என்று நினைத்தான்.

பொன்னே அனையாள்முன் போகும் திறன்நோக்கி
என்னே இனிச்செய்வது என்றுஇரங்கி எம்பெருமான்
தன்நேர் இலாதமரும் தந்திமுகத்து எந்தைதனை,
முன்னே வருவாய் முதல்வா எனநினைந்தான்.

(வள்ளியம்மை. 110.)

[பொன் - திருமகள். தந்தி முகத்து எந்தை - யானைமுகமுடைய விநாயகர்.]

கல்வி முயற்சிக்கும் விவாகத்துக்கும் வேறு காரியங்கள் முடிவதற்கும் விநாயகப் பெருமான் அருள் முக்கியம். இந்த நாட்டில் எதைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்குவது வழக்கமாகிவிட்டது. அந்த வழக்கத்திற்கு மாறாகத் தெய்வம் கூடச் செய்யக் கூடாது. சிவபெருமான் முப்புரம் எரிக்கப் புறப்பட்ட போது விநாயக பூஜை பண்ணவில்லை. 'எந்தக் காரியம் செய்தாலும் உன்னைப் பூஜை செய்தால், அந்தக் காரியத்தை வெற்றி அடையும்படியாகச் செய்க. இல்லாவிட்டால் தடை செய்ய வேண்டும்' என்று சிவபெருமானே தன் குமாரனுக்கு வரம் கொடுத்திருக்கிறான். அந்த வரத்தை அவனே மீறுவதா? சட்டத்தைப் போட்டவனே அதை மீறுவதைவிட முறைகேடான செயல் வேறு இல்லை. சிவபெருமான் இந்த நியதியை உலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று எண்ணினான். திரிபுர சங்காரம் செய்யப் போகும்போது கணபதியை நினைக்காமல் புறப்பட்டான். போகிற வழியில் அச்சு முறிந்து விட்டது. உடனே விநாயக பூஜை பண்ணினான். அப்பால் சென்று திரிபுர சங்காரம் பண்ணினான் என்று கதை வருகிறது.

முருகப் பெருமானும் தன்னுடைய காரியம் தடையின்றி நிறைவேற வேண்டுமென்று எண்ணினான். வள்ளி நாயகியின் திருவுள்ளத்தைக் கவர்வதற்கு, தன்னுடைய தமையனாரைத் துணைக்கு அழைத்தான். விநாயகப் பெருமானும் முருகனுடைய விருப்பத்தின்படி யானை வடிவெடுத்து வள்ளிக்கு எதிரில் வந்தார்.

முருகனைப் பிரிந்து, தினைப்புனத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வள்ளி தன் எதிரே வரும் யானையைக் கண்டாள். அவளுக்கு

உள்ளத்தில் அச்சம் உண்டாயிற்று. இதுவரைக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நினைத்தாள். நிச்சயமாக இவன் முருகனாகத்தான் இருக்க முடியும் என்ற உறுதியான புத்தி வந்தது. அந்த யானையோ காட்டில் இல்லாத புதிய யானையாகத் தோன்றியது.

வள்ளி முருகனைத் தழுவுதல்

'உயிருக்கு மோசம் வந்துவிடுமோ?' என்ற அச்சம் அவளுக்கு உண்டாயிற்று. உடனே முருகப் பெருமானிடம் சென்று, "என்னை இந்த யானையிடமிருந்து காத்தருள வேண்டும். நீர் சொன்னபடி செய்வேன்" என்று ஒரு பக்கத்தில் தழுவிக் கொண்டாள்.

அவ்வேலை யில்வள்ளி, அச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடம் கொண்டுநின்ற புங்கவன்றன் பால்அணுகி
இவ்வேழம் காத்தருள்க, எந்தைநீர் சொற்றபடி
செய்வேன், எனஒருபால், சேர்ந்துதழீஇக் கொண்டனளே.

(வள்ளியம்மை. 112.)

[அவ்வேலையில் - அந்த வேளையில். புங்கவன் - தேவன்; முருகன்.]

எந்தை என்பதற்கு என் தந்தை என்று பொருள். "உங்களை என் தந்தையாகப் பாவித்துத் தழுவிக் கொள்கிறேன்" என்ற கருத்து அதனால் தெரியவருகிறது.

முருகப் பெருமானை ஒரு பக்கம் வள்ளி வந்து முட்டினாள். கணபதி மற்றொரு பக்கம் முட்டினான். வள்ளிநாயகியினுடைய பயம் இப்போது போய்விட்டது. கணபதியைப் பார்த்து முருகன் வணங்கி, விடைகொடுக்க அவர் மறைந்துவிட்டார்.

பயபக்தி

இங்கே ஒரு கருத்தை நாம் நினைக்க வேண்டும். வள்ளி நாயகிக்கு முருகப் பெருமானிடத்தில் முதிர்ந்த அன்பு இருந்தது. ஆனாலும் தன் முன்னால் வந்த வேடன் அவன்தான் என்று தெரிந்து கொள்ளவில்லை. அவன் வேங்கை மரமானபோது அவன் சாமான்ய வேடன் அல்ல என்று தோன்றியிருக்கும். மீண்டும் கிழ உருவத்தில் வந்தபோதும் அவள் உள்ளத்தில் ஐயம் தோன்றி முகிழ்த்திருக்கும். யாரோ தெய்வந்தான் இப்படி வந்து விளையாடல் புரிகிறது என்று

தெரிந்து கொண்டிருப்பாள். அவளது அடிமனத்தில் மெல்ல முருகப் பெருமான்தான் அவன் என்ற எண்ணமும், அதனல் அவனிடத்து அன்பும் முதிர்ந்து வந்திருக்கும். யானை வந்தபோது, உயிருக்கே அச்சம் என்ற நிலை வந்தபோது, எல்லா ஐயங்களும் போய் ஆண்டவனைக் கட்டிக்கொண்டாள்.

நமக்குப் பொருள் வேண்டுமென்ற எண்ணத்தினல் கடவுளிடம் அன்பு செய்வது சிறந்த பக்தி ஆகாது. பொருள் வந்தால் மறுபடியும் இறைவன் நினைவு மறைந்துவிடும். இந்திராதி தேவர்களே இறைவனை வழிபட்டுப் போகங்களைப் பெற்ற பிறகு இறைவனை மறந்துவிட்டதாக நாம் படிக்கிரேம். ஆனல் உண்மையாக இறைவனிடத்தில் ஈடுபடவேண்டுமென்ருல் நமக்கு ஒரு பயம் உண்டாக வேண்டும். மரண பயம் உண்டானல் ஆண்டவனிடத்தில் முறுகிய பக்தி உண்டாகும். அதைத்தான் ' பயபக்தி ' என்று சொல்வார்கள். பிற பொருள்கள் வேண்டுமென்று இறைவனை அணுகும்போது அந்தப் பக்தி வியாபாரம் போல ஆகும். 'ஆவிக்கு மோசம் வரும்' என்ற உணர்வு எப்போது ஒருவனுக்கு வருகிறதோ, அப்போது தான் இறைவனிடத்தில் உண்மையான பக்தி உண்டாகும். இதை அருணகிரிநாதர் சொல்கிருர்.

" ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்; வினை தீர்த்தருளாய் ;
வாவித் தடவயல் சூழும் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே, அமரர் சிகாமணியே."

(கந்தர் அலங்காரம்)

வள்ளிநாயகிக்கு இதுவரைக்கும் அவன் முருகனக இருப்பானே என்ற ஐயம் இருந்தது. யானையைக் கண்டபோது உயிர்போய் விடும் என்ற அச்சம் தோன்றியவுடன் ஐயத்தை விட்டுவிட்டு அவனை வந்து கட்டிக்கொண்டாள். அன்பு பரிபூரணம் ஆயிற்று. அந்த அன்பு நிறைவேறியதற்குக் காரணம், மரணம் வந்துவிடுமோ, உயிர்போய் விடுமோ என்ற ஐயம். அப்போது முருகப் பெருமான் அருள் மலர்ந்தது.

முருகன் தன் உருவம் காட்டுதல்

முருகன் தன்னுடைய திருவுருவத்தை அப்போது காட்டினான்.

மூந்நான்கு தோளும் முகங்கள்ஓர் மூவிரண்டும்
கொன்னார்வை வேலும், குலிசமும்ஏ னைப்படையும்,
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள்கண் காண, வெளிநின் றனன்விறலோன்.

(வள்ளியம்மை. 116.)

[கொன் ஆர் வை வேலும் - பெருமையும் கூர்மையும் உடைய வேலாயுதமும். குலிசம் - வச்சிராயுதம். ஏனைப்படையும் - மற்றப் படைக்கலன்களும்.]

பன்னிரண்டு திருத்தோள்களும், ஆறு திருமுகங்களும், கையில் வேலாயுதமும், வச்சிராயுதமும், மற்ற ஆயுதங்களும், மயில் வாகனமுமாக வள்ளிநாயகியின் கண் காண, வெளிப்படையாகத் தன்னுடைய திருவுருவத்தைக் காட்டி நின்றான் முருகன்.

மூந்நான்கு தோளும்

என இந்தப் பாட்டில் எடுத்தவுடன் பன்னிரண்டு தோள்களைச் சொல்கிறார். தோள் வீரத்தின் இருப்பிடம்; புயவலி என்றும் புஜபலபராக்கிரமம் என்றும் சொல்வார்கள். வீரத்தைக் கண்டால் பெண்களுக்குக் காதல் பிறக்கும். பெண்களுக்கு ஆண்களின் தோளிலே ஆசை.

"செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்"

என்பது **நள வெண்பா**. ஆகவே, முகங்களை முன்னால் சொல்லாமல் தோள்களைச் சொன்னார். வீரத்தைத் தோள்கள் காட்டின. கையிலுள்ள படைகள் காட்டின. ஆர்வத்தோடு தழுவிக் கொண்ட வள்ளி நாயகிக்கு, வீரத்தோடு இருந்த முருகன் பற்றுக்கோடாக நின்றான்.

வள்ளி நாயகி இரங்கல்

இப்போது வள்ளிநாயகிக்கு, வந்தவன் முருகன் என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாயிற்று. 'இதுவரைக்கும் இந்தப் பெருமானை அலட்சியமாகப் பேசிவிட்டோமே! அறிந்து கொள்ளாமல் சிந்தனையற்று இருந்துவிட்டோமே!' என்று உள்ளம் வருந்தியது.

"மின்னலைப்போல ஒளிவிடுகின்ற வேற்படையைக் கையிலுள்ள முருகப் பெருமானே, இந்தத் திருவுருவத்தை முன்னாலே காட்டி

என்னை ஆட்கொள்ளாமல் இதுவரைக்கும் காலதாமதப்படுத்தி விட்டீர்களே! நான் இந்த நுட்பத்தை அறியாமல் எத்தனையோ தப்புச் செய்வதற்கு ஆளாக்கிவிட்டீர்களே! நான் செய்த அபசாரங்களை எல்லாம் பாராமல், அடியேனை ஆட்கொள்ள வேண்டும்" என்று வணங்கினாள்.

மின்னே அனையசுடர் வேலவரே, இவ்வுருவம்
முன்னேநீர் காட்டி, முயங்காமல், இத்துணையும்
கொன்னே கழித்தீர்; கொடியேன்செய் குற்றமெலாம்
இன்னே தணித்தே எனையாண்டு கொள்ளும்என்றாள்.

(வள்ளியம்மை. 118.)

[முயங்காமல் - தழுவாமல். கொன்னே - வீணாக. இன்னே - இப்பொழுதே.]

'எம்பெருமானே, உம்முடைய முழுவடிவத்தைக் காட்டா விட்டாலும் உம்முடைய வேலாயுதத்தைக் காட்டியிருந்தால் அதைக் கண்டு நான் இனம் கண்டுகொண்டிருப்பேனே!' என்று சொல்வாளைப்போல,

மின்னே அனைய சுடர் வேலவரே

என்று சொன்னாள்.

பின்பு வள்ளிநாயகி தன்னுடைய பரனை அடைந்தாள். முருகப் பெருமானும் அங்கேயிருந்து மறைந்தான்.

காதல் நிகழ்ச்சிகள்

அதன்பிறகு முருகப் பெருமான் அடிக்கடி தினைப்புனத்திற்கு வந்து வள்ளிநாயகியோடு அளவளாவிச் செல்வது வழக்கமாயிற்று. இதைக் களவுக் காதல் என்று சொல்வார்கள். அடுப்பாரும், கொடுப்பாருமின்றி அழகில் சிறந்த பெண்மணியும், வீரத்தில் சிறந்த ஆண்மகனும் தாமே சந்தித்துக் காதல் கொண்டு இன்புறுவது களவுக் காதல் ஆகும். தமிழில் இது மிகச் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் களவுக் காதலைப்பற்றி ஒரு தனி இலக்கணத்தையே ஆலவாய் இறையனார் செய்திருக்கிறார். அதற்கு **இறையனார் அகப்பொருள்** என்றும், **களவியல்** என்றும் பெயர். இதை முன்பும் பார்த்தோம். தகப்பனார் செய்த இலக்கணத்திற்கு, அவருடைய மகனாகிய முருகப் பெருமானே இலக்கியமாக இருக்கிறான். வள்ளிநாயகியைக் களவுக் காதலில் ஏற்றுக்கொண்டான் முருகன்,

தேவயானையைக் கற்புக் காதல் மூலமாக ஏற்றுக்கொண்டான். அதனால்தான் தேவயானையை,

"மறுவில் கற்பின் வாள் நுதல்"

என்று அவளைத் **திருமுருகாற்றுப்படை**யில் நக்கீரர் குறிப்பிடு கிறார். மறுவில் வாள் நுதல், கற்பின் வாள் நுதல் என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். அவள் கற்புமணப் பிராட்டி.

இந்த இரண்டு வகையான காதலைப்பற்றியும் **பரிபாட**லில் ஒரு பாட்டு வருகிறது. திருப்பரங்குன்றத்தில் தேவயானையின் கட்சியைச் சேர்ந்த பெண்களும் மற்றவர்களும், வள்ளிநாயகியைச் சேர்ந்த பெண்களும் மற்றவர்களும் காதலிலே மோதுகிறார்கள். மாலையோடு மாலையை மோதி அடிக்கிறார்கள். மயிலோடு மயிலை மோத விடு கிறார்கள். தேவயானையின் கட்சியைச் சேர்ந்த மகளிரைப் பார்த்து, வள்ளியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்: "உங்களுக்கு வேதம் தெரியும். தமிழிலுள்ள களவு மணம் தெரியுமா? களவுக் காதல் எல்லாவற்றையும்விடச் சிறந்தது; அந்த முறைப்படி முருகன் எங்கள் வள்ளியைத் திருமணம் செய்து கொண்டான்" என்று சொல் கிறார்கள்.

அத்தகைய களவுக் காதலை முருகப் பெருமான் வள்ளியிடம் நிகழ்த்தினான். கச்சியப்ப முனிவர் என்னும் புலவர் **திருத்தணிகைப் புராண**த்தைப் பாடியிருக்கிறார். அங்கே வள்ளிநாயகிக்கும், குமார நாயகனுக்கும் இடையில் நிகழ்ந்த காதலை வருணித்து அகத்துறைகள் எல்லாவற்றையும் வைத்துப் பாடியிருக்கிறார்.

வள்ளிநாயகியை முருகன் அழைத்துச் செல்லுதல்

சில காலம் இப்படிக் களவுக் காதல் நடந்தது. வேங்கை மரம் பூத்தது. அப்போது தினைக்கதிர் முற்றிவிட்டது. அதற்குமேல் அதை அரியத்தான் வேண்டும். காவல் அவசியம் இல்லை. ஆகவே, குறவாணர்கள் வள்ளிநாயகியை வீட்டில் தங்கும்படி செய்து விட்டார்கள். அதை இற்செறித்தல் என்று சொல்வார்கள். வழக்கம் போலத் தினைப்புனம் வந்த முருகன் அங்கே வள்ளி இல்லாததைக் கண்டான்,

அவளைத் தேடி இரவில் வள்ளியின் வீட்டிற்கே சென்ருன். வள்ளிநாயகியின் தோழி வள்ளியை அழைத்துக்கொண்டுவந்து அவனைச் சந்திக்கவிட்டாள். அதற்கு இரவுக் குறி என்று பெயர். தினைப்புனத்தில் நடக்கும் களவுக் காதலைப் பகற்குறி என்று சொல்வார்கள். இரவுக் குறியிலும் வள்ளிநாயகி முருகப் பெருமானைச் சந்தித்துக் காதல் செய்தாள். முருகப் பெருமான் வராத காலம் மிகுதியாக இருந்ததால் வள்ளிநாயகிக்குச் சோர்வு உண்டாயிற்று. வீட்டில் உள்ளவர்கள் அதைக் கண்டு தெய்வம் தீண்டிவிட்டது என்று பூசாரியை அழைத்துப் பூஜை போடச் சொன்னுர்கள். அப்போது தோழி குறிப்பாக, வள்ளிநாயகி ஒரு காதலனைப் பெற்றிருக்கிருள் என்று சொல்ல, அதனை வீட்டில் உள்ள தாய்மார்கள் கவனிக்க வில்லை. தோழி உடனே முருகனிடம், வள்ளியைத் திருமணம் செய்து கொடுக்கும் எண்ணம் குறவானருக்கு இல்லை என்பதைப் புலப்படுத்தினுள். பிறகு இரவோடு இரவாக வள்ளிநாயகியை முருகனேடு அனுப்பிவிட்டாள். அப்படி அனுப்புவதை உடன் போக்கு என்று சொல்வார்கள்.

முருகப் பெருமான் வள்ளிநாயகியோடு அந்த இருளில் சென்று, அந்த ஊரை விட்டுவிட்டு, பசுமரம் நிறைந்த சோலையை அடைந்தான்.

விடைபெற்றே இகுளை ஏக,
வேலுடைக் கடவுள் அன்ன
நடைபெற்ற மடந்தை யோடு
நள்ளிரு ளிடையே சென்று
கடைபெற்ற சீறூர் நீங்கிக்
காப்பெலாம் கடந்து காமன்
படைபெற்றுக் குலவும் ஆங்கோர்
பசுமரக் காவுட் சேர்ந்தான்.

(வள்ளியம்மை. 169.)

[இகுளை - தோழி. மடந்தை - வள்ளி நாயகி. கடைபெற்ற - வாயிலை உடைய. சீறூர் - மேற்பாடி. காமன் படை - மலர்கள். கா - சோலை.]

வேடர்கள் படையுடன் வந்து துஞ்சுதல்

மறுநாள் காலை மகளைக் காணுத தாயும் மற்றவர்களும் அவளைத் தேடினுர்கள். வேடர்கள் வள்ளியைத் தேடிப் போனுர்கள். பல இடங்களிலும் தேடிக் காணுமல் பிறகு முருகனேடு வள்ளி இருந்த

சோலைக்குள் அவர்கள் நுழைந்தபோது, அவர்களைக் கண்டு வள்ளி அச்சம் அடைந்தாள். அதைக் கண்ட முருகப் பெருமான், "வேலாயுதம் என் கையில் இருக்கிறது ; நீ அஞ்சாதே" என்று சொன்னான். அப்போது வேடர்கள் வந்து எதிர்க்கவே. வள்ளிநாயகி, "இவர்களை உங்களுடைய வேலால் அழித்துவிட வேண்டும்" என்று வேண்டினாள். முருகப் பெருமான் தன் கையில் இருந்த சேவல் கொடியைப் பார்த்தான். அது நிமிர்ந்து எழுந்து கூவியது. அந்தக் குரலைக் கேட்ட வேடர்கள் யாவரும் அப்படியே இறந்து கீழே விழுந்து விட்டார்கள்.

என்றிவை குமரி செப்ப எம்பிரான்
அருளால், பாங்கர்
நின்றதோர் கொடிமாண் சேவல்
நிமிர்ந்தெழுந்து, ஆர்ப்புக் கொள்ளக்
குன்றவர் முதல்வன் தானும்
குமரரும் தமரும் யாரும்
பொன்றின ராகி மாண்டு
பொள்ளெனப் புவியில் வீழ்ந்தார்.

(வள்ளியம்மை. 184.)

[குமரி - வள்ளி நாயகி. பாங்கர் - பக்கத்தில். கொடிமாண் சேவல் - கொடியிலுள்ள பெருமை பெற்ற சேவல். ஆர்ப்புக் கொள்ள - ஆரவாரம் செய்ய ; கூவ. தமரும் - சுற்றத்தாரும். பொன்றினர் - இறந்தவர்.]

வேடர்கள் உயிர் பெற்று எழுதல்

அப்போது நாரத பகவான் அங்கே வந்தார். "சுவாமி, உன்னுடைய மாமனும், பிற உறவினரும் இப்படி இறந்துவிடலாமா ? உனக்குப் பெண்ணை வழங்கினதற்கு இதுதானா அவர்கள் பெறும் பரிசு ? இது உனக்கு அருள் ஆகுமா ?" என்று கேட்க, உடனே முருகப் பெருமான் அவர்களை எழுப்ப எண்ணினான்.

பெற்றிடு தந்தை தன்னைப்
பிறவுள சுற்றத் தோரைச்
செற்றமொடு அட்டு நீக்கிச்
சிறந்தநல் அருள்செய் யாமல்
பொற்றொடி தன்னைக் கொண்டு
போந்திடத் தகுமோ என்னா
மற்றிவை முனிவன் கூற
வள்ளலும் அஃதாம் என்றான்.

(வள்ளியம்மை. 187.)

[செற்றமொடு அட்டு - கோபத்தோடு கொன்று. பொற்றொடி - வள்ளி. மற்று ; அசை. அஃதாம் - அது சரியாகும்.]

முருகன் வள்ளிநாயகியைப் பார்த்து, "நீயே அவர்களை எல்லாம் எழுப்பு" என்ருன். வள்ளி எழுக என்று சொல்ல எல்லோரும் எழுந்தார்கள். அப்போது முருகப் பெருமான் தன்னுடைய அற்புதமான வடிவோடு அவர்கள்முன் நின்ருன். அவனுடைய ஆறு முகங்களும் கருணை வெள்ளம் பொழிந்தன. அவர்கள் யாவரும் முருகப் பெருமான்தான் தம்முடைய பெண்ணை அழைத்துப் போனுன் என்பதை அறிந்து, வியந்து அவன் காலில் வீழ்ந்து பணிந்து போற்றினுர்கள்.

எழுந்திடு கின்ற காலை
எம்பிரான் கருணை வெள்ளம்
பொழிந்திடு வதனம் ஆறும்
புயங்கள்பன் னிரண்டும் வேலும்
ஒழிந்திடு படையு மாகி
உருவினை அவர்க்குக் காட்ட
விழுந்தனர் பணிந்து போற்றி
விம்மித நீரர் ஆனுர்.

(வள்ளியம்மை. 190.)

[ஒழிந்திடு படையும் - வேல் ஒழிந்த மற்றப் படைகளும். விம்மிதம் - ஆச்சரியம்.]

இங்கே ஆறு முகங்களை முதலில் சொல்கிருர் கச்சியப்ப சிவாசாரியார். வேடர்களுக்குக் கருணை செய்ய வேண்டி இருந்தமையினுல் கருணை பொழிகின்ற முகங்களை முதலில் சொல்கிருர்.

உயிர்பெற்று எழுந்த வேடர்கள் யாவரும் முருகப் பெருமானைப் பணிந்து, "எம்பெருமானே, இப்படி எங்களுக்கு உன்னுடைய உண்மையைத் தெரிவிக்காமல் இருக்கலாமா?" என்று கேட்டு வருந்தினுர்கள். முருகப் பெருமானைக் கண்டவுடன் அவர்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. தாங்கள் அஞ்சினபடி, வேறு யாரும் தம்முடைய மகளைக் கொண்டு போகவில்லை என்ற ஆறுதலும் உண்டாயிற்று. அதே சமயத்தில் சற்றுத் துயரமும் உண்டாயிற்று. ஆகையால், "இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்கள்.

வேடர் வேண்டுகோள்

"இனிமேல் எங்களுடைய சிறிய ஊருக்கு வந்து, அக்கினி சாட்சியாய்த் திருமணம் செய்துகொண்டு, எங்கள் மகளை ஏற்றருள வேண்டும்" என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

ஆங்கது நிற்க, எங்கள்
அரிவையை நசையால் வௌவி
நாங்களும் உணரா வண்ணம்
நம்பெருங் காவல் நீங்கி
ஈங்கிவண் கொணர்ந்தாய், எந்தாய்,
இன்னினிச் சிறூர்க்கு ஏகித்
திங்கனல் சான்று வேட்டுச்
செல்லுதி நின்னூர்க்கு என்றார்.

(வள்ளியம்மை. 192.)

[நசையால் வௌவி - அன்பினால் களவெடுத்து. இன்னினி - இப்பொழுதே. தீங்கனல்: தீக்கனல் என்பது எதுகை நோக்கி மெலிந்தது, மணத்துக்கு உரிய தாதலின் இனிய கனல் என்றும் கொள்ளலாம். வேட்டு - திருமணம் செய்து கொண்டு.]

திருமணம்

முருகப் பெருமான் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் ஊரை அடைந்தான். நம்பிராசன் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். வேடர்கள் வழக்கப்படி புலித் தோலால் ஆசனம் அமைத்தான். உறவினர்கள் எல்லாரும் சுற்றிச் சூழ நின்றார்கள். இருவரும் மணமேடையில் அமர்ந்தார்கள். அப்போது முருகப் பெருமான் வள்ளியம்பெருமாட்டியைச் சற்றே நோக்கினான். அப்போது வள்ளிநாயகி, தன்னுடைய குறமங்கை யாகிய கோலம் நீங்கிப் பழைய தெய்வத் திருவடிவைப் பெற்றாள்.

அன்னதோர் வேலை தன்னில்
அறுமுகம் உடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை
தனைஅரு ளோடு நோக்கக்
கொன்னவில் குறவர் மாதர்
குயிற்றிய கோலம் நீங்கி
முன்னுறு தெய்வக் கோலம்
முழுதொருங் குற்ற தன்றே.

(வள்ளியம்மை. 197.)

[தன் உழை - தன்பக்கத்தில். கொன்நவில் - பெருமையைப் பெற்ற. குயிற்றிய அலங்கரித்த.]

முருகப் பெருமான் தன் சொந்த வடிவோடு நிற்க, வள்ளியைத் திருமணம் செய்துகொள்ளும் வேளையில் அவளும் அவனுக்குச் சமான

மாக இருப்பதுதான் பொருத்தம். ஆகையால் எம்பெருமாட்டி அவளுடைய பழைய தெய்வக் கோலத்தைக் கொள்ளும்படி ஆண்டவன் அநுக்கிரகம் புரிந்தான்.

அப்போது குறவர் கோமானுகிய நம்பிராசன் முருகப் பெருமான் கையில் வள்ளிநாயகியின் கையை வைத்து, "என்னுடைய தவத்தின் பயனுக வந்த இந்தப் பெண்ணை அன்பினுல் தங்களுக்கு அளிக்கிறேன்; ஏற்றுக்கொண்டருள வேண்டும்" என்று நீரை வார்த்துக் கன்னிகாதானம் செய்தான்.

அந்தநல் வேலை தன்னில்
அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில்
கன்னிகை கரத்தை நல்கி
நம்தவ மாகி வந்த
நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்க என்று
தண்புனல் தாரை உய்த்தான்.

(வள்ளியம்மை. 199.)

[வேலை - சமயம். பாணிதன்னில் - கையில். நயப்பால் - விருப்பத்தோடு.]

திருமணச் சடங்குகளை எல்லாம் நாரத முனிவர் செய்து வைத்தார். அப்போது சிவபெருமானும் அம்பிகையோடு வானத்தில் எழுந்தருளி வந்து நின்றபடியே இந்தத் திருமணக் காட்சியைக் கண்டு களித்தான். வான லோகத்தில் இருந்த அமரர்கள் பூமாரி பொழிந்தார்கள்.

முருகன் திருத்தணி செல்லுதல்

திருமணம் நிறைவேறிய பிறகு முருகப் பெருமான் நம்பிராசனைப் பார்த்து, "நாம் இந்தப் பெண்ணுடன் திருத்தணி மலைக்குச் சென்று அங்கே வாழ்வோம்" என்று கூறினுன்.

அனைய காலையில் அறுமுகன்
எழுந்துநின்று ஆங்கே
குனியும் வில்லுடைக் குறவர்தம்
குரிசிலை நோக்கி

வனிதை தன்னுடன் சென்றுயாம்
செருத்தணி வரையில்
இனிது வைகுதும் என்றலும்
நன்றென இசைத்தான்.

(வள்ளியம்மை. 210.)

[குனியும் - வனேயும். குரிசிலே - வேந்தனே. வனிதை - வள்ளிநாயகி. செருத்தணி - திருத்தணிகை.]

திருத்தணிக்குச் செருத்தணி என்று ஒரு பெயர். யுத்தத்திலே உண்டான கோபம் எல்லாம் தணிகின்ற இடம் என்று பொருள். முருகப் பெருமான் வேடர்களோடு போர் புரிந்து, சோர்வும் கோபமும் கொண்டான். இப்போது வள்ளியைத் திருமணம் செய்துகொண்டு அங்கே போனுன். அவன் செருத் தணிந்த இடம் அது.

கந்தகிரியை அடைதல்

அங்கே சென்று முருகன் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்தான். அந்த மூர்த்தியை இன்றும் நாம் தரிசிக்கலாம். அதன் பிறகு முருகவேள் கந்தகிரியை அடைந்தான். தேவயானே அந்த இருவரையும் வரவேற்று வாழ்த்தினுள்.

உள்ளுறை

வள்ளிநாயகியின் திருமணத்தின் உள்ளுறையாக இருக்கிற தத்துவத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் எல்லாம் இன்னும் ஆரம்பகால வள்ளியாக இருக்கிருேம். முருகப் பெருமானேத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். ஆன்ம பரமான்மாவின் ஐக்கியந்தான் வள்ளி திருமணம். திருமாலின் மகளாய்ப் பிறந்து, முருகப் பெருமானுக்கு மனேவியாகத் திகழ வேண்டிய வள்ளி, வேடர் கூட்டத்தால் வளர்க்கப்பட்டாள். அவர்களுடைய சார்பினுல் அவள் தன்னேக் குறமகளாக எண்ணிக்கொண்டாள். வேடப் பெண்கள் என்ன செய்வார்களோ அவற்றை எல்லாம் செய்தாள். குறமகளேப் போலத் தினேப்புனம் காத்திருந்தாள். தினேயை உண்ண வருகிற கிளி, குருவி முதலிய பறவைகளேக் கவண் கல்லால் ஓட்டி வந்தாள். ஆண்டவன் வேடவேஷம் தரித்து வந்தான். வேங்கை மரமாக நின்ருன். கிழக்கோலம் கொண்டான், இத்தனே சோதனேகள் செய்த பிறகு அவளது உள்ளத்தில்

தெளிவு உண்டாயிற்று. அவளை அறியாமல் காதல் மலர ஆரம்பித்தது. உயிருக்கு மோசம் வருமென்று அறிந்தபோது அவளே அவனை அணைத்துக் கொண்டாள். பிறகு தெய்வக் கோலம் கொண்டாள். அவளை ஆண்டவன் மணந்து கொண்டான். இதுதான் வள்ளி திருமணத்தின் சுருக்கம்.

இதன் உள்ளுறை பொருள் என்ன?

உயிர்க் கூட்டங்களைப் பசுக்கள் என்பார்கள். பசுவானது பதியை அடைந்தால் இன்பத்தைப் பெறலாம். இந்த உலகத்தில் உடம்போடு வாழ்கின்ற எல்லா உயிர்களும், இந்த உலக வாழ்க்கையே சாசுவதம் என்று எண்ணி, இந்த உடம்புதான் நமக்கு உரியது என்று ஏமாந்து நிற்கின்றன; சார்ந்ததன் வண்ணமாக இருக்கின்றன. ஐந்து பொறிகளாகிய வேடர்களிடையே அல்லற்படுகின்றன உயிர்கள். இந்த உலகந்தான் காடு. மரங்களைப் போல மக்கள் இருக்கிறார்கள். புலி, சிங்கம் முதலிய விலங்குகளைப் போன்ற இயல்புடைய மனிதக் கூட்டமும் உலகத்தில் நடமாடுகிறது. ஆணவம் என்னும் யானை திரிந்துகொண்டிருக்கிறது. எங்கும் அறியாமையாகிய இருள் படர்ந்திருக்கிறது. இதனிடையே ஆன்மாவாகிய வள்ளி புலன்களிடையே மயங்கி, அவற்றுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டே இருக்கிறாள். சிறிய தானியமாகிய தினை சிற்றின்பத்திற்கு அடையாளம். சிற்றின்பத்தைப் பெரிதாகக் கருதி, வேறு யாரும் அதில் பங்குகொள்ள வராதபடி காவல் காத்து நிற்கிறது உயிர். இப்படிப் பூமியில் சிற்றின்பத்தையே நிலையெனக் கருதி வாழ்ந்துகொண்டிருக்கிற ஆன்மாவை ஆட்கொள்ள இறைவன் குருநாதனாக வருகிறான். தன் சுய வடிவத்தைக் காட்டாமல் மனிதனைப் போலத்தான் வருவான். அதைக் கண்டு நாம் ஏமாந்து போகக்கூடாது.

> "அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
> குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
> சிறுமை என்று இகழாதே"

என்று கூறுவார் **மாணிக்கவாசகர்.**

முருகப் பெருமான் வள்ளி நாயகியை ஆட்கொள்ள வேண்டுமென்று வந்தவன், அவளைச் சோதனை செய்தான். குருநாதர் தம்

மாணுக்கனுடைய பக்குவத்தைத் தெரிந்துகொள்ளப் பல வகையில் சோதனை செய்வார்; தக்க பக்குவம் இருக்கிறது என்று தெரிந்து கொண்ட பிறகே அருள் செய்வார்.

முருகப் பெருமானைத் தெரிந்துகொள்ளாமல் இருந்த வள்ளியைப் போல, குருநாதர் பெருமையைத் தெரிந்துகொள்ளாமல் ஆன்மாக்கள் இருக்கின்றன. அறிவுடைய ஆன்மா மெல்ல மெல்லக் குருநாதரின் பெருமையைத் தெரிந்துகொள்கிறது. தனக்கு வருகின்ற துன்பங்களை எல்லாம் நினைந்து, எல்லாவற்றுக்கும் மேலான மரணத் துன்பத்தை உணர்ந்துகொண்டு, பிறகு முழுமையாகச் சரணுகதி அடைகிறது. வள்ளிநாயகி முருகப் பெருமானை அணைந்த நிலை அதைக் குறிக்கிறது. **சிவஞான சித்தியாரில்** இப்படி ஒரு காட்சி வருகிறது. இங்கே ஆன்மாவாக வள்ளியைக் காட்டியிருக்கிருர் கச்சியப்ப சிவாசாரியார். அங்கே ஆன்மாவை ஓர் அரசன் மகனுகக் காட்டியிருக்கிருர், அந்த நூல் ஆசிரியர்.

கந்தபுராணத்தைப் படிப்பதில் இரண்டு வகையான பயன்கள் உண்டு. நம் உள்ளத்திலுள்ள அசுர சம்பத்து எல்லாம் போய்ச் சத்துவகுணம் உயர வேண்டும். உயர்ந்த பிறகு இறைவனைப் பதியாக எண்ணி அன்பு செய்ய வேண்டும். அப்போது அவன் திருவருள் கிடைக்கும். அசுர சம்பத்து எல்லாம் இறைவனுடைய திருவருளால் தான் அழியும் என்பதைக் காட்டுவது சூரசங்காரம். ஆண்டவன் அறியாமையைப் போக்கி, பக்குவம் தந்து ஆட்கொள்வான் என்பதைக் காட்டுவது வள்ளி திருமணம். எனவே, ஆன்மா இறைவனுடைய அருளைப் பெற்று அவனேடு இணைகின்ற பயனைக் குறிப்பது வள்ளி திருமணம். ஆகையால்தான் கந்தபுராணத்தின் முடிவான கனியாக, வள்ளி திருமணம் இருக்கிறது என்று முன்பு சொன்னேன்.

ஆன்மாக்கள் யாவுமே பெண்கள். ஆண்டவன் ஒருவன் தான் ஆடவன். நாம் பெண்கள் என்பதை இன்னும் அறிந்துகொள்ளாமல் இருக்கிறோம். சின்னஞ்சிறு பேதைப் பெண் ஆண்களோடு விளையாடிக் கொண்டிருப்பாள். அறியாப் பெண் என்று மங்கைப் பருவம் அடையாத பெண்களைச் சொல்வது உலக வழக்கம். தான் பெண் என்பதையும் தனக்கு ஒரு காதலன் வேண்டும் என்பதையும்

பருவம் வந்தவுடன் உணர்ந்து, அவ்வாறு விளையாடுவதை நிறுத்தி, தனக்கென்று ஒரு தலைவன் வரவேண்டு மென்று எண்ணுவாள். நமக்கும் பக்குவம் உண்டானல் ஆண்டவனை அடைய வேண்டுமென்ற ஆசை உண்டாகும். இப்படி ஆன்மாக்கள் யாவும் பெண் என்பதை அறிந்தால், வள்ளி திருமணம் என்பது இறைவனேடு நாம் ஒன்று படுகிற திருமணம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

முருகன் திருக்கோலம்

கந்தகிரியில் முருகப் பெருமான் வள்ளி, தேவசேனை சமேதனக எழுந்தருளியிருக்கிருன். வள்ளி நாயகி வலப்பக்கத்திலும், தேவ சேனை இடப்பக்கத்திலும் அமர்ந்திருக்கிருர்கள். ஒரு கையில் வேல் இருக்கிறது.

நாம் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்ருல் அதற்கு மூன்று நிலைகள் உண்டு. செய்ய வேண்டுமென்ற விருப்பம் முதலில் தோன்றுகிறது. அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று ஆராய்ச்சி பண்ணிச் செய்வதற்குரிய அறிவு வேண்டியிருக்கிறது. பின்பு செயலைச் செய்கிருேம். விரும்புவது இச்சா சக்தி. அறிவு பெறுவது ஞான சக்தி. செயல் செய்வது கிரியா சக்தி. இந்த மூன்றும் நம்மிடம் உள்ளன. ஆனல் குறிப்பிட்ட எல்லைக்குள் அவை அடங்கி யிருக்கின்றன. பரமாத்மாவாகிய ஆண்டவனிடத்தில் அகண்டமான சக்திகள் இருக்கின்றன. உலகம் எல்லாம் அருள்பெற்று உய்ய வேண்டுமென்று அவன் விரும்புகிருன். அதுவே அவனுடைய இச்சா சக்தி. அவன் எல்லாம் அறிந்த சர்வக்ஞன். அது ஞான சக்தி. அவன் அகடிதகடன சாமர்த்தியம் உள்ளவன். நினைத்த மாத்திரத்தில் எல்லாம் செய்ய வல்லவன். அதுதான் கிரியா சக்தி.

இந்த மூன்று சக்திகளும் இறைவனிடம் இருப்பதைக் காட்டு கின்ற அடையாளங்களே வள்ளி முதலியவர்கள். வள்ளிநாயகி இச்சா சக்தி. எம்பெருமான் உள்ளத்தில் ஆசை தோன்றி, அவளை மணந்துகொள்ள வேண்டுமென்று முயன்ருன். அது அவன் விருப்பத்தைக் காட்டுகிறது. ஆகவே வள்ளி நாயகி, இச்சா சக்தி.

ஆண்டவன் செய்த போர் பெரிய காரியம். தமிழில் வினை என்று போருக்குப் பெயர். அந்தப் போராகிய பெருஞ்செயலின்

முடிவில், அதில் வெற்றி பெற்றதோடன்றித் தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்டான். தேவசேனபதி என்ற திருநாமம், தேவசேனையின் தலைவனாக இருந்து பெரிய காரியத்தைச் செய்ததையும் நினைவூட்டுகிறது. ஆகவே தேவசேனை கிரியா சக்தி ஆகிறாள்.

அஞ்ஞானமயமாக இருப்பவர்கள் அசுரர்கள். அவர்கள் கரிய நிறமும் கொடுமையும் உடையவர்கள். அஞ்ஞானத்தைப் போக்குவது ஞானம். அசுரர்களை எல்லாம் அழித்த வேலாயுதம் ஞானத்தின் வடிவம். அதை ஞானசக்தி என்றும் முருகப் பெருமானை ஞான சக்திதரன் என்றும் சொல்வார்கள். ஆகவே வேல் ஞானசக்தி. 'ஞான சக்திதராய நம:' என்று அர்ச்சனையில் ஒரு திருநாமம் வருகிறது. இப்படி மூன்று சக்திகளோடும் கூட முருகன் எழுந்தருளியிருக்கிறான்.

வேலை ஞானசக்தி என்று சொல்வதில் ஒப்புமை இருக்கிறது. ஞானம் என்பது அறிவு. அறிவு நீண்டதாகவும், கூரியதாகவும், அகலமானதாகவும் இருக்கவேண்டும். பல காலம் கற்றுத் தெளிவது அறிவின் நீட்சி. பல நூல்களை ஆராய்ந்து தெரிந்துகொள்வது அகன்ற அறிவு. எதையும் நுட்பமாகத் தெரிந்துகொள்வது கூரிய அறிவு. திருக்குறளில், "அஃகி அகன்ற அறிவு" என்று வருகிறது. வேல் நீளமாக இருக்கிறது; கூர்மையாக இருக்கிறது; அதன் இலை அகலமாக இருக்கிறது. இவை அறிவின் இலக்கணங்கள்.

முருகப் பெருமானைச் சொல்லும்போது வள்ளிமணவாளன் என்றே சொல்கிறோம். நாம் எல்லாம் இறைவனால் ஆட்கொள்ளப் படவேண்டுமென்று எண்ணினாலும் எண்ணாவிட்டாலும் முருகன் நம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறான். அவன் அருளைச் சுமையாகச் சுமந்து கொண்டிருக்கிறான். அதை எங்கேயாவது இறக்கி வைக்க வேண்டுமென்று விரும்புகிறான். தலையில் பாரம் சுமக்கிற ஒருவன் அதை இறக்கி வைக்க இடம் தேடுவது போல அவன் அருளை வழங்க அன்பர்களை நாடிக் கொண்டிருக்கிறான். அவனிடத்து அந்த விருப்பம் இருப்பதால்தான் நாம் உய்கிறோம். முருகன் வள்ளியை விரும்பி வந்த செயல் அவ

னுடைய விருப்பத்தைக் காட்டுகிறது. நாமும் அவளைப் போலவே இருக்கிறோம்.

தேவசேனை தேவலோகத்துப் பெண். வள்ளிநாயகி பூலோகத்தில் வாழ்ந்த பெண். ஆண்டவன் பூவுலகத்துப் பெண்ணை மணக்கிறான். அவன் மனம் இரங்கி வந்து ஆட்கொள்ளும் பெரும் கருணை உடையவன் என்பதை அது காட்டுகிறது.

மற்றொன்று: வள்ளிநாயகி முயன்று இறைவனை அடையாமல் இறைவன் அவளிடத்தில் வந்து சோதனை செய்து தடுத்து ஆட்கொண்டான். நம்முடைய முயற்சி மிகுதியாக அமைவதில்லை. மிகவும் சிறந்த அன்பன் ஒருவனிடம் உள்ள அன்பைவிட இறைவனுடைய அன்பு மிகுதியாக உள்ளது. "தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி" என்பது **திருவாசகம்.** இறைவனுடைய பெரும் கருணையால், முயற்சியினால்தான் நாம் அவனுக்கு ஆட்பட வேண்டும். அதனைக் காட்டுவது வள்ளி திருமணம். ஆகவே, தேவயானையின் திருமணத்தைவிட வள்ளி திருமணம் நமக்கு மிகவும் முக்கியம். தேவயானையின் மணவாளன் என்பதைவிட, வள்ளி மணாளன் என்று சொல்லும்போது நம் உள்ளத்தில் அதிக உருக்கம் உண்டாகிறது.

வாழ்த்து

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணக் கதையைச் சொல்லி விட்டு, கடைசியில் வாழ்த்துச் சொல்கிறார்.

ஆறிரு தடந்தோள் வாழ்க !
அறுமுகம் வாழ்க ! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க !
குக்குடம் வாழ்க ! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க !
யானைதன் அணங்கு வாழ்க !
மாறிலா வள்ளி வாழ்க !
வாழ்கசீர் அடியார் எல்லாம் !

(வள்ளியம்மை. 261.)

[வெற்பை - கிரவுஞ்ச மலையை. கூறு செய் - துண்டு துண்டாகப் பிளந்த. குக்குடம் - கோழிக் கொடி. யானைதன் அணங்கு - தேவயானை. மாறு இலா - தனக்கு ஒப்பு இல்லாத.]

முதலில் ஆறிரு தடந்தோளை வாழ்த்துகிறார். அவனுடைய வீரத்தினாலே சூரசங்காரம் ஆயிற்று. ஆகவே அதற்கு மங்களாசாசனம் செய்வதுபோலச் சொல்கிறார். அதற்குப் பிறகு, கருணை ததும்ப வள்ளியை ஆட்கொண்டான். அதனால் ஆறுமுகங்களைச் சொல்கிறார். பின்பு அவனுடைய கருவிகளை எடுத்துச் சொல்கிறார். கடைசியில் மாறிலா வள்ளி வாழ்க என்கிறார். அதற்குப் பிறகு வாழ்கசீர் அடியார் எல்லாம் என்று முடிக்கிறார்.

வள்ளியை 'மாறிலா வள்ளி' என்கிறார். மாறு என்பது ஒப்பு. ஒப்பு இல்லாத வள்ளி என்று பொருள் கொள்ளவேண்டும். முருகப் பெருமானின் திருவுள்ளத்திற்கு மாறுபடாத வள்ளி என்றும் கொள்ளலாம்.

இந்தப் பாட்டில் ஆறிரு தடந்தோளும், ஆறுமுகமும் திரு அவதாரத்தைக் குறிக்கின்றன. 'வெற்பைக் கூறு செய் தனிவேல் வாழ்க' என்பது கிரௌஞ்சாசுரன், தாரகாசுரன் ஆகியவர்களை அழித்ததைக் குறிப்பிடுகிறது. 'குக்குடம் வாழ்க, செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க' என்பது சூரபன்மன் தன் உருவம் மாறிச் சேவலாகவும், மயிலாகவும் தோன்றி இறைவனது கொடியாகவும், வாகனமாகவும் ஆன செயலை, சூரசங்காரத்தை, குறிக்கிறது. 'யானைதன் அணங்கு வாழ்க' என்பது தேவசேனையின் திருமணத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறது. 'மாறிலா வள்ளி வாழ்க' என்பது வள்ளி திருமணக் கதையை நினைவூட்டுகிறது. இப்படி ஒரு பாடலில் திரு அவதாரம் முதல் வள்ளி திருமணம் வரையில் உள்ள செய்திகள் குறிப்பாகவும் வரிசையாகவும் அமைந்திருக்கின்றன. கடைசியில், இவற்றைக் கற்றுத் தேர்ந்த அடியார்கள் மிகுதியாகி அவர்கள் எல்லாம் வாழவேண்டுமென்று சொல்கிறார்.

இவ்வளவு சொன்ன கச்சியப்ப சிவாசாரியார் ஆண்டவன் தமக்குச் செய்த பேரருளைச் சொல்லி நூலை முடிக்கிறார்.

புன்னெறி யதனில் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி

என்னையும் அடிய னாக்கி
இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி.

(வள்ளியம்மை. 262.)

[புன்னெறி - உலகியல் நெறியாகிய அற்பமான வாழ்க்கை நெறி; துன்மார்க்கம். நன்னெறி - சன்மார்க்கம். நவை - குற்றம். இருவினை - பிறப்புக்குக் காரணமான பாவ புண்ணியங்கள்; 'இருள்சேர் இருவினை' என்பார் வள்ளுவர்.]

'பொல்லாத நெறியில் செல்கின்ற என்னுடைய போக்கை விலக்கி, தன்னை வழிபடும் மேலான நல்ல நெறியில் நடக்கும்படியாகச் செய்து, தன் திருக்கோலக் காட்சியைக் கொடுத்து, என்னைத் தன்னுடைய அடியனாக்கிக்கொண்டான் முருகன்' என்று சொல்கிறார்.

முருகனை, 'பன்னிரு தடந்தோள் வள்ளல்' என்று குறிக்கிறார். கையினால் வழங்குவது மரபு. கை பல வேலைகளைச் செய்தாலும் பிறருக்கு ஈயும் செய்கை சிறந்தது.

"தருகை நீண்ட தசரதன்"

என்று **கம்பர்** பாடுகிறார். தசரதனுடைய கை பிறருக்குக் கொடை வழங்குவதற்காக நீண்டிருக்கிறதாம்.

இரண்டு கைகளையுடையவர் வள்ளலாக இருந்தால் கைகளைப் பெற்ற பயனை அடைகிறார்கள்; இரண்டு கையாலும் வாரி வழங்குகிறார்கள். முருகனோ பன்னிரண்டு கைகளை உடையவன். அவன் வள்ளன்மை மிகப் பெரியது. பன்னிரண்டு கைகளாலும் அவன் வாரி வாரி வழங்குவான். ஆதலின், 'பன்னிரு தடந்தோள் **வள்ளல்**' என்றார். தோள் என்பது கையையும் குறிக்கும்.

முருகப்பெருமான் மற்றவர்களுக்கு இல்லாத பன்னிரண்டு கைகளை உடையவனாதலின், அவன் அடியார்களுக்கு அருளை வழங்க முற்பட்டால், வேறு யாரும் வழங்க இயலாத அளவுக்கு அருளுவான். ஆதலால் அவன் மாபெரும் வள்ளலாக இருக்கிறான். "வேண்டிய போது அடியர் வேண்டிய போகமது வேண்ட வெறாது உதவு பெருமாளே!" என்று **அருணகிரிநாதர்** திருப்புகழில் போற்றுவார்.

முருகனுடைய திவ்ய தரிசனத்தைப் பெற்று உயர்ந்து நின்றவர் கச்சியப்ப சிவாசாரியார். அவனை முப்போதும் திருமேனி தீண்டிப்

பூஜை செய்தவர். மற்றவர்களுக்காகப் பூஜை செய்தாலும் அதையே தம்முடைய வாழ்வுப்பயனுகக் கொண்டவர். எல்லாவற்றையும் தருகின்ற வள்ளலாகிய சண்முகநாதனின் பாதபங்கயங்களேப் போற்றி அவர் நூலே முடிக்கிருர்.

கந்தபுராணம் படிப்பதனுல் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது : அகங்கார மமகாரங்கள் இருந்தால் இறைவனேக் காணமுடியாது. அவனேடு ஈடுபடவேண்டுமானுல், அவன் திருவருளேப் பெற வேண்டு மென்ருல், அவன் கருணேயை நினேந்து நெகிழ்ந்து உருக வேண்டும். அப்போது அவனுகவே வலிய வந்து ஆட்கொள்வான்.

இத்தகைய கருத்துக்களேச் சொல்கின்ற கந்தபுராணம் பெரிய பொக்கிஷம். மகாபுராணங்களில் ஒன்று இது. சிறந்த காப்பிய வடிவில் சொல்லின்பம் பொருளின்பம் தருவதாகவும் அமைந் திருக்கிறது. கதை போல இருந்தாலும் பல அருமையான தத்துவங்களேத் தன்னிடம் கொண்டிருக்கிறது. முருகனுடைய அழகையும், பெருமையையும், பராக்கிரமத்தையும், கருணேச் செயல் களேயும் விரித்துரைக்கிறது. புராணமாகப் படிக்க விரும்பாதவர் களும் இதைத் தமிழின்பத்துக்காகவே படித்து நலம் பெறலாம். பக்தி உடையவர்கள் படித்தால் அவர்களுடைய பக்தி மிகுதியாகும். பற்பல நீதிகளேயும் இந்த நூலால் தெரிந்துகொள்ளலாம்.

இறைவன் திருவருளால் ஒருவாறு இதைச் சொல்லி நிறைவேற்றுகின்ற பேறு அடியேனுக்கு கிடைத்தது. முருகன் திருவருள் வாழ்க !

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

[இந்தப் புத்தகத்தில் எடுத்துக் காட்டியுள்ள கந்த புராணச் செய்யுட்களின் அகராதி இது]



திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)